# பெரியார் தொலைநிலைக் கல்வி நிறுவனம்
# (PRIDE)

## பெரியார் பல்கலைக்கழகம்
**சேலம்–636 011.**

இளங்கலை தமிழ் இலக்கியம்

முதலாமாண்டு

தாள் – I : நன்னூல், யாப்பருங்கலக் காரிகை

புத்தகம் எழுதியவர் :

முனைவர் மு. மூர்த்தி

முதுநிலை விரிவுரையாளர்

தமிழ்த் துறை,

குருநானக் கல்லூரி,

சென்னை – 600 042.

## அறிமுகம்

அலகு 1 நன்னூல் – பாயிரம்

அலகு 2 நன்னூல் – எழுத்ததிகாரம்

அலகு 3 நன்னூல் – சொல்லதிகாரம்

அலகு 4 யாப்பருங்கலக்காரிகை – உறுப்பியல்

அலகு 5 யாப்பருங்கலக்காரிகை – செய்யுளியல், ஒழிபியல்

பாடப்பகுதிகள்

அலகு 1

நன்னூல் – பாயிரம் – பொதுப்பாயிரம் இலக்கணம் – நூலின் இலக்கணம் – நூலைக் கற்பிக்கும் ஆசிரியரின் வரலாறு – ஆசிரியர் மாணாக்கருக்கு நூலைக் கற்பிக்கும் முறை – மாணாக்கனது வரலாறு – மாணாக்கர் ஆசிரியரிடம் பாடம் கேட்டலின் வரலாறு – சிறப்புப் பாயிரம் (பொது) – நன்னூல் சிறப்புப் பாயிரம்.

அலகு 2

நன்னூல் எழுத்ததிகாரம் – எழுத்தியல் – பதவியல் – உயிரீற்றுப் புணரியல் – மெய்யீற்றுப் புணரியல் – உருபுப் புணரியல் ஆகிய இயல்களில் கூறப்பட்டுள்ள செய்திகள்.

அலகு 3

நன்னூல் சொல்லதிகாரம் – பெயரியல் – வினையியல் – பொதுவியல் – இடையியல் – உரியியல்ஆகிய இயல்களில் கூறப்பட்டுள்ள செய்திகள்.

அலகு 4

யாப்பருங்கலக்காரிகை – உறுப்பியல் – செய்யுளுக்கு உறுப்பாகும் எழுத்து – அசை – சீர் – தளை – அடி – தொடை ஆகியன பற்றிய செய்திகள்.

அலகு 5

யாப்பருங்கலக்காரிகை – செய்யுளியல், ஒழிபியல் – வெண்பா – ஆசிரியப்பா – கலிப்பா – வஞ்சிப்பா – மருட்பா ஆகிய பாக்களின் இலக்கணங்களும் வகைப்பாடுகளும் – முதல் நால்வகைப் பாக்களின் இனங்கள் – ஓசைகள், அடிகள் பற்றிய செய்திகள்

ஒழிபியல் – உறுப்பியல், செய்யுளியல் ஆகிய இயல்களில் கூறாது ஒழிந்த செய்திகள் – உறுப்பியல் ஒழிபு – எழுத்துக்களின் ஒழிபு – அசைகளின் ஒழிபு – சீர், தளைகளின் ஒழிபு – அடிகளின் ஒழிபு – தொடைகளின் ஒழிபு.

செய்யுளியல் ஒழிபு – ஒழிபியலில் உணர்த்தப்பட்ட யாப்பு உறுப்புக்கள் முதலியன பற்றிய செய்திகள்.

முன்னுரை

சேலம் பெரியார் பல்கலைக்கழகத் தொலைநிலைக்கல்வி நிறுவனத்தில் இளங்கலை – தமிழ் இலக்கியம் பயிலும் மாணவர்களை நல்வாழ்த்துக்களுடன் வரவேற்கிறோம். உலகின் தலைசிறந்த மொழிகளில் செம்மொழித் தகுதியைப் பெற்ற உயர்தனிச் செம்மொழி தமிழ் மொழியாகும். ஒரு மொழி செழுமையடைவதற்கும் அம்மொழியில் இலக்கியங்கள் தோன்றுவதற்கும் வழியமைத்துக் கொடுப்பது அம்மொழியில் தோன்றியுள்ள இலக்கணங்களேயாகும்.

அந்த வகையில் தமிழ் மொழியில் தொன்மையான இலக்கணமாகக் கருதப்பெறுவது தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலாகும். இந்நூலினையொட்டி பல்வேறு இலக்கண நூல்கள் தோன்றினாலும் எளிமையும், நுட்பமும் உடையனவாய் விளங்குவது பவணந்தியார் இயற்றியுள்ள நன்னூல் என்னும் இலக்கண நூலேயாகும். இந்நூல் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என்னும் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது. நூலின் தொடக்கமாகப் பாயிரம் என்னும் பகுதி அமைந்துள்ளது. இம்மூன்று பகுதிகளும் மூன்று அலகுகளாக அமைந்து தமிழ் மொழியின் நூல் இலக்கணம், எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம் பற்றிய செய்திகளைத் தெளிவாகக் கூறுகின்றன.

தமிழ் ஐந்திலக்கணத்தில் நான்காம் பகுதியாக உள்ள யாப்பிலக்கணத்தை தமிழ் இலக்கியம் பயிலும் மாணவர்களுக்கு உணர்த்தும் முகமாய் யாப்பருங்கலக்காரிகை என்னும் நூல் பாடமாக வைக்கப் பெற்றுள்ளது. இந்நூலில் உள்ள உறுப்பியல் என்னும் பகுதி நான்காம் அலகாகவும் செய்யுளியல், ஒழிபியல் என்னும் பகுதிகள் ஐந்தாம் அலகாகவும் அமைந்துள்ளன.

நன்னூல் யாப்பருங்கலக்காரிகை என்னும் இரண்டு இலக்கண நூல்களையும் மாணவர்கள் பயின்று இலக்கணப் புலமையும் செய்யுள் இயற்றும் ஆற்றலும் பல்கலைக்கழகத் தேர்வில் உயர்நிலையில் வெற்றி பெறுவதற்கும் வாழ்த்துகிறோம்.

நன்னூல்

மொழியின் செழுமைக்கும் இலக்கிய வளமைக்கும் அடிப்படையாய் அமைவது இலக்கணமேயாகும். இலக்கியம் கண்ட பிறகு இலக்கணம் அமையப்பெறினும் நம் தமிழ் மொழியில் முழுமையான முதல் இலக்கண நூலாகத் திகழ்வது தொல்காப்பியமே ஆகும். ஆயினும், தமிழில் தோன்றிய முதல் இலக்கண நூல் அகத்திய முனிவர் இயற்றிய அகத்தியம் என்பதாகும். இந்நூல் தலைச்சங்க காலத்தில் இலக்கண நூலாகத் திகழ்ந்தது என்றும், ஆனால் இப்போது கிடைக்கவில்லை யென்றும் கூறுவர். இந்த அகத்திய நூலுக்கு வழிநூலாகத் தோன்றியதே தொல்காப்பியமாகும்.

இன்றுள்ள தமிழ் நூல்களுள் காலத்தால் முற்பட்ட தொல்காப்பியத்தில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்து இலக்கணங்களை எழுத்ததிகாரத்திலும் சொல்லதிகாரத்திலும் பொருளதிகாரத்திலும் தொல்காப்பியர் முறையே கூறியுள்ளார். தொல்காப்பிய இலக்கண நூலை அடியொற்றி எளிய நடையில் பவணந்தியார் நன்னூல் என்னும் இலக்கண நூலை இயற்றியுள்ளார் என்பதை இந்நூலுக்கு எழுதிய சிறப்புப் பாயிரத்தின் வழி அறிய முடிகிறது.

நன்னூல் – பெயர்க்காரணம்

நன்மை + நூல் = நன்னூல் எனப் பிரிக்கப்பட்டு, நன்மையாகிய நூல் எனப் பொருள்பட அமைந்த பெயராகும். இந்நூல் தன்மையால் பெயர் பெற்றது என்று உரையாசிரியர்கள் குறிப்பிடுவர். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்து இலக்கணங்களையும் பவணந்தியார் கூறியிருத்தல் வேண்டும் என்று நன்னூலின் சிறப்புப் பாயிரம் கூறுகின்றது. ஆனால் தற்போது வழக்கில் உள்ளவை முதல் இரண்டு அதிகாரங்கள் மட்டுமே. மற்ற மூன்று அதிகாரங்களும் நன்னூலுக்கு விருத்தியுரை செய்த சங்கர நமச்சிவாயர் காலத்திலேயே கிடைக்கப் பெறவில்லை என்றும் கூறுவர்.

நூலமைப்பு

நன்னூல் என்னும் நூல் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்து இலக்கணம் கூறும் நூல் என்பதை "அரும்பொருள் ஐந்தையும் யாவரும் உணர" என்று சிறப்புப் பாயிரம் கூறினாலும் நமக்குக் கிடைத்துள்ளவை எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் மட்டுமேயாகும். இந்நூலில் மொத்தம் 462 நூற்பாக்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் சிறப்புப் பாயிரமாக ஒரு செய்யுள் இடம்பெற்றுள்ளது. பாயிரம் என்னும் பகுதியுள் 55 நூற்பாக்களும், எழுத்ததிகாரத்தில் 202 நூற்பாக்களும், சொல்லதிகாரத்தில் 205 நூற் பாக்களும் அமைந்துள்ளன.

நன்னூலின் பொதுப்பாயிரத்தில் அமைந்துள்ள நூற்பாக்கள் தொல்காப்பியம், இறையனார் களவியலுரை, யாப்பருங்கல விருத்தியுரை, தொல்காப்பிய இளம்பூரணர் உரை முதலியவற்றில் காணப்படுவதால் இப்பொதுப்பாயிரச் சூத்திரங்கள் பல நன்னூலுக்கு முற்பட்டன என்றும் கூறுவர். இவற்றைப் பவணந்தியார் தொகுத்தும், வகுத்தும் சூத்திரங்கள் சிலவற்றைச் சேர்த்தும் இப்பொதுப்பாயிரத்தை அமைத்துள்ளார் என்றும் கூறுவர்.

நூலாசிரியர்

நன்னூலின் ஆசிரியர் பவணந்தி முனிவர் ஆவார். இவர் சமண சமயத்தைச் சேர்ந்த துறவி என்பதை எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என்னும் இவ்விரண்டு அதிகாரத்தின் அருகக் கடவுள் வணக்கப் பாடல் மூலம் அறிந்து கொள்ள முடியும். இவரைப் பற்றிய முழு வரலாறு சிறப்புப் பாயிரத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இவரின் ஊர் மைசூரில் உள்ள நரசபுரம் தாலுக்காவில் உள்ள சனகை என்னும் சனநாதபுரம் என்றும் கூறுவர். இவரை ஆதரித்த சீயகங்கன் கங்க நாட்டினை ஆண்ட குறுநிலமன்னனாவான். இவரின் காலம் கி.பி. 12ஆம் நூற்றாண்டின் இறுதியும் 13ஆம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதியும் ஆகும் என்று கூறுவர்.

பவணந்தியாரின் தந்தை சன்மதி முனிவர் என்று சிறப்புப் பாயிரம் கூறுகின்றது. சிலர் சன்மதி முனிவர் பவணந்தியாரின் ஆசிரியர் என்றும், சமய உலகில் அறிவுத்தந்தையாக ஆசிரியரைக் கூறும் வழக் கத்தின் அடிப்படையில் சன்மதி முனிவர் பவணந்தியாருக்குத் தந்தை என்று கூறப்படுகிறார் என்றும் கொள் வர். பவணந்தியார் அகத்தியம், தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களையும், மிகுதியுமாக இளம்பூர ணர் உரையையும் பின்பற்றி நன்னூலைச் செய்தார் என்றும் கூறுவர்.

## உரையாசிரியர்கள்

இலக்கண நூலுக்கு உரை இன்றியமையாதது. அவ்வகையில் இந்நூலுக்கு 44 உரைகள் வரையப்பெற்றன என்று கூறுவர். இந்நூலுக்கு முதன்முதலாக உரையெழுதியவர் கி.பி. 13ஆம் பிற்பகுதியில் வாழ்ந்த மயிலைநாதர் என்பவராவார். இவருக்குப் பின் ஆண்டிப்புலவர், சங்கர நமச்சிவாயர், சிவஞான முனிவர், கூழங்கைத்தம்பிரான், முகவை இராமானுச கவிராயர், விசாகப் பெருமாளையர், ஆறுமுக நாவலர் முதலியோர் உரை எழுதியுள்ளனர். ஆறுமுக நாவலர் எழுதிய உரை காண்டிகை உரையாகும். இவ்வுரை சிவஞான முனிவரின் விருத்தியுரையைத் தழுவியதாகும்.

## அலகு 1 – நன்னூல் – பாயிரம்

1.0 பாட அறிமுகம்

1.1 நோக்கங்கள்

1.2 பாடப் பிரிவுகள்

1.2.0 பாயிரமும் வகையும் – நூற்பா 1 முதல் 2 வரை.

1.2.1 பொதுப்பாயிரம் இலக்கணம் – நூற்பா 3.

1.2.1.1 நூலின் வரலாறு – நூற்பா 4 முதல் 25 வரை.

1.2.1.2 நூலைக் கற்பிக்கும் ஆசிரியரின் வரலாறு – நூற்பா 26 முதல் 35 வரை.

1.2.1.3 ஆசிரியன் மாணாக்கருக்கு நூலைக் கற்பிக்கும் முறை – நூற்பா 36 முதல் 37 வரை.

1.2.1.4 மாணாக்கனது வரலாறு – நூற்பா 38 முதல் 39 வரை.

1.2.1.5 பாடம் கேட்டலின் வரலாறு – நூற்பா 40 முதல் 46 வரை.

1.2.2 சிறப்புப் பாயிரம் (பொது) – நூற்பா 47 முதல் 55 வரை.

1.2.3 நன்னூல் சிறப்புப் பாயிரம் – தனிச்செய்யுள்.

தன்மதிப்பீட்டு வினாக்கள்

தொகுப்புரை

பயிற்சி வினாக்கள்

மேலும் படிக்க வேண்டிய நூல்கள்

தன்மதிப்பீட்டு விடைகள்

### 1.0 பாட அறிமுகம்

தமிழ்மொழியில் முழுமையாகக் கிடைத்த முதல் இலக்கண நூல் தொல்காப்பியமாகும். இதனைத் தொடர்ந்து பல்வேறு இலக்கண நூல்கள் தோன்றினாலும் எளிமை அடிப்படையில் சுருக்கமாகவும் தெளிவாகவும் அமைந்த இலக்கண நூல் நன்னூலேயாகும். பவணந்தியார் இயற்றியுள்ள நன்னூல் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என்னும் இரண்டு பிரிவுகளில் எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம் ஆகியவற்றை முறையே கூறுகின்றது. இந்நூலினை இளங்கலை தமிழ் இலக்கியம் பயிலும் மாணவர்கள் தெரிந்து கொள்வதற்காகப் பாடமாக வைக்கப்பெற்றுள்ளது. நன்னூலின் தொடக்கமாகவும் நூலுக்கு முகவுரையாகவும் அமைந்துள்ள பகுதி பாயிரமாகும். இப்பாயிரத்தின் வகைகள், அவற்றில் கூறப்படும் செய்திகள் முதலியவை இங்குப் பாடமாக அமைந்துள்ளன.

### 1.1 நோக்கங்கள்

இலக்கண நூல்களில் நன்னூலின் இடம் எத்தகையது என்பதையும், இந்நூலை இயற்றிய பவணந்தியாரின் சிறப்பினையும் உரையாசிரிகளையும் அறிந்து கொள்ளுதல்

நூலிற்கு முகவுரையாக அமையும் பாயிரத்தின் வகைகளையும், அப்பாயிரம் உணர்த்தும் செய்திகளையும் அறிந்து கொள்ளுதல்.

பொதுப்பாயிரத்தின் இலக்கணமான நூலின் இலக்கணம், நூலினைக் கற்பிக்கும் ஆசிரியரின் இலக்கணம், மாணாக்கர் இலக்கணம், மாணாக்கன் அந்நூலைக் கொள்ளும் முறை ஆகிய செய்திகளை அறிதல்.

ஒரு குறிப்பிட்ட நூலுக்குரிய சிறப்புப் பாயிரத்தையும், சிறப்பினையும் கூறிய செய்திகளில் நன்னூல் பொருந்தி வந்துள்ளமையைத் தெரிந்து கொள்ளுதல்.

1.2 பாடப்பிரிவுகள்

1.2.0 பாயிரமும் வகையும்

பாயிரம் என்றால் வரலாறு என்பது பொருளாகும். இச்சொல்லிற்கு முகவுரை, பதிகம், அணிந்துரை, நூன்முகம், புறவுரை, தந்துரை, புனைந்துரை என்னும் ஏழு பெயர்கள் உண்டு. இவையெல்லாம் பாயிரம் என்னும் ஒரு பொருளைக் குறிக்கும் பல சொற்களாகும்.

முகவுரை பதிகம் அணிந்துரை நூன்முகம்

புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம். நூற்பா 1

முகவுரை : நூலுக்கு முன் உரைக்கப்படுவது. முகம் போல் முன் அமைந்ததால் நூன்முகம் என்றும் கூறுவர்.

பதிகம் : பின்னர்க் கூறப்பெறும் ஐந்து வகைப் பொதுப்பாயிரமும் பதினோரு வகைச் சிறப்புப் பாயிரமும் ஆகிய பலவகைப் பொருளையும் தொகுத்துக் கூறுவது.

அணிந்துரை : நூலினது பெருமை முதலியன விளங்க அழகுபடுத்திக் கூறுவது.

நூன்முகம் : முகவுரைக்குக் கூறியதே இதற்குப் பொருந்தும்.

புறவுரை : நூல் சொல்லிய பொருள் அல்லாதவற்றை உரைப்பது.

தந்துரை : நூலிலே சொல்லப்பட்ட பொருள் அல்லாதவைகளைத் தந்து உரைத்தல்.

புனைந்துரை : அணிந்துரைக்குச் சொன்ன காரணமே இதற்கும் பொருந்தும்

பாயிர வகை

பாயிரம் பொதுச் சிறப்புஎன இருபாற்றே. நூற்பா 2

இப் பாயிரம், பொதுப்பாயிரம், சிறப்புப் பாயிரம் என்று இரண்டு வகைகளை உடையது.

1.2.1 பொதுப்பாயிரம் – இலக்கணம்

பொதுப்பாயிரம் ஐந்து இலக்கணங்களை உணர்த்துதல் வேண்டும். அவை,

1. நூலினது இலக்கணம் 2. நூலைக் கற்பிக்கும் ஆசிரியனது இலக்கணம். 3. ஆசிரியன் மாணாக்கர்க்கு நூலைக் கற்பிக்கும் முறை 4. மாணாக்கர் இலக்கணம் 5. மாணாக்கன் நூலைக் கொள்ளும் முறை ஆகியனவாகும்.

நூலே நுவல்வோன் நுவலுந் திறனே

கொள்வோன் கோடல் கூற்றாம் ஐந்தும்

எல்லா நூற்கும் இவை பொதுப் பாயிரம்.

என்னும் நூற்பா (3) பொதுப்பாயிரத்தின் இலக்கணத்தினை உணர்த்தியது.

நூலின் – இலக்கணம்

பொதுப்பாயிரம் இலக்கணம் கூறும் பகுதியில் நூலின் இலக்கணம் முதலாவதாய் அமைகிறது.

நூலின் இயல்பே நுவலின் ஓரிரு

பாயிரம் தோற்றி மும்மையின் ஒன்றாய்

நாற்பொருள் பயத்தொடு எழுமதம் தழுவி

ஐயிரு குற்றமும் அகற்றி அம்மாட்சி யோடு

எண்ணான்கு உத்தியின் ஓத்துப் படலம்

என்னும் உறுப்பினில் சூத்திரம் காண்டிகை

விருத்தி ஆகும் விகற்ப நடைபெறுமே.

என்னும் நன்னூலின் நான்காம் நூற்பா (4) நூலின் இலக்கணத்தைக் கூறுகிறது. அவை,

1. நூல் – பொது, சிறப்பு என்று இரண்டு பாயிரங்களைப் பெற்றிருத்தல்.

2. முதல், சார்பு, வழி என்னும் மூன்று வகை நூல்களில் ஒன்றாய் இருத்தல்.

3. நூலைக் கற்போர் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு வகை உறுதிப் பொருள்களையும் அடைதல்.

4. எழுவகை மதங்களைத் தழுவியிருத்தல்.

5. பத்து வகையான குற்றங்கள் இல்லாதிருத்தல்.

6. பத்து அழகுகள் நூலில் பொருந்தியிருத்தல்.

7. முப்பத்திரண்டு உத்திகளை உடையதாயிருத்தல்.

8. ஓத்து (இயல்பு), படலம் (அதிகாரம்) என்னும் இரு வகை உட்பிரிவுகளைப் பெற்றிருத்தல்.

9. சூத்திரங்களால் செய்யப்பட்டிருத்தல்.

10. காண்டிகை உரையைப் பெற்றிருத்தல்.

11. விருத்தியுரை பெற்றதாகவோ, பெறத்தக்கதாகவோ இருத்தல்.

மேற்கூறிய பதினோரு வேறுபட்ட நடைகளை நூலானது பெற்றிருத்தல் வேண்டும் என்று பவணந்தியார் குறிப்பிடுகின்றார்.

மூவகை நூல்கள்

நூலானது முதல், வழி, சார்பு என்னும் மூவகையில் அமையும் தன்மையது. (நூ.5) ஒரு துறையில் முதலாவதாக எழுதப்படும் நூல் முதல் நூலாகும். இதனைப் பின்பற்றி காலத்திற்கேற்றவாறு சில மாற்றங்களுடன் தோன்றுவது வழி நூலாகும். முதலிரண்டு நூலையும் தழுவி, மேலும் சில மாற்றங்களுடன் தோன்றுவது சார்பு நூலாகும்.

சான்றாகத் தமிழ் இலக்கண நூல்களில் அகத்தியம் முதல் நூலாகவும், தொல்காப்பியம் வழி நூலாகவும், நன்னூல் சார்பு நூலாகவும் அமையும்.

முதல் நூல்

இயல்பாகவே வினையினின்று நீங்கித் தானே விளங்கிய அறிவினை உடைய முனைவனாகிய இறைவன் உயிர்களுக்கு ஆதிகாலத்தில் செய்த நூல் முதல் நூலாகும். அதுபோல் இறையருள் வாய்க்கப் பெற்ற ஆசிரியர் செய்த நூலும் முதல் நூலாகவும் கூறுவர்.

வினையின் நீங்கி விளங்கிய அறிவின்

முனைவன் கண்டது முதல் நூலாகும்

என்னும் நூற்பா (6) முதல் நூல் செய்பவனை அடையாளப்படுத்தியது.

வழி நூல்

முன்னைய ஆசிரியர்கள் கூறிய நூல்களின் பொருள் முடிவினை முழுவதும் ஏற்று வழி நூல் செய்வதற்குக் காரணமாக உள்ள வேறுபாட்டினைக் கூறி, அறிவுடையோர் அனைவரும் ஏற்கும் நிலையில் விளங்குமாறு கூறுவது வழிநூலாகும்.

முன்னோர் நூலின் முடிபு ஒருங்கு ஒத்துப்

பின்னோன் வேண்டும் விகற்பம் கூறி

அழியா மரபினது வழிநூல் ஆகும் நூற்பா 7

ஒரு நூலானது தனக்கு முன்னர்த் தோன்றிய நூலினை நோக்க வழி நூல் ஆகும். பின்னர்த் தோன்றிய நூலினை நோக்க முதல் நூலாகும். சான்றாக, அகத்தியத்தை நோக்க தொல்காப்பியம் வழி நூலாகும். நன்னூலை நோக்க தொல்காப்பியம் முதல் நூலாகும்.

சார்பு நூல்

முதல் நூல், வழி நூல் என்னும் நூல்களுக்குப் பொருள் முடிவு சிறுபான்மை பொருந்திப் பெரும்பான்மை வேறுபட்டும் காணப்படுவது.

இருவர் நூற்கும் ஒருசிறை தொடங்கித்

திரிபு வேறு உடையது புடைநூல் ஆகும் நூற்பா 8

(ஒருசிறை – சிறுபான்மை, புடைநூல் – சார்பு நூல்)

மூவகை நூல்களுக்குரிய இலக்கணங்களைக் கூறிய பவணந்தியார் இனி வழிநூல், சார்பு நூல்களுக்குரிய சிறப்பு விதியினைக் கூறுகின்றார்.

வழி நூல், சார்பு நூல் – சிறப்பு விதி

வழி நூல், முதல் நூலின் சூத்திரங்களையும், சார்பு நூல், முதல், வழி நூல்களின் சூத்திரங்களையும் சில இடத்தில் மேற்கோளாகத் தருதல் வேண்டும். இப்படிக் கூறுவதற்கு இரண்டு காரணங்கள் கூறப்படுகின்றன.

1. முன்னோர் தம் நூலில் கூறிய பொருளை மட்டுமின்றி, அவர்களுடைய மொழியையும் பொன்னைப் போலப் போற்றுதல். 2. முன்னோரின் நூலையே கூறாது அந்நூலினின்றும் வழி நூல், சார்பு நூல் என வேறு நூலைச் செய்தோமென்றாலும் ஆசிரிய வசனம் இந்நூலில் இல்லை என்னும் குற்றத்தை ஒழிப்பது.

மேற்கூறிய காரணங்களால் முன்னோர் கூறிய பழஞ்சூத்திரங்களை ஓரிடத்தில் கூறுதல் வேண்டும்.

முன்னோர் மொழிபொருளே யன்றி அவர் மொழியும்

பொன்னேபோல் போற்றுவம் என்பதற்கும் முன்னோரின்

வேறுநூல் செய்துமெனும் மேற்கோளில் என்பதற்கும்

கூறுபழஞ் சூத்திரத்தின் கோள். நூற்பா 9

ஈண்டு மேற்கோள், ஆசிரிய வசனம், பழஞ்சூத்திரம் ஆகியவை ஒரு பொருளைத் தரும் பல சொற்களாகும்.

சான்றாக, நன்னூலின் ஆறாம் நூற்பா தொல்காப்பிய மரபியலிலும் காணப்படுகிறது. இந்நூற்பா நன்னூல் பாயிரத்தில் ஆசிரிய வசனமாக எடுத்தாளப்பட்டுள்ளது.

நூல் பயன்

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப்பொருள்களையும் தருவதே நூலின் பயனாகும்.

அறம்பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே. நூற்பா 10

பவணந்தியார் இதுவரை பொதுப்பாயிரம் என்னும் பெருந்தலைப்பில் நூலின் இலக்கணங்கள் சிலவற்றைக் கூறியதைப் பார்த்தோம். மேலும் இப்பகுதியில் நூலின் இலக்கணங்கள் சிலவற்றைக் காணலாம்.

பொதுப்பாயிரம்

பொதுப்பாயிரம் என்னும் பெருந்தலைப்பில் நூலின் இலக்கணங்கள் சிலவற்றைப் பார்த்தோம். மேலும், இப்பகுதியில் நூலின் இலக்கணங்கள் சிலவற்றைக் காணலாம்.

எழு மதம்

நன்னூல் சூத்திரம் 4இல் 'எழுமதம் தழுவி' என்ற தொடர் இடம் பெறுகிறது. ஈண்டு 'மதம்' என்பது நூலாசிரியன் தன் கொள்கையினைக் கூறும் முறையாகும் (நூற்பா 11). அவை,

உடன்படல் – பிறர் கொள்கைக்கு உடன்படுதல்.

மறுத்தல் – பிறர் கொள்கையை மறுத்தல்.

பிறர் மதம் மேற்கொண்டு களைவு – பிறர் கொள்கைக்கு முதலில் உடன்பட்டுப் பின்னர் மறுத்தல்.

தாஅன் நாட்டித் தனாது நிறுப்பு – தானே ஒரு கருத்தினை எடுத்துக்கூறி அதனை வரும் இடந்தோறும் நிறுத்துதல்.

இருவர் மாறுகோள் ஒருதலைத் துணிவு – இருவரால் வேறுபாட்டுடன் கொள்ளப்பட்ட இரண்டு கருத்துகளில் ஒரு கருத்தினைத் தக்கது எனத் துணிதல்.

பிறர் நூலில் உள்ள குற்றத்தினை எடுத்துக் காட்டுதல்.

பிறிதொரு படாஅன் தன்மதம் கொளல் – பிறர் கொள்கைக்கு உடன்படாதவனாகித் தன்னுடைய கொள்கையையே கொள்ளுதல்.

எழுவகை மதமே உடன்படல், மறுத்தல்

பிறர்தம் மதமேற் கொண்டு களைவே

தாஅ னாட்டித் தனாது நிறுப்பே

இருவர் மாறுகோள் ஒருதலை துணிவே,

பிறர்நூல் குற்றம் காட்டல் ஏனைப்

பிறிதொடு படாஅன் தன்மதம் கொளலே.

என்னும் நூற்பா (11) எழுவகை மதங்கள் பற்றிய செய்தியினைக் கூறியது.

பத்துக் குற்றம்

'ஐயிரு குற்றம் அகற்றி' (சூத். 4) என்னும் தொடரின் வரி, நூலில் மேற்கொள்ளத்தகாத பத்துக் குற்றங்கள் கூறப்படுகின்றன.

குன்றக்கூறல், மிகைபடக் கூறல்

கூறியது கூறல் மாறுகொளக் கூறல்

வழூஉச்சொற் புணர்த்தல் மயங்க வைத்தல்

வெற்றெனத் தொடுத்தல் மற்றொன்று விரித்தல்

சென்றுதேய்ந் திறுதல் நின்றுபய னின்மை

என்றிவை ஈரைங் குற்றம் நூற்கே.

என்னும் நூற்பா (12) நூலில் அமையலாகாத பத்துக் குற்றங்களைக் கூறுகிறது. அவை,

குன்றக்கூறல் – குறித்த பொருளை விளக்குவதற்குத் தேவையான சொற்களைவிட குறைவுபடச் சொல்லுதல்; தேவையான அளவு பொருள் முடிவு பெறாமல் சொல்லுதல்.

மிகைபடக்கூறல் – குறித்த பொருளை விளக்குவதற்குப் போதுமான சொற்களைவிட மிகுதியாகச் சொல்லுதலும் நூலுக்குத் தேவையான அளவு பொருளைவிட மிகுதியாகச் சொல்லுதலுமாகும்.

கூறியது கூறல் – ஒரு பொருளையே திரும்பத் திரும்ப பயனில்லாமல் சொல்லுதல்.

மாறுகொளக் கூறல் – பொருளினை முன்னுக்குப்பின் முரணாகக் கூறுதல்.

வழூஉச் சொல் புணர்த்தல் – குற்றம் பொருந்திய சொற்கள், அறிஞர் வெறுக்கும் இழி சொற்கள் ஆகியவற்றை நூலில் சேர்த்தல்.

மயங்க வைத்தல் – பொருள் இதுவோ அதுவோ எனக் கற்போரை மயங்க வைப்பது.

வெற்றெனத் தொடுத்தல் – பொருட்பயன் இல்லாதச் சொற்களைச் சொல்லுதல்.

மற்று ஒன்று விரித்தல் – சொல்லத் தொடங்கிய பொருளைத் தவிர மற்றொரு பொருளை இடையில் விரித்துச் சொல்லுதல்.

சென்று தேய்ந்து இறுதல் – சொல்நடையும் பொருள் நடையும் இறுதியில் தேய்ந்து முடிதல்.

நின்று பயனின்மை – சொற்கள் இருந்தும் பயனில்லாமல் இருத்தல்.

மேற்கூறிய பத்துக் குற்றங்களில் எவையொன்றும் நூலில் இடம் பெறுதல் கூடாது.

### பத்தழகு

'பத்து அழகுகளோடு' (சூத். 5) என்னும் தொடரின் மூலம் நூலில் இடம்பெறும் பத்து அழகுகள் சுட்டிக் காட்டப்படுகின்றன.

"சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல்,

நவின்றோர்க்கு இனிமை, நன்மொழி புணர்த்தல்

ஓசையுடைமை ஆழம் உடைத்தாதல்

முறையின் வைப்பே உலகமலை யாமை

விழுமியது பயத்தல் விளங்கு உதாரணத்தது

ஆகுதல் நூலிற்கு அழகெனும் பத்து." நூற்பா 13

அதாவது, 1. எளிதில் பொருள் விளங்குமாறு சுருக்கிச் சொல்லுதல். 2. பொருளை ஐயத்திற்கு இடமின்றி விளங்குமாறு சொல்லுதல். 3. கற்பவருக்கு இன்பத்தை அளித்தல். 4. நல்ல சொற்களைச் சேர்த்துச் சொல்லுதல். 5. சந்த இன்பம் பெற்றிருத்தல். 6. நுண்ணிதின் நோக்க ஆழ்ந்த கருத்தினைப் பெற்றிருத்தல். 7. படலம் (அதிகாரம்), ஓத்து (இயல்) ஆகியவற்றைக் காரண, காரிய முறைப்படி வைத்தல். 8. உயர்ந்தோர் வழக்குடன் மாறுபடாமலிருத்தல். 9. சிறந்த பொருளைத் தருதல். 10. விளங்கிய எடுத்துக்காட்டினை உடையதாதல் என்பனவாகும்.

### முப்பத்திரண்டு உத்தி

'எண்நான்கு உத்தி' (நன்னூல் சூத். 4) என்னும் தொடர் நூலுக்குரிய 32 உத்திகளைக் கூறுகிறது. நூலின் கருத்தினை விளக்குவதற்கு நூலாசிரியர் கையாளும் முறைகள் உத்திகளாகும்.

"நுதலிப் புகுதல் ஓத்து முறை வைப்பே" என்று தொடங்கும் நூற்பா 14இல் 32 வகை உத்திகளை நன்னூலார் கூறுகிறார். அவையாவன :

1. நுதலிப் புகுதல் – இதனைச் சொல்வேன் என்று சொல்லிய பின் சொல்லத் தொடங்குதல்.

2. ஓத்துமுறை வைப்பு – இயல்களை ஒன்றன்பின் ஒன்றாக முறைப்படி வைத்தல்.

3. தொகுத்துச் சுட்டல் – செய்திகள் பலவற்றையும் தொகுத்துச் சொல்லுதல்.

4. வகுத்துக் காட்டல் – தொகுத்துச் சொல்லியவற்றை வெவ்வேறாக விவரித்துக் காட்டுதல்.

5. முடித்துக் காட்டல் – மேலோர் முடித்தவாறே முடித்துக் காட்டுதல்.

6. முடிவு இடம் கூறல் – தான் சொல்லும் இலக்கணத்திற்கு ஏற்றவாறு இலக்கியம் தோன்றும் இடத்தைக் கூறுதல்.

7. தானெடுத்து மொழிதல் – பழஞ்சூத்திரங்களைச் சில இடங்களில் எடுத்துச் சொல்லுதல்.

8. பிறன்கோள் கூறல் – பிறர் கொண்ட கொள்கையைத் தன் நூலிலும் சொல்லுதல்.

9. தொடர்சொல்புணர்த்தல் – ஒன்றற்கொன்று தொடர்புடைய சொற்களைச் சேர்த்து வைத்தல்.

10. இரட்டுற மொழிதல் – ஒரு தொடரில் இரண்டு பொருள் ஒருங்கே தோன்றும்படி கூறுதல்.

11. ஏதுவின் முடித்தல் – காரணம் புரியாமல் சொல்லப்பட்ட ஒன்றைப் பின்னர்க் காரணத்தைச் சுட்டிக்காட்டி முடிவு செய்தல்.

12. ஒப்பின் முடித்தல் – சொல்லும் இலக்கணம் வேறு ஒன்றிற்குப் பொருந்தி வருமாயின், அதற்கும் அதுவே இலக்கணமாய், அவ்விடத்து உடன் சேர்த்து முடிவு செய்தல்.

13. மாட்டெறிந்து ஒழுகுதல் – ஒன்றிற்குக் கூறப்பட்ட இலக்கணத்தை அதனைப் பெறுதற்குரிய மற்றொன்றிற்குப் பொருத்துதல்.

14. இறந்தது விலக்கல் – முன்னர் வழங்கிய இலக்கணங்களுக்கு உள்ளே பிற்காலத்துப் பயன்படாமல் கழிந்ததை நீக்குதல்.

15. எதிரது போற்றல் – முன்னர் வழங்காது பிற்காலத்து வழங்கி வரும் இலக்கணத்தைச் சேர்த்துக் கொள்ளுதல்.

16. முன்மொழிந்து கோடல் – முன்னர் ஓரிடத்தில் ஒன்றைச் சொல்லிப் பின்னர் அதனை வேண்டும் இடந்தோறும் பயன்படுத்துதல்.

17. பின்அது நிறுத்தல் – ஒரு பொருளுக்குக் காரணமாக முன்னால் வைத்தற்கு உரியதை அங்கே வைத்தற்கு இடமின்மையின் அப்பொருளின் பின்னால் அதனை வைத்தல்.

18. விகற்பத்தின் முடித்தல்– விளங்க வைப்பதற்காகப் பல வேறுபாடுகளின் சிறப்பு வாய்ப்பாட்டால் முடித்தல்.

19. முடிந்தது முடித்தல் – சிறப்பு வாய்ப்பாட்டால் முடிவுற்றதைப் புலப்படுத்த வேண்டிப் பொது வாய்ப்பாட்டால் தொகுத்து முடித்தல்.

20. உரைத்தும் என்றல் – பின்னர் சொல்லப்படுவதை முன்னே ஒரு காரணத்தினால் கூற நேரின், இதனைப் பின்னர் சொல்வோம் என்னும் நிலையில் சுருங்கச் சொல்லுதல்.

21. உரைத்தாம் என்றல் – ஒரு காரணத்தினால் முன்னர்ச் சொல்லப்பட்டதைப் பின்னர்ச் சொல்ல வேண்டிய இடத்து, முன்னர் தானே இதனைச் சொன்னோம் என்ற அடிப்படையில் மிகவும் சொல்லாது விடுத்தல்.

22. ஒருதலை துணிதல் – வேறுபாடாகக் கொள்ளப்பட்ட இரண்டு பக்கத்துள் ஒரு பக்கத்தைத் துணிந்து எடுத்துக் கொள்ளுதல்.

23. எடுத்துக்காட்டல் – சொல்லும் இலக்கணத்திற்கேற்றவாறு இலக்கியத்தைத் தானே எடுத்துக் காட்டுதல்.

24. எடுத்த மொழியின் எய்த வைத்தல் – தான் சொல்லும் இலக்கணத்தைத் தானெடுத்துக் காட்டிய இலக்கியத்தில் பொருந்த வைத்தல்.

25. இன்னது அல்லது இது என மொழிதல் – பொருள் மயக்கம் ஏற்பட்டவிடத்து, இதுவன்று இதுதான் என்று துணிந்து கூறுதல்.

26. எஞ்சிய சொல்லின் எய்தக்கூறல் – சொல்லியவற்றால் சொல்லாமல் விடப்பட்டவற்றிற்கும் இலக்கணம் பொருந்தச் சொல்லுதல்.

27. பிறநூல் முடிந்தது தான் உடன்படுதல் – பிற நூல்களில் கூறப்பட்ட கொள்கையினை ஏற்றுக் கொள்ளுதல்.

28. தன்குறி வழக்கம் மிக எடுத்துரைத்தல் – புதிதாகக் குறித்து வழங்கியதைப் பல இடங்களில் எடுத்துக் கூறுதல்.

29. சொல்லின் முடிவில் அப்பொருள் முடித்தல் – சொல் முடிந்த இடத்து அதன் பொருளையும் முடிய வைத்தல்.

30. ஒன்றின முடித்தல் – ஒற்றுமைப்பட்டவைகளை ஒன்றாகக் கூட்டி முடித்தல்.

31. தன்னினம் முடித்தல் – ஒன்றைக் கூறுமிடத்து அதற்கு இனமாகிய மற்றொன்றையும் அதனுடன் முடித்தல்.

32. உய்த்து உணர வைப்பு – சூத்திர விதிகள் சிலவற்றைக் கொண்டு ஆராய்ந்து அறியும் நிலையில் ஒரு பொருளை வைத்தல்.

நுதலிப் புகுதல் ஓத்துமுறை வைப்பே

தொகுத்துச் சுட்டல் வகுத்துக் காட்டல்

முடித்துக் காட்டல் முடிவிடங் கூறல்

தானெடுத்து மொழிதல் பிறன்கோட் கூறல்

சொற்பொருள் விரித்தல் தொடர்ச்சொற் புணர்த்தல்

இரட்டுற மொழிதல் ஏதுவின் முடித்தல்

ஒப்பின் முடித்தல் மாட்டெறிந் தொழுகல்

இறந்தது விலக்கல் எதிரது போற்றல்

முன்மொழிந்து கோடல் பின்னது நிறுத்தல்

விகற்பத்தின் முடித்தல் முடிந்தது முடித்தல்

உரைத்தும் என்றல் உரைத்தாம் என்றல்

ஒருதலை துணிதல் எடுத்துக் காட்டல்

எடுத்த மொழியின் எய்த வைத்தல்

இன்னது அல்லது இதுவென மொழிதல்

எஞ்சிய சொல்லின் எய்தக் கூறல்

பிறநூன் முடிந்தது தானுடன் படுதல்

தன்குறி வழக்க மிகவெடுத் துரைத்தல்

சொல்லின் முடிவின் அப்பொருள் முடித்தல்

ஒன்றின முடித்தல் தன்னின முடித்தல்

உய்த்துணர வைப்பென உத்தியென் னான்கே.

என்னும் நூற்பா (14) முப்பத்திரண்டு உத்திகளை அடையாளப்படுத்தியது.

மேற்கூறிய உத்திகளுள் ஒன்றின முடித்தல், தன்னினம் முடித்தல் என்னும் இரண்டு உத்திகளும் ஓர் உத்தி என்றே கூறுவாரும் உளர்.

நூலாசிரியர் கையாளும் உத்திகள் பல உள்ளனவெனினும், முதன்மைப் பற்றி 32 என்பது இலக்கண மரபாகும். இவையன்றி விருத்தியுரை, வேறுசில உத்திகளையும் கூறுகிறது. அவை மொழிந்த பொருளோடு ஒன்ற வைத்து அவ்வயின் மொழியாததனையும் முட்டின்றி முடித்தல், உரையிற்கோடல், உடம்பொடு புணர்த்தல், எதிர்மறை முகத்தான் எய்துவித்தல், ஏற்புழிக்கோடல் முதலாயின.

“இருவர் மாறுகொள் ஒருதலைத் துணிதல்

உடன்படுதல்

தானாட்டித் தனாது நிறுத்தல்” (மதம்)

“விளங்க வைத்தல்

முறையின் வைப்பு

விளங்கு உதாரணத்தது ஆகுதல்” (அழகு)

மேற்கூறிய எழுவகை மதத்திலும், பத்து அழகிலும் கூறப்பட்டுள்ள ஆறு கருத்துகளும் உத்தியிலும் கூறப்பட்டுள்ளன.

உத்தி – வரையறை

நூல்களில் கையாளப்பெறும் 32 வகையான உத்திகள் முன்னர்க் கூறப்பட்டன.  உத்தி பற்றிய வரையறையைப் பின்வரும் நூற்பா கூறுகிறது.

"நூற்பொருள் வழக்கொடு வாய்ப்பக் காட்டி

ஏற்புழி அறிந்து இதற்கு இவ்வகை ஆம் எனத்

தரும்வகை செலுத்துதல் தந்திர உத்தி" (நூற்பா 15)

இலக்கண நூலில் உணரப்படும் பொருளை நூல் வழக்கு, உலக வழக்கு ஆகியவற்றுடன் பொருத்தி, அப்பொருளை மற்றோர் இலக்கிய நூற்கண்ணும் ஏற்கும் இடம் அறிந்து இவ்விடத்திற்கு இது எனக் கருதும் வகையாகச் செலுத்துவது தந்திர உத்தி எனப்படும்.

ஓத்து – இலக்கணம்

நன்னூல் சூத்திரம் 4இல் 'ஓத்து' என்று சொல்லப்படுவது இப்பகுதியில் விளக்கப்படுகிறது.

ஒரு சாதியாய் உள்ள மணிகளை வரிசையாகப் பதித்து வைத்தாற் போல, ஒரு முறையில் உள்ள பொருள்களை ஒரு வழிப்பட வைத்துச் சொல்லுவது ஓத்து என்னும் உறுப்பாகும் என்று புலவர்கள் கூறுவர்.

நேரின மணியை நிரல்பட வைத்தாங்கு

ஓரினப் பொருளை ஒருவழி வைப்பது

ஓத்தென மொழிப உயர்மொழிப் புலவர்.

இந்நூற்பா (16) தொல்காப்பியம் செய்யுளியலில் சூத்திரமாகக் காட்டப்பட்டுள்ளது.  இது, நன்னூலில் பழஞ்சூத்திரத்தின் மேற்கோளாக எடுத்தாளப்பட்டுள்ளது.

படலம்

ஒரு வழிப்படாமல் பல்வேறுபட்ட பொருள்களினால் பொதுவாகக் கூறினால் அது படலம் என்னும் உறுப்பாகும்.

"ஒருநெறி இன்றி விரவிய பொருளால்

பொதுமொழி தொடரின் அது படலம் ஆகும்" நூற்பா 17

(படலம் – அதிகாரம்.)  படலம் என்னும் உட்பிரிவுடைய காப்பியங்களுள் பாட்டுடைத் தலைவனின் வரலாறு மட்டுமின்றி,  மலை, கடல், நாடு, நகர் முதலிய பல பொருள்களும் விரவி வருவதும் பல பொருள்கள் உணர்த்தும் பொதுச் சொற்கள் ஒரே வழியின்றித் தொடர்ந்து வரும் தன்மையதாகும்.

சூத்திரம்

சிலவகை எழுத்துகளால் செய்யப்படும் யாப்பில் பல்வகைப்பட்ட பொருள்களைச் செவ்வையாகச் செறியச் செய்து, நோக்குவார்க்கு இனியதாய் அப்பொருளை விளங்கச்  செய்து அப் பல்பொருள் திண்மையும் நன்மையும் சிறந்து வருவன சூத்திரங்களாகும்.

சில்வகை எழுத்திற் பல்வகைப் பொருளைச்

செவ்வ னாடியிற் செறித்தினிது விளக்கித்

திட்ப நுட்பஞ் சிறந்தன சூத்திரம். நூற்பா 18

நன்னூல் சூத்திரங்களே இவ்விலக்கணத்திற்குச் சிறந்த சான்றாகும்.

ஒரு பொருளையே கூறுவது சூத்திரம்.  ஓரினப் பொருள்களையே தொகுப்பது ஓத்து.  பல இலக்கணப் பொருள்களுக்கும் பொது இலக்கணம் கூறுவது படலமாகும்.

சூத்திர நிலை

பொருள் நிலையில் சூத்திரங்கள் ஒன்றோடொன்று தொடர்ந்து வருவது சூத்திர நிலையாகும்.

"ஆற்றொழுக்கு அரிமா நோக்கம் தவளைப்

பாய்த்துப் பருந்தின் வீழ்வு அன்ன சூத்திர நிலை" நூற்பா 19

மேற்கூறிய நான்கு நிலைகளில் சூத்திரங்கள் ஒன்றோடொன்று தொடர்ந்து நிற்கும்.

1.  ஆற்றொழுக்கு – ஆற்று நீரோட்டத்தைப் போன்று சூத்திரங்களும் தம்முள் பொருள் தொடர்புடையதாய் அமைதல்.

2.  அரிமா நோக்கம் – சிங்கம் உடலைத் திருப்பாமல் முன்னும் பின்னும் பார்ப்பது போல் ஒரு சூத்திரத்தின் பொருள் முன்னும் பின்னும் உள்ள சூத்திரப் பொருளோடு தொடர்புடையதாய் அமைதல்.

3. தவளைப் பாய்த்து – தவளை இடையிட்டுத் தத்திச் செல்வதைப் போல ஒரு சூத்திரத்தின் பொருள் ஒரு சூத்திரத்தை இடையிட்டு அடுத்த சூத்திரத்துடன் இயைந்து பொருள் தருவது.

4. பருந்தின் வீழ்வு – ஆகாயத்தில் வட்டமிட்ட பருந்து எவ்விடத்தேனும் இரை கண்டு வீழ்வது போல, ஒரு சொல் எவ்விடத்தேனும் சென்று பொருள் கொள்வது.

சூத்திர வகை

பிண்டம் தொகை வகை குறியே செய்கை

கொண்டியல் புறனடைக் கூற்றன சூத்திரம்.

இந்நூற்பா (20) சூத்திரத்தின் ஆறு வகையினைக் குறிப்பிடுகிறது. அவை,

1. பிண்ட சூத்திரம் – பல திறப் பொருள்களைத் திரட்டி பொதுப்படக் கூறுதல். (எ.டு) "நன்கியம்புவன் எழுத்தே" (நூ. 56) என்று பவணந்தியார் கூறுதல்.

2. தொகைச் சூத்திரம் – பலதிறப் பொருள்களையும் வேறு வேறாகத் தொகுத்துச் சொல்லுதல்.
(எ.டு) "எண்பெயர்... பன்னிரு பாற்றதுவே" (சூத். 57)

3. வகைச் சூத்திரம் – தொகுத்துச் சொல்லப்பட்டவற்றை வேறு வேறாக வகுத்துச் சொல்லுதல். (நன். சூ. 58) எழுத்து முதல், சார்பு என இரு வகைப்படும் என்று கூறுவது இவ்வகைச் சூத்திரத்திற்கு எடுத்துக்காட்டாகும்.

4. குறிச் சூத்திரம் – இவை உயிர், இவை ஒற்று, இவை பெயர், இவை வினை என்பது முதலாகப் பெயரிட்டு அறியும் அளவில் வருதல்.

"அம்முதல் ஈராறு ஆவி" என்று வரும் நன்னூல் 63ஆம் சூத்திரம் இதற்கு எடுத்துக்காட்டாகும்.

5. செய்கைச் சூத்திரம் – புணர்ச்சி விதிகளை அறிந்து புணர்த்தல், முடிபு விதிகளையறிந்து முடித்தல் முதலானவற்றைக் கூறுதல்.

நன்னூலில் (சூத். 209) – ணகர, னகர ஈறுகள் எவ்வாறு புணரும் என்று கூறுவது இச்சூத்திரத்திற்கு எடுத்துக்காட்டாகும்.

6. புறனடைச் சூத்திரம் – புறத்து அடையாக வரும் சூத்திரம். ஒவ்வோர் இயலிலும் கூறப்படும் இலக்கணச் சூத்திரங்களுக்குப் புறமாக அடுத்து வரும் சூத்திரம் நன்னூல் எழுத்தியலின் இறுதிச் சூத்திரமாகிய,

"மொழியாய்த் தொடரினும் முன் அனைத்து எழுத்து" (நன். 127) இப் புறனடைச் சூத்திரத்திற்கு எடுத்துக் காட்டாகும்.

உரையின் பொது இலக்கணம்

உரை பதினான்கு வகையாக உரைக்கப்பட்டுள்ளதை நூற்பா 21 கூறுகிறது. அவை,

1. மூலபாடம் – உரை கூறுவதற்கு எடுத்து எழுதிய மூலபாடம், அப்பாடத்திற்குப் பாடபேதம் இருப்பின் அதனையும் எடுத்துக் கூறுதல்.

2. கருத்து – சூத்திரம் எதைப் பற்றிக் கூறுவது என்பதை உரைத்தல். இலக்கண வகைகளில் "என்னுதலிற்றோவெனின்" என்று தொடங்கி "இன்னது நுதலிற்று" என்று கூறுவது.

3. சொல்வகை – சொற்களைக் குறித்தெழுதும் உரை.

4. சொற்பொருள் – சொற்களுக்குப் பொருள் உரைக்கும் பதவுரை.

5. தொகுத்துரை – பதத்தைத் தனித்தனியே விரித்துப் பொருள் கூறாமல் பொருளை மட்டும் தொகுப்பாகக் கூறுவது.

6. உதாரணம் – சூத்திரம் உணர்த்துகின்ற கருத்துக்கு ஏற்ற உதாரணங்களை இலக்கியங்களிலிருந்து காட்டுதல்.

7. வினா – தானே வினாவுதல்.

8. விடை – அவ்வினாக்களுக்குத் தானே விடை கூறுதல்.

9. விசேடம் – சூத்திரத்தில் உள்ள பொருள் அல்லாமல் அவ்விடத்திற்கு வேண்டுவனவற்றைத் தந்து உரைத்தலாகும்.

10. விரிவு – வேற்றுமை உருபு முதலிய மறைந்து நின்றனவற்றை விரிக்க வேண்டிய இடத்தில் விரித்துக் கூறுதல்.

11. அதிகாரம் – சூத்திரத்தில் கூறப்பட்ட பொருள் இதுவென அவ்வதிகாரத்தோடு பொருந்த உரைக்க வேண்டிய இடத்தில் உரைத்தல்.

12. துணிவு – பொருள் வயப்பட நின்ற இடத்தில் இதற்கு இதுவே பொருள் எனக் கூறுதல்.

13. பயன் – இவ்வாறு சொல்லியதனால் ஏற்பட்ட பயன் இது எனக் கூறுதல்.

14. ஆசிரிய வசனம் – சான்றோர் நூல்களில் இருந்து மேற்கோள் காட்டி உரைத்தல்.

காண்டிகையுரை

உரைகள் பதினான்கு வகைப்படும் எனக்கூறிய பிறகு மேலும் காண்டிகை, விருத்தி என்னும் இரு வகை உரைகள் கூறுப்படுகின்றன.

காண்டிகை உரை என்பது சுருக்க உரையாகும். இதனைச் சிற்றுரை எனவும் விருத்தி உரையைப் பேருரை எனவும் வழங்குவர்.

கருத்துரை, பதவுரை, எடுத்துக்காட்டு தருதல் ஆகிய மூன்றை மட்டும் உரைக்கும் காண்டிகை முக்காண்டியாகும். இம் மூன்று உரைகளோடு வினாவும் விடையும் கூட்டிச் சூத்திரத்தின் உட்பொருளை விளக்கியுரைப்பது ஐங்காண்டிகையுரையாகும்.

முக்காண்டிகை உரைக்கு நன்னூல் மயிலைநாதர் காண்டிகை உரையும் ; ஐங்காண்டிகை உரைக்கு நன் னூல் ஆறுமுகநாவலர் காண்டிகை உரை ஆகியன எடுத்துக்காட்டுகளாகும்.

“கருத்துப் பதப்பொருள் காட்டு மூன்றினும்

அவற்றொடு வினா விடை யாக்க லானும்

சூத்திரத் துட்பொருள் தோற்றுவ காண்டிகை” நூற்பா 22

விருத்தியுரை

காண்டிகை உரை போலன்றிச் சூத்திரத்தின் உள்ளே அடங்கியுள்ள பொருளை விளக்குவதோடு நின்று விடாமல், அவ்விடங்களுக்கு இன்றியமையாதப் பொருள்கள் எல்லாம் விளங்கும்படி தான் உரைக்கும் உரையாலும் எடுத்துக்காட்டுகிற மேற்கோள்களாலும் ஐயமின்றி ஐங்காண்டிகை உறுப்போடு உண்மையான பொருளைக் குறைவுபடாமல் விரித்துக் கூறுவது விருத்தியுரையாகும்.

சூத்திரத்து உட்பொருள் அன்றியும் ஆண்டைக்

கின்றி யமையா யாவையும் விளங்கத்

தன்னுரை யானும் பிறநூ லானும்

ஐயம் அகலவைங் காண்டிகை உறுப்பொடு

மெய்யினை எஞ்சா திசைப்பது விருத்தி.

என்னும் நூற்பா (23) விருத்தியுரை பற்றிய செய்தியினைக் கூறுகிறது.

நூல் – பெயர்க்காரணம்

நூலின் இலக்கணங்களை முறையாக உணர்த்திய பிறகு நூல் காரணப் பெயராகும் என்று இரண்டு வெண்பாக்களில் கூறுகின்றார். (நூற்பா 24, 25)

சொற்கள் பஞ்சாகவும் செய்யுள் இழையாகவும் செஞ்சொற் புலவனே நூற்கின்ற பெண்ணாகவும் குறைவில்லாத வாய் கையாகவும் அறிவு நூற்கின்ற கதிராகவும் குற்றம் இல்லாத நூல் அமையும்.

ஒரு பெண் கதிர் என்னும் நூற்கும் கருவியால் பஞ்சினைக் கொண்டு இழைத்து நூற்கும் நூலைப் போன்று, ஒரு செஞ்சொற் புலவன் தன் அறிவினால் சொற்களைக் கொண்டு செய்யுளாக அமைப்பது நூலாகும்.

பஞ்சிதன் சொல்லாப் பனுவ லிழையாகச்

செஞ்சொற் புலவனே சேயிழை எஞ்சாத

கையே வாயாகக் கதிரே மதியாக

மையிலா நூன்முடிவு மாறு.

என்னும் நூற்பா (24) நூல் அமையும் முறை குறித்த செய்தியினைக் கூறியது.

மரம் முதலியவற்றின் கோணலைத் தீர்த்துச் செப்பம் செய்யும் நூலைப் போன்று மனத்தின் கோணலைத் தீர்த்துச் செப்பம் செய்வது நூலன் மாண்பாகும்.

உரத்தின் வளம்பெருக்கி உள்ளிய தீமைப்

புரத்தின் வளமுருக்கிப் பொல்லா – மரத்தின்

கனக்கோட்டம் தீர்க்கும் நூல் அஃதேபோல் மாந்தர்

மனக்கோட்டம் தீர்க்கும் நூன் மாண்பு.                    நூற்பா 25

நூல் என்பது உவமையாகு பெயராகும்.

I. தன்மதிப்பீட்டு வினாக்கள்

1. பாயிரத்தின் பெயர்களைக் கூறுக.
2. பாயிரம் ........... வகைப்படும்?
3. மூவகை நூல்களின் பெயர்களைக் கூறுக.
4. முதல், வழி நூலை ஒட்டி எழுதப்படும் நூலின் பெயர் .................
5. நூலிற்கு அமையும் அழகின் எண்ணிக்கையும் உத்தியின் எண்ணிக்கையையும் குறிப்பிடுக.
6. சூத்திரங்களின் வகைகளைக் குறிப்பிடுக.
7. சுருக்க உரை என்று அழைக்கப்படும் உரையின் பெயர் ...........................
8. ஆற்றொழுக்கு, அரிமா நோக்கம், தவளைப் பாய்த்து ஆகியவை எவற்றைக் குறிப்பிடுகின்றது.

1.2.1.2 நூலைக் கற்பிக்கும் ஆசிரியனின் வரலாறு

நூலின் இலக்கணத்தை முழுமையாக வரையறுத்த பின்னர் நூலாசிரியனது வரலாற்றினைப் பின்வரும் நூற்பா 26இல் பவணந்தியார் கூறுகிறார்.

“குலனருள் தெய்வம் கொள்கை மேன்மை

கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை

நிலம்மலை நிறைகோள் மலர்நிகர் மாட்சியும்

உலகியல் அறிவோடு உயர்குணம் இணையவும்

அமைபவன் நூலுரை யாசிரி யன்னே”

குலன் – உயர்குடியில் பிறத்தல்.

அருள் – உயிர்களிடம் காட்டும் இரக்க உணர்வு.

தெய்வத்தன்மை – இறை வழிபாடு

மேன்மை – பெருந்தகைமை

கலைபயில் தெளிவு – பல நூல்களில் பழகிய தேர்ச்சி

கட்டுரை வன்மை – மாணாக்கர் எளிதில் புரிந்து கொள்ளுமாறு எடுத்துக் கூறுதல்.

நிலம், மலை, நிறைகோல், மலர்நிகர் மாட்சி – இவை பற்றிய செய்திகள் தனித்த நிலையில் பின்னர் விளக்கப் பெறுகின்றன.

உலகியலறிவு – உலக நடைமுறையை அறிந்திருத்தல்.

மேற்கூறிய நூற்பாவில் ‘இணையவும்’ என்றதால் மாணாக்கர் செய்யும் பணிக்கு மகிழ்ச்சியடைதல். மேலும் குற்றம் கண்டவிடத்து சினம் கொள்ளாமை, பொருளாசையின்றி இருத்தல் முதலியவை ஆசிரியரின் நற்பண்புகளாகும்.

நிலத்தின் குணம்

நிலத்திற்கு நான்கு வகையான குணங்கள் உண்டு என்று பவணந்தியார் குறிப்பிடுகின்றார்.

1. நிலத்தினை ஓர் இடத்தில் நின்று முழுமையும் காண்பதற்கு அருமையுடையது. அதுபோல் நல்லாசிரியர் பிறரால் முழுமையாக அறிந்து கொள்ள முடியாத கல்விப் பெருமை உடையவராய் இருத்தல்.

2. எவ்வளவு சுமையைத் தாங்கினாலும் கலங்காத நிலத்தைப் போன்று, பெரிய வாதம் செய்து தன் மேல் நெருங்கியவரிடம், கலங்காதத் தன்மையைப் பெற்றிருத்தல்.

3. மக்கள் தோண்டுதல் முதலிய குற்றங்களைச் செய்தாலும் பொறுத்துக் கொள்ளுதல் போல் ஆசிரியரும் தம்மை இகழ்பவரைப் பொறுத்துக் கொள்ளுதல் அவசியமாகும்.

4. தக்க பருவத்தில் உழவர் செய்கின்ற முயற்சி நல்ல பயனைத் தருவதைப் போல, மாணாக்கர் செய்யும் முயற்சியின் அளவுக்குத் தக்கவாறு பயனைத் தரும் பண்புடையவராக இருத்தல்.

மேற்கூறிய நான்கு காரணங்களால் நல்லாசிரியருக்கு நிலம் உவமையாகக் கூறப்பட்டது.

தெரிவரும் பெருமையும் திண்மையும் பொறையும்

பருவ முயற்சி அளவில் பயத்தலும்

மருவிய நன்னில மாண்பா கும்மே.

என்னும் நூற்பா (27) நிலத்தின் குணம், ஆசிரியருக்குப் பொருந்தியமையைக் காட்டியது.

மலைமாட்சி

அளக்க லாகா அளவும் பொருளும்

துளக்க லாகா நிலையும் தோற்றமும்

வறப்பினும் வளந்தரும் வண்மையும் மலைக்கே.  நூற்பா 28

மலைக்கு ஐந்து வகையான பண்புகள் உண்டு.

1. அளக்கலாகா அளவு – அளந்து கூறுவதற்கு முடியாத வடிவ அளவை உடையது போல், நல்லாசிரியர் பரந்து பட்ட கல்வியறிவினை உடையவராய் இருத்தல்.

2. அளக்கலாகாப் பொருள் – பல்வகைப்பட்ட பொருள்களை உடையது போல் பலவகை நூற்பொருளும் நிரம்பப் பெற்றவராய் இருத்தல் வேண்டும்.

3. துளக்கலாகா நிலை – வலிமை உடையவைகளாலும் அசைக்க முடியாத உருவ நிலைமை உடையது போல் எப்புலவராலும் அசைக்க முடியாத கல்வியறிவினைப் பெற்றிருத்தல்.

4. தோற்றம் – நீண்ட தொலைவிலுள்ளவராலும் காணப்படுகின்ற உயர்ச்சி உடையது போல் அயலில் உள்ளவராலும் அறியப்படும் உயர்வினைப் பெற்றிருத்தல்.

5. வறப்பினும் வளம் தரும் வன்மை – மழை பொய்த்து நிலம் வறண்டு போனாலும் உயிர்களுக்கு நீர் வளத்தைத் தருகின்ற கொடைத் தன்மையைப் போல் தன்னைச் சார்ந்த மாணாக்கருக்கு எக்காலத்தும் கல்விச் செல்வத்தைக் கொடுக்கும் தன்மையைப் பெற்றிருத்தல்.

மேற்கூறிய ஐந்து காரணங்களால் மலை நல்லாசிரியருக்கு உவமையாயிற்று.

நிறைகோல் மாட்சி

நிறைகோல் – தராசுக்கோல் என்பதாகும். இது இரண்டு குணங்களை உடையது. இவ்விரண்டு குணங்களையும் நல்லாசிரியரும் பெற்றவராவார்.

"ஐயம் தீரப் பொருளை உணர்த்தலும்

மெய்ந்நடு நிலையும் மிகுநிறை கோற்கே"  நூற்பா 29

1. நிறுத்தப்படும் பொருளின் அளவினைச் சரியாகக் காட்டுதல் போல் மாணாக்கரால் வினாவப்பட்ட சொற்பொருளின் இயல்பைத் தெளிவாக அறிவித்தல்.

2. இரண்டு தட்டுகளுக்கும் இடையே ஒரு பக்கம் சாயாமல் நடுநிலையில் இருப்பது போல் புலவர் இருவர் மாறுபட்டனராயின் உண்மையை உணர்த்த அவ்விருவருக்கும் நடுவராய் இருத்தல்.

மலர்மாட்சி

மலர் பின்வரும் ஐந்து குணங்களைப் பெற்றிருப்பது போல் நல்லாசிரியரும் பெற்றிருப்பர்.

1. நல்ல காரியங்களுக்கு மலர் மங்கலப் பொருளாகத் திகழ்வதைப் போல, நற்காரியத்திற்கு ஆசிரியர் உரியவராகிறார்.

2. எந்தச் செயலிலும் மலர் முக்கியமாக இருப்பதைப் போல் ஆசிரியரும் அனைத்துச் செயலுக்கும் முக்கியமாவார்.

3. பார்ப்போர் அனைவரும் சூடிக் கொள்வதைப் போல் காண்போர் அனைவரும் ஆசிரியரை விரும்பி ஏற்றுக் கொள்ளுவர்.

4. மலரின் மென்மைத் தன்மையைப் போன்று ஆசிரியரும் மென்மையான பண்பினைப் பெற்றிருத்தல்.

5. மலர் உரிய காலத்தில் மலர்வதைப் போல் ஆசிரியரும் பாடம் சொல்லுதற்கு உரிய காலத்தில் முகமலர்ச்சி உடையவராக இருத்தல்.

"மங்கலம் ஆகி இன்றி யமையாது

யாவரும் மகிழ்ந்து மேற்கொள மெல்கிப்

பொழுதின் முகமலர்வு உடையது பூவே."

என்னும் நூற்பா (30) வின் மூலம் பவணந்தியார் நல்லாசிரியருக்கு மலர் உவமையாகியமையை எடுத்துக்காட்டினார்.

இதுவரை நல்லாசிரியருக்கு நிலம், மலை, நிறைகோல், மலர் ஆகியவை உவமையாகியமையை எடுத்துக் கூறிய பவணந்தியார், இனி, ஆசிரியராகாதார் இலக்கணத்தைக் கூறுகிறார்.

ஆசிரியராகாதார் இலக்கணம்

நன்னூல் நூற்பா 31 தொடங்கி 35ஆம் நூற்பா வரை ஆசிரியர் ஆவதற்குத் தகுதியில்லாதவரின் இலக்கணம் கூறப்படுகிறது. 31ஆம் நூற்பா தொகுத்தும் பிற நூற்பாக்களில் ஆசிரியராகாதார் இலக்கணத்தைத் தனித்தனியே வகுத்தும் முறையே கூறுகின்றன.

மொழிகுண மின்மையும் இழிகுண இயல்பும்

அழுக்காறு அவாவஞ்சம் அச்சமாடலும்

கழற்குடம் மடல்பனை பருத்திக்குண்டிகை

முடத்தெங் கொப்பன முரண்கொள் சிந்தையும்

உடையோ ரிலரா சிரியரா குதலே.

என்னும் நூற்பா (31) ஆசிரியராகாதாரின் இலக்கணத்தைக் கூறுகின்றது.

1. மொழி குணமின்மை – பாடம் சொல்லும் தன்மையின்மை.

2. இழிகுண இயல்பு – பொய் கூறுதல் முதலிய இழிந்த குணங்களைப் பெற்றிருத்தல்.

3. அழுக்காறு – மாணாக்கரின் கல்வியறிவைக் கண்டு பொறாமைப்படுதல்.

4. அவா – பொருட்செல்வத்தின் மீது மிகுதியாக ஆசை வைத்திருத்தல்.

5. வஞ்சம் – உண்மைப் பொருளை மறைத்துப் பொய்ப் பொருளைக் கூறும் வஞ்சகத்தன்மை.

6. அச்சம் ஆடல் – அஞ்சத் தகாதவற்றிற்கு அஞ்சுதலும் கேட்பவர்க்கு அச்சம் உண்டாகுமாறு பேசுதலும்.

7. கழற்குடம், மடல்பனை, பருத்திக் குண்டிகை, முடத்தெங்கு ஆகிய நான்கு பொருள்களும் ஆசிரியர் ஆகாதவர்க்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளன. இவை தனித்தனியே பின்னர் விளக்கப்பெறுகின்றன.

கழற்குடத்தின் தன்மை

1. கழற்சிக் காய்கள் வழுவழுப்பாயும் உருட்சியாகவும் இருப்பதால் அவற்றைக் குடத்தில் இடும்போது முதலில் இட்ட காய்கள், பின்னர் இடப்பட்ட காய்கள் என்ற முறைப்படி இல்லாமல் கொட்டும் போது கலந்த நிலையில் வெளிப்படுவது போல, தாம் முதலில் கற்றவை, பின்னர்க் கற்றவை என்ற முறையின்றி முன்பின்னாக முறை மாறி கற்றுத் தருவார்கள்.

2. தன்னிடத்தே பெய்த கழற்சிக் காய்களை விரைவாகக் கொட்டிவிடுவதைப் போன்று மாணாக்கர் ஏற்றுக் கொள்ள இயலாத வேகத்தில் பாடம் சொல்லுவர்.

பெய்த முறையன்றி பிறழ உடன்தரும்

செய்தி கழற்பெய் குடத்தின் சீரே.

என்னும் நூற்பா (32) கழற்குடத்தின் தன்மை ஆசிரியராகாதவர்க்குப் பொருந்தியமையைக் கூறியது.

மடற்பனையின் தன்மை

உடல் முழுக்க கருக்கோடு கூடிய மட்டைகளைப் பெற்றிருப்பது பனை மரமாகும். தன்னிடமுள்ள காய்கள் (அ) பழங்கள் முதலியவற்றைப் பிறர் பறித்துக் கொள்வதற்கு இடம் கொடுக்காது. அதுமட்டுமின்றி மடற்பனை மேல் ஏறுபவர் மடல்களின் கருக்கினால் புண்படுவதைப் போன்று, தாமே தம்மிடத்தில் உள்ள நூல் பொருள்களைச் சொல்ல பிறர் அறிந்து கொண்டால் மட்டுமின்றி, ஒருவர் தம்மிடம் நெருங்கி, அறிந்து கொள்ள இடம் கொடுக்க மாட்டார்கள்.

“தானே தரக்கொளின் அன்றித் தன்பால்

மேவிக் கொளக்கொடா இடத்தது மடற்பனை” நூற்பா 33

பருத்திக் குண்டிகையின் தன்மை

பஞ்சு அடைத்த குடுக்கையே பருத்திக் குண்டிகையாகும். (வாய் – சிறியதாய் இருத்தல்).

1. பஞ்சினை உட்கொள்ளும் போதும் வருத்தத்தோடு சிறிது சிறிதாக அடைக்கத் தன்னுள்ளே கொள்வதைப் போன்று, தம் கல்வியைக் கற்ற நிலையில் தமக்குக் கற்பித்தவர் வருத்தத்தோடு சிறிது சிறிதாகக் கற்பிக்க அறிந்து கொண்டிருப்பர்.

2. பருத்திக் குண்டிகையிலிருந்து பஞ்சினை எடுப்பது அரிதான செயலாகும். அதுபோல் ஆசிரியராகாதார் தாம் பாடம் சொல்லும் போது அக்கல்வியை எளிதில் அளிக்கமாட்டார்.

இவ்விரு காரணங்களால் பருத்திக் குண்டிகை ஆசிரியராகாதவர்க்கு உவமையாயிற்று.

அரிதிற் பெயக்கொண்டு அப்பொருள் தான்பிறர்க்கு

எளிதீ வில்லது பருத்திக் குண்டிகை. நூற்பா 34

முடத்தெங்கின் தன்மை

“பல்வகை உதவி வழிபடு பண்பின்

அல்லோர்க்கு அளிக்குமாது முடத்தெங்கே” நூற்பா 35

தென்னை மரத்தின் வேர் ஒரு வீட்டு எல்லையில் இருக்க, காய்க்கும் தலைப்பகுதி பிறிதொரு வீட்டின் எல்லையில் இருக்கும். நீர் பாய்ச்சுதல் முதலிய செயல்களால் உதவியவருக்குக் காய்களைத் தராமல் மற்றவர்க்குத் தருவது முடத்தெங்கின் குணமாகும். அதுபோல், தமக்கு யார் பொருள் முதலானவற்றைக் கொடுத்து வழிபாடு செய்கிறார்களோ அந் நன்மாணார்க்கர்க்குக் கல்வியைத் தராமல் பிறர்க்குத் தாம் கற்ற நூற்பொருளைத் தருவர். இக் காரணத்தால் முடத்தெங்கின் குணம் ஆசிரியராகார்க்கு உவமையாகக் கூறப்பட்டது.

இதுவரை ஆசிரியராகாதவர்க்கு கழற்குடம், மடற்பனை, பருத்திக் குண்டிகை, முடத்தெங்கு ஆகியவை உவமையாகக் கூறப்பட்டன. இனி, நல்லாசிரியர் பாடம் சொல்லும் முறை குறித்த செய்திகளைக் காணலாம்.

1.2.1.3 ஆசிரியன் மாணாக்கருக்கு பாடம் சொல்லும் முறை

பொதுப்பாயிரத்தின் மூன்றாம் வகையான பாடம் சொல்லும் முறையினை நூற்பா 36 தெளிவாகக் காட்டுகிறது.

1. ஆசிரியன், மாணாக்கன் ஆகிய இருவருக்கும் ஏற்ற இடம், காலம் ஆகியவற்றைத் தெளிவாக ஆராய்ந்து பார்த்து உரிய இடத்திற்கேற்றவாறு கற்பிக்க வேண்டும்.

2. மேம்பட்ட இடத்தில் கற்பித்தல்.

3. தான் வழிபடும் தெய்வத்தினை வணங்கிக் கற்பித்தல்.

4. பாடம் சொல்லப்படும் நூற்பொருளை முதலில் தன் மனத்தில் நிலையாக நிறைத்து வைத்துக் கொள்ளுதல்.

5. விரைவாகக் கற்பிப்பதைத் தவிர்த்து. புரியும்படியாகக் கற்பித்தல்.

6. சினமின்றிக் கற்பித்தல்.

7. விருப்பத்துடனும் மலர்ந்த முகத்துடனும் கற்பித்தல்.

8. மாணாக்கன் தன் மனத்தில் கொள்ளும் தன்மையை அறிந்து, அதற்கேற்றவாறு கற்பித்தல்.

9. மாறுபாடு இல்லாத நல்ல மனத்துடன் கற்பித்தல்.

மேற்கூறிய முறைகளைப் பாடம் சொல்லும் முறையில் ஆசிரியர் பின்பற்றுதல் அவசியமாகும்.

ஈதல் இயல்பே இயம்புங் காலைக்

காலமும் இடனும் வாலிதின் நோக்கிச்

சிறந்துழி இருந்துதன் தெய்வம் வாழ்த்தி

உரைக்கப் படும்பொருள் உள்ளத் தமைத்து

விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து

கொள்வோன் கொள்வகை அறிந்தவ னுங்கொளக்

கோட்டமின் மனத்தினூல் கொடுத்த லென்ப.

என்னும் நூற்பா (36) ஆசிரியர், மாணவனுக்குப் பாடம் சொல்லும் முறையினைக் கூறியது. நூலினைக் கற்பிக்கும் நல்லாசிரியன் எத்தகையவர்களை மாணாக்கராய் ஏற்கலாம் என்பதை நூற்பா 37 குறிப்பிடுகின்றது.

நூலினைக் கற்பிக்கும் நல்லாசிரியன் எத்தகையவர்களை மாணாக்கராய் எற்று பாடம் கற்பிக்கலாம் என்பதைப் பின்வரும் நூற்பா கூறுகிறது.

“தன்மகன் ஆசான் மகனே மன்மகன்

பொருள்நனி கொடுப்போன் வழிபடுவோனே

உரைகோ ளாளற்(கு) உரைப்பது நூலே" நூற்பா 37

1. நூலைக் கற்பிக்கும் ஆசிரியரின் மகன்

2. தன் ஆசிரியன் மகன்

3. அரசன் மகன்

4. செல்வத்தை மிகுதியாகக் கொடுப்பவன்

5. தனக்கு வழிபாடு செய்பவன்

6. தான் சொல்லும் உரையினை விரைவில் மனத்தில் ஏற்றிக்கொள்ளும் அறிவுடையவன்.

மேற்கூறிய ஆறு நிலைகளில் முதல் ஐந்து நிலைகளில் உள்ளவர்கள் அறிவில் குறைவு உடையவராக இருந்தாலும் கற்பிக்க வேண்டும். தான் சொல்பவற்றை விரைவில் ஏற்றுக் கொள்பவர்களுக்குப் பொருள் கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் கண்டிப்பாகக் கற்பித்தல் ஆசிரியரின் கடமையாகும்.

1.2.1.4 மாணாக்கரது இலக்கணம்

மூவகை மாணாக்கர்

"அன்னம் ஆவே மண்ணொடு கிளியே

இல்லிக்குடம் ஆடு எருமை நெய்யரி

அன்னர் தலையிடை கடைமாணாக்கர்" நூற்பா 38

நூலைப் பயில்கின்ற மாணாக்கர் மூவகையினர் என்பதை மேற்கூறிய நூற்பா காட்டுகிறது. அவை, 1. தலை மாணாக்கர் 2. இடை மாணாக்கர் 3. கடை மாணாக்கர்.

தலை மாணாக்கர் – அன்னம், பசு ஆகியவற்றைப் போன்றவர்.

இடை மாணாக்கர் – நிலம், கிளி ஆகியவற்றைப் போன்றவர்.

கடை மாணாக்கர் – இல்லிக்குடம், ஆடு, எருமை, பன்னாடை ஆகியவற்றைப் போன்றவராவர்.

தலை மாணாக்கர் : பாலையும், நீரையும் கலந்து வைத்தால் அவற்றைத் தரம் பிரித்துப் பாலை உட்கொள்ளும் அன்னப்பறவை போல், ஆசிரியர் உரைக்கும் பாடத்தின் சாரத்தையும் கோதினையும் வேறுபிரித்துச் சாரத்தை மட்டும் உட்கொள்வர் தலை மாணாக்கர்.

புல் அடர்ந்திருக்கும் இடத்தைக் கண்ட பசுவானது வயிறு நிரம்ப மேய்ந்து, பின்னர் ஓரிடத்திலிருந்து சிறிது சிறிதாக வாயில் வருவித்துக் கொண்டு, அசை போட்டுத் தின்னும் தன்மையது. அதுபோல் தலைமாணாக்கர் மிக்க கல்வி அறிவு பெற்ற ஆசிரியரைக் கண்டால், அவர் கற்பிக்கும் கல்வியை உள்ளம் நிரம்பும்படி விரைவில் கேட்டு, பின்னர் அக்கல்வியை ஓரிடத்தில் சிறிது சிறிதாக நினைவில் கொண்டு வந்து தெளிவு பெறுவர்.

இடை மாணாக்கர்

நிலம், உழவர்களின் உழைப்பிற்கேற்றவாறு பயன்பாட்டினைத் தருவது போல் ஆசிரியர் கற்பித்த உழைப்பின் அறிவுக்கேற்ற கல்வி அறிவையே காட்டுவர். இதனால் நிலம் இடை மாணாக்கர்க்கு உவமையாயிற்று.

சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை போன்று தமக்குக் கற்பித்த நூல்பொருள்களைத் தவிர வேறு நூற்பொருளைக் கூறத் தகுதியற்றவர்கள்.

இல்லிக்குடம் என்பது பொத்தல் உள்ள குடம். அதில் ஊற்றப்படும் தண்ணீர் நிற்காதது போல் கற்பிக்கப்படும் பாடங்களை உடனுக்குடன் மறந்து விடுவர்.

கடை மாணாக்கர்

ஆடானது தான் மேயும் புல்வெளியில் ஓரிடத்தில் மேயாமல் பல இடங்களுக்கும் சென்று திரிந்து நுனிப்புல் மேய்வதைப் போன்று, ஓர் ஆசிரியரிடத்தில் நிலையாகப் பாடம் கேட்காமல் பலரிடத்திலும் சென்று சிறிது சிறிதாகப் பாடம் கேட்டு எவ்விடத்தும் முழுமை அறிவைப் பெறாதவர்கள். எனவே, ஆடு கடை மாணாக்கருக்கு உவமையாயிற்று.

எருமையானது நீர் நிலையில் தெளிந்த நீரைக் குடிக்காமல் அதனை நன்கு கலக்கிய பிறகே குடிக்கும் தன்மையுடையது. அது போன்று ஆசிரியருள் நல்ல உள்ளத்தினை வருத்தமுறச் செய்து, அவர் வெறுப்புடன் நடத்திய பாடத்தைக் கேட்பர்.

நெய்யரி என்னும் பன்னாடை, நெய், தேன் முதலியவற்றை வடிகட்டுகையில் அவற்றின் சாரத்தைக் கீழே ஒழுகவிட்டு தேவையற்றவற்றைத் தன்னிடம் தக்க வைத்துக் கொள்வதைப் போல் கடை மாணாக்கர் நல்லாசிரியர் கற்பிக்கும் நல்ல கருத்துகளை ஏற்றுக் கொள்ளாமல் தேவையற்றவற்றை ஏற்றுக் கொள்வர்.

மாணாக்கராகாதார் இலக்கணம்

மாணாக்கருக்குரிய இலக்கணத்தை முறைப்படுத்திய பவணந்தியார் மாணாக்கராகாதார் இலக்கணத்தை நூற்பா 39இல் கூறுகிறார்.

"களிமடி மானி காமி கள்வன்

பிணியன் ஏழை பிணக்கன் சினத்தன்

துயில்வோன் மந்தன் தொன்னூற் கஞ்சித்

தடுமாறு உளத்தன் தறுகணன் பாவி

படியுன் இன்னோர்க்குப் பகரார் நூலே." நூற்பா 39

கள் குடிப்பவன், சோம்பலுடையவன், தன்னை எப்பொழுதும் பெரிதாக நினைத்துக் கொண்டு ஆசிரியருக்கு அடங்காதவன், காம உணர்ச்சி மிக்கிருப்பவன், தீராத நோயினைப் பெற்றிருப்பவன், அறிவில்லாதவன், ஆசிரியருடன் மாறுபாடு கொள்பவன், கோபப்படுபவன், பாடம் கேட்கும் நேரத்தில் உறக்க நிலையில் இருப்பவன், ஆசிரியர் கற்பிப்பதை எளிதில் புரிந்து கொள்ளாதவன், கற்க வேண்டிய பழைமையான நூல்களின் பரப்பளவினைக் கண்டு அஞ்சுபவன், அஞ்சத் தக்கனவற்றிற்கு அஞ்சாதவன், பாவத் தொழிலைச் செய்பவன், வஞ்சக புத்தியுடையவன் ஆகியோர் மாணாக்கராவதற்குத் தகுதியில்லாதவர்களாவர்.

நன்னூல் பாயிரத்தில் பவணந்தியார் இதுவரை மாணாக்கர் ஆவதற்கும், மாணாக்கர் ஆகாதவர்க்கும் இலக்கணத்தைக் கூறினார். இனி, பாடம் கேட்டலின் வரலாற்றினை நூற்பா 40 தொடங்கி 46 வரை கூறுகின்றார்.

1.2.1.5 பாடம் கேட்டலின் வரலாறு

பாடம் எவ்வாறு கேட்க வேண்டும் என்பதை நூற்பா 40இல் பவணந்தியார் கூறுகின்றார்.

கோடன் மரபே கூறுங் காலைப்

பொழுதொடு சென்று வழிபடன் முனியான்

குணத்தொடு பழகி யவன்குறிப் பிற்சார்ந்து

இருவென இருந்து சொல்லெனச் சொல்லிப்

பருகுவ னன்ன ஆர்வத் தனாகிச்

சித்திரப் பாவையின் அத்தகவு அடங்கிச்

செவிவா யாக நெஞ்சுகள னாகக்

கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்துப்

போவெனப் போதல் என்மனார் புலவர்.

என்னும் நூற்பா (40) ஆசிரியரிடம் மாணாக்கர் பாடம் கேட்டலின் வரலாற்றினைக் கூறுகின்றது.

1. உரிய நேரத்தில் ஆசிரியரை அணுகுதல்.
2. ஆசிரியரை வழிபடுதல்.
3. ஆசிரியரின் பண்பிற்கேற்றவாறு பழகுதல்.
4. ஆசிரியர் கருத்தினை நுட்பமாக அறிந்து அவரை நெருங்குதல்.
5. ஆசிரியரின் ஒப்புதல் கிடைத்த பிறகே இருக்கையில் அமர்தல்.
6. ஆசிரியர் பாடத்தைச் சொல் என்று கூறிய பிறகே பாடத்தைக் கூறுதல்.
7. தண்ணீர் வேட்கை உள்ளவன் மிகுதியாக நீரைப் பருகுவது போல் பாடம் கேட்பதில் மிக்க ஆர்வம் பெற்றிருத்தல்.
8. சித்திரப்பாவை போல அடங்கியிருந்து பாடம் கேட்டல்.
9. காதுகளைக் கல்வி என்னும் நீரைப் பருகும் வாயாகவும், மனத்தைக் கொள்ளும் இடமாகிய வயிறாகவும் கொண்டு, ஆசிரியரிடம் கேட்ட நூற்பொருளை மனத்தில் நிலைநிறுத்திக் கொள்ளுதல்.

10.  ஆசிரியன் 'போ' என்று கூறிய பிறகே வெளியே செல்லுதல் வேண்டும்.

மேற்கூறிய பத்து நிலைகளில் மாணாக்கர் ஆசிரியரிடம் பாடம் கேட்டல் வேண்டும்.

நூலினைப் பயில்வோன் பின்வரும் நிலையில் பயின்றால் அவன் கற்கும் நூலில் மிகுந்த தேர்ச்சியினைப் பெற முடியும்.

1.  வழக்கு அறிதல் – உலக வழக்கு, இலக்கிய வழக்கு என்னும் இரு வகை வழக்குகளையும் அறிந்திருத்தல்.

2.  பாடம் போற்றல் – மூல பாடங்களை மறக்காமல் பாதுகாத்தல்.

3.  கேட்டவை நினைத்தல் – ஆசிரியரிடம் கற்ற நுண்ணிய பொருள்களைப் பலமுறை சிந்தித்துப் பார்த்தல்.

4.  ஆசான் சார்ந்து அவை அமையக் கேட்டல் – ஆசிரியரிடம் கேட்டவற்றையே மனத்தில் பதியுமாறு மறுபடியும் கேட்டல்.

5.  அம்மாண்பு உடையோர் தம்மோடு பயிறல் – நன்முறையில் கற்கும் மாணாக்கரோடு பழகுதல்.

6.  வினாதல் – ஐயப்படும் பொருளை நல் மாணாக்கரிடம் கேட்டல்.

7.  வினாயவை விடுத்தல் – நல்மாணாக்கர் கேட்ட கேள்விகளுக்குத் தான் விடைகூறுதல்.

நூல்பயில் இயல்பே நுவலின்வழக் கறிதல்

பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்

ஆசாற் சார்ந்தவை அமைவரக் கேட்டல்

அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்

வினாதல் வினாயவை விடுத்த லென்றிவை

கடனாக் கொளினே மடநனி யிகக்கும்.

என்னும்  நூற்பா (41) நூலினை மாணாக்கன் பயிலும் நிலையினைக் கூறியது.

நற்புலமை அமையும் முறை

மாணாக்கர் நற்புலமைப் பெறுவதற்கு உரிய வழிகளை நூற்பா 42 தொடங்கி 45ஆம் நூற்பா வரை பவணந்தியார் கூறுகின்றார்.

"ஒருகுறி கேட்போன் இருகால் கேட்பின்

பெருக நூலில் பிழைபாடி லனே"                    நூற்பா 42

(குறி என்பது முறையாகும்.)  ஒரு நூலினை ஒன்றிற்கும் மேற்பட்டு இருமுறை கேட்டால் அந்நூலில் அவன் பெரும்பாலும் பிழை உணர மாட்டான்.  அந்நூலை மூன்று முறை கேட்டால் ஆசிரியர் தனக்குக் கற்பித்த முறையை அறிந்து, தான் பிறர்க்கு அந்த நூலை கற்பிக்கும் திறனைப் பெறுவான்.

"முக்கால் கேட்பின் முறைஅறிந்(து) உரைக்கும்"       நூற்பா 43

ஆசிரியரின் புலமைத் திறனால் நல்மாணாக்கர் கால் பங்கினைப் பெறுவர்.  மற்றொரு கால் பங்கு கற்கும் தொழிலுடைய பிற மாணாக்கர்களுடன்  பழகும் வகையில் பெறப்படும்.  மீதமுள்ள அரைப்பங்கு புதுமையை மாணாக்கரிடத்தும், அவைக்களத்தோரிடத்தும் முறையாக விரித்துச் சொல்லும் போது அறியப்பெறும்.

ஆசா னுரைத்தது அமைவரக் கொலினும்

காற்கூர் அல்லது பற்றல னாகும்.                    நூற்பா 44

அவ்வினை யாளரொடு பயில்வகை ஒருகாற்

செவ்விதி னுரைப்ப வவ்விரு காலும்

மையறு புலமை மாண்புடைத் தாகும்.     நூற்பா 45

மேற்கூறிய நூற்பாக்களில் மாணாக்கர் முழுமையான அறிவைப் பெறும் நிலையினைப் பவணந்தியார் கூறியுள்ளார்.

மாணாக்கர் – ஆசிரியர் உறவு

அழலின் நீங்கான் அணுகான் அஞ்சி

நிழலின் நீங்கான் நிறைந்த நெஞ்சமொடு

எத்திறத்து ஆசான் உவக்கும் அத்திறம்

அறத்தின் திரியாப் படர்ச்சி வழிபாடே. நூற்பா 46

நெருப்பை நெருங்காமலும் முழுமையாக விலகாமலும் குளிர் காய்தல் வேண்டும். அதுபோல் மாணாக்கனும் ஆசிரியரை விட்டு விலகாமலும் முழுமையாக நெருங்காமலும் அளவாக இருந்து அவரின் கல்வியறிவைப் பெற்று வழிபாடு செய்தல் வேண்டும்.

இதுவரை எல்லா நூலுக்கும் பொருந்துகின்ற பொதுப்பாயிரத்தைப் பார்த்தோம். இனி, அடுத்த பகுதியில் ஒரு குறிப்பிட்ட நூலுக்குப் பொருந்துகின்ற சிறப்புப் பாயிரத்தை முறையே அறிந்து கொள்ளலாம்.

II. தன்மதிப்பீட்டு வினாக்கள்

1. நல்லாசிரியனுக்கு உவமையாகக் கூறப்படுபவை யாவை?
2. கழற்குடம், மடற்பனை, பருத்திக் குண்டிகை, முடத்தெங்கு ஆகியவை .............. க்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது.
3. தலைமாணாக்கருக்கு உவமையாகக் கூறப்படுபவை?
4. மண், கிளி ஆகியவை எவ்வகை மாணாக்கருக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளன?
5. கடை மாணாக்கருக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ள பொருள்கள் யாவை?

1.2.2. சிறப்புப் பாயிரம்

ஒரு நூலைப் பற்றிக் கூறுகின்ற சிறப்பான முகவுரை பாயிரமாகும். இப்பாயிரம் எட்டு வகையான செய்திகளைத் தெரிவித்தல் இன்றியமையாததாகும். அவை,

1. நூலை இயற்றியவரின் பெயர்.
2. நூல் வந்த வழி.
3. நூல் வழங்கும் நிலத்தின் எல்லை.
4. நூலின் பெயர்.
5. ஒரு நூலைப் படித்த பின்னர் அந்த நூலைப் பாடம் கேட்கத் தக்கது என்னும் இயைபு.
6. நூலில் கூறப்பட்டுள்ள பொருள்.
7. நூலைக் கேட்பதற்குத் தகுதியுடையவர்கள்.
8. நூலைப் பயில்வதால் பெறப்படும் பயன்.

மேற்கூறிய எட்டுச் செய்திகளையும் தெரிவித்தல் சிறப்புப் பாயிரமாகும்.

“ஆக்கியோன் பெயரே வழியே எல்லை

நூல்பெயர் யாப்பே நுதலிய பொருளே

கேட்போர் பயனொடு ஆயெண் பொருளும்

வாய்ப்பக் கேட்டல் பாயிரத் தியல்பே.” நூற்பா 47

இவ்வெட்டுச் செய்திகளுடன் நூல் இயற்றப்பட்ட காலம், நூல் அரங்கேற்றிய அவை, நூல் இயற்றப்பட்டதன் காரணம் ஆகிய மூன்றையும் சேர்த்துப் பதினொன்றாகவும் கூறுவர்.

காலம் களனே காரண என்றிம்

மூவகை யேற்றி மொழிநரு முளரே. நூற்பா 48

நூலுக்குப் பெயரிடும் முறை

நூலுக்குப் பெயரிடும் முறையில் எட்டு வகைகள் பின்பற்றப்படுகின்றன.

1. முதல் நூல் – ஒரு வழி நூலிற்கோ அல்லது சார்பு நூலிற்கோ எது முதல் நூலோ அந்நூலின் பெயரே வழிநூல் அல்லது சார்பு நூலிற்குப் பெயராக அமையும். தமிழில் உள்ள இராமாயணம், பாரதம் முதலியவை முதல் நூலால் பெயர் பெற்றவை.

2. கருத்தன் – நூலினை இயற்றிய ஆசிரியன் பெயரே நூலிற்குப் பெயராக அமையலாம். தொல்காப்பியம், அகத்தியம் முதலியன.

3. அளவு – நூலின் அளவே பெயருக்கு வழங்கப்படலாம். நாலடி நானூறு என்பது அதன் நான்கு அடிகளால் ஆன நானூறு பாடல்களைக் கொண்டது. இது நாலடியார் என அழைக்கப்படும்.

4. மிகுதி – நூலில் கூறப்பட்ட பொருள்களில் எது மிகுதியாக இருக்கிறதோ அப்பொருளைக் கொண்டு நூலுக்குப் பெயரிடலாம்.

இறையனார் களவியல் – இதில் களவியல் சூத்திரங்கள் மட்டுமின்றி கற்பியல் சூத்திரங்களும் இடம் பெற்றுள்ளன. களவியல் சூத்திரங்கள் மிகுதியாக இருப்பதால் இப்பெயர் வழங்கப்பெற்றது.

5. பொருள் – நூலில் கூறப்படும் பொருள் அடிப்படையிலும் பெயர் அமையலாம். அகப்பொருள் – நம்பியகப்பொருள். புறம் – புறப்பொருள் வெண்பாமாலை முதலியன.

6. செய்வித்தோன் – நூல் இயற்றுவதற்குப் பொருள் உதவி செய்தவன் பெயராலும் நூலின் பெயர் அமையும். புத்தமித்திரர் இயற்றிய வீரசோழியம் இதற்குச் சான்றாகும். இந்நூலை இயற்றுவதற்குத் துணை நின்றவர் வீரராசேந்திரன் என்றவராவார்.

7. தன்மை – நூலின் பண்பினால் பெயர் அமைதல் – நன்னூல்.

8. இடுகுறி – எவ்விதக் காரணமும் இன்றி இடுகுறியாக நூலுக்குப் பெயரிடுதல். எடுத்துக்காட்டாக, நிகண்டு, கலைக்கோட்டுத்தண்டு முதலிய நூல்களைக் குறிப்பிடலாம்.

முதல்நூல் கருத்தன் அளவு மிகுதி

பொருள் செய்வித்தோன் தன்மை முதல் நிமித்தினும்

இடுகுறியானும் நூற்கு எய்தும் பெயரே.

என்னும் நூற்பா (49) நூலுக்குப் பெயரிடும் முறையினை எடுத்துக் கூறியது.

நூல் யாப்பு

சிறப்புப் பாயிரம் கூற வேண்டிய பதினோரு செய்திகளில் 'யாப்பு' என்பதும் ஒன்று. இதனை நூல் யாப்பு என்பர். பாவகை யாப்பும் இந்த நூல் யாப்பும் வேறுபட்டவையாகும்.

"தொகுத்தல், விரித்தல், தொகைவிரி மொழிபெயர்ப்பு

எனத்தகு நூல் யாப்பு ஈரிண்டென்ப." நூற்பா 50

1. விரிவாக உள்ளவற்றைத் தொகுத்துச் செய்தல். (எ.டு) புறப்பொருள்வெண்பாமாலை பன்னிரு படலத்தைத் தொகுத்துசெய்யப்பெற்ற நூலாகும்.

2. முதல் நூலில் சுருக்கமாக உள்ளதை விரித்து வழி நூல் செய்தல். (எ.டு) சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகையை விரித்துச் சேக்கிழார் பெரிய புராணம் பாடியமை.

3. தொகைவிரி – விரிவாகக் கூறப்பட்ட பகுதிகளைச் சுருக்கியும், சுருக்கமாகக் கூறியவற்றை வேறு சில பகுதிகளை விரித்தும் வழிநூல் செய்தல். (எ.டு) நன்னூல் – தொல்காப்பியர் கருத்துகளைத் தொகுத்தும் விரித்தும் கூறிய நூல்.

4. மொழிபெயர்ப்பு – முதல் நூல் வேறு மொழியில் இருக்க, நூலாசிரியர் தன்னுடைய மொழியில் மொழிபெயர்த்து வழிநூல் செய்வது.

சமஸ்கிருதத்தில் வான்மீகி இயற்றிய இராமாயணத்தைக் கம்பர் தமிழில் மொழி பெயர்த்துப் பாடியுள்ளமையைச் சான்றாகக் கூறலாம்.

இதுவரை சிறப்புப் பாயிரம் உணர்த்திய செய்தியினைக் கண்டோம். இனி, சிறப்புப் பாயிரம் செய்வதற்கு உரியவர் யாவர் என்பதைத் தெரிந்துகொள்வோம்.

சிறப்புப் பாயிரம் செய்வதற்கு உரியவர்

நூலாசிரியரே சிறப்புப் பாயிரம் செய்வதற்குத் தகுதியுடையவர் அல்ல.

தன்னா சிரியன் தன்னொடு கற்றோன்

தன்மா ணாக்கன் தகுமுரை காரனென்று

இன்னோர் பாயிர இயம்புதல் கடனே.

என்னும் நூற்பா (51) சிறப்புப் பாயிரம் செய்வதற்குத் தகுதியுடையவரைக் குறிப்பிடுகின்றது.

1. தன்னுடைய ஆசிரியன்.

2. தன்னோடு பயின்ற ஒருசாலை மாணாக்கன்.

3. தன் மாணாக்கன்.

4. தான் இயற்றிய நூலுக்கு உரை செய்தவன்.

மேற்கூறிய நால்வரே சிறப்புப்பாயிரம் செய்வதற்குத் தகுதியுடையவராவர்.

சிறப்புப் பாயிரத்தைப் பிறர் செய்வதன் காரணம் – தோன்றாத நுட்பங்களையெல்லாம் கூறி, பலதுறைப்பட்டு விரிந்த நூலைச் செய்து முடித்தாலும், தானே தன்னைப் புகழ்ந்து கொள்ளுதல் தகுதியற்றதாகும்.

தோன்றா தோற்றிற் துறைபல முடிப்பினும்

தான்றற் புகழ்தல் தகுதி யன்றே.

என்னும் நூற்பா (52) சிறப்புப் பாயிரத்தைப் பிறர் செய்வதன் காரணத்தைக் கூறியது. ஆனால், ஒருசில இடங்களில் நூலாசிரியனே தன்னைத்தானே பாராட்டிக் கொள்ளும் தற்புகழ்ச்சியும் குற்றமற்றதாகக் கருதப்படும்.

1. அரசரின் அவைக்கு ஓலை எழுதி அனுப்புகையில்.

2. தன்னுடைய கல்வியின் வலிமையினை முழுமையாக அறியாதவரிடத்தில்.

3. நிலைபெற்ற அவைக்களத்தில் பிறருடன் வாதம் செய்து அவர்களை வெல்லும் வேளையில்.

4. தன்னை இகழ்ந்து பேசும் புலவரிடத்தில்.

மேற்கூறப்பட்ட நான்கு சூழ்நிலைகளில் தன்னைத் தாழ்த்திக் கொள்ளாமல் புகழ்ந்து கூறுவதில் தவறில்லை என்பதை நூற்பா 53 கூறுகின்றது.

பாயிரத்தின் இன்றியமையாமை

ஒரு நூல் ஆயிரக்கணக்கான உறுப்புகளைப் பெற்று விரிந்திருந்தாலும், அந்த நூலுக்குப் பாயிரம் இல்லையெனில் அது நூலே ஆகாது என்று பவணந்தியார் குறிப்பிடுகின்றார்.

"ஆயிரம் முகத்தான் அகன்ற தாயினும்

பாயிரம் இல்லது பனுவல் அன்றே." நூற்பா 54

(பனுவல் – நூல்.) மாளிகைக்கு ஓவியங்களும் பெரிய நகரத்துக்கு வாயில் கோபுரங்களும் இன்றியமையாதவை. நடனம் செய்கின்ற மூங்கில் போன்ற தோள்களை உடைய பெண்களுக்கு அணிகலன்கள் இன்றியமையாதவை. அவை போல எவ்வகை நூலுக்கும் அழகிய பொருளைச் சொல்லும் பாயிரம் இன்றியமையாததாகும்.

"மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும்

ஆடமைத்தோள் நல்லார்க்கு அணியும்போல் நாடிமுன்

ஐதுரையா நின்ற அணிந்துரையை எந்நூற்கும்

பெய்துரையா வைத்தார் பெரிது."

என்னும் நூற்பா (55) பாயிரத்தின் இன்றியமையாமையைக் காட்டியது.

இப்பகுதியில் எல்லா நூலுக்கும் பொருந்துகின்ற பொதுப்பாயிரம், சிறப்புப் பாயிரம் ஆகியவற்றின் இலக்கணங்கள் கூறப்பட்டன.

### 1.2.3 நன்னூல் சிறப்புப் பாயிரம்

பொதுப்பாயிரம், சிறப்புப் பாயிரம் ஆகியவற்றின் இலக்கணங்களைப் பார்த்தோம். நன்னூலுக்கு அமைந்துள்ள சிறப்புப் பாயிரத்தின் கருத்துகளைப் பார்ப்பது அவசியமாகும். இச் சிறப்புப்பாயிரமே நூலின் தொடக்கமாக உள்ளது. ஆயினும் பொருள் இணைப்பினையொட்டி இப்பகுதியில் நன்னூல் சிறப்புப் பாயிரம் கூறப்படுகிறது.

அகன்ற இடத்தையுடைய உலகில் நிறைந்துள்ள இருள் கெடும்படி, சூரியன் தன் ஒளிக்கதிர்களை உலகில் பரவச் செய்து, அப்பொருள்கள் எல்லாம் புலப்படுமாறு செய்கின்றான். அவனைப் போல இறைவனும் அனைத்து உலகிற்கும் தானே முதல்வனாகத் திகழ்ந்து தோற்றமும் ஒடுக்கமும், ஒப்பும் அளவும், விருப்பும் வெறுப்புமாகிய இவைகளிலிருந்து இயல்பாகவே நீங்கி நிற்பதால் தலைவனாம் அற்புத மூர்த்தியாகிய அவன் தன் மலர்க் கருணையினால் உயிர்களின் உள்ளத்தில் நிறைந்துள்ள அஞ்ஞான இருளைக் கெடும்படிச் செய்து, நான்கு உறுதிப்பொருள்களையும், உலகில் வழங்கும் பதினெட்டு மொழிகளிலும் விருப்பத்துடன் அருளியுள்ளான்.

பதினெட்டு மொழிகளில் ஒன்றாகிய தமிழ் கிழக்கே குணகடலையும், தெற்கே குமரியையும், மேற்கே குடகு நாட்டையும், வடக்கே திருவேங்கடத்தையும் எல்லையாகக் கொண்டது.

தமிழில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்து பொருளையும் எளியவர்களும் தெரிந்து கொள்ளும் நிலையில் ஓர் இலக்கண நூலைத் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் பாடித் தருக எனப் பவணந்தி முனிவரை சீயகங்கன் என்ற கங்க மன்னன் வேண்டிக் கொண்டான்.

இச்சீயகங்கன் மாற்றார் பகையைக் கெடும்படி அழித்து, பரந்த நிலம் முழுமையும் தனதாக்கிக் கொண்டவன் .தன் மதயானைகளை எட்டுத் திசைகளிலும் திசை யானைகளைப் போல நிறுத்திய வெற்றி மிக்கவன். மேலும், புகழ், பெருமை பொருந்திய வீரக் கழலையும் வெண்கொற்றக் குடையையும், மேகம் போல் கொடுக்கும் கொடையை உடைய கைகளையும், வளையாத செங்கோலையும் உடையவன். அருமையான நூல்களை ஆராய்வதையே பொழுதுபோக்காக உடையவன். போரில் தனக்கு ஏற்படும் காயங்களையே ஆபரணங்களாக உடையவன்.

இத்தகு சீயகங்கன் வேண்டிக் கொள்ள பவணந்தி முனிவர் தொல்லாசிரியரின் இலக்கண நூலின் வழியே நன்னூல் என்னும் பெயரில் இந்நூலைச் செய்தார்.

பொன்மதிலால் சூழப்பெற்ற சனகாபுரத்தில் இருக்கும் சன்மதி முனிவரின் மகனாவார் பவணந்தி முனிவர். அளவிடற்கரிய ஞான ஒழுக்கங்களில் சிறந்து தவத்தில் உயர்ந்தவர்.

மலர்தலை யுலகின் மல்கிரு ளகல

இலகொளி பரப்பி யாவையும் விளக்கும்

பரிதியி னொருதா னாகி முதலீ

றொப்பன வாசை முனிவிகந் துயர்ந்த

அற்புத மூர்த்திதன் னலர்தரு தன்மையின்

மனவிரு ளிரிய மாண்பொருண் முழுவதும்

முனிவற வருளிய மூவறு மொழியுளுங்

குணகடல் குமரி குடகம் வேங்கடம்

எனுநான் கெல்லையி னிருந்தமிழ்க் கடலுள்

அரும்பொரு ளைந்தையும் யாவரு முணரத்

தொகைவகை விரியிற் றருகெனத் துன்னார்

இகலற நூறி யிருநில முழுவதுந்

தனதெனக் கோலித் தன்மத வாரணந்

திசைதொறு நிறுவிய திறலுறு தொல்சீர்க்

கருங்கழல் வெண்குடைக் கார்நிகர் வண்கைத்

திருந்திய செங்கோற் சீய கங்கன்

அருங்கலை வினோத னமரா பரணன்

மெழிந்தன னாக முனனோர் நூலின்

வழியே நன்னூற் பெயரின் வகுத்தனன்

பொன்மதிற் சனகைச் சன்மதி முனியருள்

பன்னருஞ் சிறப்பிற் பவணந்தி

என்னு நாமத் திருந்தவத் தோனே. (நன்னூல் சிறப்புப் பாயிரம்)

சிறப்புப்பாயிரம் பதினொரு வகைக் கருத்துகளைக் கூறுதல் வேண்டும். இது முன்னரே 47, 48ஆம் நூற்பாக்களில் விளக்கப்பட்டு விட்டது.

இச்சிறப்புப் பாயிர இலக்கணம் நன்னூலில் பொருந்தி வரும் முறைமையைப் பின்வருமாறு பார்க்கலாம்.

| | சிறப்புப்பாயிர இலக்கணம் | நன்னூல் சிறப்புப் பாயிரத்தில் உள்ள தொடர் |
|---|---|---|
| 1. | ஆக்கியோன் | பவணந்தி முனிவர் |
| 2. | வழி | முன்னோர் நூலின் வழி |
| 3. | எல்லை | குணகடல் குமரி குடகம் வேங்கடம் எனும் நான்கு எல்லை |
| 4. | நூற்பெயர் | நன்னூல் |
| 5. | யாப்பு | நிகண்டு கற்று இலக்கியப் பயிற்சி செய்த |

பின்னர் இந்நூல் கேட்கத் தக்கது.

6. நுதலிய பொருள் அரும்பொருள் ஐந்து

7. கேட்போர் இலக்கியப் பயிற்சி உடையவர்

8. பயன் மொழித்திறத்தின் முட்டறுத்தல்

9. காலம் சீயகங்கன் காலம்

10. களன் சீயகங்கன் அவை

11. காரணம் சீயகங்கன் சொன்னமையும்

யாவரிடத்தும் இரக்கமுடைமையும் ஆகும்

நன்னூல் சிறப்புப் பாயிரம் கூறும் பதினொரு வகைக் கருத்துகளில் காலம், களன், காரணம் ஆகிய மூன்றும் நூல் செய்தவர் காலத்தில் நிகழ்ந்தவையாகும். ஆக்கியோன் பெயர் முதலிய எட்டும் நூல் செய்தவர் காலத்திலும் நூல் வழங்கும் காலத்திலும் ஒப்ப நிகழ்வன. இவ்வேற்றுமை இருப்பதினால் சிறப்புப் பாயிரம் உள்ள சூத்திரங்கள் இரண்டு ஆயின என்று கூறுவர்.

நன்னூல் சிறப்புப்பாயிரம், “அரும் பொருள் ஐந்தையும் யாவரும் உணர” எனக் கூறுவதால் பவணந்தியார் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்து இலக்கணங்களையும் ஐந்து அதிகாரங்களில் நன்னூலில் கூறியிருத்தல் வேண்டும். இவற்றில் முதலிரண்டு அதிகாரங்களே இப்பொழுது உள்ளன. பொருள், யாப்பு, அணி என்னும் மூன்று அதிகாரங்களும் நன்னூல் செய்த காலத்தில் வழங்கி பின்னர் மறைந்திருக்க வேண்டும் என்பது பெறப்படுகின்றது.

நூலைக் கேட்பவர் மாணாக்கர்; கேட்பிப்பவர் ஆசிரியர். எனவே, இவ்விரண்டும் பொதுப்பாயிரத்தில் அறியப்படும். இவற்றைச் சிறப்புப் பாயிரத்தில் கூறத் தேவையில்லை என்று ஒரு வினாவை எழுப்பி சிவஞான முனிவர் அதற்கு விளக்கம் கூறுகின்றார்.

ஆசிரியருக்கும் மாணாக்கருக்கும் உரிய பொதுமை இலக்கணம் பொதுப் பாயிரத்தில் கூறப்பட்டுள்ளன. ஒரு குறிப்பிட்ட நூலைக் கேட்டதற்குரிய மாணாக்கர், பயிற்றுதற்குரிய ஆசிரியர் ஆகியோரின் சிறப்பிலக் கணங்கள் பொதுப்பாயிரத்தில் கூறப்படவில்லை. ஆகையால், இவை இரண்டையும் சிறப்புப் பாயிரம் கூறுவது பொருத்தமுடையதாகும்.

ஆகவே, ஒரு குறிப்பிட்ட நூலைக் கேட்போர், கேட்பிப்போர் ஆகிய இரண்டையும் ஒருதலையாகச் சிறப்புப் பாயிரம் உணர்த்த வேண்டும். இதனால் பாயிரமானது பொது, சிறப்பு என்று இருநிலையில் விளங்குகின்றது.

## III. தன்மதிப்பீட்டு வினாக்கள்

1. சிறப்புப் பாயிரம் நூலிற்கு ........... ஆகும்.

2. நூல் யாப்பு எத்தனை வகைப்படும்?

3. சிறப்புப் பாயிரம் செய்வதற்கு உரியவர்கள் யாவர்?

4. சிறப்புப் பாயிரம் நூலாசிரியரே செய்யாததற்குக் காரணம் என்ன?

5. நன்னூல் செய்யுமாறு கூறியவர் .............

6. நன்னூல் ஆசிரியர் .............

7. பாயிரம் நூலுக்கு இன்றியமையாதது. சரியா? தவறா?

### தொகுப்புரை

நன்னூலின் தொடக்கப் பகுதியாகப் பாயிரம் என்னும் பகுதி அமைந்துள்ளது. இப்பாயிரம் நூலுக்கு முகவுரையாகும். பொது, சிறப்பு என்னும் இரண்டு நிலையில் இப்பாயிரம் அமைந்துள்ளமையை அறிந்து கொள்ள முடிந்தது.

பொதுப்பாயிரத்தின் முதற்பகுதியில் நூலின் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. இதில் மூவகை நூல்கள் பற்றிய செய்திகளும், நாற்பொருள் பயனும், நூலாசிரியன் மேற்கொள்ளும் எழுவகைக் கொள்கைகளும், நூலில் அமைய வேண்டிய பத்தழகுகளும், நூலில் தவிர்க்க வேண்டிய பத்துக் குற்றங்களும், நூலில் கையாளப் பெறும் 32 உத்திகளும் பற்றிய செய்திகள் கூறப்பெற்றன. மேலும் ஓத்து, படலம், சூத்திரம், உரை பற்றிய செய்திகளையும் நூலின் பெயர்க்காரணத்தையும் இப்பகுதியில் அறிய முடிந்தது.

பொதுப்பாயிரத்தின் இரண்டாம் நிலையாகிய நூலைக் கற்பிக்கும் ஆசிரியரின் இலக்கணம் என்னும் பகுதியில் நல்லாசிரியர் இலக்கணமும் அந்நல்லாசிரியர்களுக்கு நிலம், மலை, நிறைகோள், மலர் எவ்வாறு உவமையாகக் கூறப்பட்டன என்பதையும் ஒருசேர அறிய முடிந்தது. அதேபோன்று ஆசிரியர்

ஆகாதவர்க்கு உரிய இலக்கணமும், இத்தகையோருக்குக் கழற்குடம், மடற்பனை, பருத்திக் குண்டிகை, முடத்தெங்கு ஆகியவை உவமையாகப் பொருத்திக் காட்டியமையும் பாயிரத்தின் வழி அறிந்து கொண்டோம்.

நூலாசிரியன் மாணாக்கருக்குப் பாடம் சொல்லும் முறையும், அப்பாடத்தை ஏற்கும் நல்மாணாக்கருக்கு அன்னம், ஆ, மண், கிளி ஆகியவை உவமையாக்கப்பட்டதும், மாணாக்கர் ஆகாதவர்க்குரிய இலக்கணமும் முறையே கூறப்பட்டன.

பொதுப்பாயிரத்தின் இறுதிப்பகுதியில் மாணாக்கர் ஆசிரியரிடம் பாடம் கேட்கும் முறையும் பாடம் கேட்போர் எந்நிலையில் முழுமை அறிவு பெறுவோர் என்பதும், ஆசிரியர் மாணாக்கருக்கு இடையேயான உறவு பற்றிய செய்தியும் முறையே கூறப்பெற்றது.

பொதுநிலையில், சிறப்புப் பாயிரத்தின் இலக்கணமும், நன்னூலில் அச்சிறப்புப் பாயிரம் எவ்வாறு பொருந்தியுள்ளன என்பதையும் ஒருசேர அறிய முடிந்தது.

பயிற்சி வினாக்கள்

சிறு வினாக்கள்

1. பாயிரத்தின் வேறு பெயர்கள் யாவை?
2. "சார்பு நூல்" என்றால் என்ன?
3. நூலிற்கு அழகு சேர்க்கும் பத்தழகுகளைக் குறிப்பிடுக.
4. சூத்திரம் என்பது யாது?
5. மாணாக்கர் ஆகாதார் யாவர்?
6. சிறப்புப் பாயிரம் செய்வதற்கு உரியவர் யாவர்?
7. பொதுப்பாயிரத்தின் ஐவகை இலக்கணம் யாவை?
8. நூற்பயனைக் குறிப்பிடுக.
9. எழுவகை மதங்கள் யாவை?
10. முக்காண்டிகை என்றால் என்ன?

குறு வினாக்கள்

1. ஆசிரியர் ஆகத் தகுதியுடையவர், தகுதியற்றவர் இலக்கணத்தை வரையறுக்க.
2. பாடம் கேட்கும் முறையும் நூலைப் பயிலும் முறையும் யாவை?
3. நன்னூல் கூறும் மூவகைப்பட்ட மாணாக்கர் பற்றி எழுதுக.
4. நன்னூல் சிறப்புப் பாயிரத்தில், சிறப்புப் பாயிரத்தின் இலக்கணங்கள் அமைந்துள்ளன என்பதை விளக்குக.
5. நிலமும் மலையும் நல்லாசிரியனுக்கு எவ்வாறு உவமையாயிற்று?
6. ஆசிரியர் ஆகாதவர்க்குக் கூறப்பட்ட உவமைகள் யாவை?
7. சிறப்புப் பாயிரத்தை ஏன் நூலாசிரியரே செய்துகொள்ளக் கூடாது?
8. பாயிரம் நூலுக்கு இன்றியமையாததா? விளக்குக.
9. சிறப்புப் பாயிரத்தின் இலக்கணம் யாது?

பெரு வினாக்கள்

1. நூலின் வகைகளை நன்னூல் எங்ஙனம் எடுத்துரைக்கிறது?
2. நூலில் அமையும் முப்பத்திரண்டு உத்திகளைப் பட்டியலிடுக.
3. உரைகளின் வகைகளை விளக்கியுரைக்க.
4. நல்லாசிரியருக்குக் கூறப்பட்ட உவமைகளை விளக்குக.
5. ஆசிரியர் பாடம் கூறும் முறையும், மாணாக்கர் பாடம் கேட்கும் முறையினையும் தொகுத்துரைக்க.

மேலும் படித்தற்குரிய நூல்கள்

1. நன்னூல் – காண்டிகை உரை, ஆறுமுக நாவலர் (பஆ.), ஆரோரோ அச்சுக்கூடம், சென்னை , 1926.

2. நன்னூல் மூலமும் சங்கரநமச்சிவாயர் உரையும், உ.வே.சா. நூல் நிலையம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1935.

3. நன்னூல் மூலமும் மயிலைநாதர் உரையும், சாமிநாதய்யர் (ப.ஆ.), உ.வே.சா. நூல்நிலையம், சென்னை, 1946.

4, நன்னூல் மூலமும் விருத்தியுரையும், கழக வெளியீடு, சென்னை, 1971.

5. நன்னூல் மூலம், ஆறுமுக நாவலர் பரிசோதித்தது, ஸ்ரீ ஆறுமுக நாவலர் சைவப் பிரகாச வித்யா சாலை அறக்கட்டளை வெளியீடு, சிதம்பரம், 1990.

6. நன்னூல் காண்டிகை உரை – ஆறுமுக நாவலர், புலியூர் கேசிகன் – ப.ஆ., முல்லை நிலையம், சென்னை, மறுபதிப்பு 2006.

7. தொல்காப்பியம் நன்னூல் எழுத்ததிகாரம், க. வெள்ளைவாரணனார், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், 1972.

8, தொல்காப்பியம் தெளிவுரை, சுப்ரமணியன் .ச.வே, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1993.

I. தன்மதிப்பீட்டு விடைகள்

1. முகவுரை, பதிகம்
2. இரண்டு
3. முதல் நூல், வழி நூல், சார்பு நூல்
4. சார்பு நூல்
5. அழகு – 10 உத்தி – 32
6. பிண்டம், தொகை, வகை, குறி, செய்கை, புறனடை.
7. காண்டிகை உரை
8. சூத்திர நிலை

II.

1. நிலம், மலை, நிறைகோல், மலர்.
2. ஆசிரியராகாதார்.
3. அன்னம், ஆவே.
4. இடை மாணாக்கர்.
5. இல்லிக்குடம், எருமை, நெய்யரி.

III.

1. சிறந்த முகவுரை
2. நான்கு
3. தன் ஆசிரியன், தன்னுடன் கற்றோர், மாணாக்கன், உரையாசிரியர்.
4. தானே தன்னைப் புகழ்ந்து கொள்ளுதல் தகுதியற்றது.
5. சீயகங்கன்
6. பவணந்தியார்
7. சரி.

## அலகு 2 – நன்னூல் எழுத்திகாரம்

### 2.0 பாட அறிமுகம்

நன்னூல் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என்னும் இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. இதில் எழுத்ததிகாரத்தில் முதலாவதாக உள்ள இயல் எழுத்தியலாகும். முந்தைய பாடத்தில் நன்னூலின் தொடக்கமாக அமைந்த பாயிரம் பற்றிய செய்திகளையும் நன்னூலுக்கென அமைந்த சிறப்புப் பாயிரத்தையும் பார்த்தோம்.இனி, ஐந்திலக்கணத்தில் முதலாவதாகக் கூறப்படும் எழுத்திலக்கணத்தினைப் பற்றிக் கூறும் எழுத்ததிகாரத்தின் செய்திகளை அறிந்து கொள்வோம். இந்த எழுத்திலக்கணம் அகத்திலக்கணம், புறத்திலக்கணம் என்று இரண்டாக பகுக்கப்பட்டுள்ளது. இதில் எண், பெயர், முறை, பிறப்பு, உருவம், மாத்திரை, முதல்நிலை,இடைநிலை, இறுதிநிலை, போலி, பதம், புணர்ச்சி என்னும் அடிப்படையில் எழுத்திலக்கணச் செய்திகள் எழுத்ததிகாரத்தில் விளக்கப்படுகின்றன.

### 2.1 நோக்கங்கள்

தமிழ்மொழியில் எழுத்துக்களின் வகைப்பாடும் அவற்றின் பெயர்களும் அவை பிறக்கின்ற முறைகளும் எழுத்துக்களின் உருவங்களையும், எழுத்துக்களை உச்சரிக்கத் தேவைப்படும் ஒலியளவாகிய மாத்திரை ஆகியவற்றை அறிந்து கொள்ளுதல்.

மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள், இறுதியில் வரும் எழுத்துக்கள், எந்த எழுத்துக்களுடன் எந்தெந்த எழுத்துக்கள் மயங்கும் என்பதையும், சொல்லின் முதல், இடை, கடை என்னும் மூன்று நிலைகளிலும் ஓர் எழுத்து நிற்க வேண்டிய இடத்தில் வேறு ஓர் எழுத்தமைந்து, பொருள் மாறுபாடின்றி உரைக்கும் எழுத்துப் போலி பற்றிய செய்திகளையும் அறிந்து கொள்ளுதல்.

எழுத்துக்களின் சேர்க்கையால் மொழியாகும் முறை, ஓரெழுத்தொரு மொழி, பகுபத உறுப்புக்கள், அவற்றின் பகுதி, விகுதி, இடைநிலை முதலியவற்றின் செய்திகளையும் அறிந்து கொள்ளுதல்.

ஆரிய மொழி தமிழில் வடமொழியாதலையும் தமிழெழுத்திற்குரிய சிறப்பு எழுத்துக்களையும் பொது எழுத்துக்களையும் அறிந்து கொள்ளுதல்.

ஒரு சொல்லுடன் இன்னொரு சொல் சேர்ந்து எவ்வாறு புணருகின்றது என்பதையும், பல்வகைப் புணர்ச்சிகளில் நிலைமொழியின் இறுதியில் உயிர் அமைந்து வருமொழியில் வல்லினம் அமையின் எவ்வாறு புணரும் என்று கூறும் உயிரீற்றுப் புணர்ச்சியை விளங்கிக் கொள்ளுதல்.

நிலைமொழியின் இறுதியில் மெய் இடம்பெற்று வருமொழியில் வல்லினம் வரின் எவ்வாறு புணரும் என்பது பற்றிய மெய்யீற்றுப் புணர்ச்சி பற்றிய செய்திகளைத் தெரிந்து கொள்ளுதல்.

நிலைமொழி, வருமொழிகளுள் சாரியைகளும், உருபுகளும் எவ்வாறு புணரும் என்பதைப் பற்றிக் கூறும் உருபு புணர்ச்சி பற்றிய செய்திகளை அறிந்து கொள்ளுதல்.

### 2.2 பாடப்பிரிவுகள்

2.2.1 எழுத்தியல் – நூற்பா 56 முதல் 127 வரை.

2.2.2 பதவியல் – நூற்பா 128 முதல் 150 வரை.

2.2.3 உயிரீற்றுப் புணரியல் – நூற்பா 151 முதல் 203 வரை.

2.2.4 மெய்யீற்றுப் புணரியல் – நூற்பா 204 முதல் 239 வரை.

2.2.5 உருபு புணரியல் – நூற்பா 240 முதல் 257 வரை.

#### எழுத்தியல்

#### கடவுள் வணக்கமும் அதிகாரமும்

பவணந்தியார் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என்னும் இரண்டு அதிகாரங்களின் தொடக்கத்திலும் முதல் சூத்திரங்களால் அருகக் கடவுள் வணக்கமும், இலக்கணம் கூற எடுத்துக் கொள்ளும் பொருளாகிய அதிகாரமும் ஆகிய இரண்டையும் கூறுகின்றார்.

"பூமலி அசோகின் புனைநிழல் அமர்ந்த

நான்முகன் தொழுது நன்கு இயம்புவன் எழுத்தே" நூ. 56

இச்சூத்திரம் கடவுள் வணக்கத்தையும் "நன்கு இயம்புவன் எழுத்தே" என்ற பகுதி அதிகாரத்தையும் உணர்த்துகின்றன. இந்நிலையில் இச்சூத்திரம் எழுத்ததிகாரத்திற்குத் தற்சிறப்புப் பாயிரமாகும். தற்சிறப்புப் பாயிரத்தை நூலாசிரியரே செய்தல் குற்றமன்று என்று நன்னூல் (நூற்பா 52) குறிப்பிடுகின்றது. "நன்கு இயம்புவன் எழுத்தே" என்று கூறிவிட்டு நூலைக் கூறத் தொடங்குதல், 'நுதலிப்புகுதல்' என்னும் உத்திக்கு எடுத்துக்காட்டாகும்.

2.2.1.1 எழுத்தின் வகைப்பாடு – நூற்பா 57 முதல் 61 வரை.

2.2.1.2 எழுத்துக்களின் பெயர் – நூற்பா 62 முதல் 72 வரை.

2.2.1.3 எழுத்துக்களின் முறை – நூற்பா 73

2.2.1.4 எழுத்துக்களின் பிறப்பு – நூற்பா 74 முதல் 97 வரை.

2.2.1.5 எழுத்துக்களின் உருவம் – நூற்பா 98

2.2.1.6 மாத்திரை – நூற்பா 99 முதல் 101 வரை.

2.2.1.7 மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் – நூற்பா 102 முதல் 106 வரை.

2.2.1.8 மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்கள் – நூற்பா 107 முதல் 109 வரை.

2.2.1.9 இடைநிலை மெய்ம்மயக்கம் – நூற்பா 110 முதல் 121 வரை.

2.2.1.10 போலி – நூற்பா 122 முதல் 127 வரை.

2,2,1,1 எழுத்தின் வகைப்பாடு

'எழுத்தியல்' என்னும் முதல் பகுதியில் எண், பெயர், முறை, பிறப்பு, உருவம், மாத்திரை, முதனிலை, இறுதிநிலை, இடைநிலை மயக்கம், போலி, பதம், புணர்ச்சி என்று பன்னிரண்டு எழுத்திலக்கண வகைப் பாட்டினைக் கூறுகின்றார்.

எண் பெயர் முறை பிறப்பு உருவம் மாத்திரை

முதல் ஈறு இடைநிலை போலி என்றா

பதம் புணர்பு எனப் பன்னிருபாற் றதுவே. நூற்பா 57

இவற்றுள் எண் முதலிய பத்தும் அகத்திலக்கணம், பதம், புணர்ச்சி என்ற இரண்டும் புறத்திலக்கணமாகும். இவ்வாறு பிரித்துக் காட்டுவதற்காக, 'என்றா' என்னும் எண்ணிடைச் சொல்லை இச்சூத்திரத்தில் பயன்படுத்தி யுள்ளார். இந்த அகத்திலக்கணத்தை எழுத்தியலிலும், புறத்திலக்கணம் இரண்டனுள் எழுத்தாகிய பதத்தின் இலக்கணத்தைப் பதவியலிலும், அப்பதம் புணரும் புணர்ச்சி இலக்கணத்தை உயிரீற்றிலும் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியலிலும் முறையே கூறியுள்ளார். இது முறைவைப்பு என்னும் உத்தியைச் சார்ந்தது.

1. எண்

மொழிக்கு முதற் காரணமாய் அமைகின்ற அணுத்திரளின் காரியமாகிய ஒலியே எழுத்தாகும். அது முதலெழுத்து, சார்பெழுத்து என்று இரண்டு வகைப்படும்.

மொழி முதல் காரண மாம்அணுத் திரள்ஒலி

எழுத்தது முதல்சார்பு எனஇரு வகைத்தே. நூற்பா 58

அணுத்திரளாகிய ஒலியே எழுத்தாவதால் அணுத்திரள் எழுத்துக்கு முதல் காரணமாகும். எழுத்தே சொல்லாவதால் மொழிக்கு முதற்காரணம் எழுத்தாகும்.

முதலெழுத்துகள்

எழுத்தினை முதல், சார்பு என்று இரண்டு வகையாகப் பிரித்த பவணந்தியார் அதனை வகுத்துக் கூறுகின்றார்.

உயிர் பன்னிரெண்டும் மெய் பதினெட்டு எழுத்துக்களும் முதலெழுத்துக்களாகும் என்று நூற்பா 59-இல் குறிப்பிடுகின்றார்.

இந்நூற்பாவில் முதலெழுத்துக்களின் வகைகளையும், அவற்றின் எண்ணிக்கையையும் கூறுகின்றார்.

சார்பெழுத்து

தொல்காப்பியம் மூன்று என்று கூறிய சார்பெழுத்தினை நன்னூல் பத்தாகக் கூறுகின்றது. அவை, உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம் என்பனவாகும்.

உயிர்மெய் ஆய்தம் உயிரளபு ஒற்றளபு

அஃகிய இ உ ஐ ஔ மஃகான்

தனிநிலை பத்தும் சார்பெழுத்து ஆகும்.

என்னும் நூற்பா (60) சார்பெழுத்தின் வகைகளை முறையே பட்டியலிடுகிறது.

சார்பெழுத்தின் விரி

சார்பெழுத்துக்களைப் பத்து வகையாகக் கூறிய பவணந்தியார், ஒவ்வொரு வகையிலும் எத்தனை சார்பெழுத்துக்கள் உள்ளன என்பதையும் பட்டியலிட்டுக் காட்டுகிறார்.

உயிர்மெய் யிரட்டுநூற் றெட்டுய ராய்தம்

எட்டுயி ரளபெழு மூன்றொற் றளபெடை

ஆறே ழஃகு மிம்முப் பானேழ்

உகர மாறா றைகான் மூன்றே

ஔகா கொன்றெம் ஃகான் மூன்றே

ஆய்த யிரண்டொடு சார்பெழுத் துறுவிரி

ஒன்றொழி முந்நூற் றெழுபா னென்ப.

என்னும் நூற்பா (61) சார்பெழுத்துக்களின் விரிவாக்கத்தைக் கூறுகின்றது.

உயிர்மெய் – 216, முற்றாய்தம் – 8, உயிரளபெடை – 21, ஒற்றளபெடை – 42, குற்றியலிகரம் – 37, குற்றியலுகரம் – 36, ஐகாரக் குறுக்கம் – 3, ஔகாரக் குறுக்கம் – 1, மகரக் குறுக்கம் – 3, ஆய்தக் குறுக்கம் – 2. ஆக மொத்தம் 369 என்று சார்பெழுத்தின் விரியினைப் பவணந்தியார் முறைப்படுத்தியுள்ளார்.

2.2.1.2 பெயர்க்கெல்லாம் பொதுவிலக்கணம்

எழுத்துக்களின் பெயர்களைக் கூறுவதற்கு முன்னர் பெயர்களின் வகைகளைப் பவணந்தியார் விளக்குகின்றார். பெயர்களை இடுகுறிப் பெயர், காரணப் பெயர் என்று இரண்டு வகைகளாகப் பிரிப்பர்.

இடுகுறிப்பெயர், காரணப் பெயர் என்னும் இரண்டும் பல பொருளுக்கும் பொதுப் பெயராகவும், ஒவ்வொரு பொருளுக்கும் சிறப்புப் பெயராகவும் வரும்.

“இடுகுறி காரணப் பெயர்ப் பொதுச் சிறப்பின” நூற்பா 62

எவ்விதக் காரணமும் இல்லாமல் ஒரு பொருளுக்குத் தொன்றுதொட்டுச் சான்றோரால் இடப்பட்டு வழங்கும் பெயர் இடுகுறிப்பெயராகும். (எ.டு) கல்.

காரணப்பெயர் – ஏதேனும் ஒரு காரணம் பற்றி இட்டு வழங்கும் பெயர். (எ.டு) நாற்காலி.

பல பொருளுக்கும் பொதுவாய் இடுகுறியாய் வழங்கப்படும் பெயர் இடுகுறிப் பொதுப்பெயர். (எ.டு) மரம்.

ஒவ்வொரு பொருளுக்கும் சிறப்பாய் வழங்கப்படும் பெயர் இடுகுறிச் சிறப்புப் பெயர். (எ.டு) வேம்பு.

காரணமின்றி இட்டு வழங்கியதாலும், குறிப்பிட்ட ஒரு வகைக்கே சிறப்பாக வழங்கியதாலும் இப்பெயரினைப் பெற்றது.

காரணப் பொதுப்பெயர் – (எ.டு) அணி. அணிகின்ற காரணத்தினால் பொதுப்பெயராய் பல்வேறு நகைகளுக்கும் பொதுவாய் வழங்குவது.

காரணச் சிறப்புப் பெயர் – (எ.டு) வளையல். வளைந்திருக்கும் காரணம் பற்றி வழங்கும் பெயர். மேலும் பல்வேறு அணிகளில் ஒரு குறிப்பிட்ட வகைக்குச் சிறப்பாக அமைந்த பெயராகும்.

முதலெழுத்துகளின் பெயர்கள்

அகரம் முதலிய பன்னிரண்டு உயிரெழுத்துகளும் ககரம் முதலிய பதினெட்டு மெய்யெழுத்துகளும் முதலெழுத்துகளாகும்.

அம்முதல் ஈராறு ஆவி கம்முதல்

மெய்ம்மூ வாறு என விளம்பினர் புலவர் நூற்பா 63

(ஆவி – உயிர்.) அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்னும் பன்னிரண்டும் உயிர் எழுத்துக்களாகும்.

க். ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் என்னும் பதினெட்டும் மெய்யெழுத்துக்களாகும்.

இவற்றுள் அகரம் முதலிய பன்னிரண்டும் உயிர் போன்று தனித்தியங்கும் தன்மை உடையதால் உயிரெனவும், ககரம் முதலிய பதினெட்டும் உயிரோடு கூடியே இயங்கும் தன்மையன. ஆதலால் மெய்யெனவும் பெயர் பெற்றன.

உயிரெழுத்துகளில் உச்சரிக்கும் ஒலி அளவைப் பொறுத்து குறில், நெடில் என்று இரண்டாகக் கூறப்படும்.

குறில்

அ, இ, உ, எ, ஒ, என்னும் ஐந்து எழுத்துக்களும் குறிலாகும்.

அவற்றுள்

அ இ உ எ ஒக்குறி லைந்தே. நூற்பா 64

நெடில்

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் ஏழு எழுத்துக்களும் நெடிலாகும். இவ்வெழுத்துக்கள் இரண்டு மாத்திரை அளவுகள் ஒலிக்கும் தன்மையன.

ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ நெடில். நூற்பா 65

சுட்டெழுத்து

அ, இ, உ என்னும் மூன்று எழுத்துக்களும் மொழிக்கு முதலில் தனித்துச் சுட்டுப் பொருளைக் காட்டி வருவதால் சுட்டெழுத்துக்களாகும்.

அ, இ, உம் முதல் தனி வரின் சுட்டே. நூற்பா 66

இங்கு முதலெனப் பொதுப்படக் கூறியதால் மொழியின் அகத்தும் (பதத்திற்கள் வருவது) புறத்தும் (பதத்திற்குப் புறத்தே வருவது) வரும். அகத்தே வருவது அகச்சுட்டு எனவும், புறத்தே வருவது புறச்சுட்டு எனவும் அழைக்கப்பெறும்.

அகச்சுட்டு – அவன், இவன், உவன்

புறச்சுட்டு – அக்கொற்றன், இக்கொற்றன், உக்கொற்றன்

அகரம் தொலைவிலுள்ள பொருளையும், இகரம் அண்மையில் உள்ள பொருளையும், உகரம் இரண்டிற்கும் நடுவில் உள்ள பொருள் அல்லது பின்புறம் உள்ள பொருள் அல்லது உயரத்தில் உள்ள பொருளையும் சுட்டுவதாகும்.

வினாவெழுத்து

எகரமும் யாவும் மொழிக்கு முதலிலும், ஆகாரமும் ஓகாரமும் மொழிக்கு இறுதியிலும், ஏகாரம் மொழிக்கு முதலிலும் இறுதியிலும் தனித்து வினாப்பொருளைக் காட்டி வந்தால் வினாவெழுத்துக்களாகும்.

சுட்டெழுத்துக்களைப் போலவே வினாவெழுத்துக்களும் அகத்தும் புறத்தும் வரும் தன்மையன.

எயா முதலும் ஆஓ ஈற்றும்

ஏஇரு வழியும் வினா ஆகும்மே

என்னும் நூற்பா (67) வினாவெழுத்துக்களைச் சுட்டுகிறது.

அக வினா – எவன்? யாவன்? – எகரமும் யாகரமும் மொழிக்கு முதலில் அகத்து வந்தன.

புறவினா – எக்கொற்றன், யாங்ஙனம் – எ, யா இரண்டும் முதலில் புறத்து வந்தன.

கொற்றனா? கொற்றனோ? – ஆ, ஓ ஆகிய எழுத்துக்கள் ஈற்றில் புறத்து வந்தன. ஏவன்? கொற்றனே? – எகாரம் முதலில் அகத்தும் ஈற்றில் புறத்தும் வந்தது.

மெய்யெழுத்துக்கள்

மெய்யெழுத்துக்கள் வல்லினம், மெல்லினம், இடையினம் என மூவகையாகும். இவ்வகைப்பாட்டில், 'க ச ட த ப ற' என்னும் ஆறு எழுத்துக்களும் வன்மையான ஓசையுடைமையால் வல்லினம் என்று அழைக்கப்பெற்றன. இவை வலி, வன்மை, வன்கணம், வல்லெழுத்து என்று அழைக்கப்பெறும்.

வல்லினம் க ச ட த ப ற வென வாறே. நூற்பா 68

மெல்லினம்

'ங ஞ ண ந ம ன' என்னும் ஆறு எழுத்துக்களும் மென்மையான ஓசையுடைமையால் மெல்லினம் என்று பெயர் பெற்றன. இவை மெலி, மென்மை, மென்கணம், மெல்லெழுத்து என்று அழைக்கப்பெறும்.

மெல்லினம் ங ஞ ண ந ம ன வென வாறே. நூற்பா 69

இடையினம்

'ய ர ல வ ழ ள' என்னும் ஆறும் இடையெழுத்துக்களாகும். நூற்பா 70

இவ்வெழுத்துக்கள் வல்லினம் பிறக்கும் இடமான மார்பிற்கும் மெல்லினம் பிறக்கும் இடமான மூக்கிற்கும் இடைப்பட்ட இடத்தில் பிறப்பதால் இடையினமாகும். இவை இடை, இடைமை, இடைக்கணம், இடையின எழுத்து என்று பலவாறு அழைக்கப்பெறும்.

இனவெழுத்து

முதலெழுத்துக்களில் இரண்டிரண்டு எழுத்துக்கள் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு இன எழுத்துக்கள் என்று கூறப்படும்.

ஐ ஔ இ உச் செறிய முதலெழுத்து

இவ்விரண் டோரின மாய்வரன் முறையே.

என்னும் நூற்பா (71) இனவெழுத்துக்கள் பற்றிய செய்தியினைக் கூறுகிறது.

உயிர்களில் இனவெழுத்துக்கள்

அ, ஆ  இ, ஈ  உ, ஊ

எ, ஏ  ஐ இ  ஒ, ஓ  ஔ, உ

மெய்களில் இனவெழுத்துக்கள்

க, ங  ச, ஞ  ட, ண  த, ந  ப, ம  ற, ன

இடையின எழுத்துக்களாகிய 'ய ர ல வ ழ ள' என்னும் ஆறும் ஓரினமாகவே கருதப்படும்.

இனம் என்றதற்குக் காரணம்

முதலெழுத்துக்களை இரண்டு இரண்டாகச் சேர்த்து இன எழுத்துக்கள் என்று பெயரிட்ட பவணந்தியார், இவை இன எழுத்து என்று வழங்கப்படுவதன் காரணத்தையும் கூறுகின்றார்.

தானம் முயற்சி அளவு பொருள் வடிவு

ஆனஒன்று ஆதிஓர் புடையொப்பு இனமே.  நூற்பா 72

எழுத்துக்கள் பிறப்பதற்குரிய இடம் (தானம்), பிறப்பதற்குரிய முயற்சியாகிய சொல் (தொழில்), ஒலிக்கும் மாத்திரை அளவு, பொருள், எழுத்தின் வடிவம் ஆகிய இவற்றுள் ஒன்று முதலாக ஒருபுடை ஒத்திருத்தல் இனம் என்பதற்குக் காரணமாகும்.

அ, ஆ, இ, ஈ முதலியன பொருளால் இனமாக வரும்.

(எ.டு) அது; ஆது, இங்கு; ஈங்கு – இவற்றில் பொருள் ஒற்றுமை காரணம்.

அ, ஆ, உ, ஊ முதலிய எழுத்துக்கள் ஒலி வடிவம், வரி வடிவம் இரண்டாலும் ஒத்தன.

இ, ஈ – ஒலி வடிவில் ஒத்தவை. வரி வடிவில் ஒத்திருக்காதவை.

முயற்சியாலும் அளவாலும் வல்லினமும் மெல்லினமும் இனமாக வரும்.

இதுவரை எழுத்துக்களின் வகைப்பாடுகளையும், விளக்கங்களையும் பார்த்தோம். இனி, எழுத்துக்களின் முறை பற்றிய செய்தியினைப் பார்ப்போம்.

### 2.2.1.3 முறை

எழுத்தின் அகத்திலக்கணத்தில் மூன்றாவதாக அமைவது முறை என்னும் பிரிவாகும்.

சிறப்பினும் இனத்தினும் செறிந்தீண் டம்முதல்

நடத்தல் தானே முறையா கும்மே.  நூற்பா 73

சிறப்பினாலும் இனத்தினாலும் ஒன்றன்பின் ஒன்று பொருந்தி தமிழ் நெடுங்கணக்கில் அகரம் முதலாக னகரம் ஈறாக முதல் எழுத்துக்கள் முப்பதும் தொன்று தொட்டு வழங்குதலே எழுத்துக்கள் நிற்கும் முறையாகும்.

### 2.2.1.4 எழுத்துக்களின் பிறப்பு – பொது இலக்கணம்

தமிழ் எழுத்துக்கள் பொதுவாக எவ்வாறு பிறக்கின்றன என்பதைப் பவணந்தியார் முதலில் கூறுகின்றார். அதற்குப் பின்னர் தனித்தனி எழுத்துக்கள் எவ்வாறு பிறக்கின்றன என்பதையும் முறையே விளக்குகின்றார்.

நிறைஉயிர் முயற்சியின் உள்வளி துரப்ப

எழும் அணுத்திரள் உரம் கண்டம் உச்சி

மூக்கு உற்று இதழ்நாப் பல்லணத் தொழிலின்

வெவ்வேறு எழுத்தொலி யாய்வரல் பிறப்பே.  நூற்பா 74

நாம் பேசுகையில் பயன்படுத்துகின்ற ஒலிகள் அனைத்தும் நுரையீரலில் இருந்து வெளிநோக்கிப் பாய்கின்ற காற்றால் உண்டாக்கப்படும் ஒலிகளாகும். அக்காற்றானது மார்பு, கழுத்து, மூக்கு ஆகியவற்றின்

வழியாக வெளிநோக்கிப் பாயும்போது இதழ்கள், நா, பல், அண்ணம் (மேல்வாய்ப்பகுதி) ஆகியவை பல்வேறு முறையில் தொழில்பட அக்காற்றானது பல்வேறு எழுத்தொலிகளாகத் தோன்றுகிறது.

நன்னூல் நூற்பா 75 முதல் 86 வரை உயிர், மெய் எழுத்துக்களின் பிறப்பிடங்களும் பிறப்பு முயற்சிகளும் சுட்டப்படுகின்றன.

முதலெழுத்துக்கள் பிறக்கும் இடங்கள்

முதலெழுத்துக்கள் கழுத்து, மூக்கு, மார்பு ஆகிய மூன்று இடத்தைப் பிறப்பிடமாகக் கொண்டு பிறக்கின்றன.

| | முதலெழுத்துக்கள் | பிறப்பிடம் |
|---|---|---|
| 1. | உயிரெழுத்துக்கள் | மிடறு (கழுத்து) |
| 2. | இடையினம் | மிடறு (கழுத்து) |
| 3. | மெல்லினம் | மூக்கு |
| 4. | வல்லினம் | மார்பு |

அவ்வழி

ஆவி இடைமை இடம்மிடறு ஆகும்

மேவும் மென்மை மூக்கு உரம்பெறும் வன்மை நூற்பா 75

(ஆவி – உயிர், இடைமை – இடையினம்).

என்னும் நூற்பா முதலெழுத்துக்கள் பிறக்கும் இடங்களை உணர்த்தியது.

முதலெழுத்துக்கள் பிறப்பதற்குரிய முயற்சிகள்

எழுத்துக்களின் பிறப்பில் இதழ்கள், நா, பல், அண்ணம் என்னும் நான்கும் எவ்வாறு தொழிற்படுகின்றனவோ அதனை முயற்சி என்று கூறுவர்.

கழுத்தை பிறப்பிடமாகக் கொண்டு பிறக்கும் உயிரெழுத்துக்களில் அ, ஆ இரண்டும் அங்காத்தல் (வாயைத் திறத்தல்) என்னும் முயற்சியால் பிறப்பினவாகும்.

அவற்றுள்,

முயற்சியுள் அ ஆ வங்காப் புடைய. நூற்பா 76

இ, ஈ, எ, ஏ, ஐ என்னும் ஐந்து உயிர்களும் வாயைத் திறத்தலுடன் மேல்வாய்ப் பல்லை அடிநாவின் ஓரமானது பொருந்தப் பிறப்பதாகும்.

இ, ஈ, எ, ஏ, ஐ அங்காப்போடு

அண்பல் முதல்நா விளிம்புற வருமே. நூற்பா 77

உ, ஊ, ஒ, ஓ, ஔ என்னும் ஐந்து உயிர் எழுத்துக்களும் உதடு குவிவதால் பிறப்பனவாகும்.

உ ஊ ஒ ஓ ஔ விதழ் குவிவே. நூற்பா 78

உயிரெழுத்துக்களின் பிறப்பு முயற்சியினை இதுவரை பார்த்தோம். இனி, மெய்யெழுத்துக்களின் பிறப்பு முயற்சியினைப் பவணந்தியார் கூறுகின்றார்.

மெய்யெழுத்துக்களின் பிறப்பு முயற்சிகள்

பேச்சொலிகளின் பிறப்பினை ஆராய்கையில் நாவானது நுனிநா, இடைநா, கடைநா என்று மூவகையாகப் பகுக்கப்படும். நாவிற்கு நேர் மேலே உள்ள அண்ணம் நுனி அண்ணம், இடை அண்ணம், கடை அண்ணம் என்று மூன்றாகப் பிரித்து வழங்கப்படும்.

க ங, ச ஞ, ட ண முதலிய எழுத்துக்களின் பிறப்பு முயற்சிகள்

கஙவும் சஞவும் டணவும் முதல்இடை

நுனிநா அண்ணம் உறமுறை வருமே.

என்னும் நூற்பா (79) மேற்கூறிய எழுத்துக்களின் பிறப்பு முயற்சிகளைக் கூறுகின்றது.

நாவின் அடி மேல்வாயின் அடியைப் பொருந்த க,ஙவும், நாவின் நடு, மேல்வாயின் நடுப்பகுதியைப் பொருந்த ச,ஞவும், நாவின் கடைப்பகுதி மேல்வாயின் கடைப்பகுதியைப் பொருந்த ட, ணவும் முறையே பிறக்கின்றன.

த, ந

மேல்வாய்ப் பல்லின் அடியினை நாவின் நுனி பொருந்த த, ந என்னும் எழுத்துக்கள் பிறக்கின்றன.

அண்பல் அடிநா முடியுறத் தநவரும். நூற்பா 80

ப, ம

மேலுதடும் கீழுதடும் பொருந்த ப, ம என்னும் எழுத்துக்கள் பிறக்கின்றன.

"மீகீழ் இதழ்உறப் பம்மப் பிறக்கும்" நூற்பா 81

(மீ – மேல்.)

யகரத்திற்குரிய முயற்சி

நாவின் அடியானது மேல்வாயின் அடியினைப் பொருந்த யகரம் பிறக்கும்.

அடிநா வடியண முறயத் தோன்றும். நூற்பா 82

ர, ழ – பிறப்பு முயற்சிகள்

மேல்வாயை நாவின் நுனி தடவ ர, ழ என்னும் எழுத்துக்கள் பிறக்கின்றன.

அண்ணம் நுனிநா வருட ரழவரும். நூற்பா 83

ல, ள – பிறப்பு முயற்சிகள்

மேல்வாய்ப் பல்லின் அடியை நாவின் ஓரம் தடித்துப் பொருந்த லகரமும், தடவப் பொருந்த ளகரமும் பிறக்கும்.

அண்பல் முதலும் அண்ணமும் முறையின்

நாவிளிம்பு வீங்கி ஒற்றவும் வருடவும்

லகாரம் ளகாரம் ஆயிரண்டும் பிறக்கும். நூற்பா 84

வ – பிறப்பு முயற்சி

மேல்வாய்ப்பல்லை கீழுதடு பொருந்த வகரம் பிறக்கும்.

மேற்பல் இதழுற மேவிடும் வவ்வே. நூற்பா 85

ற, ன – பிறப்பு முயற்சிகள்

மேல்வாயினை நாவின் நுனி நன்றாகப் பொருந்த ற, ன என்னும் எழுத்துக்கள் பிறக்கும்.

அண்ண நுனிநா நனியுறிற் றனவரும். நூற்பா 86

இதுவரை முதலெழுத்துக்கள் பிறக்கும் இடங்களும், பிறப்பு முயற்சிகளையும் கூறிய பவணந்தியார் இனி சார்பெழுத்துக்களின் பிறப்பிடமும் முயற்சியும் பற்றிக் கூறுகின்றார்.

சார்பெழுத்துக்களின் பிறப்பிடமும் முயற்சியும்

இதுவரை முதலெழுத்துகளுக்குப் பிறப்பிடமும் முயற்சியும் கூறப்பட்டன. அதனைத் தொடர்ந்து சார்பெழுத்துகளுக்குப் பிறப்பிடமும் முயற்சியும் கூறப்படுகின்றன.

ஆய்தக்கு இடம்தலை அங்கா முயற்சி

சார்பெழுத்து எனவும் தம்முதல் அனைய. நூற்பா 87

ஆய்த எழுத்துக்குத் தலை பிறப்பிடமாகவும் வாய் திறத்தலே முயற்சியாகவும் அமைகிறது. சார்பெழுத்துக்கள் பத்தினுள் ஆய்தத்தைத் தவிர மற்ற ஒன்பது வகைகளும் பிறப்பிடத்தாலும் பிறப்பு முயற்சியாலும் தத்தம் முதல் எழுத்துக்கள் ஒத்தனவாகும்.

பிறப்புக்குப் புறனடை

எழுத்துக்கள் பலவற்றிற்குப் பிறப்பு ஒன்றாகக் கூறப்பட்டாலும் உயர்த்திக் கூறுதல், தாழ்த்திக் கூறுதல், உயர்த்தியும் தாழ்த்தியும் கூறுதல் ஆகிய ஒலி முயற்சியினால் ஒன்றுக்கொன்று பிறப்பு வேறுபாடுகளும் சிறிது சிறிது உள்ளன.

எடுத்தல் படுத்தல் நலிதல் உழப்பின்

திரியும் தத்தமில் சிறிது உளவாகும்.

என்னும் நூற்பா (88) எழுத்துக்களின் பிறப்புக்குப் புறனடை கூறிற்று.

உயிர்மெய்

சார்பெழுத்தில் முதலாவதாகக் கூறப்படும் உயிர்மெய் ஆறு இலக்கணங்களைப் பெறும் தன்மையதாகும்.

1. மெய்யெழுத்து அகர உயிருடன் கூடும் போது புள்ளியை விட்டு, அவ்வாறு விட்ட வடிவே வடிவாகப் பெறும்.

2. அகரம் ஒழிந்த வேறு உயிர்களுடன் சேரும் போது மெய், தன் மேல் புள்ளியை விடுவதுடன் வடிவமும் திரிந்து வரும்.

3. மெய்யும் உயிரும் சேரும் போது மெய்யின் மாத்திரை தோன்றாமல் உயிரின் மாத்திரையையே உயிர்மெய் மாத்திரையாகப் பெறும்.

4. வரி வடிவத்தில் உயிரின் வடிவத்தை நீக்கி மெய் எழுத்தின் விகாரப்பட்ட வடிவத்தையே பெறும்.

5. தான் தோன்றக் காரணமாய் இருந்த உயிர், மெய் ஆகியவற்றின் பெயர்களை இணைத்து உயிர்மெய் என்ற பெயரால் வழங்கப்படும்.

6. மெய்யின் ஒலி முன்னும் உயிரின் ஒலி பின்னுமாக உயிர்மெய் எழுத்துக்கள் உச்சரிக்கப்படும்.

புள்ளிவிட்டு அவ்வொடு முன்உரு வாகியும்

ஏனை உயிரொடு உருவு திரிந்தும்

உயிரள வாயதன் வடிவொழித்து இருவயிற்

பெயரொடும் ஒற்றுமுன் னாய்வரும் உயிர்மெய். நூற்பா 89

பதினெட்டு மெய்யுடன் பன்னிரண்டு உயிரும் தனித்தனியே ஏறி வரின் 216 உயிர்மெய் எழுத்துக்கள் தோன்றும். (18 X 12 = 216)

முற்றாய்தம்

ஆய்த எழுத்தின் இலக்கணத்தினை மூன்று நிலைகளில் அறியலாம்.

1. ஆய்தம் மூன்று புள்ளி வடிவினதாய் அமையும்.

2. குற்றெழுத்தை அடுத்தே வரும்.

3. ஆய்த எழுத்தை அடுத்து வல்லின உயிர்மெய்யே வரும்.

குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி

உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே. நூற்பா 90

(குறியதன் முன்னர் – குறிலுக்கு வலப்புறம். வல்லாறன் மிசைத்து – வல்லின உயிர்மெய்க்கு இடப்புறம்).

மேற்கூறிய நூற்பாவில் ‘ஆய்தம்’ என்று வெறுமனே கூறாமல் அதன் வடிவமும் தோன்றும் வகையில் ‘ஆய்தப்புள்ளி’ என்று கூறப்பட்டதற்குச் சங்கர நமச்சிவாயர் பின்வருமாறு காரணம் கூறுகின்றார்.

“உயிர் வருக்கத்து இறுதிக்கண் தந்த ஆய்த வடிவைப் பிற்காலத்து வேறுபட வரைந்து வழங்குவர் ஆதலின் தொல்லை பழைய வடிவு தோன்ற ஆய்தப் புள்ளி” என்றார்.

பழங்காலத்தில் ஆய்தம் தற்போது எழுதப்படுவது போன்று மூன்று சுழிகள் இட்டு எழுதாமல் மூன்று புள்ளிகள் இட்டு எழுதப்பட்டது என்பதை அறியமுடிகிறது.

‘உயிர் ஆய்தம் எட்டு’ (நன்னூல் 61) என்னும் நூற்பா வழி ஆய்தம் எட்டு என்று முன்னர்க் கூறப்பட்டது. அவை,

1. ஆய்தத்தை அடுத்து வரும் வல்லின வகைகளில் வரும் முற்றாய்தம் – 6. (எ.டு) எஃ, கஃ, கஃகு, கஃது, கஃபு, கஃறு.

2. திரிதல் என்னும் புணர்ச்சி விகாரத்தில் வரும் முற்றாய்தம் – 1. (எ.டு) அ + கடிய = அஃகடிய

3. விரித்தல் என்னும் செய்யுள் விகாரத்தில் வரும் முற்றாய்தம். (எ.டு) அ + கான் = அஃகான்

இம்மூன்று நிலைகளிலும் முற்றாய்தம் எட்டாக அமையும்.

உயிரளபெடை

செய்யுளில் ஓசை குறையும் இடங்களில் அவ்வோசையை நிறைவு செய்வதற்காக மொழிக்கு முதல், இடை, கடை என்னும் மூன்று இடங்களில் நின்ற நெட்டெழுத்துக்கள் ஏழும் அவ்வோசையை நிறைவு செய்வதற்குத் தத்தம் மாத்திரையின் அளவிலிருந்து நீண்டு ஒலிக்கும். அவ்வாறு அளபெடுக்கையில் அவ்வின குற்றெழுத்துக்களைப் பெற்று வரும்.

இசைகெடின் மொழிமுதல் இடைகடை நிலைநெடில்

அளபெழும் அவற்றவற்று இனக் குறில் குறியோ. நூற்பா 91

உயிரளபெடை இசைநிறை அளபெடை (அ) செய்யுளிசை அளபெடை, இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை என்று மூன்று வகைப்படும்.

இசைநிறை அளபெடை

செய்யுளில் இசைநிறைக்க வருவனவற்றைச் செய்யுளிசை அளபெடை (அ) இசைநிறை அளபெடை என்று கூறுவர்.

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்

பெய்யெனப் பெய்யும் மழை.

இக்குறட்பாவில் மொழியிடையில் இசை இனிமைக்காக அளபெடை வந்துள்ளது.

இன்னிசை அளபெடை

செய்யுளில் ஓசை குறையாத இடத்தும் இனிய ஓசையைத் தருவதற்காகவும் ஒருசொல் மற்றொரு சொல்லின் இசையை நிறைவு செய்வதற்காகவும் அளபெடைகள் வருதல் உண்டு.

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே

எடுப்பதூஉம் எல்லாம் மழை.

இங்கு, கெடுப்பதும், எடுப்பதும் என இருந்தாலும் செய்யுளில் ஓசை குறையாது. ஆயினும் இனிய ஓசையைத் தருவதற்காகக் குற்றெழுத்து நெட்டெழுத்தாக நீண்டு அளபெடுத்தது.

சொல்லிசை அளபெடை

ஒரு சொல் மற்றொரு சொல்லின் இசையை நிறைவு செய்வதற்காக வரும் அளபெடையைச் சொல்லிசை அளபெடை என்பர்.

உரன்நசைஇ யுள்ளம் துணையாகச் சென்றார்

வரன்நசைஇ இன்னும் உளன்.

இங்கு உரன்நசை, வரன்நசை என்று இருந்தாலும் செய்யுளில் ஓசை குறையாது ஆயினும், விருப்பம் என்னும் பொருள் தரும் நசை என்னும் பெயர்ச்சொல், விரும்பி என வினையெச்சப் பொருள்படும் பொருட்டு வினையெச்சச் சொல் ஆவதற்கு நசைஇ என அளபெடுத்தது.

எனவே, உயிரளபெடைகள் இசைநிறை அளபெடை, இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை என்று மூன்றாகக் கூறுவர்.

உயிரளபெடையின் எண்ணிக்கை

நெட்டெழுத்துக்கள் ஏழும் மொழிக்கு முதல், இடை, கடை என்னும் மூன்று இடங்களிலும் அளபெடுக்க (7X3 = 21) இருபத்தொன்றாகும். இவற்றுள் ஔகாரம் மொழிக்கு இடையிலும் கடையிலும் வராததால், இவ்விரண்டையும் கழிக்க இசைநிறை அளபெடை 19 ஆகும்.

மேற்கூறியவற்றுடன் இன்னிசை அளபெடை ஒன்றும் சொல்லிசை அளபெடை ஒன்றும் சேர்க்க உயிரளபெடை இருபத்தொன்றாகும்.

ஒற்றளபெடை

செய்யுளில் ஓசை குறையும் போது அவ்வோசையை நிறைவு செய்வதற்கு மெய்யெழுத்து தனக்குரிய அரை மாத்திரையிலிருந்து நீண்டு ஒரு மாத்திரை ஒலியாக ஒலிப்பது ஒற்றளபெடையாகும்.

ஙஞண நமன வயலள ஆய்தம்

அளபாம் குறிலிணை குறில்கீழ் இடைகடை

மிகவே அவற்றின் குறியாம் வேறே. நூற்பா 92

செய்யுளில் ஓசை குறையின் ங, ஞ, ண, ந, ம, ன, வ, ய, ல, ள, ஆய்தம் என்னும் பதினோரு எழுத்துக்களும் குறிலிணையின் பின்னும், குற்றெழுத்துக்கள் பின்னும் மொழிக்கு இடையிலும் கடையிலும் அவ்வோசையை நிறைவு செய்வதற்காக தத்தம் மாத்திரையின் மிகுந்து ஒலிக்கும். அவ்வாறு அளபெடுத்தமையை அறிதற்கு அவற்றுக்குப்பின் அவ்வவ் மெய்யெழுத்துக்களே இடம்பெறும்.

(எ.டு)

இலங்ங்கு வெண்பிறை – குறிலிணையின் கீழ் மொழிக்கு இடையில்.

எங்ங்கு இறைவன் – குறிற்கீழ் மொழிக்கு இடையில் அளபெடுத்தது.

மடங்ங் கலந்த – குறிலிணையின் கீழ் மொழிக்கு இறுதியில் அளபெடுத்தது.

அங்ங் கனிந்த – குறிற்கீழ் மொழிக்கு இறுதியில் அளபெடுத்தது.

விலக்ஃஃகி வீங்கிருள் – குறிலிணையின் கீழ் மொழிக்கு இடையில் ஆய்தம் அளபெடுத்தல்.

எஃஃகு இலங்கிய – குறிற்கீழ் மொழிக்கு இடையில் ஆய்தம் அளபெடுத்தது.

ஒற்றளபெடையின் எண்ணிக்கை

மேற்கூறியவாறு பதினோரு எழுத்துக்களும் குறிலிணைக்கீழ் இடை, குறிற்கீழ் இடை, குறிலிணைக்கீழ் கடை, குறிற்கீழ்க் கடை என்னும் நான்கிடத்தும் அளபெடுக்க (11X4 – 44) ஒற்றளபெடை நாற்பத்து நான்காகும். ஆய்தம் மொழிக்கு இறுதியில் வராது. எனவே, குறிலிணைக்கீழ்க் கடை, குறிற்கீழ்க் கடை என்னும் இரண்டிடத்திலும் ஆய்தத்தைக் கழிக்க ஒற்றளபெடை நாற்பத்திரண்டாகும்.

குற்றியலிகரம்

நிலைமொழியின் ஈற்றில் குற்றியலுகரம் அமைந்து, வருமொழியின் முதலில் யகரம் இடம் பெறின், நிலைமொழியின் இறுதியில் நிற்கும் உகரம் இகரமாகத் திரியும். இக்குற்றியலிகரம் தனக்குரிய ஒரு மாத்திரையிலிருந்து குறைந்து அரை மாத்திரை அளவு ஒலிக்கும்.

யகரம் வரக்குறள் உத்திரி இகரமும்

அசைச்சொல் மியாவின் இகரமும் குறிய. நூற்பா 93

ஒரு சொல்லின் இறுதியில் உள்ள குற்றியலுகரம் வருமொழியின் முதலில் யகர உயிர்மெய் இடம் பெறுகையில் குற்றியலிகரமாகத் திரியும். இது இரு சொல் புணர்ச்சியில் வருவதால் புணர்மொழிக் குற்றியலிகரம் என்றும் செயற்கைக் குற்றியலிகரம் என்றும் அழைக்கப்படும்.

நாகு + யாது = நாகியாது

எஃது + யாது = எஃகியாது

வரகு + யாது = வரகியாது

என்னுமாறு குற்றியலிகரம் அமையும். மேலும், மியா என்னும் முன்னிலை அசைச்சொல்லுடன் மகர மெய்யை ஊர்ந்து வரும் இகரம் தனிமொழிக் குற்றியலிகரமாகும். இது இயற்கைக் குற்றியலிகரமாகும்.

(எ.டு) கேண்மியா, சென்மியா

பொதுவாக இகரத்தை உச்சரிக்கும் போது இதழ்கள் விரியும். ஆனால் குற்றியலிகரம் இதழ் விரியாமல் ஒலிக்கப்படும்.

குற்றியலுகரம் முப்பத்தாறினாலும் குற்றியலிகரம் வரும். மேலும் அசைச்சொல் மியாவிலும் குற்றியலிகரம் வருவதால் குற்றியலிகர எண்ணிக்கை முப்பத்தேழாகும்.

குற்றியலுகரம்

உகர உயிரானது தனக்குரிய ஒரு மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலித்தால் குற்றியலுகரம் எனப்படும். உகரத்தை ஒலிக்கும் போது இதழ் குவியும். ஆனால் குற்றியலுகரத்தை ஒலிக்கும் போது இதழ் குவிவதில்லை.

நெடிலொடு ஆய்தம் உயிர்வலி மெலியிடைத்

தொடர்மொழி இறுதி வன்மையூர் உகரம்

அஃகும் பிறமேன் தொடரவும் பெறுமே. நூற்பா 94

நெட்டெழுத்துக்கள் ஏழுடன் ஆய்தம் ஒன்றும், மொழிக்கு (சொல்) நடுவிலும் இடையிலும் வராத ஔகாரம் நீங்கிய பதினொரு உயிர் எழுத்துக்களும், வல்லின மெய் ஆறும், மெல்லின மெய் ஆறும், வகரம் நீங்கிய இடையின மெய் ஐந்தும் ஆகிய முப்பத்தாறு எழுத்துக்களும் ஒன்றினால் ஈற்றுக்கு அயலெழுத்தாகத் தொடரப்பெற்றுச் சொல்லின் இறுதியில், வல்லின மெய்களுள் யாதாயினும் ஒன்றின்மேல் ஏறிவரும் உகரம் தனக்குரிய மாத்திரையிலிருந்து குறுகி ஒலிக்கும்.

குற்றியலுகர வகைப்பாடு

ஈற்றுக்கு அயலெழுத்தைக் கொண்டு குற்றியலுகரத்தை அறுவகைத் தொடராகவும், 36 வகையாகவும் கொள்ளுதல் வேண்டும்.

1. நெடில் தொடர்க் குற்றியலுகரம் – நாகு
2. ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் – எஃகு

3. உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் – வரகு

4. வன்றொடர்க் குற்றியலுகரம் – கொக்கு

5. மென்றொடர்க் குற்றியலுகரம் – நண்டு

6. இடைத்தொடர்க் குற்றியலுகரம் – தெள்கு

இப்பகுதியில் இறுதி அயலெழுத்தைக் கொண்டு குற்றியலுகரத்தை ஆறு வகையாகக் கூறியதன் நோக்கம் பின்னர் புணரியலில் எடுத்தாளுவதற்கு ஆகும். இது முன் மொழிந்து கோடல் என்னும் உத்தியாகும்.

| | | |
|---|---|---|
| தனி நெடில் | – | 7 |
| ஆய்தம் | – | 1 |
| ஔகாரம் நீங்கிய உயிர் | – | 11 |
| வல்லினம் | – | 6 |
| மெல்லினம் | – | 6 |
| வகரம் நீங்கிய இடையினம் | – | 5 |
| மொத்தம் | – | 36 |

இவ்வாறு முப்பத்தாறு எழுத்துக்கள் ஈற்றுக்கு அயலெழுத்துக்களாக வருவதால் குற்றியலுகரம் முப்பத்தாறாகும்.

ஐகாரக் குறுக்கம்

'ஐ' என்னும் எழுத்து தனியாக உச்சரிக்கப்படும் பொழுது இரண்டு மாத்திரை அளவு ஒலிக்கும். ஆனால் சொல்லின் முதல், இடை, கடை என்னும் மூன்று இடங்களில் அமைந்து உச்சரிக்கும் போது தன் மாத்தியை லிருந்து குறுகி ஒரு மாத்திரை அளவு ஒலிப்பதால் ஐகாரக் குறுக்கம் என்பர். (எ.டு) ஐப்பசி, இடையன், குவளை முதலியன.

தற்சுட்டளபொழி யைம்மூ வழியும்

நையு மௌவு முதலற் றாகும்.

என்னும் நூற்பா (95) ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம் பற்றிய செய்திகளைக் கூறுகிறது.

ஔகாரக் குறுக்கம்

ஔகாரம் தன்னைக் குறிக்கும் போது இரண்டு மாத்திரையாகவும் சொல்லுக்கு முதலில் வரும்போது ஒரு மாத்திரையாகவும் குறுகி ஒலிக்கும். (எ.டு) ஔவையார்.

மகரக் குறுக்கம்

ஒரு சொல்லில் ணகர அல்லது னகர மெய்கள் வந்து, அதன்பின் மகர மெய் வந்தால் அம் மகரமெய்யானது தன் அரை மாத்திரை அளவிலிருந்து குறுகி ஒலிக்கும். இம்மகரக் குறுக்கம் இட வகையில் மூன்றாகும்.

மருண்ம் – ணகரத்தின் பின் குறுகியது.

போன்ம் – னகரத்தின் பின் குறுகியது.

தரும் வளவன் – வகரத்தின் முன் குறுகியது.

"ணன முன்னும் வஃகான் மிசையுமக் குறுகும்" நூற்பா 96

ஆய்தக் குறுக்கம்

ஆய்தம் தனக்குரிய அரை மாத்திரை ஒலியளவிலிருந்து குறுகி, கால் மாத்திரையாக ஒலித்தல் ஆய்தக் குறுக்கமாகும்.

"லளவீற்று இயைபினால் ஆய்தம் அஃகும்" நூற்பா 97

லகர, ளகர ஈற்றுப் புணர்ச்சியினால் வருகின்ற ஆய்தம் தனக்குரிய அரை மாத்திரையிலிருந்து குறுகி ஒலிக்கும்.

அல் + திணை = அஃறிணை

முள் + தீது = முஃடீது

இப்புணர்ச்சி பற்றிய செய்தி நன்னூல் மெய்யீற்றுப் புணரியல் நூற்பா 128இல் தெளிவாகக் கூறப் பட்டுள்ளது.

இதுவரை எழுத்துக்களின் பிறப்பிடங்களையும், பிறப்பு முயற்சிகளையும் தொகுத்துக் கூறிய பவணந்தியார் இனி, எழுத்துக்களின் உருவம் தொடர்பான செய்தியினைக் கூறுகின்றார்.

2.2.1.5 உருவம்

எல்லா எழுத்துக்களும் பல்வேறு வகையில் எழுதி வழங்கும் தொன்மை வடிவினை உடையன. அவ்வாறு எழுதி வழங்குமிடத்து எ, ஏ என்னும் எழுத்துக்களும் மெய்யெழுத்துக்களும் புள்ளியைப் பெறும்.

தொல்லை வடிவன எல்லா எழுத்தும் ஆண்டு

எய்தும் எகர ஒகரமெய் புள்ளி. நூற்பா 98

(எ.டு) எ, ஒ, க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்.

முற்காலத்தில் எகர ஒகரக் குறில்களும் புள்ளி வைத்து எழுதப்பட்டது. இம்முறையில் இடர்ப்பாடுகள் ஏற்பட்டதால், பிற்காலத்தில் வீரமாமுனிவர் இவ்வெழுத்து முறையை மாற்றியமைத்தார். எகரத்தின் கீழே ஒரு சாய்வுக்கோடு சேர்த்து ஏகார நெடிலையும், ஒகரத்தின் கீழே ஒரு கழியைச் சேர்த்து ஓகார நெடிலையும் அமைத்தார்.

2.2.1.6 மாத்திரை

எழுத்துக்கள் எவ்வளவு நேரம் ஒலிக்கப்படுகின்றன என்பதைக் குறிப்பது மாத்திரையாகும். தமிழ் எழுத்துக்கள் ஒவ்வொன்றும் எவ்வளவு மாத்திரைகள் ஒலிக்கின்றன என்பதை நன்னூல் நூற்பா 99 எடுத்துரைக்கின்றது.

மூன்றுயி ரளபிரண் டாநெடி லொன்றே

குறிலோ டையௌக் குறுக்க மொற்றள

பரையொற் றிஉக் குறுக்க மாய்தம்

கால்குறண் மஃகா னாய்த மாத்திரை. நூற்பா 99

உயிரளபெடைக்கு மாத்திரை மூன்று. நெட்டெழுத்துக்கு இரண்டும் ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், ஒற்றளபெடை என்பனவற்றிற்கு ஒவ்வொரு மாத்திரையும் மெய்யெழுத்து, குற்றியலிகரம் குற்றியலுகரம் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே அரை மாத்திரையும் மகரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம் ஆகியவற்றிற்கும் அளவு முறையே கால் மாத்திரையாகவும் அமையும்.

மாத்திரை – இலக்கணம்

மாந்தருக்கு இயல்பாக உண்டாகும் கண்ணிமைப் பொழுதும் கைநொடிப் பொழுதும் ஒரு மாத்திரைக்குரிய கால அளவாகும்.

இயல்பெழு மாந்தர் இமைநொடி மாத்திரை. நூற்பா 100

இந்நூற்பாவினை எழுத்துக்களில் மாத்திரை பற்றிய சூத்திரத்திற்கு முன் கூறாமல் பின்னர்க் கூறியது 'பின்னது நிறுத்தல்' என்னும் உத்தியாகும்.

மாத்திரைக்குப் புறனடை

நன்னூல் நூற்பா 99இல் எழுத்துக்களின் ஒலிகளுக்கு மாத்திரை கூறப்பட்டது. எனினும் சில சூழ்நிலை களில் உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களும் இசை (பாடுதல்) அழைத்தல், பண்டமாற்று முதலிய இடங்களில் தமக்கு உரிய மாத்திரையாகிய அளவைக் கடந்தும் ஒலிக்கும்.

ஆவியும் ஒற்று அளவிறந்து இசைத்தலும்

மேவும் இசைவிளி பண்டமாற்று ஆதியின்.

என்னும் நூற்பா (101) எழுத்துக்களின் ஒலியளவாகிய மாத்திரைக்கு புறனடை கூறியது.

இதுவரை எழுத்துக்களின் ஒலியளவான மாத்திரை பற்றிக் கூறிய பவணந்தியார் இனி மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள், இடையில் வரும் எழுத்துக்கள், இறுதியில் வரும் எழுத்துக்கள் ஆகியவற்றை முறையே பட்டியலிடுகிறார். இதில், முதலில் முனிதலை எழுத்துக்கள் பற்றிய செய்திகளைப் பார்க்கலாம்.

I. தன்மதிப்பீட்டு வினாக்கள்

1. எழுத்திலக்கணத்தின் பகுதிகளைப் பட்டியலிடுக.

2. எழுத்து எத்தனை வகைப்படும்? அவை யாவை?

3. பவணந்தியார் கூறும் சார்பெழுத்தின் எண்ணிக்கை பத்து. சரியா? தவறா?

4. ஔ – எழுத்துக்குரிய இனவெழுத்துக்கள் யாவை?

5. இதழ் குவிவதால் பிறக்கும் எழுத்துக்கள் யாவை?

6. அளபெடைகளின் வகைகள் யாவை? பெயர்களைக் குறிப்பிடுக.

7. குறுகிய ஓசையை உடைய உகரம் குற்றிலுகரம். சரியா? தவறா?

8. மாத்திரை என்பது எதைக் குறிக்கும்?

### 2.2.1.7 முதனிலை எழுத்துக்கள்

எழுத்தின் அகத்திலக்கணம் பத்தில் ஏழாவதாக உள்ளது முதனிலை என்பதாகும். சொற்களில் எவ்வெவ் எழுத்துக்கள் முதலில் இடம்பெறும் என்பதை விளக்குவது 'முதல்நிலை' என்னும் பகுதியாகும்.

பன்னிரண்டு உயிரெழுத்துக்களும், க, ச, த, ந, ப, ம, வ, ய, ஞ, ங என்னும் பத்து உயிர்மெய் எழுத்துக்களும் சொல்லுக்க முதலில் வரும்.

பன்னீ ருயிருங் கசதந பமவய

ஞஙவீ ரைந்துயிர் மெய்யு மொழிமுதல். நூற்பா 102

(எ.டு) அணி, ஆடு, இடை, ஈக்கள், உடை, ஊசி, எடு, ஏணி, ஐயம், ஒற்றுமை, ஓடம், ஔவை.

கனி, சட்டம், தளிர், நலம், பணி, மணி, வனம், யவனர், ஞமலி (நாய்), நகம் முதலிய சொற்கள் உதாரணங்களாகும்.

முதல் நிலைக்குச் சிறப்பு விதிகள்

எந்தெந்த மெய் எந்தெந்த உயிர்களுடன் சேர்ந்து மொழிக்கு முதலாகும் என்பதை இச்சிறப்பு விதிகள் கூறுகின்றன.

வகர மெய், உ, ஊ, ஒ, ஓ என்னும் நான்கு உயிரும் அல்லாத ஏனைய எட்டு உயிர்களுடன் சொல்லுக்கு முதலில் வரும்.

(எ.டு) வண்டி, வாடை, விதி, வீதி, வெல், வேல், வையம், வௌவால்.

உஊ ஒஓ வலவொடு வம்முதல். நூற்பா 103

யகரத்திற்குச் சிறப்பு விதி

யகர மெய், அ, ஆ, உ, ஊ, ஒ, ஓ என்னும் ஆறு உயிர்களுடன் சேர்ந்து சொல்லுக்கு முதலில் வரும்.

(எ.டு) யவனம், யானை, யுகம், யூகம், யோகம், மோகம், யௌவனம்.

அ ஆ உ ஊ ஓ ஔ அம்முதல்.

என்னும் நூற்பா (104) யகரத்திற்குச் சிறப்பு விதி கூறியது.

ஞகரத்திற்குச் சிறப்பு விதி

ஞகர மெய், அ, ஆ, எ, ஓ என்னும் நான்கு உயிர்களுடன் சேர்ந்து சொல்லுக்கு முதலில் வரும்.

(எ.டு) ஞமலி, ஞாலம், ஞெகிழி (கொள்ளிக்கட்டை), நொங்கிற்று (களைத்து).

அ ஆ எ ஒவ்வோ டாகும் ஞம்முதல். நூற்பா 105

ஙகரத்திற்குச் சிறப்பு விதி

ஙகர மெய் மூன்றுகட்கும், யா வினாவும் எகர வினாவும் ஆகிய இடைச்சொற்களின் பின்னே அகரத்தைச் சேர்ந்து சொல்லுக்கு முதலில் வரும்.

(எ.டு) அங்ஙனம், இங்ஙனம், எங்ஙனம், யாங்ஙனம் ஆகியன.

சுட்டியா வெகர வினாவழி யவ்வை

ஒட்டி வவ்வு முதலா கும்மே. நூற்பா 106

மொழிக்கு முதலில் வரும் பத்து மெய்களில் வ, ய, ஞ, ங என்னும் நான்கிற்கும் சிறப்பு விதியினைப் பவணந்தியார் கூறியுள்ளார். எஞ்சிய க, ச, த, ந, ப, ம என்னும் ஆறு மெய்களும் பன்னிரண்டு உயிருடன் சேர்ந்து மொழிக்கு முதலில் வரும்.

மொழிக்கு முதலில் வரும் மொத்த எழுத்துக்கள் – 103.

உயிரெழுத்து – 12, ககர, சகர, தகர, நகர, டகர, மகர வரிசை – 6 மு 12 = 72, வகர வரிசை – 8, பகர வரிசை – 6, ஞகர வரிசை – 4, ஙகர வரிசை – 1. ஆக மொத்தம் 103 ஆகும்.

2.2.1.8 மொழிக்கு இறுதி நிலையில் வரும் எழுத்துக்கள்

தனித்தும் மெய்யுடன் கூடியும் வரும் பன்னிரண்டு உயிர்களும் ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள என்னும் பதினோரு மெய்களும் குற்றியலுகரமும் சொல்லுக்கு இறுதியில் வரும்.

ஆவி ஞண நமன யரலவ ழளமெய்

சாயும் உகரம் நாலாறும் ஈறே. நூற்பா 107

(எ.டு அ (அந்த), ஆ (பசு), இ (இந்த), ஈ (கொடு), உ (உகரச்சுட்டு), ஊ (இறைச்சி), எ (எந்த), ஏ (அம்பு), ஐ (தலைமை), ஒ (ஒத்திரு), ஓ (மதகுப் பலகை), ஔ (அழுக்காறு) உயிர்களுள் குற்றெழுத்துக்கள் ஐந்தும் மேலே கூறியவாறு சுட்டும், வினாவும் உவம உருபின் அடியும் ஆகிய ஓர் எழுத்து ஒரு மொழியை இடைச்சொற்களாக வரும்.

(எ.டு உரிஞ் (உரிஞ்சு), கண், பொருந்(பொருந்து), மரம், பொன்வேய் (மூங்கில்), பார், வேல், தெவ் (பகைமை), வீழ், வாய், அஃகு (கருங்கு).

வல்லின மெய்கள் ஆறும் 'ஙகர' மெய்யும் சொல்லுக்கு இறுதியில் வராது.

இறுதி நிலைக்குச் சிறப்பு விதி

அ, இ, உ, எ, ஒ, என்னும் குற்றெழுத்துக்கள் தனித்து இறுதியில் வருவதில்லை. அளபெடையில் வரிவடிவில் அடையாளமாக இறுதியில் வரும். எகரம் மெய்யொடு இறுதியில் வராது. ஒகரம், நகர மெய்யுடனும், ஔகாரம், ககர உகரங்களுடன் சேர்ந்தும் இறுதியில் வரும் என்பர்.

குற்றுயி ரளபி னீறா மெகரம்

மெய்யோ டேலா தொந் நவ்வொ டாமென

ககர வகரமோ டாகு மென்ப.

என்னும் நூற்பா (108) இறுதி நிலைக்குச் சிறப்புவிதியினைக் கூறியது.

(எ.டு பலாஅ, தீஇ, சேஎ, கைஇ, தோஒ, கௌஉ – அளபெடையில் உயிர்க் குற்றெழுத்துக்கள் இறுதியில் இடம் பெற்றன.

நொ – ஒகரம் நகரத்துடன் இறுதியில் வந்தது. கௌ, வௌ – ஔகாரம், ககர வகரங்களே இறுதியில் வந்தது.

உயிர்மெய் எழுத்தினது முதலும் ஈறும்

உயிர்மெய் எழுத்துக்கு எது முதல் எது ஈறு என்பதை நூற்பா 109 உணர்த்துகின்றது.

மெய்யெழுத்து முன்னும் உயிரெழுத்துப் பின்னுமாக ஒலித்து நின்ற உயிர்மெய்யெழுத்திற்கு மெய் முதலெழுத்தாகும். உயிர் இறுதியெழுத்தாகும்.

"நின்ற நெறியே உயிர்மெய் முதல் ஈறே". நூற்பா 109

இதுவரை மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள், இறுதியில் வரும் எழுத்துக்கள் ஆகியவற்றைப் பற்றிய செய்திகளைப் பார்த்தோம். இனி, மொழிக்கு இடையில் வரும் எழுத்துக்கள் பற்றிய செய்திகளைப் பார்ப்போம்.

2.2.1.9 இடைநிலை மெய்ம்மயக்கம்

மெய்யெழுத்துக்கள் சொல்லின் இறுதியிலும் இடையிலும் வரும். ஆனால், முதலில் வருதல் இல்லை. சொல்லின் இறுதியில் கூட பதினொரு மெய்கள் தாம் வரும். பிற எழுத்துக்கள் வருவதில்லை. ஆனால், சொல்லின் இடையில் பதினெட்டு மெய்களும் தோன்றும். இப் பதினெட்டு மெய்களும் சொல்லின் இடையில் மயங்கி வருவதற்கு இடைநிலை மெய்ம்மயக்கம் என்று பெயர். இவ் இடைநிலை மெய்ம்மயக்கம் வேற்றுநிலை மெய்ம்மயக்கம், உடனிலை மெய்ம்மயக்கம் என இரு வகைப்படும்.

மெய்யெழுத்துக்கள் பதினெட்டில் க, ச, த, ப என்னும் நான்கைத் தவிர ஏனைய 14 மெய்களும் பிற மெய்களுடன் மயங்கும். ர ழ என்னும் இரண்டைத் தவிர ஏனைய 16 மெய்களும் தம்மோடு தாம் கூடிவரும். க, ச, த, ப என்னும் நான்கு மெய்களும் எப்பொழுதும் உடனிலை மெய்ம்மயக்கமாகவே வரும். ர ழ என்ற இரண்டும் வேற்றுநிலை மெய்ம்மயக்கமாகவே வரும்.

க ச த ப வொழித்த வீரேழன் கூட்டம்

மெய்ம்மயக்கு உடனிலை ரழவொழித் தீரெட்

டாகுமிவ் விருபான் மயக்கு மொழியிடை

மேவு முயிர்மெய் மயக்கள வின்றே.

என்னும் நூற்பா (110) இடைநிலை மெய்ம்மயக்கம் பற்றிய செய்தியினைக் கூறியது.

வேற்றுநிலை மெய்ம்மயக்கத்திற்குச் சிறப்பு விதி

ஙகர மெய்யின் முன் ககரமும் வகர மெய்யின் முன் யகரமும் மயங்கும்.

(எ.டு) கங்கன் – க ங் க் அன், தெவ்யாது – தெவ் ய் ஆது.

ஙம்முன் கவ்வாம் வம்முன் யவ்வே. நூற்பா 111

ஞகர நகர மெய்களின் முன்னர் அவற்றுக்கு இனமாகிய சகரம் தகரம் என்னும் மெய்களும் தகர மெய்யும் மயங்கும்.

(எ.டு) மஞ்சள் – ம ஞ் ச் அள்

கந்தன் – க ந் த் ந் அன்

ஞநமுன் றம்மினம் யகரமொ டாகும். நூற்பா 112

டகர, றகர மெய்களின் முன் க ச ப என்னும் மூன்று மெய்களும் மயங்கும்.

(எ.டு) வெட்கம், வெட்சி, திட்பம்

கற்க, முயற்சி, கற்பு

டறமுன் கசப மெய்யுடன் மயங்கும். நூற்பா 113

ணகர, னகர மெய்களில் அவற்றுக்கு இனமாகிய டகர றகர மெய்களும் க, ச, ஞ, ப, ம, ய, வ என்னும் ஏழு மெய்யெழுத்துக்களும் மயங்கும்.

'ண'கரவெழுத்தை அடுத்து வரும் மெய்கள்

தண்டு, வெண்கலம், வெண்சோறு, வெண்ஞமலி, வெண்பல், வெண்மலர், மண் யாது, மண் வலிது.

ண ன முன் னினங்கச ஞபமய வவ்வரும். நூற்பா 114

'ன'வை அடுத்து வரும் மெய்கள்

கன்று, நன்கு, புன்செய், புன்ஞமலி, புன்பயிர், பொன்மலர், பொன்யாது, பொன் வலிது.

'ம'வை அடுத்து வரும் மெய்கள்

மகர மெய்யின்முன் ப, வ, ய என்னும் மூன்று மெய்கள் மயங்கும் (நூற்பா 114).

(எ.டு) துன்பம், கலம் யாது, கலம் வலிது.

மம்முன் ப ய வ மயங்கு மென்ப. நூற்பா 115

'ய', 'ர', 'ழ' வை அடுத்து வரும் மெய்கள்

ய ர ழ என்னும் மொழிகளின் முன்னும் மொழிக்கு முதலில் வருகின்ற பத்து மெய்களும் மயங்கும்.

ய ர ழ முன்னர் மொழி முதல் மெய்வரும்.

யரழ முன்னர் மொழிமுதன் மெய்வரும்.நூற்பா 116

| ய் | ர் | ழ் | |
|---|---|---|---|
| வேய்கடிது | வேர்கடிது | வீழ்கடிது | – க் |
| வேய்சிறிது | வேர்சிறிது | வீழ்சிறிது | – ச் |
| வேய்தீது | வேர்தீது | வீழ்தீது | – த் |
| வேய்நீண்டது | வேர்நீண்டது | வீழ்நீண்டது | – ந் |
| வேய்பெரிது | வேர்பெரிது | வீழ்பெரிது | – ப் |
| வேய்மாண்டது | வேர்மாண்டது | வீழ்மாண்டது | – ம் |
| வேய்வலிது | வேர்வலிது | வீழ்வலிது | – வ் |
| வேய்யாது | வேர்யாது | வீழ்யாது | – ய் |
| வேய்ங்குழல் | ஆர்ங்கோடு | --- | |

லகரம் ளகரம் என்னும் இரண்டு மெய்களின் முன் க, ச, ப, வ, ய என்னும் ஐந்து மெய்களும் மயங்கும்.

லளமுன் கசப வயவொன் றும்மே. நூற்பா 117

| ல் | ள் |
|---|---|
| வேல்கடிது | வாள்கடிது |
| வேல்சிறிது | வாள்சிறிது |
| வேல்பெரிது | வாள்பெரிது |
| வேல்வலிது | வாள்வலிது |
| வேல்யாது | வாள்யாது |

உடனிலை மெய்ம்மயக்கத்தின் சிறப்பு விதி

'ரகர', 'ழகர' என்னும் இரண்டு மெய்களும் அல்லாத பதினாறு மெய்களும் தம்முள் தாம் மயங்கும். இதற்கு உடனிலை மெய்ம்மயக்கம் என்று பெயர்.

(எ.டு) அக்கம், அங்ஙனம், அச்சம், அஞ்ஞானம், அட்டை, அண்ணம், அத்தை, வெந்நீர், உப்பு, அம்மை, பொய்யர், அல்லி, தெவ்வர், பள்ளம், கொற்றம், அன்னை.

ர, ழ அல்லன தம்முடன் தாம் உடன் நிலையும்.

என்னும் நூற்பா (118) உடனிலை மெய்ம்மயக்கத்திற்கான சிறப்பு விதியினைக் கூறியது.

ஈறொற்றாய் மயங்குவன

ய ர ழ என்னும் மூன்று மெய்யெழுத்துக்களின் முன் க, ச, த, ப, ங, ஞ, ந, ம என்னும் எட்டு மெய்களும் தனி மெய்யாகவும் உயிர் மெய்யாகவும் மயங்குதலின்றி இரண்டு மெய்களாகவும் வந்து மயங்கும்.

யரழவொற் றின்முன் கசதப ஙஞநம

ஈறொற் றாம்ரழத் தனிக்குறி லணையா. நூற்பா 119

| ய் | ர் | ழ் |
|---|---|---|
| வேய்க்குறை | வேர்க்குறை | வீழ்க்குறை |
| வேய்ச்சிறை | வேர்ச்சிறை | வீழ்ச்சிறை |
| வேய்த்தலை | வேர்த்தலை | வீழ்த்தலை |
| வேய்ப்புறம் | வேர்ப்புறம் | வீழ்ப்புறம் |
| வேய்ங்குழல் | அர்ங்கோடு | பாழ்ங்கிணறு |
| தேய்ஞ்சது | கூர்ஞ்சிறை | பாழ்ஞ்சுனை |
| சாய்ந்தனம் | நேர்ந்தனம் | வாழ்ந்தனம் |
| வேய்ம்புறம் | ஈர்ம்பணை | பாழ்ம்பதி |

செய்யுளில் ஈறொற்றில் நிற்கும் எழுத்துக்கள்

லகர ளகர மெய்கள் திரிந்த னகர ணகர மெய்களின் முன்வரும் மகரமெய் குறுகிச் செய்யுளில் அம்மெய்களுடன் ஈரொற்றாக நிற்கும்.

லளமெய் திரிந்த னணமுன் மகாரம்

நைந்தீ ரொற்றாஞ் செய்யு ளுள்ளே. நூற்பா 120

(எ.டு) திசை அறி மீகானும் போன்ம்

(திசையை அறிகின்ற மரக்கலத் தலைவனைப் போலும்)

மயில் இயல் மாகர மருண்ம்

(மயிலைப் போன்ற சாயலை உடைய மளிர் மருளும்).

மொழி முதல், இறுதி, இடைநிலைகளுக்குப் புறனடை

எழுத்துக்களின் பெயரைச் சொல்லி நிலைமொழி, வருமொழிகளாகப் புணரும் போது மொழி முதல், இடைநிலை மயக்கத்திற்கும் என மேற்கூறிய இவ்வாறு விதிக்கப்பட்டனவும் விலக்கப்பட்டனவும் ஆகிய எழுத்துக்கள் எல்லாம் மொழிக்கு முதலாகியும் மயங்கியும் வரும்.

தம்பெயர் மொழியின் முதலு மயக்கமும்

இம்முறை மாறியு இயலு மென்ப. நூற்பா 121

(எ.டு) "லளஃகான் முன்னர்".

இதில் மொழிக்கு முதலாக லகரம் மொழிக்கு முதலாகி வந்தது.

"அவற்றுள் லளஃகான்" – இதில் லகர மெய் ளகர மெய்யுடன் மயங்கி வந்தது.

"கெப்பெரிது" – இதில் மொழிக்கு இறுதியில் வராத எகரம் மொழிக்கு இறுதியில் மெய்யுடன் சேர்ந்து வந்தது.

இதுவரை மொழிக்கு முதல், இடை, கடை ஆகியவற்றில் வரும் எழுத்துக்களையும், அவற்றின் விளக்கங்க ளையும் கூறிய பவணந்தியார் இனி, போலி பற்றிய செய்திகளைக் கூறுகின்றார்.

2.2.1.10 போலி

எழுத்தின் அகத்திலக்கணம் பத்தினுள் இறுதியாக உள்ளது போலியாகும். போலி பற்றிய செய்திகள் இனி கூறப்படுகின்றன.

சொல்லின் முதல், இடை, கடை என்னும் மூன்று நிலைகளில் இருக்க வேண்டிய எழுத்திற்கு மாறாக வேறு ஓர் எழுத்து வந்து அமையும். அங்ஙனம் அமைந்தாலும் பொருள் மாறாமல் அந்த எழுத்தைப் போல் வேறு ஓர் எழுத்து வந்தமைந்து பொருள் கொடுப்பதற்கு எழுத்துப்போலி என்று கூறுவர்.

மொழியிறுதிப் போலி

பால்பகா அஃறிணைப் பெயர்களின் இறுதியில் மகர மெய்க்குப் போலியாக னகர மெய்வரும். இது மொழியிறுதிப் போலியாகும்.

மகர விறுதி யஃறிணைப் பெயரின்

னகரமோ டுறழா நடப்பன வுளவே. நூற்பா 122

(எ.டு) அகம் – அகன், முகம் – முகன், நிலம் – நிலன்.

முதற்போலியும் இடைப்போலியும்

அகரம் மொழிக்கு முதலிலும் நடுவிலும் ச, ஞ, ய என்னும் மெய்களுக்கு முன் தம்முள் வேறுபாடில்லாமல் ஒத்து வரும்.

அ ஐ முதலிடை யொக்குஞ் சஞயமுன். நூற்பா 123

| முதற்போலி | இடைப்போலி |
| --- | --- |
| பசல் – பைசல் | அமச்சன் – அமைச்சன் |
| மஞ்சு – மைஞ்சு | இலஞ்சி – இலைஞ்சி |
| மயல் – மையல் | அரயன் – அரையன் |

மொழியிடைப் போலி

சொல்லிற்கு நடுவில் சிலவிடங்களில் ஐகாரத்திற்குப் பின்னும், யகர மெய்யின் பின்னும் வருகின்ற நகர மெய்யோடு ஞகரமெய் போலியாக வரும் என்று கூறுவர்.

ஐகான் யவ்வழி நவ்வொடு சில்வழி

ஞஃகா னுறழு மென்மரு முளரே.

என்னும் நூற்பா (124) மொழியிடைப் போலி பற்றிய செய்தியினைக் கூறியது.

கைந்நின்ற – கைஞ்ஞின்ற

செய்ந்நின்ற – செய்ஞ்ஞின்ற

இவை செய்யுளில் வருவன.

ஐந்நூறு – ஐஞ்ஞூறு

சேய்நலூர் – சேஞ்ஞலூர்

இவை வழக்கில் வருவன.

தொல்காப்பியர் ணகர, னகர மெய்களின் முன் வரும் வினைச்சொல்லின் முதலெழுத்து யா என நிற்பினும் ஞா என நிற்பினும் ஒக்கும் என்பர்.

(எ.டு) மண்யாத்த – மண் ஞாத்த

பொன்யாத்த – பொன்ஞாத்த

இவை இப்போது வழக்கில் இல்லை எனலாம். இறந்தது விலக்கல் என்னும் உத்தியில் கூறாது விடுத்தார்.

சந்தியக்கரம்

அகரத்தின் முன்னர் இகரமும், எகர மெய்யும் தம்முள் பொருந்தினால் ஐ என்னும் நெட்டெழுத்து ஒலிக்கும். அதேபோல் அகரத்தோடு உகரமும் வகர மெய்யும் தம்முள் ஒத்துப் பொருந்தினால் ஔ என்னும் நெட்டெழுத்து ஒலிக்கும்.

அம்முன் இகரம் யகரம் என்றிவை

எய்தின் ஐ ஒத்து இசைக்கும் அவ்வொடு

உவ்வும் வவ்வும் ஔவோர் அன்ன. நூற்பா 125

(எ.டு) அய்இ – ஐ

அவ்உ – ஔ

ஐ, ஔ என்பது சந்தியக்கரமாகும். இவற்றைக் கூட்டெழுத்து என்பர்.

சங்கரநமச்சிவாயர் தன் நூலுக்கு முதல் நூலுக்கு முதல் நூலாக உரை வகுத்த மயிலைநாதரைப் பின்பற்றி இச்சூத்திரம் ஐகாரம், ஔகாரம் ஆகியவற்றுக்கு மாறாக வரும் எழுத்துப் போலியை உணர்த்துகிறது என்ற கருத்தில் உரை எழுதுகிறார்.

அஇ – ஐ, அய் – ஐ, அஉ – ஔ, அவ் – ஔ.

சங்கரநமச்சிவாயர் கூறிய கருத்தை சிவஞான முனிவர் மறுத்து இச்சூத்திரம் எழுத்துப் போலியை உணர்த்தாது சத்தியக்கரத்தை உணர்த்துவது என்ற முறையில் பொருள் கூறுகின்றார்.

அகரத்தின் முன்னர் இகரமும் யகரமும் தம்முள் ஒத்துவரின் ஐ என்னும் நெட்டெழுத்தும், அகரத்தோடு உகரமும் வகரமும் தம்முள் ஒத்து ஒரு தன்மையாக வரின் ஔ என்னும் நெட்டெழுத்தும் ஒலிக்கும்.

எழுத்துச் சாரியைகள்

ஒன்றைச் சார்ந்து இயைந்து ஒலிப்பது சாரியையாகும். இது மொழிச் சாரியை, எழுத்துச் சாரியை என்று இரண்டு வகைப்படும். மொழிச்சாரியை 'அன், ஆன்' முதலியனவாகும். இதை நன்னூல் சூத்திரம் 244 கூறுகின்றது. இப்பகுதியில் எழுத்துச் சாரியைகள் பற்றிய செய்திகள் இடம் பெறுகின்றன.

தனி மெய்கள் அ என்னும் சாரியையும், உயிர் நெடில்கள் காரம் என்னும் சாரியையும் ஐ, ஔ – காரம், கான் என்னும் சாரியையும் உயிர்க்குறில், உயிர்மெய்க்குறில் என்பவை காரம், கான், கரம் என்னும் சாரியைகளையும் பெறும்.

மெய்க ளகரமும் நெட்டுயிர் காரமும்

ஐயெனக் கானு மிருமைக் குறிலிவ்

விரண்டொடு கரமுமாஞ் சாரியை பெறும் பிற. நூற்பா 126

(எ.டு) க. ங, ச – மெய்கள் அகரச்சாரியை பெற்று ஒலிக்கின்றன.

ஆகாரம், ஈகாரம் – உயிர் நெடில்கள்

ஐகாரம், ஐகான்

ஔகாரம், ஔகான் – ஐ, ஔ இரண்டும் காரம், கான் என்னும் சாரியைகளைப் பெற்றன.

அகாரம், கான், அகரம் – உயிர்க் குற்றெழுத்துக்கள் காரம், கான், கரம் சாரியைகளைப் பெற்றன.

மகாரம், மஃகான், மகரம் – உயிர்மெய்க் குற்றெழுத்துக்கள் காரம், கான், கரம் சாரியைகளைப் பெற்றன.

உயிர்மெய் நெடில்கள் – சாரியைப் பெறாது.

எழுத்தியல் – புறனடை

எழுத்தின் இலக்கணத்தை நன்னூல் சூத்திரம் 57இல் 12 பிரிவுகளாகப் பிரித்து, அவற்றுள் எழுத்தின் அகத்திலக்கணமாகிய முதல் பத்தையும் எழுத்தியலில் கூறி முடித்த பவணந்தியார் இவ்வியலின் இறுதிச் சூத்திரத்தைப் புறனடைச் சூத்திரமாக அமைத்துள்ளார்.

எழுத்துக்கள் சொல்லாக அமையினும், அச்சொல் தொடர்ந்து நிலைமொழி, வருமொழியில் வந்தாலும் முன்னர்க் கூறப்பட்ட எழுத்துக்குரிய பத்து இலக்கணங்களையும் பெற்று வரும்.

"மொழியாய்த் தொடரினும் முன்னனைந்து எழுத்தே." நூற்பா 127

II. தன்மதிப்பீட்டு வினாக்கள்

1. உயிரெழுத்துக்கள் பன்னிரண்டும் மொழிக்கு முதலில் வரும். சரியா? தவறா?

2. மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்களின் நூற்பாவினைக் குறிப்பிடுக.

3. உடனிலை மெய்ம் மயக்கத்திற்கு உட்படாத எழுத்துக்களைக் குறிப்பிடுக.

4. ய், வ் – இவ்வெழுத்துக்களை எப்பெயரிட்டு அழைப்பர்?

தொகுப்புரை

இவ்வியலின் முதல் பகுதியில் எழுத்தின் அகத்திலக்கணமாகிய எண், பெயர், முறை, பிறப்பு, உருவம், மாத்திரை, மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள், இடையில் வரும் எழுத்துக்கள், இறுதியில் வரும் எழுத்துக்கள் என்னும் பத்துத் தலைப்புகளில் செய்திகள் கூறப்பட்டன.

இதில் எண் என்னும் முதற்பகுதியில் எழுத்தின் இலக்கணமும், சார்பு எழுத்துக்களின் வகைகளும், சார்பெழுத்தின் விரியும் முறையே விளக்கமாகப் பவணந்தியார் கூறியுள்ளமையை அறிந்து கொண்டோம்.

பெயர் என்னும் இரண்டாம் தலைப்பில் எழுத்துக்களின் பெயர்களும், அவ்வெழுத்துகளுக்குரிய இனவெழுத்துக்களும் முறையே கூறப்பட்டன. இதனைத் தொடர்ந்து எழுத்துக்களின் முறையும், எழுத்துக்களின் பிறப்பிடமும், பிறப்பு முயற்சியும் முறையே கூறப்பெற்றுள்ளன. மேலும் சார்பெழுத்துக்கள் பற்றிய செய்திகளும் இப்பகுதியில் தெளிவாகக் கூறப்பட்டன.

எழுத்துக்களின் உருவம் பற்றிய செய்திகளும், எழுத்துக்களின் ஒலி அளவான மாத்திரை பற்றிய செய்திகளையும் முறையே அறிந்து கொள்ள முடிந்தது.

இவ்வியலின் இறுதியில் மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள், இறுதி நிலையில் வரும் எழுத்துக்கள், இடைநிலை மயக்கம் பற்றிய செய்திகளையும் முறையே அறிந்து கொண்டோம்.

அகத்திலக்கணத்தில் பத்தாம் உறுப்பாகிய போலி என்னும் பகுதியில் முதல், இடை, கடை என்னும் இடங்களில் அமைந்த போலியினையும் சந்தியக்கரம் பற்றிய செய்திகளையும், எழுத்தின் சாரியைகள் பற்றிய செய்திகளையும் ஒருசேர இவ்வியலில் அறிய முடிந்தது.

பயிற்சி வினாக்கள்

சிறு வினாக்கள்

1. எழுத்தின் இலக்கணம் யாது?

2. எழுத்துக்களின் வகைகளைக் குறிப்பிடுக.

3. மெய்யெழுத்துக்களின் மூவகை இனங்கள் யாவை?

4. உயிர்மெய் குறித்து எழுதுக.

5. முற்றாய்தம் – வரையறுக்க.

6. எழுத்துக்களின் உருவம் பற்றி எழுதுக.

7. மாத்திரையின் இலக்கணம் யாது?

8. உடனிலை மெய்ம்மயக்கம் என்றால் என்ன?

9. சந்தியக்கரம் குறித்து எழுதுக.

10. செய்யுளில் ஈறொற்றாய் நிற்கும் எழுத்துக்கள் யாவை?

11. மொழியிறுதிப் போலி குறித்துப் பவணந்தியார் கூறுவன யாவை?

12. எழுத்தின் சாரியைகள் யாவை?

குறு வினாக்கள்

1. சார்பெழுத்துக்கள் குறித்துப் பவணந்தியார் கூறுவன யாவை?

2. எழுத்துக்களின் பிறப்பு பற்றிய பொது இலக்கணத்தைக் குறிப்பிடுக.

3. உயிரளபெடை, ஒற்றளபெடை விளக்குக.

4. மகரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம் – வரையறுக்க.

5. 'எய்தும் எகர ஒகரம் மெய்ப்புள்ளி' – விளக்குக.

6. போலி குறித்துப் பவணந்தியார் கூறும் செய்திகள் யாவை?

பெரு வினாக்கள்

1. முதலெழுத்துக்களின் பிறப்பு முயற்சி குறித்துப் பவணந்தியார் கூறுவன யாவை?

2. மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள், இறுதியில் வரும் எழுத்துக்கள் ஆகியவற்றை எடுத்துக் காட்டுகளுடன் விளக்குக.

3. இடைநிலை மெய்ம்மயக்கம் குறித்து பவணந்தியார் கூறும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

I. தன்மதிப்பீட்டு விடைகள்

1. எண், பெயர் பிறப்பு உருவம், மாத்திரை முதனிலை, இறுதிநிலை, இடைநிலை மயக்கம் போலி, பதம், புணர்ச்சி

2. 2. முதலெழுத்து, சார்பெழுத்து.

3. சரி.

4. இ, உ

5. உ, ஊ, ஒ, ஓ, ஔ.

6. 2. உயிரளபெடை, ஒற்றளபெடை.

7. சரி.

8. எழுத்துக்களின் ஒலி அளவு.

II.

9. சரி.

10. ஆவி ஞணநமன யரலவழள மெய்
சாயு முகரநாலாறு மீறே.

11. ர, ழ.

12. சந்தியக்கரம்.

2.2.2 பதவியல்

2.2.2.1 பதம் – வரையறையும் பாகுபாடும் – நூற்பா 128 முதல் 130 வரை.

2.2.2.2 பகாப்பதமும் பகுபதமும் – நூற்பா 131 முதல் 132 வரை.

2.2.2.3 பகுபத உறுப்புக்கள் – நூற்பா 133 முதல் 134 வரை.

2.2.2.4 பகுதியும் விகுதியும் – நூற்பா 135 முதல் 140 வரை.

2.2.2.5 இடைநிலையும் காலம் காட்டும் விகுதியும் – நூற்பா 141 முதல் 145 வரை.

2.2.2.6 வடமொழியாக்கம் – நூற்பா 146 முதல் 150 வரை.

தன்மதிப்பீட்டு வினாக்கள்

தொகுப்புரை

பயிற்சி வினாக்கள்

மேலும் படிக்க வேண்டிய நூல்கள்

தன்மதிப்பீட்டு விடைகள்

நன்னூல் எழுத்ததிகாரத்தில் இரண்டாவது இயலாக உள்ளது பதவியலாகும். இப்பகுதியில் புறவிலக் கணமாகிய பதம், புணர்ப்பு என்னும் இரண்டு பிரிவில் முதல் நிலையாகிய பதங்களின் இயல்பு உணர்த்துவதால் பதவியல் எனப் பெயர் பெற்றது.

இவ்வியலில் நன்னூல் நூற்பா 128 முதல் 150 வரை 23 நூற்பாக்களில் பதவியல் பற்றிய செய்திகளைப் பவணந்தியார் முறையே கூறியுள்ளார்.

2.2.2.1 பதம் – வரையறையும் பாகுபாடும்

ஓர் எழுத்து தனித்து நின்றோ, இரண்டு முதலாகப் பல எழுத்துக்களில் தொடர்ந்து நின்றோ பிற பொருளைத் தருமாயின் அதனைப் பதம் என்பர். இப்பதம் பகுபதம், பகாப்பதம் என்று இரண்டு வகைப்படும்.

எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின்

பதமாம் அது பகாப் பதம் பகுபதம் என

இரு பாலாகி இயலும் என்ப. நூற்பா 128

(எ.டு) ஆ, ஈ முதலியவை ஓர் எழுத்தாகவும் முறையே பசு, பறக்கும் உயிர் இனம் என்று பொருள் உணர்த்தியமையால் இவை ஓரெழுத்து ஒரு மொழியாகும்.

நாடு, மூன்று, சக்கரம் முதலியவை தொடரெழுத்து ஒரு மொழிகளாகும்.

ஓரெழுத்து ஒருமொழி

பதங்களில் முதல் வகை ஓரெழுத்து ஒரு மொழியாகும். ஓரெழுத்து ஒரு மொழிகளில் சிறப்பான 42 பதங்களைப் பவணந்தியார் பட்டியலிடுகிறார்.

1. நெடில் உயிர்கள் – 6

ஆ (பசு), ஈ (பறக்கும் உயிரினம்), ஊ (இறைச்சி), ஏ (அம்பு), ஐ (தலைமை), ஓ (மதகுப் பலகை).

2. மகர வருக்க நெடில்கள் – 6

மா (மரவகை), மீ (மேல்), மூ (மூத்த), மே (மேவு), மை (கருமை), மோ (மோந்துயர்)

3. தகர வருக்க நெடில்கள் – 5

தா (கொடு), தீ (நெருப்பு), தூ (தூய), தே (தேயம்), தை (துணிகை)

4. பகர வருக்க நெடில்கள் – 5

பா (பாட்டு), பூ (மலர்), பே (நுனி), பை (கைப்பை), போ (செல்)

5. நகர வருக்க நெடில்கள் – 5

நா (நாக்கு), நீ (முன்னிலையில் உள்ளவரைக் குறிப்பது), நே (நேயம்), நை (நைந்து போ), நோ (நோய் உறு)

6. ககர வருக்க நெடில்கள் – 4

கா (காப்பாற்று), கூ (உலகம்), கை, கோ (அரசன்)

7. வகர வருக்க நெடில்கள் – 4

வா, வீ (மலர்), வை, வெள (கவர்ந்து கொள்)

8. சகர வருக்க மெய்கள் – 4

சா (செத்துப்போ), சீ (கிளறு), சே (எருது), சோ (அரண்)

9. யகர வருக்க நெடில் – 1

யா (யாவை)

10. நொ என்ற உயிர்மெய்க் குறில் – 1

நொ (துன்புறு)

11. து என்ற உயிர்மெய்க் குறில் – 1

து (உண்)

உயிர்மவில் ஆறும் தபநவில் ஐந்தும்

கவசவில் நாலும் யவ்வில் ஒன்றும்

ஆகும் நெடில்நொது ஆங்குறில் இரண்டொடு

ஓரெழுத்து இயல்பதம் ஆறேழ் சிறப்பன. நூற்பா 129

மேலே குறிப்பிட்டவை சிறப்புடைய ஓரெழுத்து ஒரு மொழிகளாகும். சிறப்பில்லாத ஓரெழுத்து மொழிகள் சிலவும் உள்ளன. அவை கெள (கெளவிக் கொள்ளுதல்), பீ முதலியன.

தொடரெழுத்து ஒரு மொழிகள்

தொடரெழுத்து ஒருமொழி, பகாப்பதம், பகுபதம் என்னும் இரண்டு நிலைகளில் அமையும். இவற்றுள் பகாப்பதமெனில் இரண்டு எழுத்து முதல் ஏழு எழுத்து வரையும், பகுபதமெனில் இரண்டு எழுத்து முதல் ஒன்பது எழுத்து வரையும் வரும் தன்மையதாகும்.

பகாப்பதம் ஏழும் பகுபதம் ஒன்பதும்

எழுத்து ஈறாகத் தொடரு மென்ப. நூற்பா 130

பகாப்பதம் – அணி, அறம், அகலம், அணிச்சம், தருப்பணம், உத்திரட்டாதி (நட்சத்திரம்).

பகுபதம் – கூனி, கூனன், குழையன், பொருப்பன், அம்பலவன், அரங்கத்தான்.

உத்திராடத்தான் (உத்திராட நட்சத்திரத்தில் பிறந்தவன்)

உத்திராட்டாதியான் (உத்திராட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தவன்).

2.2.2.2 பகாப்பதமும் பகுபதமும்

பகுபதத்தின் முதல் உறுப்பு பகாப்பதமாகும். பகாப்பதத்தைப் பிரித்தால் வெறும் ஒலி எழுத்து கிடைக்குமே அன்றி, அப்பகுப்பால் பகுதி, விகுதி முதலிய உறுப்பின் பயன் விளையாமல் காரணமின்றி இடப்பட்ட குறியாகி, பெயர், வினை, இடை, உரி என்னும் சொல்லிலும் பகாப்பதங்கள் அமையும்.

பகுப்பாற் பயனற் றிடுகுறி யாகி

முன்னே யொன்றாய் முடிந்தியல் கின்ற

பெயர்வினை யிடையுரி நான்கும் பகாப்பதம். நூற்பா 131

நிலம் – நீர் – பெயர்ப் பகாப்பதம்

நட, வா – வினைப் பகாப்பதம்

மண், கொல் – இடைப் பகாப்பதம்

உறி, கழி – உரி பகாப்பதம்

பகுபதம்

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகியவற்றின் காரணமாக வருகின்ற பெயர்ச் சொற்கள் தெரிநிலையாகவும் குறிப்பாகவும் காலத்தைக் கொள்ளும் வினைச் சொற்களும் பகுபதங்களாகும்.

பொருளிடங் காலஞ் சினைகுணந் தொழிலின்

வருபெயர் பொழுதுகொள் வினைபகு பதமே. நூற்பா 132

பொன்னன் – பொருட்பெயர் அகத்தன் – இடப்பெயர்

ஆதிரையன் – காலப்பெயர் கண்ணன் – சினைப்பெயர்

கரியன் – குணப்பெயர் ஊணன் – தொழிற்பெயர்

நடந்தான், நடக்கின்றான், நடப்பான் என்பன உடன்பாட்டுத் தெரிநிலை வினைமுற்று பகுபதங்களாகும். நடந்திலன், நடக்கின்றிலன், நடவான் என்பன எதிர்மறைத் தெரிநிலை வினைமுற்றுப் பகுபதங்களாகும்.

பொன்னன், ஊணன், அற்று, இற்று, எற்று முதலியவை உடன்பாட்டுக் குறிப்பு வினைமுற்றுப் பகுபதங்களாகும்.

அல்லன், இல்லன், அன்று, இன்று என்பன எதிர்மறைக் குறிப்பு வினைமுற்றுப் பகுபதங்களாகும். இவை போன்றே பிற வினைச்சொற்களுக்கும் எடுத்துக்காட்டுகளை நன்னூல் மூல நூலில் கண்டு கொள்ளுதல் வேண்டும்.

2.2.2.3 பகுபத உறுப்புகள்

பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்னும் உறுப்புக்களாகப் பிரியும் தன்மையது. பிரித்தால் ஒவ்வோர் உறுப்பும் பொருள் பயனைத் தருவதாகும். இப்பகுபதங்கள் பெயர், வினை என்னும் இரண்டு அடிப்படையில் அமையும்.

பகுதி விகுதி இடைநிலை சாரியை

சந்தி விகாரம் ஆறினும் ஏற்பவை

முன்னிப் புணர்ப்ப முடியும்எப் பதங்களும்.

என்னும் நூற்பா (133) பகுபத உறுப்புக்களைப் பற்றிக் கூறுகின்றது.

(எ.டு)

கூனி – கூன் + இ – பகுதி, விகுதி.

உண்டான் – உண்+ட்+ஆன் – பகுதி, இடைநிலை, விகுதி.

உண்டனன் – உண்+ட்+அன்+அன் – பகுதி, இடைநிலை, சாரியை, விகுதி.

படித்தனன் – படி+த்+த்+அன்+அன் – பகுதி, சந்தி, இடைநிலை, சாரியை, விகுதி.

நடந்தனன் – நட+த்(ந்)+த்+அன்+அன் – பகுதி, சந்தி, சந்தியால் வந்த விகாரம், இடைநிலை, சாரியை, விகுதி.

### 2.2.2.4 பகுதியும் விகுதியும்

1. பகுதி

பகுபத உறுப்புக்கள் ஆறினுள் பகுதி, விகுதி, இடைநிலை என்னும் மூன்றையும் பதவியலில் விளக்குகின்றார். மற்ற மூன்றாகிய சாரியை, சந்தி, விகாரம் ஆகியவற்றைப் புணரியலில் கூறுகின்றார்.

பெயர்ப் பகுபதம், வினைப் பகுபதம் ஆகியவற்றில் முதலில் நிற்கும் பகாப்பதங்களே பகுதிகளாகும்.

தத்தம்,

பகாப்ப தங்களே பகுதி யாகும். நூற்பா 134

இப்பகுதி பெயர்ச்சொல்லாயின் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் அறுவகைப் பெயர்ச்சொற்களில் ஒன்றாகவும், வினைச் சொல்லாயின் விகுதி பெறாத ஏவல் வினையாகவும் அமையும். சில பெயர்ப் பகுபதங்களில் சிறுபான்மை இடைச்சொற்களும் வரும்.

பெயர்ப் பகுபதம்

பொன்னன் – பொன்+அன்+அன் – பொருள்

வெற்பன் – வெற்பு+அன் – இடம்

ஆதிரையன் – ஆதிரை+ய்+அன் – காலம்

கண்ணன் – கண்+அன் – சினை

கரியன் – கரி+அன் – பண்பு

சொல்லன் – சொல்+அன் – தொழில்

வினைப் பகுபதம்

செல்கிறான் – செல்+கிறு+ஆன் – ஏவல்

படிக்கின்றான் – படி+கின்று+ஆன் – ஏவல்

உண்டான் – உண்+ட்+ஆன்

சென்றான் – செல்+ற்+ஆன்

அவன், எவன் – இப்பெயர்ப் பகுபதங்களில் அ, எ என்னும் இடைச்சொற்கள் பகுதிகள் ஆயின.

பண்புப் பகுதிகள்

பகுதிகளின் பண்பை உணர்த்தும் பண்புப் பகுதிகள் சிறப்புத்தன்மை வாய்ந்தவை. எனவே அவற்றைப்

பற்றி நன்னூல் சிறப்பு விதி கூறுகின்றது.

செம்மை முதலாகக் கூறப்பட்ட பதினொன்றும் இவற்றுக்கு எதிர்மறையாய் வருகின்ற வெண்மை, கருமை முதலியவைகளும் இவை போன்றன பிறவும் பண்புப் பொருளில் இருந்து வேறுபொருள் பகுக்க இயலாத தன்மை வாய்ந்த பதங்களாகும்.

செம்மை சிறுமை சேய்மை தீமை

வெம்மை புதுமை மென்மை மேன்மை

திண்மை உண்மை நுண்மை இவற்றுஎதிர்

இன்னவும் பண்பின் பகாநிலைப் பதமே. நூற்பா 135

இச்சூத்திரத்திற்குப் பவணந்தியார் 11 மையீற்றுப் பண்புப் பெயர்களைக் குறிப்பிடுகின்றார். அவற்றுக்கு எதிர்ச்சொற்களும் மையீற்றுப் பண்புப் பெயர்களாகும். சான்றாக, செம்மை என்ற நிறப் பண்புப் பெயருக்கு வெண்மை, கருமை, பொன்மை, பசுமை என்னும் வெவ்வேறு பண்புப் பெயர்கள் எதிர்ச்சொற்களாகும். அதுபோல் சிறுமைக்குப் பெருமையும் சேய்மைக்கு அண்மையும், தீமைக்கு நன்மையும் வெம்மைக்குத் தண்மையும், புதுமைக்குப் பழமையும், மென்மைக்கு வன்மையும், மேன்மைக்குக் கீழ்மையும், திண்மைக்குத் தொய்மையும், உண்மைக்கு இன்மையும், நுண்மைக்குப் பருமையும் எதிர்ச்சொற்களாகும்.

இந்நூற்பாவில் இன்னவும் என்றதனால் அருமை, இளமை முதலிய பண்புப் பெயர்களும் கொள்ளப்படும். இவையனைத்தும் சொல் நிலையால் பகுபதங்கள். ஆனால் பண்பாகிய பொருளை உணர்த்தும் நிலையில் பகாப்பதம் எனப்படும்.

இங்குப் பண்புப் பகாப்பதம் என்று கூறாமல் பண்பிற் பகாநிலைப் பதம் என்று கூறியது சொற்பொருள் விரித்தல் என்னும் உத்தியாகும்.

மையீற்றுப் பண்புப் பெயர்களின் இயல்புகள்

மையீற்றுப் பண்புப் பெயர்கள் விகுதி முதலியவற்றோடும் வேறு பதங்களோடும் சேரும் போது சில இயல்புகளைப் பெறும்.

ஈறுபோதல் இடையுகரம் இய்யாதல்

ஆதிநீடல் அடிஅகரம் ஐயாதல்

தன்ஒற்று இரட்டல் முன்நின்ற மெய்திரிதல்

இனம்மிகல் இன்னபிறவும் பண்பிற்கு இயல்பே. நூற்பா 136

1. ஈறு போதல் – நல்லன் (நன்மை+அன்) – ஈற்றில் உள்ள மை விகுதி கெடல்.

2. இடை உகரம் இய்யாதல் – இடையில் நின்ற உகரம் இகரமாதல். கரியன் (கருமை+ய்+அன்).

3. ஆதிநீடல் – முதலில் உள்ள குற்றெழுத்து நெட்டெழுத்தாக மாறுதல். பசி (பசுமை+இ) – இதில் மை விகுதி கெட்டது. இடைநின்ற உகரம் இகரமாகி, முதலெழுத்து நீண்டது.

4. அடி அகரம் ஐயாதல் – பைந்தார் (பசுமை+தார்) – பசுமை என்பதால் மை விகுதியும் இடை நின்ற உயிர்மெய்யும் கெட்டு வரும் எழுத்திற்கு இனவெழுத்து மிகுந்தது. முதலில் இருந்த அகரம் ஐகாரமாயிற்று.

5. தன்ஒற்று இரட்டல் – வெற்றிலை (வெற்று+இலை) – வெறுமை என்பதில் மை விகுதி கெட்டு, தன் ஒற்று இரட்டியது.

6. முன்நின்ற மெய் திரிதல் – சேதாம்பல் (செம்மை+ஆம்பல்) – இச்சொல்லில் மை விகுதி கெட்டு, முதல் நீண்டு முன்னின்ற மகர மெய் தகர மெய்யாகத் திரிந்தது.

7. இனம் மிகல் – வரும் எழுத்திற்கு இனமாகிய எழுத்து மிகுதல். பைங்கண் (பசுமை+கண்). இதில் மை விகுதி கெட்டு, இடை மறைந்து இனமாகிய எழுத்து மிகுந்தது.

மேற்கூறிய விதிகள் செம்மை, சிறுமை முதலாக எடுத்துக்காட்டிய சொற்களுக்கே உரியன. எனவே, இது எடுத்த மொழியின் எய்த வைத்தல் என்னும் உத்தியாகும்.

தெரிநிலை வினைப்பகுதிகள்

நட, வா, மடி, சீ, விடு, கூ, வே, வை, நொ, போ, வெள, உரிஞ், உண், பொருந், திரும், தின், தேய், பார், செல், வவ், வாழ், கேள், அஃகு என்று முதனிலையாக அமைகின்ற இருபத்து மூன்று ஈறுகளை உடைய இச்சொற்கள் செய் என்னும் ஏவலினது பகாப்பதமாகிய பகுதியும் ஏனை வினைப்பகாப்பதங்களாகிய பகுதியும் ஆகும்.

நடவா மடிசீ விடுகூ வேவை

நொப்போ வெளவுரி ஞுண்பொருந் திருந்தின்

தேய்பார் செல்வவ் வாழ்கே ளஃகென்

றெற்திய விருபான் மூன்றா மீற்றவும்

செய்யெ னேவல் வினைப்பகாப் பதமே. நூற்பா 137

இவ்வாறு 23 வாய்பாடுகளால் கூறப்படும் சொற்கள் பொது வாய்பாடு ஒன்றில் அடங்கும் என்பதற்காக முடிந்தது முடித்தல் என்னும் உத்தியால் செய் எனக் கூறினார்.

மேற்காட்டிய சொற்கள் செய் என்னும் ஏவல் பகாப்பதத்திற்கும், செய் என்னும் வினைப் பகாப்பதத்திற்கும் உரியன ஆகும்.

இச்சொற்கள் ஏவற்பொருள் உணர்த்தும்போது ஆய் விகுதியோடு சேர்ந்தே உணர்த்தும்.

(எ.டு) நடவாய், வாராய், உண்ணாய், பாராய், அஃகாய், உண்மின், தின்மின் என வரும்.

செய் என்னும் ஏனை வினையோடு வரும்போது விகுதிகள் பெற்று வரும்.

(எ.டு) நடந்தான், வந்தான், மடிந்தான், சீத்தான், விட்டான், கூவினான், வெந்தான், வைத்தான், நொந்தான், போயினான், வெளவினான், உரிஞ்னான், உண்டான், பொருநினான், திருடினான், தின்றான், தேய்த்தான், பார்த்தான், சென்றான், வவ்வினான், வாழ்ந்தான், கேட்டான், அஃகினான்.

தெரிநிலை வினைப் பகுதிகள் விகுதியுடன் புணரும்போது நடந்தான், மடிந்தான் என இயல்பாக வரும். இனி, இப்பகுதிகள் பின்வருமாறு பலவகையாக விகாரப்பட்டு வரும்.

(எ.டு)

செல் – சேறல் – முதல் நீண்டது.

தா – தந்தான் – தனிநெடில் குறுகியது.

சா – செத்தான் – முதலில் உள்ள ஆகாரம், எகரம் ஆகியது.

கொணா – கொணர்ந்தான் – முதல் அயலெழுத்துக் குறுகி ரகரமெய் விரிந்தது.

விரவு – விராவினான் – இடையிலுள்ள குறில் நீண்டது.

இனி, கா, சா, தா என்பன போன்ற ஒரே அமைப்புடைய பகுதிகள், விகுதிகளுடன் புணரும் போது பலவிதமாக விகாரப்படும்.

(எ.டு) காத்தான், செத்தான், தந்தான்.

தெரிநிலை வினைப்பகுபதங்களுக்கு வினைச் சொற்களேயன்றிச் சிறுபான்மை பெயர்ச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என்பனவும் பகுதிகளாக வரும்.

(எ.டு)

சித்திரித்தான் என்பதில் சித்திரம் என்னும் பெயர்ச்சொல்லே பகுதி.

பொன் போன்றான் என்பதில் போல் என்னும் இடைச்சொல்லே பகுதி.

சான்றான் என்பதில் சால் என்னும் உரிச்சொல்லே பகுதி.

ஏவல் பகுதிக்குச் சிறப்பு விதி

ஏவல் பகுதிக்குச் சிறப்பு விதியினை நன்னூல் நூற்பா 138 கூறுகின்றது. செய் என்னும் ஏவல் ஒரு விகுதி பெற்று செய்வி என்றும், செய்வி என்பது மேலும் ஓர் ஏவல் பெற்றுச் செய்விப்பி என்றும் வரும். இவ்வாறு வரினும் அவைகள் பகுதிகளாய் நின்று விகுதிகளுடன் புணரும்.

செய்யென் வினைவழி விப்பி தனிவரிற்

செய்வியென் னேவ லிணையினீ ரேவல். நூற்பா 138

(எ.டு) நடப்பி, வருவி – பி, வி என்னும் விகுதிகள் செய் என்னும் ஏவலுடன் வந்தன.

நடப்பிப்பி, வருவிப்பி – பி, வி என்னும் விகுதிகள் செய்வி என்னும் ஏவலுடன் வந்தன.

மேலும், உரையிற்கோடல் என்னும் உத்தியில் கு, சு, டு, து, பு, று ஆகிய ஆறு விகுதிகளும் ஒன்றினைப் பெற்றும் சில பகுதிகள் விகாரப்பட்டும் வரும்.

(எ.டு) போ+கு = போக்கு, பாய்+சு = பாய்ச்சு, உருள்+டு = உருட்டு, நட+து = நடத்து, எழு+பு = எழுப்பு, துயில் + று = துயிற்று.

இயங்கு – இயக்கு, திருந்து – திருத்து என்பனவற்றில் மெல்லினம் வல்லினமாக விகாரப்பட்டு வந்தது.

வினைப் பகுதிகளுக்குப் புறனடை

ஏவல் பகுதி வேறுபடுவது போன்றே தெரிநிலை வினைப் பகுதிகளும் வேறுபடும். அதாவது, செய் என்னும் வினைப்பகுதி செய்வி, செய்விப்பி எனவும் வரும்.

(எ.டு) நடத்தினான் – நட என்னும் பகுதி நடத்து என்று வேறாகியது.

நடப்பித்தான் – நட என்னும் பகுதி நடப்பி என வேறாகியது.

நடத்துவிப்பித்தான் – நட என்னும் பகுதி நடத்துபு என்று வேறாகியது.

இங்கே நட என்னும் தன்வினைப் பகுதிகள் பிறவினைப் பகுதிகளாக வேறுபட்டன.

“விளம்பிய பகுதி வேறு ஆதலும் விதியே.” நூற்பா 139

விகுதி

பதமானது பகுபதம், பகாப்பதம் என்று இரு வகைப்படும். இப்பதம் பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம் ஆகிய ஆறு உறுப்புகளைப் பெற்று வரும் என்று கண்டோம். இவ்வாறு பகுபத உறுப்புக் களில் பகுதி என்னும் இலக்கணத்தைக் கண்டோம். இப்பாடத்தில் விகுதி, இடைநிலை என்னும் இரண்டு உறுப்புக்களின் செய்திகளைப் பார்க்கலாம்.

பகுபதத்தில் ஈற்றில் நின்று திணை, பால், எண், இடம் ஆகியவற்றை உணர்த்தும் உறுப்பு விகுதியாகும். இது சொல்லின் இறுதியில் உள்ள பகுதியாகும். இதனை இறுதிநிலை என்றும் அழைப்பர்.

(எ.டு) மொழிந்தனன் – மொழி+த்+த்+அன்+அன். இச்சொற் பகுப்பில் இறதியில் உள்ள அன் என்பது விகுதி யாகும். நன்னூல் நூற்பா 140 விகுதிகளின் வருகைப்பாடுகளை எடுத்துரைக்கிறது.

வினை விகுதிகள்

அன், ஆன் – ஆண்பால் படர்க்கை வினைமுற்று விகுதிகள். (நடந்தனன், நடந்தான்).

அள், ஆள் – பெண்பால் படர்க்கை வினைமுற்று விகுதிகள். ((நடந்தனள், நடந்தாள்).

அர், ஆர், ப, மார் – பலர்பால் படர்க்கை வினைமுற்று விகுதிகள். (நடந்தனர், நடந்தார், நடப்ப, நடமார்)

கு, டு, து, று, என், ஏன், அல், அன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதிகள்.

நடக்கு (நடப்பேன்), உண்டு (உண்டேன்), நடந்து (நடந்தேன்), சேறு (செல்வேன்), நடந்தென், நடந்தேன், நடப்பல் (நடப்பேன்), நடப்பன் (நடப்பேன்).

து, று, டு – ஒன்றன்பால் படர்க்கை வினைமுற்று விகுதிகள். (நடந்தது, கூயிற்று, குண்டுகட்டு)

அம், ஆம், எம், ஏம், ஓம், கும், டும், றும் – தன்மைப் பன்மை வினைமுற்று விகுதிகள்.

நடப்பன், நடப்பாம், நடப்பெம், நடப்பேம், நடப்போம், நடக்கும், உண்டும் (உண்டோம்), நடந்தும் (நடந்தோம்), சேறும் – செல்வோம்.

ஐ, ஆய், இ – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிகள்.

நடந்தனை, நடந்தாய், நடத்தி.

மின், இர், ஈர் – முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதிகள். (நடமின், நடந்தனிர், நடந்தீர்.)

ஈயர், க, ய – வியங்கோள் வினைமுற்று விகுதிகள். (நிலீயர், நடக்க வாழிய).

உம் – செய்யும் என்னும் வாய்ப்பாட்டு வினைமுற்று விகுதி. (நடக்கும்)

அன் ஆன் அள் ஆள் அர் ஆர் பம் மார்

அ ஆ குடு துறு என் ஏன் அல் அன்

அம் ஆம் எம் ஏம் ஓமொடு உம் ஊர்

கடதற ஐ ஆய் இம்மின் இர் ஈர்

ஈயர் க யவும் என்பனவும் பிறவும்

வினையின் விகுதி பெயரினும் சிலவே. நூற்பா 140

மேற்கூறிய சூத்திரத்தில் பெயரினும் சில என்றதனால் மேற்கூறிய விகுதிகளுள் சில, பெயருக்கும் விகுதியாக வரும் தன்மையதாகும். அவ்விகுதிகளும் எடுத்துக்காட்டுகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

அன், ஆன் – குழையன், குழையான்

அள், ஆள் – குழையள், குழையாள்

அர், ஆர் – குழையர், குழையார்

மார் – தேவிமார்

அ – குழையன், து – யாது, இ – பொன்னி, மன் – வடமன், மான் – கோமான், கள் – கோக்கள், வை – அவை, தை – எந்தை, கை – எங்கை, பி – எம்பி, முன் – எம்முன், அல் – தோன்றல், ன் – பிறன், ள் –பிறள், ர் – பிறர், வ – அவ்.

மேற்கூறிய விகுதிகளுள் அடங்கியும் அடங்காதும் வரும் விகுதிகளும் உண்டு. இவற்றை ‘வினையின் விகுதி பெயரினும் சிலவே’ என்பதாலும், ‘பிறவும்’ என்பதனாலும் அறியலாம்.

தெரிநிலை வினைப்பெயரெச்ச விகுதிகள். அ, உம் என்பனவாகும். (செய்த, செய்கின்ற, செய்யும்.)

குறிப்பு வினைப் பெயரெச்ச விகுதி. அ என்பதாகும். (பெரிய)

இது போன்று தெரிநிலை வினையெச்ச விகுதிகள், குறிப்பு வினையெச்ச விகுதிகள், தொழிற்பெயர் விகுதிகள், பண்புப்பெயர் விகுதிகள் முதலியவற்றை மேற்கூறிய நூற்பாவின் இறுதி அடியின் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

### 2.2.2.5 இடைநிலையும் காலம்காட்டும் விகுதியும்

பகுதிக்கும் விகுதிக்கும் இடைப்பட்ட உறுப்பு இடைநிலையாகும். பகுபத உறுப்புகளில் பகுதி, விகுதி தவிர மற்ற நான்கும் இடையில் நிற்பனவே எனினும் அந்நான்கில் சாரியை, சந்தி, விகாரம் ஆகிய மூன்றையும்

பின்னர் விளக்குகின்ற காரணத்தால் எஞ்சிய ஒன்றினையே இங்கு இடைநிலை என்று அழைப்பர். இவ் இடைநிலை பெயரிடை நிலை, வினையிடை நிலை என்று இரு வகைப்படும்.

இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பலின்

பகுதி விகுதி பகுத்து இடைநின்றதை

வினைப்பெயர் அல்பெயருக்கு இடைநிலை எனவே. நூற்பா 141

இலக்கியம் கண்டதற்கே இலக்கணம். எனவே, பெயர், இடைநிலைகளை அறிய பெயர்ப் பகுபதங்களிலிருந்து முன்கூறிய பகுதி, விகுதி ஆகிய இரண்டையும் பிரித்துவிட்டால், அவற்றுக்கு இடையில் எஞ்சி நிற்பது எதுவோ, அதுவே பெயர் இடைநிலையாகும்.

அறிஞன் – அறி+ஞ்+அன் – ஞ் இடைநிலை

பாடுவான் – பாடு+வ்+ஆன் – வ் இடைநிலை

வலைச்சி – வலை+ச்+இ – ச் இடைநிலை

மலையாட்டி – மலையாள்+த்+இ – த் இடைநிலை

வினையிடை நிலைகள்

வினையிடை நிலைகள் மூன்று காலங்களிலும் அமைவது. நன்னூல் நூற்பா 142 முதல் 144 வரை பவணந்தியார் இவ்வினையிடைநிலைகள் பற்றிய செய்திகளைக் கூறுகின்றனர்.

இறந்த கால வினையிடை நிலை

பகுபதங்களில் இறந்த காலத்தைக் காட்டும் இடைநிலைகளுக்கு இறந்த கால இடைநிலை என்று பெயர். த், ட், ற் என்னும் மெய்களும் இன் என்பதும் ஐந்து பால்கள், மூன்று இடங்களிலும் இறந்த காலத்தைக் காட்டுகின்ற வினைப் பகுதிகளின் இடைநிலைகளாகும்.

(எ.டு) நடந்தான் – நட+(ந்)+த்+ஆன்

உண்டான் – உண்+ட்+ஆன்

சென்றான் – சென்+ற்+ஆன்

உறங்கினான் – உறங்கு+இன்+ஆன்

இவ்வெடுத்துக்காட்டுகளில் பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் உள்ள எழுத்துக்கள் இடைநிலைகளாகும்.

தடறவொற் றின்னே யைம்பான் மூவிடத்

திறந்த காலந் தருந்தொழி லிடைநிலை. நூற்பா 142

நிகழ்கால வினை இடைநிலை

ஆநின்று, கின்று, கிறு என்னும் மூன்றும் தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடத்தையும், ஆண், பெண், பலர், ஒன்று, பல என்னும் ஐந்து பாலையும் சேர்ந்த நிகழ்கால வினைப் பகுபதங்களுக்கு இடைநிலைகளாக அமையும்.

(எ.டு) நடக்கிறான் – நட+கிறு+ஆன்

செய்கின்றான் – செய்+கின்று+ஆன்

கூறாஆநின்றான் – கூறு+ஆநின்று+ஆன்

ஆநின்று நின்று கிறுமூ விடத்தின்

ஐம்பால் நிகழ்பொழுது அறைநனை இடைநிலை. நூற்பா 143

எதிர்கால இடைநிலை

பகுபதங்களில் எதிர்காலத்தைக் காட்டும் இடைநிலைகள் எதிர்கால இடைநிலைகளாகும். அவை, ப், வ் என்பனவாகும். இவ்விரு மெய்களும் மூன்று இடங்களில் ஐம்பால்களிலும் எதிர்காலத்தைக் காட்டுகின்ற வினைப் பகுபதங்களின் இடைநிலைகள் ஆகும்.

(எ.டு) நடப்பான் – நட+(ப்)+ப்+ஆன்

கூறுவான் – கூறு+வ்+ஆன்

பவ்வ மூவிடத் தைம்பா லெதிர்பொழு

திசைவினை யிடைநிலை யாமிவை சிலவில. நூற்பா 144

காலம் காட்டும் விகுதிகள்

பொதுவாக, தெரிநிலை வினைகளில் இடைநிலைகளே காலத்தினைக் காட்டும். ஆனால் சில தெரிநிலை வினைகளில் விகுதிகளே காலத்தைக் காட்டுகின்றன. இத்தகைய விகுதிகளைப் பவணந்தியார் நூற்பா 145இல் கூறுகின்றார்.

றவ்வொ டுகர வும்மைநிகழ் பல்லவுந்

தவ்வொ டிறப்பு மெதிர்வும் டவ்வொடு

கழிவுங் கவ்வோ டெதிர்வுமின் னேவல்

வியங்கோ ளிம்மா ரெதிர்வும் பாந்தஞ்

செலவொடு வரவுஞ் செய்யுநிகழ் பெதிர்வும்

எதிர்மறை மும்மையு மேற்கு மீங்கே. நூற்பா 145

1. றகர மெய்யுடன் சேர்ந்த உகரமும் உம்மையும் இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும் காட்டும். சென்று (சென்றேன்), சென்றும் (சென்றோம்), சேறு (செல்வேன்), சேறும் (செல்வோம்).

2. தகர மெய்யுடன் சேர்ந்த உகரமும் உம்மையும் இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும் காட்டும். வந்து (வந்தேன்), வந்தும் (வந்தோம்), வருது (வருவேன்), வருவது (வருவோம்).

3. டகர மெய்யுடன் சேர்ந்த உகரமும் உம்மையும் இறந்த காலத்தினைக் காட்டும். உண்டு (உண்டேன்), உண்டும் (உண்டோம்).

4. ககர மெய்யுடன் சேர்ந்த உகரமும் உம்மையும் எதிர்காலத்தைக் காட்டும். உண்கு (உண்பேன்), உண்கும் (உண்போம்).

5. மின், ஏவல், வியங்கோள், இ, மார் ஆகிய விகுதிகள் எதிர்காலத்தைக் காட்டும்.

உண்மின் – விகுதி.

உண்ணாய், உண் – ஏவல் விகுதிகள்.

உணர்க, வாழிய, வாழியர் – வியங்கோள் விகுதிகள்.

சேறி – இகர விகுதி

உண்மார் – மார் விகுதி

உண்ப (உண்டனர், உண்பார்கள்) – ப – விகுதி.

உண்ணும் (உண்கிறான், உண்பான் முதலியன) – செய்யும் என்னும் வாய்ப்பாட்டு வினைமுற்று.

உண்ணான் (மூன்று காலத்துக்கும் உரியது) – எதிர்மறை வினை.

இவற்றுள் இகர ஈறு தனித்து வராமல் ஏதேனும் ஒரு மெய்யினை ஊர்ந்து வரும். இவ்விகுதி சென்றி (செல்+ற்+இ), செல்லாநின்றி (செல்+ஆநின்று+இ என்று இறந்தகால, நிகழ்கால இடைநிலைகளுடன் சேர்ந்து வரும்போது அவ்விடைநிலைகள் காலம் காட்டலால் இவ்விகுதி காலம் காட்டாது.

நூற்பா 145இல் காலம் காட்டும் விகுதிகள் கூறப்பெற்றன. இவை மட்டுமன்றி பகுதிகளும் வேறு இடைநிலைகளும் காலம் காட்டுதல் உண்டு.

(எ.டு) புக்கான் – புகு+ஆன் – புகு என்னும் பகுதி இரட்டித்து இறந்தகாலம் காட்டியது.

தொட்டான் – தொடு+ஆன் – தொடு என்னும் பகுதி இரட்டித்து இறந்தகாலம் காட்டியது.

இடைநிலைகளில் ஆகிடந்து, ஆவிருந்து என்னும் இடைநிலைகள் நிகழ்காலத்தையும் இகின், ம், மன் என்னும் இடைநிலைகள் இறந்த காலத்தையும் காட்டும்.

(எ.டு) உண்ணாகிடந்தான், உண்ணாவிருந்தான், என்றிசினோர், என்மர், என்மனார்.

2.2.2.6 வடமொழியாக்கம்

சமஸ்கிருதத்திலும் பிற மொழிகளிலிருந்தும் வந்து வழங்கும் சொற்களில் தமிழ் எழுத்து அல்லாத எழுத்துக்கள் சமஸ்கிருதத்துக்கே சிறப்பாக உரிய எழுத்துக்கள் இருக்குமானால் அவற்றை ஏற்றவாறு தமிழ் எழுத்துக்களாக மாற்றிக் கொண்டு அச்சொற்களை ஓரளவிற்குப் பயன்படுத்தலாம் என்பது தொல்காப்பியர், பவணந்தியார் ஆகியோரின் கருத்தாகும்.

பவணந்தியார் வடமொழியாக்கம் பற்றிய செய்திகளை146 முதல் 149 வரை நான்கு நூற்பாக்களில் கூறியுள்ளார்.

ஆரிய மொழியில் ‘அச்’ என வழங்கும் உயிரெழுத்துக்கள் 16. இவற்றில் ஏழாம் உயிர் முதல் நான்கு எழுத்துக்களும் இறுதியில் நின்ற இரண்டெழுத்துக்களும் ஆகிய ஆறு எழுத்துக்கள் நீங்கலாக எஞ்சிய

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் பத்து எழுத்துக்களும் ஆரிய மொழியில் அல் என வழங்கும் மெய்யெழுத்துக்கள் 37. இவற்றில் க, ச, ட, த, ப என்னும் ஐந்து வர்க்கங்களில் முதலில் உள்ள க, ச, ட, த, ப என்னும் ஐந்தும் இறுதியில் உள்ள ங, ஞ, ண, ந, ம என்னும் ஐந்தும் யகரம் முதலாக உள்ள ய, ர, ல, வ என்னும் நான்கும் ‘ள’ என்னும் ஒன்றும் ஆகப் பதினைந்து எழுத்துக்களும் சேர்ந்து (உயிர் 10 + மெய் 15) 25 எழுத்துக்களும் தமிழுக்கும் ஆரியத்திற்கும் பொதுவெழுத்துக்களாகும். இவை தவிர எஞ்சிய ஆரியத்தி ல் அமைந்த உயிரெழுத்துக்கள் ஆறும் ஐந்து வர்க்கங்களுள் மெய்யெழுத்துக்கள் பதினைந்தும் ளகரம் நீங்கிய எழுத்துக்கள் ஏழும் ஆக 28 எழுத்துக்களும் ஆரியத்திற்கு உரிய சிறப்பெழுத்துக்கள். இவற்றைக் கொண்ட சொற்கள் தமிழில் வரும் போது அவ்வெழுத்துக்கள் தமிழுக்கு ஏற்ற பொது எழுத்துக்களாகத் திரிந்து வரும் என்பதை நூற்பா 146இல் குறிப்பிடுகின்றார்.

இடையி னான்கு மீற்றி லிரண்டும்

அல்லா வச்சை வருக்கமுத லீறு

யவ்வாதி நான்மை ளவ்வாகு மையைம்

பொதுவெழுத் தொழிந்தநா லேழுந் திரியும். நூற்பா 146

இவ் வடமொழியாக்கத்தை தற்சமம், தற்பவம் என்னும் இரு பிரிவில் அடக்குவர்.

ஆரியத்துக்கும் தமிழுக்கும் பொதுவெழுத்தால் ஆகித் தமிழில் இயல்பாக வந்து வழங்கும் வடமொழியைத் தற்சமம் என்பர். (எ.டு) அமலம், கமலம், குங்குமம் முதலியன.

ஆரியத்திற்கே உரிய சிறப்பெழுத்தாலும் ஆரியத்திற்கே உரிய பொதுவும் சிறப்புமாகிய ஈரெழுத்தாலும் ஆகித் திரிதல் முதலிய விகாரம் பெற்றுத் தமிழில் வந்து வழங்கும் வடமொழியைத் தற்பவம் என்பர்.

(எ.டு) சுகி, போகி, சுத்தி – இவை வடமொழிக்கே உரிய சிறப்பெழுத்துக்களால் ஆன சொற்கள். தமிழக்கு ஏற்றவாறு திரிந்தன.

அரன், செயல், ஞானம் – இவை பொது, சிறப்பு எழுத்துக்களால் ஆன சொற்கள். தமிழக்கு ஏற்பத் திரிந்தன

திரிந்து வரும் என்ற சிறப்பெழுத்துக்களுள் ஏழாம் உயிரெழுத்து ‘இகர’மாகவும் ‘இரு’ ஆகவும் திரியும். ஐந்து வருக்கங்களிலும் இடையில் நின்ற மும்மூன்று எழுத்துக்களும் அவ்வவ் வருக்கத்தின் முதலில் நின்ற எழுத் தாகத் திரியும். எட்டாம் மெய்யாகிய எழுத்து, மொழியின் இடையில் யகரமாகத் திரியும். முப்பதாம் மெய்யாகிய எழுத்து, மொழிக்கு முதலில் சகரமாகவும் மொழிக்கு இடையில் சகர யகரங்களுள் ஒன்றாகவும் திரியும். முப்பத்தொன்றாம் மெய்யெழுத்து மொழிக்கு முதலில் சகரமாகவும் மொழிக்கு இடையில் டகரமாகவும் திரியும். முப்பத்திரண்டாம் மெய், மொழிக்கு முதலில் சகரமாகவும், மொழிக்கு இடையில் சகர தகரங்களும் ஒன்றாகவும் திரியும். முப்பத்து மூன்றாம் மெய்யெழுத்து, மொழிக்கு முதலில் அகரமாகவும் மொழிக்கு இடையிலும், இறுதியிலும் ககரமாகவும் திரியும். முப்பததைந்தாம் மெய்யெழுத்து, இரண்டு ககரங்களாகத் திரியும். பொதுவெழுத்துக்களில் மொழியிறுதியில் வரும் ஆகாரம் ஐகாரமாகவும், ஈகாரம் இகரமாகவும் திரியும்.

அவற்றுள்

ஏழாமுயி ரிய்யு மிருவுமை வருக்கத்

திடையின் மூன்று மவ்வம் முதலும்

எட்டே யவ்வு முப்பது சயவும்

மேலொன்று சடவு மிரண்டு சதவும்

மூன்றே யகவு மைந்திரு கவ்வும்

ஆவி றையு மீயீ றிகரமும். நூற்பா 147

(எ.டு) இடபம், மிருகம் . ஏழாம் உயிர், இகரமும் இருவும் ஆயிற்று.

நகம், நாகம், மேகம்

சலவாதி, விசயம், சருச்சரை

பீடம், பீடை, திடம்

தலம், தினம், தரை

பலம், பந்தம், பாரம்

ஐந்து வருக்கங்களிலும் இடைநின்ற எழுத்துக்கள் முதலில் நின்ற எழுத்தாகத் திரிந்தன.

அயம், பங்கயம் – எட்டாம் மெய், யகரம் ஆயிற்று.

சங்கரன் – முப்பதாம் மெய், மொழிக்கு முதலில் சகரம் ஆயிற்று.

பாசம், தேயம் – முப்பதாம் மெய், மொழிக்கு இடையில் சகரமும், யகரமும் ஆயிற்று.

சண்முகம் – முப்பத்தோராம் மெய், மொழிக்கு முதலில் சகரம் ஆயிற்று.

விடம், பாடை – முப்பத்தோராம் மெய், மொழிக்கு இடையிலும் இறுதியிலும் டகரம் ஆயிற்று.

சபை – முப்பத்திரண்டாம் மெய், மொழிக்கு முதலில் சகரம் ஆயிற்று.

வாசம், மாதம் – முப்பத்திரண்டாம் மெய், மொழிக்கு இடையில் சகரமும் தகரமும் ஆயிற்று.

அரன் – முப்பத்து மூன்றாம் மெய். மொழிக்கு முதலில் அகரம் ஆயிற்று.

மோகம், மகி – முப்பத்து மூன்றாம் மெய். மொழிக்கு இடையிலும் இறுதியிலும்ககரம் ஆயிற்று.

பக்கம் – முப்பத்தைந்தாம் மெய். மொழிக்கு இடையில் இரண்டு ககரம் ஆயிற்று.

மாலை – மொழியிறுதி ஆகாரம், ஐகாரம் ஆயிற்று.

புரி – மொழியிறுதி ஈகாரம், இகரம் ஆயிற்று.

ர, ல, ய என்னும் மெய்களை முதலில் கொண்ட ஆரிய மொழிகள் தமிழில் வருகையில் பின்வருமாறு திரியும். ரகத்திற்கு முன் அ, இ, உ வரும். லகரத்திற்கு முன் இ, உ வரும். யகரத்திற்கு முன் இகரம் வரும்.

(எ.டு) அரங்கம், இராமன், உரோமம் –ரகரத்தின் முன் அ, இ, உ வந்தன.

இலாபம், உலோபம் – லகரத்தின் முன் இ, உ வந்தன.

இயக்கன் – யகரத்தின் முன் இகரம் வரும்.

ரவ்விற்கு அம்முதல் ஆம்முக் குறிலும்,

லவ்விற்கு இம்முதல் இரண்டும், யவ்விற்கு

இய்யும் மொழிமுத லாகிமுன் வருமே. நூற்பா 148

ஆரிய மொழியில் இரண்டு எழுத்துக்கள் சேர்ந்து ஓர் எழுத்தைப் போல் நடக்கும் போது பின்னிற்கும் ய, ர, ல என்னும் எழுத்துக்களுக்கு முன் இகரம் வரும். மகர, வகரங்களின் முன் உகரம் வரும். நகரத்தின் முன் அகரம் வரும். இணைந்து முன் நிற்கும் ரகர மெய்யின் முன் உகரம் வரும்.

இணைந்தியல் காலை யரலக் கிகரமும்

மவ்வக் குகரமு நகரக் ககரமும்

மிசைவரும் ரவ்வழி யுவ்வு மாம்பிற. நூற்பா 149

(எ.டு)

தியாகம், வாக்கியம், கிரமம், வக்கிரமம், கிலேசம், சுக்கிலம் – ய, ர, ல முன் இகரம் வந்தது.

பதுமம், பக்குவம் – ம, வ முன் உகரம் வந்தது.

அரதநம் – ந முன் அகரம் வந்தது.

அருத்தம் – ரகரத்தின் பின் உகரம் வந்தது.

தமிழெழுத்தின் சிறப்பெழுத்தும் பொதுவெழுத்தும்

முதலும் சார்பும் எனத் தமிழெழுத்துக்கள் நாற்பது. இவற்றுள் ற, ன, ழ, எ, ஒ என்னும் ஐந்தும், உயிர்மெய்யும், உயிரளபெடையும் அல்லாதச் சார்பெழுத்துக்கள் எட்டும் ஆகிய பதின்மூன்றும் தமிழுக்கேயுரிய சிறப்பெழுத்துக்கள். எஞ்சிய இருபத்தேழு எழுத்துக்களும் தமிழுக்கும் ஆரியத்திற்கும் பொதுவெழுத்துக்கள் ஆகும்.

ற ன ழ எ ஒவ்வும் உயிர்மெய் உயிரளபு

அல்லாச் சார்பும் தமிழ்; பிற பொதுவே.

என்னும் நூற்பா (150) தமிழுக்குரிய சிறப்பெழுத்தையும் பொதுவெழுத்தையும் குறிப்பிடுகின்றது.

I. தன்மதிப்பீட்டு வினாக்கள்

1. எழுத்து தனித்தோ தொடர்ந்து நின்றோ பொருள் தருவதை ......... என்று அழைப்பர்?

2. பிரிக்க முடியாத பதத்தின் பெயரைக் குறிப்பிடுக.

3. பகுபத உறுப்புக்களைக் குறிப்பிடுக.

4. 'செய்யே னேவல் வினைப்பகாப் பதமே' – நூற்பாவினை எழுதுக.

5. அன், ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதிகள். சரியா? தவறா?

6. காலம் எத்தனை வகைப்படும்?

7. கிறு, கின்று, ஆநின்று ஆகியவை எதிர்கால இடைநிலைகள். சரியா? தவறா?

8. இறந்த கால இடைநிலைகளைக் குறிப்பிடுக.

தொகுப்புரை

இவ்வியலில் சிறப்புடைய ஓரெழுத்து ஒருமொழி பற்றிய செய்திகளையும், தொடரெழுத்து ஒருமொழி பற்றிய செய்திகளையும் அறியமுடிகிறது. பகுபதம், பகாப்பதம் பற்றிய செய்திகளும் கூறப்பட்டுள்ளன. இவ்வியலின் இறுதியில் மொழியாக்கம் குறித்த செய்திகளும் இடம்பெற்றுளளன.

பகுபத உறுப்புக்களில் பகுதி, விகுதி, இடைநிலை ஆகியவற்றின் விளக்கங்களும், அவை தொடர்பான செய்திகளும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. இவ்வியலின் இறுதியில் வடமொழியாக்கம் பற்றிய செய்திகள் கூறியுள்ளமையை அறிந்து கொள்ள முடிந்தது.

பயிற்சி வினாக்கள்

சிறு வினாக்கள்

1. பதம் என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்?

2. பகுபதத்தின் இலக்கணம் யாது?

3. அவன் – பகுபதமா? பகாப்பதமா? காரணம் கூறுக.

4. 'செய்யே னேவல் வினைப் பகாப்பதமே' – பொருள் கூறுக.

5. பெயர் இடைநிலையைக் காணும் முறை யாது?

6. டு, து, று எவ்வெவ் வினாக்களுக்கு விகுதியாகும்?

7. நிகழ்கால இடைநிலைகள் யாவை?

8. நடவான், நடவா – இப்பகுபதங்களின் உறுப்புகளைக் கூறி முடித்துக் காட்டுக.

குறு வினாக்கள்

1. சிறப்பான ஓரெழுத்து ஒருமொழிகள் யாவை?

2. பகாப்பதத்தின் இலக்கணம் யாது?

3. குறிப்பு வினைமுற்றுக்கும் குறிப்பு வினையாலணையும் பெயர்க்கும், பெயர்ப் பகுபதத்துக்கும் இடையே உள்ள வேறுபாடு யாது?

4. மையீற்றுப் பண்புப்பெயர்களுக்குரிய இயல்புகள் யாவை?

5. காலம் காட்டும் இடைநிலைகளை விளக்குக.

6. ஆரிய மொழிக்கும் தமிழுக்கும் உள்ள பொது எழுத்துக்கள் யாவை?

பெரு வினாக்கள்

1. பகுபத உறுப்புக்கள் எல்லாம் காரணப் பெயர்கள் என்பதை விளக்குக.

2. காலம் காட்டும் விகுதிகள் யாவை? அவை எவ்வெவ் காலம் காட்டும் என்பதை எடுத்துக்காட்டு களுடன் விளக்குக.

3. சமஸ்கிருதச் சிறப்பெழுத்துக்கள் தமிழில் எவ்வாறு திரியும்?

தன்மதிப்பீட்டு விடைகள்

I.

1. பதம்

2. பகாப்பதம்

3. பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம்.

4. நடவா மடிசீ விடுகூ வேவை

நொப்போ வெளவுரி ஞண்பொருந் திருந்தின்

தேய்பார் செல்வவ் வாழ்கே ளஃகென்

றெய்திய விருபான் மூன்றா மீற்றவும்

செய்யெ னேவல் வினைப்பகாப் பதமே.

5. சரி.

6. மூன்று

7. தவறு.

8. த், ட், ற்.

2.2.3 உயிரீற்றுப் புணரியல்

2.2.3.1 புணர்ச்சி இலக்கணமும் வகைப்பாடும் – நூற்பா 151 முதல் 157 வரை.

2.2.3.2 பொதுப்புணர்ச்சி – நூற்பா 158 முதல் 161 வரை.

2.2.3.3 உயிரீற்றுச் சிறப்புப் புணர்ச்சி – நூற்பா 162 முதல் 164 வரை.

2.2.3.4 உயிரீற்று முன் வல்லினம் – நூற்பா 165 முதல் 166 வரை.

2.2.3.5 அகரவீற்றுச் சிறப்பு விதி – நூற்பா 167 முதல் 170 வரை.

2.2.3.6 ஆகாரவீற்றுச் சிறப்பு விதி – நூற்பா 171 முதல் 172 வரை.

2.2.3.7 இகரவீற்றுச் சிறப்பு விதி – நூற்பா 173 முதல் 175 வரை.

2.2.3.8 இகர, ஐகார ஈற்றுச் சிறப்பு விதி – நூற்பா 176

2.2.3.9 ஈகார ஈற்றுச் சிறப்பு விதி – நூற்பா 177 முதல் 178 வரை.

2.2.3.10 முற்றுகர ஈற்றுச் சிறப்பு விதி – நூற்பா 179 முதல் 180 வரை.

2.2.3.11 குற்றுகர ஈற்றுச் சிறப்பு விதி – நூற்பா 181 முதல் 199 வரை.

2.2.3.12 ஊகார ஈற்றுச் சிறப்பு விதி – நூற்பா 200.

2.2.3.13 ஏகார, ஓகாரச் சிறப்பு விதி – நூற்பா 201.

2.2.13.4 ஐகார ஈற்றுச் சிறப்பு விதி – நூற்பா 202 முதல் 203 வரை.

நன்னூல் எழுத்ததிகாரத்தின் எழுத்தியலில் பவணந்தியார் எழுத்தின் அகத்திலக்கணம் பத்தினையும் எடுத்து ரைத்தார். புறத்திலக்கணமாகிய பதம், புணர்ச்சி ஆகிய இரண்டில் பதம் என்பதைப் பதவியலில் விளக்கினார். இவ்வியலில் புணர்ச்சி என்பதை விளக்க முற்படுகிறார். இதனை உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் என்று மூன்றாக வகுத்துக் கொண்டு, உயிரீற்றுப் புணரியலின் தொடக்கத்தில் புணர்ச்சி என்பதன் இலக்கணத்தை எடுத்துரைக்கின்றார்.

2.2.3.1 புணர்ச்சி இலக்கணமும் வகைப்பாடும்

நிலைமொழியின் இறுதி எழுத்தும் வருமொழியின் முதலெழுத்தும் ஒன்றோடொன்று பொருந்தி நிற்பதாகும். நிலைமொழியின் ஈற்றில் உயிர் அல்லது மெய்யெழுத்து இடம் பெற்றோ வருமொழியின் முதலில் உயிர் அல்லது மெய்யெழுத்து இடம்பெற்றிருக்கும். எனவே, ஒன்றுடன் ஒன்று பொருந்துகின்ற எழுத்துக்களை அடிப்படையாய் வைத்து புணர்ச்சியை நான்கு வகையாகப் பிரிப்பர். அவை,

1. உயிர்முன் உயிர் – மணி + அழகு

2. உயிர்முன் மெய் – மணி + மொழி

3. மெய்முன் உயிர் – ஆடல் + அழகு

4. மெய்முன் மெய் – தேன் + மொழி

நிலைமொழி பகாப்பதமாகவோ, பகுபதமாகவோ அமைந்து, வருமொழியும் அவ்விரு பதங்களாகவும் அமையலாம். எனவே, ஒன்றுடன் ஒன்று புணருகின்ற பதங்களை அடிப்படையாகக் கொண்டு புணர்ச்சியை நான்கு வகையாகப் பகுக்கலாம்.

1. பகாப்பதத்தின் முன் பகாப்பதம் வருதல் – மணி + முடி.

2. பகாப்பதத்தின் முன் பகுபதம் வருதல் – மணி + அடித்தான்

3. பகுபதத்தின் முன் பகாப்பதம் – கண்ணன் + கால்

4. பகுபதத்தின் முன் பகுபதம் – கண்ணன் + பாடினான்

மேலும், நிலைமொழியுடன் வருமொழி எவ்வகைப் பொருளில் பொருந்துகின்றது என்பதன் அடிப்படையில் வேற்றுமை, அல்வழி என்று இரண்டு வகையாகப் புணர்ச்சியைப் பிரிக்கலாம்.

1. வேற்றுமைப் புணர்ச்சி

நிலைமொழியும் வருமொழியும் வேற்றுமைப் பொருளில் வேற்றுமை உருபு விரிந்தோ மறைந்தோ புணர்வது.

கடிதம் அனுப்பினான் – ஐ வேற்றுமை உருபு மறைந்து வந்துள்ளது.

கடிதத்தை அனுப்பினான் – வேற்றுமை உருபு விரிந்தது.

2. அல்வழிப் புணர்ச்சி

நிலைமொழியும் வருமொழியும் வேற்றுமை அல்லாத வழியில் புணர்வதாகும்.

ராமன் வந்தான் – இவ்விரு சொற்களின் இடையே வேற்றுமை உருபு தொக்கோ, விரிந்தோ வர இயலாது.

நிலைமொழி, வருமொழி புணர்ச்சியில் அம்மொழிகளில் வடிவங்களின் நிலையினைக் கொண்டு புணர்ச்சியை இரண்டாகப் பிரிக்கலாம்.

1. இயல்புப் புணர்ச்சி

இப்புணர்ச்சியில் சொற்களிடையே எவ்வித வேறுபாடும் ஏற்படாமல் அமைவது.

முருகன் + வந்தான் = முருகன் வந்தான்.

2. விகாரப் புணர்ச்சி

புணருகின்ற சொற்களில் நிலைமொழியின் இறுதியோ அல்லது நிலைமொழி, வருமொழி ஆகிய இரண்டுமே விகாரமடைதல் விகாரப் புணர்ச்சியாகும்.

மரம் + கிளை = மரக்கிளை.

மெய்உயிர் முதல் ஈறு ஆம் இரு பதங்களும்

தன்னொடும் பிறிதொடும் அல்வழி வேற்றுமைப்

பொருளில் பொருந்துழி நிலைவரு மொழிகள்

இயல்பொடு விகாரத்து இயைவது புணர்ப்பே.

என்னும் நூற்பா (151) புணர்ச்சி இன்னதென்பதை அடையாளப்படுத்துகிறது.

அல்வழி, வேற்றுமைப் புணர்ச்சிகள்

நிலைமொழிக்கும் வருமொழிக்கும் நடுவில் ஐ, ஆல், கு, இன், அது, கண் என்னும் ஆறு உருபுகளும் மறைந்தாயினும் வெளிப்பட்டாயினும் வர, சொற்கள் புணரும் புணர்ச்சி வேற்றுமைப் புணர்ச்சியாகும்.

அல்வழிப் புணர்ச்சி என்பது வேற்றுமைப் பொருள் அல்லாத வழியில் பதங்கள் புணரும் புணர்ச்சியாகும். இப்புணர்ச்சியில், தொகைநிலை, தொகாநிலை என்று இரு வகைகள் உள்ளன. இதனைப் பின்வரும் நூற்பா குறிப்பிடுகின்றது.

வேற்றுமை ஐம்முதல் ஆறாம் அல்வழி

தொழில்பண்பு உவமை உம்மை யன்மொழி

எழுவியல் விளி எச்சம் முற்று இடை உரி

தழுவு தொடர் அடுக்கு என ஈரேழே. நூற்பா 152

வேற்றுமைப் புணர்ச்சி

தமிழிலுள்ள வேற்றுமைகள் எட்டாகும். இவற்றுள் முதல் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை ஆகியவற்றிற்கு உருபுகள் இல்லை. பொதுநிலையில் வேற்றுமைப் புணர்ச்சி என்பது ஐ முதலிய ஆறு உருபுகள் இடையில் தொக்கும் விரிந்தும் வருகையில் பதங்கள் புணரும் புணர்ச்சியாகும். இவ்வேற்றுமைப் புணர்ச்சி ஆறு வகைப்படும்.

| வேற்றுமைத் தொகை | உருபு | வேற்றுமை விரி |
|---|---|---|
| பாடம் படித்தான் | ஐ | பாடத்தைப் படித்தான் |
| கல்லெறிந்தான் | ஆல் | கல்லால் எறிந்தான் |

| | | |
|---|---|---|
| கொற்றன் மகன் | கு | கொற்றனுக்கு மகன் |
| மலை வீழருவி | இன் | மலையின் வீழருவி |
| மலை உச்சி | அது | மலையினது உச்சி |
| குன்றின் கூகை | கண் | குன்றத்தின்கட் கூகை |

அல்வழிப் புணர்ச்சி என்பது வேற்றுமை அல்லாத வழியில் புணர்வது. இது தொகைநிலைத் தொடர், தொகா நிலைத்தொடர் என்று இரண்டு வகைப்படும்.

தொகைநிலைத்தொடர்

1. கொல்யானை – வினைத்தொகை
2. கருங்குதிரை – பண்புத்தொகை
3. மதிமுகம் – உவமைத்தொகை
4. இராப்பகல் – உம்மைத்தொகை
5. பொற்றொடி – அன்மொழித்தொகை

மேற்கூறிய ஐந்தும் தொகைநிலைத் தொடர்களாகும்.

தொகாநிலைத் தொடர்

அல்வழியில் தொகாநிலைப் புணர்ச்சிகள் ஒன்பது வகைப்படும். அவை,

1. எழுவாய்த் தொடர் – முருகன் வந்தான்
2. விளித்தொடர் – முருகா வா
3. பெயரெச்சத் தொடர் – உண்ட முருகன்
4. வினையெச்சத் தொடர் – உண்டு வந்தான்
5. தெரிநிலை வினைமுற்றுத் தொடர் – உண்டான் முருகன்
6. குறிப்பு வினைமுற்றுத் தொடர் – பெரியன் முருகன்
7. இடைச் சொற்றொடர் – மற்றொன்று
8. உரிச்சொற்றொடர் – நனிபேதை
9. அடுக்குத் தொடர் – பாம்பு பாம்பு

மேற்கூறிய தொடர்கள் தழுவுத் தொடர்களாகும். இத்தொடர்கள் பதினான்கு எனக் கூறவே, அவ்விரு வழியிலும் தழாத் தொடரும் சில உள்ளது என்பது பெறப்படுகிறது.

நீர்க்குடம் என்பது நீரை உடைய குடம் என்று விரிக்கப்படுதலால், நீர் என்பது குடத்தைத் தழுவாது தொடர்ந்தது. இது தழாத் தொடராகிய வேற்றுமைப் புணர்ச்சியாகும்.

அல்வழிப் புணர்ச்சி

சுரையாழ அம்மி மிதப்ப என்பது சுரை மிதப்ப அம்மி ஆழ எனக் கூட்டப்படுதலால், சுரை என்பது அழ என்பதையும் அம்மி என்பது மிதப்ப என்பதையும் தழுவாது தொடர்ந்ததால், தழாத் தொடராகிய அல்வழிப் புணர்ச்சியாகும்.

இயல்புப் புணர்ச்சி

இரண்டு சொற்களின் சேர்க்கையில் ஏதேனும் மாறுபாடு நிகழ்கின்றதா அல்லது இல்லையா என்பதை வைத்து புணர்ச்சி இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகின்றன. அவை, இயல்புப் புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி என்பனவாகும்.

நிலைமொழியுடன் வருமொழி புணரும்போது இரண்டிலும் எவ்வகை மாறுபாடின்றி வருவது இயல்புப் புணர்ச்சியாகும்.

விகார மனைத்தும் மேவல தியல்பே. நூற்பா 153

பொன் + மலை . பொன்மலை – மெய் + மெய்

புகழ் + அழகு – புகழழகு – மெய்முன் உயிர்

ஒளி + மணி – ஒளிமணி – உயிர் முன் மெய்

விகாரப் புணர்ச்சி

நிலைமொழியுடன் வருமொழி புணரும் போது அப்புணர்ச்சியில் ஏதேனும் மாற்றம் தோன்றுவது விகாரப் புணர்ச்சியாகும்.

தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்

மூன்றும் மொழிமூ விடத்தும் ஆகும். நூற்பா 154

இப்புணர்ச்சியில் எழுத்து அல்லது சாரியை தோன்றுதல், ஓர் எழுத்து வேறொரு எழுத்தாக வேறுபடுதல், இருக்கும் எழுத்து கெடுதல் என்றும் மூன்று நிலைகளில் விகாரம் அமையும். இம்மூவகை விகாரங்களும் நிலைமொழி, வருமொழிகளின் முதல், இடை, கடை என்னும் மூன்றிடங்களிலும் வரும் தன்மையதாகும்.

(எ.டு) பூ + கொடி = பூங்கொடி – வருமொழியின் முதலில் மெய் தோன்றியது.

பல் + தாழிசை = பஃறாழிசை – வருமொழியின் முதலிலும் நிலைமொழியின் ஈற்றிலும் மெய்கள் திரிந்தன.

நிலம் + வலயம் = நிலவலயம் – நிலைமொழியின் ஈற்றில் மெய் கெட்டது.

அறு + பத்து = அறுபது – நிலைமொழியின் முதல் உயிர் திரிந்தது. வருமொழியின் இடையொற்றுக் கெட்டது

பல + பொருள் = பல்பொருள் – நிலைமொழியின் இறுதியில் உயிர் கெட்டது.

நாடு + உரி = நாடுரி – நிலைமொழியின் இறுதியில் உள்ள உயிர்மெய் கெட்டு டகர மெய் தோன்றியது.

தமிழ் + பிள்ளை = தமிழ்ப்பிள்ளை – நிலைமொழியின் இறுதியில் சாரியை தோன்றிற்று.

பனை + காய் = பனங்காய் – நிலைமொழி இறுதியில் உள்ள உகரம் கெட்டுச் சாரியை தோன்றியது.

செய்யுள் விகாரம்

செய்யுளில் அடி இலக்கணம், தொடை இலக்கணம் முதலியவற்றை நோக்கி, தேவையான இடங்களில் சொற்கள் விகாரப்படுவது உண்டு. இவ்விகாரங்கள் செய்யுள் இலக்கணத்தை நிறைவு செய்ய வருவதால் செய்யுள் விகாரம் என்பர். இவை செய்யுளுக்கே உரியனவாகும்.

வலித்தல் மெலித்தல் நீட்டல் குறுக்கல்

விரித்தல் தொகுத்தலும் வருஞ்செய்யுள் வேண்டுழி. நூற்பா 155

இந்நூற்பாவில் கூறியவாறு மெல்லொற்றை வல்லொற்று ஆக்குதல், வல்லொற்றை மெல்லொற்றாக்குதல், குற்றெழுத்தை நெட்டெழுத்தாகவும், நெட்டெழுத்தை குற்றெழுத்தாகவும் இல்லாத எழுத்தை உருவாக்குதலும், உள்ள எழுத்தை நீக்குதலும் செய்யுளிலக்கணத்தை நோக்கி வேண்டுமிடத்து வரும்.

இச்செய்யுள் விகாரம் ஒன்பது நிலைகளில் அமையும்.

1. வலித்தல் விகாரம் : 'குறுந்தாட்பூதம் சுமந்த' – குறுந்தாள் எனும் சொல் – அடுத்த அடியில் அறக்கதிர் என்று மூன்றாம் எழுத்து வல்லின ஒற்றாக உள்ளதால், எதுகை நோக்கிக் குறுத்தாள் என வலிந்து நின்றது.

2. மெலித்தல் விகாரம் :

தண்டையின் இனக்கிளி கடிவோள்

பண்டையனி அல்லள் மானோக் கின்றே

தட்டை என்பது தினைப் புனத்தில் கிளிகளை விரட்டுவதற்காகப் பயன்படுத்தப்படும் கருவியாகும். மேற்கூறிய பாட்டில் இரண்டாம் பண்டையன் என்று தொடங்குவதால் தட்டை என்ற கருவியின் பெயர் அடி எதுகைக்காகத் தண்டை என்று விகாரப்பட்டது. இதில் மெல்லின ஒற்று விகாரப்பட்டதால் மெலித்தல் விகாரமாகும்.

3. நீட்டல் விகாரம் : குறிலெழுத்தை நெடிலாக மாற்றுவது. 'ஈசன் எந்தை இணையடி நீழலே'. நிழல் என்னும் சொல் நீண்டு நீழலாக நின்றது.

4. குறுக்கல் விகாரம் : நெடில் எழுத்தினைக் குறிலெழுத்தாக மாற்றுவது. 'தென்னன்றிருந்தார் நன்றென்றேன் தீயேன்'. இங்கு தீயேன் என்னும் சொல் செய்யுள் இலக்கணம் பிழைபடாமல் இருக்க தியேன் என்று எழுதப்பட்டது.

5. விரித்தல் விகாரம் : சொல்லில் இல்லாத எழுத்து ஒன்றினைச் சேர்ப்பது.

(எ.டு) மனிதப்பிறவி – மனித்தப் பிறவி. (திருநாவுக்கரசர் தேவாரம், கோயில் திருவிருத்தம்)

6. தொகுத்தல் விகாரம் :

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்

கற்றனைத் தூறும் அறிவு.

இக்குறட்பாவில் தொட்டது அனைத்து தொட்டனைத்து என்றும், கற்றது அனைத்து என்பது கற்றனைத்து எனவும் வந்துள்ளன என்று சங்கர நமச்சிவாயர் விளக்குகின்றார்.

7. முதல் குறை : சொல்லின் முதலில் வரும் எழுத்தைக் குறைத்து விடுவது. (எ.டு) தாமரை – மரை

8. இடைக்குறை : சொல்லின் இடையில் வரும் எழுத்தைக் குறைத்து விடுவது. (எ.டு) இல்லை – இலை.

9. கடைக்குறை : சொல்லின் கடையில் வரும் எழுத்தைக் குறைப்பது. (எ.டு) வான் – விண், நிலவு – நிலா, கடைசி – கடை.

இங்கு சொல்லில் உள்ள எழுத்துக்கள் குறைந்த போதிலும் பொருள் மாறுபடுவதில்லை.

செய்யுளுக்கு உரிய செய்யுள் விகாரங்கள் உயிரீற்றுப் புணரியலில் கூறியதற்குக் காரணம் செய்யுள் இலக்கியங்களில் தோன்றல், திரிதல், கெடுதல் என்னும் மூன்று புணர்ச்சி விகாரங்கள் மட்டுமன்றி ஒன்பது செய்யுள் விகாரங்களும் வருவதால் அவற்றுக்கு இடையே வேறுபாட்டைக் கூற வேண்டும் என்பது பவணந்தியாரின் கருத்தாகும்.

ஒரு சொல்லின் முதல், இடை, கடை என்னும் மூவிடங்களில் ஓரிடத்தில் குறைந்து வருவதும் செய்யுள் விகாரமாகும்.

ஒருமொழி மூவழிக் குறைதலு மனைத்தே. நூற்பா 156

'மரையிதழ் புரையும்' – தாமரை என்பது மரை என முதல் குறைந்தது.

'ஓதி முதுயேத்து' – ஓத்தி என்பது ஓதி என இடை குறைந்தது.

'நீலுண் துகிலிகை' – நீலம் என்பது நீல் எனக் கடை குறைந்தது.

ஒரே புணர்ச்சியில் பல விகாரங்கள்

ஒரு புணர்ச்சிக்கு இரண்டு, மூன்று விகாரங்களும் வரப்பெறும்.

"ஒரு புணர்க்கு இரண்டும் மூன்றும் உறப்பெறும்" நூற்பா 157

தமிழ் + செல்வம் = தமிழ்ச்செல்வம் – தோன்றல் விகாரம்

நிலம் + பனை = நிலப்பனை – தோன்றல், கெடுதல் ஆகிய இரண்டு விகாரங்கள்.

பனை + காய் = பனங்காய் – கெடுதல், தோன்றல், திரிதல் ஆகிய மூன்று விகாரங்கள்.

ஒரு புணர்ச்சியில் ஒரு விகாரம் மட்டுமே வருமோ என்று ஐயுறுபவர்களின் எண்ணத்தைப் போக்கியது இந்நூற்பா.

### 2.2.3.2 பொதுப்புணர்ச்சி

பவணந்தியார் இப்பகுதியில் உயிரீற்றுக்கும் மெய்யீற்றுக்கும் பொதுவான புணர்ச்சி விதியினைக் கூறுகின்றார். மொழிக்கு முதலில் வருகின்ற இருபத்து நான்கு எழுத்துக்களையும், இறுதியாக உடைய பெயர்ச்சொல், வினைச்செல், இடைச்சொல், உரிச்சொல், திசைச்சொல், வடசொல் என்னும் பலவகைப்பட்ட சொற்களுக்கும் முன்னே வரும் ஞ, ந, ம, வ, ங என்னும் எழுத்துக்கள் இயல்பாகும். குற்றெழுத்தின் பின்னின்ற யகர மெய்க்கும், ஓரெழுத்து ஒருமொழியாகிய உயிர், உயிர்மெய் என்னும் ஐகாரத்துக்கும் நொ, து ஆகிய எழுத்துக்களுக்கு முன்னே வரும் ஞ, ந, ம என்னும் எழுத்துக்கள் பிற சொற்களின் முன் இயல்பாதலன்றி மிக்கு முடிதலும் உண்டு. ண, ன, ள, லக்களின் முன்வரும் நகரம் பிற ஈற்றின் முன் இயல்பாதலன்றித் திரிதலும் உண்டு.

எண்மூ வெழுத்தீற் றெவ்வகை மொழிக்கும்

முன்வரு ஞ ந ம ய வக்க ளியல்புங்

குறில்வழி யத்தனி யைந்நொது முன்மெலி

மிகலுமாம் ண ள ன ல வழிநத் திரியும்.

என்னும் நூற்பா (158) எல்லா ஈற்றின் முன்னும் மெல்லினமும் இடையினமும் புணரும் நிலையினைக் கூறியது.

மொழியின் இறுதியில் வரும் இருபத்து நான்கு ஈறுகளுக்கு முன்னும் ஞ, ந, ம, ய, வ என்னும் எழுத்துக்கள் வருமொழியில் வரின் இயல்பாகும்.

(எ.டு)

| அல்வழி | வேற்றுமை |
|---|---|
| விள ஞான்றது | விள ஞாற்சி |

விள நீண்டது விள நீட்சி

விள மாண்டது விள மாட்சி

விளையாறு விளயாப்பு

விளவலிது விள வன்மை

இதுபோன்ற பிற ஈறுகளின் முன்னும் ஞ, ந, ம, ய, வ வருதலைக் கொள்ளுதல் வேண்டும்.

குறிலின் பின்வரும் ய முன்னும், தனி ஐ முன்னும் மெல்லினம் மிகுதல் உண்டு.

அல்வழி வேற்றுமை

மெய்ஞ் ஞான்றது மெய்ஞ்ஞாற்சி

மெய்ந்நீண்டது மெய்ந்நீட்சி

மெய்ம்மாண்டது மெய்ம்மாட்சி

கைஞ்ஞான்றது கைஞ்ஞாற்சி

கைந்நீண்டது கைநீட்சி

கைம்மாண்டது கைம்மாட்சி

நொ, து முன் மெலி மிகாமலும் என்பதில் உள்ள உம்மையில் இவற்றின் முன் மெல்லினமேயன்றி இடையினமும் மிகும்.

(எ.டு)

நொஞ்ஞெள்ளா – நுஞ்ஞெள்ளா

நொந்நாகா – துந்நாகா

நொய்மாடா – நும்மாடா

நொவ்வளவா – நுவ்வளவா

ண, ன, ள, ல, ன முன் வரும் அகரம் திரிதலும் உண்டு.

அல்வழி வேற்றுமை

கண் + நீண்டது – கண்ணீன்டது கண் + நீட்சி – கண்ணீட்சி

முன் + நீண்டது – முன்னீண்டது முள் + நீட்சி – முன்னீட்சி

பொன் + நீண்டது – பொன்னீண்டது ............

புல் + நீண்டது – புன்னீண்டது புல் + நீட்சி – புன்னீட்சி

மேற்கூறிய சூத்திரத்தில் ஒன்றிற்கொன்று தொடர்ச்சியாக அமைந்திருப்பதால் தொடர்சொல்புணர்த்தல் என்னும் உத்தியாகும்.

பொதுப்பெயர், உயர்திணைப் பெயர் ஈறு

பொதுப் பெயர்களுக்கும் உயர்திணைப் பெயர்களுக்கும் இறுதியில் உள்ள மெய்கள் வருமொழி முதலில் வல்லினம் வந்தால் இயல்பாகும். உயிரையும் ய, ர என்னும் மெய்களையும் இப்பெயர்களுக்கு முன்னால் வல்லினம் வரின் மிகாது. மெய்யையும் உயிரையும் இறுதியாக உடைய உயர்திணைப் பெயர்களுள் சில பெயர்கள் நாற்கணங்களுடன் புணரும்போது நிலைமொழியும் வருமொழியும் விகாரப்படும்.

பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்கள் ஈற்றுமெய்

வலிவரின் இயல்பாம் ஆவி யரமுன்

வன்மை மிகாசில விகாரமாம் உயர்திணை.

என்னும் நூற்பா (159) பொதுப்பெயர், உயர்திணைப் பெயர் ஈறு குறித்த செய்தியினைக் கூறியது.

பொதுப்பெயர் முன் வல்லினம் இயல்பாதல்

| அல்வழி | வேற்றுமை |
|---|---|
| ஆண் + குறியன் = ஆண்குறியன் | ஆண் + கை = ஆண்கை |
| சாத்தன் + தீயன் = சாத்தன்தீயன் | சாத்தன் + செவி = சாத்தன்செவி |

உயர்திணைப் பெயர்கள் முன் வல்லினம் இயல்பாதல்

| அல்வழி | வேற்றுமை |
|---|---|
| அவன் + குறியன் = அவன்குறியன் | அவன் + கை = அவன்கை |
| ஊரன் + பெரியன் = ஊரன்பெரியன் | ஊரன் + செவி = ஊரன்செவி |

பொதுப்பெயர் (ஆவி, ய, ர) முன் வல்லினம் இயல்பாதல்

| அல்வழி | வேற்றுமை |
|---|---|
| சாத்தி + சிறியன் = சாத்திசிறியள் | சாத்தி + கை = சாத்திகை |
| தாய் + பெரியன் = தாய் பெரியன் | தாய் + செவி = தாய்செவி |
| நீர் + குறியீர் = நீர்குறியீர் | காய் + பொருள் = காய்பொருள் |

உயர்திணைப் பெயர் (ஆவி, ய, ர) முன் வல்லினம் இயல்பாதல்

| அல்வழி | வேற்றுமை |
|---|---|
| நம்பி + குறியன் = நம்பிகுறியன் | நம்பி + கை = நம்பிகை |
| சேய் + சிறியன் = சேய்சிறியன் | சேய் + சிறுமை = சேய்சிறுமை |
| அவர் + பெரியர் = அவர்பெரியர் | அவர் + பெருமை = அவர்பெருமை |

சில விகாரமாய் உயர்திணை என்றதால் உயர்திணையில் சில பெயர்கள் அல்வழி, வேற்றுமை இரு வழியிலும் விகாரப்படுதலுண்டு.

| அல்வழி | வேற்றுமை |
|---|---|
| கபிலன் + பரணர் = கபிலபரணர் | ஆசீவகர் + பள்ளி = ஆசீவகப்பள்ளி |
| வடுகன் + நாதன் = வடுகநாதன் | மக்கள் + குணம் = மக்கட்குணம் |
| அரசன் + வள்ளல் = அரசவள்ளல் | குமரன் + கோட்டம் = குமரக்கோட்டம் |

மேற்கூறியவாறு நிலைமொழி, வருமொழி இரண்டிலும் விகாரம் ஏற்று வரும்.

வினாப்பெயர், விளிப்பெயர் முன் வல்லினம்

சொல்லின் இறுதியில் வரும் ஆ, ஓ, ஏ என்னும் மூன்று வினாக்களுக்கு முன்னும் யா என்னும் வினாப்பெயர் முன்னும், உயிரையும் மெய்யையும் இறுதியாக உடைய விளிப்பெயர் முன்னும் வல்லினம் இயல்பாக வரும்.

ஈற்றியா வினாவிளிப் பெயர்முன் வலியியல்பே. நூற்பா 160

கொற்றனா + கொண்டான் = கொற்றனா கொண்டான்

சாத்தனோ + கொண்டான் = சாத்தனோ கொண்டான்

சாத்தனே + கொண்டான் = சாத்தனே கொண்டான்

ஆ, ஓ, ஏ முன் வல்லினம் வர இயல்பாயிற்று.

யா + குறியன் = யாகுறியன் – அல்வழி

யா + கொண்டான் = யாகொண்டான் – வேற்றுமை

யா என்னும் வினா முன் வல்லினம் வர இயல்பாயிற்று.

நம்பி + கொள் = நம்பிகொள் – அண்மை விளி (உயிர்)

நம்பீ + கொள் = நம்பீகொள் – சேய்மை விளி (உயிர்)

தாய் + கொள் = தாய்கொள் – அண்மை விளி (மெய்)

தாயே + கொள் = தாயேகொள் – சேய்மை விளி (மெய்)

எனவே, உயிரையும் மெய்யையும் இறுதியாக உடைய பெயர்களின் முன் வல்லினம் வர இயல்பாகும்.

முன்னிலை வினை, ஏவல் வினை முன் வல்லினம்

உயிரெழுத்துக்களும், ய, ர, ழ என்னும் மூன்று மெய்யெழுத்துக்களையும் இறுதியாகக் கொண்ட முன்னிலை வினை முன்னும், ஏவல் வினை முன்னும் வல்லினம் வருதல் இயல்பாகும். மேலும், உறழ்ந்தும் முடியும்

ஆவி யரழ இறுதிமுன்னிலை வினை

ஏவல்முன் வல்லினம் இயல்பொடு விகாரமே. நூற்பா 161

உயிரையும் ய, ர என்னும் மெய்யெழுத்துக்களையும் இறுதியாக உடைய முன்னிலை வினை முன் வல்லினம் வர இயல்பாகும். இம் முன்னிலை வினையில் ழகர மெய் இறுதியில் வராது.

வா + கொற்றா = வா கொற்றா (உயிர்)

பாய் + கொற்றா = பாய் கொற்றா (ய்)

சேர் + கொற்றா = சேர் கொற்றா (ர்)

தாழ் + கொற்றா = தாழ் கொற்றா (ழ்)

உயிரையும், ய ர ழ என்னும் மெய்களையும் இறுதியாக உடைய ஏவல் வினை முன் வல்லினம் வர இயல்பாயிற்று.

மேற்கூறிய சூத்திரத்தில் வரும் விகற்பம் என்பது உறழ்தலாகும். இரு சொற்கள் புணர்கையில் அச்சொற்கள் இயல்பாகவும், மிக்கும் புணர்வது என்னும் இருநிலைகளில் அமையும்.

இதுவரை பொதுப்புணர்ச்சி பற்றிய செய்தியினை அறிந்து கொண்டோம். இனி, உயிரீற்றுச் சிறப்புப் புணர்ச்சி பற்றிய செய்தியினை முறையே அறிந்து கொள்ளலாம்.

### 2.2.3.3 உயிரீற்றுச் சிறப்புப் புணர்ச்சி

உயிரீற்றுப் புணரியலில் தொடக்கத்தில் புணர்ச்சி பற்றிய வரையறையும் (151-157) பொதுப் புணர்ச்சியும் (நன். 158-161) கூறப்பட்டன. அடுத்ததாக உயிரீற்றுச் சிறப்புப் புணர்ச்சி நூற்பா 162 முதல் கூறப்படுகிறது.

புணர்ச்சி பற்றியும் பொதுப்புணர்ச்சி பற்றிய சூத்திரங்களும் இந்த இயலின் தொடக்கத்தில் கூறப்பட்டாலும் பெரும்பாலான சூத்திரங்கள் உயிரீற்றுப் புணர்ச்சி பற்றிய சூத்திரங்களாக இருப்பதால், பெரும்பான்மை கருதி இவ்வியலுக்கு உயிரீற்றுப் புணரியல் அமைந்தது.

நிலைமொழியின் ஈற்றில் இ, ஈ, ஐ என்ற மூன்று உயிர்களில் ஒன்று நின்று, வருமொழியின் முதலில் ஏதேனும் ஓர் உயிர் வந்தால் புணர்ச்சியில் அவற்றுக்கு இடையே யகர மெய் உடம்படு மெய்யாகத் தோன்றும்.

(எ.டு) மணி + அடி = மணியடி

தீ + அடுப்பு = தீயடுப்பு

வாழை + இலை = வாழையிலை

நிலைமொழியின் ஈற்றில் இ, ஈ, ஐ என்னும் மூன்று உயிர்களைத் தவிர்த்து வேறு ஏதேனும் ஓர் உயிர் நின்று, வருமொழியின் முதலில் ஏதேனும் ஓர் உயிரெழுத்து வரின், புணர்ச்சியில் அவ்விரண்டுக்கும் இடையே வகர உடம்படு மெய் தோன்றும்.

(எ.டு) பல + இடங்கள் = பலவிடங்கள்

நடு + இடம் = நடுவிடம்

நிலைமொழியின் ஈற்றில் ஏகாரம் நின்று, வருமொழியின் முதலில் உயிர் இடம் பெற்றால், அவற்றிடையே யகர, வகர உடம்படுமெய்கள் தோன்றும்.

(எ.டு) அவனே + அழகன் = அவனேயழகன்

சே (செம்மை) + அடி = சேவடி

இ ஈ ஐ வழி யவ்வும் ஏனை

உயிர்வழி வவ்வும் ஏமுன் இவ் இருமையும்

உயிர்வரின் உடம்படு மெய்யென்று ஆகும்.

என்னும் நூற்பா (162) உடம்படுமெய் குறித்த செய்தியினைக் கூறியது.

வினாச்சுட்டின்முன் நாற்கணமும் புணர்தல்

'எ' என்னும் வினாவின் முன்னும் அ, இ, உ என்னும் மூன்று சுட்டெழுத்துக்களின் முன்னும் உயிரும் யகரமும் வரின் வகரமெய் தோன்றும். யகரம் அல்லாத மெய்கள் வரின் அவ்வாறு வந்த மெய்கள் மிகும். செய்யுளில் சுட்டெழுத்து நீண்டவிடத்து யகரம் தோன்றும்.

எகர வினாமுச் சுட்டின் முன்னர்

உயிரும் யகரமும் எய்தின் வவ்வும்

பிறவரின் அவையும் தூக்கிற் சுட்டு

நீளின் யகரமும் தோன்றுதல் நெறியே. நூற்பா 163

(எ.டு)

எ + அணி = எவ்வணி – வினாவின் முன் உயிரும் மகரமும் வர வகரம் தோன்றியது.

எ + யானை = எவ்யானை

அ + அணி = அவ்வணி

உ + அணி = உவ்வணி

அ + யானை = அவ்யானை

இ + யானை = இவ்யானை

உ + யானை = உவ்யானை

சுட்டின் முன் உயிரும் யகரமும் வர வகரம் தோன்றியது.

எ + குதிரை = எக்குதிரை

அ + குதிரை = அக்குதிரை

இ + குதிரை = இக்குதிரை

உ + குதிரை = உக்குதிரை

எ + சிங்கம் = எச்சிங்கம்

அ + சிங்கம் = அச்சிங்கம்

இ + சிங்கம் = இச்சிங்கம்

உ + சிங்கம் = உச்சிங்கம்

வினாவின் முன்னும் சுட்டின் முன்னும் பிற மெய்கள் வர அந்தந்த மெய்கள் தோன்றின.

அ + இடை = ஆயிடை – செய்யுளில் சுட்டு நீண்டு யகரம் தோன்றியது.

தன்மதிப்பீட்டு வினாக்கள்

I.

1. எழுத்தின் புற இலக்கணமாகிய புணர்ப்பு ......................... என்னும் இயலில் கூறப்பட்டுள்ளது?
2. நிலைமொழியும் வருமொழியும் வேற்றுமை அல்லாத வழியில் புணரும் புணர்ச்சி .......... ஆகும்?
3. சொற்கள் புணருகையில் எவ்வித வேறுபாடும் ஏற்படாமல் அமைவது இயல்புப் புணர்ச்சியாகும். சரியா? தவறா?
4. விகாரப் புணர்ச்சியில் ஏற்படும் மாற்றங்கள் யாவை?
5. சொல்லின் இடையில் வரும் எழுத்தைக் குறைத்து விடுவது ..............
6. உயர்திணைப் பெயர்கள் முன் வல்லினம் இயல்பாகாது. சரியா? தவறா?
7. உடம்படுமெய் எழுத்துக்கள் யாவை?
8. அது + யானை ................ என வரும்.

குற்றியலுகரம், முற்றியலுகரம் ஆகியவற்றின் முன் உயிரும் யகரமும் புணர்தல்

நிலைமொழியின் ஈற்றில் குற்றியலுகரம் நின்று, வருமொழியின் முதலில் உயிர் ஒன்று வந்து சேர்ந்தால், குற்றியலுகரம் தான் ஏறியுள்ள வல்லின மெய்யை விட்டு நீங்கும். மகரம் வந்து சேர்ந்தால் இகரமாகத் திரியும். சிலபோது நிலை மொழியீற்று முற்றியலுகரமும் இவ்விரண்டு விதிகளையும் பெறும்.

உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்

யவ்வரின் இய்யாம் முற்றும் அற்று ஒரோவழி. நூற்பா 164

(எ.டு)

நாடு + அன்று = நாடன்று – உயிர் வருதலால் குற்றியலுகரம் நீங்கியது.

நாடு + யாது = நாடியாது – யகரம் வருதலால் குற்றியலுகரம் இகரமாயிற்று.

கதவு + அன்று = கதவன்று – உயிர் வர முற்றியலுகரம் நீங்கியது.

கதவு + யாது = கதவுயாது – யகரம் வர முற்றியலுகரம் இகரமாயிற்று.

இதுவரை பவணந்தியார் உயரீற்றுச் சிறப்புப் புணர்ச்சி பற்றிய செய்தியினை எடுத்துக் கூறினார். இனி, உயிரீற்றின்முன் வல்லினம் இடம்பெறும் செய்தியினை அறிந்து கொள்ளலாம்.

### 2.2.3.4 உயிரீற்றுமுன் வல்லினம்

இயல்பினாலும் விதியினாலும் மொழிக்கு இறுதியில் நின்ற உயிர்களின் முன், சிறப்பு விதியில் எடுத்துக் கூறப்பெறாத க, ச, த, ப என்னும் எழுத்துக்கள் வருமொழியில் வந்தால் இரட்டிக்கும்.

இயல்பு ஈறு – சொல்லின் இறுதியில் இயல்பாக நிற்பது.

(எ.டு) விள, பலா முதலியன.

விதி ஈறு – சொல்லின் இறுதியில் இயல்பாக நின்ற எழுத்து மற்றொரு எழுத்தாக நிற்பது.

(எ.டு) மரம் என்பது – மகர மெய் கெட்டு நிற்பது.

இயல்பு ஈறு

அல்வழி வேற்றுமை

விள + குறிது = விளக்குறிது விள + கோடு = விளக்கோடு

தாரா + கடிது = தாராக்கடிது வண்டு + கால் = வண்டுக்கால்

விதி ஈறு

நேற்று + பொழுது = நேற்றுப்பொழுது மரம் + கிளை = மரக்கிளை

நிலைமொழி ஈற்றில் இயல்பு ஈறாகவோ விதி ஈறாகவோ ஓர் உயிர் நின்று வருமொழியின் முதலில் வல்லின மெய் வருமேயானால் அவ்வல்லினம் மிகும். சிறப்பு விதிகள் வேறு இலக்கணம் கூறாதவரை இப்போது மெய்விதி பொருந்தும்.

இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்

கசதப மிகும் விதவாதன மன்னே. நூற்பா 165

விதவாதன பெரும்பாலும் மிகும். விதந்தன சிறுபான்மை மிகும் என்பதும் விதவாதன சிறுபான்மை மிகா என்பதும் பெறப்படும்.

நொ + கொற்ற = நொக்கொற்ற

து + கொற்ற = துக்கொற்ற

“ஏவல் முன் வல்லினம் இயல்போடு விகற்பே” என்று நன்னூல் நூற்பா 161இல் கூறப்பட்டுள்ளது. ஆனால், இயல்பாகாமல் நொ, நு என்னும் ஏவலின் முன் வல்லினம் மிக்கே வந்தது.

சிறப்புச் சூத்திரங்களால் சொல்லப்படாதன சிறுபான்மை மிகா.

ஏரி + கரை = ஏரிகரை

நாட்டு + பற்று = நாட்டுபற்று

பொதுவிதியின்படி (நன். 165) ஏரிக்கரை, நாட்டுப்பற்று என்று வருதல் வேண்டும். ஆனால், ஏரிகரை, நாட்டு பற்று என்று வருவதற்கு நன்னூல் சிறப்பு விதிகளைச் சொல்லவில்லை. எனவே “விதவாதன மன்னே” என்பதில் அடக்கிக் கொள்ள வேண்டும்.

உயிரீற்று மரப்பெயர் முன் வல்லினம் புணர்தல்

உயிரை இறுதியாய் உடைய சில மரப்பெயர்களின் முன் வேற்றுமைப் புணர்ச்சியில் வருமொழியில் வல்லினம் வந்தால் பொது விதிப்படி (நூ. 165) வல்லினம் மிகாமல் மெல்லினம் மிகும்.

(எ.டு) விள + காய் = விளங்காய்

மா + பழம் = மாம்பழம்

மரப்பெயர் முன்னர் இனமெல் லெழுத்து

வரப்பெறு னவும் உள வேற்றுமை வழியே. நூற்பா 166

### 2.2.3.5 அகர ஈற்றுக்குச் சிறப்பு விதிகள்

நன்னூல் 165 சூத்திரத்தின்படி நிலைமொழியின் ஈற்றில் உயிர் நின்று வருமொழியின் முதலில் வல்லெழுத்து வந்தால், அவ் வல்லெழுத்து மிகும் என்பதைப் பார்த்தோம். சில அகர ஈற்று நிலைமொழிகளின் முன்னால் வல்லினம் மிகாது.

செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சம், பல வகைப்பட்ட பெயரெச்சங்கள்,பலவகை வினை முற்றுக்கள், ஆறாம் வேற்றுமை அகர உருபு, அஃறிணைப் பன்மைப் பெயர் அம்ம என்னும் வினையசை இடைச்சொல் முதலியவற்றின் முன்னே வருகின்ற வல்லெழுத்துக்கள் இயல்பாகும். (நூற்பா 167)

செய்யிய என்னும் வினையெச்சம் பல்வகைப்

பெயரின் எச்சம் முற்று ஆறன் உருபே

அஃறிணைப் பன்மை அம்மமுன் இயல்பே.

என்னும் நூற்பா (167) அகர ஈற்றுக்குச் சிறப்பு விதியினைக் கூறியது.

(எ.டு) உண்ணிய கொண்டான் – செய்யாய என்னும் வினையெச்சத்தின் முன் வல்லினம்.

உண்ட குதிரை, வெளுத்த குதிரை, உற்ற குதிரை – பலவகைப் பெயரெச்சங்களின் முன் வல்லினம் இயல்பாகும்.

உண்டன குதிரை, கரியன குதிரை, வாழிய கொற்றா – பலவகை வினை முற்றுக்களின் முன் வல்லினம் இயல்பாக வந்தது.

தன் கைகள், தன் செவிகள் – ஆறாம் வேற்றுமை உருபின்முன் வல்லினம் இயல்பாக வந்தது.

பல குதிரைகள், சில குணங்கள் – அஃறிணைப் பன்மைப் பெயர்களின் முன் வல்லினம் இயல்பாகும்.

வாழிய என்பதற்குச் சிறப்பு விதி

அகர ஈற்றுச் சொற்கள் புணரும் முறைக்குச் சிறப்பு விதி கூறிய பின்னர், அகர ஈற்றில் முடியும் சில சொற்களை எடுத்துக் கொண்டு அவை எவ்வாறு புணரும் என்று நன்னூலார் கூறுகின்றார்.

வாழிய என்னும் வியங்கோள் முற்றின் இறுதியிலுள்ள யகர உயிர்மெய் நீங்கலும் உரியது. அவ்வுயிர் மெய் நீங்கி இகர இறுதி நிற்பினும் வல்லினம் வரின் பொது விதியினால் மிகாமலும் சிறப்பு விதிப்படி இயல்பே ஆகும்.

வாழிய என்பதன் ஈற்றின் உயிர்மெய்

ஏகலும் உரித்தஃது ஏகினும் இயல்பே. நூற்பா 168

(எ.டு) வாழி கொற்றா, வாழி சாத்தா – ஈற்றுயிர் மெய் நீங்கிய இடத்தும் வல்லினம் இயல்பாயிற்று.

சாவ என்பதற்குச் சிறப்பு விதி

சாவ என்னும் வினையெச்சத்தின் இறுதியில் உள்ள வகர உயிர்மெய் புணர்ச்சியில் கெடுதலும் உண்டு.

(எ.டு) சாவ + குத்தினான் = சாக்குத்தினான். ஈண்டு ‘சாதலும்’ என்னும் உம்மையால் சாவக்குத்தினான் என்பதே சிறப்பாகும்.

“சாவஎன் மொழியீற்று உயிர்மெய்சாதலும் விதி” நூற்பா 169

பல, சில

பல, சில என்னும் சொற்கள் தம்மொடு தாமே வந்து புணருகையில் இயல்பு, மிகுதல், நிலைமொழியின் இறுதி அகரம் கெட, லகரம் றகரமாய்த் திரிதல் இவ்விரு சொற்களின் முன் வல்லெழுத்தை முதலாக உடைய பிறமொழிகள் வரின் அகரம் நிற்றலும் நீங்கலும் உளவாகும்.

பலசில எனுமிவை தம்முன் தாம்வரின்

இயல்பு மிகலும் அகரம் ஏக

லகரம் றகர மாதலும் பிறவரின்

அகரம் விகற்ப மாகலும் உளபிற.

என்னும் நூற்பா (170) பல, சில என்னும் சொற்களுக்கான புணர்ச்சி விதியினைக் கூறியது.

1. பல + பல = பல பல, சில + சில = சில சில – வல்லினம் இயல்பாயிற்று.

2. பல + பல = பலப்பல, சில + சில = சிலச்சில – வல்லினம் மிக்கது.

3. பல + பல = பற்பல, சில + சில = சிற்சில – அகரம் கெட லகரம் றகரமாயிற்று.

பல, சில என்னும் சொற்கள் தம்முடன் தாம் புணராமல் அவற்றுக்கு முன் பிற சொற்கள் வந்து புணர்ந்தால் நிலைமொழி ஈற்றில் உள்ள அகரம் விகற்பம் ஆகும். அதாவது அகரம் நிற்றலும் நீங்கலும் உளவாம்.

பல + வளை = பலவளை, பல்வளை

சில + வளை = சிலவளை, சில்வளை

2.2.3.6 ஆகார ஈற்றிற்குச் சிறப்பு விதி

அல்வழிப் புணர்ச்சியில் ஆ, மா, மியா, ஆகார ஈற்று அஃறிணைப் பன்மை வினைமுற்று, ஆகார ஈற்று எதிர்மறை வினைமுற்று ஆகியவற்றின்முன் வல்லினம் வரின் இயல்பாகும்.

"அல்வழி ஆமா மியா முற்று முன் மிகா" நூற்பா 171

ஆ + குறிது = ஆகுறிது

மா + பெரியது = மாபெரியது – ஆ, மா முன் வல்லினம் இயல்பாயிற்று.

கேண்மியா + கொற்றா = கேண்மியாகொற்றா – மியா என்னும் முன்னிலையசை முன் வல்லினம் இயல்பாகும்.

உண்ணா + குதிரைகள் = உண்ணாகுதிரைகள் – எதிர்மறை வினைமுற்று முன் வல்லினம் இயல்பாயிற்று.

ஈண்டு உண்ணாக்குதிரைகள் எனப் பொதுவிதியால் (நன். 165) மிகுமாயின் உண்ணா என்பது உண்ணாத என்பதன் தகர இறுதி குறைந்த எதிர்மறை பெயரெச்சம் ஆகும்.

மேற்கூறிய சூத்திரத்தில் ஆமா என்று கூறியமையால் காட்டுப்பசு என்னும் பொருள்படும். எனவே ஆமா என்னும் பெயர் முன் வல்லினம் மிகாது.

ஆமா + குறிது = ஆமாகுறிது.

செய்யுளில் குற்றெழுத்தின் பின் நின்ற ஆகாரம் குறுகி அகரமாகும். அந்த அகரத்துடன் உகரம் பெறும். இவ்விரண்டுமின்றித் தன்னியல்பில் நிற்கும்.

குறியதன் கீழாக் குறுகலு மதனோடு

உகரம் ஏற்றலும் இயல் புமாம் தூக்கின். நூற்பா 172

நிலவிரி (நிலாவிரி) கானல்வாய் – குறியதன் கீழ் 'ஆ' குறுகியது.

மருவின்என் செய்யுமோ நிலவு (நிலா) – ஆகாரம் குறுகி உகரம் ஏற்றது.

நிலா வணங்கும் வெண்மணல் – இயல்பு நிலை

2.2.3.7 இகர வீற்றுச் சிறப்பு விதி

173 நூற்பா முதல் 175 ஆகிய மூன்று நூற்பாக்களில் இகர வீற்றுக்குப் பவணந்தியார் சிறப்பு விதி கூறுகின்றார்.

அன்றி, இன்றி என்னும் குறிப்பு வினையெச்சங்களின் இறுதியில் உள்ள இகரம் செய்யுளில் உகரமாய்த் திரிந்தால் வரும் வல்லினம் இயல்பாகும்.

அன்றி இன்றிஎன் வினைஎஞ்சு இகரம்

தொடர்பினுள் உகர மாய்வரின் இயல்பே. நூற்பா 173

(எ.டு) நாளன்று போகி – (அன்று + போகி)

உப்பின்று புற்கை உண்மா – (இன்றி + புற்கை)

இங்கு உகரமாய்த் திரியாவிட்டால் அன்றிப்போகி, இன்றிப்புற்கை என்று வல்லினம் மிகும்.

நாழி முன் உரி

உரி என்னும் அளவுப்பெயர் வருமொழியாயின் நிலைமொழியில் நின்ற நாழி என்னும் அளவுப் பெயரின் இறுதியிலுள்ள 'ழி' என்னும் உயிர்மெய் கெடும். அவ்விடத்தில் டகர உயிர்மெய் தோன்றும்.

உரிவரின் நாழியின் ஈற்றுயிர் மெய்கெட

மருவும் டகரமும் உரியின் வழியே

அகரவுயிர் மெய்யா மேற்பன வரினே.

என்னும் நூற்பா (174) நாழி முன் உரி குறித்த செய்தியினை விளக்கிறது.

நாழி + உரி = நாடுரி என நாழியின் ஈற்றுயிர் மெய் கெட்டு டகரம் தோன்றிற்று. ஆனால் இக்காலத்தில் இது நாவுரி என மருவிற்று.

உரி என்னும் அளவுப் பெயர் நிலைமொழியாய் நிற்குமானால் ஏற்ற வருமொழி வர யகர உயிர்மெய் தோன்றும்.

உரி + உப்பு = உரியஉப்பு

ஏற்பனவரின் என்று சூத்திரத்தில் உள்ளதால் ஏலாத சொற்கள் வருமொழியாக வந்தால் உரி என்பதோடு அவை இயல்பாய்ப் புணரும்.

(எ.டு) உரியரிசி, உரி + ஆழாக்கு = உரியாழாக்கு

உரிஎண்ணெய் = உரியெண்ணெய்

'புளி' என்ற சொல்

சுவையினை உணர்த்தும் புளி என்னும் சொல்லுக்கு முன் வல்லினம் மிகுதலுடன் மெல்லினமும் மிகும்.

"சுவைப்புளி முன்இன மென்மையும் தோன்றும்" நூற்பா 175

புளி + கறி = புளிக்கறி, புளிங்கறி

புளி + சோறு = புளிச்சோறு, புளிஞ்சோறு

புளி + தயிர் = புளித்தயிர், புளிந்தயிர்

மேற்கூறிய நூற்பாவில் மென்மையும் என்று உம்மை இடம் பெற்றதால் புளிக்கறி என வல்லினம் மிகுதலே சிறப்புடையதாகும்.

### 2.2.3.8 இகர, ஐகார ஈற்றுச் சிறப்பு விதி

இகர, ஐகார ஈற்றுப் பெயர்களுக்கு முன் வல்லினம் வருமாயின் இயல்பாகவும் பொதுவிதிப்படி மிக்கும் முடியும். மேலும் மிகுந்தும் மிகாமலும் விகற்பமாகவும் முடியும்.

அல்வழி இஐம் முன்னர் ஆயின்

இயல்பும் மிகலும் விகற்பமும் ஆகும். நூற்பா 176

எழுவாய்த் தொடர், உம்மைத் தொகைகளில் வல்லினம் இயல்பாகும்.

புலி + சிறியது = புலிசிறியது – எழுவாய்த் தொடர்

யானை + குதிரை = யானை குதிரை – உம்மைத்தொகை

பண்புத் தொகையிலும் உவமைத் தொகையிலும் வல்லினம் மிகும்.

மாசி + திங்கள் = மாசித்திங்கள் – பண்புத்தொகை

பனை + கை = பனைக்கை – உவமைத்தொகை

சில எழுவாய்த் தொடரில் வருமொழி வல்லினம் விகற்பமாகும். ஒரே புணர்ச்சியில் இயல்பாகவும் வல்லினம் மிக்கும் வரும்.

கிளி + குறிது = கிளிகுறிது, கிளிக்குறிது – எழுவாய்த்தொடர்

தினை + குறிது = தினைகுறிது, தினைக்குறிது – இவை எழுவாயில் விகற்பித்தவை.

### 2.2.3.9 ஈகார ஈற்றுச் சிறப்பு விதி

ஆப்பீ என்னும் சொல்முன் அல்வழி, வேற்றுமை ஆகிய இரு வழிகளிலும் நாற்கணமும் வந்தால் இறுதி எழுத்து குறுகும். அவ்வாறு குறுகிய இகரம் அல்வழியில் இயல்பாகும்.

ஆமுன் பகரவீ அனைத்தும் வரக்குறுகும்

மேலன அல்வழி இயல்பா கும்மே. நூற்பா 177

(ஆப்பீ – பசுவின் சாணம்.)

(எ.டு) ஆப்பீ + அரிது = ஆப்பியரிது

ஆப்பீ + குளிரும் = ஆப்பிகுளிரும்

அல்வழியில் இயல்பாகும் என்றமையால் வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லினம் மிகும்.

(எ.டு) ஆப்பி + குளிர்ச்சி = ஆப்பிக்குளிர்ச்சி

பீ, நீ, மீ – புணரும் இலக்கணம்

பீ, நீ, மீ என்னும் சொற்களின் முன் வருகின்ற வல்லினம் அல்வழியில் இயல்பாகும். மீ என்னும் சொல்லின்முன் வல்லினம் வரின் வல்லினமும் மெல்லினமும் மிகும்.

பவ்வீ நீமீ முன்ன ரல்வழி

இயல்பாம் வலிமெலி மிகலுமா மீக்கே. நூற்பா 178

பீ + குறிது = பீகுறிது

நீ + குறியை = நீகுறியை

மீ + கண் = மீகண் – அல்வழியில் இயல்பானது.

மீ + கூற்று = மீக்கூற்று – வல்லினம் மிகுந்தது.

மீ + தோல் = மீந்தோல் – மெல்லினம் மிகுந்தது.

2.2.3.10 முற்றியலுகரத்திற்குச் சிறப்பு விதி

மூன்றாம் வேற்றுமை உருபு, ஆறாம் வேற்றுமை உருபு, இயல்பாகவும் விகாரமாயும் வரும்எண்ணுப் பெயர், வினைத்தொகை, சுட்டுப்பெயர் ஆகிய முற்றுகரச் சொற்களின் முன் வல்லினம் வரின் இயல்பாகும்.

மூன்றா றுருபொண் வினைத்தொகை சுட்டீ

றாகு முகர முன்ன ரியல்பாம்.

என்னும் நூற்பா (179) முற்றியலுகரத்திற்குச் சிறப்பு விதியினைக் கூறியது.

(எ.டு)

சாத்தனொடு கொண்டான் – மூன்றாம் வேற்றுமை

சாத்தனது கை – ஆறாம் வேற்றுமை

ஒரு கை – எண்ணுப் பெயர் விகாரம்

ஏழு தலை – எண்ணுப்பெயர் இயல்பு

அடுகளிறு – வினைத்தொகை

அது பெரிது, இது பெரிது, உது பெரிது – சுட்டு – அல்வழி

அது கொண்டான், இது கொண்டான், உது கொண்டான் – சுட்டு – வேற்றுமை

அது என்பதற்குச் சிறப்பு விதி

அது என்னும் சுட்டுப்பெயர் முன் அன்றி என்னும் சொல் வரின் செய்யுளில் அச்சொல் ஆன்று என்று நீளும்.

அது + அன்று = அதான்று

"அதுமுன் வரும் அன்று ஆன்றாம் தூக்கின்" நூற்பா 180.

தன்மதிப்பீட்டு வினாக்கள்

II.

1. இயல்பினும் விதியினும் நின்றவுயிர்முன் ............ மிகும்.
2. 'சாவ' என்னும் வினையெச்சத்தின் இறுதியில் உள்ள வகர மெய்ப் புணர்ச்சியில் கெடுதலும் உண்டு. சரியா? தவறா?
3. 'அகரம் விகற்ப மாகலும் உளபிற' என முடியும் நூற்பாவினை எடுத்தெழுதுக.
4. எழுவாய்த்தொடர், உம்மைத் தொகைகளில் வல்லினம் ............ ஆகும்.
5. புளி என்ற சொல் புணர்ச்சி உணர்த்தும் நூற்பாவினை எழுது.
6. பண்புத் தொகையிலும் உவமைத் தொகையிலும் .......... மிகும். எப்படி?
7. இயல்பாகும் ஆகார ஈறுகளைப் பட்டியலிடுக.

2.2.3.11 குற்றியலுகர ஈற்றுச் சிறப்பு விதி

நன்னூல் 94ஆம் நூற்பாவில் குற்றியலுகரத்தின் இலக்கணங்களும் எழுத்திலக்கணத்தில் ஈற்றயல் எழுத்தை அடிப்படையாகக் கொண்டு குற்றியலுகரம் ஆறு வகையாகப் பிரிக்கப்படும் என்றும் கூறப்பட்டன. ஆனால் இங்கு குற்றியலுகர ஈற்று நிலைமொழிக்கு முன்னால் மெய் வந்தால் அவை எவ்வாறு புணரும் என்பது எடுத்துரைக்கப்படுகிறது. நன்னூல் 181 நூற்பா முதல் 199 நூற்பா வரை குற்றியலுகர ஈற்றுச் சிறப்பு விதிகள் கூறப்படுகின்றன.

வன்றொடர் அல்லாத ஐந்து தொடர்க் குற்றியலுகரத்தின் முன்னும் அல்வழியில் வல்லினம் இயல்பாகும்.

வன்றொட ரல்லன முன்மிகா வல்வழி. நூற்பா 181

ஆறு + தலை = ஆறுதலை – நெடில் தொடர்

எஃகு + பெரியது = எஃகு பெரியது – ஆய்தத் தொடர்

வரகு + சிறிது = வரகு சிறிது – உயிர்த்தொடர்

வந்து + தந்தான் = வந்து தந்தான் – மென்தொடர்

மார்பு + பெரியது = மார்பு பெரியது – இடைத்தொடர்

‘வன்றொடர் அல்லன முன்மிகா’ என்றமையால் வன்றொடர் முன் அல்வழியில் வல்லினம் மிகும்.

படித்து + தேர்ந்தான் = படித்துத் தேர்ந்தான்

மேலும், அங்கு, இங்கு, உங்கு, எங்கு, ஆங்கு, ஈங்கு, ஊங்கு, யாங்கு, ஆண்டு, யாண்டு, ஈண்டு என்னும் மென்தொடர் குற்றியலுகரங்களின் முன்னும் வல்லினம் மிகும்.

அங்கு + கொண்டான் = அங்குக் கொண்டான்

எங்கு + கொண்டான் = எங்குக் கொண்டான்

குற்றியலுகரத்தின் முன் வேற்றுமையில் வல்லினம்

இடைத்தொடர், ஆய்தத் தெடர் ஏற்று இடையில் மிகாத நெடில் உயிர்த்தொடர், ஒற்று இடையில் மிகாத உயிர்த்தொடர் ஆகியவற்றின் முன் வேற்றுமையில் வல்லினம் இயல்பாகும்.

இடைத்தொடர் ஆய்தத்தொடர் ஒற்று இடையின்

மிகாநெடில் உயிர்த்தொடர் முன்மிகா வேற்றுமை.

என்னும் நூற்பா (182) குற்றியலுகரத்தின் முன் வேற்றுமையில் வல்லினம் புணரும் செய்தியினைக் கூறியது.

(எ.டு)

தெற்கு + கால் = தெற்கு கால் – இடைத்தொடர்

எஃகு + கடுமை = எஃகு கடுமை – ஆய்தத் தொடர்

நாகு + கால் = நாகு கால் – ஒற்று இடையில் மிகாத நெடில் தொடர்

வரகு + கதிர் = வரகு கதிர் – ஒற்று இடையில் மிகாத உயிர்த்தொடர்

ஒற்று இடையில் மிகும் நெடில்தொடர், உயிர்த்தொடர்

நெடில் தொடர், உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்களில் அவ்வுகரம் ஏறி நின்ற ட, ற என்னும் மெய்கள் வேற்றுமையில் பெரும்பாலும் இரட்டும் தன்மையன.

நெடிலோடு உயிர்த்தொடர்க் குற்றுக ரங்களும்

டறவொற் றிரட்டும் வேற்றுமை மிகலே. நூற்பா 183

(எ.டு) நெடில் தொடர் உயிர்த்தொடர்

ஆடு + கால் – ஆட்டுக்கால் முரடு + மனிதன் = முரட்டு மனிதன்

சோறு + வளம் = சோற்றுவளம் வயிறு + இடை = வயிற்றிடை

இங்கு வேற்றுமையில் பெரும்பாலும் இரட்டும் என்பதால், சிறுபான்மை வேற்றுமையில் இரட்டாது என்பதும் சிறுபான்மை அல்வழியில் இரட்டும் என்பதும் ட, ற என்னும் ஒற்றுக்கள் அல்லாத பிற ஒற்றுக்கள் சிறுபான்மை இருவழியிலும் இரட்டும் என்பதும் பெறப்படும்.

(எ.டு)

கிணறு + தோண்டினான் = கிணறு தோண்டினான் – வேற்றுமையில் இரட்டவில்லை.

களிறு + யானை = களிற்றியானை

காடு + அரண் = காட்டரண் – அல்வழியில் ட, ற இரட்டின.

வெருகு + கண் + வெருக்குக்கண் – வேற்றுமை

எருது + மாடு = எருத்துமாடு – அல்வழி – இரு வழியிலும் பிற ஒற்றுக்கள் இரட்டின.

மென்றொடர்க் குற்றியலுகரம்

சில மென்தொடர்க் குற்றியலுகர மெய்கள் வேற்றுமைப் புணர்ச்சியில் தமக்கு இனமான வன்தொடர்க் குற்றியலுகர மொழிகளாகத் திரியும். பல அவ்வாறு திரியாது.

மென்தொடர் மொழியுள் சிலவேற்றுமையின்

தம்மினம் வன்றொடர் ஆகா மன்னே. நூற்பா 184

(எ.டு)

மருந்து + பை = மருத்துப்பை

குரங்கு + மனம் = குரக்குமனம்

இரும்பு + வலிமை = இருப்புவலிமை

இவை வன்தொடர்க் குற்றியலுகரமாகத் திரிந்தன.

வண்டு + கால் = வண்டுக்கால்

பந்து + வன்மை = பந்து வன்மை

இவை வன்தொடர்க் குற்றியலுகரமாகத் திரியாதன.

இங்கு 'மன்' என்ற மிகையில் அல்வழிப் புணர்ச்சியில் சிறுபான்மை வன்தொடர் ஆகும். மேலும் அல்வழி, வேற்றுமை என்னும் இரு நிலைகளிலும் விகற்பித்தும் வரும்.

என்பு + உடம்பு = எற்புடம்பு

அன்பு + தளை = அற்புத்தளை – அல்வழியில் வன்றொடர் ஆயின.

குரங்கு + குட்டி = குரங்குக்குட்டி, குரக்குக்குட்டி – வேற்றுமையில் விகற்பமாய் வந்தது.

அன்பு + தளை = அன்புத்தளை, அற்புத்தளை – அல்வழியில் விகற்பமாய் வந்தது.

ஐகாரச் சாரியை இறுதியில் பெற்று வருகின்ற குற்றியலுகரச் சொற்களும் உண்டு.

ஐயீற்று உடைக்குற் றுகரமு முளவே. நூற்பா 185

இவ்வாறு வருவன மென்தொடர்க் குற்றியலுகரங்கள் ஆகும்.

பண்டு + காலம் = பண்டைக்காலம்

இன்று + நாள் = இற்றைநாள் – அல்வழி

அன்று + கூலி = அற்றைக்கூலி

பண்டு + நலம் = பண்டுநலம் – வேற்றுமை

'ஐயீற்றுடைக் குற்றுகரம்' என்று பொதுவாகக் கூறியமையால் பின்வரும் விதிகளும் பெறப்படும்.

1. நேற்று + பொழுது = நேற்றைப் பொழுது – வன்தொடர் ஐகாரச் சாரியைப் பெற்றது.

2. ஒன்று – ஒற்றை – வருமொழியை நோக்காமல் ஐகாரச் சாரியை பெற்றது.

3. ஓராண்டு – ஓராட்டை – அடையடுத்த மொழியாய் நின்று ஐகாரச் சாரியை பெற்றது.

திசைப் பெயர்க்குச் சிறப்பு விதி

திசையொடு திசையும் பிறவும் சேரின்

நிலையீற்று உயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்

றகரம் னலவாத் திரிதலும் ஆம்பிற. நூற்பா 186

குற்றியலுகர ஈற்றுத் திசைப்பெயருடன் திசைப்பெயரும் பிற பெயரும் வந்து புணருமாயின் நிலைமொழியின் இறுதியில் 'கு' என்னும் உயிர்மெய் கெடும். மேலும் அதன் அயலின் நின்ற ககர மெய் கெடும். ஈற்றயலில் நின்ற றகர மெய் ளகர மெய்யாகவும் லகர மெய்யாகவும் திரியும்.

(எ.டு)

வடக்கு + கிழக்கு = வடகிழக்கு

வடக்கு + மலை = வடமலை

உயிர் மெய்யும் ககர மெய்யும் கெட்டன.

தெற்று + மேற்கு = தென்மேற்கு

தெற்கு + குமரி + தென்குமரி

உயிர்மெய் கெட றகரம் னகரமாகத் திரிந்தது.

மேற்கு + காற்று = மேல்காற்று

மேற்கு + கடல் = மேல்கடல்

உயிர்மெய் கெட, றகரம் லகரமாய்த் திரிந்தது.

மேற்கூறிய சூத்திரத்தில் 'பிற' என்று வந்தமையால் பின்வருவனவற்றையும் கொள்ளுதல் வேண்டும்.

1. கிழக்கு + கரை = கீழ்கரை – கிழக்கு என்பதில் ழகரத்தின் அகரம் கெட்டு முதல் நீண்டது.
2. கிழக்கு + குளம் = = கீழைக்குளம் – ஐகாரச் சாரியைப் பெற்றது.
3. வடக்கு + மலை = வடக்குமலை – இயல்பாய் வந்தது.
4. தெற்கு + வடக்கு = தெற்குவடக்கு – பொதுவிதி பெற்றது.

தெங்கு என்பதற்குச் சிறப்பு விதி

காய் என்னும் சொல் வருமொழியாய் வந்தால் தெங்கு என்னும் நிலைமொழியின் முதலெழுத்து நீண்டு, ஈற்றிலுள்ள 'கு' என்னும் உயிர்மெய் கெடும்.

தெங்கு நீண்டு ஈற்றுஉயிர் மெய்கெடும் காய்வரின். நூற்பா 187

(எ.டு) தெங்கு + காய் = தேங்காய்

எண்ணுப் பெயர்களுக்குச் சிறப்பு விதி

எண்ணுப்பெயர், நிறைப்பெயர், அளவுப்பெயர் ஆகிய பெயர்களும் பிற பெயர்களும் வருமொழியாய் வந்தால், ஒன்று முதல் எட்டு வரை உள்ள எண்களுள், முதலில் உள்ள இரண்டு எண்களும் முதல் நீளும் மூன்று, ஆறு, ஏழு ஆகியவற்றின் முதல் எழுத்தும் குறுகும். ஆறும் ஏழும் அல்லாத ஆறு எண்களினுடைய இறுதியில் உள்ள உயிர்மெய்களுள் ஏழு என்பதன் இறுதியில் உள்ள உயிரும் கெடும் ஏற்ற இடங்களில் என்று புலவர் கூறுவர்.

எண்ணிறை யளவும் பிறவு மெய்தின்

ஒன்று முதலெட் டீறா மெண்ணுண்

முதலீ ரெண்முத னீளு மூன்றா

றேழ்குறு கும்மா றேழல் லவற்றின்

ஈற்றுயிர் மெய்யு மேழ னுயிரும்

ஏகு மேற்புழி என்மனார் புலவர்.

என்னும் நூற்பா (188) எண்ணுப் பெயர்களுக்குச் சிறப்பு விதியினைக் கூறியது.

ஆறு + பத்து = அறுபது

ஆறு + கழஞ்சு = அறுகழஞ்சு

ஏழு + பத்து = எழுபது

ஏழு + கழஞ்சு = எழுகழஞ்சு

ஆறு + நாழி = அறுநாழி

ஆறு + வகை = ஆறுவகை

ஏழு + நாழி = எழுநாழி

ஏழு + வகை = எழுவகை

இங்கு ஏற்புழி என்பதால் இரண்டு கழஞ்சு, மூன்றுபடி, நான்கு பொருள், ஐந்து தலை, ஆறு படைவீடு, ஏழு குணம், எட்டுக்கோடி எனவும் வரும்.

ஒன்று, இரண்டு என்பனவற்றிற்குச் சிறப்பு விதி

நன்னூல் நூற்பா 188இல் கூறப்பட்ட விகாரங்களுடன் ஒன்று என்பதில் உள்ள னகர மெய் ரகரமாக மாறுவதும் அவ்வாறு மாறியபின் உகரம் வந்து சேருவதும் உண்டு. இரண்டு என்பதில் உள்ள னகர ஒற்றும் அதன்மேல் உள்ள உயிராகிய அகரம் கெடுவதும் அவ்வாறு கெட்டபின் உகரம் வந்து சேர்வதும் உண்டு.

"ஒன்றன் புள்ளி ரகரம் ஆக

இரண்டன் ஒற்று உயிர் ஏகஉவ் வருமே. நூற்பா 189

(எ.டு)

ஒன்று + ஆயிரம் = ஓராயிரம்

ஒன்று + கலம் = ஓர்கலம்

ஒன்று + நாழி = ஓர்நாழி

ஒன்று + யானை = ஓர்யானை

ஒன்று என்பது முதல் நீண்டு ஈற்று உயிர்மெய் கெட்டு னகரம் ரகரமாயிற்று.

இரண்டு + ஆயிரம் = ஈராயிரம்

இரண்டு + கலம் = ஈர்கலம்

இரண்டு + நாழி = ஈர்நாழி

இரண்டு + யானை = ஈர்யானை

இரண்டு என்பது முதல் நீண்டு ஈற்று உயிர்மெய்யும் ணகர அகர உயிரும் கெட்டது.

ஒன்று + ஆயிரம் = ஓராயிரம்

ஒன்று + கழஞ்சு = ஒரு கழஞ்சு

ஒன்று + நாள் = ஒரு நாள்

ஒன்று + வழி = ஒரு வழி

ஒன்று என்பது முதல் நீளாமல் ரகர மெய்யின் மேல் உகரம் பெற்றது.

இரண்டு + ஆயிரம் = இராயிரம்

இரண்டு + கழஞ்சு = இரு கழஞ்சு

இரண்டு + நாள் = இரு நாள்

இரண்டு + வழி = இரு வழி

இரண்டு என்பது முதல் நீளாமல் ஈற்று உயிர்மெய்யும் ணகர மெய்யும் அகர உயிரும் கெட்டு உகரம் பெற்றது.

மூன்று என்பதற்குச் சிறப்பு விதி

இறுதி உயிர்மெய் கெட்டு நின்ற மூன்று என்னும் எண்ணினது னகர மெய் கெடுதலும், வருமொழியின் முதலில் வரும் மெய்யாகத் திரிதலும் ஏற்குமிடங்களில் ஆகும்.

மூன்றனுறுப் பழிவும் வந்தது மாகும். நூற்பா 190

(எ.டு)

மூன்று + ஆயிரம் = மூவாயிரம்

மூன்று + உலகு = மூவுலகு

உயிர் வர முதல் குறுகாமல் இறுதி உயிர்மெய்யும் னகர மெய்யும் கெட்டன.

மூன்று + கழஞ்சு = முக்கழஞ்சு

மூன்று + பத்து = முப்பது

மூன்று + நூறு = முந்நூறு

மெய் வர முதல் குறுகி இறுதி உயிர் கெட்டு னகர மெய், வருமொழி மெய்யாகத் திரிந்தது.

நான்கு என்பதற்குச் சிறப்பு விதி

நிலைமொழியின் இறுதி உயிர்மெய் கெட்டு நின்ற நான்கு என்னும் எண்ணினது னகர மெய், லகர மெய்யாகவும், றகர மெய்யாகவும் ஏற்குமிடங்களில் திரியும்.

“நான்கன் மெய்யே லறஆ கும்மே” நூற்பா 191

(எ.டு)

நான்கு + அடி = நாலடி

நான்கு + வடை = நால்வடை

நான்கு + பத்து = நாற்பது

நான்கு + கழஞ்சு = நாற்கழஞ்சு

நான்கு + மணி = நான்மணி

ஏற்புழி என்றதனால், உயிரும் இடையினமும் வருமொழியில் வரும் போது னகர மெய், லகரமாகத் திரியும். வல்லினம் வரும்போது றகரமாகத் திரியும். மெல்லினம் வரும்போது ளகர ஈற்றுப் புணர்ச்சி போன்று முடியும்.

ஐந்து என்பதற்குச் சிறப்பு விதி

நிலைமொழியின் இறுதி உயிர்மெய் கெட்டு நின்ற ஐந்து என்னும் எண்ணினது நகர மெய் ஏற்குமிடங்களில் வரும் மெய்யாகத் திரிதலும் வரும் மெய்க்கு இனமாகத் திரிதலும் கெடுதலும் உண்டு.

(எ.டு)

ஐந்து + மூன்று = ஐம்மூன்று

ஐந்து + கலம் = ஐங்கலம்

ஐந்து + ஒன்று = ஐயொன்று

ஐந்து + வகை = ஐவகை

ஐந்தனொற் றடைவது மினமுங் கெடும். நூற்பா 192

எட்டு என்பதற்குச் சிறப்பு விதி

நிலைமொழியின் இறுதி உயிர்மெய் கெட்டு நின்ற எட்டு என்னும் எண்ணினது டகர மெய் நாற்கணமும் வரின் ணகர மெய்யாகத் திரியும் என்று சொல்வர்.

“எட்டன் உடம்பு ணவ்வாகும் என்ப” நூற்பா 193

(எ.டு)

எட்டு + ஆயிரம் = எண்ணாயிரம்

எட்டு + கலம் = எண்கலம்

எட்டு + நாள் = எண்ணாள்

எட்டு + வகை = எண்வகை

ஒன்பது என்பதன் முன் பத்தும் நூறும்

ஒன்பது என்னும் எண்ணுடன் பத்து, நூறு என்னும் சொற்கள் வந்து புணருமாயின் வருமொழியாகிய பத்தை நூறாகவும், நூற்றை ஆயிரமாகவும் திரித்து, நிலைமொழியில் உள்ள ஒ என்ற உயிருடன் த என்ற மெய்யைச் சேர்த்து, நிலைமொழியிறுதியில் உள்ள பஃதைக் கெடுத்து, நிலைமொழியின் முதல் எழுத்துக்கு அயல் எழுத்தை முறையே ணகர மெய்யாகவும் ளகர மெய்யாகவும் திரிப்பது முறையாகும்.

ஒன்பா னொடுபத்து நூறு மொன்றின்

முன்னதின் ஏனைய முரணி யொவ்வொடு

தகர நிறீஇப்பஃ தகற்றி னவ்வை

நிரலே ணளவாகத் திரிப்பது நெறியே. நூற்பா 194

(எ.டு)

1. ஒன்பஃது + பத்து (வருமொழியாகிய பத்து என்பதை ‘நூறு’ என்று திரித்துக் கொள்ளுதல் வேண்டும்.)

ஒன்பஃது + நூறு (ஒகரத்துடன் தகர மெய்யைச் சேர்க்க வேண்டும்.)

தொன்பஃது + நூறு (பஃது என்பதை அகற்றுதல் வேண்டும். மேலும் னகர மெய்யை நகர மெய்யாகத் தொன் + நூறு திரித்தல் வேண்டும்.)

தொண் + நூறு = தொண்ணூறு

2. ஒன்பஃது + நூறு (இங்கு நூறு என்பதை ஆயிரம் என்று திரித்துக்கொள்ளுதல் வேண்டும்)

ஒன்பஃது + ஆயிரம் வருமொழியில் பத்துக்கு உரியதையே நூறுக்கும் பின்பற்றுதல் வேண்டும்.)

தொன்பஃது + ஆயிரம்

தொன் + ஆயிரம்

தொள் + ஆயிரம் = தொள்ளாயிரம்

நெறியே என்ற மிகையால் தனிக்குறில் ஒற்று இரட்டிக்கும்.

ஒன்று முதலிய எட்டு எண்களின் முன் பத்து

ஒன்று முதல் எட்டு வரை உள்ள எண்களின் முன் வரும் பத்து என்னும் எண்ணின் நடுவில் நின்ற தகர மெய் கெடுதலும், தகரம் கெட்ட இடத்தில் ஆய்தம் தோன்றலும் என்று இரு விதிகளையும் பத்து என்பது ஏற்கும் என்பர்.

முதலிரு நான்கா மெண்முனர்ப் பத்தின்

இடையொற் றேக லாய்த மாகல்

எனவிரு விதியு மேற்கு மென்ப. நூற்பா 195

ஒன்று + பத்து = ஒருபது, ஒருபஃது

இரண்டு + பத்து = இருபது, இருபஃது

மூன்று + பத்து = முப்பது, முப்பஃது

நான்கு + பத்து = நாற்பது, நாற்பஃது

ஐந்து + பத்து = ஐம்பது, ஐம்பஃது

ஆறு + பத்து = அறுபது, அறுபஃது

ஏழு + பத்து = எழுபது, எழுபஃது

எட்டு + பத்து = எண்பது, எண்பஃது

ஒருபஃது முதலியவற்றிற்குச் சிறப்பு விதி

ஒருபஃது முதலாகிய எட்டு எண்களின் முன்னால் ஒன்று முதலாகிய ஒன்பது எண்களும் அவ்வெண்களைச் சேர்ந்த மற்றவையும் வந்து புணரின் நிலைமொழியில் உள்ள ஆய்தம் கெடும். அவ்விடத்தில் இயல்பாகிய தகரம் வரும்.

ஒருபஃது தாதிமுன் னொன்று முதலொன்பான்

எண்ணு மவையூர் பிறவு மெய்தின்

ஆய்த மழியவாண் டாகுந் தவ்வே. நூற்பா 196

(எ.டு) ஒருபஃது + ஒன்று = ஒருபத்தொன்று – ஒருபஃது முன் ஒன்று என்னும் எண் வந்தது.

இருபஃது + மூன்று கலம் = இருபத்துமூன்று கலம் – இருபஃது முன் மூன்று என்னும் எண்ணும் அதனைச் சேர்ந்த கலமும் வந்தன.

பத்து, ஒன்பது என்பனவற்றின் முன் பிற எண்கள்

ஒன்று முதல் பத்து வரை உள்ள எண்களும், ஆயிரம், கோடி ஆகிய எண்களும் நிறை, அளவு முதலிய பெயர்களும் பிற பெயரும் வருமொழியாக வரினும் நிலைமொழியாகிய பத்து என்பதன் இறுதியிலுள்ள உயிர்மெய் கெடும். பின் அந்த இடத்திற்கு ஏற்ப இன் சாரியையோ, இற்றுச் சாரியையோ வரும். ஒன்பது என்னும் நிலைமொழியும் மேற்கூறிய எண்ணுப் பெயர் முதலியன வந்து பொருந்தின் இன் சாரியையோ, இற்றுச் சாரியையோ பெற்று வரும்.

ஒன்றுமுத லீரைந் தாயிரம் கோடி

எண்ணிறை யளவும் பிறவரிற் பத்தின்

ஈற்றுயிர் மெய்கெடுத் தின்னு மிற்றும்

ஏற்ப தேற்கு மொன்பது மினைத்தே. நூற்பா 197

(எ.டு) இன் சாரியை இற்றுச் சாரியை

பத்து + ஒன்று = பதினொன்று பதிற்றொன்று

ஒன்பது + ஆயிரம் = ஒன்பதினாயிரம் ஒன்பதிற்றாயிரம்

பதினொன்று என்பது உம்மைத்தொகை. பதிற்றொன்று என்பது பண்புத் தொகையாகும். ஏற்பது ஏற்கும் என்றமையால் பத்துக்கோடி, ஒன்பது கோடி என்னும் பொதுவிதி பெறும்.

பத்து முன் இரண்டு

பத்து முன் இரண்டு என்னும் எண் வந்தால் பத்தின் இறுதியிலுள்ள உயிர்மெய் மறையும். மறைந்த பின் இடையில் நின்ற தகர மெய் னகர மெய்யாகத் திரியும்.

இரண்டு முன்வரிற் பத்தினிற் றுயிர்மெய்

கரந்திட வொற்றுனவ் வாகு மென்ப. நூற்பா 198

பத்து + இரண்டு = பன்னிரண்டு

ஒன்று முதலியன இரட்டித்தல்

ஒன்பது என்னும் எண் அல்லாத ஒன்று முதல் பத்து வரை உள்ள எண் ஒன்பதையும் இரட்டித்துச் சொன்னால் நிலைமொழியின் முதல் எழுத்து நீங்கலாக ஏனைய எல்லாம் கெடும். உயிரை முதலாக உடைய எண் வந்தால் வகர மெய் மிகும். மெய்யை முதலாக உடைய எண் வந்தால் வந்த மெய் மிகும்.

ஒன்பது ஒழிந்த எண் ஒன்பதும் இரட்டின்

முன்னதின் முன்னல ஓட உயிர்வரின்

வவ்வும் மெய்வரின் வந்ததும் மிகல்நெறி. நூற்பா 199

(எ.டு)

ஒன்று + ஒன்று = ஒவ்வொன்று

இரண்டு + இரண்டு = இவ்விரண்டு

பத்து + பத்து = பப்பத்து

மும்மூன்று, நந்நான்கு என்று வருவனவற்றிற்கும் ஒன்றொன்று, கழக் கழஞ்சு என்பனவற்றிற்கும் உரிய இலக்கணத்தை நெறி என்றமையால் அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

2.2.3.12 ஊகாரவீற்றுச் சிறப்பு விதி

பூ என்னும் பெயர்ச்சொல்லின் முன்வரும் வல்லினம் பொது விதியால் மிகுதலே அல்லாமல் அவற்றிற்கு இனமாகிய மெல்லினமும் மிகும்.

(எ.டு) பூ + கொடி = பூங்கொடி

பூ + தடம் = பூந்தடம்

பூப்பெயர் முன் இன மென்மையும் தோன்றும். நூற்பா 200

2.2.3.13 ஏகார, ஓகாரவீற்றுச் சிறப்பு விதி

இடைச்சொற்களாகிய ஏ, ஓ என்பனவற்றின் முன் வல்லினம் வந்தால் பொது விதிப்படி வல்லினம் மிகாமல் இயல்பாக வரும்.

“இடைச்சொல் ஏஓ முன்வரின் இயல்பே” நூற்பா 201

அவனே + கண்டான் = அவனே கண்டான்

அவனோ + கண்டான் = அவனோ கண்டான்

2.2.3.14 ஐகார ஈற்றுச் சிறப்பு விதி

ஐகார ஈற்றுச் சொற்கள் வேற்றுமையில் வருமாயின் ஈற்று ஐகாரம் கெடுதலுடன் அம் சாரியைப் பெற்று முடிவனவும் உள்ளன.

வேற்றுமை யாயி னைகா னிறுமொழி

ஈற்றழி வோடுமம் மேற்பவு முளவே. நூற்பா 202

(எ.டு) வழுதுணை + காய் = வழுதுணங்காய்

தாழை + பூ = தாழம்பூ

மேற்கூறியவற்றில் இறுதி ஐகாரம் கெட்டு அம் சாரியை பெற்றன.

புன்னை + கானல் = புன்னையங்கானல்

முல்லை + புறவம் = முல்லையம்புறவம்

இறுதி ஐகாரம் கெடாமல் அம் சாரியைப் பெற்றன.

பனை நிலைமொழியாகப் புணர்வது

பனை என்னும் நிலைமொழி வேற்றுமைப் புணர்ச்சியில் பின்வருமாறு புணரும்.

பனை + கொடி = பனைக்கொடி = வல்லின மெய் மிக்கது.

பனை + காய் = பனங்காய் – ஐ கெட்டு அம் சாரியை பெற்றது.

பனை + திரள் = பனைத்திரள்; பனைந்திரள் – உறழ்ந்தது.

பனை + அட்டு = பன்னாட்டு – ஐ கெட்டு அ நீண்டது.

பனைமுன் கொடிவரின் மிகலும் வலிவரின்

ஐ போய் அம்மும் திரள்வரின் உறழ்வும்

அட்டுறின் ஐ கெட்டு அந்நீளவுமாம் வேற்றினம். நூற்பா 203

தன்மதிப்பீட்டு வினாக்கள்

III.

1. ஆறு + தலை = ஆறுதலை – எத்தொடர்?
2. ஆடு + கால் = .............. என்றவாறு அமையும்.
3. ‘தெங்கு’ என்பதன் சிறப்பு விதி கூறும் நூற்பாவினை எழுதுக.
4. மூன்று என்பதன் சிறப்பு விதி உணர்த்தும் பொருளினை எழுதுக.
5. ஒன்பது என்பதன் முன் பத்துப் புணரும் புணர்ச்சியினை எழுதுக.
6. பூப்பெயர் முன் இன மென்மையும் தோன்றும் – இது எவ்வீற்றுச் சிறப்புவிதி?
7. பத்து + இரண்டு = .................... என வரும்.
8. பனை + கொடி = பனைக்கொடி – இதில் எம் மெய் மிக்கு வந்தது?

தொகுப்புரை

புணர்ச்சி என்பதன் வரையறையும், அப்புணர்ச்சியின் வகைப்பாடுகளையும் ஒருசேர அறிய முடிந்தது.

இவ்வியலில் உயிரீற்றுக்கும் மெய்யீற்றுக்கும் உரிய பொதுவான புணர்ச்சி விதியினைப் பவணந்தியார் கூறியுள்ளமையை அறிந்து கொண்டோம்.

உயிர்முன் உயிர் சேரும் உயிரீற்றுச் சிறப்புப் புணர்ச்சி பற்றிய செய்தியினையும், உயிரீற்றின் முன் வல்லினம் சேர்வதால் ஏற்படும் புணர்ச்சி நிலைகளையும் பவணந்தியார் இவ்வியலில் விளக்கமாகக் கூறியுள்ளமையை உணரமுடிந்தது.

உயிரீற்றின் முன் வல்லினம் என்னும் புணர்ச்சியில் அகர, ஆகார, இகர, ஈகார, உகர, ஊகார, எகர, ஐகார, ஓகார ஈற்றுச் சிறப்பு விதிகளைப் பவணந்தியார் கூறியுள்ளமையை அறியமுடிந்தது.

பயிற்சி வினாக்கள்

சிறு வினாக்கள்

1. வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப்புணர்ச்சி என்றால் என்ன?
2. பலாமரம், மெய்ம்மாட்சி, கைந்நீண்டது – இதில் புணர்ச்சிகளுக்குரிய விதி யாது?
3. உடம்படுமெய் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
4. அ+யானை, ஆ+இடை – இவை எவ்வாறு புணரும். அதன் விதியைக் கூறுக.
5. ‘தொடர்பினுள் உகரமெய் வரின் இயல்பே’ – எவை?
6. ‘மீ’ என்ற சொல் எவ்வாறு புணரும்?
7. தேங்காய் – இதனைப் பிரித்துப் புணர்ச்சிவிதி பொருத்திக் காட்டுக.
8. ஈகார வீற்றுச் சிறப்புவிதி குறித்து எழுதுக.

குறு வினாக்கள்

1. புணர்ச்சி விகாரம், செய்யுள் விகாரம் – இவைகளை விளக்குக.
2. குற்றியலுகரத்தின் முன் உயிரும் யகரமும் எவ்வாறு புணரும்?
3. இயல்பாகும் அகர ஆகர குற்றுகர ஈறுகளைக் குறிப்பிடுக.

4. பல, சில என்ற சொற்கள் எவ்வாறு புணரும்?

5. இடைநிலை மயக்கம் என்றால் என்ன? விளக்குக.

6. தழுவு தொடர், தழாத் தொடர் என்பனவற்றை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

பெரு வினாக்கள்

1. இகர ஈற்றுப் புணர்ச்சிக்குரிய விதிகளைத் தொகுத்துரைக்க.

2. அல்வழிப் புணர்ச்சி வகைகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

3. செய்யுள் விகாரங்களை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

4. குற்றுகர ஈற்றுப் புணர்ச்சிக்குரிய விதிகளைத் தொகுத்துரைக்க.

5. அகர, ஆகார ஈற்றுச் சிறப்பு விதிகள் பற்றிய செய்திகளை எடுத்துரைக்க.

தன்மதிப்பீட்டு விடைகள்

I.

1. உயிரீற்றுப் புணரியல்

2. அல்வழிப்புணர்ச்சி

3. சரி

4. ஓர் எழுத்து புதிதாய்த் தோன்றுதல், வேறொரு எழுத்தாக வேறுபடுதல், இருக்கும் எழுத்து கெடுதல்.

5. இடைக்குறை.

6. தவறு.

7. ய், வ்

8. அவ்யானை.

II.

1. க ச த ப.

2. சரி.

3. பலசில எனுமிவை தம்முன் தாம்வரின்
   இயல்பும் மிகலும் அகரம் ஏக
   லகரம் றகர மாகலும் பிறவரின்
   அகரம் விகற்ப மாகலும் உளபிற.

4. இயல்பாய்.

5. ‘சுவைப்புளி முன்இன மென்மையும் தோன்றும்.’

6. வல்லினம், மாசி + திங்கள் = மாசித்திங்கள், பனை + கை = பனைக்கை.

7. ஆ, மா, மியா என்னும் முன்னிலையசை, வினைமுற்றுக்கள்.

III.

1. நெடில்தொடர்க் குற்றியலுகரம்

2. ஆட்டுக்கால்

3. “தெங்கு நீண்டு ஈற்றுஉயிர் மெய்கெடும் காய்வரின்.”

4. நிலைமொழியின் இறுதி உயிர்மெய்கெட்டு நின்ற மூன்று என்னும் எண்ணினது னகர மெய் கெடுதலும் வருமொழியின் முதலில் வரும் மெய்யாகத் திரிதலும் ஏற்குமிடங்களில் ஆகும்.

   (எ.டு) மூன்று + ஆயிரம் = மூவாயிரம், மூன்று + உலகு = மூவுலகு

   இதில் உயிர்வர முதல் குறுகாமல் இறுதி உயிர் மெய்யும் னகர மெய்யும் கெட்டன.

   (எ.டு) மூன்று + பத்து = முப்பது, மூன்று + நூறு = முந்நூறு

   இதில் மெய்வர முதல் குறுகி இறுதி உயிர் கெட்டு னகர மெய், வருமொழி மெய்யாகத் திரிந்தது.

5. தொண்ணூறு என்ற எண்ணுப்பெயர் ஒன்பஃது + பத்து என்ற புணர்ச்சியால் தோன்றியது. இப்புணர்ச்சி நிகழ்வதைப் பவணந்தியார் பின்வருமாறு கூறுகின்றார்.

ஒன்பஃது + பத்து, ஒன்பது + நூறு.

வருமொழியாகிய பத்து என்பதை 'நூறு' என்று திரித்துக் கொள்ளுதல் வேண்டும்.
தொன்பஃது + நூறு ஒகரத்துடன் தகர மெய்யைச் சேர்க்க வேண்டும்.

தொன் + நூறு (பஃது என்பதை நீக்குதல் வேண்டும்).

தொன் + நூறு (னகர மெய்யை ணகர மெய்யாகத் திரித்தல் வேண்டும்)

6. ஊகாரவீற்றுச் சிறப்பு விதி.

7. பன்னிரெண்டு

8. வல்லினமெய்.

2.2.4. மெய்யீற்றுப் புணரியல்

2.2.4.1 மெய்யீற்றின் முன் உயிர் – நூற்பா 204 முதல் 205 வரை.

2.2.4.2 மெய்யீற்றின் முன் மெய் – நூற்பா 206 முதல் 208 வரை.

2.2.4.3 ணகர, னகர ஈறு – நூற்பா 209 முதல் 218 வரை.

2.2.4.4 மகர ஈறு – நூற்பா 219 முதல் 223 வரை.

2.2.4.5 ய, ர, ழ ஈறு – நூற்பா 224 முதல் 226 வரை.

2.2.4.6 லகர, ளகர ஈறு – நூற்பா 227 முதல் 234 வரை.

2.2.4.7 வகர ஈறு – நூற்பா 235 முதல் 236 வரை.

2.2.4.8 வருமொழி தகர, நகரத் திரிபு – நூற்பா 237.

2.2.4.9 வேற்றுமைப் பொருட்புணர்ச்சியை உருபு புணர்ச்சியோடு மாட்டெறிதல் – நூற்பா 238

2.2.4.10 புணரியல்களுக்குப் புறனடை – நூற்பா 239.

நன்னூலார் எழுத்திலக்கணத்தைப் பன்னிரண்டு வகைகளாகப் பிரித்துக் கொண்டார். அவற்றுள் இறுதி இலக்கணமாகிய புணர்பு என்பதை உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் என்று மூன்று இயல்களாகப் பிரித்துக் கொண்டு இலக்கணம் கூறுகின்றார். கடந்த இயலில் உயிரீற்றுப் புணரியலைக் கண்டோம். இப்பகுதியில் மெய்யீற்றுப் புணரியலைப் பார்க்கலாம். 204ஆம் நூற்பா தொடங்கி 239 வரை உள்ள 36 நூற்பாக்களில் மெய்யீற்றுப் புணரியல் பற்றிய செய்திகளைக் கூறுகின்றார்.

மெய்யீற்றுப் பொது விதி

2.2.4.1 மெய்யீற்றின்முன் உயிர்

நிலைமொழியின் இறுதியில் நின்ற மெய்யின் மேல், வருமொழியின் முதலிலுள்ள உயிரெழுத்து வந்து ஒன்றுபட்டு நிற்பது இயல்புப் புணர்ச்சியாகும்.

உடன்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே. நூற்பா 204

தோன்றல் + அழகன் = தோன்றலழகன் (அல்வழி)

வேல் + எறிந்தான் = வேலெறிந்தான் (வேற்றுமை)

மெய்யெழுத்தும் உயிரெழுத்தும் கூடி உயிர் மெய்யாய், மெய்யின் வடிவில் புள்ளியும் உயிர் வடிவு முழுமையும் கெட்டு நிற்பதால் இதனைச் சிலர் விகாரப் புணர்ச்சி என்பர். இக்கருத்தினை மறுக்கவே இயல்புப் புணர்ச்சி என்பர். இப்புணர்ச்சியில் ஒலி வடிவில் மாறுபாடு இல்லை. எனவே இயல்புப் புணர்ச்சி என்பதே பொருத்தமாகும்.

தனித்த குற்றெழுத்தின் முன் நின்ற மெய்யெழுத்து இடம் பெற்று வருமொழியின் முதலில் உயிர் வந்தால் இரட்டிக்கும்.

தனிக்குறின் முன்னொற் றுயிர்வரி னிரட்டும். நூற்பா 205

(எ.டு) மண் + அரிது = மண்ணரிது (அல்வழி)

பொன் + அணி = பொன்னணி (வேற்றுமை)

2.2.4.2 மெய்யீற்றின் முன் மெய்

நிலைமொழியின் இறுதியில் யகரமல்லாத வேறு மெய்களில் ஒன்று இருந்து, வருமொழியின் முதலில் யகரம் வந்தால் அம்மெய் முன் இகரம் சாரியையாக வந்து சேரும் என்பர்.

தன்னொழி மெய்ம்முன் யவ்வரி னிகரந்

துன்னு மென்று துணிநரு முளரே. நூற்பா 206

(எ.டு) வேள் + யாவன் = வேளியாவன் (அல்வழி)

மண் + யானை = மண்ணியானை (வேற்றுமை)

மெய்யீற்று முதல்நிலைத் தொழிற்பெயர்கள்

ஏவல்கள் புணரும் வகை

ஞ, ண, ந, ம, ல, வ, ள, ன என்னும் எட்டு மெய்களையும் இறுதியாகக் கொண்ட முதல்நிலைத் தொழிற்பெயர்களும் ஏவல் வினைகளும் ஆகிய இவற்றின் முன் யகரம் அல்லாத மெய்கள் வருமாயின் பெரும்பாலும் உகரச் சாரியையை இறுதியில் பெறும். சில ஏவல் வினைகள் சில இடங்களில் உகரச் சாரியையைப் பெறுவதில்லை.

ஞணநம லவளன வொற்றிறு தொழிற்பெயர்

ஏவல் வினைநனி யவ்வன் மெய்வரின்

உவ்வுறு மேவ லுறாசில சில்வழி. நூற்பா 207

முதல்நிலைத் தொழிற்பெயர்கள் உகரச்சாரியை பெறுதல்

| அல்வழி | வேற்றுமை |
|---|---|
| உரிஞ் + கடிது = உரிஞுக்கடிது | உரிஞ் + கடுமை = உரிஞுக்கடுமை |
| உண் + சிறிது = உண்ணுச்சிறிது | உண்ணு + சிறுமை = உண்ணுச்சிறுமை |
| பொருந் + தீது = பொருநுத்தீது | பொருந் + தீமை = பொருநுத்தீமை |
| திரும் + பெரிது = திருமுப்பெரிது | திரும் + பெருமை = திருமுப்பெருமை |
| வெல் + ஞான்றது = வெல்லுஞான்றது | வெல் + ஞாற்சி = வெல்லுஞாற்சி |
| வவ் + நீண்டது = வவ்வுநீண்டது | வவ் + நீட்சி = வவ்வுநீட்சி |
| துள் + மாண்டது = துள்ளுமாண்டது | துள் + மாட்சி = துள்ளுமாட்சி |
| தின் + வலிது = தின்னுவலிது | தின் + வலிமை = தின்னுவலிமை |

ஏவல் வினைகள் அல்வழியில் மட்டுமே உகரச்சாரியை பெறும்.

| | |
|---|---|
| உரிஞ் + கொற்றா = உரிஞ்கொற்றா | வெல் + ஞெள்ளா = வெல்லுஞெள்ளா |
| உண் + சாத்தா = உண்ணுசாத்தா | வவ் + நாகா = வவ்வுநாகா |
| பொருந் + தேவா = பொருந்தேவா | துள் + மனிதா = துள்ளுமனிதா |
| திரும் + பூதா = திருமுபூதா | தின் + வளவா = தின்னுவளவா |

ண, ன, ல, ள என்னும் நான்கு ஈறும் உகரச் சாரியை பெற்றும் பெறாதும் வரும். ஞ, ந, ம, வ என்னும் நான்கு ஈறும் உகரம் பெற்றே வரும் தன்மையன.

நகர ஈற்றுத் தொழிற்பெயருக்குச் சிறப்பு விதி

நகரத்தை இறுதியாக உடைய தொழிற்பெயருக்கு வேற்றுமைப் புணர்ச்சியில் அகரச் சாரியையும் வரும்.

நவ்விறு தொழிற்பெயர்க் கவ்வுமாம் வேற்றுமை. நூற்பா 208

(எ,டு) பொருந் + கடுமை = பொருநக் கடுமை

பொருந் + நன்மை = பொருநநன்மை

ககரச் சாரியை பெற்றது.

2.2.4.3 ணகர, நகர ஈறுகள் புணரும் முறை

இதுகாறும் மெய்யீற்றுக்குரிய பொதுப்புணர்ச்சிகள் கூறப்பட்டன. இனி மெய்யீறுகளைத் தனித்தனியாக எடுத்துக் கொண்டு அவை புணரும் முறைகளைப் பவணந்தியார் விளக்குகின்றார். நிலைமொழியின்

ஈற்றில் வரக்கூடிய மெய்களாக ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள என்னும் பதினொன்றைக் குறிப்பிடுவர். இவற்றுள் ஞகர, நகர ஈறுகட்கு மெய்யீற்றின் பொதுப் புணர்ச்சியிலேயே (நன்னூல் 206, 207, 208) இலக்கணம் கூறியாகி விட்டது. பிற ஈறுகளில் ணகர, னகர ஈறுகள் எவ்வாறு புணரும் என்பதனை இப்பகுதியில் கூறுகின்றார்.

வேற்றுமைப் புணர்ச்சியில் வருமொழியின் முதலில் வல்லினம் வரின் ண, ன என்ற நிலைமொழி இறுதி மெய்கள் ட, ற என்னும் மெய்களாகத் திரியும். மெல்லினமும் இடையினமும் வந்தால் இயல்பாகும். அல்வழிப் புணர்ச்சியில் வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகிய மூவின மெய்களும் வந்தால் இயல்பாகும்.

ணனவல் லினம்வரட் டறவும் பிறவரின்

இயல்பு மாகும் வேற்றுமைக் கல்வழிக்

கனைத்துமெய் வரினு மியல்பா கும்மே.

என்னும் நூற்பா (209) ணகர, னகர ஈறுகள் புணரும் முறை குறித்த செய்தியினை உணர்த்தியது.

(எ.டு) 1. சிறுகண் + களிறு = சிறுகட்களிறு

பொன் + குடம் = பொற்குடம்

வேற்றுமையில் வல்லினம் வர ண, ன முறையே ட, ற ஆயின.

2. மண் + ஞாற்சி = மண்ஞாற்சி – மெல்லினம்

மண் + யாப்பு = மண்யாப்பு – இடையினம்

பொன் + ஞாற்சி = பொன்ஞாற்சி – மெல்லினம்

பொன் + யாப்பு = பொன்யாப்பு – இடையினம்

வேற்றுமையில் பிற இனம் வர இயல்பாயிற்று.

3. ண ன

மண் + பெரிது = மண்பெரிது பொன் + பெரிது = பொன்பெரிது

மண் + நீண்டது = மண்நீண்டது பொன் + நீண்டது = பொன்நீண்டது

மண் + வலிது = மண்வலிது பொன் + வலிது = பொன்வலிது

அல்வழியில் மூவினமும் வர இயல்பாயின.

ணகர, னகர ஈறுகள் கெடுதல்

தனிக் குற்றெழுத்தை அடுத்து வராமல் ஒரு மொழி, தொடர்மொழிகளைச் சார்ந்து வரும் ணகர, னகர மெய்கள் வருமொழிக்கு முதலில் வந்த நகரம் திரிந்த இடத்தில் கெடுதலுமாகும்.

குறில்அணைவு இல்லா ணனக்கள் வந்த

நகரம் திரிந்துழி நண்ணும் கேடே. நூற்பா 210

| அல்வழி | வேற்றுமை |
|---|---|
| தூண் + நன்று = தூணன்று | தூண் + நன்மை = தூணன்மை |
| பசுமண் + நன்று = பசுமணன்று | பசுமண் + நன்மை = பசுமணன்மை |
| கோன் + நல்லன் = கோனல்லள் | கோன் + நன்மை = கோனன்மை |
| அரசன் + நல்லன் = அரசனல்லன் | அரசன் + நன்மை = அரசனன்மை |

சில ணகர ஈற்றுப் பெயர்க்குச் சிறப்பு விதி

சாதி பற்றி வரும் பெயர், குழூஉ (கூட்டம்) பற்றி வரும் பெயர், பரண், கவண் என்னும் பெயர்கள் ஆகியவற்றின் இறுதியில் வரும் ணகரம், வேற்றுமையில் வல்லினம் வரின் இயல்பாகும். உணவுக்கு உரிய எள் என்னும் சொல்லின் திரிபாகிய எண் என்னும் பெயர், சாண் என்னும் அளவுப்பெயர் ஆகியவற்றின் இறுதியில் வரும் ணகரம், அல்வழியில் வல்லினம் வரின் டகரமாகத் திரியும்.

சாதி குழூஉப்பரண் கவண்பெய ரிறுதி

இயல்பாம் வேற்றுமைக் குணவெண் சாண்பிற

டவ்வா கலுமா மல்வழி யும்மே. நூற்பா 211

(எ.டு) பாண் + குடி = பாண்குடி – சாதிப்பெயர்

அமண் + சேரி = அமண்சேரி – குழூஉப்பெயர்

பரண் + கால் = பரண்கால் – பரண்பெயர்

கவண் + கால் = கவண்கால் – கவண்பெயர்

வேற்றுமையில் ணகரம் இயல்பாயிற்று.

எண் + கடிது = எட்கடிது

சாண் + கோல் = சாட்கோல்

அல்வழியில் ணகரம் டகரமாயிற்று.

னகர ஈற்றுச் சாதிப்பெயர்

னகரத்தை இறுதியாக உடைய சாதிப்பெயர் வேற்றுமையில் வல்லினம் வரின் ஈறு திரியாமல் இயல்பாக வரும். மேலும், அகரச் சாரியையும் பெறும்.

னஃகான் கிளைப்பெயர் இயல்பும் அஃகான்

அடைவும் ஆகும் வேற்றுமைப் பொருட்கே. நூற்பா 212

(எ.டு) எயின் + குடி = எயினகுடி – இயல்புநிலை

எயின் + சேரி = எயினச்சேரி

அகரச் சாரியை பெற்றது. இது எயின் சேரி என்று இயல்பாகவும் வரும்.

மேற்கூறிய சூத்திரத்தில் “வேற்றுமைப் பொருட்கே” என்றமையால் பின்வரும் கருத்துக்களையும் கொள்ளுதல் வேண்டும்.

1. வருமொழியின் முதலில் வல்லினம் வராமல் ஏனையயினம் வந்தால் வேற்றுமைப் புணர்ச்சியில் எயின் என்ற சொல் அகரச் சாரியை பெறும்.

எயின் + மரபு = எயின்மரபு

எயின் + வாழ்வு = எயினவாழ்வு

எயின் + அணி = எயினஅணி

2. அல்வழிப் புணர்ச்சியில் எயின் என்பது அகரச் சாரியை பெறும்.

எயின் + கன்று = எயினக்கன்று

எயின் + பிள்ளை = எயினப்பிள்ளை

எயின் + மன்னன் = எயினமன்னன்

மீன் என்பதற்குச் சிறப்பு விதி

மீன் என்னும் சொல்லின் இறுதி னகர மெய், வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லினம் வந்தால் றகர மெய்யாகத் திரிந்தும் திரியாதும் வரும்.

மீன்றவ் வொடுபொரூஉம் வேற்றுமை வழியே. நூற்பா 213

மீன் + கண் = மீற்கண், மீன்கண்

மீன் + செவி = மீற்செவி, மீன்செவி

தேன் என்ற சொல் புணரும் முறை

தேன் என்னும் சொல்லின் இறுதி னகர மெய் அல்வழி, வேற்றுமை ஆகிய இரு வழியிலும்

1. வருமொழியில் மூவினமும் வந்தால் இயல்பாகும்.

2. மெல்லினம் வந்தால் னகர மெய் இரு வழியிலும் கெடும்.

3. வல்லினம் வந்தால் னகர மெய் கெட, வந்த வல்லினமோ அதற்கு இனமான மெல்லினமோ மிகும்.

தேன்மொழி மெய்வரின் இயல்பும் மென்மை

மேவின் இறுதி அழிவும் வலிவரின்

ஈறுபோய் வலிமெலி மிகுதலுமாம் இருவழி. நூற்பா 214

அல்வழி வேற்றுமை

தேன் + கடிது = தேன்கடிது | தேன் + செம்மை = தேன்செம்மை

தேன் + மாண்டது = தேன்மாண்டது | தேன் + மாட்சி = தேன்மாட்சி

தேன் + யாது = தேன்யாது | தேன் + யாப்பு = தேன்யாப்பு

இவை இயல்பு.

தேன் + மொழி = தேன்மொழி, தேமொழி | தேன் + மலர் = தேன்மலர், தேமலர்

மெல்லினம் வர இயல்பும் இறுதியும் கெட்டு முடிந்தன.

தேன் + குழம்பு = தேன்குழம்பு, தேக்குழம்பு, தேங்குழம்பு | தேன் + குடம் = தேன்குடம், தேக்குடம், தேங்குடம்.

இவை வல்லினம் வர இயல்பாகவும் னகர மெய் கெட வல்லினமும் மெல்லினமும் மிக்கது.

எகின் என்பதற்குச் சிறப்பு விதி

மரத்தை உணர்த்தாமல் அன்னத்தை உணர்த்தும். எகின் என்னும் சொல் 1. வேற்றுமையில் வல்லினம் வர இயல்பாகும். 2. இரு வழியிலும் அகரச் சாரியை பொருந்த வல்லெழுத்தோ, அதற்கினமான மெல்லெழுத்தோ மிகும்.

மரமல் லெகின் மொழி யியல்பு மகரம்

மருவ வலிமெலி மிகலு மாகும். நூற்பா 215

(எ.டு) எகின் + சிறை = எகின்சிறை – வேற்றுமையில் வல்லினம் வர இயல்பாயிற்று.

எகின் + புள் = எகினப்புள், எகினம்புள் – அல்வழியில் அகரம் பொருந்த வல்லினமும் மெல்லினமும் மிக்கன.

எகின் + கால் = எகினக்கால், எகினங்கால் – வேற்றுமையில் அகரம் பொருந்த வல்லினமும் மெல்லினமும் மிக்கன.

குயின் என்பதற்குச் சிறப்பு விதி

இயல்புப் புணர்ச்சி, வேற்றுமைப் புணர்ச்சி இரண்டிலும் மேகத்தை உணர்த்தும் குயின் என்ற சொல்லும் இறைச்சி எனப் பொருள்படும். ஊன் என்ற சொல்லும் வர இயல்பாகும்.

குயின் + பெரியது = குயின் பெரியது – அல்வழி

குயின் + கடுமை = குயின் கடுமை – வேற்றுமை

ஊன் + சிறியது = ஊன் சிறியது – அல்வழி

ஊன் + பெருமை = ஊன் பெருமை – வேற்றுமை

குயின்ஊன் வேற்றுமைக் கண்ணும் இயல்பே. நூற்பா 216

தனக்குறிலை அடுத்து வரும் னகர ஈற்றுப் பெயர்கள் சில புணரும் முறை

மின், பின், பன், கன் முதலிய நான்கு சொற்களும் யகரம் அல்லாத மெய்கள் வரின் முதனிலைத் தொழிற்பெயர் போல உகரச் சாரியை பெறும். இவற்றுள் கண் என்னும் சொல் உகரச் சாரியையே அன்றி அகரச் சாரியையும் பெற்று வல்லினம் வந்தால் வரும். வல்லெழுத்தாவது அதற்கு இனமாவது மிக்கு முடியும்.

மின்பின் பன்கன் தொழிற்பெய ரனைய

கன்னவ் வேற்றுமை மென்மையோ டுறழும். நூற்பா 217

| (எ.டு) அல்வழி | வேற்றுமை |
|---|---|
| மின் + கடிது = மின்னுக்கடிது | மின் + கடுமை = மின்னுக்கடுமை |
| பின் + நன்று = மின்நன்று | பின் + நன்மை = பின்னுநன்மை |
| பன் + வலிது = பன்னுவலிது | பன் + வன்மை = பன்னுவன்மை |
| கன் + கடிது = கன்னுக்கடிது | கன் + வன்மை = கன்னுவன்மை |

இரு வழியிலும் உகரம் பெற்றன.

கன் + தட்டு = கன்னத்தட்டு, கன்னந்தட்டு – அல்வழியில் அகரம் பெற்று உறழ்ந்தது.

கன் + தூக்கு = கன்னத்தூக்கு, கன்னந்தூக்கு – வேற்றுமையில் அகரம் பெற்று உறழ்ந்தது.

தன், என், நின் என்பனவற்றிற்குச் சிறப்பு விதி

தன், என் என்னும் சொற்களின் இறுதியில் உள்ள னகர மெய் வல்லினம் வந்தால் தனக்கு இனமான றகரமாகத் திரிந்தும் திரியாது இயல்பாகியும் உறழும். நின் என்னும் சொல்லின் இறுதியில் உள்ள னகர மெய் வல்லினம் வரின் இயல்பாகும்.

(எ.டு) தன் + பகை = தன்பகை, தற்பகை

என் + பகை = என்பகை, எற்பகை

இவை உறழ்ந்தன.

நின் + பகை = நின்பகை – இயல்பு.

தன், என் என்பவற்று ஈற்றுனவ் வன்மையோடு

உறழும் நின்ஈறு இயல்பாம் உறவே. நூற்பா 218

இதுவரை ணகர, னகர ஈறு பற்றிய புணர்ச்சிகளைக் கண்டோம். இனி, மகர ஈறு குறித்து பவணந்தியார் கூறும் புணர்ச்சி விதியினைப் பார்ப்போம்.

மகர ஈறு

மகர மெய்யீற்றுச் சொற்கள் புணரும் முறையை 219ஆம் நூற்பா முதல் 223ஆம் நூற்பா வரை பவணந்தியார் கூறுகின்றார்.

மகர மெய்யை ஈற்றிலே உடைய சொற்கள் புணரும் போது இறுதியில் உள்ள மகர மெய் கெட்டு, உயிரீறு போல நின்ற புணரும். மேலும் வருமொழியில் வல்லினம் வர மகரமெய் வல்லினத்திற்கு ஏற்ற இனமாகத் திரியும்.

மவ்வீ றொற்றழிந் துயிரீ றொப்பவும்

வன்மைக் கினமாத் திரிபவு மாகும். நூற்பா 219

| அல்வழி | வேற்றுமை |
|---|---|
| வட்டம் + ஆழி = வட்டவாழி | மரம் + அடி = மரவடி (உயிர்) |
| வட்டம் + கல் = வட்டக்கல் | மரம் + கிளை = மரக்கிளை (வலி) |
| வட்டம் + நேமி = வட்டநேமி | மரம் + நார் = மரநார் (மெலி) |
| வட்டம் + வாரி = வட்டவாரி | மரம் + வேர் = மரவேர் (இடை) |
| மரம் + சிறிது = மரஞ்சிறிது | நம் + கை = நங்கை |

இனமாகத் திரியும் ஆகும் என்றமையால் மரம் + பெரிது = மரம் பெரியது எனத் திரியாமலும் வரும்.

2.2.4.4 மகரத்திற்குச் சிறப்பு விதி

வேற்றுமைப் புணர்ச்சியில் மகர இறுதி கெட வல்லினமோ அதற்கு இனமான மெல்லினமோ மிகும். அல்வழிப் புணர்ச்சியில் உயிரும் இடையினமும் வர இயல்பாகும்.

குளம் + கரை = குளக்கரை, குளங்கரை – வேற்றுமை

குளம் + அழகிது = குளமழகிது

மரம் + வலிது = மரம்வலிது – அல்வழி

வேற்றுமை மப்போய் வலிமெலி உறழ்வும்

அல்வழி உயிர்இடை வரின் இயல்பும் உள. நூற்பா 220

நும், தம், எம், நம் புணரும் முறை

நும், தம், எம், நம் என்னும் சொற்களின் இறுதியில் உள்ள மகர மெய் வருமொழியின் முதலில் வருகின்ற ஞகர, நகரங்களாகத் திரியும்.

நுந்தம்,

எம்நம் மீறா மவ்வரு ஞநவே. நூற்பா 221

(எ.டு) நும் + ஞாண் = நுஞ்ஞாண் நும் + நூல் = நுந்நூல்

தம் + ஞாண் = தஞ்ஞாண் தம் + நூல் = தந்நூல்

எம் + ஞாண் = எஞ்ஞாண் எம் + நூல் = எந்நூல்

நம் + ஞாண் = நஞ்ஞாண் நம் + நூல் = நந்நூல்

நும் முதலிய சொற்களின் முன் மகரம் வரின் இயல்பாகும்.

நும் + மணி = நும்மணி என்று அமையும்.

அகம் என்ற சொல்லுக்குச் சிறப்பு விதி

அகம் என்னும் இடப்பெயர் முன் செவி, கை என்னும் சினைப் பெயர்கள் வந்தால் அகம் என்பதன் இறுதியில் உள்ள மகரம் வன்மைக்கு இனமாகத் திரிதலுடன் அகம் என்ற சொல்லின் இடையிலுள்ள க என்னும் உயிர் மெய்யும் கெடும்.

அகமுனர்ச் செவி கை வரின் இடையன கெடும். நூற்பா 222

(எ.டு) அகம் + செவி = அஞ்செவி

அகம் + கை = அங்கை

இங்கு கெட்டே வரும் என்றதனால் அகஞ்செவி, அகங்கை எனக் கெடாது வருதலும் உண்டு.

ஈம், கம், உரும் என்பனவற்றிற்குச் சிறப்பு விதி

ஈம், கம், உரும் என்னும் மூன்று சொற்களும் அல்வழியிலும் வேற்றுமையிலும் முதனிலைத் தொழிற்பெயர் போல யகரம் அல்லாத மெய்கள் வரின் உகரச் சாரியை பெறும். இவற்றுள் முதலில் உள்ள ஈம், கம் என்பன வேற்றுமையில் உகரச் சாரியையே அன்றி அகரச் சாரியையும் பெறும்.

(எ.டு) அல்வழி வேற்றுமை

ஈம் + கடிது = ஈமுக்கடிது ஈம் + நீட்சி = ஈமுநீட்சி

கம் + நீண்டது = கம்முநீண்டது கம் + வன்மை = கம்முவன்மை

உரும் + வலிது = உருமுவலிது உரும் + கடுமை = உருமுக்கடுமை

இரு வழியிலும் உகரச்சாரியை பெற்றது.

ஈம் + குடம் = ஈமக்குடம்

கம் + குடம் = கம்மக்குடம்

ஈம், கம் என்பன வேற்றுமையில் அகரச் சாரியை பெற்றன.

"ஈமும்

கம்மும் உருமும் தொழிற்பெயர் மாறும்

முதலன வேற்றுமைக்கு அவ்வும் பெறுமே" நூற்பா 223

தன்மதிப்பீட்டு வினாக்கள்

I.

1. 'உடன்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பு.' இந்நூற்பாவிற்கு எடுத்துக்காட்டுகள் தருக.
2. முதல்நிலைத் தொழிற்பெயர்கள் .................. சாரியைப் பெறும்.
3. ஏவல் வினைகள் அல்வழியில் மட்டுமே உகரச் சாரியைப் பெறும். சரியா? தவறா?
4. 'மீன்' என்பதன் சிறப்பு விதியினை உணர்த்தும் நூற்பாவின் எண்ணைக் குறிப்பிடுக.
5. 'குயின்' என்பதன் சிறப்பு விதியினை உணர்த்தும் நூற்பாவினை எழுதுக.
6. 'நும்' முதலிய சொற்களின் முன்னர் மகரம் வரின் இயல்பாகும். சரியா? தவறா?
7. ஈம், கம், உரும் என்னும் மூன்று சொற்களும் அல்வழி, வேற்றுமையில் முதனிலைத் தொழிற்பெயர் போல யகரம் அல்லாத மெய்கள் வரின் .......... சாரியைப் பெறும்.

2.2.4.5 ய, ர, ழ ஈறுகட்குச் சிறப்பு விதி

ய, ர, ழ என்னும் மெய்களின் முன் க, ச, த, ப வரின் அல்வழியில் இயல்பாகவும் மிக்கும் வரும். வேற்றுமையில் மிக்கும், வல்லினமோ மெல்லினமோ மிகுந்து உறழ்தலும் விதியாகும்.

யரழ முன்னர்க் கசதப வல்வழி

இயல்பு மிகலு மாகும் வேற்றுமை

மிகலு மினத்தோ டுறழ்தலும் விதிமேல். நூற்பா 224

பவணந்தியார் இவ்வாறு அல்வழிப் புணர்ச்சியில் இயல்பாகவும் மிகுதியாகவும் வரும் எனப் பொதுவாகக் கூறினாலும், இயல்பாதல் எழுவாய்த் தொடர், உம்மைத் தொகை, வினைத்தொகை ஆகிய மூன்றிலும் என்னும், வல்லினம் மிகுதல் பண்புத் தொகை, உவமைத் தொகை ஆகிய இரண்டிலும் கொள்ளுதல் வேண்டும் என்று குறிப்பிடுவர்.

(எ.டு) வேய் + குறியது = வேய்குறியது

வேல் + சிறியது = வேர்சிறியது

யாழ் + பெரியது = யாழ் பெரியது

அல்வழியில் எழுவாய்த்தொடர்

பேய் + பூதம் = பேய்பூதம்

நீர் + தீ = நீர்தீ

இகழ் + புகழ் = இகழ்புகழ்

இவை அல்வழியில் உம்மைத்தொகை.

செய் + கடன் = செய்கடன்

தேர் + பொருள் = தேர்பொருள்

வீழ் + புனல் = வீழ்புனல் – வினைத்தொகை

மெய் + கீர்த்தி = மெய்க்கீர்த்தி

கார் + பருவம் = கார்ப்பருவம்

பூழ் + பறவை = பூழ்ப்பறவை (காடையாகிய பறவை) – பண்புத்தொகை

வேய் + கோள் + வேய்க்கோள்

கார் + குழல் = கார்க்குழல் – உவமைத்தொகை

யகர ஈற்று வினையெச்சத்தின் முன்வரும் வல்லினம் மிக்கும், ரகர ஈற்று வினையெச்சத்தின் முன் வரும் வல்லினம் இயல்பாகவும் அமையும்.

(எ.டு) போய் + கொண்டான் = போய்க்கொண்டான்

செய்யியர் + சென்றான் = செய்யியர் சென்றான் (செய்வதற்காகச் சென்றான்)

வேற்றுமைப் புணர்ச்சியில் ய, ர, ழ மெய்க்கு முன் வல்லினம் மிக்கு வரும்.

(எ.டு) நாய் + கால் = நாய்க்கால்

தேர் + கால் = தேர்க்கால்

பூழ் + கால் = பூழ்க்கால்

வேற்றுமைப் புணர்ச்சியில் யரழ முன் வல்லினம் இனத்தோடு உறழ்ந்தும் வரும்.

(எ.டு) வேய் + குழல் = வேய்ங்குழல்

தமிழ், தாழ் என்பனவற்றிற்குச் சிறப்பு விதி

தமிழ் என்னும் சொல் முன் வேற்றுமைப் புணர்ச்சியில் நாற்கணமும் அகரச் சாரியை பெற்று வரும். தாழ் என்னும் சொல் முன் கோல் என்னும் சொல் வரின் அவ்வாறே அகரச்சாரியையினைப் பெற்று வரும்.

தமிழ்அவ் உறவும் பெறும்வேற் றுமைக்கே

தாழும் கோல்வந்து உறுமேல் அற்றே. நூற்பா 225

(எ.டு)

தமிழ் + பிள்ளை = தமிழ்ப்பிள்ளை

தமிழ் = நாகன் = தமிழ்நாகன்

தமிழ் + வளவன் = தமிழ்வளவன்

தமிழ் + அரசன் = தமிழரசன்

தாழ் + கோல் = தாழக்கோல் (திறவுகோல்)

கீழ் என்பதற்குச் சிறப்பு விதி

கீழ் என்னும் சொல்லின் முன் வல்லினம் வந்தால் அது விகற்பமாகும். அதாவது, ஒரே புணர்ச்சியில் வல்லினம் இயல்பாதலும் மிகுதலும் உண்டு.

கீழ் + குலம் = கீழ்குலம், கீழ்க்குலம்

கீழ் + படி = கீழ்படி, கீழ்ப்படி

"கீழின்முன் வன்மை விகற்பமும் ஆகும்" நூற்பா 226

மெய்யீற்றின் முன் மெய்யென்னும் புணர்ச்சியில் பவணந்தியார் லகர, ளகர ஈற்றுப் புணர்ச்சிகளைப் பற்றிய செய்திகளை நூற்பா 227 முதல் 234 வரை உள்ளவற்றில் குறிப்பிடுகின்றார்.

2.2.4.6 லகர, ளகர ஈற்றுப் புணர்ச்சிகள்

நிலை மொழிக்கு இறுதியில் வரும் ல, ள என்னும் மெய்கள் முன் வல்லின எழுத்துக்கள் வந்தால் வேற்றுமைப் புணர்ச்சியில் அவை ற, ட என்னும் மெய்களாகத் திரியும். அல்வழிப் புணர்ச்சியில் ற, ட என்னும் மெய்யாகத் திரிந்தும் திரியாமலும் உறழ்ந்தும் வரும். வேற்றுமை, அல்வழி என்னும் இருவகைப் புணர்ச்சியிலும் மெல்லினம் வந்தால் ன, ண என்னும் மெய்களாகத் திரியும். இடையினம் வந்தால் இயல்பாக அமையும்.

(எ.டு) கல் + குறை = கற்குறை

முள் + குறை = முட்குறை

இங்கு வேற்றுமையில் வல்லினம் வர நிலைமொழியின் இறுதி எழுத்து முறையே ற, ட மெய்களாகத் திரிந்தன.

கல் + குறிது = கல்குறிது, கற்குறிது

முள் + குறிது = முள்குறிது, முட்குறிது

அல்வழியில் வல்லினம் வந்ததால் இயல்பாகவும் ஒருகால் திரிந்தும் உறழ்ந்தும் வந்தன.

வருமொழியின் முதலில் மெல்லினம் வர அல்வழி, வேற்றுமை என்னும் இரு வழிகளிலும் முறையே ன, ண மெய்களாகத் திரியும்.

| (எ.டு) அல்வழி | வேற்றுமை |
|---|---|
| கல் + நெறிந்தது = கன்னெறிந்தது | கல் + மலை = கன்மலை |
| வாள் + மாண்டது = வாண்மாண்டது | முள் + மாட்சி = முண்மாட்சி |

வருமொழியின் முதலில் இடையினம் வர இரு வழியிலும் இயல்பாக அமையும்.

| (எ.டு) அல்வழி | வேற்றுமை |
|---|---|
| கல் + யாது = கல்யாது | கல் + யாப்பு = கல்யாப்பு |
| முள் + யாது = முள்யாது | முள் + யாப்பு = முள்யாப்பு |

"லள வேற்றுமையில் றடவும் அல்வழி

அவற்றோடு உறழ்வும் வலிவரி னாம்மெலி

மேவின் னணவும் இடைவரின் இயல்பும்

ஆகும் இருவழி யானும் என்ப" நூற்பா 227

மேற்கூறிய சூத்திரத்தில் "அல்வழி அவற்றொடு உறழ்வும்" என்று கூறியதனால் ல, ள முன் தகரம் வருமேயானால் கல் + தீது = கற்றீது எனவும், முள் + தீது = முட்டீது எனவும் திரிந்தே வரும்.

தனிக்குறிலை அடுத்துவரும் லகர, ளகர மெய்கட்குச் சிறப்பு விதி

தனிக் குற்றெழுத்துக்குப் பின் நின்ற ல, ள மெய்கள் முன் அல்வழியில் தகரம் வந்தால் ற, ட என்னும் மெய்களாகத் திரிதலோடு ஆய்தமாகவும் திரியும்.

"குறில்வழி லளத்தல் வணையின் ஆய்தம்

ஆகவும் பெறூஉம் அல்வழி யானே" நூற்பா 228

(எ.டு) கல் + தீது = கற்றீது, கஃறீது

முள் + தீது = முட்டீது, முஃறீது

என்பன போன்று வரும். மேற்கூறிய விதியால் வருகின்ற ஆய்தமே ஆய்தக் குறுக்கமாகும்.

லகர, ளகர ஈற்றின் கேடு முதலியன

தனிக்குற்றெழுத்தைச் சாராத ல, ள மெய்கள் அல்வழியில் வருமொழியின் முதலில் வந்த தகரம் திரிந்த இடத்தில் கெடும்.

(எ.டு) வேல் + தீது = வேறீது

வாள் + தீது = வாடீது

அல்வழி, வேற்றுமை ஆகிய இரு வழியிலும் வருமொழிக்கு முதலாக வந்த நகரம் ன, ண ஆகத் திரிந்த இடத்தில் கெடும்.

(எ.டு) தோன்றல் + நல்லன் = தோன்றனல்லன்

வேள் + நல்லன் = வேணல்லன் – அல்வழி

தோன்றல் + நன்மை = தோன்றனன்மை

வேள் + நன்மை = வேணன்மை – வேற்றுமை

இங்கு இரு வழியிலும் வந்த நகரம் திரிந்ததுடன் ல, ளவும் கெட்டன.

வருமொழியின் முதலில் வல்லெழுத்து வந்தால் அல்வழியில் உறழாமல் இயல்பாகலும் திரிதலும் ஏற்படும்.

(எ.டு) கால் + கடிது = கால்கடிது

மரங்கள் + கடிய = மரங்கள்கடிய – இயல்பு

வேல் + படை = வேற்படை

வாள் + படை = வாட்படை – திரிதல்

வேற்றுமைப் புணர்ச்சியில் திரிதலின்றி இயல்பாகவே அமையும்.

(எ.டு) கால் + குதித்து = கால்குதித்து

வாள் + போழ்ந்து = வாள் போழ்ந்து

வேற்றுமையில் வல்லினம் வர ல, ள இயல்பாயின.

“குறில்செறி யாலள அல்வழி வந்த

தகரம் திரிந்தபின் கேடும்ஈர் இடத்தும்

வருநத் திரிந்தபின் மாய்வும் வலிவரின்

இயல்பும் திரிபும் ஆவன உளபிற” நூற்பா 229

மேற்கூறிய சூத்திரத்தில் உள்ள பிற என்ற மிகையால் பின்வருவனவற்றையும் கொள்ளுதல் வேண்டும்.

தோன்றல் + தீமை = தோன்றறீமை

வேள் + தீமை = வேட்டீமை

வேற்றுமைப் புணர்ச்சியில் வருமொழித் தகரம் திரிந்தபின், நிலைமொழியின் ஈற்று லகர, ளகர மெய்கள் கெடுதல்.

கால் + துணை = காற்றுணை

தாள் + துணை = தாட்டுணை

அல்வழிப் புணர்ச்சியில் வருமொழியின் தகரம் திரிந்த பின் நிலைமொழியின் ஈற்று லகர, ளகர மெய்கள் கெடாதிருத்தல்.

வில் + படை = விற்படை

வில் + புருவம் = விற்புருவம்

தனிக்குறிலைச் சார்ந்த ல, ள மெய்கள் அல்வழியில் உறழாமல் திரியும்.

கொல் + களிறு = கொல்களிறு

கொள் + பொருள் = கொள்பொருள்

வினைத்தொகையில் நிலைமொழியின் ஈறு இயல்பாகவே வரும்.

நில் + கொற்றா = நில்கொற்றா

கொள் + பூதா = கொள்பூதா

வினைமுற்றுத் தொடர்களில் இயல்பாக வரும்.

ல, ள ஈற்றுத் தொழிற்பெயர்

ல, ள ஈறு தொழிற்பெயர் ஈரிடத்தும் உவ்வுறா

வலிவரின் அல்வழி இயல்பும் ஆவன உள. நூற்பா 230

நிலைமொழியில் லகரத்தை இறுதியாக உடைய விகுதி பெற்ற தொழிற்பெயரும், ளகரத்தை இறுதியாக உடைய முதனிலை திரிந்த தொழிற்பெயரும் அல்வழியிலும் வேற்றுமையிலும் யகரம் அல்லாத பெயர்கள் வந்தால் உகரச் சாரியை பெறுவதில்லை.

(எ.டு) ஆடல் + சிறந்தது = ஆடல் சிறந்தது, ஆடற்சிறந்தது.

கோள் + கடிது = கோள்கடிது, கோட்கடிது

ஈண்டு அல்வழியில் உகரம் பெறாமல் பொது விதிப்படி (நன். 227) வல்லினம் வர இயல்பாயிற்று.

ஆடல் + சிறப்பு = ஆடற்சிறப்பு

கோள் + வன்மை = கோள்வன்மை

வேற்றுமையில் உகரம் பெறாது முடிந்தன.

நடத்தல் + கடிது = நடத்தல் கடிது

அல்வழியில் வல்லினம் வந்ததால் உறழாது இயல்பாயிற்று.

வல் என்பதன் சிறப்பு விதி

'வல்' என்னும் தோடு கருவியின் பெயர் முன் யகரம் அல்லாத மெய்கள் வந்தால் தொழிற்பெயர் போல இரு வழியிலும் உகரச் சாரியை பெறும். வல் என்பதன் முன் பலகை, நாய் என்னும் பெயர்களும் பிற பெயர்களும் வருமேயாயின் வேற்றுமையில் உகரச் சாரியையன்றி அகரச் சாரியையும் பெறும்.

வல்லே தொழிற்பெய ரற்றிரு வழியும்

பலகை நாய் வரினும் வேற்றுமைக் கவ்வுமாம். நூற்பா 231

(எ.டு) அல்வழி வேற்றுமை

வல் + கடிது = வல்லுக்கடிது வல் + கடுமை = வல்லுக்கடுமை

வல் + வலிது = வல்லுவலிது வல் + வலிமை = வல்லுவலிமை

அல்வழி, வேற்றுமை என்னும் இருவழியிலும் தொழிற்பெயர் போன்று உகரச் சாரியை பெற்றன.

வல் + பலகை = வல்லுப்பலகை, வல்லப்பலகை

வல் + நாய் = வல்லுநாய், வல்லநாய்

வல் + குதிரை = வல்லுக்குதிரை, வல்லக்குதிரை

வேற்றுமையில் உகரச் சாரியையும் அகரச் சாரியையும் பெற்றன.

நெல், செல், கொல், சொல் என்பனவற்றுக்குச் சிறப்பு விதி

நெல், செல் (மேகம்), கொல் (கொல்லனது தொழில்), சொல் என்னும் நான்கு சொற்களின் இறுதியில் வரும் லகர மெய் அல்வழி, வேற்றுமைப் புணர்ச்சியில் றகர மெய்யாகத் திரியும்.

நெல்லும் செல்லும் கொல்லும் சொல்லும்

அல்வழி யானும் றகரம் ஆகும். நூற்பா 232

(எ.டு) அல்வழி வேற்றுமை

| | |
|---|---|
| நெல் + பெரிது = நெற்பெரிது | நெல் + பெருமை = நெற்பெருமை |
| செல் + பெரிது = செற்பெரிது | செல் + பெருமை = செற்பெருமை |
| கொல் + கடிது = கொற்கடிது | கொல் + கடுமை = கொற்கடுமை |
| சொல் + பெரிது = சொற்பெரிது | சொல் + பெருமை = சொற்பெருமை |

இல் என்பதற்குச் சிறப்பு விதி

இல் என்பதற்கு வீடு, இன்மை, இல்லாமை எனும் பல பொருள் உண்டு. இங்கு இன்மையை உணர்த்தும் 'இல்' என்னும் சொல்லின் புணர்ச்சிக்குச் சிறப்பு விதி கூறப்படுகிறது.

இல் என்னும் சொல்லுடன் ஐகாரச் சாரியை வந்து சேர்ந்தால், வருமொழி வல்லினம் விகற்பமாகும்.

(எ.டு) இல் + பொருள் = இல்லைப்பொருள், இல்லைபொருள்

வருமொழி வல்லினம் மிகுந்தும் மிகாமலும் விகற்பித்தது.

'இல்' என்னும் சொல்லுடன் ஆகாரச் சாரியை வந்து சேர்ந்தால் வருமொழி வல்லினம் மிகும்.

இல் + பொருள் = இல்லாப்பொருள்

ஆகாரச் சாரியை பெற்று வல்லினம் மிக்கது.

மேற்கூறிய சாரியை பெறாமல் இயல்பாக வருதலும் உண்டு.

இல் + பொருள் = இல்பொருள்

"இல்என் இன்மைச் சொற்கு ஐஅடைய

வன்மை விகற்பமும் ஆகா ரத்தொடு

வன்மை யாகலும் இயல்பும் ஆகும்" நூற்பா 233

புள், வள் என்பனவற்றிற்குச் சிறப்பு விதி

புள், வள் என்னும் இரண்டு சொற்களும் அல்வழி, வேற்றுமையில் யகரம் அல்லாத மெய்கள் வந்தால் தொழிற்பெயர் போன்று உகரச் சாரியை பெற்று முடியும்.

புள்ளும் வள்ளும் தொழிற்பெயரும் மாறும். நூற்பா 234

(எ.டு) அல்வழி வேற்றுமை

புள் + சிறிது = புள்ளுச்சிறிது புள் + சிறுமை = புள்ளுச்சிறுமை

வள் + பெரிது = வள்ளுப்பெரிது வள் + பெருமை = வள்ளுப்பெருமை

2.2.4.7 வகர ஈறு

வகர ஈற்றுச் சுட்டுப் பெயர்

அவ், இவ், உவ் என்னும் சுட்டெழுத்தை முதலாகக் கொண்ட வகர ஈற்றுச் சொற்களுக்கு முன் வருமொழியில் மூவினமும் வந்தால் வகரம் முறையே ஆய்தமும் மெல்லினமும் இயல்பும் ஆகும்.

சுட்டு வகரம் மூவினம் உற முறையே

ஆய்தமும் மென்மையும் இயல்பும் ஆகும். நூற்பா 235

(எ.டு) அவ் + கடிய = அஃகடிய

இவ் + கடிய = இஃகடிய

உவ் + கடிய = உஃகடிய

வல்லினம் வர வகரம் ஆய்தமாயிற்று.

அவ் + ஞானம் = அஞ்ஞானம்

இவ் + ஞானம் = இஞ்ஞானம்

உவ் + ஞானம் = உஞ்ஞானம்

மெல்லினம் வர வகரம் மெல்லினமாயிற்று.

அவ் + யாவை = அவ்யாவை

இவ் + யாவை = இவ்யாவை

உவ் + யாவை = உவ்யாவை

இடையினம் வர வகரம் இயல்பாயிற்று.

தெவ் என்பதற்குச் சிறப்பு விதி

நிலைமொழியில் தெவ் என்னும் சொல் இடம் பெற்று யகரமல்லாத மெய்கள் வருமொழியில் வரின் தொழிற்பெயர் போல் இரு வழியிலும் உகரச் சாரியை பெறும்.

தெவ்வென் மொழியே தொழிற்பெய ரற்றே

மவ்வரின் வஃகான் மவ்வு மாகும். நூற்பா 236

(எ.டு) அல்வழி வேற்றுமை

தெவ் + கடிது = தெவ்வுக்கடிது தெவ் + கடுமை = தெவ்வுக்கடுமை

தெவ் + வலிது = தெவ்வுவலிதுதெவ் + வன்மை = தெவ்வுவன்மை

நிலைமொழியில் வகர மெய் இடம் பெற்று வருமொழியில் மகர மெய் வரின் உகரச் சாரியை பெறுதலின்றிச் சிலவிடங்களில் வகர மெய் மகர மெய்யாகத் திரிதலும் உண்டு.

(எ.டு) தெவ் + மன்னர் = தெம்மன்னர் – அல்வழி

தெவ் + முனை = தெம்முனை – வேற்றுமை

இங்கு இருவழியிலும் வருமொழியில் மகரம் வர, வகர மெய் மகர மெய்யாகத் திரிந்தது.

2.2.4.8 வருமொழித் தகர நகரத் திரிபு

மெய்யீற்றுப் புணரியலில் இதுவரை நிலைமொழியின் ஈற்று மெய்கள் எவ்வாறு புணரும் என்று கூறப்பட்டது. இனி, வருமொழியின் முதலில் தகர நகரங்கள் வந்தால் சில எழுத்துக்களின் முன் அவை எவ்வாறு திரிகின்றன என்னும் செய்திகள் விளக்கப்படுகின்றன.

நிலைமொழியின் இறுதியில் ன, ல என்னும் மெய்களின் முன் வருகின்ற த, ந என்னும் மெய்கள் ற, ன என்னும் மெய்களாக முறையே திரியும்.

ண, ள என்னும் மெய்களின் முன் வருகின்ற த, ந என்னும் மெய்கள் ட, ண என்னும் மெய்களாகத் திரியும்.

னலமுன் றனவும் ணளமுன் டணவும்

ஆகும் தநக்கள் ஆயுங்காலே. நூற்பா 237

(எ.டு) அல்வழி வேற்றுமை

பொன் + தீது = பொற்றீது பொன் + தீமை = பொற்றீமை

னகரத்தின் முன் தகரம் றகரமாயிற்று.

பொன் + நன்று = பொன்னன்று பொன் + நன்மை = பொன்னன்மை

னகரத்தின் முன் நகரம் னகரமாயிற்று.

கல் + தீது = கற்றீது கல் + தீமை = கற்றீமை

கல் + நன்று = கன்னன்று கல் + நன்மை = கன்னன்மை

லகரத்தின் முன் தகரம் றகரமாகவும், நகரம் னகரமாகவும் மாறிற்று.

மண் + தீது = மண்டீது மண் + தீமை = மண்டீமை

மண் + நன்று = மண்ணன்று மண் + நன்மை = மண்ணன்மை

ணகரத்தின் முன் தகரம் டகரமாகவும் நகரம் ணகரமாகவும் மாறிற்று.

முள் + தீது = முட்டீது முள் + தீமை = முட்டீமை

முள் + நன்று = முண்ணன்று முள் + நன்மை = முண்ணன்மை

ளகரத்தின் முன் தகரம் டகரமாகவும், நகரம் ணகரமாகவும் மாறிற்று.

2.2.4.9 வேற்றுமைப் புணர்ச்சிக்குச் சிறப்பு விதி

வேற்றுமைப் புணர்ச்சியை இரு வகையாகப் பிரிக்கலாம். அவை, 1. வேற்றுமை உருபு புணர்ச்சி 2. வேற்றுமைப் பொருட் புணர்ச்சி.

உருவு புணர்ச்சிக்குக் கூறப்படும் விதிகள் பொருட்புணர்ச்சிக்கும் பொருந்துவதாகும்.

“உருபின் முடிபவை ஒக்கும் அப் பொருளினும்” நூற்பா 238

இந்நூற்பாவின் மூலம் மேற்கூறிய கருத்து பெறப்படுகிறது.

உருபு புணர்ச்சி

ஒரு வேற்றுமைப் புணர்ச்சியில் வேற்றுமை உருபு வெளிப்பட்டு நிற்குமானால் அது வேற்றுமை உருபு புணர்ச்சியாகும்.

(எ.டு) எல்லா வற்றுதும் – உருபு புணர்ச்சி

எல்லாவற்றுக் கோடும் – வேற்றுமைப் பொருட் புணர்ச்சி

இவை அஃறிணையில் வந்தன.

எல்லாம் என்னும் சொல், உருபு புணர்ச்சியில் அற்றும் வேற்றுமையுருபுக்குப் (அது) பின் உம்மும் பெற்றது போல் வேற்றுமைப் பொருட் புணர்ச்சியிலும் தம்மும் உம்மும் பெற்று வரும்.

(எ.டு) எல்லார் தமதும் – உருபு புணர்ச்சி

எல்லார் தங்கையும் – வேற்றுமைப் பொருட் புணர்ச்சி

உயர்திணையில் வந்தன.

எல்லார் என்னும் சொல் உருபு புணர்ச்சியில் தம்மும் வேற்றுமை உருபுக்குப் (அது) பின் உம்மும் பெற்றது போல் வேற்றுமைப் பொருட் புணர்ச்சியில் தம்மும் உம்மும் பெற்று வரும்.

(எ.டு) உருபு புணர்ச்சி பொருட் புணர்ச்சி

எல்லா நமதும் எல்லா நங்கையும்

எல்லீர் நுமதும் எல்லீம் நுங்கையும்

தனது தன்கை

நமது நங்கை

எனது என்கை

எமது எங்கை

தான் என்பது உருபுகளுடன் சேருகையில் தன் குறுகும் என்பது (நூ. 247) இவ்விதி பொருட்புணர்ச்சிக்கும் பொருந்துவதாகும். தான் என்பது கை என்னும் பெயருடன் சேரும் போது தன்கை என்று குறுகும்.

2.2.4.10 புணரியல்களுக்குப் புறனடை

மெய்யீற்றுப் புணரியல், உயிரீற்றுப் புணரியல் என்னும் இயல்களில் சொன்ன புணர்ச்சி இலக்கணங்களுக்கு மாறுபட்டு வருகின்றனவற்றை இப்புறனடைச் சூத்திரத்தின் மூலம் அடக்கிக் கொள்ளுதல் வேண்டும் என்று பவணந்தியார் குறிப்பிடுகின்றார்.

இடைஉரி வடசொலின் இயம்பிய கொளாகவும்

போலியும் மரூஉம் பொருந்தி வாற்றிற்கு

இயையப் புணர்த்தல் யாவர்க்கும் நெறியே. நூற்பா 239

இடை, உரி, வட என்னும் மூன்று சொற்களுள்ளும் உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல்களில் கூறப்பெற்ற புணர்ச்சி இலக்கணங்கள் பொருந்தாமல் வேறுபட்டு வரும் சொற்களும் இலக்கணப் போலியும் , மரூஉச் சொற்களும் ஆகியவற்றை உலக வழக்கு, செய்யுள் வழக்கு என்னும் இருவகை வழக்கிற்கும் ஏற்பப் பொருந்தும் முறையறிந்து கூட்டி முடித்தல் அறிவுடையோர் யாவர்க்கும் இயல்பாகும்.

(எ.டு) ஆன் + கன்று = ஆன்கன்று

வண்டின் + கால் = வண்டின்கால்

வேற்றுமையில் இடைச் சொற்களான ன், இன் சாரியைகள் இயல்பாயின.

மழ + களிறு = மழகளிறு

தட + தோள் = தடந்தோள்

உயிரை இறுதியாக உடைய உரிச்சொல் வல்லெழுத்து வர இயல்பாயும் மெல்லெழுத்து மிகுந்தும் முடிந்தது.

அளி + குலம் = அளிகுலம்

தன + தடம் = தனதடம்

உயிரை இறுதியாக உடைய வடசொல் வல்லினம் வர இயல்பாயிற்று.

இல் + முன் = முன்றில்

பொது + இல் = பொதியில்

இலக்கணப் போலிகள் முற்கூறிய விதிபெறாமல் தமக்கு ஏற்றவாறு விகாரப்பட்டன.

சோழநாடு – சோணாடு

தஞ்சாவூர் – தஞ்சை

ஆதன்தந்தை – ஆந்தை

மரூஉச் சொற்கள் முற்கூறிய விதி பெறாமல் தமக்கு ஏற்றவாறு விகாரப்பட்டன.

வடமொழித் தொகைப் பதங்கள், தமிழில் பரவலாக வருமிடத்தே பெரும்பாலும் அவ்வடநூற் புணர்ச்சியே பெறும். இப் புணர்ச்சியினை சந்தி என்றும் அழைப்பர். அச்சந்தி தீர்க்க சந்தி, குணசந்தி, விருத்தி சந்தி என மூவகைப்படும்.

தீர்க்கசந்தி

1. அ, ஆவின் முன் அ, ஆ வரின் ஈறும், முதலும் கெட ஆ வொன்று தோன்றும்.

பத + அம்புயம் = பதம்புயம்.

சிவ + ஆலயம் = சிவாலயம்.

சேதா + அதிபதி = சேநாதிபதி

சதா + ஆநந்தம் = சதாநந்தம்.

2. இ, ஈயின் முன் இ, ஈ வரின், ஈறும் முதலும் கெட ஈயொன்று தோன்றும்.

கிரி + இந்திரன் = கிரீந்திரன்

கிரி + ஈசன் = கிரீசன்

மகீ + இந்திரன் = மகீந்திரன்

நதீ + ஈசன் = நதீசன்.

3. உ, ஊவின் முன் உ, ஊ வரின், ஈறும், முதலும் கெட, ஊவொன்று தோன்றும்.

குரு + உபதேசம் = குரூபதேசம்

மேரு + ஊர்த்துவம் = மேரூர்த்துவம்

வதூ + உத்துவாகம் = வதூத்துவாகம்

வதூ + ஊரு = வதூரு.

குணசந்தி

1. அ, ஆவின் முன் இ, ஈ வரின், ஈறும் முதலும் கெட, ஏயொன்று தோன்றும்.

நர + இந்திரன் = நரேந்திரன்

சுர + ஈசன் = சுரேசன்

தரா + இந்திரன் = தரேந்திரன்

மகா + ஈசன் = மகேசன்

2. ஆ, ஆவின் முன், உ, ஊ வரின், ஈறும் முதலும் கெட, ஓ வொன்று தோன்றும்.

மாத + உதகம் = மாதோதகம்

ஞான + ஊர்ச்சிதன் = ஞானோர்ச்சிதன்

கங்கா + உற்பத்தி = கங்கோற்பத்தி

தயா + ஊர்ச்சிதன் = தயோர்ச்சிதன்.

விருத்தி சந்தி

1. அ, ஆவின் முன் ஏ, ஐ வரின், ஈறும் முதலும் கெட ஐயொன்று தோன்றும்.

லோக + ஏகநாயகன் = லோகைகநாயகன்

சிவ + ஐக்கியம் = சிவைக்கியம்

தரா + ஏகவீரன் = தரைகவீரன்

மகா + ஐசுவரியம் = மகைசுவரியம்

2. அ, ஆவின் முன் ஓ, ஔ வரின், ஈறும் முதலும் கெட, ஔ வொன்று தோன்றும்.

கலச + ஓதனம் = கலசௌதனம்

திவ்விய + ஔடதம் = திவ்வியௌடதம்

கங்கா + ஓகம் = கங்கௌகம்

மகா +ஔதாரியம் = மகௌதாரியம்.

மெய்யீற்றுப் புணரியல் பற்றிய செய்திகளை முந்தைய பாடங்களில் பார்த்தோம். இனி, உருபு புணர்ச்சிகளைப் பற்றிய செய்திகளை இனி முறையே காணலாம்.

தன்மதிப்பீட்டு வினாக்கள்

II.

1. தமிழ் என்னும் சொல்முன் வேற்றுமைப் புணர்ச்சியில் நாற்கணமும் .......... சாரியை பெறும்.
2. 'கீழ்' என்பதன் சிறப்பு விதியினை உணர்த்தும் நூற்பாவினை எழுதுக.
3. லகர, ளகர ஈற்றுப் புணர்ச்சி குறித்து நன்னூலார் எத்தனை நூற்பாக்களில் கூறுகின்றார்?
4. வினைத்தொகையில் நிலைமொழியின் ஈறு இயல்பாக வரும். சரியா? தவறா?
5. நெல்லுக்குச் சிறப்புவிதி கூறுகையில் வேறு சில சொற்களையும் சேர்த்துக் கூறுகிறார். அவை எவை?
6. ஒரு வேற்றுமைப் புணர்ச்சியில் வேற்றுமை உருபு வெளிப்பட்டு நிற்குமானால் .............. புணர்ச்சியாகும்.

தொகுப்புரை

எழுத்திலக்கணத்தின் பன்னிரண்டு வகைகளில் இறுதியாக உள்ள புணர்ப்பு என்பதை இம் மெய்யீற்றுப் புணரியலில் கூறியுள்ளமையை அறிந்து கொண்டோம். இவ்வியலில் மெய்யீற்றின் முன் உயிர் புணரும் புணர்ச்சியும், மெய்யீற்றின் முன் மெய் புணரும் பொதுவான புணர்ச்சியும் பவணந்தியார் தெளிவாகக் கூறியுள்ளமையை அறிய முடிந்தது.

மெய்யீறுகளைத் தனித்தனியாக எடுத்துக் கொண்டு அவை புணரும் புணர்ச்சி நிலைகளைத் தெளிவாகக் கூறியுள்ளமையும் அறிந்து கொண்டோம். மெய்யீறுகளுள் ணகர, னகர, மகர, ய, ர, ழ, லகர, ளகர, வகர ஈறுகளின் புணர்ச்சி பற்றிய செய்திகளை இவ்வியலின் மூலம் தெளிவாக அறிந்து கொள்ள முடிந்தது.

பயிற்சி வினாக்கள்

சிறு வினாக்கள்

1. வேலெறிந்தான், பொன்னழகு – இப்புணர்ச்சிகளுக்குரிய விதிகள் யாவை?
2. எயின் தோட்டம், எயினத் தோட்டம் – இவற்றுள் எது பிழையற்றது? ஏன்?
3. அங்கை என்ற இலக்கணப் போலியின் புணர்ச்சியை விளக்குக.
4. 'முதலன வேற்றுமைக்கு அவ்வும் பெறுமே' – விளக்கி எடுத்துக்காட்டு தருக.
5. 'உடன்மேல் உயிர்வந் தொன்றுவ தியல்பே' – விளக்கம் தருக.

குறு வினாக்கள்

1. ய, ர, ழ ஈற்றுப் புணர்ச்சிகளை விளக்கியுரைக்க.
2. வருமொழி முதல் தகர நகரத் திரிபுகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
3. மகரவீறு குறித்த செய்திகளைத் தொகுத்துரைக்க.

பெரு வினாக்கள்

1. பொதுவாக லகர ளகர ஈறு புணரும் புணர்ச்சி குறித்து எழுதுக.
2. பொதுவாக ணகர, னகர ஈற்று நிலைமொழிகள் எவ்வாறு புணரும் என்பதனை எடுத்துரைக்க.

தன்மதிப்பீட்டு விடைகள்

I.

1. தோன்றல் + அழகன் = தோன்றலழகன் (அல்வழி)

   வேல் + எறிந்தான் = வேலெறிந்தான் (வேற்றுமை)
2. உகரம்.
3. சரி.
4. நூற்பா 213.

5. குயின்ஊன் வேற்றுமைக் கண்ணும் இயல்பே. (நூற்பா 216)

6. சரி.

7. உகரச்சாரியை.

II.

1. அகரச்சாரியை

2. “கீழின்முன் வன்மை விகற்பமும் ஆகும்.” (நூற்பா 226)

3. எட்டு

4. சரி

5. செல், கொல், சொல் ஆகியன.

6. வேற்றுமை உருபு

2.2.5 உருபு புணரியல்

2.2.5.1 உருபுகள் – நூற்பா 240 முதல் 242 வரை.

2.2.5.2 சாரியைகள் – நூற்பா 243 முதல் 244 வரை.

2.2.5.3 உருபுப் புணர்ச்சிக்குச் சிறப்பு விதி – நூற்பா 245 முதல் 252 வரை.

2.2.5.4 புறனடை – நூற்பா 253 முதல் 257 வரை.

உயிரையும் மெய்யையும் இறுதியாக உடைய வேற்றுமை உருபுகள் நிலைமொழி, வருமொழி ஆகிய வற்றுடன் எவ்வாறு புணரும் என்பதை உருபு புணரியல் என்னும் இவ்வியல் விளக்குகிறது.

இவ்வியலில் நூற்பா 240 முதல் 257 வரை 18 நூற்பாக்களில் உருபு புணர்ச்சி பற்றிய செய்திகளைப் பவணந்தியார் கூறுகின்றார்.

2.2.5.1 உருபுகள்

உருபு புணரியலின் முதல் நூற்பா வேற்றுமை உருபுகள் நாற்பது ஆகும் என்று குறிப்பிடுகிறது.

எட்டு வேற்றுமைகளும் ஒருவனை உணர்த்தும் உயர்திணை ஆண்பால் பெயர், ஒருத்தியை உணர்த்தும் உயர்திணைப் பெண்பால் பெயர், பலரை உணர்த்தும் உயர்திணைப் பலர்பால் பெயர், ஒன்றனை உணர்த்தும் அஃறிணைப் ஒன்றன்பால் பெயர், பலவற்றை உணர்த்தும் அஃறிணைப் பலவின்பால் பெயர் என்னும் ஐந்து வகையான பெயர்களுடனும் வருமாகையால் தமிழில் வேற்றுமை உருபுகள் 40 என்று பவணந்தியார் கூறுகிறார்.

ஒருவன் ஒருத்தி பலர்ஒன்று பலஎன

வருபெயர் ஐந்தொடு பெயர்முதல் இருநான்கு

உருபும் உறழ்தர நாற்பதாம் உருபே. நூற்பா 240

ஒருவன், ஒருத்தி, பலர், ஒன்று, பல என்று வருகின்ற ஐந்து பெயர்களோடும் எழுவாய் வேற்றுமை முதல் விளி வேற்றுமை வரை உள்ள எட்டு வேற்றுமை உருபுகளையும் பெருக்க வேற்றுமை உருபுகள் நாற்பதாகும்.

(எ.டு) நம்பி – முதல் வேற்றுமை

நம்பியை – இரண்டாம் வேற்றுமை (ஐ)

நம்பியால் – மூன்றாம் வேற்றுமை (ஆல்)

நம்பிக்கு – நான்காம் வேற்றுமை (கு)

நம்பியின் – ஐந்தாம் வேற்றுமை (இன்)

நம்பியது – ஆறாம் வேற்றுமை (அது)

நம்பிகண் – ஏழாம் வேற்றுமை (கண்)

நம்பியே – எட்டாம் வேற்றுமை (விளி வேற்றுமை)

மேற்கூறியவை ஆண்பால் பெயரோடு வந்த எட்டு வேற்றுமைகளாகும். இவ்வாறே மற்ற பால்களுடன் சேர்த்தால் மொத்த வேற்றுமை உருபுகள் நாற்பதாக அமையும்.

வேற்றுமை எல்லாப் பெயர்களுடனும் வரும். எனவே, எல்லாப் பெயர்களும் அடங்குவதற்கு ஒருவன், ஒருத்தி, பலர், ஒன்று, பல என்று பொருள் மேல் வைத்து 'வருபெயர்' என்று சூத்திரம் செய்யப்பட்டுள்ளது.

வேற்றுமை உருபுகள் வருவதற்குக் காரணமும் இடமும்

சொல்லின் வேற்றுமை உருபுகள் அனைத்தும் தாம் ஏற்கும் பெயர்களை அடுத்து பெயர் + வேற்றுமை உருபு என்ற முறையில் அமைந்து தம் பொருளைத் தரும்.

(எ.டு) நம்பி + ஐ = நம்பியை

பெயர்வழித் தம்பொருள் தரவரும் உருபே. நூற்பா 241

உருபு புணர்ச்சிக்குச் சிறப்பு விதி

மெய், உயிர் ஆகியவற்றை முதலும் இறுதியுமாக உடைய ஐ முதலிய ஆறு வேற்றுமை உருபுகளும் இடைச் சொற்களாகும். வேற்றுமை உருபுகள் நிலைமொழியோடும் வருமொழியோடும் புணர்வது வேற்றுமைப் புணர்ச்சியாகும். எனவே, இதுவரை நாம் பயின்ற உயிரீற்றுப் புணர்ச்சி, மெய்யீற்றுப் புணர்ச்சி ஆகிய இரண்டு இயல்களிலும் கூறப்பட்ட விதிகளின்படியே வேற்றுமை உருபுகளும் நிலைமொழி, வருமொழிகளோடு புணரும்.

(எ.டு) நம்பி + கண் + வாழ்வு = நம்பிகண்வாழ்வு

இங்கு, "ஆவியரமுன் வன்மை மிகா" (நூ. 160) என்னும் விதிப்படி உயிர் ஈற்று உயர்திணைப் பெயர் முன் வல்லினம் மிகவில்லை.

நம்பிகண் வாழ்வு

"ணன வல்லினம் வரட்டறளவும் பிறவரின் இயல்பும் ஆகும் வேற்றுமைக்கு."

என்னும் விதிப்படி (நூற்பா 210) ணகரமெய் இடையினமாகிய வகரமெய் வர இயல்பாயிற்று.

உறி + கண் + தயிர் = உறிக்கட்டயிர்

இங்கு "இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்" (நூ. 165) என்னும் விதிப்படி இகர ஈற்றுப் பெயர்முன் வல்லினமாகிய ககரம் மிக்கது.

"ணன வல்லினம் வரட்டறவும்" (நூ. 209) என்னும் விதிப்படி கண் உருபின் முதலும் இறுதியும் விகாரமாயின.

ஒற்றுஉயிர் முதல்ஈற்று உருபுகள் புணர்ச்சியின்

ஒக்கும்மன் அப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே. நூற்பா 242

இந்நூற்பாவில் "பெரும்பாலும் ஒக்கும்" என்றமையால் சிறுபான்மை ஒவ்வாது என்பது பெறப்படும்.

நம்பி + கு = நம்பிக்கு.

இங்கு, "ஆவியரமுன் வன்மை மிகா" (நூ. 161) என்ற விதி பொருந்தாமல் இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் (நூ. 165) என்னும் விதிப்படி ககரமெய் மிக்கது.

இதுவரை வேற்றுமை உருபுகளையும் அவை வருவதற்கும் உரிய காரணத்தையும் இடத்தையும் கூறிய பவணந்தியார் இனி, சாரியைப் பற்றி பின்வருமாறு கூறுகின்றார்.

### 2.2.5.2. சாரியைகள்

பதமுன் விகுதியும் பதமும் உருபும்

புணர்வழி யொன்றும் பலவுஞ் சாரியை

வருதலும் தவிர்தலும் விகற்பமாகும். நூற்பா 243

ஒரு பதத்தின் முன் விகுதியோ, பதமோ, வேற்றுமை உருபோ வந்து சேரும் போது அவற்றுக்கு இடையே ஒரு சாரியையோ பல சாரியைகளோ வருதலும் உண்டு.

சாரியை – வகைப்பாடு

அன்ஆன் இன்அல் அற்றுஇற்று அத்துஅம்

தம் நம் நும் எ அ உ ஐ கு ன

இன்ன பிறவும் பொதுச் சாரியையே. நூற்பா 244

இந்நூற்பாவில் அன் முதலாக ன இறுதியாக உள்ள பதினேழும் இவை போல்வன பிறவும் பொதுச்சாரியைகள் என்று கூறுகின்றார். இவற்றைப் பொதுச் சாரியை என்று கூறியதற்குக் காரணம்

இவை விகுதிப் புணர்ச்சி, பதப் புணர்ச்சி, உருபு புணாச்சி என்னும் மூன்று புணர்ச்சிகளிலும் தனிமொழிகளில் வருகின்ற பொதுவான சாரியைகளாகும்.

(எ.டு) ஒன்றன் கூட்டம் – அன்

ஒருபாற்கு – ஆன்

வண்டின் கால் – இன்

தொடையல் – அல்

பலவற்றை – அற்று

பதிற்றுப்பத்து – இற்று

மரத்திலை – அத்து

புளியங்காய் – அம்

எல்லார் தம்மையும் – தம்

எல்லார் நம்மையும் – நம்

எல்லீர் நும்மையும் – நும்

செய்குவாய் – கு

கோன் – ன்

மேற்கூறிய நூற்பாவில் இன்னபிறவும் என்பதால் தன், தான், தாம், ஆ முதலிய சாரியைகளையும் கொள்ளுதல் வேண்டும்.

அவன்றன் – தன்

அவன்றான் – தான்

அவர்தம் – தம்

இல்லாப் பொருள் – ஆ

மேற்கூறிய சாரியைகளையும் கொள்ளுதல் வேண்டும்.

### தன்மதிப்பீட்டு வினாக்கள்

I.

1. உருபு புணரியலின் முதல் நூற்பா வேற்றுமை உருபுகள் 40 என்று குறிப்பிடுகிறது. சரியா? தவறா?
2. சாரியை ............ வகையைச் சார்ந்தது?
3. சாரியைகளின் பெயர்களைப் பட்டியலிடுக.

### 2.2.5.3 உருபு புணர்ச்சிக்குச் சிறப்பு விதி

எல்லாம் என்னும் சொல் அஃறிணையில் வரும்போது ஆறு வேற்றுமை உருபுகளும் அச்சொல்லுடன் புணர்ந்தால், அச்சொல்லின் இடையில் அற்றுச் சாரியையும் உருபுக்குப்பின் முற்றும்மை வரும். அச்சொல் உயர்திணையில் வரும்போது இடையில் நம் சாரியையும் உருபுக்குப் பின் முற்றும்மையும் இடம் பெறும்.

எல்லாம் என்பது இழிதிணை ஆயின்

அற்றோடு உருபின் மேல்உம் உறுமே

அன்றேல் நம்இடை அடைந்துஅற்று ஆகும். நூற்பா 245

(எ.டு) எல்லாம் + அற்று + ஐ + உம் = எல்லாவற்றையும் – அஃறிணை

எல்லாம் + நம் + ஐ + உம் = எல்லா நம்மையும் – உயர்திணை

இங்கு “இழிதிணையாயின்” என்ற தொடர் இழிதிணை + ஆயின் என்று பிரிக்கப்பட்டு மேற்கூறியவாறு பொருள் உரைக்கப்பட்டது. இரட்டுற மொழிதல் என்னும் உத்தியைப் பயன்படுத்தி இத்தொடரையே “இழிதிணையாய் + இன்” என்று பிரித்து எல்லாம் என்னும் சொல் அஃறிணையில் இன் சாரியையும் அற்றுச் சாரியையும் பெறும் என்னும் பொருள் கொள்ளலாம்.

எல்லாம் + அற்று + இன் + உம் = எல்லாவற்றினையும்

இங்கு எல்லாம் என்பது பொதுப்பெயர். அது ஏற்கும் சாரியை கொண்டு திணையை அறியலாம்.

எல்லாரும் எல்லீரும் என்பனவற்றிற்குச் சிறப்பு விதி

எல்லாரும் என்னும் உயர்திணைப் படர்க்கைப் பன்மைப் பெயரும் எல்லீரும் என்னும் இருதிணைக்கும் பொதுவான முன்னிலைப் பன்மைப் பெயரும் ஆறு வேற்றுமை உருபுகளும் புணரும் போது இவற்றின் இறுதியில் உள்ள முற்றும்மைகளை நீக்கிவிட்டு அவ்விடங்களில் முறையே தம், நும் என்னும் சாரியைகள் இடம்பெற்று, அம் முற்றும்மைகள் உருபுகளுக்குப் பின்னே வந்து சேரும்.

எல்லாரும் + ஐ = எல்லார் + தம் + ஐ + உம் = எல்லார் தம்மையும்

எல்லீரும் + ஐ = எல்லீர் + நும் + ஐ + உம் = எல்லீர் நும்மையும்

எல்லாரும் எல்லீரும் என்பனவற்று உம்மை

தள்ளி நிரலே தம்நும் சாரப்

புல்லும் உருபின் பின்னர் உம்மே. நூற்பா 246

இவ்விடம் கூறப்பட்ட தம், நும் என்பனவும் சாரியை இடைச்சொற்களே.

தான், தாம் முதலியவற்றிற்குச் சிறப்பு விதி

தான் தாம் நாம் முதல் குறுகும் யான் யாம்

நீநீர் என்எம் நின்நும் ஆம்பிற

குவ்வின் அவ்வரும் நான்குஆறு இரட்டல். நூற்பா 247

இந்நூற்பாவின்படி தான், தாம், நாம் என்னும் சொற்கள் உருபுகளுடன் புணருகையில் அவற்றின் முதலெழுத்து குறுகும்.

(எ.டு) தான் + ஐ = தன்னை

தாம் + ஐ = தம்மை

நாம் + ஐ = நம்மை

யான், யாம், நீ, நீர் என்னும் சொற்கள் உருபுகளுடன் புணருகையில் முறையே என், எம், நின், நும் என்றவாறு அமையும்.

(எ.டு) யான் + ஐ = என்னை

யான் + ஐ = எம்மை

நீ + ஐ = நின்னை

நீர் + ஐ = நும்மை

தான் + கு = தனக்கு என்றும், யான் + கு = எனக்கு என்றும் அமையும். இங்கு 'கு' உருபு புணருகையில் அகரச் சாரியை பெற்றன.

தான் + கு = தனக்கு

தான் + அது = தனது

யான் + அது = எனாது

இச்சொற்களில் அகரச் சாரியையும் ஆறாம் வேற்றுமை உருபுகளின் முதல் உயிரும் வரத் தனிக்குறில் ஒற்றுக்கள் இரட்டிக்கவில்லை.

மேற்கூறிய நூற்பாவில் பிற என்றமையால் நீ, நீர் என்பன உன், உம் எனத் திரிதலும் உண்டு.

ஆ, மா, கோ

ஆ மா கோனவ் அணையவும் பெறுமே. நூற்பா 248

ஆ, மா, கோ என்னும் மூன்று சொற்களும் உருபுகளுடன் புணருகையில் னகரச் சாரியை பெறும். மேலும் அணையவும் என்ற உம்மையால் அகரச் சாரியை பெறாமல் வருதலும் உண்டு.

(எ.டு) ஆ + ஐ = ஆனை – ஆவை (பசு)

மா + ஐ = மனை – மாவை (விலங்கு)

கோ + ஐ = கோவை – கோவை (அரன்)

மேற்கூறிய நூற்பாவில் அணையவும் என்னும் உம்மையால், நான்காம் வேற்றுமை உருபு புணருகையில் னகரச் சாரியையுடன் உகரச் சாரியையும் வரும்.

(எ.டு) ஆ + கு = ஆனுக்கு

மா + கு = மானுக்கு

கோ + கு = கோனுக்கு

2. கு உருபுடன் சேரும் போது உகரச் சாரியை மட்டும் பெறும்.

ஆவுக்கு, மாவுக்கு, கோனுக்கு

3. கு உருபு சேருகையில் இன் சாரியையுடன் உகரச் சாரியையும் உடன் வருதல் உண்டு.

ஆவினுக்கு, மாவினுக்கு, கோவினுக்கு

4. ஐந்தாம் வேற்றுமை உருபாகிய 'இன்' நீங்கலாக ஏனைய உருபுகள் புணருகையில் இன் சாரியை மட்டுமே வரும்.

ஆ + ஐ = ஆவினை.

இரட்டுற மொழிதல் என்னும் உத்தியால், ஆமா என்பதனைச் சொல்லாகக் கொண்டு காட்டுப்பசு

எனப் பொருள் உரைத்து, இச் சொல்லுடன் மேற்கூறிய இலக்கண விதிகளையே பெறும் எனக் கொள்ள வேண்டும்.

ஆமானை, ஆமாவை, ஆமானுக்கு, ஆமாவுக்கு

ஆமாவினுக்கு, ஆமாவினை.

ஆ, மா, கோ என்பவை உருபு ஏற்காமல் தனி மொழியாய் நிற்பினும் னகரச் சாரியை பெறுதல் உண்டு.

அன், மான், கோன் என்றவாறு அமையும்.

எண்ணுப் பெயர்களுக்குச் சிறப்பு விதி

ஒன்று முதல் எட்டு இறுதியாக உள்ள எண்களோடு சேர்ந்த பத்து என்னும் எண்ணின் முன் ஆறு வேற்றுமை உருபுகளும் புணர்கையில் ஆன் சாரியை வந்தால் பத்து என்னும் எண்ணின் முதலில் உள்ள பகர மெய் நீங்கலாக ஏனைய எழுத்துக்கள் எல்லாம் கெடும். அதேபோன்று ஒன்பது என்னும் எண்ணுப் பெயரும் வேற்றுமை உருபுகளோடு புணர்கையில் இவ்வாறே கெடும். (நூற்பா 249)

(எ.டு) ஒருபத்து + ஆன் + ஐ = ஒரு பானை

ஒருபது + ஆன் + ஐ = ஒரு பானை

ஒருபஃது + ஆன் + ஐ = ஒரு பானை

ஒரு பானை, ஒரு பதை, ஒரு பஃதை எனவும்

ஒன்பானை, ஒன்பதை, ஒன்பஃதை எனவும் விகற்பித்தும் வரும். பிறவற்றையும் இவ்வாறே கண்டு கொள்ளுதல் வேண்டும்.

வகரயீற்றுச் சுட்டுப் பெயருக்குச் சிறப்பு விதி

அவ், இவ், உவ் என்னும் சுட்டுப் பெயர்கள் உருபுப் புணர்ச்சியில் அற்றுச் சாரியை பெறும்.

“சுட்டின் முன் ஆய்தம் அன்வரின் கெடுமே”

(எ.டு) அவ் + ஐ = அவற்றை

இவ் + ஐ = இவற்றை

உவ் + ஐ = உவற்றை

“வவ்விறு சுட்டிற்கு அற்றுஉறல் வழியே” நூற்பா 250

இங்கு வழியே என்று கூறியதால் அற்றுச் சாரியையுடன் இன் சாரியையும் வரும்.

(எ.டு) அவற்றினை, இவற்றினை, உவற்றினை

அஃது என்பதற்குச் சிறப்பு விதி

அஃது, இஃது, உஃது என்னும் சுட்டுப் பெயர்களில் சுட்டெழுத்தின் முன் உள்ள ஆய்தம், ஆறு வேற்றுமை உருபுகளுடனும் புணரும் போது அன் சாரியை வரின் கெடும்.

(எ.டு)

அஃது + அன் + ஐ = அதனை, அஃதை

இஃது + அன் + ஐ = இதனை, இஃதை

உஃது + அன் + ஐ = உதனை, உஃதை

"சுட்டின்முன் ஆய்தம் அன்வரிற் கெடுமே." நூற்பா 251

அத்துச் சாரியைக்குச் சிறப்பு விதி

அத்துச் சாரியையின் முன் உள்ள அகரம், அகர ஈற்றுச் சொல்லுக்கு முன் வந்தால் கெடும்.

(எ.டு) மர + அத்து + கை = மரத்துக்கை

மர + அத்து + நிழல் = மரத்துநிழல்

"அத்தின் அகரம் அகரமுனை இல்லை" நூற்பா 252

2.2.5.4 சாரியைக்குப் புறனடை

இதுவரை பவணந்தியார் உருபுப் புணர்ச்சியில் வரும் சாரியைகளைக் கூறினார்.

விகுதி முதலான புணர்ச்சிகளில் இதற்கு இது சாரியை என்று வரையறுத்துக் கூறுதல் தொடங்கினால் அதற்கு ஓர் அளவு இல்லாமல் போகும். ஆதலால், விகுதிப் புணர்ச்சி, பதப் புணர்ச்சி, உருபு புணர்ச்சி ஆகியவற்றைப் பிரித்து நிலைமொழிக்கும் அவற்றுக்கும் இடையே நின்ற ஏகாரம், அகரம் முதலிய எழுத்துச் சாரியைகளையும் இவ்விரிநிலை சாரியைகளும் தோன்றாத இயல்பினையும் பொருத்தமாகத் தெரிவித்தல் கற்றறிந்தவரின் நெறியாகும் என்று பவணந்தியார் புறனடை கூறுகின்றார்.

"இதற்கு இது சாரியை எனின் அளவு இன்மையின்

விகுதியும் பதமும் உருபும் பகுத்துஇடை

நின்ற எழுத்தும் பதமும் இயற்கையும்

ஒன்றை உணர்த்தல் உரவோர் நெறியே" நூற்பா 253

புணர்ச்சியுள் எழுத்துச் சாரியை, பதச் சாரியை, இயல்பு என்ற மூவகை நிலை உண்டு.

செய்குவாய் – விகுதிப் புணர்ச்சி. இதில், செய் + ஆய் எனப் பிரித்து 'கு' சாரியை வந்தது. வண்டின் கால் – பதப் புணர்ச்சி. இதில் வண்டு + கால் எனப் பிரிந்து 'இன்' சாரியை பெற்றது. சாத்தனுக்கு – உருபு புணர்ச்சி. இப் புணர்ச்சியில் சாத்தன் + கு எனப் பிரித்து 'உ' சாரியை வந்தது. இவற்றுள் கு, உ என்பன தனி எழுத்துக் களாக நின்றமையால் எழுத்துச் சாரியையாகும். இன் என்பது பதச் சாரியையாகும்.

தன் + கை = தன்கை என்று சாரியை இன்றியும் இயல்பாகவும் வரும். எனவே, புணர்ச்சியுள் எழுத்துச் சாரியை, பதச் சாரியை, இயல்பு என மூவகை நிலை உண்டு என்பது பெறப்படுகிறது.

ஆனாநெய் – இப் புணர்ச்சி பொருட்புணர்ச்சியாகும். இப் புணர்ச்சிக்கு நகர மெய்ச் சாரியை வரும் என்று சூ. 238இல் கூறப்பெற்றது. ஆனால், நகர மெய்ச் சாரியையுடன் அகரச் சாரியையும் வந்துள்ளது.

பாட்டின் பொருள் – பாட்டு + பொருள்; பாட்டு + இன் + பொருள். இதில் குற்றியலுகரத்தின் பின் இன் சாரியை வந்துள்ளது.

நால்வகைப் புணர்ச்சிக்கும் புறனடை

விகுதிப் புணர்ச்சி, பதப் புணர்ச்சி, சாரியைப் புணர்ச்சி, உருபு புணர்ச்சி ஆகிய நான்கு வகைப் புணர்ச்சிகளுக்குப் பொதுவாகக் கூறப்பெற்ற விதிகளுள் இவ்விதி இதற்குப் பொருந்தும் என்று ஆராய்ந்து அறிந்து பொருத்தமான விதிகளை ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

விகுதி பதம் சாரியை உருபு அனைத்திலும்

உரைத்த விதியின் ஓர்ந்து ஒப்பன கொளலே. நூற்பா 254

(எ.டு)

1. விகுதிப் புணர்ச்சியில் "றவ்வொடு உகர உம்மை நிகழ்வு அல்லவும்" (நூ. 145) எனப் பொதுப்படக் கூறினார். ஆனால், சென்று என்னும் சொல்லில் உள்ள 'று' இறந்த காலமும் 'சேறு' என்னும் சொல்லில் உள்ள 'று' எதிர்காலமும் காட்டும் என்று அறிதல் வேண்டும்.

2. பதப் புணர்ச்சியில், "அல்வழி இஐம் முன்னராயின் இயல்பும் மிகலும் விகற்பமும் ஆகும்" (நூ. 176) எனப் பொதுப்படக் கூறினார்.

எனவே, இதுவே விதியென எண்ணி ஆடி திங்கள், குவளை கண் என்று இயல்பாகப் புணர்தல் கூடாது. ஆடித்திங்கள் எனப் பண்புத் தொகையில் மிகுந்தும், குவளைக்கண் என உவமைத் தொகையில் மிகுந்தும் வருதல் என்று கொள்ளுதல் வேண்டும்.

பருத்திக்குறிது, யானைக்குதிரை என்று கொள்ளுதல் கூடாது. எழுவாய்த் தொடராக இருப்பின் பருத்தி குறிது என்றும், உம்மைத் தொகையாக இருப்பின் யானை குதிரை என்று இயல்பாகக் கொள்ளுதல் வேண்டும்.

சாரியைப் புணர்ச்சி

"பதமுன் விகுதியும் பதமும் உருபும் புணர்வழி ஒன்றும் பலவும் சாரியை வருதலும் தவிர்தலும் விகற்பமுமாகும்" (நூ. 243) எனப் பொதுப்படக் கூறப்பட்டது. எனவே, இதுவே விதியென எண்ணி நாட்டினின் நீங்கினான் என இன் உருபிற்கு இன் சாரியை வரும் என்றும் நாட்டுக்கண் இருந்தான் என்று கண் உருபிற்கு இன் சாரியை வாராது என்றும் கொள்ளுதல் கூடாது. நாட்டின்கண் இருந்தான் என்று கண் உருபிற்கு இன் சாரியை வரும் என்றும் நாட்டின் இருந்தான் என்று இன் உருபிற்கு இன் சாரியை வாராது என்றும் கொள்ளுதல் வேண்டும்.

உருபு புணர்ச்சி

'ஒற்றுயிர் முதல் ஈற்று உருபுகள் புணர்ச்சியின் ஒக்குமன் அப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே' (நூ. 242) எனப் பொதுப்படக் கூறினார். எனவே இதுவே விதியெனக் கருதி 'நம்பிகு' என்றும் 'நம்பிக்கண்' என்றும் விதி கொள்ளக்கூடாது. நம்பிகண் என மிகாது என்றும் நம்பிக்கு என மிகுமென்றும் கொள்ளுதல் வேண்டும்.

எனவே வழக்கு அறிந்து பொது விதிகளை அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சிக்குச் சிறப்பு விதி

இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சி, முன்பு கூறிய பொது விதிப்படி முடிதலுடன் பின்வரும் சிறப்பு விதிகளையும் பெறும். 1. இயல்பிலே விகாரமாகியும் 2. விகாரத்திலே இயல்பாகியும் 3. உயர்திணைப் பெயரில் உருபு விரிந்தும் 4. உயர்திணைப் பெயரில் உருபு மறைந்தும் 5. விரவுப் பெயரில் உருபு விரிந்தும் 6. விரவுப் பெயரில் உருபு மறைந்தும் இவை போன்ற வேறுபாடுகள் பிறவற்றைப் பெற்றும் வரும்.

"இயல்பின் விகாரமும் விகாரத்து இயல்பும்

உயர்திணை இடத்து விரிந்தும் தொக்கும்

விரவுப் பெயரின் விரிந்து நின்றும்

அன்ன பிறவும் ஆகும்ஐ உருபே." நூற்பா 255

(எ.டு)

தலைவன் + புகழ்ந்தான் = தலைவன் புகழ்ந்தான் என இயல்பாதல் வேண்டும். ஆனால் தலைவற் புகழ்ந்தான் என விகாரப்பட்டு வருகிறது.

தமிழ் + படித்தான் = தமிழ்ப் படித்தான் என விகாரப்பட வேண்டும். ஆனால் தமிழ் படித்தான் என இயல்பாக வரும்.

நம்பி + கெணர்ந்தான் = உயர்திணைப் பெயருக்கு உரிய விதிப்படி நம்பி கொணர்ந்தான் என உருபு மறைந்து வர வேண்டும். ஆனால் நம்பியைக் கொணர்ந்தான் என உருபு விரிந்து வரும்.

மூன்றாம் வேற்றுமைப் புணர்ச்சிக்குச் சிறப்பு விதி

மூன்றாம் வேற்றுமைப் புணர்ச்சியில் ஒற்றினையும் உயிரையும் இறுதியாக உடைய சொற்களின் முன் தம்மின் ஆகிய தொழிற் சொற்கள் வந்ததால் வல்லினம், விகற்பமும் இயல்பும் ஆகும்.

புள்ளியும் உயிரும் ஆயிறு சொல்முன்

தம்மின் ஆகிய தொழில்மொழி வரினே

வல்லினம் விகற்பமும் இயல்பும் ஆகும். நூற்பா 256

தம்மின் ஆகிய வினைச் சொற்கள் – கருத்தாவாகிய நிலைமொழிப் பொருள்களால் ஆகிய தொழிற்சொல். இதனைச்செய்ப்பாட்டு வினைச் சொல் என்பர். இச்சொற்கள், தமக்கு முன் வல்லினம் வரின் வேற்றுமைப் புணர்ச்சிக்கு உரிய பொதுவிதியைப் பெறா.

(எ.டு)

பேய் கோட்பட்டான்; பேய்க் கோட்பட்டான் (மெய்யிறுதி)

புலி கோட்பட்டான்; புலிக் கோட்பட்டான் (உயிரிறுதி) – இவை உறழ்ந்து வந்தன.

பேய் பிடிக்கப்பட்டான்; புலி கடிக்கப்பட்டான். – இவை இயல்பாக வந்தன.

உம்மையால் அராத் தீண்டப்பட்டான்; சுறாப் பாயப்பட்டான் என வேற்றுமைப் பொது விதிப்படி மிகுந்து புணர்ச்சியில் முடிவனவே பெரும்பாலன ஆகும்.

எழுத்ததிகாரத்திற்குப் புறனடை

இதற்கு இதுதான் விதி என்று இவ்வதிகாரத்தில் விதிக்கத் தகுவனவற்றையெல்லாம் தனித்தனியே எடுத்து இலக்கணம் கூறத் தொடங்கினால் அளவில்லாமல் போய்விடும். ஆதலின் விதித்த இலக்கணங்களைக் கொண்டு விதி கூறாத சொற்களின் முடிபுகளை வகுத்து விதி கொள்ளுதல் வேண்டும்.

இதற்கு இது முடிபு என்று எஞ்சாது யாவும்

விதிப்புஅள வின்மையின் விதித்தவற்று இயலான்

வகுத்துஉரை யாதவும் வகுத்தனர் கொளலே. நூற்பா 257

எழுத்தியலில் “மொழிமுதற் காரணமாம் அணுத் திரள் ஒலி எழுத்து” என ஒலி வடிவம் மட்டும் கூறினார். எனவே இதனைக் கொண்டு ஒலி வடிவினைக் காட்டும் கருவி, வரி வடிவு எனக் கொள்ளுதல் வேண்டும்.

பதவியலில் “அன் ஆன் அள் ஆள்” என்னும் சூத்திரத்தில் அன், ஆன் என்பன ஆண்பாலுக்கும் அள், ஆள் என்பன பெண்பாலுக்கும் உரிய விகுதிகள் என்றார். ஆயினும் பெருமாள் என்பதில் ஆள் விகுதி ஆண்பாலைக் காட்டுகின்றது. எனவே ஆன் விகுதி, ஆள் விகுதி எனத் திரிந்து ஆண்பாலை உணர்த்தியது எனக் கொள்ளுதல் வேண்டும்.

உயிரீற்றுப் புணரியலில் “இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்” என்றார். ஆயினும் “ணன முன் வல்லினம் வரட்டறவும்” என்பதில் கூறாது விடப்பட்ட ‘ட’ மிகும் எனக் கொள்ளுதல் வேண்டும்.

மெய்யீற்றுப் புணரியலில் “நும்தம் எம் நம் ஈறாம் மம்வரு ஞநவே” என்று விதி கூறினார். ஆனால் அம் என்னும் சொல்லும் ஞ, ந வரின் அஞ் ஞாலம், அந் நலம் என வரும் என்று கொள்க. அஞ்ஞாலம் = அழகிய உலகம்; அந்நலம் = அழகிய நலம். அம் = அழகு.

உருபு புணரியலில் இரண்டாம் வேற்றுமைக்கும் மூன்றாம் வேற்றுமைக்கும் புறனடை கூறினார். ஆனால் ஏழாம் வேற்றுமைக்கும் புறனடை கொள்ளுதல் வேண்டும். மண் சேர்ந்து, விண் புகுந்து என ஏழாம் வேற்றுமை பொது விதிப்படி வராமல் இயல்பாக வரும்.

ஆக, எழுத்தியல் முதலாக ஐந்து இயல்களில் கூறப்படாத சொற்களுக்கு உரிய விதிகளை இப்புறனடையால் அமைத்துக் கொள்ளுதல் வேண்டும் என்பதைப் பவணந்தியார் இப்புறனடை நூற்பாவில் அமைத்துள்ளார்.

தன்மதிப்பீட்டு வினாக்கள்

II.

1. ‘எல்லாம்’ என்னும் சொல் இருதிணையில் எவ்வாறு புணரும்?
2. ‘தான்’, ‘தாம்’, ‘நாம்’ என்னும் சொற்கள் உருபுகளுடன் புணருகையில் அவற்றின் முதலெழுத்து குறுகும். சரியா? தவறா?
3. ஆ, மாம, கோ என்னும் மூன்று சொற்களைப் பற்றிக் கூறும் விதியினை எழுதுக.
4. ‘அத்தின் அகரம் அகரமுனை இல்லை’ – பொருள் விளக்கம் தருக.
5. உருபு புணரியலில் எவைகளுக்குப் பவணந்தியார் புறனடை கூறியுள்ளார்?

தொகுப்புரை

உயிரையும் மெய்யையும் இறுதியாக உடைய வேற்றுமை உருபுகள் நிலைமொழி, வருமொழி ஆகியவற்றுடன் எவ்வாறு புணரும் என்பதை உருபு புணரியல் என்னும் இவ்வியல் எடுத்துரைத்தது.

வேற்றுமை உருபுகள் நாற்பது ஆகும் முறையினை இவ்வியலின் முதல் நூற்பா மூலம் அறிந்து கொள்ள முடிந்தது. மேலும், சாரியை தோன்றுவதற்கான காரணமும், சாரியைகள் எவை என்பதையும், உருபு புணர்ச்சிக்குரிய சிறப்பு விதிகளையும் பவணந்தியார் கூறியுள்ளதை இவ்வியலில் தெளிவாக அறிந்து கொண்டோம்.

இவ்வியலின் இறுதியில் சாரியை, நான்கு புணர்ச்சி, வேற்றுமைப் புணர்ச்சி, எழுத்ததிகாரம் ஆகியவற்றிற்கும் புறனடை கூறியுள்ள முறைமையும் அறிய முடிந்தது.

பயிற்சி வினாக்கள்

சிறு வினாக்கள்

1. பொதுச்சாரியைகள் யாவை?
2. ‘அத்தின் னகர மகர முனையில்லை’ – பொருள் விளக்கம் தருக.

3. ‘கட்டின் முன் ஆய்தம் வரின் கெடும்’ என்பதை எடுத்துக்காட்டுக.

குறு வினாக்கள்

1. ‘ஒக்குமன் னப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே’ என்று நன்னூலார் கூறுவனவற்றை விளக்குக.

2. எல்லாரும், எல்லீரும் – புணர்ச்சி விதி கூறி விளக்குக.

3. ‘ஐ’ முதலிய ஆறு உருபுகளும் நிலைமொழி, வருமொழியோடு புணருமாற்றை எடுத்துரைக்க.

பெரு வினாக்கள்

1. உருபு புணர்ச்சிக்குரிய சிறப்பு விதிகளைத் தொகுத்துரைக்க.

2. உருபியலில் புறனடை நூற்பாக்களாகக் கூறப்பட்ட செய்திகளைத் தொகுத்துரைக்க.

மேலும் படித்தற்குரிய நூல்கள்


1. நன்னூல் – காண்டிகை உரை, ஆறுமுக நாவலர் (பஆ.), ஆரோரோ அச்சுக்கூடம், சென்னை , 1926.

2. நன்னூல் மூலமும் சங்கரநமச்சிவாயர் உரையும், உ.வே.சா. நூல் நிலையம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1935.

3. நன்னூல் மூலமும் மயிலைநாதர் உரையும், சாமிநாதய்யர் (ப.ஆ.), உ.வே.சா. நூல்நிலையம், சென்னை, 1946.

4, நன்னூல் மூலமும் விருத்தியுரையும், கழக வெளியீடு, சென்னை, 1971.

5. நன்னூல் மூலம், ஆறுமுக நாவலர் பரிசோதித்தது, ஸ்ரீ ஆறுமுக நாவலர் சைவப் பிரகாச வித்யா சாலை அறக்கட்டளை வெளியீடு, சிதம்பரம், 1990.

6. நன்னூல் காண்டிகை உரை – ஆறுமுக நாவலர், புலியூர் கேசிகன் – ப.ஆ., முல்லை நிலையம், சென்னை, மறுபதிப்பு 2006.

7. தொல்காப்பியம் நன்னூல் எழுத்ததிகாரம், க. வெள்ளைவாரணனார், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், 1972.

8, தொல்காப்பியம் தெளிவுரை, சுப்ரமணியன் .ச.வே, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1993.


தன்மதிப்பீட்டு விடைகள்

I.

1. சரி.

2. இடைச்சொல்.

3. அன், ஆன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், தம், நம், நும், எ, அ, உ, ஐ, கு, ன முதலியன.

II.

1. எல்லாம் + நம் + ஐ + உம் = எல்லா நம்மையும் – உயர்திணை

   எல்லாம் + அற்று + ஐ + உம் = எல்லாவற்றையும் – அஃறிணை

2. சரி.

3. “ஆ மாகோனவ் அணையவும் பெறுமே.”

4. அத்துச் சாரியையின் முன் உள்ள அகரம் அகர ஈற்றுச் சொல்லுக்கு முன் வந்தால் கெடும்.

   (எ.டு) மர + அத்து + கை = மரத்துக்கை, மர + அத்து + நிழல் = மரத்துநிழல்.

5. சாரியை, நான்கு புணர்ச்சி, வேற்றுமைப் புணர்ச்சி, எழுத்ததிகாரம்.

## அலகு 3 – நன்னூல் சொல்லதிகாரம்

3,0 பாட அறிமுகம்

3.1 நோக்கங்கள்

3.2 பாடப் பிரிவுகள்

3.2.1 பெயரியல் – நூற்பா 258 முதல் 319 வரை.

3.2.2 வினையியல் – நூற்பா 320 முதல் 351 வரை.

3.2.3 பொதுவியல் – நூற்பா 352 முதல் 419 வரை.

3.2.4 இடையியல் – நூற்பா 420 முதல் 441 வரை.

3.2.5 உரியியல் – நூற்பா 442 முதல் 462 வரை.

3.0 பாட அறிமுகம்

நன்னூலின் எழுத்திலக்கணம் பற்றிய செய்திகளை முந்தைய பாடத்தில் அறிந்தோம். எழுத்துக்களின் சேர்க்கையால் உருவாகும் சொற்களின் இலக்கணத்தையும் வகைப்பாட்டையும் சொல்லதிகாரம் என்னும் அதிகாரத்தின் மூலம் அறிந்துகொள்வோம். இவ்வதிகாரத்தில் பெயர், வினை, இடை, உரி என்னும் நான்கு வகைச் சொற்களைப் பற்றியும் இந்நால்வகைச் சொற்களுக்கும் பொதுமையாய் உள்ள செய்திகளையும் கொண்டு அமைக்கப்பட்டுள்ள பெயரியல், வினையியல், பொதுவியல், இடையியல், உரியியல் என்னும் ஐந்து இயல்களில் பவணந்தியார் கூறியுள்ள செய்திகளைத் தெரிந்து கொள்வோம்.

3.1 நோக்கங்கள்

நன்னூலின் இரண்டாவது அதிகாரம் சொல்லதிகாரம். இதில் உள்ளடங்கிய ஐந்து இயல்களின் பெயர்களுக் கான காரணத்தை அறிந்து கொள்ளுதல்.

சொல்லின் இலக்கணம், இருதிணை, ஐம்பால், வழக்குகள், வெளிப்படை, குறிப்பு, சொற் பாகுபாடு முதலிய வற்றை அறிந்து கொள்ளுதல்.

நால்வகைச் சொற்களில் பெயர்ச்சொல் தொடர்பாகப் பல்வேறு செய்திகளை அறிந்து கொள்ளுதலும், பொருள் தொடர்பால் ஒரு பெயர்ச்சொல் இன்னொரு பெயருக்கு ஆகி வரும் ஆகு பெயரையும், பெயர்ப் பொருளை வேறுபடுத்திக் காட்டும் வேற்றுமைகளையும், வேற்றுமை உருபுகளையும் விளங்குமாறு செய்வித்தல்.

பெயர்ச்சொல்லின் செயலைக் காட்டும் வினைச் சொல்லின் இலக்கணத்தையும் பெயரெச்சம், வினையெச்சம் பற்றிய செய்திகளையும் அறிந்து கொள்ளுதல்.

பெயர், வினை, இடை, உரி என்னும் நால்வகைச் சொற்களுக்கும் பொது இலக்கணங்களைக் கூறும் முகமாய் சிங்க நோக்காகப் பொதுவியல் அமைந்துள்ளமையை அறிந்து கொள்ளுதல்.

தொகைநிலைத் தொடர்மொழி, தொகாநிலைத் தொடர்மொழி ஆகியன பற்றிய செய்திகளும் அறுவகை வழுக்கள், வழுவமைதிகள் ஆகியவற்றையும் தெரிந்து கொள்ளுதல்.

செய்யுட்களில் பொருள் தொடர்பால் பொருள் கொள்ளக்கூடிய பொருள்கோள் பற்றிய செய்திகளை அறிந்து கொள்ளுதல்.

தனித்து நடத்தலின்றிப் பெயரையும் வினையையும் சார்ந்து வரும் இடைச்சொற்களின் இலக்கணத்தையும் அச்சொல்லின் வகைப்பாடுகளையும் உணர்த்தும் பொருள்களையும் அறிந்து கொள்ளுதல்.

நால்வகைச் சொற்களில் இறுதியாக உள்ள உரிச்சொற்களின் இலக்கணத்தையும் உரிச்சொற்கள் வரும் முறையினையும் அறிந்து கொள்ளுதல். மேலும், உயிர்களின் பாகுபாட்டை ஓரறிவு முதல் ஐந்தறிவு வரை உள்ள நிலையில் பிரித்துள்ளமையை அறிந்து கொள்ளுதல்.

3.2.1. பெயரியல்

3.2.1.1 சொல்லின் பொது இலக்கணம் – நூற்பா 259 முதல் 269 வரை.

3.2.1.2 சொற் பாகுபாடு – நூற்பா 270 முதல் 274 வரை.

3.2.1.3 பெயர்ச்சொல் இலக்கணம் – நூற்பா 275 முதல் 280 வரை.

3.2.1.4 ஆகுபெயர் – நூற்பா 281 – 290

3.2.1.5 வேற்றுமையின் இலக்கணமும் வகைப்பாடும் – நூற்பா 291 முதல் 319 வரை.

நன்னூல் – பாயிரம், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது. இவற்றுள் பாயிரம், எழுத்ததிகாரம் பற்றிய செய்திகளை முறையே அலகு ஒன்று, அலகு இரண்டு என்னும்

பகுதிகளில் பார்த்தோம். அலகு மூன்று என்னும் பகுதியில் சொல்லதிகாரம் தொடர்பான செய்திகளைக் காணலாம்.

சொல்லதிகாரம் என்னும் பகுதி பெயரியல், வினையியல், பொதுவியல், இடையியல், உரியியல் என்னும் ஐந்து இயல்களைக் கொண்டுள்ளது.

பொதுவாக இப்பகுதியில் சொல்லின் இலக்கணம், பல்வகை சொற்கள், இருதிணை, ஐம்பால், வழக்குகள், ஆகு பெயர்கள், வேற்றுமைகள், வினைச்சொற்கள், பெயரெச்சம், வினையெச்சம், குறிப்புச் சொற்கள், வேற்றுமைத் தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை ஆகிய தொகைகள் பற்றிய செய்திகளும் பல்வகையான தொடர் மொழிகள், வழுவமைதிகள், பொருள்கோள்கள், உரிச்சொற்கள், ஓரறிவு முதல் ஐந்தறிவு வரை உள்ள உயிர்கள் ஆகிய வற்றைப் பற்றிய செய்திகள் இச்சொல்லதிகாரத்தில் கூறப்பட்டுள்ளன. தொல்காப்பியர் கூறிய ஆறாவது அறிவை நன்னூலார் ஐந்தாவது அறிவிலேயே அடக்கிக் காட்டுவார்.

சொல்லதிகாரத்தின் முதல் இயல் பெயரியலாகும். இப்பெயரியலின் தொடக்கத்தில் சொல்லின் பொது இலக்கணம், சொற்பாகுபாடு முதலிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. இச் சொற்பாகுபாடு என்னும் பகுதியில் நால்வகைச் சொற்களைப் பற்றியும், இலக்கண அடிப்படையான பெயர், வினை, இடை, உரி என்னும் நான்கு வகைச் சொற்களையும் கூறுகின்றார். அவற்றுள் பெயர்ச்சொல் பற்றிய பல்வேறு செய்திகள் இப்பகுதியில் இடம் பெற்றுள்ளன.

ஆகு பெயர், வேற்றுமை வகைப்பாடு பற்றியும் விளி உருபு பற்றிய பல்வேறு செய்திகளும் உருபு மயக்கம் பற்றிய செய்திகளும் இப்பகுதியில் இடம் பெற்றுள்ளன.

பெயரியல் என்னும் முதல் இயலில் சொல்லின் பொது இலக்கணத்தைக் கூறியுள்ளார்.

### 3.2.1.1 சொல்லின் பொதுஇலக்கணம்

ஒருமொழி, தொடர்மொழி, பொதுமொழி என்று மூன்று நிலையாதலும், இரு திணைக்கு உட்பட்ட ஐம்பாற் பொருளையும் தன்னையும் உணர்த்தலும் தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூவகையிடத்தும் ஒன்றாதலும், வழக்கு, செய்யுள் என்னும் இரு நிலைகளில் வழங்கலும் வெளிப்படையாகவோ குறிப்பாகவோ பொருளைத் தருதல் சொல்லின் பொது இலக்கணமாகும்.

ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி யென்றா

இருதிணை ஐம்பால் பொருளையும் தன்னையும்

மூவகை இடத்தும் வழக்கொடு செய்யுளின்

வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே.

என்னும் நூற்பா (259) சொல்லின் பொது இலக்கணத்தை உணர்த்தியது.

மூவகை மொழி

ஒருமொழி, தொடர்மொழி, பொதுமொழி என்று மூவகையாக மொழிகளைக் குறிப்பிடுவர்.

ஒருமொழி யொருபொரு ளனவாம் தொடர்மொழி

பலபொரு ளனபொது இருமையும் ஏற்பன. நூற்பா 260

ஒருமொழி

பகாப்பதமாகவோ, பகுபதமாகவோ நின்று ஒரு பொருளை மட்டும் தருவது ஒருமொழியாகும்.

(எ.டு) நிலம் – பகாப்பதம் நிலத்தன் – பகுபதம்

தொடர்மொழி

பகுபதம், பகாப்பதம் என்னும் இரண்டும் தம்மொடு தாமும், தம்மொடு பிறிதுமாய் இரண்டு முதலிய பலவாகத் தொடர்ந்து நின்று இரண்டு முதலிய பல பொருள்களைத் தருவது தொடர்மொழியாகும்.

(எ.டு) நிலம் வலிது, நிலத்தைக் கடந்தான் முதலியன.

பொதுமொழி

ஒன்றாய் நின்று ஒரு பொருளைக் கொடுத்து, அதுவே இரண்டு முதலிய பலவாகத் தொடர்ந்து நின்று பல பொருளையும் தந்து ஒருமொழி, தொடர்மொழி என்னும் இரண்டுக்கும் பொதுவாக நிற்பது பொதுமொழியாகும்.

(எ.டு) எட்டு – இது ஒன்றாய் நின்று எட்டு என்னும் எண்ணாகிய பெயரைத் தருகிறது. இது எள்+து என்று இரண்டாகத் தொடர்ந்து நின்று எள்ளை உண்ணு என்று வேறு பொருளையும் தருவதால் பொது மொழியாகும்.

தாமரை – தாமரை என்னும் ஒரு பூவையும் தா+மரை என்று தொடர்ந்து நின்று தாவுகின்ற மான் எனப் பல பொருள்களுக்கும் பொதுமொழி ஆயிற்று.

இருதிணை ஐம்பால்

திணை என்பது சாதி அல்லது இனத்தினைக் குறிக்கும். இது உயர்திணை, அஃறிணை என்று இரண்டு வகைப்படும்.

மக்கள், தேவர், நரகர் என்போர் உயர்திணையாவர். இவர்களைத் தவிர்த்த மற்ற உயிருள்ள பொருள்களும் உயிரற்ற பொருள்களும் அஃறிணையாகும்.

மக்கள் தேவர் நரகர் உயர்திணை

மற்றும் உயிருள்ளவும் இல்லவும் அஃறிணை.

என்னும் நூற்பா (261) இரு திணையுள் அடங்கும் பொருள்களைக் கூறியது.

உயர்திணை, ஆண்பால், பெண்பால், பலர்பால் என்னும் மூன்று பால்களைக் கொண்டது.

அஃறிணை, ஒன்றன்பால், பலவின்பால் என்னும் இரண்டு பால்களை உடையது. எனவே பால்கள் ஐந்து வகையாகும்.

நூற்பா 262, 263 இல் குறிப்பிட்டுள்ளார்

ஆடவர், காளையர் முதலிய சொற்கள் ஆண் பன்மையையும், பெண்டிர், மங்கையர் முதலிய சொற்கள் பெண் பன்மையையும் குறிக்கும்.

திணை, பால்களுக்குப் புறனடை

ஆண் தன்மையும் பெண் தன்மையும் கலந்து இருக்கும் பேடுகளை இன்னபால் என்று வழங்க இயலாது. அதனால் அப்பேடுகளை ஆராய்ந்து ஆண் தன்மை மிகுந்திருந்தால் உயர்திணை ஆண்பாலாகவும், பெண் தன்மை மிகுந்திருந்தால் உயர்திணைப் பெண்பாலாகவும் வழங்குதல் வேண்டும். ஆராய்ந்து வழங்குகையில் அஃறிணைப் பொருள் போல் கொள்ளுதல் வேண்டும் என்பர்.

பெண்மைவிட்டு ஆண் அவாவுவ பேடு ஆண்பால்

ஆண்மைவிட்டு அல்லது அவாவுவ பெண்பால்

இருமையும் அஃறிணை அன்னவும் ஆகும்.

என்னும் நூற்பா (264) நூற்பா திணை, பால்களுக்குப் புறனடை கூறியது.

மூவிடத்தும் சொல் தன்னையும் பொருளையும் உணர்த்துதல்

மூவிடம்

தன்மை, முன்னிலை, படர்க்கை என்று இடம் மூன்று வகைப்படும். (நூற்பா 266)

தன்னைக் குறிப்பது தன்மையாகும்.

எதிரில் இருக்கும் பொருளைக் குறிப்பது முன்னிலையாகும்.

இவ்விரண்டிற்கும் அல்லாமல் அயற்பொருளைக் குறிப்பது படர்க்கையாகும்.

| தன்மை | முன்னிலை | படர்க்கை |
|---|---|---|
| யான் வந்தேன் | நீ வந்தாய் | அவன் வந்தான் |

வழக்கு இன்னதென்பது

வழக்கு இயல்பு வழக்கு, தகுதி வழக்கு என்று இருநிலைகளில் ஆறு பிரிவுகளைப் பெறும். அவை, இலக்கணம் உடையது, இலக்கணப் போலி, மரூஉ என்னும் மூன்றும் இயல்பு வழக்காகும். இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி ஆகியவை தகுதி வழக்காகும்.

இலக்கண வழக்கு

1. இலக்கணமுடையது – இலக்கண நெறியால் வருவது.

(எ.டு) நிலம், நீர், தீர், காற்று, வான்

2. இலக்கணப்போலி – இலக்கணம் இல்லையெனினும் இலக்கணம் உடையது போல் சான்றோரால் தொன்று தொட்டு வழங்கப்பெறுவது.

(எ.டு) இல்வாய் என்பது வாயில் என்றும், இல்முன் என்பதை முன்றில் என்றும் நகர்ப்புறம் என்பது புறநகர் என்றும் வழங்குவது.

3. மரூஉ – தொன்றுதொட்டு வருதலின்றி இடையே இலக்கணம் சிதைந்து சில எழுத்துக்கள் கெட்டும், திரிந்தும், தோன்றியும் மருவி வழங்குவது.

தகுதி வழக்கு

அருமருந்தன பிள்ளை என்பது அருமந்தபிள்ளை என்றும், மலையமாநாடு – மானாடு என்றும், சோழனாடு – சோனாடு என்றும், பாண்டிய நாடு – பாண்டிநாடு என்றும், தஞ்சாவூர் – தஞ்சை என்றும் வழங்குவது.

1. இடக்கரடக்கல் – நன் மக்களிடத்தில் சொல்லத் தகாத சொல்லை அவ்வாய்பாடு மறைத்துப் பிற வாய்ப்பாட்டால் சொல்லுவது.

(எ.டு) மலம் கழீஇ வருதல் என்பதைக் கால்கழீஇ வருதல் என்றும், பீ என்பதை பகரபீ என்றும் பவ்வி என்றும் வழங்குவது.

2. மங்கலம் – மங்கலமில்லாததை ஒழித்து மங்கலமாகச் சொல்லுதல்.

செத்தாரைத் துஞ்சினார் என்றும், ஓலையைத் திருமுகம் என்றும் இடுகாட்டை நன்காடு என்றும் வழங்குவது.

3. குழூஉக்குறி – ஒவ்வொரு கூட்டத்தாரும் யாதாயினும் ஒரு காரணத்தினால் ஒரு பொருளினது பெயரினை ஒழித்து மற்றொரு பெயரால் கூறுவது.

பொற்கொல்லர் பொன்னைப் பறி என்றலும், யானைப்பாகர் ஆடையைக் காரை என்றலும், வேடர் கள்ளைச் சொல் விளம்பி என்றும் கூறுதலுமாகும்.

இலக்கணமுடையது திலக்கணப் போலி

மரூஉவென் றாகு மூவகை யியல்பும்

இடக்க ரடக்கல் மங்கலங் குழூஉக்குறி

எனுமுத் தகுதியோ டாறாம் வழக்கியல்.

என்னும் நூற்பா (267) வழக்கு இன்னதென்பதனை அடையாளப்படுத்தியது.

செய்யுள் இலக்கணம்

தோல், இரத்தம், இறைச்சி, நிணம், எலும்பு, மச்சை, வெண்ணீர் (சுவேத நீர்) என்னும் எழுவகை தாதுக்களினால் உயிருக்கு இடமாக இயற்றப்பட்ட உடம்பு போல், இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்னும் நால்வகைச் சொற்களினால் பொருளுக்கு இடமாதல் உணர்வினில் வல்லோர்களால் அணிபெறச் செய்யப்படுவன செய்யுளாகும்.

பல்வகை தாதுவின் உயிர்க்குடல் போறபல

சொல்லாற் பொருட்கிட னாக வுணர்வினின்

வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள். நூற்பா 268

வெளிப்படை, குறிப்பு

இருதிணை ஆண், பெண் இவற்றில் ஒன்றனையொழிக்கும் பொதுச்சொல், வலித்தல் முதலாகிய ஒன்பது விகாரச் சொல்லும், மூவகை தகுதி வழக்குச் சொல்லும், ஆகுபெயர், அன்மொழித் தொகைச் சொல்லும், வினைக்குறிப்பு, முதற்குறிப்புச் சொல்லும், தொகைக் குறிப்புச் சொல்லும், இம்முதற் குறிப்பு அல்லாத பல வழியாலும் வரும் குறிப்புச் சொல்லும் இவை போல்வன பிறவும் குறிப்பினால் இருதிணை ஐம்பால் பொருள்களைத் தரும் சொற்களாகும். இவையல்லனவெல்லாம் வெளிப்படையாய் பொருள்களைத் தரும் சொற்களாகும்.

1. ஒன்றொழி பொதுச்சொல்

ஆயிரம் மக்கள் பொருதார் – இதில் மக்கள் என்பது பெயராகும். பொருதார் என்பது பொதுவினை என்னும் உயர்திணைப் பெண்பாலையொழித்து ஆண்பாலைக் குறிப்பால் உணர்த்தியது.

விகாரம் – குறுந்தாட்பூதம், மரைமலர் – இவ்விகாரச் சொற்கள், குறுந்தாள், தாமரை என்பனவற்றைக் குறிப்பால் உணர்த்தின.

தகுதி – கால்கழீஇ வருதல், திருமுகம், பறி – இத்தகுதி வழக்குச் சொற்கள், மலங்கழி வருதல், ஓலை, பொன் என்பனவற்றைக் குறிப்பால் உணர்த்தின.

ஆகுபெயர் – புளி தின்றான் – இவ்வாகு பெயர் அதன் பழத்தைக் குறிப்பால் உணர்த்தியது.

அன்மொழித்தொகை – பொற்றொடி வந்தாள் – ஈண்டுப் பொற்றொடி என்றும் வேற்றுமைத் தொகை அதனை உடையாளைக் குறிப்பால் உணர்த்திற்று. இது வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகையாகும்.

வினைக்குறிப்பு – இவன் இப்போது பொன்னன் – இங்கு பொன்னன் என்பது பெயர்ப் பொருளையொழித்து, வினைக் குறிப்புப் பொருளைக் குறிப்பால் உணர்த்திற்று.

முதற்குறிப்பு – 'அறத்தாறிதுவென வெள்ளைக் கிழி' என்ற முதற்குறிப்பு அக்குறளைக் குறிப்பால் உணர்த்திற்று.

தொகைக்குறிப்பு – 'அலங்குளைப் புரவி ஐவரோடு சினைஇ' – ஈண்டு ஐவர் என்னும் தொகை பாண்டவர் ஐவரைக் குறிப்பால் உணர்த்திற்று.

பிற குறிப்பு – கற்கறித்தும் நன்கட்டாய் என்பது நன்றாகச் சமைக்கவில்லை என்பதையும், பாயா வேங்கை என்பது வேங்கை மரத்தையும் குறிப்பால் பொருள் உணர்த்தின. இவை பல்லாற்றான் வரும் குறிப்புச் சொற்களாகும்.

இவ்வாறு நிலம், நீர், தீ, காற்று, வானம் என வருவன வெளிப்படையாகப் பொருள் உணர்த்தும் சொற்களாகும்.

ஒன்றொழி பொதுச்சொல் விகாரம் தகுதி

ஆகுபெயரான் மொழிவினைக் குறிப்பே

முதறொகை குறிப்போ டின்ன பிறவும்

குறிப்பிற் றருமொழி யல்லன வெளிப்பாடே.

என்னும் நூற்பா (269) வெளிப்படை, குறிப்பால் வரும் பொருள்களை உணர்த்தும் சொற்களை எடுத்துக்காட்டிற்று.

இதுவரை சொல்லின் பொருள் இலக்கணத்தையும், அது தொடர்பான செய்திகளையும் கூறிய பவணந்தியார் இனி சொற்பாகுபாடு பற்றிய செய்திகளைக் கூறுகின்றார்.

3.2.1.2 சொற்பாகுபாடு

சொல்லின் வகைகள்

இயற்சொல், திரிசொல் என்னும் தன்மையுடையதாய் பெயர், வினை என்னும் இரண்டு சொற்களாகவும், அவற்றுடன் இடை, உரி என்னும் சொற்கள் சேர்ந்து நான்கு சொற்கள் அமையும். இவற்றுடன் திசைச்சொல்லும் வடசொல்லும் சேராமல் இருக்கும்.

அதுவே,

இயற்சொல் திரிசொல் இயற்பிற் பெயர்வினை

எனஇரண்டு ஆகும் இடைஉரி அடுத்து

நான்கு மாம்திசை வடசொல்அணு காவழி.

என்னும் நூற்பா (270) இலக்கிய பயன்பாட்டுச் சொற்களையும், இலக்கண அடிப்படைச் சொற்களையும் அடையாளப்படுத்துகிறது.

இனி, இலக்கியப் பயன்பாட்டுச் சொற்கள், இலக்கண அடிப்படைச் சொற்கள் முதலியவற்றை நிரல்படக் காணலாம்.

1. இயற்சொல் – செந்தமிழ் நிலத்து வழங்கும் சொல்லாகித் திரிசொல் போலில்லாமல் கற்றார், கல்லாதார் அனைவருக்கும் தமது பொருளை விளக்கும் தன்மையை உடைய சொல் இயற் சொல்லாகும். இயற்சொல் என்பது இயல்பாகப் பொருள் உணர்த்தும் சொல்லாகும்.

(எ.டு) மண், பொன், நடந்தான், வந்தான் முதலியன.

செந்தமி ழாகித் திரியாது யார்க்கும்

தம்பொருள் விளக்கும் தன்மைய இயற்சொல். நூற்பா 271

2. திரிசொல் – ஒரு பொருள் குறித்த பல சொல், பல பொருள் குறித்த ஒரு சொல் என்று இரண்டு வகையாய் அரிதாகக் கற்றோரால் மட்டும் பொருள் உணரத் தக்கனவாகிய சொல் திரிசொல்லாகும்.

(எ.டு) கிள்ளை, சுகம், தத்தை, வன்னி முதலிய பல சொற்கள் கிளி என்னும் ஒரு பொருளைக் குறித்தது.

'வாரணம்' என்னும் சொல் யானை, கோழி, சங்கு என்னும் பல பொருளைக் குறித்து வந்தது.

படர்ந்தான், சென்றான் – முதலான சொற்கள் போயினான் என்னும் ஒரு பொருள் குறித்த பல வினைத் திரி சொல்லாகும்.

சேறும், வருதும் என்பனவற்றுள்ளும், தும் என்னும் விகுதிகள், தன்மைப் பன்மை எதிர்காலம் என்னும் ஒரு பொருள் குறித்த பல இடைத்திரிசொல்லாகும்.

கொல் – இது ஐயம், அசைநிலை என்னும் பல பொருள் குறித்த ஒரு திரி சொல்லாகும்.

சால, உறு, தவ, நனி, கூர், கழி என்னும் சொற்கள் மிகுதி என்னும் ஒருபொருள் குறித்த பல உரித் திரிசொல்லாகும்.

கடி என்னும் சொல் காப்பு, கூர்மை, அச்சம், கரிப்பு, விளக்கம், சிறப்பு, மணம் முதலிய பலபொருள் குறித்த ஓர் உரித் திரிசொல்லாகும்.

ஒருபொருள் குறித்த பலசொல்லாகியும் பலபொருள் குறித்த ஒருசொல்லாகியும் அரிதுணர் பொருளன திரிசொல்லாகும்.

ஒருபொருள் குறித்த பலசொல் ஆகியும்

பலபொருள் குறித்த ஒருசொல் ஆகியும்

அரிதுணர் பொருளண திரிசொல் ஆகும்.

என்னும் நூற்பா (272) திரிசொல்லின் இலக்கணத்தையும், வகைகளையும் கூறியது.

3. திசைச்சொல் – செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரண்டு நிலங்களிலும், பதினெட்டு மொழிகளில் தமிழ் நிலம் ஒழிந்த பதினேழு மொழி வழங்கும் நிலங்களிலும் வழங்கி, அத்திசைகளிலிருந்து செந்தமிழ் நிலத்தில் வந்து தம் குறிப்பாகிய பொருளைத் தரும் சொல் திசைச் சொல்லாகும்.

செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினும்

ஒன்பதிற்று இரண்டினில் தமிழ்ஒழி நிலத்தினும்

தம்குறிப்பினவே திசைச்சொ லென்ப.      நூற்பா 273

(எ.டு)

| கொடுந்தமிழ்நாடு | தமிழ்ச்சொல் | திசைச்சொல் |
|---|---|---|

1. தென்பாண்டி நாட்டார் கவினைப் பெற்றம் என்னும் சோற்றைச் சொன்றி என்னும் கூறுகிறது.

| | | |
|---|---|---|
| குட்டம் | தாய் | தன்னை |
| குடம் | தந்தை | அச்சன் |
| கற்கா | வஞ்சர் | கையர் |
| வேணாட்டர் | கோட்டம் | கிழார் |
| பூழி | சிறுகுளம் | யாழி |

தமிழ் நிலத்தைச் சூழ்ந்த பதினேழு நிலங்கள் :

சிங்களம் சோனதம் சாவகம் சீனந் துளுக் குடகங்

கொங்கணங் கன்னடங் கொல்லந் தெலுங்கால் கலிங்கம் விங்கம்

கங்க மகதம் கடாரம் கவுடங் கடுங்குசலந்

தங்கும் புகழ்த்தமிழ் சூழ்பதி னேழ்புவி தாமிவையே.

என்னும் கட்டளைக் கலித்துறைப் பாவால் பதினெட்டு நாடுகளையும் பதினெண் மொழிகளையும் ஒரு சேர அறியலாம்.

(எ.டு)

1. பசுவைப் பெற்றம் என்பது
   சோற்றைச் சொன்றி என்பதும் – தென்பாண்டி நாட்டுச் சொல்.
2. தாயைத் தள்ளை என்பது – குட்டநாட்டுச் சொல்.
3. தந்தையை அச்சன் என்பது – குடநாட்டுச் சொல்.
4. வஞ்சகரைக் கையர் என்பது – கற்கா நாட்டுச் சொல்.
5. தோட்டத்தைக் கிழார் என்பது – வேணாட்டுச் சொல்.

6. சிறுகுளத்தைப் பாழி என்பது – பூழி நாட்டுச் சொல்.

7. வயலைச் செய் என்பது – பாண்டி நாட்டுச் சொல்.

8. சிறுகுளத்தைக் கேணி என்பது – அருவா நாட்டுச்சொல்.

9. புளியை எகின் என்பது – அருவா வடதலை நாட்டுச்சொல்.

10. தோழனை எலுவன் என்பதும்

தோழியை இகுளை என்பதும் – சீத நாட்டுச் சொல்.

11. நல்ல நீரை வெள்ளம் என்பது – மலையமாநாட்டுச் சொல்.

12. தாயை ஆய் என்பது – சோழ நாட்டுச் சொல்.

தமிழகம் தவிர்த்த பதினேழு நாடுகள் : சிங்களம், சோனகம், சாவகம், சீனம், துளுவம், குடகம், கொங்கணம், கன்னடம், கொல்லம், தெலுங்கம், கலிங்கம், வங்கம், கங்கம், மகதம், கடாரம், கௌடம், குசலம் ஆகியன.

அந்தோ என்பது – சிங்களச்சொல்

மாமரத்தைக் கொக்கு என்பது – துளுவ நாட்டுச் சொல்.

எருத்தைப் பாண்டில் என்பது – தெலுங்கு நாட்டுச் சொல்.

வடசொல்

ஆரியத்திற்கும் தமிழுக்கும் உரிய பொது எழுத்தாலும் ஆரியத்திற்கே உரிய சிறப்பெழுத்தாலும் பொது, சிறப்பு என்னும் இவ்விரண்டு எழுத்தினாலும் செந்தமிழ்ச் சொல்லை ஒப்பனவாகி வடதிசையிலிருந்து வந்து வழங்குவன வடசொல்லாகும். (நூ. 274)

(எ.டு) அமலம், கமலம், மேரு, காரணம், காரியம் ஆகியவை பொது எழுத்தால் இயைந்தன.

சுகி, போகி, சுத்தி முதலியவை வடமொழியின் சிறப்பெழுத்தால் இயைந்தன.

அரன், அரி, கடினம், சலம் முதலியன பொது, சிறப்பு எழுத்துக்களால் இயைந்தன.

இதுவரை சொல்லின் பாகுபாடுகளையும் இலக்கியப் பயன்பாட்டுச் சொற்களையும் கண்டோம். இனி, இலக்கண அடிப்படையில் நால்வகைச் சொற்களில் பெயர்ச்சொல் தொடர்பான செய்திகளைப் பார்ப்போம்.

### 3.2.1.3 பெயர்ச்சொல்

பெயரின் பொது இலக்கணம்

இடுகுறியும் காரணக்குறியும் மரபினையும் ஆக்கப்பாட்டினையும் தொடர்ந்து வினையாலனையும் காரணக் குறியொன்று காலம் காட்ட, அல்லாதன காலம் காட்டாதனவாய் எட்டு வேற்றுமைகளையும் சார்தற்கு இடமாய் இருதிணை ஐம்பாலிலும் மூவிடத்தும் ஒன்றனை ஏற்பனவும், பலவற்றினை ஏற்பனவும் ஆகி வருவன பெயர்களாகும்.

(எ.டு) மரம், விள, பனை – இடுகுறி மரபு

அவன், அவள், விலங்கு, பறவை – காரணக்குறி மரபு

பொன்னன், பூனன் – காரணக்குறியாக்கம்

நடந்தவனை, நடந்தோனை – வினையாலனையும் காரணப் பெயர்கள் காலம் காட்டின.

மரம், பனை முதலிய இடுகுறிப் பெயரும், அவன், அவள் முதலிய காரணப் பெயரும், தொன்றுதொட்டு மரபு பற்றி வருவன. முட்டை முதலாகிய இடுகுறிப் பெயர், பொன்னன் முதலாகிய காரணப் பெயர், மரபு போலத் தொன்றுதொட்டு வருதலின்றி நடுவிலே ஒருவரால் ஆக்கப்பட்டு வருவனவாகும்.

இடுகுறி காரணம் மரபோ டாக்கம்

தொடர்ந்து தொழிலல காலந் தோற்றா

வேற்றுமைக் கிடனாய்த் திணைபால் இடத்தொன்று

ஏற்பவும் பொதுவும் ஆவன பெயரே.

என்னும் நூற்பா (275) பெயர்ச்சொல்லின் பொது இலக்கணத்தைக் கூறியது.

இருதிணைப் பால் பெயர்கள்

உயர்திணை ஆண்பாற் பெயர்

அவற்றுள்,

கிளையெண் குழூஉ முதற் பல்பொரு திணைதேன்

ஊர்வான் அகம்புறம் முதல் நிலன்யாண்டு

இருது மதிநா ளாதிக் காலந்

தோள்குழல் மார்புகண் காது முதலுறுப்பு

அளவுஅறிவு ஒப்பு வடிவு நிறங்கதி

சாதி குடிசிறப்பு ஆதிப் பல்குணம்

ஓதல் ஈதல் ஆதிப் பல்வினை

இவையடை சுட்டு வினாப்பிற மற்றோடு

உற்ற னவ்வீறு நம்பி யாடூஉ

விடலை கோவேள் குரிசில் தோன்றல்

இன்னன ஆண்பெயர் ஆகும் என்ப. நூற்பா 276

சுற்றமும் எண்ணுங் கூட்டமும் முதலாகிய பல பொருள்களோடு, திணையும் தேயமும் ஊரும் வானும் அகமும் புறமும் முதலியனவாகிய இடங்களோடும், ஆண்டும் பருவமும் மாதமும் நாள்மீனும் முதலாகிய காலங்களோடும், தோளும் மயிரும் மார்பும் கண்ணும் காதும் முதலாகிய உறுப்புகளோடும், அளவும் அறிவும் ஒப்பும் வடிவும் நிறமும் நாற்கதியும் சாதியும் குடியும் சிறப்பும் முதலாகிய பல குணங்களோடும், ஓதுதலும் கொடுத்தலும் முதலாகிய பல தொழில்களோடும், இவற்றை அடைந்த சுட்டும் வினாவும் மற்றுமாகிய நான்கினோடும் நம்பி முதலாகச் சொல்லப்பட்ட இப்பெயர்களும், இவை போல்வன பிறவும், உயர்திணை ஆண்பாற் பெயர்களாகும் என்று புலவர் சொல்லுவர்.

பொருளால் வரும் பெயர்கள்

தமன், நமன், நுமன், எமன் – கிளையால் வரும் பெயர்

ஒருவன் – எண்ணால் வரும் பெயர்

அவையத்தன் – குழுவால் வரும் பெயர்

பொருளன், பொன்னன், முடியன் – முதல் என்றதனால் வரும் பெயர்.

இடத்தால் வரும் பெயர்கள்

ஐவகை நிலங்கள் அடிப்படையில் பெயர்கள் அமையும்.

வெற்பன், பொருப்பன் – குறிஞ்சித் திணையால் வரும் பெயர்.

மறவன், பொன்னன் – பாலைத் திணையால் வரும் பெயர்.

இடையன், ஆயன் – முல்லைத்திணையால் வரும் பெயர்.

ஊரன், மகிழ்னன் – மருதத்திணையால் வரும் பெயர்.

சேர்ப்பன், துறைவன் – நெய்தல் திணையால் வரும் பெயர்.

சோழியன், கொங்கன் – தேயத்தால் வரும் பெயர்

கருவூரான், மதுரையான் – ஊரால் வரும் பெயர்.

மண்ணகத்தான், பாதளத்தான் – ‘முதல்’ என்றதனால் வரும் பெயர்.

காலத்தால் வரும் பெயர்கள்

மூவாட்டையான், பிரபவன் – ஆண்டால் வரும் பெயர்

வேனிலான், காரான் – பருவத்தால் வரும் பெயர்

கையான், மாசியான் – மாதத்தால் வரும் பெயர்

ஆதிரையான், ஓணத்தான் – நாள்மீனால் வரும் பெயர்

நெருநலான், காலையான் – ‘ஆதி’ என்றதனால் வரும் பெயர்.

சினையால் வரும் பெயர்கள்

திணிதோளன், செங்குஞ்சியன், வரைமார்பன், செங்கண்ணன், குழைக்காதன் – தோள் முதலிய ஐந்து உறுப்பாலும் வரும் பெயர்கள்.

குணத்தால் வரும் பெயர்கள்

பெரியன், சிறியன் – அளவால் வரும் பெயர்.

அறிஞன், புலவன்  – அறிவால் வரும் பெயர்.

பொன்னொப்பன், மணியணையான் – ஒப்பால் வரும் பெயர்.

கூனன், குறளன் – வடிவால் வரும் பெயர்.

கரியன், செய்யன் – நிறத்தால் வரும் பெயர்.

சேரன், சோழன், பாண்டியன் – குடியால் வரும் பெயர்.

ஆசிரியன், படைத்தலைவன் – சிறப்பால் வரும் பெயர்.

நல்லன், தீயன் – ஆதி என்றதனால் வரும் பெயர்.

தொழிலால் வரும் பெயர்கள்

ஓதுவான் – ஓதல் முதலாகிய செயலால் வரும் பெயர்.

கணக்கன், தச்சன் – ஆதி என்றதனால் வரும் பெயர்.

இடைச்சொல்லால் வரும் பெயர்கள்

அவன், இவன், உவன் – சுட்டு இடைச்சொல்

எவன், ஏவன், யாவன் – வினா இடைச்சொல்

பிறன், மற்றையன் – பிற, மற்று என்பனவற்றால் வரும் பெயர்.

உயர்திணைப் பெண்பாற் பெயர்

சுற்றம் முதலாகப் பகுத்துச் சொல்லப்பட்ட அறு வகைப்பட்ட பொருள்களுள் ளகர மெய்யும் இகர உயிரும் பொருந்துவதற்கு ஏற்ற அவ்விரண்டீற்றுப் பெயர்களும் தோழி முதலாக எடுத்துச் சொல்லப்பட்ட பெயர்களுமாகிய இவற்றுடனே இவை போலவன பிறவும் பெண்பாற் பெயர்களாகும்.

கிளைமுத லாகக் கிளந்த பொருள்களுள்

ளவ்வொற் றிகரக் கேற்ற வீற்றவுந்

தோழி செவிலி மகடூஉ நங்கை

தையலோடு இன்னை பெண்பாற் பெயரே.

என்னும் நூற்பா (277) உயர்திணைப் பெண்பாற் பெயர்களைக் குறிப்பிடுகின்றது.

பொருளால் வரும் பெயர்கள்

தமள், நமள், நுமள், எமள் – சுற்றத்தால் வரும் பெயர்.

ஒருத்தி – எண்

அவையத்தள், அவையத்தி – குழுவால் வரும் பெயர்.

பொன்னாள், பொன்னி – முதல் என்றதனால் வரும் பெயர்.

இடத்தால் வரும் பெயர்கள்

குறத்தி, எயிற்றி, ஆய்ச்சி, உழத்தி, பரத்தி – ஐவகை நிலைப் பெயர்

மலையாட்டி – நாட்டால் வரும் பெயர்.

கருவூராள் – ஊர்

வானத்தாள் – வானால் வரும் பெயர்.

அகத்தாள், புறத்தாள் – அகம், புறம்

மண்ணகத்தாள், மண்ணகத்தி – முதல் என்றதனால் வரும் பெயர்.

காலத்தால் வரும் பெயர்கள்

மூவாட்டையாள் – ஆண்டு

வேனிலாள் – பருவம்

தையாள் – திங்கள்

ஆதிரையாள் – விண்மீன்

நெருநலாள் – முதல் என்றதனால் வரும் பெயர்.

சினையால் வரும் பெயர்கள்

திணிதோளாள், திணிதோளி – தோளால் வரும் பெயர்.

கார்குழலாள், கார்குழலி – கூந்தல்

நெடுமார்பாள், நெடுமார்பி – மார்பு

தடங்கண்ணள், தடங்கண்ணி – கண்

குழைக்காதாள், குழைக்காதி – காதால் வரும் பெயர்.

குணத்தால் வரும் பெயர்கள்

பெரியள் – அளவால் வரும் பெயர்.

புலமையள் – அறிவு

பொன்னொப்பாள் – ஒப்பு

கூனள், கூனி – வடிவு

கரியள் – நிறம்

பார்ப்பினி – குலம்

மனைத்தலைவி – சிறப்பு

நல்லள் – ஆதி என்றதனால் வரும் பெயர்.

தொழிலால் வரும் பெயர்கள்

ஓதுவாள் – ஓதுதல்

ஈவாள் – ஈதல்

இடைச்சொல்லால் வரும் பெயர்கள்

அவள், இவள், உவள் – சுட்டு

எவள், ஏவள், யாவள் – வினை

பிறள், மற்றையாள் – பிற, மற்று என்பவற்றால் வரும் பெயர்கள்.

உயர்திணைப் பெண்பாற் பெயரை உணர்த்தும் நூற்பாவில் ‘இன்ன’ என்றதனால், பேதை, பெதும்மை, இகுளை, மடந்தை, மாது, பாங்கி, பெண்டு, பெண்டாட்டி என்ற உயர்திணைப் பெண்பால் குறித்து வருவன எல்லாம் கொள்ளுதல் வேண்டும்.

உயர்திணைப் பலர்பாற் பெயர்கள்

முன்னர்ச் சொல்லப்பட்ட சுற்றம் முதலிய அறுவகைப் பொருளையும் பொருந்திய ரகர மெய்யீற்றுப் பெயர்களும், கள் என்னும் விகுதியை ஈறாக உடைய பெயர்களுள் இவ்விடத்துப் பொருந்தி வருவனவும், இவை போல்வன பிறவும் உயர்திணைப் பலர்பாற் பெயர்களாகும். (நூ. 278)

பொருளாளல் வரும் பெயர்கள்

தமர், நமர் – சினைப்பெயர்.

இருவர், மூவர் – எண்ணால் வரும் பெயர்.

அவையத்தார் – குழூஉப் பெயர்.

முடியர், பொருளர் – முதல் என்பதால் வரும் பெயர்.

இடத்தால் வரும் பெயர்கள்

குறவர் – குறிஞ்சி நிலத்தால் வரும் பெயர்.

பரதவர் – நெய்தல் நிலத்தால் வரும் பெயர்.

சோணாட்டார் – தேயத்தால் வரும் பெயர்.

கருவூரார் – ஊரால் வரும் பெயர்.

வானத்தார், அகத்தார், புறத்தார் – வான் முதலிய மூன்றாலும் வரும் பெயர்.

மண்ணகத்தார் – முதல் என்றதனால் வரும் பெயர்.

காலத்தால் வரும் பெயர்கள்

மூவாண்டினர் – ஆண்டு

வேனிலார் – பருவம்

ஐப்பசியார் – மாதம்

ஆதிரையார் – நாள்மீன்

காலையார் – முதல் என்றதனால் வரும் பெயர்.

சினையால் வரும் பெயர்கள்

திணிதோளார், சுரிகுழலார், நெடுமார்பர், தடங்கண்ணார், குழைக்காதர் – தோள் முதலிய ஐந்து உறுப்பாலும் வரும் பெயர்.

குணத்தால் வரும் பெயர்கள்

பெரியர் – அளவு

அறிஞர் – அறிவு

பொன்னொப்பர் – ஒப்பால் வரும் பெயர்.

கூனர் – வடிவம்

கரியர் – நிறம்

மானிடர், தேவர் – கதியால் வரும் பெயர்.

அந்தணர் – சாதியால் வரும் பெயர்.

பாண்டியர் – குடியால் வரும் பெயர்.

தலைவர் – சிறப்பால் வரும் பெயர்.

நல்லர் – முதல என்றதனால் வரும் பெயர்.

தொழிலால் வரும் பெயர்கள்

ஓதுவார், ஈவார் – ஓதல் முதலிய இரண்டினாலும் வரும் பெயர்.

இடைச்சொல்லால் வரும் பெயர்கள்

அவர், இவர் – சுட்டுப்பெயர்

எவர், யாவர் – வினாப்பெயர்

பிறர், மற்றையர் – பிற, மற்று என்பவற்றால் வரும் பெயர்.

கோக்கள், மனுக்கள் முதலியன பகுதிப்பொருள் விகுதியீற்றுப் பெயர்கள்.

'பிற' என்பதனால் மாந்தர், மக்கள், சிறார், வேளிர் எனப் பலர்பாலைக் குறித்து வருவனவெல்லாம் கொள்ளுதல் வேண்டும்.

அஃறிணை ஒன்றன்பால் பெயர்கள்

வினாவிலும் சுட்டிலும் மறைந்து அவற்றுடனாகியும், வினாவவும் சுட்டவும் படாது வேறாகியும் வரும் பொருள் முதலிய ஆறினையும் பொருந்தி துவ்விகுதியீற்றுப் பெயரும் சுட்டோடு கூடிய ஆய்தத்தைப் பொருந்திய துவ்விகுதி ஈற்றுப்பெயரும், ஒன்றென்னும் எண்ணுப் பெயரும் இவைபோல்வன பிறவும் அஃறிணை ஒன்றன்பாற் பெயர்களாகும்.

(எ.டு) எது, ஏது, யாது – வினாப்பெயர்

அது, இது, உது – சுட்டுப்பெயர்

வினாவிலும் சுட்டிலும் மறைந்து அவற்றுடனாகிப் பொருளாதியாறையும் பொருந்திய துவ்விகுதி யீற்றுப் பெயர்கள்.

குழையது, நிலத்தது, மூலத்தது, கோட்டது, குறியது, ஆடலது – வினாவும் சுட்டவும் படாது வேறாகிப் பொருளாதியாறையும் பொருந்திய துவ்விகுதி யீற்றுப் பெயர்கள்.

அஃது, இஃது, உஃது – சுட்டுன் கூடிய ஆய்தத்தைப் பொருந்திய துவ்விகுதி ஈற்றுப் பெயர்கள்.

ஒன்று – எண்ணாகு பெயர்.

வினாச்சுட் டுடனும் வேறு மாம்பொருள்

ஆதி யுறுதுச் சுட்டணை யாய்தம்

ஒன்றென் எண்இன்னன வொன்றன்பெயரே. நூற்பா 279

இந்நூற்பாவில் 'இன்னன' என்றதனால் பிறிது, மற்றையது என்று அஃறிணை ஒருமைப்பொருள் குறித்து வருவனவெல்லாம் கொள்ளுதல் வேண்டும்.

அஃறிணை பலவின்பால் பெயர்கள்

முன்னர்ச் சொல்லப்பட்ட வினாச் சுட்டுடனும் வேறுமாம் பொருளாதி ஆறினோடும் ஏற்றபடி வரும்

வை விகுதி யீற்றுப் பெயர்களும் அகர வீற்றுப் பெயர்களும், வகர மெய்யீற்றுச் சுட்டுப் பெயர்களும் கள் என்னும் பகுதிப் பொருள் விகுதி ஈற்றுப் பெயர்களும் இரண்டு முதலாகிய எண்ணாகு பெயர்களும் உள்ளவென்பது முதலாகிய குறிப்பு வினையாலணைந்த எட்டுப் பெயர்களும் இவை போல்வன பிறவும் அஃறிணைப் பலவின்பாற் பெயர்களாகும்.

(எ.டு) எவை, ஏவை, யாவை, அவை, யாவை,

உவை, நெடியவை, கரியவை – வை விகுதிப் பெயர்கள்.

பொருள், பொருளை, கரிய, கரியன், ஓதுவ, ஓதுவன – அன் சாரியை பெற்றும் பெறாமலும் வந்த அகர விகுதிப் பெயர்கள்.

அவ், இவ், உவ் – வகர மெய்யீற்றுச் சுட்டுப் பெயர்கள்.

யானைகள், சிங்கங்கள் – கள் விகுதிப் பெயர்கள்

இரண்டு , மூன்று, பத்து, நூறு – எண்ணாகு பெயர்கள்.

முன்ன ரவ்வொடு வருவை யவ்வும்

சுட்டிறு வவ்வுங் கள்ளிறு மொழியும்

ஒன்றுஅல் எண்ணும் உள்ள இல்ல

பல்ல சில்ல உளஇல பலசில

இன்னவும் பலவின் பெயரா கும்மே. நூற்பா 280

இந்நூற்பாவில் 'இன்னவும்' என்றமையால் யா, பிற, மற்றைய என்று அஃறிணைப் பன்மைப் பொருள் குறித்து வருவனவற்றையெல்லாம் கொள்ளுதல் வேண்டும்.

ஐம்பால் பெயர்களுள் ஆண்பால் பெயருக்கு உரிய ஈறு – னவ்வீறு – அன், ஆன், மன், ன் என்பனவாகும்.

பெண்பால் – ளவ்வீறு – அள், ஆள், ள் ஆகியன.

பலர்பால் – ரவ்வீறு – அர், ஆர், மர், ர் என்பனவாகும்.

அஃறிணை இருபாற் பெயர்கள்

அஃறிணைப் பெயர்களுள் பால் பகுக்கப்படாத பெயர்கள் அனைத்தும் இரு பாலிற்கும் பொதுப் பெயர்களாகும்.

(எ.டு) பறவை வந்தது, பறவைகள் வந்தன.

மரம் வளர்ந்தது, மரங்கள் வளர்ந்தன.

பால்பகா அஃறிணைப் பெயர்கள்பாற் பொதுமைய.

என்னும் நூற்பா (281) அஃறிணை இருபாற் பெயர்களைச் சுட்டியது.

இருதிணைப் பொதுப் பெயர்கள்

முதற்பெயராகிய நான்கு பெயர்களும் சினைப் பெயராகிய நான்கு பெயர்களும், சினை முதல் பெயராகிய நான்கு பெயர்களும், முறைப் பெயராகிய இரண்டு பெயர்களும், தன்மைப் பெயராகிய நான்கு பெயர்களும், முன்னிலைப் பெயராகிய ஐந்து பெயர்களும், எல்லாம், தாம், தான் என்னும் மூன்று பெயர்களும் இவை போல்வன பிறவும் இருதிணைக்கும் பொதுப் பெயர்களாகும்.

முதற்பெயர் – காரணம் கருதாது ஒரு பொருளைப் பற்றி வரும் பெயர்.

சினைப்பெயர் – உறுப்புக் காரணம் பற்றி வரும் பெயர்.

சினைமுதற்பெயர் – உறுப்புக் காரணமும் உறுப்புடைய முதலும் பற்றி வரும் பெயர்.

முறைப் பெயர் – தாய், தந்த என்பன பற்றி வரும் பெயர்.

முதற்பெயர் நான்கும் சினைப்பெயர் நான்கும்

சினைமுதற் பெயரொரு நான்கும்முறை யிரண்டும்

தன்மை நான்கும் முன்னிலை ஐந்தும்

எல்லாம் தாம்தான் இன்னன பொதுப்பெயர். நூற்பா 282

இந்நூற்பாவில் ‘இன்னன’ என்றமையால் கதிரோன் எழுந்தான், கதிரோன் எழுந்தது என்று ஒரு பொருளையும், இரு திணைப் பொருளாக்கியும் கூறும் பொதுப்பெயர் முதலியனவும், ஊமை வந்தான், ஊமை வந்தாள் என்று உயர்திணை இருபாலையும் உணர்த்தும் பொதுப் பெயர் முதலானவையும் தன்மை,முன்னிலை, வினையாலனையும் பெயர்களையும் கொள்ளுதல் வேண்டும்.

முதற்பெயர் முதலிய நான்கினையும் பகுத்தல்

ஆண்மை, பெண்மை, ஒருமை, பன்மை என்னும் நான்கு பாலும் காரணமாக, அம் முதற்பெயர், சினைப் பெயர், சினைமுதற்பெயர் என்னும் மூன்றும் ஒவ்வொன்றும் நந்நான்காகும். ஆண்மை, பெண்மை என்னும் இருபாலும் காரணமாக முறைப்பெயர் இரண்டாகும்.

முதற்பெயர்கள் (4)

சாத்தன் – ஆண்மை

சாத்தி – பெண்மை

கோதை – ஒருமை

கோதைகள் – பன்மை

மேற்கூறிய நான்கும் முதற் பெயர்களாகும்.

சினைப் பெயர்கள் (4)

முடவன் – ஆண்மை

முடத்தி – பெண்மை

செவிலி – ஒருமை

செவிலியர் – பன்மை

மேற்கூறிய நான்கும் சினைப் பெயர்களும்

சினைமுதற் பெயர்கள் (4)

முடக்கொற்றன் – ஆண்மை

முடக்கொற்றி – பெண்மை

கொடும்புற மருதி – ஒருமை

கொடும்புற மருதிகள் – பன்மை

முறைப் பெயர்கள் (2)

தந்தை – ஆண்மை

தாய் – பெண்மை

ஆண்மை பெண்மை ஒருமை பன்மையின்

ஆம்அந் நான்மைகள் ஆண்பெண் முறைப்பெயர்

என்னும் நூற்பா (283) முதற்பெயர் முதலிய நான்கையும் வகுத்தல் பற்றிய செய்திகளைக் கூறியது.

திணைப் பொதுப்பெயர் பால் பொதுவாதல்

பொதுப்பெயர்களுள் ஒவ்வொன்றும் இரு திணையிலும் தன் தன் பால் திணை ஏற்று வரும்.

அவற்றுள்,

ஒன்றே யிருதிணைத் தன்பா லேற்கும்.   நூற்பா 284

முதற்பெயர் (4)

ஆண்மைப் பெயர் உயர்திணை ஆண்பாலையும் அஃறிணை ஆண்பாலையும் ஏற்கும்.

(எ.டு)  சாத்தனிவன், சாத்தனிவ்வெருது

பெண்மை முதற்பெயர் இருதிணைப் பெண்பாயையும் ஏற்கும்.

(எ.டு)  சாத்தியவள், சாத்தியிப்பசு.

ஒருமை முதற்பெயர் இருதிணை ஒருமையையும் ஏற்கும்.

(எ.டு)  கோதையிவள், கோதையிது

பன்மை முதற்பெயர் உயர்திணைப் பன்மையையும் அஃறிணைப் பன்மையையும் ஏற்கும்.

(எ.டு)  கோதைகளிவர், கோதைகளிவை.

சினைப்பெயர் (4)

ஆண்மைச் சினைப்பெயர் இருதிணை ஆண்பாலுக்குப் பொதுவாகும்.

(எ.டு)  முடவனிவன், முடவனிவ்வெருது

பெண்மைச் சினைப்பெயர் இருதிணைப் பெண்பாலுக்கும் பொதுமையாகும்.

(எ.டு)  முடத்தியிவள், முடத்தியிப்பசு

ஒருமைச் சினைப்பெயர் இருதிணை ஒருமை மூன்றற்கும் பொதுவாகும்.

(எ.டு) செவிலியிவன், செவிலியிவள், செவிலியிது.

பன்மைச் சினைப்பெயர் இருதிணைப் பன்மைக்கும் பொதுவாகும்.

(எ.டு)  செவியிலிகளிவர், செவியிலிகளிவை.

சினை முதற்பெயர் (4)

ஆண்மைச் சினை முதற்பெயர் இருதிணை ஆண்பாற்கும் பொதுவாகும்.

(எ.டு)  முடக்கொற்றனிவன், முடக்கொற்றனிவ்வெருது

பெண்மைச் சினைமுதற் பெயர் இருதிணை பெண்பாற்கும் பொதுவாகும்.

(எ.டு)  முடக்கொற்றியிவள், முடக்கிகொற்றியிப்பசு

ஒருமைச் சினை முதற்பெயர் இருதிணை ஒருமை மூன்றிற்கும் பொதுவாகும்.

(எ.டு)  கொடும்புற மருதியிவன், கொடும்புற மருதியிவள், கொடும்புற மருதியிது.

பன்மைச் சினை முதற்பெயர் இருதிணைப் பன்மைக்கும் பொதுவாகும்.

(எ.டு)  கொடும்புற மருதிகளிருவர், கொடும்புற மருதிகளிவை.

முறைப்பெயர் (2)

ஆண்ம முறைப்பெயர் இருதிணை ஆண்பாலுக்கும் பொதுவாகும்.

(எ.டு)  தந்தையிவன், தந்தையிவ்வெருது

பெண்மை முறைப்பெயர் இருதிணைப் பெண்பாலுக்கும்  பொதுவாகும்.

தாயிவள், தாயிப்பசு.

தன்மைப்பெயர் (4)

தன்மைப்பெயர் இருதிணை ஒருமை மூன்றற்கும் பொதுவாகும்.

(எ.டு)  யானம்பி, யானங்கை, யான்பூதம்

நான்நம்பி, நான்நங்கை, நான்பூதம்

தன்மைப்பெயர் இருதிணைப் பன்மைக்கும் பொதுவாகும்.

யாம்மக்கள், யாம்பூதங்கள்

தாம்மக்கள், தாம்பூதங்கள்

முன்னிலைப் பெயர் (5)

நீ என்னும் முன்னிலைப் பெயர் இருதிணை ஒருமை மூன்றற்கும் பொதுவாகும்.

(எ.டு) நீநம்பி, நீநங்கை, நீபூதம்

நீரென்னும் முன்னிலைப் பெயர் இருதிணைப் பன்மைக்கும் பொதுவாகும்.

(எ.டு) நீர்மக்கள், நீர்பூதங்கள்

எல்லாம், தாம், தான்

எல்லாம் என்பது இருதிணைப் பன்மைக்கும் பொதுமையாகும்.

அவர்தாம் – உயர்திணை

அவைதாம் – அஃறிணை

தாம் என்பது இருதிணைப் பன்மைக்கும் பொதுவாகும்.

அவர்தாம் – உயர்திணைப் பன்மை

அவைதாம் – அஃறிணைப் பன்மை

தான் என்பது இருதிணை ஒருமை மூன்றற்கும் பொதுவாகும்.

அவன்தான், அவள்தான், அதுதான்.

தன்மை, முன்னிலை, படக்கைப் பெயர்கள்

யான், நான், யாம், நாம் என்பவை தன்மைப் பெயர்களாகும். எல்லீர், நீயீர், நீவிர், நீர், நீ முதலிய முன்னிலைப் பெயர்களாகும்.

மேற்கூறிய இவ்வொன்பதும் அல்லாத பெயர்கள் எல்லாம் படர்க்கையிடத்திற்கு உரியனவாகும்.

தன்மை யானான் யாநா முன்னிலை

எல்லீர் நீயிர் நீவிர் நீர்நீ

அல்லன படர்க்கை யெல்லாயெனல் பொது. நூற்பா 285

இங்கு எல்லாம் என்பது மூவிடத்தும் வரும் தன்மையதாகும்.

தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் இடம் வகுத்தல்

வினையின் பெயரே படர்க்கை வினையால்

அணையும் பெயரே யாண்டு மாகும். நூற்பா 286

வினைப்பெயரும் தொழிற்பெயரும் ஒன்றேயாகும். இந்நூற்பாவின் வழி, தொழிற் பெயர்கள் படர்க்கை இடத்திற்கே வரும் தன்மையனவாகும்.

(எ.டு) உணல் நன்று, தினல் நன்று, வருகை நன்று.

வினையாலணையும் பெயர்கள் மூன்றிடத்திற்கும் வரும் தன்மையனவாகும்.

(எ.டு) உண்டேனை, உண்டாயை, உண்டானை.

பன்னிரண்டு பொதுப்பெயர்கள்

தான், யான், நான், நீ என்னும் நான்கும் இருதிணை முக்கூற்று ஒருமைப் பெயர்களாகும்.

தாம், யாம், நாம், எல்லாம், எல்லீர், நீவிர், நீர், நீவீர் என்னும் எட்டும் இருதிணை யிருகூற்றுப் பொதுப்பெயர்களாகும். (நூற்பா 287)

எண்ணால் வரும் உயர்திணைப் பெயருக்குப் புறனடை

ஒருவன், ஒருத்தி என்று வருவனவன்றி இவற்றின்மேல் இரண்டு முதலாகிய எண்களால் ஆண்பாற் பெயரும், பெண்பாற் பெயரும் வருவனவாகும்.

ஒருவன் னொருத்திப் பெயர்மேல் எண்ணில. நூற்பா 288

ஒருவன், ஒருத்தி என்று வருவது போல் இருவன், இருத்தி, மூவன், மூத்தி என்று வராமல் இருவர், மூவர் என்றே வருதல் வேண்டும்.

ஒருவரென வழங்கும் சொல், உயர்திணை ஆண், பெண் என இருபாற்கும் பொதுவாகும். அத்திணைப் பன்மை வாய்பாட்டு வினையைக் கொண்டு முடியும் பாங்கினை உடையதாகும்.

(எ.டு) ஆடவருள் ஒருவர் அறத்தின் வழி நிற்பார்

பெண்டிருள் ஒருவர் கொழுநன் வழி நிற்பர்.

இங்கு, ஒருவர் நிற்பான், நிற்பாள் என்று பகுதிக்கேற்ப ஒருமைச் சொல்லை ஏற்காது, ஒருவர் நிற்பார் என்று விகுதிக்கேற்ப பன்மைச் சொல்லையே கொண்டு முடிந்துள்ளது.

ஒருவ ரென்ப துயரிரு பாற்றாய்ப்

பன்மை வினைகொளும் பாங்கிற் றென்ப. நூற்பா 289

'உரையிற் கோடல்' என்னும் உத்தியால் உயர்த்தல் பொருட்டு, ஆர் என்னும் இடைச்சொல்லை ஈற்றில் பெற்ற இருதிணைப் பொதுப்பெயரும் பன்மைச் சொல்லோடு முடியும்.

(எ.டு) சாத்தனார் வந்தார்

முடவனார் வந்தார்

முடக்கொற்றனார் வந்தார்

தந்தையார் வந்தார்

பால்பகா அஃறிணைப் பொதுப் பெயர் பன்மைச் சொல்லோடு முடியும்.

(எ.டு) நரியார் வந்தார்.

உயர்திணைப் பெயர்கள் பன்மைச் சொல்லுடன் முடியும் தன்மையனவாகும்.

(எ.டு) நம்பியார் வந்தார்

நங்கையார் வந்தார்

இறைவனார் வந்தார்.

இதுவரை இருதிணை, ஐம்பால், மூவிடப் பெயர்களைப் பார்த்தோம். இனி, ஆகுபெயர் தொடர்பான செய்திகளைக் காணலாம்.

### தன்மதிப்பீட்டு வினாக்கள்

I.

1. மக்கள் தேவர் நரகர் ............ என்று அழைக்கப்படுவர்?
2. பால்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
3. வழக்குகளின் பெயர்களைப் பட்டியலிடுக.
4. தம்பொருள் விளக்கும் தன்மையது இயற்சொல். சரியா? தவறா?
5. வேற்றுமை உருபு ஏற்கும் சொல் எது?
6. மூவகை இடங்களையும் பெயர்களையும் குறிப்பிடுக.

### 3.2.1.4 ஆகுபெயர்

ஒன்றன் பெயர் அதனைக் குறிக்காமல் அதனோடு தொடர்புடைய இன்னொரு பொருளுக்குப் பெயராகத் தொன்றுதொட்டு ஆகி வருவது ஆகுபெயராகும்.

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறுடனும், எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல், என்னும் நான்கு வகை அளவையும், சொல்லும், தானி, காரணம், காரியம், கருத்தா (வினை முதல்) இவை முதலாக வரும் பொருள்களுள் ஒரு பொருளின் இயற்பெயர் அப்பொருளுக்குத் தொடர்புடைய பிறிதொரு பொருளைத் தொன்று தொட்டு வழங்கும் முறையாகும்.

#### பொருளாகு பெயர்

ஒரு முழுப் பொருளின் பெயர் அம்முதற் பொருளைக் குறிக்காது, அதன் சினையை மட்டும் குறித்து ஆகி வருவது பொருளாகு பெயராகும்.

(எ.டு) தாமரை மலர்ந்தது.

தாமரை என்னும் முதற் பொருளின் பெயர் அதன் சினையாகிய மலருக்கு ஆகிவந்ததால் பொருளாகு பெயராகும்.

#### இடவாகு பெயர்

ஓர் இடத்தின் பெயர் அதனுடன் தொடர்புடைய இன்னொரு பொருளுக்குப் பெயராக ஆகி வருவது.

ஊர் சிரித்தது – இதில் ஊர் என்னும் இடப்பெயர் அங்கு வாழும் மக்களின் செயலுக்கு ஆகியது.

காலவாகு பெயர்

ஒரு காலத்தின் பெயர், அக்காலத்தில் செய்யப்படுகின்ற செயலையோ அல்லது தன்மையையோ குறிப்பதாகும்.

காரறுத்தது – கார் என்னும் மழைக்காலப் பெயர் அக்காலத்து விளையும் பயிரைக் குறித்தது.

என்னப்பா? ஏப்ரலா? நவம்பரா? – இங்கு ஏப்ரல், நவம்பர் என்பவை அத்திங்கள்களின் பெயர்களைக் குறிக்காமல், அத்திங்களில் நடைபெறும் தேர்வுகளைக் குறிக்கின்றன.

சினையாகு பெயர்

ஒரு சினையின் பெயர் அதனோடு தொடர்புடைய ஒரு முழுப்பொருளுக்கு ஆகி வருவது.

வெற்றிலை நட்டான் – வெற்றிலை என்னும் சினைப்பெயர் அதன் முதலாகிய கொடிக்கு ஆயிற்று.

தலைக்கு ஓர் உரூபாய் கொடு – தலை என்னும் சினைப்பெயர் முதற் பொருளாகிய மனிதனைக் குறித்தது.

குணவாகு பெயர் (அ) பண்பாகு பெயர்

ஒரு குணத்தின் பெயர் அக்குணத்தினையுடைய இன்னொரு பொருளுக்கு ஆகி வருவது.

நீலஞ்சூடினாள் – நீலம் என்னும் நிறக் குணத்தின் பெயர் அதனையுடைய குவளை மலருக்கு ஆகியது.

வெள்ளையை ஏரில் பூட்டு – வெள்ளை என்பது நிறத்தைக் குறிக்காமல், அந்நிறம் கொண்ட காளையைக் குறித்தது.

தொழிலாகு பெயர்

ஒரு தொழிலின் பெயர் அத்தொழிலுடன் தொடர்புடைய வேறொரு பொருளுக்கு ஆகி வருவது.

பொங்கல் உண்டான் – பொங்குதல் என்னும் தொழிற்தொடர் அத்தொழிலைக் குறிக்காமல் அத்தொழிலால் ஆகிய உணவைக் குறித்தது.

அளவையாகு பெயர் (4)

எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் ஆகியவை அளவையாகு பெயராகும்.

எண்ணலளவை ஆகுபெயர்

ஓர் எண்ணின் பெயர் அதனோடு தொடர்புடைய அவ்வளவினைக் கொண்ட வேறொரு பொருளுக்கு ஆகி வருவது.

நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி – நாலும், இரண்டும் என்பன எண்களைக் குறிக்காமல், நான்கு அடிகளாலான நாலடியாரையும் இரண்டு அடிகளாலான திருக்குறளையும் குறித்தன.

எடுத்தலளவை ஆகுபெயர்

நிறுத்தல் என்னும் அளவுப் பெயர், அந்நிறுக்கும் அளவுக் கருவியின் பெயரைச் சுட்டாமல், அவ்வளவில் நிறுக்கப்படும் பொருளைக் குறித்தது.

இரண்டு கிலோ கொடு – இதில் இரண்டு கிலோ என்பது அவ்வளவு கருவியினைக் குறிக்காமல், அவ்வளவில் நிறுத்தப்படும் பொருளைக் குறித்தது.

முகத்தலளவை ஆகுபெயர்

முகந்து அளக்கும் கருவியின் பெயரைக் குறிக்காமல் அக்கருவியால் அளக்கப்படும் பொருளைக் குறித்தது.

மூன்று லிட்டர் கொடு – இங்கு மூன்று லிட்டர் என்பது அளவுக் கருவியைக் குறிக்காமல் அளக்கப்படும் பொளுக்குரிய பெயராயிற்று.

நீட்டலளவை ஆகுபெயர்

நீட்டி அளக்கும் கருவியின் பெயர், அக்கருவியைக் குறிக்காது. அக்கருவியில் அளக்கப்படும் பொருளுக்கு ஆகிவருவது.

நான்கு மீட்டர் கொடு – நான்கு மீட்டர் என்பது அவ்வளவுகோலைக் குறிக்காமல், அதனால் அளக்கப்படும் துணி, கயிறு முதலிய பொருள்களைக் குறித்தன.

சொல்லாகு பெயர்

ஒரு சொல்லின் பெயர் அச்சொல்லுக்கு ஆகாமல், அது குறிக்கும் பொருளைக் குறித்து ஆகி வருவது.

நன்னூலுக்கு உரை செய்தார் – இங்கு உரை என்னும் சொல்லின் பெயர் அதன் பொருளுக்கு ஆயிற்று.

தானியாகு பெயர்

ஓர் இடத்திலுள்ள பொருள் அப்பொருளைக் குறிக்காமல், அப்பொருள் இருக்கும் காரணத்தை (இடத்தை) குறித்து வருவது.

விளக்கு முறிந்தது – விளக்கு என்பது, விளக்கின் ஒளியைக் குறிக்காமல் அதற்குத் தானமாகிய (இடம்) தண்டிற்கு ஆகியது.

கருவியாகு பெயர்

ஒரு கருவியின் பெயர் அதனோடு தொடர்புடைய வேறொரு பொருளுக்கு ஆகி வருவது.

தொலைக்காட்சிப் பார்த்து மகிழ்ந்தனர் – இங்கு தொலைக்காட்சி என்னும் கருவி, தன்னைக் குறிக்காமல் அதன் மூலமாய்ப் பெறப்பெற்ற நிகழ்ச்சிகளைக் குறிக்கின்றது.

காரிய ஆகுபெயர்

ஒரு காரியத்தின் பெயர் அதனோடு தொடர்புடைய கருவிக்கு ஆகி வருவது.

இந்நூல் அணி – அணி என்னும் காரியத்தின் பெயர் அதனைக் குறிக்காமல் கருவியாகிய நூலைக் குறித்தது.

பொன்மணி இலக்கிய வரலாறு படிக்கின்றாள் – இங்குப் பொதுவாக இலக்கிய வரலாற்றைக் குறிக்காமல் ‘இலக்கிய வரலாறு’ என்னும் கருவியாகிய நூலைக் குறித்தது.

கருத்தாவாகு பெயர்

ஓர் ஆசிரியரின் (கருத்தர்) பெயர் அவரைக் குறிக்காது, அவரால் உண்டாக்கப்பெற்ற நூலைக் குறிப்பதாகும்

இளங்கோவடிகளைப் படித்துப் பார் – இளங்கோவடிகள் என்பது அவரால் இயற்றப்பெற்ற சிலப்பதிகாரத்திற்கு ஆயிற்று.

பொருள்முதல் ஆறோடு அளவைசொல் தானி

கருவி காரியம் கருத்தன் ஆதியுள்

ஒன்றன் பெயரான் அதற்குஇயை பிறிதைத்

தொன்முறை உரைப்பன ஆகு பெயரே.

என்னும் நூற்பா (290) ஆகுபெயரின் இலக்கணத்தினையும், வகைப்பாடுகளையும் சுட்டிக்காட்டியது.

மேற்கூறிய நூற்பாவில் ‘ஆதி’ என்றதால் உவமையாகு பெயர் இருமடியாகுபெயர், மும்மடியாகு பெயர், அடையடுத்த ஆகுபெயர், இருபெயரொட்டாகு பெயர் எனவும் வழங்கப்பெறும்.

உவமையாகு பெயர் – காளை வந்தான் – காளைக்கு உள்ள வீரம், உழைப்பு, திண்மை உள்ள இளைஞனைக் குறித்தது.

மயில் வந்தாள் – மயிலின் பண்புகளைப் பெற்ற பெண் வந்தாள்.

இருமடியாகு பெயர்

ஓர் ஆகுபெயர் இருமுறை மடிந்து வேறு வேறு பொருளுக்கு ஆகி வருவது.

புளி நட்டான் – இதில் புளி என்னும் சுவையின் பெயர் முதலில் பழத்திற்காகிப் பழத்தின் பெயர் மரத்திற்காகி இருமுறை மடிந்து வந்துள்ளது.

மும்மடியாகு பெயர்

ஓர் ஆகுபெயர் மூன்றுமுறை வேறுவேறு பொருளுக்கு ஆகி வருவது.

கார் விளைந்தது – கார் என்னும் நிறத்தின் பெயர் மேகத்திற்காகி, அம்மேகத்தின் பெயர் அது மழை பெய்யும் பருவத்திற்காகி, இறுதியில் அப்பருவத்தில் விளையும் நெல்லுக்கு ஆகி வந்தது.

அடையடுத்த ஆகுபெயர்

ஆகுபெயருக்கு முன்னர் அடைமொழியாய் வருவது.

திருக்குறள் படித்தான் – குறள் என்பது ஆகுபெயராகும். இதனுடன் திரு என்னும் அடைமொழி ஆகு பெயருக்கு முன்னர் வந்துள்ளது.

| | ஆகுபெயர் – | அன்மொழித்தொகை வேறுபாடு |
|---|---|---|
| 1. | ஒரு சொல்லாய் வருவது.<br>(கார் அறுத்தான், புளி தின்றான்) | இரண்டு முதலிய பல சொல்லாய் வருவது.<br>பொற்றொடி வந்தாள்,<br>உயிர்மெய் இருநூற்றுப் பதினாறு. |
| 2. | முதல், சினை முதலிய தொடர்பால் வேறு பொருள் உணர்த்தும்.<br>(கார், புளி என்னும் ஆகுபெயர் காலம், சுவை என்னும் தொடர்பால் வேறு பொருள்களும் உணர்த்தும்). | வேற்றுமைத் தொகை,<br>உம்மைத் தொகையால்<br>வேறு பொருளும் உணர்த்தும். |
| 3. | நியதிப் பெயராய் வரும். | நியதிப் பெயராய் வராது. |
| 4. | தொன்றுதொட்டு வரும். | ஏதேனும் ஒரு காரணத்தால் புதிது புதிதாய் உண்டாக்கப்பட்டு வரும். |

இதுவரை ஒன்றன்பெயர் பொருள் தொடர்பால் இன்னொன்றற்கு ஆகிவந்த ஆகுபெயரினைக் கண்டோம். இனி, பெயர்கள் ஏற்கும் வேற்றுமையைப் பற்றிக் காண்போம்.

3.2.1.5 வேற்றுமை

வேற்றுமை வரையறையும் வகைப்பாடும்

தம்மை ஏற்றுக் கொள்ளுதற்குரிய எவ்வகைப்பட்ட பெயர்களுக்கும் இறுதியாய், அப்பெயர்ப் பொருளை வேறுபடுத்துவன வேற்றுமையாகும். இவ்வேற்றுமை எட்டு வகைப்படும்.

ஏற்கும் எவ்வகைப் பெயர்க்கும் ஈறாய்ப் பொருள்

வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை. நூற்பா 291

வேற்றுமையின் பெயரும் முறையும்

இதில் வேற்றுமை பெயர், ஐ, ஆல், கு, இன், அது, கண், விளி என்று எட்டு வகைப்படும்.

பெயரே ஐ ஆல் கு இன் அது கண்

விளிஎன் றாகும் அவற்றின் பெயர்முறை. நூற்பா 292

எழுவாய் உருபு மற்றைய உருபுகளை ஏற்றல்

பெயராய் நிற்கும் அவ் எழுவாய் உருபு ‘ஐ’ முதலாகிய ஆறு வேற்றுமை உருபுகளையும் ஏற்கும்.

‘ஆறனுருபு மேற்கும்மவ் வுருபே’. நூற்பா 293

ஐ முதலிய உருபேலாப் பெயர்கள்

நீயிர், நீவிர் என்னும் முன்னிலைப் பெயர்களும், நான் என்னும் தன்மைப் பெயரும் எழுவாய் அல்லாத வேற்றுமைகளை ஏற்காது.

நீயிர் நீவிர்நான் எழுவாய் அலபெறா. நூற்பா 294

வேற்றுமைகளைப் பவணந்தியார் எண் அடிப்படையில் எட்டாகப் பிரிப்பர்.

1. பெயர் வேற்றுமை (அ) முதல் வேற்றுமை

ஒரு பெயர் வாக்கியத்தில் எழுவாயாக நிற்பது முதல் வேற்றுமையாகும். இவ் வேற்றுமைக்கு உருபு இல்லை என்பதும், வினை, பெயர், வினாக்களைக் கொண்டு வினை முதலாய் நிற்பதே பொருளாகும்.

(எ.டு) சாத்தன் வந்தான், அவன் பெரியன் – வினை கொள வந்தன.

சாத்தனிவன், ஆவொன்று – பெயர் கொள வந்தன.

இவ்வேற்றுமையை எழுவாய், முதல், பெயர் ஆகிய மூன்று சொற்களாலும் பெயரிட்டு அழைப்பர்.

அவற்றுள்,

எழுவாய் உருபு திரிபுஇல் பெயரே

வினைபெயர் வினாக்கொளல் அதன்பய னிலையே.

என்னும் நூற்பா (295) பெயர் வேற்றுமை பற்றிய செய்தியைக் கூறியது.

2. இரண்டாம் வேற்றுமை

இரண்டாம் வேற்றுமையின் உருபு 'ஐ' என்பதாகும். இதன் பொருள் ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை என்னும் ஆறு வகைப்படும்.

குடத்தை வனைந்தான் – ஆக்கப்படு பொருள்.

மூடநம்பிக்கைகளை ஒழித்தான் – அழித்தல்

ஊரை அடைந்தான் – அடைதல்

அறியாமையைத் துறந்தான் – நீத்தல் (துறத்தல்)

புலியை ஒத்தான் – ஒத்தல்

பொன்னை உடையான் – உடைமைப் பொருள்.

இரண்டா வதனுருபு ஐயே யதன் பொருள்

ஆக்கல் அழித்தல் அடைதல் நீத்தல்

ஒத்தல் உடைமை ஆதி யாகும். நூற்பா 296

மூன்றாம் வேற்றுமை

மூன்றாம் வேற்றுமை உருபுகள் ஆல், ஆன், ஒடு, ஓடு முதலியனவாகும். அவ்வுருபுகள் கருவி, கருத்தா, உடனிகழ்ச்சிப் பொருள்களில் வரும். தற்போது உடன் என்பதும் மூன்றாம் வேற்றுமை உருபாக வருகின்றன.

வாளால் வெட்டினான் – வாளான் வெட்டினான் – கருவி

அரசனால் ஆகிய கோயில், அரசனான் ஆகிய கோயில் – கருத்தா

கோவலனோடு மாதவி ஊடினாள், கோவலனோடு கண்ணகி சென்றாள் – உடனிகழ்ச்சி

மூன்றா வதனுருபு ஆல்ஆன் ஒடுஓடு

கருவி கருத்தா உடனிகழ்வு அதன்பொருள். நூற்பா 297

நான்காம் வேற்றுமை

இவ்வேற்றுமையின் உருபு 'கு' என்பதாகும். கொடை, பகை, நட்பு, தகுதி, அதுவால் பொருட்டு, முறை

என்னும் பொருள்களில் வரும்.

இரவலர்க்குப் பொன்னைக் கொடுத்தான் – கொடை

பாம்புக்குப் பகை கருடன் – பகை

சாத்தனுக்கு நட்பாளன் கொற்றன் – நட்பு

மனைக்கு விளக்கம் மடவார் – தகுதி

கூழுக்குப் பாடிய ஔவை – அதுவாதல் (முதல் காரணம்)

கூலிக்கு வேலை செய்தான் – பொருட்டு

தசரதனுக்கு மகன் இராமன் – முறை

நான்கா வதற்கு உருபு ஆகுங் குவ்வே

கொடை பகை நேர்ச்சி தகவு அதுவாதல்

பொருட்டு முறை ஆதியின் இதற்கு இது எனல் பொருளே. நூற்பா 298

ஐந்தாம் வேற்றுமை

ஐந்தாம் வேற்றுமை உருபு இல், இன் என்பதாகும். இவ்வேற்றுமை நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது (காரணம்) முதலிய பொருள்களில் வரும்.

(எ.டு) மலையின் வீழருவி – நீங்கல் பொருள்

காக்கையிற் கரிது களம்பழம் – ஒப்பு

மதுரையின் வடக்குச் சிதம்பரம் – எல்லை

கல்வியிற் பெரியன் கம்பன் – ஏதுப்பொருள்

ஐந்தா வதன்உருபு இல்லும் இன்னும்

நீங்கல்ஒப்பு எல்லை ஏதுப் பொருளே.

என்னும் நூற்பா (299) ஐந்தாம் வேற்றுமைப் பற்றிய செய்திகளைக் கூறியது.

ஆறாம் வேற்றுமை

ஆறாம் வேற்றுமையின் உருபு அது, ஆது, அ என்பனவாகும். இவற்றுள் அது, ஆது என்பன ஒருமைக்கு ம்'அ' என்பது பன்மைக்கும் வரும். 'ஆது' என்பது தற்பொழுது வழக்கில் இல்லை.

இவ்வேற்றுமையின் பொருள் கிழமைப் பொருள் (உடைமைப் பொருள்). அவற்றுள் தற்கிழமைப் பண்பு, உறுப்பு, ஒன்றன் கூட்டம், பலவினீட்டம், திரிபினாக்கம் என்னும் ஐந்து வகைப்படும். பிறிதின்கிழமை பொருள், இடம், காலம் என்னும் மூன்று வகைப்படும்.

தற்கிழமை

தற்கிழமை என்பது தன்னொடு இயைந்து பிரிக்க முடியாத ஒன்றாகும். அது தனக்கே உரியதாகும்.

சாத்தனது கருமை – பண்பு

சாத்தனது கை – உறுப்பு

நெல்லது குப்பை – ஒன்றன் கூட்டம்

பறவைகளது கூட்டம் – பலவினீட்டம்

நெல்லினது பொரி – திரிபின் ஆக்கம்

பிறிதின் கிழமை

பிறிதின் கிழமை என்பது தன்னொடு வேறான பிரிக்க முடிகின்ற ஒன்றாகும்.

பிறிதின் கிழமைப் பொருள், இடம், காலம் என்று மூன்று வகைப்படும்.

முருகனது வேல் – பொருட்பிறிதின் கிழமை

முருகனது குறிஞ்சி – இடப் பிறிதின் கிழமை

முருகனது வேனில் – காலப் பிறிதின் கிழமை

'அது' – உருபு

எனாது கை – தற்கிழமை, எனாது பை – பிறிதின்கிழமை

'அ' – பன்மை உருபு

என கைகள் – தற்கிழமை, என பைகள் – பிறிதின்கிழமை

மேலும், 'உடைய' என்னும் உருபு ஆறாம் வேற்றுமையில் சொல்லுருபாக வரும்.

என்னுடைய கை – தற்கிழமை, என்னுடைய பணம் – பிறிதின்கிழமை

ஆறன் ஒருமைக்கு அதுவும் ஆதுவும்

பன்மைக்கு அவ்வும் உருபாம் பண்புறுப்பு

ஒன்றன் கூட்டம் பலவி னீட்டம்

திரிபின் ஆக்கம் ஆம்தற் கிழமையும்

பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே.

என்னும் நூற்பா (300) ஆறாம் வேற்றுமைப் பற்றிய செய்திகளைக் கூறியது.

ஏழாம் வேற்றுமை

ஏழாம் வேற்றுமை கண் முதலாக இருபத்தெட்டு உருபுகளைக் கொண்டு வரும். பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் அறுவகைப் பெயர்களும், தற்கிழமை, பிறிதின்கிழமை என்னும் இரண்டிற்கும் இடமாக நிற்றலால் ஏழாம் வேற்றுமையின் பொருள் இடப்பொருள் ஆகும்.

ஏழான் உருபுகண் ஆதி யாகும்

பொருள்முதல் ஆறும் ஓரிரு கிழமையின்

இடனாய் நிற்றல் இதன்பொருள் என்ப. நூற்பா 301

(எ.டு) மணியின்கண் இருக்கின்றது ஒளி – தற்கிழமை

பனையின்கண் வாழ்கின்றது அன்றில் – பிறிதின்கிழமை – பொருள் இடமாயிற்று.

ஒளி, மணியின்கண் நீங்காது உறைதலால் தற்கிழமையாயிற்று. அன்றில், பனையின்கண் நீங்கி உறைவதால் பிறிதின்கிழமையாயிற்று.

ஊரின்கண் உள்ளது இல்லம் – தற்கிழமை

வானின்கண் பறக்கின்றது பருந்து – பிறிதின்கிழமை – இடம் இடமாயிற்று.

நாளின்கண் உள்ளது நாழிகை – தற்கிழமை

வேனிற்கண் பாதிரி பூக்கும் – பிறிதின்கிழமை – காலம் இடமாயிற்று.

கையின்கண் உள்ளது விரல் – தற்கிழமை

கையின்கண் உள்ளது கடகம் – பிறிதின்கிழமை – சினை இடமாயிற்று.

கறுப்பின்கண் மிக்குள்ளது அழகு – தற்கிழமை

இளமையின்கண் வாய்ந்தது செல்வம் – பிறிதின்கிழமை – குணம் இடமாயிற்று.

ஆடற்கண் உள்ளது சதி – தற்கிழமை

ஆடற்கண் பாடப்பட்டது பாட்டு – பிறிதின்கிழமை – தொழில் இடமாயிற்று.

கண் முதலிய உருபுகள்

'கண்' முதல் 'இல்' ஈறாகச் சொல்லப்பட்ட இருபத்தெட்டு உருபுகளும் தம்மை ஏற்ற பெயர்ப்பொருளை இடப்பொருளாக வேற்றுமை செய்யும் ஏழன் உருபுகளாகும் என்பதை பின்வரும் நூற்பா 302 குறிப்பிடுகின்றது.

கண்கால் கடைஇடை தலைவாய் திசைவயின்

முன்சார் வலம்இடம் மேல்கீழ் புடைமுதல்

பின்பாடு அளைதேம் உழைவழி உழிஉளி

உள்அகம் புறம்இல் இடப்பொருள் உருபே. நூற்பா 302

(எ.டு)

ஊர்க்கால் நிவந்த – கால்

வேலின் கடை மணி – கடை

நல்லாரிடைப் புக்கு – இடை

வலைத்தலை மான் அன்ன – தலை

குரைகடல்வாய் அமுது – வாய்

தேர்த்திசை இருந்தான் – திசை

அவர்வயின் செல்லாய் – வயின்

கற்றார்முன் தோன்றா – முன்

காட்டுச்சார் ஓடும் – சார்

கைவலத்து உள்ளது – வலம்

இல்லிடப் பரத்தை – இடம்

தன்மேல் இடுதல் – மேல்

பிண்டிக் கண்ணார் நிழல்கீழ் – கீழ்

எயிற்புடை நின்றான் – புடை

சுரன்முதல் வந்த – முதல்

தாயின்பின் சென்றது – பின்

நம்பாடு அணையாத நாள் – பாடு

நல்லளைச் சுனைநீர் – அளை

கோடாய் தேத்து – தேம்

அவனுழை வந்தான் – உழை

நிழல்வழி அசைந்தன்ன – வழி

உரைப்புழி ஓலைபோல – உழி

குளிர்காவுளி சோபுறையும் – உளி

பல்லார் அகத்து – அகம்

என் உயிர்ப்புறத்து – புறம்

ஊரில் இருந்தார் – இல்

எட்டாம் வேற்றுமை

இது விளி வேற்றுமை என்று கூறப்படும். எட்டாம் வேற்றுமை உருபுகளாவன, விளி அடைந்த பெயரின் ஈறு திரிதல், கெடுதல், மிகுதல், இயல்பாதல், ஈற்றல் எழுத்துத் திரிதல் என்றவாறு அமையும்.
அதன் பொருள், படர்க்கைப் பெயர்ப் பொருளைத் தனக்கு எதிர்முகமாக அழைக்கும் விளிப்பொருளாம்.

எட்டன் உருபே எய்துபெயர் ஈற்றின்

திரிபு குன்றல் மிகுதல் இயல்பயல்

திரிபும் ஆம் பொருள் படர்க்கை யோரைத்

தன்முக மாகத் தானழைப் பதுவே. நூற்பா 303

(எ.டு)

அன்னை – அன்னாய் – ஈறு திரிதல்

அரசன் – அரச – ஈறு குன்றல்

மகன் – மகனே – ஈறு மிகுதல்

நம்பி, தோழி – இயல்பாதல்

மக்கள் – மாக்கள் – ஈற்று அயல் திரிதல்

அப்பன் – அப்பா – ஈறு குன்றி, ஈற்றயல் திரிதல்

அண்ணன் – அண்ணாவோ – ஈறுகுன்றி ஈற்றயல் திரிந்து ஈறு மிகுதல்.

விளிக்கப்படு பெயர்கள்

இ, உ, ஊ, ஐ, ஓ என்னும் உயிர்களையும், ன, ள, ர, ல, ய என்னும் மெய்களையும் ஈற்றில் பெற்றுவரும் உயர்திணைப் பெயர்கள். அவற்றுள் ஓ, ர என்னும் இரண்டும் தவிர்த்த மற்ற எட்டு எழுத்துக்களுடன் ண, ஆ என்னும் இரண்டும் சேரப் பத்து எழுத்துக்களையும் ஈற்றில் உடைய இருதிணைப் பொதுப் பெயர்களாகும். மொழிக்கு ஈற்றில் வரும் இருபத்து நான்கு எழுத்துக்களுடன் ஞ, ந அல்லாத மற்றைப் பத்தொன்பது எழுத்துக்களையும் ஈற்றில் உடைய அஃறிணைப் பெயர்கள் ஆகியவை விளி ஏற்கும் பெயர்களாகும்.

இஉ ஊவோடு ஐஓ னளரல

யவ்வீற்று உயர்திணை ஓரஅல் இவற்றொடு

னஃகான் ஆஈறு ஆகும் பொதுப்பெயர்

ஞநவொழி அனைத்தீற்று அஃறிணை விளிப்பன.

என்னும் நூற்பா (304) விளிக்கப்படு பெயர்களைப் பற்றிக் கூறியது.

1. உயர்திணைப் பெயர்கள்

(எ.டு) நம்பி, வேந்து, ஆடூ, விடலை, கோ, ஐயன், வேள், வணிகர், தோன்றல், சேய்.

2. இருதிணைப் பொதுப்பெயர்கள்

(எ.டு) சாத்தி, கூற்று, தந்தை, சாத்தன், கடவுள், தூங்கல், நாய், ஆண், பிதா முதலியன.

3. அஃறிணைப் பெயர்கள்

(எ.டு) மக, புறா, கிளி, தீ, முசு, பூ, சே, நாலை, சோ, மண், அலவன், நாய், குயில், தெவ், பூழ், புள், வண்டு முதலியன.

பொதுவாகிய விளி உருபு

விளிக்கப்படும் மூவகைப் பெயர்களிடத்தில் (உயர்தினை, பொது அஃறிணை) இயல்பாதலும், ‘ஏ’ மிகுதலும், இ, ஈ ஆதல் என்னும் இவை பெரும்பாலும் விளியுருபுகளாக வரும் தன்மையதாகும்.

இம்முப் பெயர்க்கண் இயல்பும் ஏயும்

இகரநீட்சியும் உருபாம் மன்னே. நூற்பா 305

1. உயர்திணைப் பெயர்

முனி கூறாய், வேந்து கூறாய் – இயல்பு

முனியே கூறாய், வேந்தே கூறாய் – ‘ஏ’ மிகல்

நம்பீ கூறாய், தோழீ கூறாய் – இகரம் ஈகாரமாதல்

2. பொதுப்பெயர்

பிதா கூறாய் – ஆண் கூறாய் – இயல்பு

பிதாவே கூறாய், ஆணே கூறாய் – ‘ஏ’ மிகல்

சாத்தீ கூறாய் – இகரம் ஈகாரமாதல்.

3. அஃறிணைப் பெயர்

மான் கொடியை, புல்வாய் கொடியை – இயல்பு

மயிலே ஆடுக, புறாவே வருக – ‘ஏ’ மிகல்

மந்தீ கொடியை – இகரம் ஈகாரமாதல்

விளி உருபுக்குச் சிறப்பு விதி

ஐகாரத்தை இறுதியாக உடைய பொதுப்பெயர்க்கு இயல்பாதலும், ஏ மிகுதலும் அன்றி, ஐகாரம் ‘ஆய்’ எனத் திரிதலும், ‘ஆ’ எனத் திரிதலும் உருபாகும். உயர்திணை, அஃறிணைப் பெயர்களுக்கு அவ்விரண்டு உருபுகளேயன்றி ஐகாரம் ‘ஆ’ எனத் திரிதலும் உருபாகும்.

ஐஇறு பொதுப்பெயர்க்கு ஆயும் ஆவும்

உருபுஆம் அல்லவற்று ஆயும் ஆகும். நூற்பா 306

(எ.டு)

அன்னை – அன்னாய், அன்னா. பொதுப்பெயர்க்கு ஆயும், ஆவும் வந்தன.

விடலை – விடலாய்

நாரை – நாராய்

உயர்திணைப் பெயர்க்கும், அஃறிணைப் பெயர்க்கும் ‘ஆய்’ வந்தது.

னகர இறுதி உயர்திணைப் பெயர் விளியேற்கும் முறை

பொதுவிதியின்படி வருதலேயல்லாமல் னகர மெய்யை ஈறாகவுடைய சில உயர்திணைப் பெயர்கள் அளபெடுக்கும், சில ஈறு கெடும், சில ஈற்றயல் நீளும், சில ஈற்றயல் நீண்டு ஈறு கெடும், சில ஈறு கெட்டு ஈற்றயல் நீண்டு ஓகாரம் மிகும், சில ஈறு கெட்டு ஓகாரம் மிகும், சில இறுதி னகர மெய் யகரமெய் ஆகும், சில ஈற்று னகரமெய் யகர மெய்யாகத் திரிந்து அயலில் உள்ள ஆகாரம் ஓகாரமாகி ‘ஏ’ மிகும், சில ஈறு கெட்டு அயலில் உள்ள அகரம் ஏகாரமாகும். இவை அனைத்தும் விளியுருபுகளாகும்.

ஒருசார் னவ்வீற்று உயர்திணைப் பெயர்க்கண்

அளபுஈறு அழிவயல் நீட்சி அதனோடு

ஈறு போதல் அவற்றோடு ஓவுறல்

ஈறழிந்து ஓவுறல் இறுதியவ் வாதல்

அதனோடு அயல்திரிந்து ஏஉறல் ஈறழிந்து

அயலே ஆதலும் விளியுருபு ஆகும். நூற்பா 307

(எ.டு)

அம்பர் கிழான் – அம்பர் கிழாஅன் – அளபாயிற்று.

புலவன் – புலவ – ஈறழிந்தது.

பெருமன் – பெருமான் – ஈற்றயல் நீண்டது.

மன்னன் – மன்னா – ஈற்றயல் நீண்டு ஈறுகெட்டது.

ஐயன் – ஐயாவோ – ஈற்றயல் நீண்டு, ஈறு கெட்டு ஓகாரம் மிக்கது.

திரையன் – திரையவோ – ஈறழிந்து ஓகாரம் மிக்கது.

வாயிலான் – வாயிலாய் – இறுதி யவ்வாயிற்று.

வாயிலான் – வாயிலோயே – இறுதி யவ்வாய் ஈற்றயல் ஆகாரம் ஓகாரமாய் ஏகாரம் மிக்கது.

ஐயன் – ஐயே – ஈறழிந்து அயலில் அகரம் ஏகாரம் ஆயிற்று.

ளகர இறுதிப் பெயர் விளியேற்கும் முறை

பொதுவான விதியில்லாமல், ளகர மெய்யை இறுதியாக உடைய உயர்திணைப் பெயர்களுள், சில அளபெடுக்கும், சில ஈறு கெட்டும், சில ஈற்றயல் நீண்டும் வரும். சில இறுதி ளவ்வொற்று யவ்வொற்று ஆகும், சில ஈற்றயல் அகரம் ஏகாரமாகும். இவையெல்லாம் விளியுருபுகளாகும்.

ளஃகான் உயர்பெயர்க்கு அளபுஈறு அழிவுஅயல்

நீட்சி இறுதி யவ்வொற்று ஆதல்

அயலில் அகரம்ஏ ஆதலும் விளித்தனு. நூற்பா 308

(எ.டு)

வேள் – வேஎள் – அளபெடுத்தது.

எல்லாள் – எல்லா – ஈறு கெட்டது

மக்கள் –மக்காள் – ஈற்றயல் நீண்டது

குழையாள் – குழையாய் – ளவ்வொற்று யவ்வொற்றாயிற்று.

அடிகள் – அடிகேள் – ஈற்றயலகரம் ஏகாரமாயிற்று.

ஈகர ஈற்றுப் பெயர் விளியேற்கும் முறை

பொதுவான விதிகள் இல்லாமல், ஈகர ஈற்று உயர்திணைப் பெயர்களுள் சில அளபெடுக்கும், சில ஈற்றயல் அகரம், இகரமாகவும், ஈகாரமாகவும் திரியும். சில ஈற்றயல் ஆகாரம் ஈகாரமாகும். சில அதனுடன் ஏகாரம் ஏற்கும். சில ஈற்றில் ஏகாரம் மிகுந்து 'யா' கெட்டு அதன் அயல் இகரம் ஈகாரமாகும், சில ஈற்றில் ஈர் ஆகும். இவையனைத்தும் விளியுருபுகளாகும்.

ரவ்வீற்று உயர்பெயர்க்கு அளபுஎழல், ஈற்று அயல்

அகரம்இஈ ஆதல், ஆண்டைஆ,

ஈஆதல், அதனோடு ஏஉறல், ஈற்றுஏ

மிக்கு அயல் யாக்கெட்டு அதன்அயல் நீடல்,

ஈற்றின் ஈஉறல் இவையும் ஈண்டு உருபே. நூற்பா 309

(எ.டு)

சிறார் – சிறாஅர் – அளபெடுத்தது.

தெவ்வர் – தெவ்விர் – ஈற்றயல் அகரம் இகரம் ஆயிற்று.

நாய்கர் – நாய்கீர் – ஈற்றயல் அகரம் இகரம் ஆயிற்று.

சான்றார் – சான்றீர் – ஈற்றயல் அகரம் இகரம் ஆயிற்று.

கணியார் – கணியீரே – ஈற்றயல் அகரம் ஈகாரமாய் ஏகாரம் மிக்கது.

நம்பியார் – நம்பீரே – ஈற்றயல் ஏகாரம் மிக்கு, அயல், 'யா'க் கெட்டு அதனயல் இகரம் ஈகாரமாயிற்று.

எமர் – எமரீர் – ஈர் ஏற்றது.

லகர யகர ஈற்றுப் பெயர்கள் விளியேற்கும் முறை

லகர மெய்யீற்று உயர்திணைப் பெயர்களுள் சில அளபெடுக்கும், சில ஈற்றயல் நீளும். யகர ஈற்று உயர்திணைப் பெயர்கள் அளபெடுக்கும். இவையெல்லாம் விளியுருபுகளாகும்.

லகார ஈற்று உயர்பெயர்க்கு அளபுஅயல் நீட்சியும்

யகார ஈற்றிற்கு அளபுமாம் உருபே. நூற்பா 310

(எ.டு)

மால் – மாஅல் – லகரவீறு அளபெடுத்தல்.

தோன்றல் – தோன்றால் – லகரவீறு ஈற்றயல் நீளல்.

சேய் – சேஎய் – யகரவீறு அளபெடுத்தல்.

னகர இறுதி அஃறிணைப் பொதுப்பெயர்

சில னகர மெய்யீற்று அஃறிணைப் பெயர்களும் ஈறு கெடும், சில ஈறு கெட்டு ஈற்றயல் நீளும். இவையெல்லாம் விளியுருபுகளாகும்.

னவ்வீற்று உயர்திணை அல்இரு பெயர்க்கண்

இறுதி அழிவுஅத னோடு அயல் நீட்சி. நூற்பா 311

1. அஃறிணைப் பெயர்

அலவன் – அலவ – ஈறு கெட்டது

கலுழன் – கலுழா – ஈறு கெட்டு ஈற்றயல் நீண்டது.

2. பொதுப்பெயர்

சாத்தன் – சாத்த – ஈறு கெட்டது.

கொற்றன் – கொற்றா – ஈறு கெட்டு ஈற்றயல் நீண்டது.

லகர ளகர ஈற்று அஃறிணைப் பெயரும் பொதுப்பெயரும்

லகர ளகர ஈற்று அஃறிணைப் பெயர்க்கும், பொதுப் பெயர்க்கும் பொது விதியேயன்றி ஈற்றுயல் எழுத்து நீளுதலும் விளியுருபாகும்.

ளஈற்று அஃறிணைப் பெயர்பொதுப் பெயர்க்கண்

ஈற்றுஅயல் நீட்சியும் உருபுஆ கும்மே. நூற்பா 312

1. அஃறிணைப் பெயர்

முயல் – முயால் – ஈற்றயல் நீளல்.

2. பொதுப்பெயர்

மக்கள் – மக்காள் – ஈற்றயல் நீளல்.

விளியுருபுகளுக்குப் புறனடை

விளியுருபுகளுள் அண்மை விளிக்கு இயல்பும், ஈறு கெடுதலும் உருபாக வரும். சேய்மை விளிக்கண் அளபெடுத்தலும், புலம்பலுக்கு ஓகாரம் மிகுதலும் விளியுருபாக வரும்.

அண்மையின் இயல்பும், ஈறு அழிவும் சேய்மையின்

அளபும், புலம்பின் ஓவும் ஆகும். நூற்பா 313

(எ.டு)

தம்பி, அரச – அண்மை விளி

மாஅல், சேஎய் – சேய்மை விளி

அய்யாவோ – புலம்பல் விளி.

விளியுருபு ஏலாப் பெயர்கள்

நுவ்வுடன் மூன்று முதல் வினா எழுத்துக்களையும் மூன்று சுட்டெழுத்துக்களையும் முறையே பொருந்திய ன, ள, ர என்னும் மூன்றீற்று உயர்திணைப் பெயர்களும், வை, து என்னும் இரண்டு ஈற்றினை உடைய அஃறிணைப் பெயர்களும், தான் என்னும் பொதுப் பெயரும், இவை போல்வன பிறவும் விளியேலாப் பெயர்களாகும்.

நுவ்வொடு வினாச்சுட்டு உற்ற ன ள ர

வைதுத் தாம்தான் இன்ன விளியா. நூற்பா 314

(எ.டு)

நுமன், நுமள், நுமர் – கிளைப் பெயர்

எவன், எவள், எவர், எவை, எது, யாவன், யாவள், யாவர், யாவை, யாது, ஏவன், ஏவள், ஏவர், ஏவை, ஏது – வினாப்பெயர்.

அவன், அவள், அவர், அவை, அது, இவன், இவள், இவர், இவை, இது, உவன், உவள், உவர், உவை, உது – சுட்டுப் பெயர்.

தான் – பொதுப்பெயர், தாம் – அசைநிலை.

முதல் சினைத் தொடர்பின்கண் அவ்விரண்டினும் இரண்டனுருபு வாராது எனல்

முதலையும் சினையையும் சேர்த்துக் கூறுமிடத்து முதலினை ஐயுருபு பொருந்தினால், சினையினைக் கண்ணுருபு பொருந்தும். முதற் பொருளுக்கு 'அது' உருபு வந்தால், சினைக்கு 'ஐ' உருபு வரும்.

முதலை ஐயுறின் சினையைக் கண்உறும்

அதுமுதற் காயின் சினைக்கு ஐ ஆகும். நூற்பா 315

(எ.டு)

யானையைக் காலின்கண் வெட்டினான்

யானையது காலின் வெட்டினான்

யானையின் கண் காலை வெட்டினான்.

முதல் சினைகளின் ஒற்றுமையும் மேற்சூத்திரப் பொருளோடு

இப்பொருளைப் பிண்டப் பொருளுக்கு ஏற்பித்தலும்

முதற் பெயரும், சினைப் பெயரும் வெவ்வேறு இல்லை. அவை ஒரு பொருளையே, அவ்வாறு இரண்டாகப் பகுத்துக் கூறுவோரின் குறிப்பில் பொருந்தியனவாகும். பிண்டப் பொருளும் அத்தன்மையை உடையதாம்.

முதலிவை சினைஇவை எனவேறு உளவில

உரைப்போர் குறிப்பின அற்றே பிண்டமும். நூற்பா 316

யானையைக் குறித்த போது யானை மட்டும் பெறப்படுமேயன்றி அதன் கை, கால், கொம்பு முதலியன வேறாகப் பெறப்படாவாம். அவ்வுறுப்புகளைக் குறித்த போது அவை பெறப்படுமேயன்றி யானை பெறப்படாதாம். ஆதலால் இவ்வாறு கூறப்பட்டன.

பிண்டப்பொருள்,

நெல்லைப் பொலியின்கண் வாரினான்

நெல்லினது பொலியை வாரினான்

நெல்லின்கண் பொலியை வாரினான் – என வரும்.

உருபு மயக்கம்

ஒரு வேற்றுமைப்பொருள் மற்றொரு வேற்றுமை உருபால் சொல்லப்பட்டதாயினும், அதன் பொருள் சென்ற வழியே அவ்வுருபும் சேரும் தன்மையதாகும்.

யாதன் உருபின் கூறிற்று ஆயினும்

பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும்.

என்னும் நூற்பா (317) உருபு மயக்கம் பற்றிய செய்தியினைக் கூறியது.

பொருளுக்கு இயையாமல் மயங்கி வந்து நிற்கும் உருபைப் பொருளுக்கு இயைந்த உருபாகத் திரித்துக் கொள்ளுதல் வேண்டும் என்பது பெறப்பட்டது.

(எ.டு) "நாகு வேயொடு நக்கு வீங்கு தோள்"

இங்கு வேய் உடனிகழ்ச்சிப் பொருளாகாமல் செயப்படு பொருளாய் நிற்றலால் ஒடு உருபை ஐ உருபாகத் திரித்துக் கொள்ளுதல் வேண்டும். இனி, உரையிற் கோடலால், ஒரு வேற்றுமைப் பொருள் மற்றை வேற்றுமை உருபுகளோடு தகுதியாக வருதலும் உண்டெனக் கொள்ளலாம். வினைமுதற் பொருள் மூன்றாம் வேற்றுமை உருபோடன்றிச் சிறுபான்மை நான்கன் உருபோடும் வரும்.

(எ.டு) அவர்க்குச் செயத்தகும் இக்காரியம்.

செயப்படுபொருள் இரண்டன் உருபோடன்றிச் சிறுபான்மை எழுவாய் வேற்றுமை முதல், ஏழாம் வேற்றுமை ஈறான எல்லா உருபுகளோடும் வரும்.

(எ.டு)

அரிசியால் சோறாக்கினான் – ஆல்

அவட்குக் கொள்ளுமிவ் வணிகலம் – கு

பழியின் அஞ்சும் – இன்

நூலது குற்றம் கூறினான் – அது

தூணின்கட் சார்ந்தான் – கண்

சில வேற்றுமை உருபுகள் செய்யுளிடத்துத் திரிந்து வருதல்

ஐ, ஆன், கு என்னும் மூன்று வேற்றுமை உருபுகளும் செய்யுளில் சிலவிடங்களில் அகரமாகத் திரிந்தும் வரும். அஃறிணையில் ஐயுருபும் குவ்வுருபும் அகரமாகத் திரியாது. எனவே, உயர்திணையில் மூன்றுருபும்திரியும்.

ஐஆன்குச் செய்யுட்கு அவ்வும் ஆகும்

ஆகா அஃறிணைக்கு ஆன்அல் லாதன. நூற்பா 318

(எ.டு) காவலோனைக் களிறஞ்சும்மே

– "காவலோனக் களிறஞ்சும்மே"

புலவரான் – புலவரான

கடிநிலை இன்றே ஆசிரியற்கு – கடிநிலை இன்றே ஆசிரியற்க

– உயர்திணையில் மூன்று உருபும் திரிந்தன.

புள்ளினான் – "புள்ளினான"

– ஆன்உருபு அஃறிணையில் திரிந்தது.

எட்டு வேற்றுமைக்கும் முடிக்கும் சொல்

எல்லைப் பொருளில் வரும் 'இன்' என்னும் ஐந்தாம் வேற்றுமை உருபும், 'அது' என்னும் ஆறாம் வேற்றுமை உருபும் பெயரைக் கொண்டு முடியும். ஒழிந்த எழுவாய் முதலிய வேற்றுமைகள் அனைத்தும் வினைச் சொல்லைக் கொண்டு முடியும். நான்காம் வேற்றுமையும், ஏழாம் வேற்றுமையும் பெரும்பாலும் வினையைக் கொண்டு முடிதலேயன்றி வினையொடு பொருந்தும் பெயரையும் கொண்டு முடியும்.

எல்லைஇன்னும் அதுவும் பெயர்கொளும்

அல்ல வினைகொளும் நான்குஏழ் இருமையும்

புல்லும் பெரும்பாலும் என்மனார் புலவர். நூற்பா 319

(எ.டு)

கருவூரின் கிழக்கு, சாத்தனது கை. – எல்லைப் பொருளில் வரும் இன்னுருபும், ஆறாம் வேற்றுமை அதுவுருபும் பெயர் கொண்டன.

சாத்தன் வந்தான், குடத்தை வனைந்தான், வாளால் வெட்டினான், சாத்தனுக்குக் கொடுத்தான், நோயின் நீங்கினான், அவைக்கண் இருந்தான், சாத்தா கொள் – மற்ற வேற்றுமைகள் வினை கொண்டன.

நோய்க்கு மருந்து, மணியின்கண் ஒளி – நான்காம் வேற்றுமையும், ஏழாம் வேற்றுமையும் சினை கொண்டு முடிதலேயன்றிப் பெயரும் கொண்டன.

மேற்கூறிய நூற்பாவில் பெரும்பாலும் என்றதனால் வினைக் கொள்ளுதற்குரிய சில வேற்றுமைகள் சிறுபான்மை தொழிற் பெயரையும், வினையாலணையும் பெயரையும் கொண்டு முடிதலையும், எழுவாய் வேற்றுமை வினை கொண்டு முடிதலேயன்றிச் சிறுபான்மை பெயரையும் வினையையும் கொண்டு முடிதலையும் கொள்ளுதல் வேண்டும்.

சாத்தன் வருதல், சாத்தன் வந்தவன் – சிறுபான்மை தொழிற்பெயரும், வினையாலணையும் பெயரும் கொண்டன.

சாத்தன் அவன், சாத்தன் யாவன், சாத்தன் யார் – எழுவாய் வேற்றுமை, சிறுபான்மை சுட்டுப்பெயர், வினாப்பெயர், வினாவினைக் குறிப்பு இவற்றைக் கொண்டு முடிந்தது.

தன்மதிப்பீட்டு வினாக்கள்

II.

1. ஒன்றன் பெயர் இன்னொன்றிற்கு ஆகி வருவது ............ என்று பெயர்.
2. அளவையாகு பெயர் எத்தனை?
3. முதலாம் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் உருபு இல்லை. சரியா? தவறா?
4. தற்கிழமை, பிறிதின்கிழமைப் பொருள்களை உணர்த்தும் வேற்றுமையின் பெயர் என்ன?
5. மூன்றாம் வேற்றுமை எவ்வகைப் பொருள்களில் வரும்?
6. கண் முதலிய உருபுகளைக் கொண்டுள்ள வேற்றுமையின் பெயர் ..........
7. விளி வேற்றுமையின் மறுபெயர் ..................
8. உருபு மயக்கம் உணர்த்தும் நூற்பாவினைக் குறிப்பிடுக.

தொகுப்புரை

சொல்லின் இலக்கணம், இருதிணை, ஐம்பால், மூவிடம் பற்றிய செய்திகளையும் வழக்கு, செய்யுள் இன்ன தென்பதையும், வெளிப்படை, குறிப்பு என்பவற்றால் பொருள் உணர்த்தும் சொற்களையும் அறிய முடிந்தது

இலக்கியப் பயன்பாடு, இலக்கண அடிப்படை என்னும் வகையில் சொற்களின் வகைப்பாடுகளும், அவற்றிற்குரிய விளக்கங்களும் அறியப்பட்டன. இலக்கண அடிப்படையான நால்வகைச் சொற்களில் பெயர்ச்சொல் பற்றிய செய்திகள் இவ்வியலில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. பெயர்ச்சொல்லின் பொதுவிலக்கணமும், இருதிணை, ஐம்பால், மூவிடப் பெயர்கள் பற்றிய செய்திகளும் அறிந்து கொள்ள முடிந்தது.

பெயர்ச்சொற்களில் ஒன்றன் பெயர் பொருள் தொடர்பால் இன்னொன்றிற்கு ஆகி வந்த ஆகுபெயரினையும் அதன் வகைகளையும் அறிய முடிந்தது. பெயர்ப் பொருளை வேறுபடுத்திக் காட்டும் வேற்றுமையின் இலக்கணம் அதன் வகைப்பாடுகளும் அவ்வேற்றுமைகளின் உருபுகளையும் பெயர்களையும் ஒருசேர அறிய முடிந்தது.

பயிற்சி வினாக்கள்

சிறு வினாக்கள்

1. சொல்லின் பொது இலக்கணம் யாது?
2. சொல்லின் வகைகள் யாவை?
3. திசைச்சொல் இலக்கணம் பற்றி எழுதுக.
4. செய்யுளின் இலக்கணத்தை நன்னூல் எங்ஙனம் கூறுகிறது?
5. இயற்சொல் என்றால் என்ன?
6. இடுகுறிப்பெயர், காரணப் பெயர் என்பதனை வரையறுக்க.
7. ஆகுபெயர் என்றால் என்ன?
8. வேற்றுமை என்பதனை வரையறுக்க.
9. வேற்றுமையின் வகைகள் யாவை?
10. ஐந்தாம் வேற்றுமை எவ்வெவ் பொருளில் வரும்?
11. உருபு மயக்கம் என்றால் என்ன?

குறு வினாக்கள்

1. இருதிணை ஐம்பால்களை விளக்குக.
2. வழக்கு எத்தனை வகைப்படும்? அவற்றை விளக்குக.
3. திரிசொல், திசைச்சொல் என்பதனை வரையறுத்து, எடுத்துக்காட்டுகள் தருக.
4. விளியுருபிற்கு எய்தியதன் மேற்சிறப்பு விதியை எடுத்துரைத்து விளக்குக.
5. தற்கிழமைப் பொருள், பிறிதின்கிழமைப் பொருள் இவற்றை விளக்குக.

பெரு வினாக்கள்

1. சொற்பாகுபாடு பற்றிக் கட்டுரை வரைக.

2. ஆகுபெயரின் இலக்கணம் கூறி, அதன் வகைப்பாடுகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

3. வேற்றுமை குறித்து நன்னூல் கூறும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

தன்மதிப்பீட்டு விடைகள்

I.

1. உயர்திணை

2. 5. ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்.

3. இலக்கணமுடையது, இலக்கணப்போலி, மரூஉ – இயல்பு வழக்கு.
   இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி – தகுதி வழக்கு.

4. சரி.

5. பெயர்ச்சொல்

6. தன்மை – யான், நான், யாம், நாம்.
   முன்னிலை – எல்லீர், நீவிர், நீர், நீ.
   படர்க்கை – அவன், அவள், அவர், அது, அவை.

II.

1. ஆகுபெயர்

2. நான்கு

3. சரி

4. ஆறாம் வேற்றுமை

5. கருவி, கருத்தா, உடனிகழ்வு

6. ஏழாம் வேற்றுமை

7. எட்டாம் வேற்றுமை

8. யாத னுருபிற் கூறிற் றாயினும்
   பொருள்சென் மருங்கின் வேற்றுமை சாரும்.

3.2.2 வினையியல்

3.2.2.1 வினைச்சொல்லின் இலக்கணம் – நூற்பா 320 முதல் 322 வரை.

3.2.2.2 வினைமுற்று – நூற்பா 323 முதல் 339 வரை.

3.2.2.3 பெயரெச்சம் இலக்கணமும் வாய்பாடுகளும் – நூற்பா 340 முதல் 341 வரை.

3.2.2.4 வினையெச்சம் இலக்கணமும் வாய்பாடுகளும் – நூற்பா 342 முதல் 346 வரை.

3.2.2.5 ஒழிபு – நூற்பா 347 முதல் 351 வரை.

சொல்லதிகாரத்தின் இரண்டாவது இயல் வினையியல் என்பதாகும். இவ்வியல் 31 நூற்பாக்களைக் கொண்டுள்ளது. இப்பகுதியில் வினைச்சொல் இலக்கணமும், வினைச்சொல்லின் வகைப்பாடான வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் பற்றிய செய்திகளும் கூறப்பட்டுள்ளன. இறுதியில் ஒழிபு பற்றி செய்திகள் இடம் பெற்றுள்ளன.

3.2.2.1 வினைச்சொல்லின் இலக்கணம்

தெரிநிலை வினைச்சொல்லின் பொது இலக்கணம்

செய்பவன் (கருத்தா), கருவி, இடம், செயல், காலம், செயப்படு பொருள் என்னும் அறுவகைப் பொருளையும் தருவது தெரிநிலை வினைச் சொல்லாகும். இவ்வினைச்சொல்லில் காலம் வெளிப்படையாகத் தெரியும்.

செய்பவன் கருவி நிலம்செயல் காலம்

செய்பொருள் ஆறும் தருவது வினையே. நூற்பா 320

'வனைந்தான்' என்பது தெரிநிலை வினைமுற்று. இது, குயவன் என்னும் கருத்தாவையும், மண் என்னும் முதற் காரணம், சக்கரம் என்னும் துணைக்காரணம் ஆகிய இரு கருவிகளையும் வீட்டு முன்றில் என்னும் இடத்தையும் வனைதல் என்னும் செயலும், இறந்த காலத்தையும் குடம் முதலிய செயப்படு பொருளையும் உணர்த்தியது.

இந்நூற்பாவில் வரும் ஆறும் என்ற உம்மையால் பிறர்க்கு வனைதலையும் இன்னதற்கு என்ற பொருளையும் பொருள் கருதி வனைந்தான் எனவும் வரும்.

குறிப்பு வினைச்சொல்லின் பொது இலக்கணம்

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறையும் பகுதியாகக் கொண்டு அவற்றினிடமாகப் பிறந்து, செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செயப்படு பொருள் என்னும் ஆறனுள் செய்பவனாகிய வினை முதலை மட்டும் விளக்குவது குறிப்பு வினைச்சொல்லாகும். (காலம் இன்னதென்பதை குறிப்பால் உணர்த்துவது குறிப்பு வினையாகும்).

(எ.டு) பொன்னன் – பொருள்

அகத்தினன் – இடம்

ஆதிரையான் – காலம்

செங்கண்ணன் – சினை

கரியன் – குணம்

இன்சொல்லன் – தொழில்

மேற்கூறிய எடுத்துக்காட்டுகளில் பொன்னன் என்னும் குறிப்பு வினை பொருட் பெயரைப் பகுதியாகக் கொண்டு பிறந்தது. பொன்னை உடையவனாக இருந்தான், இருக்கிறான், இருப்பான் என்னும் மூன்று காலங்களில் ஒன்று, கூறுவானது குறிப்பினால் அறியப்படும். பிறவும் இவை போன்றே அமையும்.

பொருள்முதல் ஆறினும் தோற்றிமுன் ஆறனுள்

வினைமுதன் மாத்திரை விளக்கல் வினைக்குறிப்பே. நூற்பா 321

வினைச்சொற்களை வகுத்தல்

வினையியலின் முதலிரண்டு நூற்பாக்களில் கூறியுள்ள தெரிநிலை, குறிப்பு என்னும் இருநிலைகளில் வரும் வினைச்சொற்கள், வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் என்னும் நிலைகளைப் பெற்று, திணை பாலிடங்களுள் ஒன்றற்கு உரியதாகவும் பலவற்றிற்கும் பொதுமையாய் நிற்பனவும் ஆகும். இவற்றிற்கு எடுத்துக்காட்டுகள் இனி வரும் நூற்பாக்களில் முறையே கூறப்பட்டுள்ளன.

அவைதாம்

முற்றும் பெயர்வினை யெச்சமு மாகி

ஒன்றற் குரியவும் பொதுவு மாகும். நூற்பா 322

3.2.2.2 வினைமுற்று

வினைமுற்று இனையவென்பது

பல்வகை வினைகளுக்கும் பொது இலக்கணமாகிய செய்பவன், கருவி முதலிய ஆறையும் தோன்றச் செய்து, பொருட்பெயர் முதலிய அறுவகைப் பெயரையும் பயனிலையாக ஏற்பனவாகி, தெரிநிலை, குறிப்பு ஆகிய முற்று வினைகளாக வரும்.

தெரிநிலை வினைமுற்று

செய்தானவன் – பொருட்பெயர்

குளிர்ந்தது நிலம் – இடப்பெயர்

வந்தது கார் – காலப் பெயர்

குவிந்தது கை – சினைப்பெயர்

பரந்தது பரப்பு – குணப்பெயர்

ஒழிந்தது பிறப்பு – தொழிற்பெயர்

குறிப்பு வினைமுற்று

நல்லனவன் – பொருட்பெயர்

நல்லது நிலம் – இடப்பெயர்

நல்லது கார் – காலப் பெயர்

நல்லது கை – சினைப்பெயர்

நல்லது பரப்பு – குணப்பெயர்

நல்லது பிறப்பு – தொழிற்பெயர்

பொதுவியல்பு ஆறையும் தோற்றிப் பொருட்பெயர்

முதல்அறு பெயரலது ஏற்பில முற்றே. நூற்பா 323

தெரிநிலை வினைமுற்றின் பாகுபாடு

ஒரு வினைச்சொல்லைப் படர்க்கையில் வைத்து ஐந்து பாலுடன் பெருக்கி, முக்காலத்துடன் முரணப் பதினைந்து வகைகள் தோன்றும். இனி, அவ்வினையைத் தன்மையில் வைத்து ஒருமைப் பன்மையொடு பெருக்கிப் பின் முக்காலத்துடன் முரண அறுவகை தோன்றும். மேலும், அவ்வினையை முன்னிலையில் வைத்து ஒருமைப் பன்மையுடன் பெருக்கிப் பின் முக்காலத்தொடும் முரண, அறுவகை உண்டாகும். இவையனைத்தையும் கூட்டின் இருபத்தேழு வகை ஆகும்.

படர்க்கை வினைமுற்று (15)

நடந்தான், நடந்தாள், நடந்தார், நடந்தது, நடந்தன – இறந்த கால வினைமுற்று (5)

நடக்கின்றான், நடக்கின்றாள், நடக்கின்றார், நடக்கின்றது, நடக்கின்றன – நிகழ்கால

வினைமுற்று (5)

நடப்பான், நடப்பாள், நடப்பார், நடப்பது, நடப்பன – எதிர்கால வினைமுற்று (5)

தன்மை வினைமுற்று (6)

நடந்தேன், நடந்தோம் – இறந்த கால வினைமுற்று

நடக்கின்றேன், நடக்கின்றோம் – நிகழ்கால வினைமுற்று

நடப்பேன், நடப்போம் – எதிர்கால வினைமுற்று

முன்னிலை வினைமுற்று (6)

நடந்தாய், நடந்தீர் – இறந்தகால வினைமுற்று

நடக்கின்றாய், நடக்கின்றீர் – நிகழ்கால வினைமுற்று

நடப்பாய், நடப்பீர் – எதிர்கால வினைமுற்று

ஒருவன்முத லைந்தையும் படர்க்கை யிடத்தும்

ஒருமைப் பன்மையைத் தம்மைமுன் னிலையினும்

முக்கா லத்தினும் முரண முறையே

மூவைந் திருமூன்று ஆறாய் முற்று

வினைப்பத மொன்றே மூவொன் பானாம்.

என்னும் நூற்பா (324) தெரிநிலை வினைமுற்றின் பாகுபாடுகளை உணர்த்தியது.

ஆண்பால் படர்க்கை வினைமுற்று

அன், ஆண் என்னும் இரு விகுதிகளையும் இறுதியிலுடைய மொழிகள் உயர்திணை ஆண்பால் படர்க்கை வினைமுற்றாகும்.

“அன் ஆன் இருமொழி ஆண்பாற் படர்க்கை” நூற்பா 325

(எ.டு) நடந்தான், நடக்கின்றான், நடப்பான் – முறையே முக்காலத்திற்குரிய எடுத்துக்காட்டுகளாகும்.

குழையன் (அன்) – குறிப்பு வினைமுற்று

பெண்பால் படர்க்கை வினைமுற்று

உயர்திணைப் பெண்பாலுக்குரிய படர்க்கை வினைமுற்று விகுதிகள் அள், ஆள் என்னும் இரண்டு விகுதிகளாகும்.

‘அள் ஆள் இருமொழி பெண்பாற் படர்க்கை’ நூற்பா 326

நடந்தாள், நடக்கின்றாள், நடப்பாள் – முக்காலத்திற்குரிய எடுத்துக்காட்டுகள்

குழையள் (அவள்) – குறிப்பு வினைமுற்று

பலர்பால் படர்க்கை வினைமுற்று

உயர்திணைப் பலர்பாலுக்குரிய படர்க்கை வினைமுற்று விகுதிகள் அர், ஆர், ப, மார் என்பவையாகும்.

அர் ஆர் பவ்வூர் அகரமார் ஈற்ற

பல்லோர் படர்க்கைமார் வினையொடு முடிமே. நூற்பா 327

நடந்தார், நடக்கின்றார், நடப்பார் – முக்கால வினைமுற்றுக்குரிய எடுத்துக்காட்டுகள்.

குழையர் (அவர்) – குறிப்பு வினைமுற்று

நடப்ப, மொழிப – பவ் விகுதி

"பாடின் மன்னரைப் பாடன்மா ரெமரே" – இதில் மாரீற்று வினைமுற்று, பெயருடன் முடிந்தது.

ஒன்றன்பால் படர்க்கை வினைமுற்று

து, று, டு என்னும் மூன்று விகுதிகளையும் ஈற்றிலுடைய குற்றியலுகர ஈற்று மொழிகள், அஃறிணை ஒன்றன்பால் படர்க்கை வினைமுற்றும் குறிப்பு முற்றுமாகும். இதில் 'டு'வ் விகுதி குறிப்பு வினைமுற்றில் மட்டுமே வரும். தெரிநிலை வினைமுற்றில் வராது. (நூ. 328)

(எ.டு) நடந்தது, நடக்கின்றது, நடப்பது – முக்கால வினைமுற்றுக்கு உரியவை.

குழையது, அற்று – குறிப்பு வினைமுற்று

பலவின்பால் படர்க்கை வினைமுற்று

அ, ஆ என்னும் இரு விகுதிகளை இறுதியிலுடைய மொழிகள் அஃறிணைப் பலவின்பால் படர்க்கை வினைமுற்றும் குறிப்புவினை முற்றுமாகும். இதில் ஆகாரம் எதிர்மறையில் மட்டும் வரும். உடன்பாட்டில் வராது. அகர விகுதி 'அன்' சாரியை பெற்றும் பெறாமலும் வரும்.

(எ.டு) நடந்தன, நடந்த – இறந்தகால வினைமுற்று

நடக்கின்றன, நடக்கின்ற – நிகழ்கால வினைமுற்று

நடப்பன, நடப்ப – எதிர்கால வினைமுற்று

கரியன, கரிய (அவை) – குறிப்பு வினைமுற்று

நடவா நின்றில, நடவா – எதிர்மறை வினைமுற்று

அ ஆ ஈற்ற பலவின் படர்க்கை

ஆவே எதிர்மறைக் கண்ணதாகும்.

என்னும் நூற்பா (329) பலவின்பால் படர்கை வினைமுற்றுக்களைப் பற்றிக் கூறியது.

இரு திணைக்குரிய பொது வினைகள்

தன்மை, முன்னிலை இடங்களில் தெரிநிலை, குறிப்பு வினை முற்றுக்களும், வியங்கோள் வினைமுற்றுக்களும், வேறு, இல்லை, உண்டு என்னும் மூன்று குறிப்பு வினைமுற்றுக்களும், தெரிநிலையும் குறிப்புமாகிய பெயரெச்ச, வினையெச்சங்களும் உயர்திணை, அஃறிணைகளுக்குப் பொது வினைகளாக வரும்.

தன்மை முன்னிலை வியங்கோள் வேறிலை

உண்டுஈர் எச்சம் இருதிணைப் பொது வினை. நூற்பா 330

இங்கு செய்யும் என்னும் வினைமுற்றும் இருதிணைப் பொதுவினையாகும்.

தன்மையொருமை வினைமுற்று

கு, டு, து, று என்னும் குற்றியலுகர விகுதிகளும் அல், அன், என், ஏன் என்னும் நான்கு மெய்யீற்று விகுதிகளும் ஆகிய இவ்வெட்டு விகுதிகளையும் இறுதியிலுடைய மொழிகள் இருதிணை இடத்தினவாகிய ஒருவன், ஒருத்தி என்று என்னும் மூன்று பால்களுக்கும் பொதுவாகிய ஒருமைத் தன்மை வினைமுற்றும் குறிப்பு முற்றுமாகும்.

குடுதுறு என்னும் குன்றிய லுகரமொடு

அல் அன் என் ஏன் ஆகும் ஈற்ற

இருதிணை முக்கூற்று ஒருமைத் தன்மை. நூற்பா 331

கு, டு, து, று என்னும் நான்கும் தாமே காலம் காட்டுவதால் குறிப்பு வினைக்கு வருவதில்லை. 'அல்' விகுதி எதிர்கால இடைநிலைகளோடு மட்டும் வரும்.

கு – உண்கு – எதிர்கால வினைமுற்று

டு – உண்டு – இறந்தகால வினைமுற்று

து – வந்து, வருது – இறந்தகால, எதிர்கால வினைமுற்று

று – சென்று, சேறு – இறந்தகால, எதிர்கால வினைமுற்று

அல் – செய்வல் – எதிர்கால வினைமுற்று

அன் – உண்டனன், உண்கின்றான், உண்பன்

என் – உண்டனென், உண்கின்றனென், உண்பென்

ஏன் – உண்டேன், உண்கின்றேன், உண்பேன் – முக்கால வினைமுற்றுக்கள்

குழையன், குழையென், குழையேன் – குறிப்பு வினைமுற்று

தன்மைப் பன்மை வினைமுற்று

அம், ஆம் என்னும் இவ்விரு விகுதிகளையும் இறுதியிலுடைய மொழிகள் முன்னிலை யிடத்தாரையும், எம், ஏம், ஓம் என்னும் இம்மூன்று விகுதிகளையும் இறுதியில் உடைய மொழிகள் படர்க்கை இடத்தாரையும், கும், டும், தும், றும் என்னும் இந்நான்கு விகுதிகளையும் இறுதியிலுடைய மொழிகள் முன்னிலை, படர்க்கை என்னும் ஈரிடத்தார்களையும், தன்னுடன் கூட்டும் உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினைமுற்றும் குறிப்பு முற்றுமாகும்.

அம்ஆம் என்பன முன்னிலை யாரையும்

எம்ஏம் ஓம்இவை படர்க்கை யாரையும்

உம்ஊர் கடதற இருபா லாரையும்

தன்னொடு படுக்குந் தன்மைப் பன்மை. நூற்பா 332

(எ.டு)

| இறப்பு | நிகழ்வு | எதிர்வு | குறிப்பு | |
|---|---|---|---|---|
| உண்டனம் | உண்கின்றனம் | உண்பம் | தாரினம் யாம் | |
| உண்டாம் | உண்கின்றாம் | உண்பாம் | தாரினாம் யானும் நீயும் | |
| உண்டனெம் | உண்கின்றனெம் | உண்பெம் | தாரினெம் | யாம் |
| உண்டேம் | உண்கின்றேம் | உண்பேம் | தாரினேம்நானும் | |
| உண்டோம் | உண்கின்றோம் | உண்போம் | தாரினோம் | அவனும் |

| இறப்பு | எதிர்வு | |
|---|---|---|
| கும் | உண்கும் | |
| டும் | உண்டும் | |
| தும் | வந்தும் | வருதும் |
| | சென்றும் | செறுதும் – இவை சிறுபான்மை இம்முறையின்றி மயங்கி வருதலும் உண்டு. |

வினையுடனும் முடியும் தன்மை வினைமுற்றுக்கள்

செய் என்னும் தன்மை ஒருமை முற்றும் செய்கு என்னும் தன்மைப் பன்மை முற்றும் பெயருடனேயன்றி வினையுடனே முடியினும் தன்மைப் பன்மை வினைமுற்றக்களேயாகும்.

செய்கு என ஒருமையும் செய்குமென் பன்மையும்

வினையொடு முடியினும் விளம்பிய முற்றே. நூற்பா 333

(எ.டு) உண்கு வந்தேன், உண்கும் வந்தேம்

உளப்பாட்டுப் பன்மை முன்னிலை

முன்னிலை வினையுடன் கூடிய படர்க்கையும் முன்னிலையேயாகும்.

(எ.டு) உண்டனிர், உண்டீர், உண்மின், குழையினிர், குழையீர் – நீயும் அவனும்

“முன்னிலை கூடிய படர்க்கையு முன்னிலை.” நூற்பா 334

இந்நூற்பா முன்னிலைப் பன்மை முற்றுக்குரிய இடத்தில் கூறாது, ஒன்றினம் முடித்தல், தன்னினம் முடித்தல் என்னும் உத்தியால் இங்கே கூறப்பட்டது.

முன்னிலை ஒருமை வினைமுற்று

ஐ, ஆய், இ என்னும் மூன்று விகுதிகளை இறுதியில் உடைய மொழிகளும், விகுதி குன்றியும் குன்றாமலும் நிற்பனவாகிய ஏவலில் வரும் இருபத்துமூன்று ஈற்று மொழிகளும் ஒருவன் ஒருத்தி ஒன்று என்னும் மூன்று பால்களுக்கும் பொதுவாகிய முன்னிலை ஒருமை வினைமுற்றும் குறிப்பு முற்று ஆகும்.

ஐஆய் இகர ஈற்று மூன்றும்

ஏவலின் வரூஉம் எல்லா ஈற்றவும்

முப்பால் ஒருமை முன்னிலை மொழியே. நூற்பா 335

(எ.டு)

| | | | | |
|---|---|---|---|---|
| இறப்பு | நிகழ்வு | எதிர்வு | குறிப்பு | |
| உண்டனை | உண்கின்றனை | உண்பை | குழையினை | |
| உண்டாய் | உண்கின்றாய் | உண்பாய் | குழையாய் | நீ |
| உண்டி | உண்ணாநின்றி | வேறி | வில்லி | |

ஆய், இ, அல், ஏல், ஆல் என்னும் விகுதிகளை இறுதியில் உடைய வினைச்சொற்களும், ஆய் விகுதி இன்றிப் பகுதி மாத்திரையாய் நிற்கும் வினைச் சொற்களும், முன்னிலை ஏவல் வினைமுற்றுகள் ஆகும்.

ஏவல் வினைமுற்றுக்குச் சிறப்பு விதி

முன்னிலை ஏவல் வினைமுற்றுகளுக்கு முன் ஈகாரமும் ஏகாரமும் அவ்விடத்து நிற்றற்குரிய மரபினையுடைய யாதேனும் ஒரு மெய்யை ஊர்ந்து வரும்.

முன்னிலை முன்னர்ஈயும் ஏயும்

அந்நிலை மரபின் மெய்ஊர்ந்து வருமே நூற்பா 336

இவ்வீகார ஏகாரங்கள் விகுதிகள் இல்லை. முன்னிலை அசைகளாகும்.

(எ.டு) “சென்றீ பெருமநிற் றகைக்குநர் யாரே” – செல் – சென்றீ

“அட்டில் ஓலை தொட்டனை நின்மே” – நில் – நின்மே

முன்னிலைப் பன்மை வினைமுற்று

இர், ஈர் என்னும் இரண்டு விகுதிகளை இறுதியிலுடைய மொழிகள் இருதிணைக்கும் பொதுவாகிய முன்னிலைப் பன்மை வினைமுற்றும் குறிப்பு வினைமுற்றும் ஆகும்.

மின் விகுதியை இறுதியில் உடைய மொழிகள் முன்னிலைப் பன்மை ஏவல் வினைமுற்றாகும். மின் விகுதியின்றி ஈர், உம் விகுதிகளும் முன்னிலைப் பன்மை ஏவலுக்கு வரும் தன்மையதாகும்.

“இர்ஈர் ஈற்ற இரண்டும் இருதிணைப்

பன்மை முன்னிலை மின் அவற்(று) ஏவல். நூற்பா 337

(எ.டு) உண்டனிர், உண்டீர் – இறந்தகால வினைமுற்று

உண்கின்றனிர், உண்கின்றீர் . நிகழ்கால வினைமுற்று

உண்பிர், உண்பீர் – எதிர்கால வினைமுற்று

குழையினிர், குழையீர் – குறிப்பு வினைமுற்ற

உண்மின், உண்ணீர், உண்ணும் – ஏவல் வினைமுற்று

வியங்கோள் வினைமுற்று

க, ய, ர என்னும் எழுத்துக்களை இறுதியாக உடைய மொழிகள் வியங்கோள் வினைமுற்றுக்கள் ஆகும். அவை மூன்று இடங்களிலும் ஐம்பாலிலும் பொதுவாக நின்று வாழ்த்தல், விதித்தல், வேண்டுதல், வைதல் என்னும் பொருள்களின் மேல் வரும்.

(எ.டு) நீ வாழிய, நீ வாழ்க, நீவிர் வாழ்வீர் – வாழ்த்தல்

நீ வருக, நீ செல்க – விதித்தல்

பணி தருக, பொருள் தருக – வேண்டல்

அவன் ஒழிக, அவள் கெடுக – வைதல்

கயவோடு ரவ்வொற்று ஈற்ற வியங்கோள்

இயலும் இடம்பால் எங்கும் என்ப. நூற்பா 338

வேறு, இல்லை, உண்டு

வேறு, இல்லை, உண்டு என்னும் மூன்று குறிப்பு வினைமுற்றுக்களும் ஐம்பால் மூவிடங்கட்கும் உரியனவாகும்.

(எ.டு) யான் வேறு, யாம் வேறு, நீ வேறு, நீர் வேறு, அவன் வேறு, அவள் வேறு, அவர் வேறு, அது வேறு, அவை வேறு என்றவாறு யான் என்னும் குறிபபு வினைமுற்று அமையும். இல்லை, உண்டு என்னும் குறிப்பு வினைமுற்றுக்களுக்கு எடுத்துக்காட்டுகளை மேற்கூறியவாறு பொருத்திக் கொள்ளுதல் வேண்டும்.

வேறில்லை உண்டுஐம் பால்மூ விடத்தன. நூற்பா 339

இனி, 'மொழிந்த பொருளோடு ஒன்ற, அவ்வயின் மொழியாதனையும் முட்டின்று முடித்தல்' என்னும் உத்தியால், வேண்டும், தகும், படும் என்னும் சொற்களும் ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாக வரும் எனக் கொள்ளுதல் வேண்டும்.

இதுவரை வினைமுற்று தொடர்பான செய்திகளைப் பவணந்தியார் கூறியுள்ளமையைக் கண்டோம். இனி, இரு வகை எச்சங்களில் பெயரெச்சம் தொடர்பான செய்திகளைப் பார்போம்.

பெயரெச்சம்

செய்த, செய்கின்ற, செய்யும் என்னும் வாய்பாடுகளில் ஒன்றாய், காலமும் செயலும் வெளிப்படையாகத் தோன்றிப் பால் மட்டும் வெளிப்படையாகத் தோன்றாமல் செய்பவன் முதலிய அறுபொருட் பெயரும்

எஞ்ச நிற்பது பெயரெச்சமாகும்.

செய்த செய்கின்ற செய்யுமென் பாட்டிற்

காலமுஞ் செயலுந் தோன்றிப் பாலொடு

செய்வ தாதி யறுபொருட் பெயரும்

எஞ்ச நிற்பது பெயரெச் சம்மே. நூற்பா 340

(எ.டு)

இறப்பு நிகழ்வு எதிர்வு

1. உண்ட உண்கின்ற உண்ணும் சாத்தன் – வினைமுதல்

கலம் – கருவி

இடம் – நிலம்

ஊண் – தொழில்

நாள் – காலம்

சோறு – செயப்படுபொருள்

2, வேலாண் முகத்தகளிறு, கரிய குதிரை – குறிப்புப் பெயரெச்சம்

3. உண்ணாத குதிரை – எதிர்மறைத் தெரிநிலைப் பெயரெச்சம்

4. இல்லாத பொருள் – எதிர்மறைக் குறிப்பு பெயரெச்சம்

இங்கு உண்ட என்பது உண்ணல் என்னும் தொழிலும் இறந்த காலமும் தோன்றி, அத்தொழில் நிகழ்த்துதற்கு வேண்டும் பால் தோன்றாமையும் அப்பாலுடன் பெயர் எஞ்சி நின்றமையும் அறிதல் வேண்டும்.

செய்யும் என்னும் எச்சத்திற்கு எய்தியதன்மேல் சிறப்பு விதி

செய்யும்என் எச்சவீற்று உயிர்மெய் சேறலும்

செய்யுளுள் உம்உந்து ஆகலும் முற்றேல்

உயிரும் உயிர்மெய்யும் ஏகலும் உளவே. நூற்பா 341

1. செய்யுமென் எச்சத்து ஈற்று உயிர்மெய் கெடுதலுண்டு. (ஆகும் பொருள் – ஆம்பொருள்)

2. செய்யுளில் செய்யுமென் எச்சத்து உம் என்னும் இறுதி உந்து எனத் திரிவதுண்டு. (திரைமிசைப் பாயும் – திரைமிசைப் பாயுந்து)

3. செய்யுமென் முற்றின் இறுதி உயிரேனும் உயிர்மெய்யேனும் கெடுவது உண்டு. (மொழியுமே – மொழிமே).

பெயரெச்சம் தொடர்பான செய்திகளைப் பார்த்தோம். இனி, வினையெச்சம் பற்றிய செய்திகளைக் காண்போம்.

3.2.2.4 வினையெச்சம்

தொழிலையும் காலத்தையும் வெளிப்படையாகக் காட்டி பால் மட்டும் வெளிப்படையாகத் தோன்றாமல் வினை எஞ்சி நிற்பது வினையெச்சமாகும்.

தொழிலும் காலமும் தோன்றிப் பால்வினை

ஒழிய நிற்பது வினையெச் சம்மே. நூற்பா 342

இந்நூற்பாவில் வினையெனப் பொதுப்படக் கூறியமையால் உடன்பாடும் எதிர்மறையும் பற்றி வரும் தெரிநிலையும் குறிப்புமாகிய வினைமுற்றும், பெயரெச்சமும், வினையெச்சமும் வினையாலனையும் பெயரும், தொழிற் பெயருமாகிய ஐவகை வினைச்சொற்களும் அடங்கும்.

ஏற்புழிக் கோடலால் தொழிலும் காலமும் தோன்றுதல் தெரிநிலைக்கும், பாலும் வினையும் ஒழிய நிற்றல் தெரிநிலை, குறிப்பு இரண்டிற்கும் உரியனவாகும்.

(எ.டு) உண்டு வந்தான் – தெரிநிலை வினையெச்சம் (காலம் வெளிப்படையாகத் தெரிவது).

அருளின்றிச் செய்தான் – குறிப்புவினையெச்சம் (காலம் குறிப்பாக உணர்த்தப்படுவது).

வினையெச்ச வாய்பாடுகள்

செய்துசெய்பு செய்யாச் செய்யூச்

செய்தெனச் செயச்செயின் செய்யிய செய்யியர்

வான்பான் பாக்கின வினையெச்சம் பிற

ஐந்தொன் றாறுமுக் காலமும் முறைதரும். நூற்பா 343

என்னும் நூற்பா செய்து, செய்பு முதலாகப் பன்னிரண்டு வினையெச்ச வாய்பாடுகளைக் கூறுகின்றது. இவ்வாய்ப்பாடுகளில் செய்து முதலிய ஐந்தும் இறந்த காலத்தையும், செய என்னும் வினையெச்ச வாயப்பாடு நிகழ்காலத்தையும், செயின் முதலிய ஆறும் எதிர்காலத்தையும் காட்டுகின்றன.

மேற்கூறிய பன்னிரண்டு வினையெச்ச வாய்பாடுகளில் செய்து, செய்தென என்ற இரண்டும் இடைநிலையாலும் ஒழிந்த பத்தும் இறுதி நிலையைாலும் முறையே காலத்தினைக் காட்டும் தன்மையதாகும்.

இறந்த காலம்

உண்டு – செய்து

உண்குபு – செய்பு

உண்ணா – செய்யா

உண்ணு – செய்யூ

உண்ணென – செய்தென

நிகழ்காலம்

உண்ண – செய

எதிர்காலம்

உண்ணின் – செய்யின்

உண்ணிய – செய்யிய

உண்ணியர் – செய்யியர்

உண்ணுவான் – வான்

திண்பான் – பான்

செய்பாக்கு – பாக்கு

வினையெச்சங்களுக்கு முடிவு வேறுபாடு (நூ. 344)

வினையெச்ச வாய்பாடுகளுள் செய்து, செய்பு, செய்யா, செய்யூ என்னும் நான்கும் இறுதியில் உள்ள வான், பான், பாக்கு என்னும் மூன்றும் வினைமுதல் வினையைக் கொண்டு முடியும்.

(எ.டு)

உ – தானடைந்து வந்தான்

பு – தானுண்குபு போனான்

ஆ – தான் கல்லாக் கழித்தான்

ஊ – தான் காணூஉ மகிழ்ந்தான்

வான் – தான் கொல்வான் செல்வான்

பான் – தானலைப்பான் புகுந்தான்

பாக்கு – தான் தருபாக்கு வருவான்

இவ் வினையெச்ச வாய்பாடுகளுள் நடுவில் உள்ள செய்தென, செய, செயின், செய்யிய, செய்யியர் என்னும் ஐந்தும் இவை போல்வன பிறவும் செய்பவனைக் கொண்டு முடிதலேயன்றிப் பிறவற்றையும் கொண்டு முடியும்.

(எ.டு)

என – தானுண்டென மகிழ்ந்தான், பிறனுண்டென மகிழ்ந்தான்

அ – தானுண்ண வருகிறான், பிறறுண்ணக் காண்கிறான்

இன் – தானுண்ணின் மகிழ்வான், பிறனுண்ணிற் கொடுப்பான்

இய – தானுண்ணிய வருவான், பிறனுண்ணிய கொடுப்பான்

இயர் – தானுண்ணியர் போவான், பிறனுண்ணியர் வழங்குவான்

இவை வினைமுதலும் பிறவும் கொண்டு முடிந்தன.

வினை முதல் கொள்ளும் என்றவற்றிற்கு ஒரு புறனடை

முதலில் நான்கும் ஈற்றில் மூன்றும் என்ற வினையெச்சங்கள் சினை வினையாயின் அவை முன்னர் வினைமுதல் கொள்ளும் என்னும் விதியினையே சினையுடனேயன்றி ஒற்றுமைப் பற்றி முதலுடனும் முடியும்.

(எ.டு) காதலொடிந்து விழுந்தான்

கண் வருவான் கதிரவனைக் கை தொழுதான்

ஒடிதல், வருதல் – சினை வினை

விழுதல், தொழுதல் – முதல் வினை

“சினைவினை சினையொடும் முதலொடும் செறியும்” நூற்பா 345

இவ் வினையெச்ச வாய்பாடுகள் வேறு வாய்பாடுகளாக மாறி வந்தாலும் அவற்றின் பொருள்கள் வேறுபடாது.

சொல்திரி யினும்பொருள் திரியா வினைக்குறை. நூற்பா 346

(எ.டு) 1. ஞாயிறு பட்டு வந்தான் என்பதில் ‘பட’ என்னும் செயவென் வாய்பாட்டு வினையெச்சம் பட்டெனத் திரிந்து நின்றது.

2. மழை பெய்து நெல் விளைந்தது – இதில் பெய்ய என்னும் காரணப் பொருட்டாகிய செய என்னும் வாய்பாட்டு இறந்த கால வினையெச்சம் ‘பெய்து’ எனத் திரிந்து நின்றது.

3. யான் கொள்வான் பொன் கொடுத்தான் – இதில் கொள என்னும் செயவென் வாய்பாட்டு வினையெச்சம் கொள்வானெனத் திரிந்து நின்றது.

பெயரெச்சம், வினையெச்சம் பற்றிய செய்திகளைப் பார்த்தோம். இனி, ஒழிபு என்னும் பகுதியில் பவணந்தியார் கூறும் செய்திகளைப் பார்ப்போம்.

3.2.2.5 ஒழிபு

வினைக்குறிப்பு

ஆக்கத்தால் வரும் வினைக் குறிப்புச் சொற்கள் விரிந்தாயினும் தொக்காயினும் வரும் ஆக்கச் சொல்லின்றி வராது.

ஆக்க வினைக்குறிப்பு ஆக்கம் இன்று இயலா. நூற்பா 347

(எ.டு) சாத்தன் நல்லன் ஆயினான் – சாத்தன் நல்லன்

கல்வியாற் பெரியனாயினான் – கல்வியால் பெரியன்

கற்று வல்லவன் ஆயினான் – கற்று வல்லவன்

என்று ஆக்கச் சொல் விரிந்தும் தொக்கும் வந்தன.

செய்யுமென் முற்று

செய்யுமென்னும் வாய்பாட்டு வினைமுற்றானது உயர்திணைப் பன்மைப் படர்க்கைப் பலர்பாலிலும் முன்னிலை, தன்மையிலும் வராது.

பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையிற்

செல்லா தாகும் செய்யும்என் முற்றே. நூற்பா 348

இந்நூற்பாவின் வழி, படர்க்கைப் பலர்பால் ஒழிந்த பிற ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்னும் நான்கு பால்களிலும் வரும்.

(எ.டு) அவன் உண்ணும், அவள் உண்ணும், அது உண்ணும், அவை உண்ணும்.

பால் பொதுவினை

யாரென்னும் வினாப் பொருளைத் தரும் குறிப்பு வினைமுற்று உயர்திணைப் படர்க்கை மூன்று பால்களுக்கும் பொதுவாகும்.

“யாரென் வினாவினைக் குறிப்புயர் முப்பால்” நூற்பா 349

(எ.டு) அவன் யார், அவள் யார், அவர் யார்

எவன் என்னும் வினாப் பொருளைத் தரும் குறிப்பு வினைமுற்று இரு பாலுக்கும் பொதுவினையாகும்.

எவனென் வினாவினைக் குறிப்பிழி யிருபால். நூற்பா 350

(எ.டு) அஃது எவன், அவை எவன்.

எவனென்பது என், என்ன, என்னை என விகாரப்பட்டு வருதலும் உண்டு.

இருவகை முற்றிற்கும் ஒரு புறனடை

தெரிநிலை வினைமுற்று எச்சமாகி வருதலும், குறிப்புவினைமுற்று வினையெச்சமாகியும் பெயரெச்சமாகியும் வருதலும் உண்டு.

வினைமுற்றே வினையெச்ச மாகலும்

குறிப்புமுற்று எச்சம் ஆகலும் உளவே. நூற்பா 351

(எ.டு)

1. கண்டனன் வணங்கினான்

முகந்தனர் கொடுத்தனர் – இங்கு கண்டு, முகந்து எனப் பொருள்படுதலால் வினைமுற்று வினையெச்சமாகும்.

2. அவன் வில்லினன் வந்தான் – வில்லையுடையவனாக எனப் பொருள்படுதலால் குறிப்பு முற்று வினையெச்சமாகும்.

3. குழையினன் கொற்றன் வந்தான் – குழையையுடைய கொற்றன் வந்தான் எனப் பொருள்படுதலால் குறிப்பு முற்று பெயரெச்சமாகும்.

தன்மதிப்பீட்டு வினாக்கள்

I.

1. ‘ஆறும் தருவது வினையே’ – நூற்பா உணர்த்தும் செய்தியினைக் குறிப்பிடுக.

2. வினைச்சொல் வேற்றுமை ஏற்கும். சரியா? தவறா?

3. பெண்பால் படர்க்கை வினைமுற்று விகுதிகள் ..............

4. அர், ஆர் – எவ்வகை , எப்பால் வினைமுற்று விகுதிகள்?

5. பெயரைக் கொண்டு முடியும் எச்சத்தின் பெயர்?

6. செய்த, செய்கின்ற, செய்யும் என்னும் வாய்பாடுகள் எவ்வகை எச்சத்திற்கு உரியவை?

7. செய்து, செய்பு, செய்யா, செய்யூ முதலிய வாய்பாடுகள் எவ்வகை எச்சத்திற்கு உரியவை?

தொகுப்புரை

வினைச்சொல்லின் பொது இலக்கணமும் இவ்வினைச் சொல்லின் வகைப்பாடான வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் பற்றிய செய்திகளையும் அறிய முடிந்தது.

வினைமுற்று என்னும் பகுதியின் மூலம் ஐம்பால் படர்க்கை வினைமுற்று பற்றிய செய்திகளும், தன்மை, முன்னிலை ஆகிய இடங்களில் ஒருமை, பன்மை பற்றிய செய்திகளும் ஒருசேர அறிய முடிந்தது. மேலும் வியங்கோள் வினைமுற்று விகுதி பற்றிய செய்திகளையும் அறிந்து கொண்டோம்.

பெயரெச்சம் பற்றிய வரையறையும், பெயரெச்ச வாய்பாடுகளையும், செய்யுமென் எச்சத்திற்கு எய்தியதன் மேல் சிறப்பு விதியினைப் பவணந்தியார் கூறியுள்ளமையையும், வினையெச்சம் பற்றியும், அவ்வினையெச்சத்தின் வாய்பாடுகளையும், வினையெச்சங்களுக்கு முடிபு வேறுபாட்டினையும் அறிய முடிந்தது.

'ஒழிபு' என்னும் இறுதிப்பகுதியில் வினைக்குறிப்பு, செய்யுமென் முற்று, பாற் பொதுவினை, இருவகை முற்றிற்கும் புறனடை ஆகியவையும் அறிய முடிந்தது.

பயிற்சி வினாக்கள்

சிறு வினாக்கள்

1. 'ஆறும் தருவது வினையே' – அவை யாவை?

2. வினை கொண்டு முடியும் முற்றுக்கள் எவை?  ஒன்றற்கு உதாரணம் தருக.

3. வியங்கோள் வினைமுற்று விகுதிகள் யாவை?

4. பெயரெச்சம் என்பதனை வரையறுக்க.

5. வினையெச்சம் என்றால் என்ன?

6. இருதிணைக்கும் பொது வினைகள் யாவை?

குறு வினாக்கள்

1. வினைகள் ஒன்றற்குரியவும் பொதுவுமாகும் – உதாரணங்களுடன் விளக்குக.

2. முற்று வினைப்பதம் ஒன்றே மூவொன்பானாம் – மூவொன்பானாதல் யாங்ஙனம்?

3. முற்றெச்சம் பற்றிய நூற்பாவை எழுதி, விளக்குக.

பெரு வினாக்கள்

1. பெயரெச்சம், வினையெச்சம் ஆகியவற்றை வரையறுத்து, எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

2. வினைமுற்று குறித்து பவணந்தியார் கூறும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

தன்மதிப்பீட்டு விடைகள்

I.

1. செய்பவன், கருவி, நிலம், செயல், காலம்.

2. தவறு.

3. அள், ஆள்.

4. பலர்பால் படர்க்கை வினைமுற்று விகுதிகள்.

5. பெயரெச்சம்

6. பெயரெச்சம்

7. வினையெச்சம்

3.2.3 பொதுவியல்

3.2.3.1 பால் பொதுமை நீங்கும் நெறிமுதல் எச்சங்களின் முடிபு வரை – நூற்பா 352 முதல் 360 வரை.

3.2.3.2 தொகைநிலைத் தொடர்மொழியும் தொகாநிலைத் தொடர்மொழியும் – நூற்பா 361 முதல் 374 வரை.

3.2.3.3 வழு விகற்பங்களும் வழுவமைதிகளும் – நூற்பா 375 முதல் 410 வரை.

3.2.3.4 பொருள்கோள் – நூற்பா 411 முதல் 419 வரை.

நன்னூல் சொல்லதிகாரத்தின் மூன்றாவது இயல் பொதுவியலாகும். இது முன்வந்த பெயருக்கும் வினைக்கும் பின்வரும் இடைக்கும் உரிக்கும் பொது இலக்கணங்களைச் சிங்கநோக்காக அறிவிக்கும் பொருட்டு இடையில் வைக்கப்பட்டது. இவ்வியலின்கண் 68 நூற்பாக்கள் இடம் பெற்றுள்ளன.

3.2.3.1 பால் பொதுமை நீங்கும் நெறி (நூ. 352)

ஆண்பால், பெண்பால்களுக்குப் பொதுமையாகிய இருதிணைப் பெயர்ச்சொற்களும் வினைச் சொற்களும் அவ்விரு பால்களுள் ஒருபாலைக் குறிப்பினால் நீக்கும்.

உயர்திணை

(எ.டு) ஆயிரம் மக்கள் போர் செய்தனர்

இதில் மக்கள் என்னும் பால் பொதுப்பெயர், போர் செய்தனர் என்னும் குறிப்பால் பெண்பாலைத் தவிர்த்து ஆண்பாலை மட்டும் குறித்தது.

"பெருந்தேவி பொறை உயிர்த்த கட்டிற்கீழ் நால்வர் மக்கள் உளர்."

இதில் மக்கள் என்னும் பால் பொதுப்பெயரும், உளர் என்னும் பொதுவினைக் குறிப்பும் பொறை உயிர்த்தல் என்னும் குறிப்பினால் ஆண்பாலைத் தவிர்த்து பெண்பாலை மட்டும் குறித்தது.

அஃறிணை

"இப்பெற்றங்கள் உழவு ஒழிந்தன."

இதில் பெற்றங்கள் என்னும் பொதுப்பெயர் உழவு என்ற குறிப்பால் அஃறிணையில் பெண்பாலைத் தவிர்த்து, காளை மாடுகளை மட்டுமே குறித்தன.

"இப்பெற்றங்கள் பால் சொரிந்தன."

இதில் பெற்றங்கள் என்னும் பெயர் பால் சொரிந்தன என்ற குறிப்பால் அஃறிணையில் ஆண்பாலைத் தவிர்த்து பசுமாடுகளை மட்டுமே உணர்த்தின.

பெயர் வினையிடத்து ஈற்றயல் திரிதல்

செய்யுளில் பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகியவற்றிலும் ன், ள், ர், ய் என்னும் ஈற்றிற்கு அருகிலுள்ள ஆகாரம் ஓகாரமாகத் திரிதல் உண்டு.

பெயர்வினை யிடத்து னரளய ஈற்றயல்

ஆஓ வாகலும் செய்யுளுள் உரித்தே. நூற்பா 353

(எ.டு) வில்லான் – "வில்லோன் காலன கழலே" – ன்

தொடியாள் – "தொடியோள் மெல்லடி மேலன சிலம்பே" – ள்

நல்லார் – "நல்லோர் யார் கொல" – ர்

கொடுத்தாய் – "வரையாது கொடுத்தோய்" – ய்

இவ்வாறு பெயரிடத்து ஆகாரம் ஓகாரமாய்த் திரிந்தது.

படைத்தான் – "படைத்தோன் மன்றவப் பண்பிலாளன்"

நல்லாள் – "நல்லோள் மன்ற கூப்பெயர்த் தோளே"

சென்றார் – "சென்றோர் அன்பிலார் தோழி"

வந்தாய் – "வந்தோய் மன்ற தென்கடல் சேர்ப்ப"

இவை வினையிடத்து ஆகாரம் ஓகாரமாகத் திரிந்தது.

மேற்கூறிய நூற்பாவில் 'ஆ ஓ வாகலும்' என்ற உம்மையை ஆக்க உம்மையாகக் கொண்டு "பழமுதிர்ச்சோலை மலைகிழவோனே" எனச் சிலவிடங்களில் அகரம் ஓகாரமாகக் கொள்ளுதல் வேண்டும்.

உருபும் வினையீறும் எதிர்மறையிலும் திரியாமை

எட்டு வேற்றுமை உருபுகளும் வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம் என்னும் மூவகை வினைச்சொற் களும் எதிர்மறுத்துச் சொல்லுமிடத்தில் தத்தம் ஈற்றினின்றும், அவ்வவ் உருபினின்றும் வேறுபடா என்று சொல்லுவர்.

உருபும் வினையும் எதிர்மறுத் துரைப்பினும்

திரியா தத்தம் ஈற்றுருபின் என்ப. நூற்பா 354

1. உருபு எதிர்மறுத்தல்

(எ.டு) கொற்றன் வாரான், குடத்தை வனையான், வாளால் எறியான், புல்லர்க்குக் கொடான், நிலையின் நீங்கான், பொருளினது இன்மை, தீயர்கண் சேரான், கொற்றா பேசேல்.

2. வினை எதிர்மறுத்தல்

நடவான், நடவாத, நடவாது.

ஓடாக் குதிரை – இதில் ஓடாத என்னும் பெயரெச்சம் ஈறு கெட்டது.

மேலும், உரையிற் கோடல் என்னும் உத்தியால் செய, செய்யாமல், செய்யாமே, செய்யாமை என வரும் வினையெச்சமும், நடத்தல், நடவாமை என்னும் தொழிற்பெயரும், உண்ணாய், உண்ணேல், உண்ணாதே என ஒருமை ஏவலும், ஈறு திரிந்தும் வருமெனக் கொள்ளுதல் வேண்டும்.

உருபும் வினையும் அடுக்கி முடிதல்

வேற்றுமை உருபுகள் மறைந்தோ, வெளிப்படையாகவோ அடுக்கி வந்தாலும், வினைமுற்று வினையெச்சம், பெயரெச்சம் ஆகியவை அடுக்கி வந்தாலும் தத்தம் எச்சத்தை இறுதியில் கொண்டு முடியும்.

உருபுபல அடுக்கினும் வினைவேறு அடுக்கினும்

ஒருதம் எச்சம் ஈறுற முடியும். நூற்பா 355

(எ–டு) "சேரன் பகைவனை வாளால் வெட்டினான்."

இதில் உருபுகள் விரிந்து தம்முள் விரவிப் பல அடுக்கி வெட்டினான் என்னும் ஒருவினை கொண்டது. வாள் கைக் கொண்டான் – ஐ, ஆல் என்னும் வேற்றுமை உருபுகள் தொக்கு வந்தன.

"சாத்தனையும் கொற்றனையும் வாழ்த்தினான்; சாத்தனுக்கும் கொற்றனுக்கும் தந்தை."

இதில் 'ஐ' உருபும் 'கு' உருபும் திரிந்து, வேறு பல அடுக்கி வாழ்த்தினான் என்னும் ஒரு வினையும், தந்தை என்னும் ஒரு பெயரும் முறையே கொண்டன.

அருளறம் உடையான் – உருபு தொக்கு அவ்வாறு வந்தன.

ஆடினான் பாடினான் சாத்தன்; இளையள் மெல்லியள் மடந்தை – வினை முற்றும் குறிப்பு முற்றும், வேறுபல அடுக்கிச் சாத்தன், மடந்தை என்னும் ஒரு பெயர் முறையே கொண்டன.

"கற்ற கேட்ட பெரியோர், நெடிய பெரிய மனிதன்."

ஈண்டு தெரிநிலை வினைப் பெயரெச்சமும், குறிப்பு வினைப் பெயரெச்சமும் வேறுபல அடுக்கிப் பெரியோர், மனிதன் என்னும் ஒரு பெயர் முறையே கொண்டன.

கற்று கேட்டறிந்தார், விருப்பின்றி வெறுப்பின்றி இருந்தார் – தெரிநிலை வினையெச்சமும், குறிப்பு வினையெச்சமும், வேறுபல அடுக்கி, அறிந்தார், இருந்தார் என்னும் ஒரு வினை முறையே கொண்டன.

இடைப்பிறல் வரல்

உருபு முற்றுஈ ரெச்சங் கொள்ளும்

பெயர்வினை இடைப்பிற வரலுமாம் ஏற்பன. நூற்பா 356

வேற்றுமை உருபுகள், வினைமுற்றுகள், பெயரெச்சங்கள், வினையெச்சங்கள் ஆகியவை கொண்டு முடியும் பெயருக்கும் வினைக்கும் இடையே அவ்விடங்கட்குப் பொருத்தமான பிற சொற்கள் வருதலும் உண்டு. அவ்வாறு வருதலை இடைப்பிறவரல் என்று கூறுவர்.

1. வேற்றுமை உருபு

(எ.டு) கொற்றன் (வயிறார) உண்டான்

அறத்தை (அழகுபெறச்) செய்தான்

வாளால் (மாய) வெட்டினான்

தேவர்க்குச் (செல்வம் வேண்டிச) சிறப்பெடுத்தான்

மலையினின்று (உருண்டு வீழ்ந்தான்)

கொற்றனது (இத்தடக்கை) யானை

ஊர்க்கண் (உயர்ந்தவொளி) மாடம்

கொற்றா (விரைந்து ஓடி) வா

2. வினைமுற்று

(எ.டு) வந்தான் (அவ்வூர்க்குப் போன) கொற்றன்.

3. பெயரெச்சம்

(எ.டு) வந்த (வண்டமிழ்) மன்னன்

4. வினையெச்சம்

(எ.டு) வந்து (கொற்றன் அவ்வூர்க்குப்) போயினான்.

முடிக்கும் சொல் நிற்குமிடம்

உருபுகளும், வினைமுற்றுகளும், பெயரெச்சங்களும், வினையெச்சங்களும் ஆகிய இவை கொண்டு முடிகின்ற எச்சமாகிய பெயரும் வினையும் அவற்றிற்கு ஈற்றிலும் வரும்.

“எச்சப் பெயர்வினை எய்தும் ஈற்றினும்.” நூற்பா 357

இங்கு ஈற்றினும் என்ற உம்மையால் முதலினும் வருதல் என்பதைக் கொள்ளலாம்.

| (எ.டு) | ஈறு | முதல் |
|---|---|---|
| | கொற்றன் வந்தான் | வந்தான் கொற்றன் |
| | மரத்தைக் குறைத்தான் | குறைத்தான் மரத்தை |
| | கொற்றனால் வந்தான் | வந்தான் கொற்றனால் |
| | கொற்றனுக்குக் கொடுத்தான் | கொடுத்தான் கொற்றனுக்கு |
| | கொற்றனின் நீங்கினான் | நீங்கினான் கொற்றன் |
| | கொற்றன தாடை | ----- |
| | கொற்றன்கட் சென்றான் | சென்றான் கொற்றன்கண் |
| | கொற்றா வா | வா கொற்றா |

உருபுகளின் எச்சங்கள் ஈரிடத்தும் வந்தன.

| | | |
|---|---|---|
| | வந்தான் கொற்றன் | கொற்றன் வந்தான் |
| | வந்த கொற்றன் | ----- |
| | வந்து போயினான் | போயினான் வந்து |

முற்று, எச்சம் இவைகளின் எச்சங்கள் ஈரிடத்தும் வந்தன.

இனம் குறித்தல்

ஒரு சொல் தன்னை உணர்த்துவதுடன் சொல்லாமல் விடப்பட்ட தனக்கு இனமான பிறவற்றையும் உணர்த்துதல் உண்டு. இதை இனம் குறித்தல் என்று கூறுவர்.

“ஒருமொழி ஒழி தன்இனம் கொளற்கு உரித்தே.” நூற்பா 358

(எ.டு) சோறு உண்டான் – இது சோற்றுக்கு இனமான குழம்பு, கூட்டு, பொரியல் முதலியவற்றையும் சேர்த்துக் குறிக்கும்.

பொதுப்பெயர், பொதுவினை – பொதுமை நீங்குதல்

திணை, பால், இடம், காலங்களுக்குப் பொதுவான பெயர்களுக்கும் வினைகளுக்கும் பின்னால் வரும் சிறப்புப் பெயர் அல்லது சிறப்பு வினை அதை ஒரு திணைக்கு அல்லது ஒரு பாலுக்கு அல்லது ஓர் இடத்திற்கு அல்லது ஒரு காலத்துக்கு உரியதாக ஆக்குவதாகும்.

“பொதுப்பெயர் வினைகளின் பொதுமை நீக்கும்

மேல்வரும் சிறப்புப் பெயர் வினை தாமே.” நூற்பா 359

(எ.டு) கொற்றன் வந்தான் – உயர்திணை

கொற்றன் வந்தது – அஃறிணை

ஒருவன் என் தந்தை – ஆண்பால்

ஒருவர் என் தாய் – பெண்பால்

வாழ்க அவர் – பலர்பால்

மரம் வளர்ந்தது – ஒன்றன்பால்

மரம் வளர்ந்தன – பலவின்பால்

நாம் – எல்லாம் – தன்மை

நீவிர் எல்லாம் – முன்னிலை

அவர்கள் எல்லாம் – படர்க்கை

நான் வாழ்க – தன்மை ஒருமை

நாம் வாழ்க – தன்மைப் பன்மை

நீ வாழ்க – முன்னிலை ஒருமை

நீர் வாழ்க – முன்னிலைப் பன்மை

உண்டு வந்தான் – இறந்தகாலம்

உண்டு வருகிறான் – நிகழ்காலம்

உண்டு வருவான் – எதிர்காலம்

எச்சங்களின் முடிபு

பெயரெச்சம், வினையெச்சம், உம்மையெச்சம், சொல்லெச்சம், பிரிநிலை எச்சம், எனவெச்சம், ஒழியிசை எச்சம், எதிர்மறை எச்சம், இசை எச்சம் என்னும் ஒன்பது சொல்லெச்சங்களும் குறிப்பெச்சம் ஒன்றும் ஆகப் பத்து எச்சங்களும் தத்தம் எச்சங்களைக் கொண்டு முடியும்.

பெயர்வினை உம்மைசொல் பிரிப்புஎன ஒழியிசை

எதிர்மறை இசையெனும் சொல்ஒழிபு ஒன்பதும்

குறிப்பும் தத்தம் எச்சம் கொள்ளும். நூற்பா 360

இந்நூற்பாவால் எச்சங்கள் சொல்லெச்சம், குறிப்பெச்சம் என இரு வகைப்படும் என்பது பெறப்பட்டது.

மேற்குறிப்பிட்ட பத்து எச்சங்களுள்ளும், பெயரெச்சம், வினையெச்சம், எனவெச்சம் என்னும் மூன்றிற்கும் எச்சச் சொற்கள் வாக்கியங்களில் வெளிப்பட்டு நிற்கும். ஏனைய எச்சங்களில் எச்சச் சொற்கள் வருவித்து உரைக்கப்படும்.

1. பெயரெச்சம்

(எ.டு) செய்த கொற்றன், நல்ல கொற்றன்

இப் பெயரெச்சங்கள் தம் எச்சமாகிய செய்பவனது பெயரைக் கொண்டு முடிந்தன.

2. வினையெச்சம்

(எ.டு) செய்து வந்தான், செய்து நல்லனாயினான்

இவ்வினை எச்சங்கள் தம் எச்சமாகிய வினைமுற்றும் குறிப்புமுற்றும் கொண்டன.

3. உம்மை எச்சம்

(எ.டு) கொற்றனும் வந்தான்

இவ் உம்மை எச்சம், முன்னே சாத்தன் வந்தான் எனத் தன்னெச்சம் கொண்டது.

4. சொல்லெச்சம்

(எ.டு) நல்லவன் என்றான்

இச்சொல்லெச்சம் நல்லவன் என்று சொன்னான் எனச் சொல்லென்னும் தன்னெச்சம் கொண்டது.

5. பிரிநிலை எச்சம்

(எ.டு) கொற்றனே கொண்டான், கொற்றனோ கொண்டான்

இப் பிரிநிலை எச்சம், பிறர் கொண்டிலர் எனத் தம் எச்சம் கொண்டன.

6. எனவெச்சம்

(எ.டு) கடல் ஒல்லென ஒலித்தது, நரம்பு விண்ணென விசைத்தது

இவை தம்மெச்சமாகிய வினை கொண்டன, மிகவும் ஒலித்தது, மிகவும் இசைத்தது என்பன இவற்றின் பொருளாதலின், இவ்வெனவெச்சம் மிகுதிப் பொருளைத் தருவதோர் இடைச் சொல்லாகும்.

7. ஒழியிசை எச்சம்

(எ.டு) படிப்பதற்கோ வந்தான்

இவன் படிக்க வரவில்லை, விளையாட வந்தான் என்னும் பொருளைத் தந்ததால் ஒழியிசை எச்சமாகும்.

8. எதிர்மறை எச்சம்

(எ.டு) யானோ அரசன்

நான் அரசன் இல்லை என்னும் பொருளைத் தருதலால் எதிர்மறை எச்சமாகும்.

9. இசையெச்சம்

இசையெச்சம் என்பது சொற்றொடர்களில் அவ்வவ்விடத்திற்கேற்ப ஒரு சொல்லும் பல சொற்களும் வருவித்துரைப்பதாகும். (இசை – சொல்.)

(எ.டு) படித்தால் மட்டும் போதுமா?

இங்கே 'நூலை' என்னும் சொல்லை முதலில் சேர்த்து, நூலைப் படித்தால் மட்டும் போதுமா என்று சொல்ல வேண்டுவதால் இசையெச்சமாகும்.

10. குறிப்பெச்சம்.

(எ.டு) "ஆயிரம் மக்கள் பொருதார்"

இது பொருதார் என்னும் குறிப்பால் ஆயிரம் மக்களையும் ஆண்களாகக் குறிப்பால் உணர்த்துவதால் குறிப்பெச்சம் ஆகும்.

3.2.3.2 தொகைநிலைத் தொடர்மொழியும் தொகாநிலைத் தொடர்மொழியும்

தொகைநிலைத் தொடர்மொழி

பெயர்ச்சொல்லோடு பெயர்ச்சொல்லும் பெயர்ச் சொல்லோடு வினைச்சொல்லும் வேற்றுமை முதலான அறுவகைப் பொருளில் புணருமிடத்து, அவற்றின் உருபுகள் நடுவிலே தொக்கு நிற்ப, இரு சொற்கள் அல்லது பல சொற்கள் தொடர்ந்து ஒரு சொல் போல் வருபவை தொகைநிலைத் தொடர்மொழிகளாகும்.

பெயரொடு பெயரும் வினையும் வேற்றுமை

முதலிய பொருளி னவற்றி னுருபிடை

ஒழிய விரண்டு முதலாத் தொடர்ந்தொரு

மொழிபோ னடப்பன தொகைநிலைத் தொடர்ச்சொல். நூற்பா 361

அறுவகைத் தொகைகள்

தொகைநிலைத் தொடர்மொழியை அறுவகையாகக் கூறுவர். அவை, வேற்றுமைத் தொகை, வினைத்தொகை, பண்புத் தொகை, உவமைத் தொகை, உம்மைத் தொகை, அன்மொழித் தொகை என்பனவாகும்.

வேற்றுமை வினைபண்பு உவமை உம்மை

அன்மொழி யெனவத் தொகையா றாகும். நூற்பா 362

வேற்றுமைத் தொகை

எழுவாய்க்கும் விளிக்கும் இடையே நின்ற இரண்டாவது முதலிய ஆறு வேற்றுமை உருபுகளும் தொக்க தொடர்மொழிகள் வேற்றுமைத் தொகைகளாகும்.

(எ.டு) நிலங் கடந்தான் – (ஐ) இரண்டாம் வேற்றுமைத்தொகை

தலை வணங்கினான் – (ஆல்) மூன்றாம் வேற்றுமைத்தொகை

கொற்றன் மைந்தன் – (கு) நான்காம் வேற்றுமைத்தொகை

ஊர் நீங்கினான் – (இன்) ஐந்தாம் வேற்றுமைத்தொகை

கொற்றன் கை – (அது) ஆறாம் வேற்றுமைத்தொகை

குன்றக்கூகை – (கண்) ஏழாம் வேற்றுமைத்தொகை

இரண்டு முதலா இடைஆறு உருபும்

வெளிப்படல் இல்லது வேற்றுமைத் தொகையே. நூற்பா 363

இந்நூற்பாவில் ஆறுருபும் என்னும் முற்றும்மையை எச்சவும்மையாக்கிப் பொற்குடம் என ஒரோவிடத்து உருபும் பொருளும் உடன் தொக்கனவும் வேற்றுமைத் தொகையாகக் கொள்ளுதல் வேண்டும்.

வினைத்தொகை

காலம் காட்டும் வினையுருபுகளான இடைநிலை, விகுதி முதலான மறைந்து நின்ற பெயரெச்சங்கள் வினைத் தொகைகளாகும்.

காலங் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை. நூற்பா 364

(எ.டு) கொல்யானை, விடுகணை, பாய்புலி முதலியன.

ஈண்டு, கொன்ற, விட்ட, பாய்ந்த முதலிய பெயரெச்சங்களின் இடைநிலைகளும் விகுதிகளும் கெட்டு கொல், விடு, பாய் என்னும் பகுதிகளாகிப் பெயர்களோடு தொக்கி வந்தன.

பண்புத் தொகை

பண்புக்கும் பண்பிக்கும் உள்ள ஒற்றுமை நயத்தை விளக்குவதற்காக வரும் 'ஆகிய' என்னும் பண்புருபு தொக்கு நிற்பனவும் பொதுப்பெயரும் சிறப்புப் பெயரும் இணைந்து நிற்க அவற்றிடையே அவ்வுருபு தொக்கு வருவனவும் பண்புத் தொகைகள் ஆகும்.

பண்பை விளக்கும் மொழிதொக் கனவும்

ஒருபொருட்கு இருபெயர் வந்தவுங் குணத்தொகை. நூற்பா 365

இங்கு பண்பு எனப் பொதுப்படக் கூறியதால் வண்ணம், வடிவு, அளவு, சுவை என்னும் அடிப்படையில் அமைபவற்றைக் கொள்ளுதல் வேண்டும்.

செந்தாமரை, கருங்குதிரை – வண்ணம்

வட்டக்கல், சதுரப்பலகை – வடிவம்

ஒருபொருள், முக்குணம் – அளவு

துவர்க்காய், இன்சொல் – சுவை

ஆயன் சாத்தன், சாரைப்பாம்பு – இருபெயரொட்டுப் பண்புத்தொகை

செந்நிறக் குவளை – பன்மொழித்தொகை

மேற்கூறிய சொற்கள் விரியுமிடத்து, செம்மையாகிய தாமரை, வட்டமாகிய கல், ஒன்றாகிய பொருள், துவர்ப்பாகிய காய், ஆயனாகிய சாத்தன், செம்மையாகிய நிறமாகிய குவளை என்றவாறு விரியும். மற்றவற்றையும் அவ்வாறே கொள்ளுதல் வேண்டும்.

உவமைத்தொகை

ஒரு பொருளைக் கூறுவதற்கு அதனோடு ஒத்த வேறொரு பொருளோடு சேர்த்துக் கூறின் அப்பொருளுக்குச் சிறப்பு ஏற்படும். அச் சிறப்புப் பொருள் தெளிவாக அமைவதற்காகத் தொடர்புடைய பொருளை உவமையாகக் காட்டுவர். அங்ஙனம் விளக்கும் போது போல முதலிய உவம உருபுகள் மறைந்து நின்று பொருளை விளக்கும் தொடர் உவமைத் தொகையாகும்.

"உவமை வுருபில துவமத் தொகையே" நூற்பா 366

இவ்வுவம உருபு வினை, பயன், மெய், உரு என்பனவற்றைப் பொருளாகக் கொண்டு வரும்.

புலிக்கொற்றன், குருவி கூப்பிட்டான் – வினையுவமத்தொகை

மழைக்கை, கற்பகவள்ளல் – பயனுவமத் தொகை

துடியிடை, வேய்த்தோள் – மெய்யுவமத்தொகை

கார்கூந்தல், பவளவாய் – உருவுவமத்தொகை

இவை விரிகையில் புலி போலும்கொற்றன், மழை போலும் கை, துடி போலும் இடை, கார் போலும் கூந்தல் என அமையும். பிற எடுத்துக்காட்டுகளையும் அவ்வாறே கொள்ளுதல் வேண்டும்.

உவம உருபுகள்

உவமைத் தொகையின் இலக்கணத்தைக் கூறிய பவணந்தியார் பின்னர் உவம உருபுகளை நூற்பா 367இல் பட்டியலிடுகிறார். அவை, போல, புரைய, ஒப்ப, உறழ, மான, கடுப்ப, இடைய, ஏய்ப்ப, நேர, நிகர என்னும் செயவென் எச்சமொழிகள் பத்தும், அன்ன, இன்ன என்னும் குறிப்புப் பெயரெச்சம் இரண்டும் இவை போல்வனவும் உவம உருபுகளாகும் என்று பட்டியலிடுகிறார்.

உம்மைத்தொகை

உம்மைத்தொகை என்பது எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் நால்வகை அளவைப் பெயர்களுள் உம் என்னும் இடைச்சொல் தொக்கு வருபவை உம்மைத் தொகைகளாகும்.

எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல்

எனும்நான்கு அளவையுள் உம்மிலது அத்தொகை. நூற்பா 368

(எ.டு) ஒன்றேகால், கபிலபரணர் – எண்ணல்

கழஞ்சே கால், தொடியே கஃக – எடுத்தல்

கலனே தூணி, நாழி யாழாக்கு – முகத்தல்

சாணங்குலம், சாணரை – நீட்டல்

சேர சோழ பாண்டியர், புலிவிற் கெண்டை – பன்மொழித்தொகை

இவை விரியுமிடத்து, ஒன்றும் காலும், கழஞ்சும் காலும், கலனும் தூணியும், சாணும் அங்குலமும், சேரனும் சோழனும் பாண்டியனும் என்றவாறு விரியும். பிறவற்றையும் அவ்வாறே கொள்ளுதல் வேண்டும்.

அன்மொழித்தொகை

வேற்றுமைத்தொகை முதலிய ஐந்து தொகைநிலைத் தொடர்மொழிகளுக்குமேல் மற்றும் ஓரிரு சொற்கள் தொக்கு வருவது அன்மொழித் தொகையாகும்.

“ஐந்தொகை மொழிமேல் பிறதொகல் அன்மொழி.” நூற்பா 369

இவ் அன்மொழித்தொகை ஐந்து தொகைநிலைத் தொடர்களிலும் வரும்.

வேற்றுமைத் தொகை

1. பூங்குழல் – இரண்டாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை – இது பூவையுடைய குழலினை உடையவள் என விரியும்.

2. பொற்றொடி – மூன்றாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை – இது பொன்னாலாகிய தொடியினை உடையவள் என விரியும்.

3. சொல்லிலக்கணம் – நான்காம் வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை – சொல்லுக்கு இலக்கணம் சொல்லப்பட்ட நூல் என விரியும்.

4. பொற்றாலி – ஐந்தாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை – இது பொன்னால் ஆகிய தாலியினை உடையாள் என விரியும்.

5. கிள்ளிகுடி – ஆறாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை – இது கிளியினது குடியிருக்கும் ஊர் என விரியும்.

6. கீழ்வயிற்றுக் கழலை – ஏழாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை – கீழ்வயிற்றின் கண் எழுந்த கழலைப் போல்வான் என விரியும்.

வினைத்தொகை

தாழ்குழல் – வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை – இது தாழ்ந்த குழலினை உடையாள் என விரியும்.

பண்புத்தொகை

கருங்குழல் – பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை – இது கருமையாகிய குழலினை உடையவள் என விரியும்.

உவமைத்தொகை

துடியிடை – உவமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை – இது துடிபோலும் இடையினை உடையவள் என விரியும்.

உம்மைத்தொகை

தகர ஞாழல் – உம்மைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை – தகரமும் ஞாழலும் கலந்து உண்டாகிய சாந்து என விரியும்.

தொகைநிலைத் தொடர்மொழிகளில் பொருள் சிறந்து நிற்கும் இடங்கள்

முன்மொழி, பின்மொழி, பன்மொழி, அனைத்து மொழிக்கும் புறத்தில் வரும் மொழி ஆகிய நான்கு இடங்களுள் ஒன்றில் தொகைநிலைத் தொடர்ப் பொருள் சிறந்து விளங்கும்.

(எ.டு) 1. குடம் வனைந்தான், வேங்கைப்பூ, செந்தாமரை – இங்குக் குடம் முதலிய முன்மொழிகள் இனம் விலக்கி நிற்றலில், அம் முன்மொழிகளில் பொருள் சிறப்புற்றன.

2. நிலம் உழுதான், நீர்க்குவளை, செஞ்ஞாயிறு – இங்கு நிலம் முதலிய முன்மொழிகள் இனமும் இனத்தை விலக்குதலும் இன்றி நிற்றலால் உழுதான் முதலிய பின்மொழிகள் பொருள் சிறந்தன.

3. கபில பரணர், சேர சோழ பாண்டியர் – அனைத்து மொழிகளிலும் பொருள் சிறந்து நின்றன.

4. பூங்குழலி – இது அன்மொழித்தொகையில் இச் சொல்லுக்குப் புறத்தே நிற்கும் ‘பெண்’ என்னும் சொல்லில் பொருள் சிறந்து விளங்கியது.

“முன்மொழி பின்மொழி பன்மொழி புறமொழி

எனும்நான்கு இடத்துச் சிறக்குத் தொகைப்பொருள். நூற்பா 370

இடத்தொகை பெயர்த்தொகைகட்கு வேறுபாடு அறியும் முறை

தொகைநிலைத் தொடர்களின் இடையே வல்லின ஒற்று வரின் அது இடத்தின்கண் தொக்க தொகையாகும்.

(எ.டு) வடுகக் கண்ணன் – இது வடுக நாட்டில் பிறந்த கண்ணன் என விரியும்.

தொகைநிலைத் தொடர்களின் இடையே மெல்லொற்று வந்தால் அது பெயரின்கண் தொக்க தொகையாகும்.

(எ.டு) வடுகங்கண்ணன் – இது வடுகனாகிய கண்ணன் என்றோ, வடுகனுக்கு மகனாகிய கண்ணன் என்றோ விரியும்.

வல்லொற்று வரினே யிடத்தொகை யாகும்

மெல்லொற்று வரினே பெயர்த்தொகை யாகும். (நூற்பா 371)

உம்மைத் தொகைக்குப் புறனடை

உயர்திணையில் ஒருமை குறித்து வரும் உம்மைத் தொகைகள் ரகரவொற்று, கள் என்னும் பலர்பால் விகுதிகளைப் பெற்று வரும்.

“உயர்திணை உம்மைத் தொகை பலர் ஈற்றே.” நூற்பா 372

(எ.டு) கபில பரணர், கல்லாட மாமூலர்

சேர சோழ பாண்டியர், தேவன் தேவிகள் என்றவாறு அமையும்.

தொகைநிலைத் தொடர்மொழிகள் பலபொருள் படுதல்

வேற்றுமை உருபு முதலியவை தொக்கு நிற்குமிடங்களில் பொருளால் மயங்கி நிற்கும் இயல்புடைய தொடர்மொழிகள் இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை ஈறான பொருள்களில் மயங்கி வரும் என்று கூறுவர்.

தொக்குழி மயங்குந இரண்டு முதல்ஏழ்

எல்லைப் பொருளின் மயங்கும் என்ப. நூற்பா 373

இந்நூற்பாவில் பொருள் என்று கூறியது பெரும்பான்மை தொகைநிலைகளையும் சிறுபான்மை தொகாநிலைகளையும் என்று உணர்தல் வேண்டும்.

(எ.டு) தெய்வ வணக்கம் – தெய்வத்தை வணங்கும் வணக்கம், தெய்வத்திற்கு வணக்கம் என இரு பொருள்களால் மயங்கியது.

தற்சேர்ந்தார் – தன்னைச் சேர்ந்தார், தன்னொடு சேர்ந்தார், தன்கண் சேர்ந்தார் என மூன்று பொருள்களால் மயங்கியது.

சொல் இலக்கணம் – சொல்லினது இலக்கணம், சொல்லுக்கு இலக்கணம், சொல்லின் கண் இலக்கணம், சொல்லினது இலக்கணம் கூறிய நூல் என்னும் நான்கு பொருள்களால் மயங்கியது.

பொன்மணி – பொன்னாலாகிய மணி, பொன்னாகிய மணி, பொன்னின் கண்மணி, பொன்னொடு சேர்ந்த மணி, பொன்னும் மணியும் என ஐந்து பொருள்களால் மயங்கியது.

இதுவரை தொகைநிலைத் தொடர்மொழிகள் பற்றிய செய்திகளைப் பவணந்தியார் கூறியுள்ளமையைக் கண்டோம். இனி, தொகாநிலைத் தொடர்மொழி பற்றிய செய்திகளைக் காணலாம்.

தொகாநிலைத் தொடர்மொழி

பெயர்ச் சொல்லுடன் பெயர்ச்சொல்லும், பெயர்ச் சொல்லுடன் வினைச் சொல்லும் சேர்ந்த இரண்டு சொற்களும் தம்மிடையே உருபுகளும், காலமும் தொகாமல் வெளிப்படையாய் வந்து தொடர் அமையின் அதற்குத் தொகாநிலைத் தொடர் என்று பெயர்.

இத்தொகாநிலைத் தொடர் வினைமுற்றுத் தொடர், பெயரெச்சத் தொடர், வினையெச்சத் தொடர், எழுவாய்த் தொடர், விளித்தொடர், வேற்றுமைத் தொகாநிலைத் தொடர், இடைச்சொற்றொடர், உரிச் சொற்றொடர், அடுக்குத் தொடர் என ஒன்பது வகைப்படும்.

முற்று ஈரெச்சம் எழுவாய் விளிப்பொருள்

ஆறுருபு இடையுரி அடுக்கிவை தொகாநிலை. நூற்பா 374

(எ.டு) உண்டான் கண்ணன் – வினைமுற்றுத்தொடர்

உண்ட கண்ணன் – பெயரெச்சத் தொடர்

உண்டு வந்தான் – வினையெச்சத் தொடர்

கண்ணன் வந்தான் – எழுவாய்த் தொடர்

கண்ணா வா – விளித்தொடர்

குடத்தை வனைந்தான், வாளால் வெட்டினான்,

இரப்போர்க்கு ஈந்தான், மணியினிழிந்தான்,

கொற்றனது கை, மணியின்கண்ணொளி – வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்

மற்றொன்று – இடைச்சொற்றொடர்

நனிபேதை – உரிச்சொற்றொடர்

பாம்பு பாம்பு – அடுக்குத்தொடர்

தொகைநிலை, தொகாநிலை ஆகிய தொடர்கள் பற்றிய செய்திகளைக் கூறிய பவணந்தியார் நூற்பா 375 முதல் 410 வரை வழுக்கள், வழுவமைதி பற்றிய செய்திகளை முறையே கூறியுள்ளார். அச்செய்திகளை நிரல்படப் பார்ப்போம்.

தன்மதிப்பீட்டு வினாக்கள்

I.

1. நன்னூலில் முன்னர் வரும் பெயருக்கும் வினைக்கும் பின்னர் வரும் இடைக்கும் உரிக்கும் உரிய பொது இலக்கணங்களைக் கூறும் இயலின் பெயர் என்ன?
2. தொகைநிலைத் தொடர்களின் எண்ணிக்கை .............
3. அறுவகைத் தொகைகளின் பெயர்களைப் பட்டியலிடுக.
4. காலம் கரந்த பெயரெச்சம் வினைத்தொகையாகும். சரியா? தவறா?
5. 'உம்' என்னும் இடைச்சொல் தொக்கு வரும் தொகையின் பெயர் என்ன?
6. தொகாநிலைத் தொடர்கள் எத்தனை வகைப்படும்?
7. தொகாநிலைத் தொடர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

3.2.3.3 வழு விகற்பங்களும், வழுவமைதிகளும்

வழு விகற்பங்கள்

இருதிணை, ஐம்பால், மூவிடம், முக்காலம், வினை, விடை, மரபு ஆகிய ஏழும் தத்தம் முறை மயங்கி வருவது வழுவாகும்.

திணையே பாலிடம் பொழுது வினாவிடை

மரபாம் ஏழும் மயங்கினாம் வழுவே. நூற்பா 375

(எ.டு) அவன் வந்தது – திணை வழு

அவள் வந்தான் – பால் வழு

யான் வந்தான் – இட வழு

நாளை வந்தான் – கால வழு

கறக்கின்ற எருமை பாலோ சினையோ – வினா வழு

திருக்குறள் வாங்கினாயா? எனக் கேட்டான். விடையாக சோறு உண்டேன் என்பது – விடை வழு

யானை மேய்ப்பவனை இடையன் என்பது – மரபு வழு

மேற்கூறிய ஏழுவகை வழுக்களையும் அறிந்து வழக்கிலும், செய்யுளிலும் அவை வராமல் காத்தல் வேண்டும்.

திணையோடு வினா விடையும்

பாலோடு வினா விடையும் வழுவாமல் காத்தல்

திணை, பால்களில் ஐயம் தோன்றிய போது, அவ்வவற்றின் பொதுச்சொல்லினாலும் இன்னது எனத் துணிந்த பொருளின்மேல் அல்லாதத் தன்மையை வைத்தும் விளங்கச் சொல்லுவர்.

ஐயந் திணைபா லவ்வப் பொதுவினும்

மெய்திரி பொருண்மே லன்மையும் விளம்புப. நூற்பா 376

வினா வழுவாமல் காத்தல் :

1. குற்றியோ மகனோ எனத் திணையில் ஐயம் தோன்றிய போது, 'குற்றியோ மகனோ அவ்விடத்துத் தோன்றுகின்ற உரு' எனப் பொதுச்சொல் வினவுதல் வேண்டும்.

2. ஆண் மகனோ, பெண் மகளோ என உயர்திணைப் பால் ஐயம் தோன்றிய போது, 'ஆண் மகனோ, பெண் மகளோ, அங்கே தோன்றுகின்றவர்' என்று பொதுச் சொல்லில் வினவுதல் வேண்டும்.

3. ஒன்றோ, பலவோ என அஃறிணையில் பால் ஐயம் தோன்றியவிடத்து, ஒன்றோ பலவோ இச் செய்புக்க பெற்றம் எனப் பொதுச் சொல்லால் வினவுதல் வேண்டும்.

விடை வழுவாமல் காத்தல் :

1. குற்றியோ மகனோ என ஐயம் தோன்றிய போது, துணியப்பட்ட பொருள் குற்றியாயின் 'மகன் அன்று' எனவும், மகன் எனத் துணியப்பட்ட பொருளாயின் குற்றியல்லன் எனவும், துணிந்த பொருள் மேல் மற்றொன்று அல்லாத தன்மையை வைத்துக் கூறுதல் வேண்டும்.

2. ஆண் மகனோ, பெண் மகளோ என்று ஐயம் தோன்றியவிடத்துத், துணியப்பட்ட பொருள் ஆண் மகன் எனின் பெண் மகளல்லள் எனவும், பெண் மகளெனின் ஆண் மகனல்லன் எனவும் துணிந்த பொருள்மேல் மற்றொன்று அல்லாதத் தன்மையை வைத்துக் கூறுதல் வேண்டும்.

3. ஒன்றோ பலவோ என்று ஐயுற்ற போது, துணிந்த பொருள் ஒன்றெனின் பலவன்று எனவும், பலவெனின் ஒன்றல்ல எனவும், துணிந்த பொருளின் மேல் மற்றொன்று அல்லாத தன்மையை வைத்துக் கூறுதல் வேண்டும்.

வழுவமைதிகள்

திணை வழுவமைதி

உயர்திணை எழுவாயைத் தொடர்ந்த அஃறிணைப் பொருளாதி ஆறும் அவ்வுயர் திணையுடன் சேர்ந்து முடிக்கும் போது அவ்வுயர் திணை முடிபைப் பெறும்.

(எ.டு) நம்பி பொன் பெரியன் – பொருள்

நம்பி நாடு பெரியன் – இடம்

நம்பி வாழ்நாள் பெரியன் – காலம்

நம்பி மூக்குக் கூரியன் – சினை

நம்பி குடிமை நல்லன் – குணம்

நம்பி நடை கடியன் – தொழில்

மேற்கூறிய எடுத்துக்காட்டுகளில் உயர்திணை எழுவாயின் பயனிலையோடு அஃறிணை எழுவாயும் சார்த்தி முடிக்கப்பட்டுள்ளது.

பொன் என்னும் அஃறிணை எழுவாய், நம்பி என்னும் உயர்திணை எழுவாய்க்குரிய பயனிலையாகிய 'பெரியன்' என்னும் உயர்திணை வினைமுற்றைக் கொண்டு முடிந்திருப்பதால் வழுவாகித் தொடர்புண்டாயிருத்தல் பற்றிச் சார்த்தி முடித்தலில் வழுவமைதியாயிற்று.

"உயர்திணை தொடர்ந்த பொருண்முத லாறும்

அதனொடு சார்த்தின் அத்திணை முடிபின. நூற்பா 377

திணையில் மரபு வழுவமைதி

திணைகளும், பால்களும் வெவ்வேறு வினைகளுக்குரிய பல பொருள்களும் ஒன்றோடொன்று கலந்து ஒரு தொடராக வருமாயின், அவை சிறப்பு, மிகுதி, இழிவு ஆகியவற்றின் காரணமாக ஒரு முடிவைப் பெறும்.

"திணைபால் பொருள்பல விரவின சிறப்பினும்

மிகவினும் இழிபினும் ஒருமுடி பினவே." நூற்பா 378

(எ.டு)

சிறப்பு :

"திங்களும் சான்றோரும் ஒப்பர்" – இரு திணையும் கலந்து சிறப்பினால் 'ஒப்பர்' என்னும் உயர்திணை முடிபைப் பெற்றன. சான்றோர் தன்மை இங்கே சிறப்புடையது.

மிகுதி :

"பார்ப்பார் தவரே சுமந்தார் பிணிப்பட்டார்

மூத்தா ரிளையார் பசுப்பெண்டி ரென்றிவர்கட்

காற்ற வழிவிலக்கி னாரே பிறப்பிடைப்

போற்றி யெனப்படு வார்."

இப்பாடலில் இரு திணையும் கலந்து மிகுதி காரணமாக இவர்களுக்கு என்னும் உயர்திணை முடிவு கொண்டன.

இழிவு :

மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா – இரு திணையும் கலந்து இழிபின் காரணமாக 'விடா' என்ற அஃறிணை முடிபைக் கொண்டன.

பால் :

"தானும் தன்தையலும் தாழ்சடையன் ஆண்டிலனேல்" – இங்கு ஆண்பாலும் பெண்பாலும் கலந்து சிறப்பின் காரணமாக ஆண்டிலனேல் என ஆண்பால் முடிபைக் கொண்டது.

மரபு :

"கறியும் சோறும் உண்டான்

மாலையும் முடியும் கவித்தான்"

வேறு வேறு வினைகளை உடைய பல பொருள்கள் கலந்து வந்து சிறப்பினால் உண்டான், கவித்தான் என ஒரு பொருட்குரிய வினை முடிபுகளைக் கொண்டன.

இங்கு, உண்டலென்னும் வினைக்குரிய சோறு தின்றலென்னும் வினைக்குரிய கறியினும் தலைமையுடைமையும், கவித்தலென்னும் வினைக்குரிய முடி சூடுதல், அணிதல் என்னும் வினைக்கு உரிய மாலையினும் தலைமை உடையதால் சிறப்பாயிற்று.

திணைபால் வழுவமைதி

மகிழ்ச்சி, உயர்வு, சிறப்பு, சினம், இழிபு என்னும் காரணங்களினால் ஒரு திணை மற்றோர் திணையாகவும், ஒரு பால் மற்றோர் பாலாகவும் கூறப்படுதல் வழுவமைதியேயாகும்.

பால் வழுவமைதி

உவப்பு – தன் புதல்வனை 'என்னம்மை வந்தாள்' எனக் கூறுவது உயர்வால் பால் மாறுபட்டது.

உயர்வு – ஒருவனை 'அவர் வந்தார்' என்பது உயர்வினால் ஒருமைப்போல் பன்மைப் பாலாயிற்று.

சிறப்பு – 'தாதாய் மூவே முலகுக்குந் தாயே' – என்று சிறப்பித்ததால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

செறல் – "எனைத்துணைய ராயினும் என்னாம் தினைத்துணையுந்

தேரான் பிறனின் புகல்" என்பது சினத்தினால் பன்மைப்பால் ஒருமைப் பாலாயிற்று.

இழிப்பு – பெண்வழிச் செல்வானை நோக்கி, ‘இவன் பெண்பால்’ எனக் கூறுவது இழிவின் காரணமாய் ஆண்பால் பெண்பால் ஆயிற்று.

திணை வழுவமைதி

உவப்பு – ஒரு பசுவை ‘என்னம்மை வந்தாள்’ என்பது உவப்பினால் அஃறிணை உயர்திணையாயிற்று.

உயர்வு – ‘செந்தாரப் பசுங்கிளியார் சென்றார்க்கு’ – உயர்வினால் அஃறிணை

உயர்திணையாயிற்று. இங்கு தூது சென்று உயிர் தந்தமை கிளிக்கு உயர்வாகும்.

சிறப்பு – ‘தம்பொருள் என்பதம் மக்கள்’ – சிறப்பால் உயர்திணை அஃறிணையாயிற்று.

செறல் – “ஏவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்

போஒம் அளவுமோர் நோய்” – செறலினால் உயர்திணை அஃறிணையாயிற்று.

இழிபு – நாம் இறைவன் உடைமை – இழிப்பினால் உயர்திணை அஃறிணையாயிற்று.

“உவப்பினும் உயர்வினும் சிறப்பினும் செறலினும்

இழிப்பினும் பால்திணை இழுக்கினும் இயல்பே.”

என்னும் நூற்பா (379) திணை, பால் வழுவமைதிகளைக் கூறியது.

பாலிட வழுவமைதி

ஒருமைப்பாலில் பன்மைபாற் சொல்லையும், பன்மைப் பாலில் ஒருமைப்பாற் சொல்லையும், மூவிடங்களில் ஒன்றற்குரிய சொல்லில் பிறவிடங்கட்கு உரிய சொற்களையும் தழுவிக் கூறுதல் உண்டு. இவை வழுவமைதியாகக் கொள்ளப்படும்.

பால் வழுவமைதி

“வெயில் எல்லாம் மறைத்தது மேகம்”

வெயில் என்னும் ஒருமைப்பாலுடன் எல்லாம் என்னும் பன்மைச்சொல் சேர்த்துக் கூறப்பட்டது.

“அஃதை தந்தை யண்ணல் யானையடுபோர்ச் செழியர்”

உயர்திணையில் தந்தை என்னும் ஒருமைப்பாலில் செழியர் என்னும் பன்மைச்சொல் சேர்த்துச் சொல்லப்பட்டது.

“இரண்டு கண்ணும் சிவந்தது”

அஃறிணையில் இரண்டு என்னும் பன்மைப்பாலில் சிவந்த என்னும் ஒருமைச்சொல் சேர்த்துச் சொல்லப்பட்டது.

“புலையன் எறிந்த பூசற்றண்ணுமை

ஏவல் இணையர் தாய் வயிறு கரிப்ப”

உயர்திணையில் ஏவலிணையர் என்னும் பன்மைப்பாலில் தாயென்னும் ஒருமைச்சொல் சேர்த்துக் கூறப்பட்டது.

இடவழுவமைதி

“சாத்தன் தாய் இவை செய்வலோ”

யான் எனச் சொல்ல வேண்டும் தன்மையில் சாத்தன் தாய் எனப் படர்க்கைச் சொல் சேர்த்துச் சொல்லப்பட்டது. சாத்தன் தாயாகிய யான் என்பது இதன் பொருளாகும்.

“எம்பியை ஈங்குப் பெற்றேன் என்னெனக் கரிய தென்றான்”

தன் தம்பியை முன்னிலைப்படுத்தி அவனை நோக்கியே கூறுதலால் நின்னை எனச் சொல்ல வேண்டிய முன்னிலையில் ‘எம்பியெனப்’ படர்க்கைச் சொல்லால் கூறப்பட்டது.

“நீயோ அவனோ யாரிது செய்தார்

யானோ அவனோ யாரிது செய்தார்

நீயோ யானோ யாது செய்தார்

நீயோ அவனோ யானே யாரிது செய்தார்”

இவற்றின் இடம் விரவி ஓரிடத்தில் பிறவிடம் வந்துள்ளது.

ஒருமையில் பன்மையும் பன்மையின் ஒருமையும்

ஓரிடம் பிறவிடம் தழுவலும் உளவே.

என்னும் நூற்பா (380) பால், இட வழுவமைதியைக் கூறியது.

இடம் வழுவாமல் காத்தல்

தரல், வரல், கொடை, செலல் என்னும் நான்கு சொற்களையும் படர்க்கை ஏற்கும். இவற்றுள் தரல், வரல் என்னும் இரண்டையும் தன்மை முன்னிலைகள் ஏற்கும்.

(எ.டு) அவனுக்குத் தந்தான், அவனிடத்து வந்தான் – படர்க்கை

எனக்குத் தந்தான், என்னிடத்து வந்தான் – தன்மை

உனக்குத் தந்தான், உன்னிடத்து வந்தான் – முன்னிலை

தரல்வால் கொடைசெலல் சாரும் படர்க்கை

எழுவா யிரண்டு மெஞ்சிய வேற்கும். நூற்பா 381

இந்நூற்பாவின் வழி, தரலும் வரலும் தன்மை முன்னிலைக்கும் கூட்டி உரைத்தமையால், கொடை, செலல் என்னும் இரண்டும் படர்க்கைக்கே சிறந்தனவாகும். இங்கு எனக்குக் கொடுத்தான், நின்பால் வந்தான் என்பன போல் வரும் சொற்களையும் வழுவமைதியாகக் கொள்ளுதல் வேண்டும்.

காலம்

இறப்பு எதிர்வு நிகழ்வு எனக் காலம் மூன்றே. நூற்பா 382

இறப்பு, எதிர்வு, நிகழ்வு எனக் காலத்தினை மூன்றாக அமைத்துள்ளார் பவணந்தியார்.

கால வழுவமைதி

பவணந்தியார் இரண்டு நூற்பாக்களில் கால வழுவமைதியைக் கூறுகின்றார். மூன்று காலங்களிலும் தமது தொழில் இடையறாது ஒரு தன்மையாய் நிகழும் பொருள்களை நிகழ்காலத்தில் கூற வேண்டும்.

(எ.டு) மலை நிற்கின்றது, தெய்வம் இருக்கின்றது

முக்காலத்தினும் ஒத்தியல் பொருளைச்

செப்புவர் நிகழும் காலத் தானே. நூற்பா 383

விரைவு, மிகுதி, தெளிவு இம்மூன்று காரணங்களாலும், இயல்பாகவும் மூன்று காலங்களும் ஒன்று மற்றொன்றாகக் கூறப்படுதலும் உண்டு. (நூற்பா 384)

(எ.டு) உண்கின்ற ஒருவன் ‘உண்டேன் உண்டேன்’ என்பது விரைவு பற்றி முக்காலமும் கூறப்பட்டது.

“நீ அவனைப் பகைத்திடின் இறந்தாய்” – மிகுதி காரணமாக, “இறப்பாய்” என்ற எதிர்காலம் “இறந்தாய்” என இறந்த காலத்தில் கூறப்பட்டது.

“அறஞ்செயின் சுவர்க்கம் புக்கான்” – இங்கு தெளிவு காரணமாக எதிர்காலம் இறந்தகாலமாகக் கூறப்பட்டது.

யாம் பண்டு விளையாடுவது இச்சோலை. யாம் பண்டு விளையாடுகிறது இச்சோலை. – காரணம் ஏதுமின்றி இயல்பினால் காரணமின்றி இயல்பினால் முக்காலமும் கூறப்பட்டது.

அறுவகை வினா

அறிவு, அறியாமை, ஐயுறல், கொளல், கொடை, ஏவல் ஆகிய அறுவகைப் பொருளையும் பற்றி வரும் வினாக்களைப் புலவர்கள் அப்படியே ஏற்றுக் கொள்வார்கள்.

அறிவு அறியாமை ஐயுறல் கொளல் கொடை

ஏவல் தரும் வினா ஆறும் இழுக்கார். நூற்பா 385

(எ.டு) ஆசிரியன் இந்நூற்பாவிற்குப் பொருள் யாது என்பது – அறிவினா

மாணாக்கன் இந்நூற்பாவிற்குப் பொருள் யாது என்பது – அறியா வினா

பாம்போ கயிறோ – ஐய வினா

பயறு உளதோ வணிகீர் என்பது – கொளல் வினா

கண்ணனுக்கு ஆடை இல்லையா என்பது – கொடை வினா

கண்ணா உண்டாயா – ஏவல் வினா

எண்வகை விடை

சுட்டு, மறை, நேர், ஏவல், வினாதல், உற்றதுரைத்தல், உறுவது கூறல், இனமொழி என்று விடை எட்டு வகைப்படும். அவற்றுள் முன்னைய மூன்றும் செவ்வன் இறை (விடை) எனவும், பின்னைய ஐந்தும் அவ்விடைப் பொருளைத் தருதலால் புலவர்கள் அவற்றை விடைகளாகவே தழுவிக் கொள்ளுவர்.

சுட்டு மறைநேர் ஏவல் வினாதல்

உற்றது உரைத்தல் உறுவது கூறல்

இனமொழி எனும்எண் இறையுள் இறுதி

நிலவிய ஐந்தும்அப் பொருண்மையின் நேர்ப. நூற்பா 386

(இறை – விடை)

(எ.டு) சென்னைக்கு வழியாது எனில் 'இது' என்பது – சுட்டு விடை

இது செய்வாயா எனில் 'செய்யேன்' என்பது – மறைவிடை

அதே வினாவுக்குச் 'செய்வேன்' என்பது – நேர்விடை

அதே வினாவுக்கு 'நீ செய்' என்பது – ஏவல் விடை

அதே வினாவுக்குச் 'செய்வேனோ' என்பது – வினா விடை

அதே வினாவுக்கு (உடம்பு நொந்தது) 'நோவா நின்றது' என்பது – உற்றது உரைத்தல் விடை

அதே வினாவுக்கு 'உடம்பு நோம்' என்பது – உறுவது கூறல் விடை

'உடம்பு நோம்' என்று தனக்கு நேரப்போவதைக் கூறுவது – உறுவது கூறல் விடை

அதே வினாவுக்கு 'மற்றையது செய்வேன்' என்று இனங் குறித்து உரைப்பது – இனமொழி விடை

வினா விடைகளில் முதல் சினை வழுவாமை

வினாவும் பொழுதும், விடை கூறும் பொழுதும் சினையும் முதலும் ஒன்றென வைத்து முதலொடு சினையும், சினையொடு முதலும் மயங்கும்படி சொல்லுவதில்லை.

(எ.டு) கண் பிறழ்ந்ததோ, கயல் பிறழ்ந்ததோ, மன்னன் நல்லனோ, அமைச்சன் நல்லனோ என வினவுகின்றவர்கட்குக் கண் பிறழ்ந்தது, கயல் பிறழ்ந்தது, மன்னன் நல்லன், அமைச்சன் நல்லன் என்றே விடை தரப்படும்.

"வினாவினும் செப்பினும் விரவா சினைமுதல்"

என்னும் நூற்பா 387இல் வினா, விடைகளில் முதல், சினை வழுவாமை பற்றிய செய்திகளைக் கூறுகிறது.

மரபு

எப்பொருளை எச்சொல்லால் அறிவுடையோர் எவ்வாறு சொன்னார்களோ அவ்வாறே நாமும் அப்பொருளை அச்சொல்லால் சொல்லுவது மரபாகும்.

எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உயர்ந்தோர்

செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே. நூற்பா 388

(எ.டு) குதிரைக்குட்டி, பசுக்கன்று, கோழிக்குஞ்சி, கீரிப்பிள்ளை என்று வரும். இவ்வாறின்றி குதிரைக்கன்று, கோழிக்குட்டி, பசுவின்குட்டி என வருதல் மரபு வழுவாகும்.

மரபு வழா நிலை

வேறுவினைப் பல்பொருள் தழுவிய பொதுச்சொல்

வெவ்வேறு வினைகளுக்குரிய வெவ்வேறான பல பொருள்களையும் ஒருங்கு தழுவி நிற்கும் பொதுச் சொல்லே, வேறு வினைப் பல பொருள் தழுவிய பொதுச் சொல்லாகும்.

(எ.டு) அடிசில், படை முதலியன.

உண்ணுதல், தின்னுதல், நக்குதல், பருகுதல் என்னும் வெவ்வேறு வினைகளுக்குச் சோறு, கறி, பச்சடி, மோர் என்ற வெவ்வேறான பல பொருள்கள் உரியன. இப்பொருள்கள் பலவற்றையும் ஒருங்கு தழுவி நிற்கும் பொதுச்சொல் அடிசில் என்பதாகும். எய்தல், எறிதல், வெட்டுதல், குத்துதல் என்ற வெவ்வேறு வினைகளுக்கு அம்பு, ஈட்டி, வாள் என்ற வெவ்வேறான பல பொருள்கள் உரியன. இப்பொருள்கள் பலவற்றையும் தழுவி நிற்கும் பொதுச்சொல் படை என்பதாகும்.

வேறுவினைப் பலபொருள் தழுவிய பொதுச்சொலும்

வேறெவற் றெண்ணுமோர் பொதுவினை வேண்டும். நூற்பா 389

சிறப்பு வினை வழா நிலை

குறித்த பொருளை விளக்குவதற்கு வேண்டிய வினையும் சார்பும் இனமும் இடமும் பொருந்திப் பொருள் விளங்காத பலபொருள் ஒரு சொல்லைச் சிறப்புச் சொல்லுடன் கூட்டிக் கூறுவர் அறிஞர்.

வினைசார்பு இனம்இடம் ஏவி விளங்காப்

பலபொருள் ஒருசொல் பணிப்பர் சிறப்பெடுத்தே. நூற்பா 390

(எ.டு) மா என்பது மாமரம், வண்டு, விலங்கு முதலியவற்றிற்குப் பொதுவான பல பொருள் ஒரு சொல்லாகும். இதுவே மா காய்த்தது என்ற வினையால் மரம் என்பதும், மா வீழ் மலர் எனச் சார்பால் வண்டு என்பதும், தேர், கரி, மா, காலாள் முதலியன இனத்தால் குதிரை என்னும் விலங்கென்பதும், மா மறுத்த மார்பன் என இடத்தால் திரு என்பதும் பொருள் விளங்கிற்று.

மேலும், மா ஏறினான் என்ற வழி ஏறினான் என்ற வினை இருந்தும் மாமரமா? குதிரையா? எனப் பொருள் புரியாமையால், இவ்விடத்தில் மா என்பது வினை முதலியவற்றால் பொருள் விளங்காப் பல பொருள் ஒருசொல்லாகும்.

ஒலி வேறுபாட்டால் பொருள் துணிதல்

எழுத்தின் தன்மை வேறுபடாமல் பொருள் வேறுபட்டுச் சொல்லும் பொருளும் ஐயுற நிற்கும் தொடர்மொழிகள், அக்குறிப்பிட்ட சொற்களின் இறுதியும் முதலும் தோன்ற ஓசையை அறுதியிட்டுக் கூறும் வேறுபாட்டினால் பொருளின் தெளிவைப் பெறும் என்று கூறுவர்.

எழுத்தியல் திரியாப் பொருள்திரி புணர்மொழி

இசைத்திரி பால்தெளி வெய்தும் என்ப. நூற்பா 391

இந்நூற்பாவின் வழி ஓசையை வரையறுத்துக் கூறுதல் என்பது மரபாகும்.

(எ.டு) செம்பொன் பதின்றொடி – செம்பொன், பதின்தொடி என ஓசை பிரித்துக் கூறல், செம்பொன் பத்துப்பலம் எனப் பொருள்படும். அதுவே, செம் – பொன்பதின் – றொடி என ஓசை பிரித்துக் கூறின் செம்பு ஒன்பது பலம் எனப் பொருள்படும்.

மரபு வழாநிலையும் வழுவமைதியும்

ஒரு பொருளின்மேல் பல பெயர்கள் வருமானால் பொருள் ஒன்றே என்பதற்காக அவற்றின் இறுதியில் ஒரு முடிக்கும் சொல்லைப் பயனிலையாகக் கூறுவர்.

ஒருபொருள் மேற்பல பெயர்வரி னிறுதி

ஒருவினை கொடுப்ப தனியும் ஒரோவழி. நூற்பா 392

(எ.டு) ஆசிரியன் பேரூர்கிழான் சாத்தன் வந்தான் – இதில் ஒரு பொருளைக் குறித்து வந்த பல பெயர்கள் ஈற்றில் ஒரு வினையைக் கொண்டு வந்தன.

இயற்பெயர் வருமிடம்

ஐந்திணை, நாடு, குலம், குடி, உடைமை, பண்பு, தொழில், கல்வி முதலியன பற்றி வரும் சிறப்புப் பெயரோடு இயற்பெயரும் ஒருங்கே வருமானால் அத்தொடரில் இயற்பெயர் பின்னர் வருதல் சிறந்த மரபாகும்.

திணைநிலம் சாதி குடியே உடைமை

குணம் தொழில் கல்வி சிறப்புப் பெயரொடு

இயற்பெயர் ஏற்றிடின் பின்வரல் சிறப்பே. நூற்பா 393

இந்நூற்பாவில் பின்வரல் சிறப்பே எனக் கூறியதனால் முன்வரும் என்பதும், அவ்வாறு வருவது வழுவமைதியாகக் கொள்ளப்படும்.

| (எ.டு) வழாநிலை | வழுவமைதி |
|---|---|
| குன்றவன் கொற்றன் | கொற்றன் குன்றவன் – திணை |
| அருவாளன் அழகன் | அழகன் அருவாளன் – நிலம் |
| பார்ப்பான் பாராயணன் | பாராயணன் பார்ப்பான் – சாதி |
| ஊர்கிழான் ஓணான் | ஓணான் ஊர்கிழான் – குடி |
| பொன்னன் பொறையன் | பொறையன் பொன்னன் – உடைமை |

| | |
|---|---|
| கரியன் கம்பன் | கம்பன் கரியன் – குணம் |
| நாடகி நம்பி | நம்பி நாடகி – தொழில் |
| ஆசிரியன் அமிழ்தன் | அமிழ்தன் ஆசிரியன் – கல்வி |

சுட்டுப்பெயர் வருமிடம்

படர்க்கை இடத்திற்குரிய உயர்திணை, அஃறிணைப் பொதுப் பெயர்களுடன் சுட்டுப்பெயர் சேரும் போது அங்கு முடிக்குஞ் சொல் வினையாக வருமானால் அம் மூவகைப் பெயருக்கும் பின்னால் சுட்டுப்பெயர் வர வேண்டும். அம்முடிக்கும் சொல் இல்லையெனின் சுட்டுப்பெயர் மூவகைப் பெயர்க்கு முன்னும் பின்னும் வரும். இந்நிலை உலக வழக்கிற்கு உரியதாகும். செய்யுளில் வரையறை இன்றி வேண்டியவாறு வரும்.

(எ.டு) நம்பி வந்தான்; அவனுக்குச் சோறிடுக.

எருது வந்தது; அதற்குப் புல்லிடுக.

சாத்தன் தெய்வம்; அவனுக்குப் பலியிடுக.

சாத்தன் வந்தது; அதற்குப் புல்லிடுக

வினை நிகழ்வழிச் சுட்டுப்பெயர் பின் வந்தன.

நம்பி அவன், அவன் நம்பி – பெயர்க்குப் பின்னும் முன்னும் சுட்டுப்பெயர் வந்தன.

“அவனணங்கு நோய்செய்தான் ஆயிழாய் வேலன்

விறல் மிகுதார்ச் சேந்தன்பேர் வாழ்த்தி”

இச்செய்யுளில் வினைவருமிடத்து முன் வந்தது. இதன்கண் சேந்தன் என்பது இயற்பெயராகும். அவன் என்னும் சுட்டுப் பெயர்முன் வந்துள்ளது. சுட்டுப்பெயர் செய்யுளிடத்துப் பின் வருதல் வழா நிலை, முன் வருதல் வழுவமைதியாகும்.

“படர்க்கைமுப் பெயரோடு அணையிற் சுட்டுப்

பெயர்பின் வரும்வினை எனின்பெயர்க் கெங்கும்

மருவும் வழக்கிடைச் செய்யுட்கு ஏற்புழி” நூற்பா 394

அடுக்குத்தொடர்

ஒரு சொல்லானது அசைநிலை, விரைவு, வெகுளி, உவமை, அச்சம், அவலம் முதலிய பொருள்நிலை பற்றியும் முறையே இரண்டு, மூன்று, நான்கு முறைகள் அடுக்கி வரும். இதற்கு அடுக்குத் தொடர் என்று பெயர்.

அசைநிலை பொருள்நிலை இசைநிறைக் கொருசொல்

இரண்டு மூன்றுநான் கெல்லைமுறை யடுக்கும். நூற்பா 395

இந்நூற்பாவின் வழி அசைநிலைக்கு இரண்டு முறையும் பொருள் நிலைக்கு இரண்டு, மூன்று முறையும், இசை நிறைக்கு இரண்டு, மூன்று, நான்கு முறையும் அடுக்கி வரும்.

(எ.டு) அசைநிலை – அன்றே அன்றே

பொருள் நிலை

விரைவு – உண்டேன், உண்டேன், போ போ போ

வெகுளி – எய் எய், எறி எறி எறி

உவகை – வருக வருக, பொலிக பொலிக பொலிக

அச்சம் – பாம்பு பாம்பு, தீத்தீத்தீ

அவலம் – உய்யேன் உய்யேன், வாழேன் வாழேன் வாழேன் வாழேன்.

இசைநிறை – ‘நல்குமே நல்குமே நல்குமே நாமகள்’

‘பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ’

இவ்வாறு ஒரு சொல்லைப் பலமுறை சொல்லுதல் வழுவாயினும் இவ்விடத்தே பொருந்துவதால் வழுவமைதியாகும்.

மரபு வழாநிலை

இரட்டைச் சொற்கள் அவ் இரட்டிப்பினின்றும் பிரிந்து தனித்து ஒலிக்கமாட்டா.

"இரட்டைக் கிளவி யிரட்டிற் பிரிந்திசையா" நூற்பா 396

இந்நூற்பா, வலிந்து அச்சொற்களைப் பிரித்தால் பொருள் தரா என்பதும், இரட்டையாகக் கூறுவதே மரபாகும் என்பதைக் கூறுகின்றது.

(எ.டு) சலசல மும்மதம் பொழிய, குறுகுறு நடந்து

வற்றிய ஓலை கலகலக்கும்

துடிதுடித்துத் துள்ளிவரும்

மேற்கூறிய இரட்டைக்கிளவிகளைப் பிரித்தால் பொருள் தராது.

அடுக்குத்தொடர், இரட்டைக்கிளவி வேறுபாடு

| | | |
|---|---|---|
| 1. | அடுக்குத்தொடரில் உள்ள சொல் இரண்டு, மூன்று, நான்கு என்னும் முறையில் அடுக்கி வரும். | இரட்டைக் கிளவியில் உள்ள சொல் இரண்டு முறைக்குமேல் வராது. |
| 2. | சொற்களைப் பிரித்தாலும் பொருள் தரும். | இரட்டையில் பிரித்தால் பொருள் தராது. |
| 3. | அடுக்கிவரினும் விலங்கிரட்டையும் மக்களிரட்டையும் போலத் தனித்தனியாக நிற்கும். | பூவிரட்டையும் இலையிரட்டையும் போல இணைந்து இரட்டையில் நிற்கும். |
| 4. | அசைநிலை, பொருள் நிலையாக வரும். | பொருள் நிலையாக மட்டுமே வரும். |

ஒருபொருட் பல்பெயர்

ஒரு பொருளின் மேல் பல பெயர்களைக் கூறுகையில் அப்பொருளினின்றும் பிரிதல் இல்லாதவைகளைப் புலவர்கள் நீக்காமல் ஏற்றுக் கொள்வர்.

"ஒருபொருட் பல்பெயர் பிரிவில வரையார்" நூற்பா 397

(எ.டு) ஆசிரியன் பேரூர்கிழான் சாத்தன் வந்தான், பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி வந்தான் – இவை பிரிவு இல்லாமல் பல பெயர்களும் ஒரு பொருளின் மேல் சென்று கேட்பவர்க்குச் சொல்லுவோன் குறித்த, சாத்தன், பெருவழுதி என்ற பொருளை உணர்த்தின.

மரபு வழுவமைதி

ஒரு பொருளைக் குறித்து வரும் பல சொற்கள் அவ்வாறு வருவதற்கு ஒரு குறிப்பிட்ட காரணம் இல்லையெனினும், சிறந்து நிற்பதால் அவை வழுவென்று நீக்கப்படமாட்டா.

ஒருபொருள் பன்மொழி சிறப்பி னின்வழா. நூற்பா 398

(எ.டு) மீமிசை ஞாயிறு, புளிற்றி எங்கன்று, நாகிளங்கமுகு, உயர்ந்தோங்கு பெருவரை

இங்கு மீமிசை, புளிற்றிளமை முதலியன மிக உயர்ந்த, மிக இளமை முதலியனவாய் பொருள் தந்து வழாநிலை ஆயிற்று.

மரபு வழுவாமல் காத்தல்

இன்ன அளவினது என்று வரையறைத்து உணரப்படும் பொருளையும் எக்காலத்திலும் உலகில் இல்லாத பொருளையும் வினைப்படுத்திக் கூறுகையில் முற்றும்மை கொடுத்துக் கூறுதல் வேண்டும்.

இனைத்தென் அறிபொருளும் உலகில் இலாப்பொருள்

வினைப்படுத் துரைப்பு னும்மை வேண்டும். நூற்பா 399

(எ.டு) தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தார்

வேதம் நான்கும் உணர்ந்தான்

இனைத்தென்று அறிபொருள்கள் வினைப்படுத்துச் சொல்லும் போது முற்றும்மை கொடுத்துக் கூறப்பட்டன.

முயற்கோடு – ஆகாயப்பூ என்றும் இல்லை

ஒளிமுன் இருள் எங்கும் இல்லை

உலகின் இல்லாப் பொருள்கள் வினைப்படுத்திச் சொல்லும் போது முற்றும்மை கொடுக்கப்பட்டன.

மரபு வழுவமைதி

உலக வழக்கில் செயப்படு பொருளைக் கருத்தாவைப் போல வைத்து, அதன்மேல் அக்கருத்தாவின் வினையை ஏற்றிக் கூறுதலும் உண்டு.

(எ.டு) இம்மாடு யான் கொண்டது, இச்சோறு யான் கொடுத்தது, இவ்வெழுத்து யான் எழுதியது என்றவாறு அமையும்.

செயப்படு பொருளைச் செய்தது போலத்

தொழிற்படக் கிளத்தலும் வழக்கினுள் உரித்தே. நூற்பா 400

இந்நூற்பாவில் கிளத்தலும் என்ற உம்மையால் செயப்படு பொருளைக் கருத்தாவாக மட்டும் கூறுவதேயன்றிக் கருவி, நிலம், செயல், காலங்களையும் கருத்தாவாகக் கூறுதல் பொருந்தும் என்பதாகும்.

(எ.டு) கருவி – இவ்வெழுத்தாணி யான் எழுதியது

நிலம் – இவ்வீடு யான் இருந்தது

செயல் – இத்தொழில் யான் செய்தது

காலம் – இந்நாள் யான் பிறந்தது

மரபு வழுவாமல் காத்தலும் மரபு வழுவமைதியும்

அடையடுத்து வரும் மொழிகளாகிய பொருள், இடம், காலம் முதலாகிய ஆறும் இனம் உள்ளவை, இனம் இல்லாதவை என இரு வகைப்படும். இவை உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் வரும் தன்மையன.

பொருள்முதல் ஆறாம் அடைசேர் மொழிஇனம்

உள்ளவும் இல்லவும் ஆம்இரு வழக்கினும். நூற்பா 401

(எ.டு) உலக வழக்கு

| இனம் உள்ளவை | இனம் இல்லாதவை |
|---|---|
| நெய்க்குடம் | உப்பளம் – பொருள் |
| குளநெல் | ஊர்மன்று – இடம் |
| கார்த்திகை விளக்கு | நாளரும்பு – காலம் |
| பூமரம் | இலைமரம் – சினை |
| செந்தாமரை | செம்போத்து – குணம் |
| ஆடுபாம்பு | சோறு தயிர் – தொழில் |

செய்யுள் வழக்கு

“பொருட்பெண்டிர் பொய்மை முயக்கம்” – பொருள்

“கான்யாற் றடைகரை” – இடம்

“சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்கு” – குணம்

“ஆடரவு ஆட ஆடும் அம்பலத்தமிர்தே” – தொழில்

இவை இனம் உள்ளவை.

மரபு வழுவாமல் காத்தல்

அடைசேர் மொழியானது இனத்தைத் தருதலேயன்றி, அவ்விடத்திற்குப் பொருந்தினால் இனம் அல்லாததையும் தரும்.

(எ.டு) “பாவம் செய்தான் நரகம் புகுவான்” என்றவிடத்து, “புண்ணியம் செய்தான் சுவர்க்கம் புகுவான்” என்று இனத்தைத் தருதலேயன்றி, “அவன் இது செய்யின் இது வருமென்னும் அறிவிலி” என்னும் இனமல்லாததையும் தந்தது.

“அடைமொழி இனம்அல் லதும்தரும் ஆண்டுறின்” நூற்பா 402

மரபு வழுவாமல் காத்தலும் மரபு வழுவமைதியும்

ஓர் அடையும் ஒரு சினையும் ஒரு முதலும் ஒன்றையொன்று சிறப்பித்து வருதலும், இரண்டு அடைமொழிகள் முதலைச் சிறப்பித்து வருதலும் உலக வழக்காகும்.

(எ.டு) செங்கால்நாரை, முழங்கு திரைக்கடல் – ஓரடையும் ஒரு சினையும் ஒரு முதலும் ஆகி ஒன்றையொன்று சிறப்பித்து வந்தன.

மனைச்சிறு கிணறு, சிறுகருங்காக்கை – இரண்டு அடைகள் முதலைச் சிறப்பித்து வந்தன.

இரண்டு அடைமொழிகள் சினையைச் சிறப்பித்து வருதலும், இந்நிலை பிறழ்ந்து வருதலும் செய்யுள் வழக்காகும்.

"சிறுபைந்தூவி", "கருநெடுங்கண்" இதில் இரண்டு அடைகள் சினையைச் சிறப்பித்து வந்தன.

"பெருந்கோட் சிறுமருங்குல் பேரமர்க்கட் பேதை

சிறுநுதல் பேரமர்க்கட் செய்ய வாய்ஐய நுண்ணிடையாய்" – வரம்பு கடந்து வந்தன.

அடை சினை முதல் முறையடைதல் ஒன்றும் மரபு வழுவாமல் காத்தலும் மற்றைய மூன்றும் மரபு வழுவமைதியாகும்.

அடைசினை முதன்முறை அடைதலும் ஈரனடை

முதலோடு ஆதலும் வழக்கியல் ஈரடை

சினையொடு செறிதலும் மயங்கலும் செய்யுட்கே. நூற்பா 403

மரபு வழுவமைதி

இயற்கை, செயற்கை என்னும் இருவகைப் பொருள்களில் இயற்கைப் பொருளை ஆக்கமும் காரணமும் கெடாமல் இத்தன்மையது என்று கூறுதல் வேண்டும்.

(எ.டு) நிலம் வலிது, நீர் தண்ணிது, தீ வெய்து முதலியன.

"இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்" நூற்பா 404

இந்நூற்பாவின் வழி இயற்கைப் பொருளை இற்றென்னும் வினைக் குறிப்புச் சொல்லால் கூறுதலின் வழுவமைதியாகும்.

மரபு வழுவாமற் காத்தலும் வழுவமைதியும்

காரணம் முதலா ஆக்கம் பெற்றும்

காரணம் இன்றி ஆக்கம் பெற்றும்

ஆக்கம் இன்றிக் காரணம் அடுத்தும்

இருமையும் இன்றியும் இயலும் செயும்பொருள். நூற்பா 405

இந்நூற்பாவின் வழி, செயற்கைப் பொருள் நான்கு நிலைகளில் அமையும் என்று பவணந்தியார் கூறுகின்றார். அவை,

1. காரணச்சொல் முன்வர ஆக்கச் சொல் பின்வரும்.

(எ.டு) கடுவும் கைபிழி எண்ணெயும் பெற்றமையால் மயிர் நல்ல ஆயின. – இது வழுவாமற் காத்தல் ஆகும்.

2. காரணச்சொல் மறைந்து நிற்க ஆக்கச் சொல் வரப்பெறுதல்.

(எ.டு) மயிர் நல்ல ஆயின, பயிர் நல்ல ஆயின.

3. ஆக்கச்சொல் மறைந்து நிற்கக் காரணச்சொல் வரப் பெறுதல்.

(எ.டு) கடுவும் கைபிழி எண்ணெயும் பெற்றமையால் மயிர் நல்ல, எருப்பெய்து இளங்களை கட்டு நீர் கால் யாத்தமையால் பயிர் நல்ல.

4. ஆக்கம், காரணம் என்னும் இரு வகைச்சொல்லும் மறைந்து வரப்பெறுதல்.

(எ.டு) மயிர் நல்ல, பயிர் நல்ல.

மேற்கூறியவை வழுவமைதியாகும்.

மரபு வழுவாமல் காத்தல்

தம்மிடம் இல்லாதப் பொருள்களை இல்லை எனக் கூறப்புகின், வினவியதற்கு இனமாகத் தம்மிடம் உள்ள பொருளைக் கூறி, அச்சொல்லைக் கொண்டு அதனை இல்லை என்றும் உள்ள பொருளாயின் இன்னை அளவு உண்டு என்று கூறியும் வினாவும் விடையுமாகச் சொற்சுருக்கமாகக் கூறுவர்.

(எ.டு)

1. 'பயறு உண்டோ வணிகரே' என்றார்க்கு அஃது இல்லை என்னாமல் 'உழுந்து உண்டு', 'உழுந்தும் துவரையும் உண்டு' என்று அதன் இனத்தைக் கூறுவர். இவ்வின மொழிகள் பயறில்லை என்னும் விடைப் பொருளையும், உழுந்துண்டோ, துவரை உண்டோ என்னும் வினாக்களும் அதற்கான விடைகளும் பெருகாமல் காத்து நிற்கும்.

2. 'பயறுண்டு வணிகரே' என்றவர்க்கு உண்டு என்று பதிலுரைத்தோர் இரு கலமுண்டு, இரு தூணியுண்டு என்று அதன் அளவைச் சொல்லுவர். இவரின் பதில்கள் பயறுண்டு என்னும் பதிலைத் தருவதுடன் எவ்வளவு உண்டு என்னும் வினாவும் அதற்கு விடையும் பெருகாமல் காத்து நிற்கும்.

தம்பால் இல்லது இல்எனின் இனனாய்

உள்ளது கூறி மாற்றியும் உள்ளது

சுட்டியும் உரைப்பர் சொற்கருங் குதற்கே.

என்னும் நூற்பா (406) மரபு வழுவாமல் காத்தல் பற்றிய செய்தியினைக் கூறியது.

ஈ, தா, கொடு

ஈ, தா, கொடு என்னும் மூன்று சொற்களை முறையே இழிந்தவன், ஒப்பவன், உயர்ந்தவன் ஆகியோர் கூறும் இரப்புரைகள் ஆகும்.

ஈ என்பது இழிந்தோன் உயர்ந்தவனிடத்து இரத்தலையும், தா என்பது ஒப்போன் ஒப்போன் இடத்து இரத்தலையும், கொடு என்பது உயர்ந்தோன் இழிந்தவனிடம் இரத்தலையும் கொடுப்பதாகும்.

ஈதா கொடுஎனும் மூன்றும் முறையே

இழிந்தோன் ஒப்போன் மிக்கோன் இரப்புரை. நூற்பா 407

(எ.டு) தந்தாய் ஈ – இழிந்தோன் இரப்பு

தோழா தா – ஒப்போன் இரப்பு

மைந்தா கொடு – உயர்ந்தோன் இரப்பு

மரபு வழுவமைதி

வெளிப்படையின்றி குறிப்பாகப் பொருள் அறியப்படும் சில சொற்களும் உண்டு.

முன்னத்தி உணருங் கிளவியும் உளவே. நூற்பா 408

(எ.டு) "குழை கொண்டு கோழி எறியும் வாழ்க்கையர்" – பெரும் செல்வ வளமுடையவர் என்பது குறிப்பினால் உணரப்பட்டது.

கேட்பவர் வருத்தப்படாமல் பொருள் விளங்கச் சொல்லுதல் மரபாதலால் இது வழுவமைதியாகும்.

கேட்குந போலவும் கிளக்குந போலவும்

இயக்குந போலவும் இயற்றுந போலவும்

அஃறிணை மருங்கினும் அறையப் படுமே. நூற்பா 409

1. இரு திணையுள் அஃறிணையிடத்துக் கேளாதனவற்றைக் கேட்பன போலச் சொல்லுதல்.

(எ.டு) "நன்னீரை வாழி அனிச்சமே"

2. பேசாதனவற்றைப் பேசுவன போலச் செய்தல்.

(எ.டு) "பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும்"

3. இயங்காதனவற்றை இயங்குவன போலச் செய்தல்.

(எ.டு) "இவ்வழி அவ்வூர்க்குப் போகும்"

4. செய்யாதனவற்றைச் செய்வனப் போலக் காணுதல்

(எ.டு) தன்னெஞ்சே தன்னைச் சுடும்"

உருவகத்திலும் உவமையிலும் இருதிணைகளும் சினையும் முதலும் பிறழ்ந்து வரும்.

உருவகம்

அரசனாகிய சிங்கத்திற்குப் பகைவர் கூட்டமாகிய யானைகள் அஞ்சியோடின. – உயர்திணை அஃறிணையோடு மயங்கியது.

கல்வி மங்கையை நல்லோர் விரும்புவார். – அஃறிணை உயர்திணையோடு மயங்கியது.

அரசனுக்குத் தம்பியர் இருவரும் இரண்டு தோள்கள். – உயர்திணை முதல் உயர்திணைச் சினையோடு மயங்கியது.

முகமாகிய மதி – உயர்திணைச் சினை அஃறிணை முதலோடு மயங்கியது.

உவமை

மயில் போலும் மங்கை – உயர்திணை அஃறிணையோடு மயங்கியது.

நெற்பயிர்கள் கல்வி உடையோர் போலிறைஞ்சிக் காய்த்தன – அஃறிணை உயர்திணையோடு மயங்கியது.

கயல்போலும் கண் – உயர்திணைச் சினை அஃறிணை முதலோடு மயங்கியது.

தளிர்போலும் மேனி – உயர்திணை முதல் அஃறிணைச் சினையோடு மயங்கியது.

உருவக உவமையில் திணைசினை முதல்கள்

பிறழ்தலும் பிறவும் பேணினர் கொளலே. நூற்பா 410

இந்நூற்பாவில் 'பிறவும்' என்றதால், 'இவன் கலைமகளுக்கு ஒப்பானவன்' எனப் பால் மயங்கிக் கூறுதலும் உண்டு.

பவணந்தியார் இதுவரை வழுக்களின் வகைகளையும், வழுவமைதிகளைப் பற்றியும் கூறிய செய்திகளைப் பார்த்தோம். இனி, செய்யுள்களில் பொருளுணர்ந்து அறிந்து கொள்ளும் பொருள்கோள் பற்றிய செய்திகளைத் தெரிந்து கொள்வோம்.

3.2.3.4 பொருள்கோள்

செய்யுளுள் சொற்கள் ஒன்றோடொன்று தொடர்பின்றி இடம் மாறி அமைந்த போதிலும், அந்தச் சொற்களை எல்லாம் பொருளுக்கேற்ப ஒன்றோடொன்று இணைத்துப் பொருள் கொள்வதற்குப் பொருள்கோள் என்று பெயர்.

இப்பொதுவியலின் இறுதிப்பகுதியில் பணவந்தியார் எண்வகைப் பொருள்கோள் பற்றிப் பேசுகின்றார். அவை, யாற்றுநீர், மொழிமாற்று, நிரல்நிறை, விற்பூட்டு, தாப்பிசை, அளைமறிபாப்பு, கொண்டுகூட்டு, அடிமறி மாற்று என எண்வகை பொருள்கோள் ஆகும்.

யாற்றுநீர் மொழிமாற்று நிரனிறை விற்பூண்

தாப்பிசை அளைமறி பாப்புக் கொண்டுகூட்டு

அடிமறி மாற்றெனப் பொருள்கோள் எட்டே. நூற்பா 411

இவ் எண்வகைப் பொருள்கோளின் இலக்கணத்தையும் எடுத்துக்காட்டுகளையும் முறையே காணலாம்.

1. ஆற்றுநீர்ப் பொருள்கோள்

எண்வகைப் பொருள்கோளில் முதலாவதாக உள்ளது ஆற்றுநீர்ப் பொருள்கோளாகும். இது. மொழிமாற்று முதலிய பிற பொருள்கோள்களைப் போல் பிறழ்ந்து செல்லாமல், யாற்றுநீர் ஒழுக்கைப் போல் அடிதோறும் சிறந்த பொருள் அமைந்து நடப்பது.

அதாவது, சொற்கள் முன், பின் மாறாமல் ஒரே சீராய் பொருள் கொள்ளுமாறு அமைவது யாற்றுநீர்ப் பொருள்கோளாகும்.

மற்றைய நோக்காது அடிதோறும் வான்பொருள்

அற்றற்று ஒழுகுமஃது யாற்றுப் புனலே. நூற்பா 412

(எ.டு) சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் தோற்றம்போல்

மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்

செல்வமே போற்றலை நிறுவித் தேர்ந்தநூற்

கல்விசேர் மாந்தரி னிறைஞ்சிக் காய்த்தவே.

இப்பாடலில் 'சொல்' என்னும் எழுவாயை முதலாகக் கொண்டு அதன் தொழிலாகிய இருந்து, ஈன்று, நிறுவி, இறைஞ்சி என்னும் வினையெச்சங்களைத் தழுவி 'காய்த்தவே' என்னும் பயனிலையை இறுதியில் தந்து முடித்திருப்பதால் இப் பொருள்கோள் யாற்றுநீர்ப் பொருள்கோளாகும்.

2. மொழிமாற்றுப் பொருள்கோள்

ஏற்ற இரண்டு பயனிலைகளுக்குப் பொருந்தும் மொழிகளை மாற்றி, ஏலாதப் பயனிலைகளுக்குத் தனித்த னியே கூட்டி, ஓரடிக்குள் வழங்குவது.

ஏற்ற பொருளுக்கு இயைபு மொழிகளை

மாற்றிஓர் அடியுள் வழங்கல் மொழிமாற்றே. நூற்பா 413

(எ.டு) சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய

யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப

காகை நாடன் சுனை.

இப்பாடலடிகளில் சுரை மிதப்ப, அம்மி யாழ, யானைக்கு நிலை, முயற்கு நீத்து என வருதல் வேண்டும். ஆனால் முறை மாறி வந்துள்ளன. எனவே, பொருள் நிலைக்கு ஏற்ப மாற்றிக் கூறுதல் வேண்டும்.

3. நிரல்நிறைப் பொருள்கோள்

பெயரும் வினையுமாகிய சொற்களையும், அவை கொள்ளும் பெயரும் வினையுமாகிய பயனிலைகளையும் வேறு வேறு நிரலாக நிறுத்தி, முறையாகவேனும் எதிராகவேனும் இதற்கு இது என்னும் பயனிலை என்னும் பொருள்படக் கூறுவது நிரல்நிறைப் பொருள்கோளாகும்.

(எ.டு) கொடிகுவளை கொட்டை நுசுப்புண்கண் மேனி

மதிபவள முத்த முகம்வாய் முறுவல்

பிடிபிணை மஞ்ஞை நடைநோக்குச் சாயல்

வடிவினளே வஞ்சி மகள்.

இப்பாடலில், கொடி நுசுப்பு, குவளை உண்கண், கொட்டை மேனி எனவும், மதிமுகம், பவளம் வாய், முத்தம் முறுவல் எனவும், பிடி நடை, பிணை நோக்கு, மஞ்ஞை சாயல் எனவும் பெயர்ச்சொற்களும் பெயர்ப் பயனிலைகளுமாய் நின்ற முறையே நிரல்நிறையாகும்.

எதிர் நிரல்நிறைப் பொருள்கோள்

களிறுங் கந்தும் போல நளிகடற்

கூம்புங் கலனுந் தோன்றுந்

தோன்றன் மறந்தோர் துறைகெழு நாட்டே.

இச்செய்யுளில், களிறு கலன், கந்து கூம்பு எனப் பெயர்ச் சொற்களுக்குப் பெயர்ப் பயனிலைகளாய் நின்ற எதிர் நிரல்நிறைப் பொருள்கோளாகும்.

பெயரும் வினையுமாம் சொல்லையும் பொருளையும்

வேறு நிரனிறீஇ முறையினும் எதிரினும்

நேரும் பொருள்கோள் நிரனிறை நெறியே.

என்னும் நூற்பா (414) நிரல்நிறைப் பொருள்கோள் பற்றிய செய்தியினைக் கூறியது.

4. பூட்டுவிற் பொருள்கோள்

ஒரு வில்லின் கீழ்முனையில் பூட்டிய நாணை மேல் முனைக்கண் இழுத்து முடிவது போல ஒரு செய்யுளின் இறுதிக்கண் நின்ற சொல்லை முதற்கண் நின்ற சொல்லுடன் பொருள்படுமாறு இணைப்பது பூட்டுவிற் பொருள்கோளாகும்.

எழுவாய் இறுதி நிலைமொழி தம்முள்

பொருள் நோக்குடையது பூட்டுவில் லாகும். நூற்பா 415

(எ.டு) திறந்திடுமின் றீயவை பிற்காண்டும் மாதர்

இறந்து படிற்பெரிதா மேதம் உறந்தையர்கோன்

தண்ணார மார்பிற் றமிழர் பெருமானைக்

கண்ணாரக் காணக் கதவு.

இச்செய்யுளில் இறுதியில் நின்ற 'கதவு' என்னும் சொல் திறந்திடுமின் என்ற முதல் மொழியுடன் சென்று சேர்ந்து பொருள் தந்து நின்றது.

5. தாப்பிசைப் பொருள்கோள்

நடுநின்ற ஊஞ்சல் முன்னும் பின்னும் செல்வது போல, ஒரு செய்யுளின் இடையில் நிற்கும் சொல் முன்னும் பின்னும் சென்று இணைந்து பொருள் தருவது தாப்பிசையாகும்.

இடைநிலை மொழியே யேனையீ ரிடத்தும்

நடந்து பொருளை நண்ணுதல் தாப்பிசை. நூற்பா 416

(தாம்பு – கயிறு – இங்கு கயிற்றினைக் குறித்தது. இசை – சொல்)

(எ.டு) உண்ணாமை யுள்ள துயிர்நிலை ஊனுண்ண

அண்ணாத்தல் செய்யா தளறு.

இங்கு 'ஊன்' என இடையிலே நின்ற சொல் ஊனுண்ணாமை உள்ளது என முன்னும், ஊனுண்ண எனப் பின்னும் சென்று இணைந்து பொருள் தருவதால் தாப்பிசைப் பொருள்கோள் ஆயிற்று.

6. அளைமறிபாப்புப் பொருள்கோள்

புற்றிலே தலைவைத்து மடங்கிக் கிடக்கும் பாம்பு போன்று, ஒரு செய்யுளின் இறுதியில் நின்ற சொல் அதன் இடையிலும் பின்னர் முதலிலும் சென்று இயைந்து பொருள் தருவது.

செய்யுள் இறுதி மொழியிடை முதலினும்

எய்திய பொருள்கோள் அளைமறி பாப்பே. நூற்பா 417

(அளை – புற்று, பாப்பு – பாம்பு)

தாழ்ந்த வுணர்வினராய்த் தாளுடைந்து

தண்டூன்றித் தளர்வார் தாமுஞ்

சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து

நாற்கதியிற் சுழல்வார் தாமும்

மூழ்ந்த பிணிநலிய முன்செய்த

வினையென்றே முனிவார் தாமும்

வாழ்ந்த பொழுதினே வானெய்து

நெறிமுன்னி முயலா தாரே.

இச்செய்யுளுள், வாழ்ந்த பொழுதினே வானெய்தி

நெறிமுன்னே முயலாதார்

மூழ்ந்த பிணிநலிய முன்செய்த வினை என்றே

முனிவார், சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து

நாற்கதியில் சுழல்வார், தாழ்ந்த உணர்வினராய்த்

தாள் உடைந்து தண்மூன்றுத் தளர்வார்

என இறுதியில் நின்ற பொருள் தலைகீழாய் இடையிலும் முதலிலும் சென்ற இயைந்ததால் அளைமறியாப்புப் பொருள்கோள் ஆயிற்று.

7. கொண்டுகூட்டுப் பொருள்கோள்

செய்யுள் அடிகள் பலவற்றிலும் பல சொற்கள் இருந்த போதிலும் எடுத்த பொருளுக்கு ஏற்ற இடங்களில் சொற்களைக் கூட்டியுரைப்பது.

யாப்படி பலவினும் கோப்புடை மொழிகளை

ஏற்புழி இசைப்பது கொண்டு கூட்டே. நூற்பா 418

தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட பைங்கூந்தல்

வெண்கோழி முட்டை யுடைத்தன்ன மாமேனி

யஞ்சனத் தன்ன பசலை தணிவாமே

வங்கத்துச் சென்றார் வரின்.

இதனை, வஞ்கத்துச் சென்றார் வரின்,

அஞ்சனத்தன்ன பைங்கூந்தல் மாமேனி எனவும்,

தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட முட்டை எனவும்,

முட்டையுடைத்தன் பசலை தளருவாம் எனவும் கொண்டு கூட்டிப் பொருள் கொள்ள வேண்டும்.

8. அடிமறிமாற்றுப் பொருள்கோள்

பொருளுக்குப் பொருந்துமிடத்தில் எடுத்துக் கூட்டியுரைக்கும் அடியை உடையனவும், யாதேனும் ஓர்

அடியை எடுத்து அச்செய்யுளின் இறுதி, நடு, முதல் ஆகிய இடங்களில் கூட்டிய போதும் பொருள் சிறப்பும் இசையும் மாறாது நிற்பனவும் அடிமறிமாற்றுப் பொருள்கோள் ஆகும்.

ஏற்புழி யெடுத்துடன் கூட்டுறும் அடியவும்

யாப்பீறு இடைமுத லாக்கினும் பொருள்இசை

மாட்சியும் மாறா அடியவும் அடிமறி. நூற்பா 419

(எ.டு) மாறாக் காதலர் மலைமறந் தனரே

யாறாக் கட்பனி வரலா னாலே

வேறா மென்றோள் வளைநெகி மும்மே

கூறாய் தோழியான் வாழு மாறே.

இச்செய்யுளில் எந்த அடியை எங்கு மாற்றிப் பொருள் கொண்டாலும் பொருளும் ஓசையும் மாறுபடுவதில்லை.

தன்மதிப்பீட்டு வினாக்கள்

II.

1. எழுவகை வழுக்களின் பெயர்களைக் கூறுக.
2. பாலிட வழுவமைதி குறித்த நூற்பாவை எழுதுக.
3. வினா மற்றும் விடைகளின் வகைகள் எத்தனை?
4. எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உயர்ந்தோர் செப்பி னரப்படிச் செப்புதல் ........ ஆகும்.
5. இயற்கைப் பொருளை யிற்றெனக் கிளத்தல் நூற்பா எவ்வழுவமைதியைப் பற்றிக் கூறுகிறது?
6. இரண்டு சொற்களில் ஒன்றைப் பிரித்தால் பொருள் தருவது அடுக்குத்தொடர். சரியா? தவறா?
7. முறை மாறி உள்ள சொற்களைப் பொருளுக்கேற்றவாறு இணைக்கும் முறை ...........
8. சுரையாழ அம்மி மிதப்ப வரையனையை

   யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப

   கானக நாடன் சுனை. – இது எவ்வகைப் பொருள்கோள்.
9. செய்யுளின் இடையில் நின்ற சொல் முன்னும் பின்னும் சென்ற இணைந்து பொருள் தருவது .................... ஆகும்.
10. நன்னூல் கூறும் பொருள்கோளின் எண்ணிக்கை எட்டு. சரியா? தவறா?

தொகுப்புரை

நால்வகைச் சொற்களில் முன்னர் வந்த பெயருக்கும் வினைக்கும் பின்னர் வரும் இடைக்கும் உரிக்கும் உரிய பொது இலக்கணங்களைச் சிங்க நோக்காக அறிவித்தலால் பொதுவியல் என்னும் பெயர் பெற்று மூன்றாம் இயலாக அமைந்துள்ளமையை அறிந்து கொண்டோம்.

இவ்வியலின் தொடக்கத்தில் பால் பொதுமை, திணை பாலிடப் பொதுமை நீங்கும் நெறி, பெயர் வினையிடத்து ஈற்றயல் திரிதல், உருபும் வினையீறும் எதிர்மறையில் திரியாமை, உருபும் வினையும் அடுக்கி வருதல், இடைப்பிறவரல் முதலிய செய்திகளும், எச்சங்களின் முடிபு என்னும் பகுதியில் பெயரெச்சம் முதல் குறிப்பெச்சம் இறுதியாகப் பத்து எச்சங்கள் பற்றிய செய்திகளை அறிய முடிந்தது.

தொகைநிலைத் தொடர்மொழி பற்றிய செய்திகளும், வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை, அன்மொழி ஆகியவற்றின் தொகைநிலை பற்றிய செய்திகளும் அவற்றின் விளக்கங்களையும் சான்றுகளுடன் அறிய முடிந்தது.

தொகாநிலைத் தொடர்மொழி அமையும் முறையும் வினைமுற்றுத் தொடர் முதல் அடுக்குத் தொடர் ஈறாக ஒன்பது வகையான தொகாநிலைத் தொடர்மொழிகளின் வகைகளையும் அறிய முடிந்தது.

இவ்வியலில் திணை, பால், இடம், காலம், வினா, விடை ஆகிய ஆறு வகை வழுக்களும், அவற்றின் வழுவமைதிகளையும் ஒருசேர, பவணந்தியார் இவ்வியலில் விளக்கியுள்ளமையை அறிந்து கொண்டோம்.

செய்யுளில் சொற்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்பின்றி இடம் மாறி அமையினும் அந்தச் சொற்களைப் பொருளுக்கு ஏற்ப இணைத்துக் கூறும் பொருள்கோள் பற்றிய செய்தியும், பொருள்கோளின் வகைகளும் பொதுவியல் மூலம் அறிந்து கொண்டோம்.

பயிற்சி வினாக்கள்

சிறு வினாக்கள்

1. செய்யுளில் ஈற்றயல் எழுத்துத் திரியுமாற்றை எழுதுக.
2. இடைப்பிறவரல் என்றால் என்ன?
3. தொகைநிலைத்தொடர் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
4. பொருள் மயக்கம் என்றால் என்ன?
5. வழு என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
6. மரபாவது யாது?
7. ஒருபொருட் பன்மொழி என்றால் என்ன?
8. 'இரட்டைக்கிளவி இரட்டிற் பிரிந்திசையா' – பொருள் கூறி, உதாரணங்கள் தருக.
9. தம்பால் இல்லதும் உள்ளதும் கூறுமிடத்து எவ்வாறு கூற வேண்டும்?
10. பொருள்கோள் என்றால் என்ன?
11. மரபாவது யாது?

குறு வினாக்கள்

1. இடைப்பிறவரல் என்றால் என்ன? விளக்குக.
2. பத்து வகை எச்சங்களையும் எழுதி, உதாரணங்களுடன் விளக்குக.
3. அன்மொழித்தொகை என்றால் என்ன? எடுத்துக்காட்டுகள் தருக.
4. தொகாநிலைத் தொடர்மொழிகள் யாவை? எடுத்துக்காட்டுகள் தருக.
5. திணை, பால், வழுவமைதிகளைத் திரட்டி எழுதுக.
6. கால வழுவமைதியை விளக்குக.
7. அடுக்குத்தொடர், இரட்டைக்கிளவி – இவற்றிடையே உள்ள வேறுபாடுகளை எழுதுக.
8. மரபு வழுவமைதி குறித்த செய்திகளை எழுதுக.

பெரு வினாக்கள்

1. தொகைநிலைத் தொடர்மொழிகளைச் சான்றுகளுடன் விளக்குக.
2. வழுக்களும் அமைதிகளும் குறித்து நன்னூலார் கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.
3. பொருள்கோள் இலக்கணம் கூறி, அதன் வகைப்பாடுகளைச் சான்றுகளுடன் விளக்குக.
4. அறு வகை வினா, எண்வகை விடை – குறித்த செய்திகளைத் தொகுத்துரைக்க.

தன்மதிப்பீட்டு விடைகள்

I.

1. பொதுவியல்
2. ஆறு
3. வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை.

4. சரி.

5. உம்மைத்தொகை

6. ஏழு

7. வினைமுற்றுத்தொடர், பெயரெச்சத்தொடர், வினையெச்சத்தொடர், எழுவாய்த் தொடர், விளித்தொடர், வேற்றுமை, தொகாநிலைத்தொடர், இடைச்சொற்றொடர், உரிச்சொற்றொடர், அடுக்குத்தொடர்.

II.

1. திணை, பால், இடம், பொருள், வினா, விடை, மரபு.

2. ஒருமையிற் பன்மையும் பன்மையி னொருமையும்

ஓரிடம் பிறவிடந் தழுவலு முளவே. (நூ. 380)

3. வினா – 6. விடை – 8.

4. மரபு

5. மரபு வழுவமைதி

6. சரி

7. பொருள்கோள்

8. மொழிமாற்று பொருள்கோள்

9. தாப்பிசைப் பொருள்கோள்

10. சரி.

3.2.4 இடையியல்

3.2.4.1 இடைச்சொல்லின் இலக்கணமும் வகைப்பாடும் – நூற்பா 420.

3.2.4.2 இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள் – நூற்பா 421.

3.2.4.3 ஏகாரம், ஓகாரம் முதல் எல்லாவிடத்தும் வரும் அசைச் சொல் இறுதியாக உள்ள இடைச்சொற்கள் வரை – நூற்பா 422 முதல் 440 வரை.

நால்வகைச் சொற்களில் பெயர்ச் சொற்கள், வினைச் சொற்களைப் பற்றியும், இவ்விரண்டிற்கும் பின்னர்க் கூறப்படும் இடைச்சொற்கள், உரிச்சொற்களைப் பற்றியும் ஆகிய நால்வகைச் சொற்களுக்கும் பொதுவான செய்திகளைப் பொதுவியலிலும் பார்த்தோம். இனி, நன்னூல் சொல்லதிகாரத்தின் நான்காம் இயலாகிய இடையியலில் இடைச்சொற்கள் பற்றிய செய்திகளைக் காணலாம்.

### 3.2.4.1 இடைச்சொல்லின் இலக்கணமும் வகைப்பாடும்

பெயர்ச்சொல், வினைச்சொல் போலின்றி, அவற்றிற்கு இடைப்பட்டதாய் அப்பெயர், வினைகளுக்கு முன்னோ, பின்னோ ஏதேனும் ஒருவிடத்து, ஒன்றாகவும் பலவாகவும் வந்து அப்பெயர், வினைகட்கு அகத்துறுப்பாகவேனும், புறத்துறுப்பாகவேனும் ஒன்றுபட்டு நடப்பது இடைச்சொல்லாகும். இவ் இடைச்சொல் எட்டு வகையில் அமையும். அவை,

1. ஐ, ஆல், கு, இன், அது, கண் என்னும் வேற்றுமை உருபுகள்.
2. அன், ஆன், அள், ஆள் முதலிய விகுதிகளும், கிறு, கின்று முதலிய இடைநிலைகளும்.
3. அன், ஆன், இன், அல், அற்று, இற்று முதலிய சாரியைகள்.
4. போல, புரைய, ஒப்ப, உறழ முதலிய ஒப்பு உருபுகள்.
5. ஏ, ஓ, உம், தில், மன் முதலிய தத்தம் பொருள் தரும் இடைச்சொற்கள்.
6. ஒடு, தெய்ய முதலிய இசைநிறைக் கிளவிகள்.
7. யா, கா, பிற, பிறக்கு முதலிய அசைச் சொற்கள்.
8. அம்மென, இம்மென, நுண்ணென முதலியன குறிப்பால் பொருள் உணர்த்துபவை.

வேற்றுமை வினைசா ரியையொப் புருபுகள்

தத்தம் பொருள விசைநிறை யசைநிலை

குறிப்பெனெண் பகுதியிற் றனித்திய லின்றிப்

பெயரினும் வினையினும் பின்முன் னோரிடத்

தொன்றும் பலவும்வந் தொன்றுவ திடைச்சொல். நூற்பா 420

இந்நூற்பாவில் இடைச்சொல்லின் இலக்கணமும் இடைச்சொல் வகைப்பாடும் கூறப்பட்டுள்ளன. இடைச்சொல் தனித்து நடத்தலின்றி பெயர் வினைகளின் இடமாக நடத்தலின் இடைச்சொல் எனப்பட்டது. முன்னும் பின்னும் வருமாயினும் பெரும்பான்மை சொற்களுக்கு இடையில் வருதலால் இடைச்சொல் என்றும் கூறுவர்.

### 3.2.4.2 இடைச்சொல்லின் பொருள்கள்

இடைச்சொல் பதினான்கு வகைப் பொருள்களை உணர்த்துகின்றன என்று பவணந்தியார் குறிப்பிடுகிறார். அவை தெரிநிலை, தெளிவு, ஐயம், முற்று, எண், சிறப்பு, எதிர்மறை, எச்சம், வினா, விருப்பம், ஒழியிசை, பிரிநிலை, கழிவு, ஆக்கம் முதலியவையும் இவை போல்வன பிறவும் 'தத்தம் பொருள' என்ற இடைச்சொற்களின் பொருள்களாகும்.

தெரிநிலை தேற்றம் ஐயமுற் றெண்சிறப்

பெதிர்மறை யெச்சம் வினாவிழை வொழியிசை

பிரிப்புக் கழிவாக்க மின்னை விடைப்பொருள். நூற்பா 421

மேற்கூறிய நூற்பாவில் இன்னன என்றதனால் சுட்டு, வினா, காலம், இடம், எல்லை, இடப்பன்மை, பயனின்மை, விகற்பகம், இரக்கம், உயர்வு, அச்சம், இகழ்ச்சி முதலிய பொருள்களையும் உணர்த்தும் இடைச்சொற்கள் உண்டு என்பர். மேலும் குறிப்புப் பொருளில் ஒலிக்குறிப்பு (துடுமெண), அச்சக் குறிப்பு (துண்ணென), விரைவுக்குறிப்பு (சரேலென) என்னும் மூன்று நிலைகளில் பொருள் உணர்த்தும் இடைச் சொற்கள் உண்டு.

### 3.2.4.3 ஏகாரம், ஓகாரம் முதல் எல்லாவிடத்தும் வரும் அசைச் சொல் இறுதியாக உள்ள இடைச்சொற்கள் வரை

ஏகார இடைச்சொல்

ஏகார இடைச்சொல் பிரிநிலை, வினா, எண், ஈற்றசை, தேற்றம், இசைநிறை என்னும் ஆறு பொருளைத் தரும்.

(எ.டு) அவருள் இவனே கள்வன் – மற்றவரிடமிருந்து ஒருவனைப் பிரித்தலில் பிரிநிலையாகும்.

நீயே கொண்டாய்? – நீயா கொண்டாய் என்னும் பொருளைத் தருதலால் வினா.

நிலமே, நீரே, தீயே, வளியே, வானமே – நிலமும் நீரும் தீயும் வளியும் வானமும் எனப் பொருள்பட எண்ணி நிற்றலால் எண் என்னும் பொருளை உணர்த்தும்.

ஈற்றசை – சொல்லின் ஈற்றில் பொருளின்றி அசையாய் வருதல். "என்றும் என்றோள் பிரிபறியலரே" – நற்றிணை பா–1. (அறியலர் + ஏ)

தேற்றம் (தெளிவுப்பொருள்) – உண்டே மறுமை – இங்கு உண்டு என்பதற்கு ஐயமில்லை என்னும் தெளிவுப் பொருளைத் தருகிறது.

இசைநிறை – பொருளின்றிச் செய்யுளில் இசையை நிறைக்க வருவது. 'ஏயே யிவளொருத்தி பேடியே என்றார்" – இசைநிறைத்தொடர்

வேறு பொருளின்றி பொருளாய் வந்துள்ளது.

பிரிநிலை வினாஎண் ஈற்றசை தேற்றம்

இசைநிறை யெனவா றேகா ரம்மே.

என்னும் நூற்பா (422) ஏகார இடைச்சொல் உணர்த்தும் பொருளினைச் சுட்டியது.

ஓகார இடைச்சொல்

ஓகார இடைச்சொல் ஒழியிசை, வினா, சிறப்பு, எதிர்மறை, தெரிநிலை, கழிவு, அசைநிலை, பிரிப்பு என்னும் எட்டுப் பொருள்களில் வரும்.

1. ஒழியிசை – படிக்கவோ வந்தாய் – படித்தற்கு வரவில்லை, விளையாடுவதற்கு வந்தாய் என்று ஒழிந்த சொற்களைத் தருகிறது.

2. வினா – குற்றியோ மகனோ – குற்றியா? மகனா? என்று வினாப் பொருளைத் தருகின்றது.

3. சிறப்பு – உயர்வு சிறபபு, இழிவு சிறப்பு என்று இரு வகைப்படும்.

உயர்வு சிறப்பு – ஓ ஓ! பெரியள் – ஒருவனின் பெருமையாகிய உயர்வின் மிகுதியை விளக்குவது.

இழிவு சிறப்பு – ஓ ஓ! கொடியன் – ஒருவனின் கொடுமையாகிய இழிவு நிலையை விளக்குவது.

4. எதிர்மறை – அவனோ கொண்டான் – அவன் கொண்டிலன் என்னும் பொருளைத் தருவது.

5. தெரிநிலை – ஆணோ அதுவுமன்று; பெண்ணோ அதுவுமன்று. இங்கு ஆண், பெண் தன்மை இல்லாமையைத் தெரிவிப்பதால் தெரிநிலை.

6. கழிவு – ஓ ஓ கல்லூரியில் படித்திலேன் – இளமையில் கல்லாததை எண்ணி வாழ்நாளை வீணாகக் கழித்ததற்கு இரங்குவது.

7. அசைநிலை – காணிரிய வம்மினோ (அம்மின் + ஓ) – வேறு பொருளின்றி நிற்கிறது.

8. பிரிநிலை – இவனல்லவோ ஆண் – ஆடவரினின்றும் ஒருவனைப் பிரித்து நிற்றலால் பிரிநிலை.

“ஒழியிசை, வினாச்சிறப் பெதிர்மறை தெரிநிலை

கழிவசை நிலைபிரிப் பெனவெட் டோவே.” நூற்பா 423

என, என்று என்னும் இடைச்சொற்கள்

என, என்று என்னும் இடைச்சொற்கள் வினை, பெயர், குறிப்பு, இசை, எண், பண்பு ஆகிய ஆறு பொருளிலும் வரும்.

வினைபெயர் குறிப்பிசை யெண்பண் பாறினும்

எனவெனு மொழிவரு மென்று மன்றே. நூற்பா 424

(எ.டு) மைந்தன் பிறந்தானெனத் தந்தை உவந்தான் – என்னும் இடைச்சொல் வினையொடு இயைந்தது.

அழுக்காறென பாவி – பெயரொடு இயைந்தது.

பொள்ளெனவாங்கே புறம்வேரார் – குறிப்பொடு இயைந்தது.

பொம்மென வண்டலம்பும் புரிகுழலை – இசையொடு இயைந்தது.

நிலமென நீரெனத் தீயென வளியென வானெனப் பூதங்களைந்து – எண்ணென இயைந்தது.

வெண்ளென விளர்த்தது – என என்னும் இடைச்சொல் பண்பொடு இயைந்தது.

மேற்கூறியவாறே ‘என்று’ என்னும் இடைச்சொல்லையும் பொருத்திப் பார்த்தல் வேண்டும்.

உம்மை இடைச்சொல்

உம்மை இடைச்சொல், எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, அளவை (எண்), தெரிநிலை, ஆக்கம் என்னும் எட்டும் பொருள்களில் வரும். நூற்பா 425

(எ.டு) 1. எதிர்மறை – திசைகள் மாறினும் சான்றோர் மாறார். – திசைகள் மாறினும் என்பது, மாறா என்னும் எதிர்மறைப் பொருளைத் தந்தது.

2. சிறப்பு – உயர்வு, இழிவு என்னும் இருநிலைகளில் வரும்.

உயர்வு சிறப்பு – “குறவரும் மருளும் குன்றம்” – இங்கு குன்றின் உயர்வைக் குறவர் வாயிலாகச் சிறப்பித்தது.

இழிவு சிறப்பு – புலையனும் விரும்பாப் புன்புலால் யாக்கை – உடம்பின் இழிவைப் புலையன் வாயிலாகச் சிறப்பித்தது.

3. ஐயம் – தேர்வு எழுதினாலும் எழுதுவான் – இங்கு துணியாமையால் ஐயப் பொருளை உணர்த்தியது.

4. எச்சம் – இறந்தது தழுவிய எச்சம், எதிரது தழுவிய எச்சம் என்று உம்மை இரு வகைப்படும்.

இறந்தது தழுவிய எச்சம் – சாத்தனும் வந்தான் – இது கொற்றன் வந்ததன்றி என்னும் பொருளைத் தந்தால் இறந்தது தழீஇய எச்சமாகும்.

எதிரது தழுவிய எச்சம் – கொற்றனும் வருவான் என்னும் பொருளைத் தந்தால் எதிரது தழீஇய எச்சமாகும்.

5. முற்று – எல்லாரும் வந்தார் – இங்கே பொருளைத் தருதலால் முற்றாகும்.

6. எண் – இரவும் பகலும்.

7. தெரிநிலை – ஆணும் அன்று பெண்ணும் அன்று – இங்கே இன்னது என்று தெரியாது நின்றது.

8. ஆக்கம் – பாலுமாயிற்று – இதுவே மருந்துமாயிற்று என்னும் பொருளைத் தந்தது.

எதிர்மறை சிறப்புடைய மெச்சமுற் றளவை

தெரிநிலை யாக்கமொ டும்மை யெட்டே.

என்னும் நூற்பா (425) உம்மை இடைச்சொல் உணர்த்திய பொருளைக் கூறியது.

முற்றும்மைக்குச் சிறப்பு விதி

முற்றும்மை சிலவிடங்களில் எச்சவும்மையும் ஆகும்.

(எ.டு) எல்லோரும் வந்திலர். இங்கு சிலர் வந்தார் என்னும் பொருளைத் தரும்.

"முற்றும்மை ஒரோவழி எச்சமும் ஆகும்" நூற்பா 426

எச்சவும்மைக்குச் சிறப்பு விதி

எச்சவும்மை செவ்வெண்ணில் வருமாயின் ஈற்றில் வரும்.

"செவ்வெண் ஈற்றதாம் எச்சவும்மை" நூற்பா 427

(செவ்வெண்ணாவது எண்ணிடைச்சொல் தொக்கு நிற்ப வருவது).

(எ.டு) "கல்வி செல்வம் ஒழுக்கம் குடிப்பிறப்பும் பெறுவாரும் உளர்" – இவற்றுள் சில பெறுவாருமுளர் எனப் பொருள்படுதலும் உண்டு.

சில எண்ணிடைச் சொற்களுக்குச் சிறப்பு விதி

பெயர்களிடையே எண்ணிடைச்சொல் தொக்கு நிற்ப வரும் செவ்வெண்ணும், பெயரொடு தொகாது வரும் ஏகார எண்ணும் என்றா எண்ணும், எனா எண்ணும் ஆகிய நான்கு எண்களும் தொகைச் சொற்களைப் பெற்று வரும்.

(எ.டு) சாத்தன் கொற்றன் இருவரும் வந்தார்

சாத்தனே கொற்றனே இருவரும் வந்தார்

சாத்தன் என்றா கொற்றன் என்றா இருவரும் வந்தார்

சாத்தன் எனா கொற்றன் என இருவரும் வந்தார்.

– இவை தொகை பெற்றே வந்தன.

உம்மை எண்ணும், என்று எண்ணும், என எண்ணும், ஓடு எண்ணும் ஆகிய நான்கு எண்களும் அத்தொகைச் சொல் பெறாமலும் வரும்.

சாத்தனும் கொற்றனும் இருவரும் வந்தார்

சாத்தனென்று கொற்றனென்று இருவருளர்

சாத்தனெனக் கொற்றனென இருவருளர்

சாத்தனோடு கொற்றனோடு இருவருளர்

– இவை தொகை பெறாது வந்தன.

"பெயர்ச்செவ் வெண்ணே யென்றா வெனாவெண்

ணான்கும் தொகைபெறு மும்மையென்று எனவோடு

இந்நான்கு எண்ணும் அஃதின்றியு மியலும். நூற்பா 428

சில எண்ணிடைச் சொற்களுக்கு எய்தியதன் மேல் சிறப்பு விதி

என்று, என, ஓடு என்னும் மூன்று இடைச்சொற்களுக்கு எண்ணப்படும் பொருள்தோறும் நில்லாமல் ஓரிடத்து நின்றும் பிரிந்து எண்ணப்படும் பொருள்கள் தோறும் சென்று பொருந்தும்.

என்றும் எனவும் ஒடுவும் ஒரோவழி

நின்றும் பிரிந்துஎண் பொருள்தொறும் நேரும். நூற்பா 429

(எ.டு) "வினை பகை என்று இரண்டின் எச்சம்" – என்று என்று வினையென்று பகையென்று என நின்றவிடத்தும் பிரிந்து பிறவழியும் சென்று பொருந்தியது.

"பகை பாவம் அச்சம் பழியென நான்கும்" – என என்பது பகையெனப் பாவமென அச்சமெனப் பழியென நின்றவிடத்துப் பிரிந்து பிறவழியும் சென்று பொருந்தியது.

"பொருள் கருவி காலம் வினையிடனொடு ஐந்தும்"

ஒடு என்பது பொருளொடு, கருவியொடு, காலத்தொடு, வினையொடு, இடனொடு என நின்றவிடத்துப் பிரிந்து பிற வழியும் சென்று பொருந்தியது.

எண்ணிடைச் சொற்கள் வினையொடு வருதல்

பொருந்துவனவாகிய சில எண்ணிடைச் சொற்கள் வினைச் சொல்லுடன் வந்தாலும் பெயருடன் வந்தது போலவே அமையும்.

வினையொடு வரினும்எண் இனைய ஏற்பன. நூற்பா 430

(எ.டு) மயிலாடக் குயிலாட மாமுகில் எழுந்தது. – செவ்வெண்

கற்றும் கேட்டும் கற்பனை கடந்தார் – உம்மையெண்

உண்ணவென்று உடுக்கவென்று வந்தான் – என்றெண்

உண்ணவென உடுக்கவென வந்தான் – எனவெண்

உண்ண உடுக்கவென்று வந்தான் – பிரிந்து கூடும் எண்.

– இவை வினையொடு வந்தன.

இதுவரை சில எண்ணிடைச் சொற்களுக்குரிய சிறப்பு விதிகளைக் கண்டோம். இனி, தில் என்னும் இடைச்சொல் உணர்த்தும் பொருள்களை முறையே காணலாம்.

தில் என்னும் இடைச்சொல்

தில் விழைவு (ஆசை), காலம், ஒழியிசை என்னும் மூன்று பொருள்களில் வரும்.

விழைவே, காலம் ஒழியிசை தில்லே. நூற்பா 431

(எ.டு)

1. விழைவு – “அரிவையைப் பெறுகதில் லம்ம யானே” – அரிவையைப் பெற வேண்டும் என்னும் வேட்கை உணர்த்தியது.

2. காலம் – “பெற்றாங்கு அறிகதில் லம்மவிவ் வூரே” – பெற்ற காலத்து அறிக எனக் காலத்தை உணர்த்தியது.

3. ஒழியிசை – “வருகதில் லம்மவெஞ் சேரிசேர” – வந்தால் இன்னது செய்வேன் என்னும் ஒழிந்த சொற்பொருளை உணர்த்திற்று.

மன் என்னும் இடைச்சொல்

மன் என்னும் இடைச்சொல் அசைநிலை, ஒழியிசை, ஆக்கம், கழிவு, மிகுதி, நிலைபேறு என்னும் ஆறு பொருளில் வரும்.

“மன்னே அசைநிலை ஒழியிசை ஆக்கம்

கழிவு மிகுதிநிலைபேறு ஆகும்.” நூற்பா 432

(எ.டு)

1. அசைநிலை – “அதுமற் கொண்கன் றேரே” – வேறு பொருளின்றிச் சார்த்தப்பட்டு நிற்றலின் அசை நிலையாயிற்று.

2. ஒழியிசை – “கூரியதோர் வாள் மன்” – இரும்பை அறத் துணித்தது என்னும் ஒழிந்த சொற்களைத் தருதலால் ஒழியிசையாகும்.

3. ஆக்கம் – “பண்டு காடு மண்” – இன்று வயல் என்னும் ஆக்கப் பொருளைத் தந்தது.

4. கழிவு – “சிறியகட் பெறினே எமக்கீயு மன்னே” – அவன் இறந்தானாகலின் எமக்கீதல் கழிந்தது என்னும் பொருளைத் தந்தது.

5. மிகுதி – “எந்தை எமக்கருளுமன்” – மிகுதியும் அருளுவன் என்னும் பொருளைத் தந்தது.

6. நிலைபேறு – “மன்னா வுலகத்து மன்னியது வுறுமே” – நிலைபெறாத உலகிலே நிலைத்ததைச் செய் என்னும் பொருள்பட நின்றது.

மற்று என்னும் இடைச்சொல்

மற்று என்னும் இடைச்சொல் வினை மாற்றுப் பொருளையும் அசைத்து நிற்றற் பொருளையும், பிறிது பொருளையும் உணர்த்தும்.

வினைமாற்று அசைநிலை பிறிதெனும் மற்றே. நூற்பா 433

(எ.டு)

1. வினைமாற்று – “மாற்றறிவாம் நல்வினை யாமிளையம் என்னாது” – விரைந்தறிவாம் என்னும் வினையை ஒழித்து விரையாது அறிவாம் என்னும் வினையைத் தந்தது.

2. அசைநிலை – "மற்றென்னை யாள்க" – பிற பொருளின்றிச் சார்த்தப்பட்டு நின்றது.

3. பிறிது – "ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று

சூழினுந் தான்முந் துறும்."

இக்குறளில் ஊழல்லது ஒன்று என்னும் பொருளைத் தந்தது.

மற்றை என்னும் இடைச்சொல்

மற்றயது என்னும் இடைச்சொல் முன்னே சுட்டிய பொருளை ஒழித்து அதற்கு இனமான பொருளைக் குறிக்கும்.

"மற்றைய தென்பது சுட்டிய தற்கினம்" நூற்பா 434

(எ.டு) இரண்டு நூல்கள் உள்ளவிடத்து ஒன்றைக் கொண்டு வர, அது வேண்டாதவன் மற்றையது கொண்டு வர என்றால் அதற்கு இனமான நூலையே குறித்து நிற்கும்.

கொல் என்னும் இடைச்சொல்

கொல் என்னும் இடைச்சொல் ஐயம், அசைநிலை என்னும் இரு பொருளைத் தரும்.

கொல்லேஐயம் அசைநிலைக் கூற்றே. நூற்பா 435

1. ஐயம் – இவ்வுரு, குற்றிகொல் மகன்கொல் – இங்கே குற்றியோ, மகனோ என்னும் ஐயப்பொருளைத் தந்தது.

2. அசைநிலை – கற்றதனாலாய பயனென் கொல் – இங்குக் கொல், பிற பொருளின்றி நிற்றலால் அசைநிலையாகும்.

ஒடு, தெய்ய என்னும் இடைச்சொற்கள்

ஒடு, தெய்ய என்னும் இரண்டு சொற்களும் இசைநிறைத்தற் பொருளைத் தரும்.

"ஒடுவும் தெய்யவும் இசைநிறை மொழியே." நூற்பா 436

(எ.டு) "விதைக்குறு வட்டிற் போதொடு பொதுள"

"சொல்லென் தெய்ய நின்னொடு பெயர்த்தே"

இவை இசைநிறைப் பொருளில் வந்தன.

அந்தில், ஆங்கு என்னும் இடைச்சொற்கள்

அசைநிலை, இடம் என்னும் பொருள்களில் அந்தில், ஆங்கு என்னும் இடைச்சொற்கள் வரும்.

"அந்திலாங் கிசைநிலை யிடப்பொரு எவ்வே." நூற்பா 437

1. அசைநிலை – "அந்திற் கழலினன் கச்சினன்" – இங்கு அந்தில், ஆங்கு அசைநிலையில் வந்தன.

2. இடம் – "வருமே சேயிழை யந்திற் கொழுநற் காணிய." "ஆங்காங் காயிற மாக". இவ்விரு எடுத்துக்காட்டுகளிலும், அவ்விடத்து என்னும் பொருளைத் தருதலால் இடமாயிற்று.

அம்ம என்னும் இடைச்சொல்

அம்ம என்னும் இடைச்சொல் உரையசைப் பொருளையும், கேட்பித்தல் பொருளையும் தரும்.

"அம்ம வுரையசை கேண்மினென் றாகும்" நூற்பா 438

(எ.டு) உரையசை – அது மற்றம்ம – கட்டுரைக்கண் வருதலால் உரையசையாகும்.

ஏவல் பொருள் – அம்ம வாழி தோழி – ஒன்று சொல்லுவேன் கேள் என்னும் ஏவல் பொருளில் வந்தது.

வியங்கோள் அசை

மா என்னும் சொல் வியங்கோளிடத்து வரும் அசைச் சொல்லாகும்.

"மாவென் கிளவி வியங்கோ ளசைச்சொல்." நூற்பா 439

(எ.டு) "உப்பின்று, புற்கை யுண்கமா கொற்கை யோனே" – மா என்னும் அசைச்சொல் உண்க என்னும் வியங்கோள் வினையை அடுத்து வந்தது.

முன்னிலை அசைச்சொல்

மியா, இக, மோ, மதி, அத்தை, இத்தை, வாழிய, மாள, ஈ, யாழ என்னும் பத்து இடைச் சொற்களும் முன்னிலையிடத்து வரும் அசைச் சொற்களாகும்.

மியாயிக மோமதி யத்தை யித்தை

வாழிய மாளவீ யாழமுன் னிலையசை. நூற்பா 440

(எ.டு) மியா – "சிலையன் செழுந்தழையன் சென்மியா."

இக – "தண்டுறையூர காணிக வெனவே."

மோ – "காமஞ் செப்பாது கண்டது மொழிமோ."

மதி – "சென்மதி பெரும."

அத்தை – "சொல்லிய ரத்தைநின் வெகுளி."

இத்தை – "நீயொன்று பாடித்தை."

வாழிய – "காணியவா வாழிய மலைச் சாரல்."

மாள – "சிறிது–தவிர்ந்தீக மாளநின் பரிசில ருய்ம்மார்."

ஈ – "சென்றீ பெருமநிற் றகைக்குநர் யாரே."

யாழ – "நீயே – செய்வினை மருங்கிற் செலவயர்ந் தியாழ."

எல்லாவிடத்தும் வரும் அசைச் சொல்.

யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது, இகும், சின், குரை, ஓரும், போலும், இருந்து, இட்டு, அன்று, ஆம், தாம், தான், இன்று, நின்று என்னும் இருபது இடைச்சொற்களும் எல்லா இடங்களிலும் வரும் அசைச் சொற்கள் ஆகும். நூற்பா 441

(எ.டு)

யா – "யா பன்னிருவர் மாணாக்க ரகத்தியனார்க்கு."

கா – "புறநிழற் பட்டாளோ விவளிவட் காண்டிகா."

பிற – "ஆயனை யல்ல பிற."

பிறக்கு – "பிறக்கிதனுட் செல்லான் பெருந்தவம்பட்டான்."

அரோ – "நோதக விருங்குயி லாலு மரோ."

போ – "பிரியின் வாழா தென்போ."

மாது – "விளிந்தன்ற மாதவர்த் தெளிந்தவென் னெஞ்சே."

இகும் – "காண்டிகு மல்லமோ கொண்க."

சின் – "தீங்கா கியவா லென்றிசின்."

குரை – "அது பெறலருங் குரைத்தே."

ஓரும் – "அஞ்சுவ தோரு மறனே."

போலும் – "வடுவென்ற கண்ணாய் வருந்தினை போலும்."

இருந்து – "நனவென் றெழுந்திருந்தே னல்வினையொன் றில்லேன்."

இட்டு – "நெஞ்சம் பிளத்திட்டு."

அன்று – "பிரமாபுர மேவிய பெம்மானிவ னன்றே."

ஆம் – "பணியுமா மென்றும் பெருமை."

தாம் – நீர்தாம்.

தாள் – நீதான்.

கின்று – "வாழ்வா னாசைபட் டிருக்கின்றேன்."

நின்று – "அழலடைந்த மன்றத் தரந்தையராய் நின்றார்."

தன்மதிப்பீட்டு வினாக்கள்

I.

1. பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகியவற்றைச் சார்ந்து அகத்தேனும் புறத்தேனும் வரும் சொல்லின் பெயர் ..................

2. நன்னூல் கூறும் இடைச்சொல்லின் வகைகள் எட்டு. சரியா? தவறா?

3. பவணந்தியார் கூறும் இடைச்சொல்லின் பொருள்களைக் குறிப்பிடுக.

4. ஓகார இடைச்சொல் எத்தனை பொருள்களில் வரும்?

5. ‘என’ என்னும் இடைச்சொல் உணர்த்தும் பொருளையே ............ இடைச்சொல்லும் உணர்த்தும்?

6. விழைவு, காலம், ஒழியிசை என்னும் மூன்று பொருளை உணர்த்தும் இடைச்சொல்லின் பெயர் என்ன?

7. கேட்பித்தல் பொருளில் வரும் இடைச்சொல்லின் பெயர் ...............

8. முன்னிலையிடத்து வரும் அசைச்சொற்களின் எண்ணிக்கை ...........

தொகுப்புரை

பெயர் வினையைச் சார்ந்து நின்று, அச்சொற்களின் பொருள் தெளிவிற்குக் காரணமாக அமைந்த இடைச்சொல்லின் பொது இலக்கணம் அறியப்பட்டது. இவ்விடைச் சொல் எவ்வெவ் வகைகளில் அமைந்து பொருள் உணர்த்தும் என்பதும், எப்பொருள்களில் வரும் என்பதும் அறியப்பட்டது.

இவ்வியலில்ஏகார, ஓகாரம், உம்மை, தில், மன், மற்று, என, என்று, கொல் முதலிய இடைச்சொற்கள் எவ்வொவ் பொருள்களில் வரும் என்பதும் கூறப்பட்டது.

மேலும், ஒடு, தெய்ய, அரிதில், ஆங்கு, அம்ம என்னும் இடைச்சொற்களும், வியங்கோளசை, முன்னிலையசை முதலிய அசைச் சொற்களும் எவ்வெவ்விடத்து வரும், பொருள் தெளிவிற்கு எவ்வாறு துணைபுரிகின்றன என்பதையும் அறிய முடிந்தது.

பயிற்சி வினாக்கள்

சிறு வினாக்கள்

1. இடைச்சொல்லின் இலக்கணம் யாது?

2. இடைச்சொல், உரிச்சொல் – பெயர்க்காரணம் கூறுக.

3. இடைச்சொல்லின் பொருள் யாது?

4. ஓகார இடைச்சொல் எவ்வெவ் பொருளில் வரும்?

5. உம்மை இடைச்சொல் எவ்வெவ் பொருளில் வரும்?

குறு வினாக்கள்

1. இடைச்சொல் எத்தனை வகைப்படும்? எடுத்துக்காட்டுகள் தருக.

2. முன்னிலை அசைச்சொற்கள் – விளக்குக.

3. இடைச்சொல் இலக்கணம் கூறி, அதன் வகைப்பாடுகளைச் சான்றுகளுடன் விளக்குக.

பெரு வினா

1. இடைச்சொல் குறித்து நன்னூல் கூறும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

தன்மதிப்பீட்டு விடைகள்

I.

1. இடைச்சொல்

2. சரி

3. தெரிநிலை, தேற்றம், ஐயம், முற்று, எண், சிறப்பு, எதிர்மறை, எச்சம், வினா, விழைவு, ஒழியிசை, பிரிநிலை, கழிவு, ஆக்கம்.

4. எட்டு.

5. என்று.

6. தில்.

7. அம்ம.

8. பத்து.

3.2.5 உரியியல்

3.2.5.1 உரிச்சொல்லின் பொதுவிலக்கணம் – நூற்பா 442 முதல் 443 வரை.

3.2.5.2 உயிர்ப்பொருள்களின் வகைப்பாடு – நூற்பா 444 முதல் 451 வரை.

3.2.5.3 உயிர்ப்பொருள்களின் குணப்பண்பும் உயிரற்ற பொருள்களின் தொழிற்பண்பும் – நூற்பா 452 முதல் 455 வரை.

3.2.5.4 உரிச்சொல் வகைப்பாடு – நூற்பா 456 முதல் 459 வரை.

3.2.5.5 புறனடை நூற்பாக்கள் – நூற்பா 460 முதல் 462 வரை.

நன்னூல் சொல்லதிகாரத்தின் ஐந்தாம் இயல் உரியியலாகும். இப்பகுதியில் உரிச்சொல்லின் பொது இலக்கணம், உயிர்ப்பொருள் பற்றிய செய்திகள் ஓரறிவு முதல் ஐயறிவுயிர்கள் பற்றிய செய்திகள், உயிரல்லாத பொருள், உயிர்ப் பொருள்களின் குணம் மற்றும் தொழில் பண்பு, உயிரல்லாத பொருள்களின் குணப்பண்பு, இரு பொருளுக்கும் பொதுவாகிய தொழிற்பண்பு, உரிச்சொல் வகைப்பாடு – ஒரு குணம் தழுவிய உரிச்சொல், பல குணம் தழுவிய உரிச்சொல் முதலியவற்றைக் கூறியுள்ளார். அதற்குப்பின் உரியியல், அதிகாரம், நூல் ஆகியவற்றிற்குப் புறனடை நூற்பாக்கள் கூறப்பட்டுள்ளன.

3.2.5.1 உரிச்சொல்லின் பொதுவிலக்கணம்

இசையும் குறிப்பும் பண்பும் ஆகிய பலவகைப்பட்ட பண்புகளையும் உணர்த்தும் பெயராகி, ஒரு குணத்தையேனும் பல குணத்தையேனும் உணர்த்துவனவாய், பெயர், வினைகளை விட்டு நீங்காதனவாகி, செய்யுளுக்கு உரியனவாயும் பொருட்கு உரிமை பூண்டு நிற்பவை உரிச்சொற்களாகும்.

(இசை, ஓசை, குறிப்பு – மனத்தால், குறிப்பால் உணரப்படுவது பண்பு – பொறியால் உணரப்படும் குணம்).

பல்வகைப் பண்பும் பகர்பெய ராகி

ஒருகுணம் பலகுணம் தழுவிப் பெயர்வினை

ஒருவா செய்யுட்கு உரியன உரிச்சொல்.

என்னும் நூற்பா (442) உரிச்சொல்லின் பொது இலக்கணத்தை வரையறுக்கின்றது.

பண்பு இன்னதென்பது

உயிராகிய பொருளும் உயிரல்லாத பொருளும் என்னும் இருவகையுள் உள்ளடங்கும் உலகப் பொருள்களின் குணங்கள் பண்புகளாகும்.

“உயிர்உயிர் அல்லதாம் பொருட்குணம் பண்பே” நூற்பா 443

உயிர்ப்பொருள்களின் வகைகளும்

3.2.5.2 உயிர்கள் வகைப்பாடு

வகைப்படுத்தப்பட்ட காரணங்களும்

மெய், நா, மூக்கு, கண், காது ஆகிய ஐம்பொறிகளால் முறையே ஊறு, சுவை, நாற்றம், ஒளி, ஓசை என்னும் ஐம்புலன்களையும் அறியுமிடத்து மெய்யில் உற்று உணரும் உணர்ச்சியொன்று முதலாகச் சரீழ்ப்போன உணர்ச்சியும் கொண்டு சுவை, நாற்றம், ஒளி, ஓசையென மேல்வரும் புலன்களை ஒன்றோடு ஒன்றாக உணர்தலின் ஓரறிவுயிர் முதலாக ஐயறிவுயிராகப் பிரிக்கப்பட்டுள்ளது.

மெய்ந்நா மூக்கு நாட்டம் செவிகளின்

ஒன்றுமுத லாக்கீழ்க் கொண்டுமேல் உணர்தலின்

ஓரறிவு ஆதியா உயிர் ஐந்து ஆகும். நூற்பா 444

பொதுநிலையில், மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்புல அறிவு காரணமாக உயிர்கள் ஐந்து வகைப்படும்.

ஓரறிவுயிர்

புல், மரம் முதலியவை மெய்யால் தொட்டு உணரும் உணர்வை அறியும் ஓரறிவுயிர்கள் ஆகும்.

புல்மரம் முதலஉற்று அறியும்ஓ ரறிவுயிர். நூற்பா 445

இந்நூற்பாவில் ‘முதல்’ என்பதால் செடி, கொடி, புதல் என்பனவற்றையும் கொள்ளுதல்

வேண்டும்.

ஈரறிவுயிர்

இப்பி, சங்கு முதலியவை தொடு உணர்வுடன் நாவால் சுவைத்தறியும் அறிவையும் பெறுவதால் ஈரறிவுயிர்கள் ஆகும்.

முரள்நந்து ஆதிநா வறிவொடு ஈரறிவுயிர். நூற்பா 446

முரள் – இப்பி, நந்து – சங்கு, கிளிஞ்சல் முதலியவை ஈரறிவுயிர்களாகும்.

மூவறிவுயிர்

கறையான், எறும்பு முதலியன ஊறு, சுவை என்பவற்றோடு மூக்கால் நுகர்ந்து நாற்றத்தை அறியும் அறிவைப் பெறுவதால் மூவறிவுயிர்களாகும்.

சிதல்எறும்பு ஆதிமூக்கு அறிவின் மூவறிவு உளர். நூற்பா 447

(சிதல் – கறையான்.) இங்கு ஆதி என்பதால் ஈயல், அட்டை முதலியவையும் கொள்ளப்படும்.

நாலறிவுயிர்

தும்பி, வண்டு முதலியவை ஊறு, சுவை, நாற்றம் என்பவற்றோடு கண்ணால் உருவத்தை அறியும்

அறிவைப் பெறுவதால் நாலறிவு உயிர்கள் ஆகும்.

தும்பிவண்டு ஆதிகண் ணறிவின்நா லறிவுயிர். நூற்பா 448

நண்டு, தேனீ முதலியவற்றையும் 'ஆதி' என்பதால் கொள்ளுதல் வேண்டும்.

ஐயறிவுயிர்

தேவர், மனிதர், நரகர், விலங்குகள், பறவைகள் முதலியவை ஊறு, சுவை, நாற்றம், ஒளி என்பவற்றோடு

செவியால் கேட்டறியும் ஓசையறிவையும் பெற்றமையால் ஐயறிவுயிர்கள் ஆகும்.

வானவர் மக்கள் நரகர் விலங்குபுள்

ஆதிசெவி யறிவோ டையறி வுயிரே.

என்னும் நூற்பா (449) ஐயறிவுயிர்களைக் குறிப்பிடுகின்றது.

உயிரல்லாத பொருள்

அறிவின் நிறைவாகிய உயிரொன்றுமேயன்றி, உடம்பு முதலாகிய உலகத்துப் பொருள்கள் எல்லாம்

உயிரல்லாத பொருள்கள் ஆகும்.

உணர்விய லாம்உயிர் ஒன்றும் ஒழித்த

உடன்முதல் அனைத்தும் உயிரல் பொருளே.

என்னும் நூற்பா (450) உயிரல்லாத பொருள்களை அடையாளப்படுத்தியது.

முன்னதற்குப் புறனடை

ஒற்றுமை நயத்தின் ஒன்றெனத் தோன்றினும்

வேற்றுமை நயத்தின் வேறே உடல் உளர். நூற்பா 451

எவ்வுயிர் எவ்வுடம்பை எடுத்ததோ, அவ்வுடம்பின் தன்மையைப் பெற்றிருக்கும். உடலும் உயிரும்

ஒன்றுபோல் தோன்றினாலும் அறிவுடைத் தன்மை, அறிவற்ற தன்மை ஆகியவற்றால் வேறுபடும்.

3.2.5.3 உயிர்ப்பொருள்களின் குணப்பண்பும் தொழிற்பண்பும்

அறிவு, அருள், ஆசை, அச்சம், மனம், நிறை, பொறை, ஓர்ப்பு (ஆராய்ந்து தெளிதல்),

கடைப்பிடி, மையல், நினைவு, வெறுப்பு, உவப்பு, இரக்கம், நாண், வெகுளி, துணிவு, அழுக்காறு, அன்பு, எளிமை, எய்த்தல், துன்பம், இன்பம், மூப்பு, இகல், வென்றி, பொச்சாப்பு (மறதி), ஊக்கம், மறம், மதம், மறவி என்னும் முப்பத்திரண்டும் இவைபோல்வன பிறவும் உடம்புடன் கூடிய உயிர்களின் குணங்கள் ஆகும். (நூற்பா452) இந்நூற்பாவினை நன்னூல் மூல நூலில் கண்டு கொள்க.

உயிர்ப் பொருள்களின் தொழிற்பண்பு

துய்த்தல், துஞ்சல், தொழுதல், அணிதல், உய்த்தல் என்னும் ஐந்தும் இவை போல்வன பிறவும் உடம்புடன் கூடிய உயிர்களின் தொழில் குணங்கள் ஆகும்.

துய்த்தல் துஞ்சல் தொழுதல் அணிதல்

உய்த்தல் ஆதி உடலுயிர்த் தொழிற்குணம். நூற்பா 453

இதில் ‘ஆதி’ என்றதால் அரற்றல், வாழ்த்துதல் முதலியனவும் கொள்ளுதல் வேண்டும்.

உயிரற்ற பொருள்களின் குணப்பண்பு

வட்டம், இருகோணம், முக்கோணம், சதுரம் முதலிய பலவகை வடிவுகளும், நல்நாற்றம், தீநாற்றம் என்னும் இருவகை நாற்றங்களும், வெண்மை, செம்மை, கருமை, பொன்மை, பசுமை என்னும் ஐந்து வண்ணங்களும் கைப்பு, புளிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, கார்ப்பு, தித்திப்பு என்னும் ஆறு சுவைகளும், வெம்மை, தண்மை, மென்மை, வன்மை, நொய்மை, சீர்மை, இழுமெனல், சருக்கரை என்னும் எட்டு ஊறுகளும் உயிரற்ற பொருள்களின் குணங்கள் ஆகும்.

பல்வகை வடிவிரு நாற்றமை வண்ணம்

அறுசுவை யூறெட் டுயிரல் பொருட்குணம். நூற்பா 454

இரு பொருள்களுக்கும் பொதுமைத் தொழிற்பண்பு

தோன்றல், மறைதல், வளர்தல், சுருங்கல், நீங்கல், அடைதல், நடுங்கல், இசைத்தல், ஈதல் என்னும் ஒன்பதும், இவை போல்வன பிறவும் உயிர்ப் பொருள், உயிரற்ற பொருள் ஆகிய இரண்டிற்கும் பொதுவாகிய தொழிற் குணங்கள் ஆகும்.

தோன்றல் மறைதல் வளர்தல் சுருங்கல்

நீங்க லடைதல் னடுங்க லிசைத்தல்

ஈத லின்னை விருபொருட் டொழிற்குணம். நூற்பா 455

இந்நூற்பாவில் ‘இன்னை’ என்பதால் அசைதல் முதலியனவும் கொள்ளுதல் வேண்டும்.

3.2.5.4 உரிச்சொல் வகைப்பாடு

ஒரு குணம் தழுவிய உரிச்சொல்

சால, உறு, தவ, நனி, கூர், கழி முதலிய ஆறு உரிச்சொற்களும் ‘மிகுதி’ என்னும் ஒரு குணத்தை உணர்த்தும் உரிச்சொற்கள் ஆகும்.

(எ.டு) சாலப்பல, உறுபசி, தவப்பிஞ்சு, நனிபேதை, நுனிகூர், கழிகண்ணோட்டம்.

இங்கு குறிப்பிட்டுள்ள ஆறு உரிச் சொற்களும் மிகுதி என்னும் ஒரு குணத்தையே உணர்த்தின.

“சால வுறுதவ நனிகூர் கழிமிகல்.” நூற்பா 456

இங்கும் சால என்பது சால் என்னும் உரிச்சொல் அடியாகப் பிறந்த வினையெச்சக் குறிப்பாகும்.

ஒரு குணம் தழுவிய உரிச்சொல்

மாற்ற முதலாகிய பதினாறும், சொல் என்னும் ஒரு குணத்தை உணர்த்தும் உரிச்சொற்களாகும்.

“மாற்ற நுவற்சிசெப் புரைகரை நொடியிசை

கூற்றுப்புகரன் மொழிகிளவி விளம்பறை

பாட்டுப் பகர்ச்சி யியம்பல் சொல்லே.” நூற்பா 458

மாற்றம் – “கோவலர்வாய் மாற்ற முணர்ந்து”

நுவற்சி – “இருபிறப் பாளர் பொழுதறிந்து நுவல”

செப்பு – “தெருண்டாரவை செப்ப லுற்றேன்”

உரை – “உரைப்பா ருரைப்பவை யெல்லாம்”

கரை – “அறங் கரைநாவி னான்மறை முற்றிய”

நொடி – “அருஞ்சொற் பெரும் பணைத்தோ ளாயிழையா டானொடியும்”

இசை – “நசையுநர்க்கடையா நன்பெருவாயி – விசையெனப் புக்கு”

கூற்று – “உற்றது நாங்கள் கூற வுணர்ந்தனை”

புகறல் – “புகன்ற வன்றியும் பூமி கவருமே”

மொழி – “காமஞ் செப்பாது கண்டது மொழிமோ”

கிளவி – “கிளந்த கிளை முத லுற்ற”

விளம்பு – “மெய்ம்மூ வாறென விளம்பினர் புலவர்”

அறை – “அச்சுத னடிதொழுதறைகுவன் சொல்லே”

பாட்டு – “ஒருவன் செய்தி கொன்றோர்க்–குய்தி யில்லென வறம்பாடிற்றே”

பகர்ச்சி – “வார்த்தை பகர்குற்றேன்”

இயம்பல் – “இடிபோல வியம்பினானே”

முழக்கு முதலாகிய இருபத்திரண்டும், இவை போல்வன பிறவும் ஓசையென்னும் ஒரு குணத்தை உணர்த்தும் உரிச்சொற்களாகும்.

முழக்கிரட் டொலிகலி யிசைதுவை பிளிறிரை

இரக்கமுங் கியம்ப லிமிழ்குளி றதிர்குரை

கனைசிலை சும்மை கௌவை கம்பலை

அரவ மார்ப்போ டின்னன வோசை. நூற்பா 459

(எ.டு) முழக்கு – “முழங்குமுந்நீர் முழுவதும் வளைஇ”

இரட்டு – “குடிஞை யிரட்டுங் கோடுயர் நெடுவரை”

ஒலி – “ஒல்லென வொலிக்கு மொலி யுன லூரற்கு”

கலி – “கலிகெழு மூதூர்”

இசை – “பறையிசை யருவி”

துவை – “பல்லியந் துவைப்ப“

பிளிறு – “பிளிறுவார் முரசம்”

இரை – “இரைக்கு மஞ்சிறைப் பறவைகள்”

இரக்கு – “இரங்கு முரசினம்”

அழுங்கு – “இரும்பிழி மாரி யழுங்கின மூதூர்”

இயம்பல் – “காலை முரசம தியம்ப”

இமிழ் – “இமிழ்கடல் வளைஇய”

குளிறு – “குளிறு முரசங்குணில்பாய”

அதிர்வு – “களிறு களித்ததிருங் கார்”

குரை – “குரை புனற் கன்னி“

கனை – “கனைகடற் சேர்ப்ப”

சிலை – “சிலைத்தார் முரசங் கறங்க”

சும்மை – “தள்ளாத சும்மைமிகு தக்கின நாடு நண்ணி”

கௌவை – “கௌவை நீர் வேலி”

கம்பலை – “வினைக்கம்பலை மனைச் சிலம்பவும்”

அரவம் – “அறைகட லரவத் தானை”

ஆர்ப்பு – “ஆர்த்த பல்லியக்குழாம்”

பல குணம் தழுவிய உரிச்சொல்

ஒரு உரிச்சொல்லே பல பொருள்களைத் தருவதுண்டு. கடி என்னும் உரிச்சொல் காவல், கூர்மை, வினா, மணம், விளக்கம், அச்சம், சிறப்பு, விரைவு, மிகுதி, புதுமை, ஒலித்தல், நீக்கல், மணம், கரிப்பு ஆகிய பதின் மூன்று குணங்களில் வரும்.

கடியென் கிளவி காப்பே கூர்மை

விரையே விளக்க மச்சஞ் சிறப்பே

விரைவே மிகுதி புதுமை யார்த்தல்

வரைவே மன்றல் கரிப்பின் ஆகும். நூற்பா 457

(எ.டு) காப்பு – “கடி நக ரடைந்து”

கூர்மை – “கடி நுனைப் பகழி”

விரை – “கடி மாலை சூடி”

விளக்கம் – “கண்ணாடி யன்ன கடி மார்பன்”

அச்சம் – “கடி யரமகளிர்க்கே கைவிளக்காகி”

சிறப்பு – “அம்பு துஞ்சுங் கடியரண்”

விரைவு – “எம்மம்பு கடி விடுதும்”

மிகுதி – “கடியுண் கடவுட்கிட்ட செழுங்குரல்”

புதுமை – “கடி மணச் சாலை”

ஆர்த்தல் – “கடிமுரசு”

வரைவு – “கடி மது நுகர்வு”

### 3.2.3.5 உரியியலுக்குப் புறனடை

பெயர், வினை, இடை, உரிகளில் இன்ன சொல் தன்மை, முன்னிலை, படர்க்கைகளிலும் வழக்குச் செய்யுள்களிலும் இவ்விடத்தே இவ்விலக்கணம் உடையதாய் நடக்கும் என்று சொல்லக் கடவதாகிய இந்நூலுள் பண்புப் பெயர்களும் பண்பில் பெயர்களும் விரிந்து கிடத்தலின் விரித்துச் சொல்லவில்லை. அவற்றைத் தெரிந்து கொள்ள விரும்புவோர் பிற புலவர்களால் கூறப்பட்ட பிங்கலந்தை, திவாகரம் முதலிய நூல்களில் உரிச்சொல் தொகுதிகளில் விரும்பிக் கண்டறிந்து கொள்ளுதல் வேண்டும்.

இன்னது இன்னுழி இன்னணம் இயலும்

என்றிசை நூலுள் குணகுணிப் பெயர்கள்

சொல்லாம் பரத்தலில் பிங்கலம் முதலா

நல்லோர் உரிச்சொல் நயந்தனர் கொளலே. நூற்பா 460

சொல்லதிகாரப் புறனடை

சொல்தோறும் இத்தன்மைத்து இதன் இலக்கணம் என்று முழுமையும் நிறைவுற சொல்லப் புகின், முடிவு இல்லாமல் போகும். ஆதலால், எடுத்துச் சொல்லப்பட்ட சொற்களின் இலக்கணங்களைக் கொண்டு, சொல்லப்படாதனவற்றின் இலக்கணங்களையும், ஒப்புமை விகுதி இதுவும் அது போன்றது என்று தெளிவாக உணர்தல் மாணாக்கரது கடமையாகும்.

சொற்றொறு மிற்றிதன் பெற்றியென் றனைத்து

முற்ற மொழிகுறின் முடிவில வாதலிற்

சொற்றவன் றியலான் மற்றைய பிறவும்

தெற்றென வுணர்த றெள்ளியோர் திறனே. நூற்பா 461

நன்னூலுக்குப் புறனடை

முற்காலத்து உள்ள இலக்கணங்களுள் சில பிற்காலத்து இல்லாமல் போதலும், முற்காலத்தில் இல்லாதன சில பிற்காலத்தில் இலக்கணம் ஆகலும் கால வேறுபாட்டால் ஏற்றுக்கொள்ளக் கூடியதே.

பழையன கழிதலும் புதியன புகுதலும்

வழுவல கால வகையி னானே. நூற்பா 462.

தன்மதிப்பீட்டு வினாக்கள்

I.

1. பவணந்தியார் உயிர்களை எத்தனை அறிவுயிர் அடிப்படை வரை பிரித்துப் பார்க்கிறார்?
2. புல், மரம் – எவ்வகை அறிவுயிரைச் சார்ந்தது?
3. செவியால் அறியும் அறிவுயிர்கள் யாவை?
4. சால, உறு, தவ, நனி, கூர், கழி என்னும் உரிச்சொற்கள் ......... பொருளை உணர்த்தும்.
5. ஒருசொல் பல பொருளைத் தருமேயானால் அதற்கு ............. என்று பெயர்.
6. பழையன கழிதலும் புதியன புகுதலும்

   வழுவல கால வகையி னானே. – இந்நூற்பா எதற்குப் புறனடை.

தொகுப்புரை

உரிச்சொல்லின் பொது இலக்கணமும் உயிர்ப்பொருள் பற்றிய செய்திகளையும் ஓரறிவுயிர் முதல் ஐயறிவுயிர் வரையிலான உயிர்ப் பாகுபாட்டின் வகைப்பாடுகளையும் அதிலடங்கும் உயிர்களையும் பவணந்தியார் கூறியுள்ளமையை அறிந்து கொண்டோம்.

மேலும், உயிருள்ள, உயிரற்ற பொருள்களின் குணப் பண்புகளையும் ஒருசேரக் கூறியமையும் அறிய முடிந்தது. உரிச்சொற்கள் ஒரு பொருள் குறித்த பல சொல்லாகவும், பல பொருள் குறித்த ஒரு சொல்லாகவும் வரும் தன்மையினையும் அவற்றிற்குரிய சான்றுகளையும் பவணந்தியார் தெளிவாகக் காட்டியமை அறிந்து கொள்ள முடிந்தது. இவ்வியலின் இறுதிப் பகுதியில் உரியியல், சொல்லதிகாரம், நன்னூல் ஆகியவற்றிற்குப் புறனடை கூறியுள்ளார்.

பயிற்சி வினாக்கள்

சிறு வினாக்கள்

1. உரிச்சொல்லின் இலக்கணம் யாது?
2. ஒருபொருள் குறித்த பல சொல்லிற்கு எடுத்துக்காட்டுகள் தருக.
3. உயிர்ப்பொருள்களின் தொழிற்பண்பினை எழுதுக.
4. பல குணந் தழுவிய உரிச்சொல்லை எடுத்தெழுதுக.

குறு வினாக்கள்

1. ஐயறிவுயிர்களை விளக்குக.
2. உயிர்ப்பொருள்களின் குணப்பண்பு குறித்த செய்திகளை எடுத்துரைக்க.

பெரு வினா

1. உரிச்சொல் குறித்து, பவணந்தியார் கூறியுள்ள செய்திகளை எடுத்துரைக்க.

மேலும் படித்தற்குரிய நூல்கள்

1. நன்னூல் – காண்டிகை உரை, ஆறுமுக நாவலர் (பஆ.), ஆரோரோ அச்சுக்கூடம், சென்னை , 1926.
2. நன்னூல் மூலமும் சங்கரநமச்சிவாயர் உரையும், உ.வே.சா. நூல் நிலையம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1935.
3. நன்னூல் மூலமும் மயிலைநாதர் உரையும், சாமிநாதய்யர் (ப.ஆ.), உ.வே.சா. நூல்நிலையம், சென்னை, 1946.
4, நன்னூல் மூலமும் விருத்தியுரையும், கழக வெளியீடு, சென்னை, 1971.
5. நன்னூல் மூலம், ஆறுமுக நாவலர் பரிசோதித்தது, ஸ்ரீ ஆறுமுக நாவலர் சைவப் பிரகாச வித்யா சாலை அறக்கட்டளை வெளியீடு, சிதம்பரம், 1990.
6. நன்னூல் காண்டிகை உரை – ஆறுமுக நாவலர், புலியூர் கேசிகன் – ப.ஆ., முல்லை நிலையம், சென்னை, மறுபதிப்பு 2006.
7. நன்னூல் சொல்லதிகாரம் – காண்டிகையுரை, பேராசிரியர் சோம இளவரசு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 2007.
8, தொல்காப்பியம் தெளிவுரை, சுப்ரமணியன் .ச.வே, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1993.

தன்மதிப்பீட்டு விடைகள்

I.

1. ஐயறிவுயிர் வரை.
2. ஓரறிவுயிர்
3. தேவர், மனிதர், நரகர், விலங்குகள், பறவைகள் முதலியன.
4. மிகுதி
5. பலகுணந் தழுவிய உரிச்சொல்
6. நன்னூல்

------------

## யாப்பருங்கலக்காரிகை

தமிழ் ஐந்திலக்கண நூல்களில் யாப்பருங்கலக்காரிகை யாப்பிலக்கணம் பற்றிய செய்திகளைக்கூறும் நூலாகும். தமிழ் யாப்பிலக்கணம் குறித்து தொல்காப்பியர், அவிநயனார், காக்கைப்பாடினியார், நத்தத்தனார், பல்காயனார், மயேச்சுரர், அமிர்தசாகரர், புத்தமித்திரனார் முதலியோர் கூறியுள்ளனர். இவர்களுள் தொல்காப்பியர் பொருளதிகாரச் செய்யுளியலில் யாப்பிலக்கணம் பற்றிய செய்திகளை நூற்பா யாப்பில் கூறியுள்ளார். இதற்கு இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் முதலியோர் உரை செய்துள்ளனர்.

அமிர்தசாகரர் என்பவர் யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை என்னும் இரண்டு நூல்களை எழுதியுள்ளார். யாப்பருங்கலத்திற்கு மிக விரிவாகச் செய்யப்பட்ட விருத்தியுரை ஒன்று உள்ளது. இவ்விருத்தியுரையைச் செய்தவர் யார் எனத் தெரியவில்லை. யாப்பருங்கலக்காரிகை என்னும் நூல் கட்டளைக் கலித்துறை என்னும் காரிகை யாப்பால் அமைந்ததாகும். இந்நூலுக்குக் குணசாகரர் என்பவர் உரை வரைந்துள்ளார்.

புத்தமித்திரனார் என்பவர் வீரராசேந்திரன் என்னும் அரசன் பெயரில் கட்டளைக் கலித்துறை யாப்பில் செய்யப்பட்ட வீரசோழிய யாப்பதிகாரமும் உண்டு. இந்நூலுக்குப் பெருந்தேவனார் என்பவர் செய்த உரையும் உள்ளது. மேற்கூறிய இலக்கண நூல்கள் தவிர அவிநயனார், காக்கைப்பாடினியார், நத்தத்தனார், பல்காயனார், மயேச்சுரர் எனப் பலரால் செய்யப்பட்ட யாப்பிலக்கண நூல்கள் பெரிதும் அழிந்துவிட்டன. ஆயினும் அவர்கள் செய்த ஒருசில நூற்பாக்கள் உரையாசிரியர்கள் காட்டிய மேற்கோள்களின் மூலமாய் நமக்குக் கிடைத்துள்ளன.

இவ்வாறு யாப்பிலக்கணம் பற்றிக் கூறும் பல்வேறு இலக்கண நூல்கள் அமைந்திருப்பினும் பெரிதும் பயிலக்கூடியதாகவும் எல்லோராலும் போற்றப்படக் கூடியதாகவும் விளங்குவது அமிர்தசாகரர் இயற்றிய யாப்பருங்கலக்காரிகை என்னும் நூலேயாகும்.

நூல் – பெயர்ப்பொருத்தம்

யாப்பருங்கலக்காரிகை என்னும் நூலின் பெயருக்குப் பல்வகைக் காரணங்களைக் கூறுவர். அவை, கடலைக் கடப்பதற்குக் கலம் (தோணி) நிற்பதைப் போன்று 'யாப்பு' என்னும் கடலைக் கடப்பதற்கு இந்நூல் கலமாக விளங்குவதால் இப்பெயர் பெற்றது என்றும் கூறுவர். மேலும், இந்நூலின் செய்திகள் ஒரு காரிகை யை (பெண்) முன்னிலைப்படுத்திக் கூறப்பட்டுள்ளன. யாப்பாகிய கடலைக் கடப்பதற்குக் கலம் போன்று விளங்குவதாலும் ஒரு காரிகை மூலம் சொல்லப்படுவதாலும் 'யாப்பருங்கலக்காரிகை' என்னும் பெயரினை இந்நூல் பெறலாயிற்று என்றும் கூறுவர்.

'கட்டளைக்கலித்துறை' என்னும் பா அமைப்பிற்குக் காரிகை என்னும் பெயர் உண்டு. இந்நூலில் உள்ள நூற்பாக்கள் கட்டளைக் கலித்துறை என்னும் யாப்பால் பாடப்பெற்றதால் காரிகை என்றும் பெயர் பெற்றிருக் கலாம் எனக் கூறுவர். யாப்பாகிய செய்யுள்களுக்கு இந்நூல் அணிகலனாகத் திகழ்வதால் யாப்பருங்கலம் என்னும் பெயர் பெற்று காரிகை என்னும் சொல்லோடு இணைந்து யாப்பருங்கலக்காரிகை எனப் பெயர் பெற்றது என்றும் கூறுவர்.

நூலாசிரியர் வரலாற்றுக் குறிப்பு

அமிர்தசாகரர் இந்நூலின் ஆசிரியராவார். இவரின் காலம் 10ஆம் நூற்றாண்டின் இறுதியும் 11ஆம் நூற்றாண்டின் தொடக்கமும் என்று கூறுவர். தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறையை அடுத்த நீடூரில் உள்ள சிவன் கோயில் தெற்கு மதிலிலுள்ள கல்வெட்டுக்களில் உள்ள பாடல்களில் ஒன்றில், அமுதசாகரர் என்றும் அமிர்தசாகரர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விரண்டு பெயர்களும் ஒருவரையே குறிக்கும் தன்மையதாக உள்ளது. இக்கல்வெட்டில் "சயங்கொண்ட சோழ மண்டலத்து" என்ற தொடர் வருவதால் செயங்கொண்ட சோழன் என்பது முதலாம் இராசராசனைக் குறிப்பதாகும். இவரின் காலம் கி.பி. 985 – 1014 என்று தி.வை. சதாசிவ பண்டாரத்தார், பிற்காலச் சோழ வரலாறு எனும் நூலில் குறிப்பிடுகின்றார்.

உரையாசிரியர் பற்றிய குறிப்பு

யாப்பருங்கலக்காரிகையின் உரையாசிரியர் குணசாகரர் என்பவராவார். இவர் அமிர்தசாகரரின் ஆசிரியராவார். இவ்வுரையாசிரியார் சமண சமயத்தைச் சேர்ந்தவர் என்பது யாப்பருங்கலக்காரிகை தற்சிறப்புப் பாயிரத்தின் வழி அறிய முடிகின்றது. திருநெல்வேலி மாவட்டம் கழுகு மலையில் மாறன்சடையன் பாண்டியன் காலத்தில் வெட்டப்பட்ட கல்வெட்டில், குணசாகரர் என்ற பெயர் குறிப்பிடப் பட்டுள்ளது. அம்மன்னனின் காலம் கி.பி. 946 – 966 என்றும் அவர் காலத்தில் குணசாகரர் வாழ்ந்தவர் என்பதும் தெரிய வருகிறது.

இவ் உரையாசிரியர் தமது உரையில் செந்தமிழ் நிலத்தை மையறு சோழ வளநாடு என்று குறித்துள்ளமையால் சோழ நாட்டவர் என்றும் தெரிகிறது. மேலும் இவர் தமது உரையில் தொல்காப்பியர்,

அவிநயனார், நத்தத்தனார் முதலியோரது நூற்பாக்களை ஆங்காங்கே மேற்கோள் காட்டிச் செல்வதால் அந்நூல்களையெல்லாம் மிகுந்த பயிற்சியுடையவர் என்பதையும் அறிய முடிகிறது.

நூற்பெயர் காரணமாகக் குணசாகரர் கூறும் உரை

யாப்பருங்கலக்காரிகை தற்சிறப்புப் பாயிரத்திற்கு உரை கூறும் குணசாகரர் பின்வரும் செய்திகளைக் கூறுகின்றார். இந்நூலினைக் கூறுமிடத்து நூற்பெயரும், காரணம், ஆக்கியோன் பெயர், அளவு, பயன் என்பன எடுத்துரைக்கப்படுகிறது. இந்நூல் என்ன பெயர்த்தோ எனின் பாளித்தம் என்னும் பாகத இலக்கணமும் (பிராகிருதம் என்பதன் திரிபு) பிங்கலம் என்னும் சந்தோபிசிதமும் போலக் காரிகை யாப்பிற்றாய்க் குணசாங்கியம் என்னும் கருநாடக சந்தமே போல மகடூஉ முன்னிலைத்தாய் அவையடக்கம் உடைத்தாய் மயேச்சுரர் யாப்பே போன்று உதாரணம் கூறி, இசைத்தமிழ் செய்யுள் துறைக்கோவையே போலவும் உருபாவாதாரத்திற்கு நீதகச் சுலோகமே போலவும் முதன் இணைப்பு உணர்த்திய இலக்கியத்ததாய் வேதத்திற்கு விருத்தமும் வியாகரணத்திற்குக் காரிகையும் அவிநயர் யாப்பிற்கு நாலடி நாற்பதும் போல யாப்பருங்கலம் என்னும் யாப்பிற்கு அங்கமாய் அலங்காரம் உடைத்ததாகச் செய்யப்பட்டமையால் யாப்பருங்கலக்காரிகை எனப் பெயர் பெற்றது.

காரிகை என்னும் நூல் உறுப்பியல், செய்யுளில், ஒழிபியல் என்று இயல் வகையால் மூன்றாகவும் காரிகை வகையால் 44 ஆகவும், கிரந்த வகையால் தொண்ணூறு கிரந்தமும் இருபத்தெட்டு எழுத்தும் ஆகிய அளவை உடையது. (இங்கு காரிகை என்பது கட்டளைக் கலித்துறை செய்யுளையும் கிரந்தம் என்பது உயிரும் உயிர்மெய்யும் ஆகிய 32 எழுத்துக்களாகும்.) இந் நாற்பத்தினான்கு காரிகையில் நேரசை முதலாகிய காரிகை இருபத்தியொன்று, நிரையசை முதலாகிய காரிகை இருபத்திமூன்றாகும்.

நேரசை முதலாகிய காரிகை ஓரடிக்கு 16 எழுத்தாகவும், 4 அடிகளுக்கு 64 எழுத்துக்களாகவும் அமைவதால், அதன்படி 21 காரிகைக்கு 1344 எழுத்துக்கள் அமையும். நிரையசை முதலாகிய காரிகைக்கு ஓரடிக்கு 17 எழுத்தாக நான்கு அடிகளுக்கு 68 எழுத்துக்களாகவும் அமைவதால் அதன்படி 23 காரிகைக்கு 1564 எழுத்துக்கள் அமையும். மேற்கூறிய செய்திகள் யாப்பருங்கலக்காரிகைக்கு எழுதப்பட்ட தற்சிறப்புப் பாயிரத்தின் வழி அறிய முடிகின்றது. காரிகை நூலில் காட்டப்படும் எடுத்துக்காட்டுச் செய்யுட்களுக்கு யாப்பருங்கலக்காரிகை நூலில் உதாரண இலக்கிய முதல் நினைப்புக் காரிகைச் செய்யுட்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

## அலகு 4 – யாப்பருங்கலக்காரிகை – உறுப்பியல்

4.0 பாட அறிமுகம்

4.1 நோக்கங்கள்

4.2 பாடப் பிரிவுகள்

4.2.0 தற்சிறப்புப் பாயிரம், அவையடக்கம்

4.2.1 உறுப்பியல்

4.2.1.1 எழுத்து

4.2.1.2 அசை

4.2.1.3 சீர்

4.2.1.4 தளை

4.2.1.5 அடி

4.2.1,6 தொடை

தன்மதிப்பீட்டு வினாக்கள்

தொகுப்புரை

பயிற்சி வினாக்கள்

மேலும் படிக்க வேண்டிய நூல்கள்

தன்மதிப்பீட்டு விடைகள்

### 4.0 பாட அறிமுகம்

தமிழ் யாப்பிலக்கணம் பற்றிக் கூறும் நூல்களில் தொல்காப்பியச் செய்யுளியலைத் தொடர்ந்து எளிதில் புரிந்து கொள்ளும் நிலையில் அமைந்துள்ள யாப்பிலக்கண நூல் யாப்பருங்கலக்காரிகையாகும். இளங்கலை தமிழிலக்கியம் பயிலும் மாணவர்களுக்கு யாப்பிலக்கணம் தெரிந்து கொள்வதற்காக இந்நூல் பாடமாக வைக்கப்பெற்றுள்ளது. இந்நூல் உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் என்னும் மூன்று இயல்களைக் கொண்டது.

செய்யுளுக்கு உறுப்பாக அமையும் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகிய ஆறு உறுப்புக்களின் இலக்கணங்களும் அவற்றின் வகைகளும் அவ்வகைகளுக்கான சான்றுகளும் இவ்வியலில் இடம்பெற்றுள்ளன.

### 4.1 நோக்கங்கள்

உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் என்னும் மூன்று இயல்கள் பிரித்தமைக்கான காரணங்களை அறிந்து கொள்ளுதல்.

செய்யுளுக்கு உறுப்பாக அமையும் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகியவற்றின் இலக்கணத்தையும் அவற்றின் வகைப்பாடுகளையும் செய்யுளில் அவை பயின்று வரும் முறையினையும் அறிந்து கொள்ளுதல்.

### 4.2 பாடப்பிரிவுகள்

#### 4.2.0 தற்சிறப்புப் பாயிரம், அவையடக்கம்

இந்நூலின் தொடக்கத்தில் தற்சிறப்புப் பாயிரம் என்னும் பகுதி இடம் பெற்றுள்ளது. இச்சிறப்புப் பாயிரத்தில் நூற்பெயர்க் காரணம், ஆக்கியோன் பெயர், அளவு, பயன் முதலிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. இத் தற்சிறப்புப் பாயிரத்தைத் தொடர்ந்து காரிகை ஆசிரியரின் அவையடக்கம் தொடர்பாக இரண்டு நூற்பாக்கள் இடம்பெற்றுள்ளன.

கந்த மடிவில் கடிமலர்ப் பிண்டிக்கண் ணார்நிழல்கீழ்

எந்தம் அடிகள் இணையடி ஏத்தி எழுத்தசைசீர்ப்

பந்தம் அடிதொடை பாவினம் கூறுவன் பல்லவத்தின்

சந்த மடிய அடியான் மருட்டிய தாழ்குழலே.

முருகுவிரியும் மொய்ம்மலரசோகின் கீழிருக்கும் அருகனது அடியினை வணங்கி எழுத்து, அசை, சீர், தளை, அடி தொடை, பா, பாவினம் ஆகிய செய்திகள் இக்காரிகை மூலம் வெளிப்படுகிறது.

அவையடக்கம்

தற்சிறப்புப் பாயிரத்தைத் தொடர்ந்து அமிர்தசாகரர் அவையடக்கம் கூறுகின்றார். இப்பகுதியில் இரண்டு காரிகைகள் இடம் பெற்றுள்ளன. நூலின் சிறப்பினையும், ஆசிரியரது பெருந்தன்மையையும் தன்னுடைய உள்ளக் குறையையும் உணர்த்திய முகத்தான் அவை அடக்கம் கூறப்பட்டுள்ளது.

தேனார் கமழ் தொங்கல் மீனவன் கேட்பத்தெண் ணீரருவிக்

கானார் மலயத்து அருந்தவன் சொன்னகன் னித்தமிழ்நூல்

யானா நடாத்துகின் றேனெனக்கு எனக்கே நகைதருமால்

ஆனா அறிவின் அவர்கட்கென் னாம்கொலென் ஆதரவே. நூற்பா 2

தேனிறைந்த மணம் கமழ்கின்ற வேம்பு மாலையைத் தரித்த பாண்டியன் கேட்க, தெளிந்த அருவி நீரையுடைய சந்தனச்சோலை சூழ்ந்த பொதியமலையில் எழுந்தருளியுள்ள அரிய தவத்தினையுடைய அகத்தியமுனிவரால் அழிவின்றி நிலைபெற்ற முத்தமிழுள் இயற்றமிழின் கூறாகிய யாப்பிலக்கண நூலை யானும் என் புல்லிய நாவினால் சொல்லத் தொடங்கினேன். இது அறிவிலியாகிய எனக்கே நகையினைத் தோற்றுவித்தலால், குறையற்ற அறிவினை உடையவர்க்கு யாதாகுமோ என்று ஆசிரியர் அவையடக்கம் கூறுகின்றார்.

பனி தோய்ந்த நெடிய இமயமலையைச் சேர்ந்த இழிவாகிய கரிய காக்கைப் புள்ளும் பொன்னிறம் பெற்றிருக்கும் என்று இவ்வுலகத்தவர் கூறுவர். இவ்வாறே குற்றம் தீர்ந்த அளவற்ற நூற்கேள்வியையுடைய புலவருக்கு முன் யான் கூறிய சிறப்பில்லாத பிண்டப் பொருளும் சிறந்த நுண்பொருளாகும் என்று கூறுகின்றார். இவ் அடையடக்கப் பாடலில் சார்ந்தோரால் தன்னுடைய படைப்பும் சிறக்கும் என்பதை ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார்.

சுருக்கமில் கேள்வித் துகள்தீர் புலவர்முன் யான்மொழிந்த

பருப்பொருள் தானும் விழுப்பொருளாம்பனி மாலிமயப்

பொருப்பகஞ் சேர்ந்தபொல் லாக்கருங் காக்கையும் பொன்னிறமாய்

இருக்குமென் றிவ்வா றுரைக்குமன் றோஇவ் விருநிலமே. நூற்பா 3

என்னும் காரிகை மூலம் அமிர்தசாகரரின் அவையடக்கப் பண்பு வெளிப்படுகிறது. தான் சார்ந்திருக்கும் சான்றோரால் தன்னுடைய படைப்பும் சிறப்படையும் என்று நம்பிக்கை கொள்கிறார்.

4,2,1 உறுப்பியல்

யாப்பருங்கலக்காரிகையின் முதற்பகுதி உறுப்பியலாகும். இவ்வியலில் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகிய ஆறு உறுப்புகள் பற்றிய செய்திகள் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

குறில்நெடில் ஆவிகுறுகிய மூவு யிர் ஆய்தம் மெய்யே

மறுவறு மூவினம் மைதீர் உயிர்மெய் மதிமருட்டும்

சிறுநுதற் பேரமர்க் கண்செய்ய வாய் ஐய நுண்ணிடையாய்

அறிஞர் உரைத்த அளபும் அசைக்குறுப் பானவே. நூற்பா 4

இக்காரிகை மூலம் குறில், நெடில், உயிர், குறுகிய மூவுயிர், ஆய்தம், மெய், மூவினம், உயிர்மெய், அளபெடை என்னும் எழுத்துகளின் பெயர்களும் அப்பெயர்களுக்கான காரணங்களையும் அறிய முடிகிறது.

4,2,1.1 எழுத்து

உறுப்பியல் என்னும் முதல் பகுதியில் எழுத்து என்னும் முதல் தலைப்பில் உயிரெழுத்து, மெய்யெழுத்து ஆகியன பற்றியும் அளபெடை, குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக் குறுக்கம் முதலியவற்றைப் பற்றிக்கூறுகின்றார். அவற்றை முறையே பார்ப்போம்.

1. குறில்

உயிரெழுத்துகளில் அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்து எழுத்துக்களும் ஒரு மாத்திரை அளவு ஒலிக்கும் குற்றெழுத்துக்களாகும்.

2. நெடில்

உயிரெழுத்துக்களில் ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் ஏழு எழுத்துக்களும் இரண்டு மாத்திரை ஒலி அளவு ஒலிக்கும் நெட்டெழுத்துக்கள்.

3. ஆவி (உயிர்)

அகரம் முதல் ஔகாரம் ஈறாய் உள்ள பன்னிரண்டு எழுத்துக்களும் உயிரெழுத்துக்கள் ஆகும்.

4. குற்றியலிகரம்

நிலைமொழியின் இறுதியில் உள்ள உகரம் திரிந்தும் திரியாதும் வருமொழியின் யகரமோடு இயைபின்கண் வந்த இகரம் குற்றியலிகரமாகும்.

(எ.டு) நாகு + யாது = நாகியாது, காடு + யாது = காடியாது

மேலும் திரியாது வரும் குற்றியலிகரமும் உண்டு. அது மியா என்னும் முன்னிலை அசைச்சொல் கண் வந்த இகரமாகும்.

(எ.டு) கேண்மியா, சென்மியா என்பன.

குற்றியலுகரம்

நெடிற்கீழ், நெடிலொற்றின்கீழ், குறிலிணைக்கீழ், குறிலிணை ஒற்றின் கீழ், குறில் நெடில் கீழ், குறில் நெடில் ஒற்றின் கீழ், குற்றொற்றின் கீழ் ஆகிய ஏழிடத்தும் ஆறு வல்லெழுத்துக்களையும் ஊர்ந்து உகரம் வந்தால் குற்றியலுகரமாகும்.

நாகு, காசு, காடு, காது, காபு, காறு – நெடில் தொடர்க் குற்றியலுகரம்.

நொடிலொற்று – நாக்கு, குறிலிணை – வரகு

குறிலிணை ஒற்று – அரக்கு, குறில்நெடில் கீழ் – அசோகு

குறில்நெடில் ஒற்று – அக்கு தமாக்கு

இங்கு ஆறு வல்லெழுத்துக்களுள் ‘க்’ ஊர்ந்து வந்த குற்றியலுகரத்திற்குச் சான்றினைக் கண்டோம். பிற வல்லெழுத்துக்கள் ஊர்ந்து வந்த குற்றியலுகரத்திற்குக் காரிகையின் மூல நூலில் கண்டு கொள்க.

ஐகாரக் குறுக்கம்

அளபெடுத்தல், தனியே சொல்லுதல் ஆகிய இடங்களில் அல்லாத வழிவந்த ஐகாரம் தன்னளவில் குறுகி ஒன்றரை மாத்திரையாகவும், ஒரு மாத்திரையாகவும் ஒலிக்கும். அவை மொழி முதல், இடை, கடை என்னும் மூன்று இடங்களிலும் வரும்.

ஐப்பசி – மொழிமுதல், இடையன் – மொழியிடை, குவளை – மொழியிறுதி.

ஆய்தம்

ஆய்தம் என்பது அஃகேனமாகும். இதனைத் தனிநிலை, புள்ளி, ஒற்று என்னும் பெயர்களாலும் அழைப்பர்.

“குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி

உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே”

– தொல்காப்பிய எழுத்தியல் நூற்பா 38

(எ.டு) எஃகு, கஃசு, கஃது, கஃபு, கஃறு என வரும்.

மெய்

ககரம் முதல் னகர இறுதியாக உள்ள பதினெட்டு எழுத்துக்களும் மெய்யெழுத்துக்கள் ஆகும். இவ்வெழுத்தை மெய், உடம்பு, ஒற்று, புள்ளி என்னும் பெயர்களிட்டு அழைப்பர்.

மூவினம்

மெய்யெழுத்துக்களை ஒலிப்புத் தன்மையை வைத்து மூன்று இனங்களாகப் பிரிப்பர். அவற்றுள் க், ச், ட், த், ப், ற் என்னும் ஆறெழுத்துக்களும் வல்லினமாகும். ங், ஞ், ண், ந், ம், ன் என்னும் ஆறு எழுத்துக்களும் மெல்லினமாகும். ய், ர், ல், வ், ழ், ள் என்னும் ஆறு எழுத்துக்களும் இடையினமாகும். இம்மூவினத்தையும் காரிகை ‘மறுவறு மூவினம்’ என்று சிறப்பித்துக்கூறும். அவை உயிர்மெய்யாகிய காலத்தும் அப்பெயராலேயே வழங்கப்படும்.

உயிர்மெய்

பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் பதினெட்டு மெய்யெழுத்துக்களின்மேல் சேர்ந்து பிறக்கும் 216 எழுத்துக்கள் உயிர்மெய் எழுத்துக்களாகும்.

அளபெடை

அளபெடுத்தல் அளபெடையாகும். ஒரு குறில் தன் ஒலிப்பு அளவிலிருந்து நீண்டு ஒலிக்கும் போது அவ்வொலி அளவிற்கு அடையாளமாய் அக்குறிலுள்ள உயிரெழுத்து அந்த நெடிலோடு எழுதப்படுகிறது.

சிலவிடங்களில் ஒரு சொல்லில் நெடிலே அமைந்த போதும் அதன் ஒலியளவை நீட்டி ஒலிக்க அந்நெடிலின் இனக்குறில் இடம்பெறும். இவ்வளபெடை உயிரளபெடை, ஒற்றளபெடை என இரண்டு வகைப்படும்.

உயிரளபெடை

உயிரெழுத்துக்களில் நெட்டெழுத்து ஏழும் அளபெடுக்கும். அவை அளபெடுக்கையில் ஐகாரம் இகரத்தோடும் ஔகாரம் உகரத்தோடும் அளபெடுக்கும். பிறவும் தமக்கு இனமாகிய குற்றெழுத்துக்களுடன் தனிநிலை, முதல்நிலை, இடைநிலை, இறுதிநிலை என்னும் நான்கிடத்தும் வந்து அளபெடுக்கும்.

(எ.டு) ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஐஇ, ஓஒ, ஔஉ.

ஆஅரிடம், ஈஇரிடம், ஊஉரிடம், ஏஎரிகள், ஐஇயவி, ஓஒரிகள், ஔஉவியம் – முதனிலை அளபெடை.

படாஅசை – பரீஇயம் – கழூஉமணி – பரிரேஎம் – வளைஇயம் – புரோஒசை – அநௌஉகம் – இடைநிலை அளபெடை.

கடாஅ – குரீஇ – கழூஉ – மிலேஎ, கடைஇ.

அரோஒ – அநௌஉ – இறுதிநிலை அளபெடை.

உயிரளபெடை எழுத்து நோக்க ஏழாகவும், இடம் நோக்க நான்காகவும் எழுத்தும் இடமும் உறழ்ந்து நோக்க இருபத்தெட்டாகவும் கொள்ளுதல் வேண்டும்.

ஒற்றளபெடை

ங, ஞ, ண, ந, ம, ன, வ, ய, ல, ள, ஆய்தம் என்னும் பதினோரொற்றும் குறில்கீழும் குறிலிணைக் கீழும் வந்து அளபெடுக்கும்.

ஙஞண நமன வயலள ஆய்தம்

எனுமிவை ஈரிடத் தளபெழு மொரோ வழி.

(எ.டு) மங்ங்கலம், மஞ்ஞ்சு, மண்ண்ணு, பரிந்ந்து, அம்ம்பு, மின்ன்னு, தெவ்வ்வர், வெய்ய்யர், செல்ல்க, கொள்ள்க, எஃஃகு – குறிற்கீழ் பதினோரொற்றும் அளபெடுத்தன.

அரங்ங்ம், முரஞ்ஞ்ச, முரண்ண்டு முதலியன குறிலிணைக்கீழ் அளபெடுத்தன.

'அறிஞருரைத்த அளபும்' என்று முதற் காரிகையில் சிறப்பித்ததனால், எழுத்துகளுக்குரிய மாத்திரை கூறப்பட்டது. குற்றெழுத்தும் ஒற்றளபெடையும் ஒரு மாத்திரை. நெட்டெழுத்து இரண்டு மாத்திரை. உயிரளபெடை மூன்று மாத்திரை. ஆய்தம், மெய், குற்றியலிகரம், குற்றியலுகரம் ஆகியவை முறையே அரை மாத்திரை. ஐகார, ஔகார குறுக்கம் முறையே ஒன்றரை மாத்திரை. மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் முதலியன அரை மாத்திரை பெறும்.

எழுத்துக்களின் பெயர்க்காரணத்திற்குத் தொல்காப்பிய நூற்பாக்கள் மேற்கோளாக யாப்பருங்கலக்காரிகை நூலில் காட்டப்பட்டன. அவற்றை மூல நூலில் கண்டு கொள்க.

4.2.1.2 அசை

அசை என்பது செய்யுளின் அறுவகை உறுப்புக்களில் ஒன்று. எழுத்துக்களை அசைத்தலால் அசை உருவாகிறது. 'எழுத்து அசைகோடலின் அசையே' என்பர். எழுத்துக்களின் மாத்திரை அளவிற்கேற்ப அசைகள் அமைகின்றன. சீர்களுக்கு அடிப்படையாய் விளங்கும் அசையை நேரசை, நிரையசை என்று இரு வகையாகப் பிரிப்பர்.

இவ்வசைகளைக் காக்கைப்பாடினியார் தனியசை, இணையசை என்று குறிப்பிடுவார்.

அசைகள் அமையும் முறை

நேரசை

1. தனிக்குறில் வரின் – ழி
2. தனிநெடில் வரின் – ஆ
3. தனிக்குறிலையடுத்து ஒற்று வருதல் – வெள்
4. தனிநெடிலெழுத்து ஒற்று வருதல் – வேல்

நிரையசை

1. குறிலிணை – வெறி

2. குறில் நெடில் – சுறா

3. குறிலிணை ஒற்று – நிறம்

4. குறில்நெடில் ஒற்று – விளாம்

குறிலே நெடிலே குறிலிணை ஏனைக் குறில்நெடிலே

நெறியே வரினும் நிறைந்தொற் றடுப்பினும் நேர்நிரை யென்று

அறிவேய் புரையுமென் தோளி உதாரணம் ஆழிவென்வேல்

வெளியே சுறாநிறம் விண்டோய் விளாமென்று வேண்டுவரே. நூற்பா 5

என்னும் காரிகை நேரசை, நிரயசைகளுக்கான இலக்கணங்களையும் அவற்றிற்குரிய சான்றுகளையும் கூறியது.

நேரசை நான்கும் வந்த செய்யுள்

(எ.டு) போது சாந்தம் பொற்ப ஏந்தி

ஆதி நாதற் சேர்வோர்

சோதி வானந் துன்னு வாரே.

நிரையசை நான்கும் வந்த செய்யுள்

அணிநிழல் அசோகமர்ந் தருள்நெறி நடாத்திய

மணிதிகழ் அவிரொளி வரதனைப்

பணிபவர் பவநனி பரிசறுப் பவரே.

இச்செய்யுள் நிரையசை நான்கும் வந்த ஆசிரியப்பாவாகும். இதுவரை அசைகளின் இலக்கணத்தையும் அதன் வகைகளையும் அவற்றிற்குரிய எடுத்துக்காட்டுகளையும் கண்டோம். இனி, ‘சீர்’ பற்றிய செய்திகளைக் காணலாம்.

### தன் மதிப்பீட்டு வினாக்கள்

1. அசைக்கு உறுப்பாகுவன ..................
2. யாப்பருங்கலக்காரிகையின் ஆசிரியர் யார்?
3. யாப்பருங்கலக்காரிகையின் உரையாசிரியர் யார்?
4. குறுகிய ஓசையை உடைய உகரம், இகரம் எவை என்பதை அடையாளப்படுத்துக.
5. சீர்களுக்கு அடிப்படையாக விளங்குவது எது?
6. நேரசை, நிரையசையை அடையாளப்படுத்திக் காட்டுக.

### 4.2.13 சீர்

அசை ஒன்றோ, பலவோ கூடிப் பகுதி பகுதியாகச் சீரான முறையில் அடிக்கு உறுப்பாக அமைவது சீராகும்.

“அசையியைந்து சீர்கொள நிற்றலின் சீரே” என்று கூறுவர்.

இச்சீர் ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர் என்று நான்கு வகைப்படும்.

ஓரசைச் சீரினை அசைச்சீர் என்றும், ஈரசைச் சீரினை ஆசிரியவுரிச்சீர் என்றும், நிரையசை இறுதியாகிய மூவசைச் சீரினை வஞ்சியுரிச்சீர் என்றும் நேரசையிறுதியாகிய மூவசைச் சீரினை வெண்பாவுரிச்சீர் என்றும் நாலசைச் சீரினைப் பொதுச்சீர் என்றும் ஐவகையாகவும் கூறுவர்.

ஈரசை நாற்சீ ரகவற் குரியவெண் பாவினவாம்

நேரசை யாலிற்ற மூவசைச் சீர்நிரை யாலிறுப

வாரசை மென்முலை மாதே வகுத்தவஞ் சிக்குரிச்சீர்

ஓரசை யேநின்றுஞ் சீராம் பொதுவொரு நாலசையே. நூற்பா 6

நால்வகைச் சீர்களில் இயற்சீர் எல்லாச் செய்யுளுள்ளும் வருதலின் முதலில் வைக்கப்பட்டுள்ளது. உரிச்சீர் எல்லாச் செய்யுளுள்ளும் வருதலானும் வெண்பா, வஞ்சிப்பாவிற்கு உரிமை பூண்டு நிற்றலால் இடைக்கண் வைக்கப்பட்டுள்ளது. நாலசைச் சீராகிய பொதுச்சீர் அருகியன்றி வாராமையின் இறுதியில் வைக்கப்பட்டுள்ளது.

சீர்களுக்குரிய வாய்பாடு

தேமா புளிமா கருவிளம் கூவிளம் சீரகவற்கு

ஆமாங் கடைகா யடையின்வெண் பாவிற்கந் தங்கனியா

வாமாண் கலையல்குல் மாதே வகுத்தவஞ் சிக்குரிச்சீர்

நாமாண் புரைத்த அசைச்சீர்க்கு உதாரணம் நாள் மலரே. நூற்பா 7

நேர் நேர் – தேமா

நிரை நிரை – கருவிளம்

நிரை நேர் – புளிமா

நேர் நிரை – கூவிளம்

இவ்வாறு சீர்களுக்குரிய வாய்பாடுகளைக் காரிகையாசிரியர் குறிப்பிடுகின்றார். மேற்கூறிய நான்கு சீரும் ஆசிரிய உரிச்சீராகும்.

மேலும், இயற்சீரான தேமா, புளிமா முதலியவற்றை மாச்சீர் என்றும், கருவிளம், கூவிளம் முதலியவற்றை விளச்சீர் என்றும் அழைப்பர்.

“ஈரசை கூடியசீர் இயற்சீர் அவை

ஈரிரண் டென்ப இயல்பு ணர்ந்தோரே” (யாப்பருங்கலம் சூத்திரம் 12)

“குன்றக் குறவன் காதன் மடமகள்

வரையர மகளிர் புரையுஞ் சாயலள்

ஐயன் அரும்பிய முலையள்

செய்ய வாயினள் மார்பினள் சுணங்கே”(ஐங்குறுநூறு – குன்றக்குறவன் பத்து – 5)

மேற்கூறிய நேரிசை ஆசிரியப்பாவில் ஆசிரியவுரிச்சீர் நான்கும் இடம் பெற்றுள்ளன.

மூவசைச் சீர்

மூன்று சீர்களைக் கொண்டு நடக்கும் சீர் மூவசைச் சீராகும். உரிச்சீர் என்று இவ்வசைச் சீரை அழைப்பர். ஈரசைச் சீர்களுடன் நேர்நிரை என்னும் அசைகள் தனித் தனியாகச் சேர்க்கப்பெறின் மூவசைச் சீர்கள் எட்டாக அமைகின்றது.

வெண்பாவுரிச்சீர்

இவ்வுரிச்சீர் நேரீற்று உரிச்சீர், நிரையீற்று உரிச்சீர் என்று இரு வகைப்படும். காரிகையில் “ஆங்கடைகாய் அடையின் வெண்பாவிற்கு” என்பதால் கடையிற்காய் என்னும் சொல் பெற்று தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்னும் ஈரசைச்சீர் வாய்பாடுகள் முறையே தேமாங்காய், புளிமாங்காய், கருவிளங்காய், கூவிளங்காய் என்னுமாறு அமையும். இவ்வாறு நேரசையில் முடிகின்ற நான்கு சீர்களும் நேரீற்று உரிச்சீர் ஆகும்.

வெண்பாவுரிச்சீரின் வாய்பாடு

நேர் நேர் நேர் – தேமாங்காய்

நிரை நேர் நேர் – புளிமாங்காய்

நிரை நிரை நேர் – கருவிளங்காய்

நேர் நிரை நேர் – கூவிளங்காய்

(எ.டு) பொன்னார மார்பிற் புனைகழற்காற் கிள்ளிபோர்

உன்னேன்என் றூமுலக்கை பற்றினேற்கு – என்னோ

மனனொடு வாயெல்லாம் மல்குநீர்க் கோழிப்

புனனாடன் பேரே வரும்.

இந்நேரிசை வெண்பாவில் வெண்பா உரிச்சீர் நான்கும் இடம்பெற்றுள்ளன.

நிரையீற்று உரிச்சீர்

‘அந்தம் கனியா வகுத்தவஞ் சிக்குரிச்சீர்’ என்பதனால் ஈரசைச் சீர்களிடத்து ‘கனி’ என்னும் சொல் பெற்றுத் தேமாங்கனி, புளிமாங்கனி, கருவிளங்கனி, கூவிளங்கனி என்னுமாறு அமையும். இவை நிரையீற்று உரிச்சீர் ஆகும்.

இவ்வசைச் சீர்கள் வஞ்சிப்பாவிற்கு உரியவை. எனவே அவற்றை வஞ்சியுரிச்சீர் என்றும் கனிச்சீரில் முடிவதால் கனிச்சீர் என்றும் வழங்குவர்.

வஞ்சியுரிச்சீர் வாய்பாடு

நேர் நேர் நிரை – தேமாங்கனி

நிரை நேர் நிரை – புளிமாங்கனி

நிரை நிரை நிரை – கருவிளங்கனி

நேர் நிரை நிரை – கூவிளங்கனி

(எ.டு) பூந்தாமரைப் போதலமரத்

தேம்புனலிடை மீன்திரிதரும்

வளவயலிடைக் களவயின்மகிழ்

வினைக்கம்பலை மனைச்சிலம்பவும்

மனைச்சிலம்பிய மணமுரசொலி

வயற்கம்பலைக் கயலார்ப்பவும்

நாளும்

மகிழு மகிழ்தூங் கூரன்

புகழ்தலானாப் பெருவண்மையனே.

இக்குறளடி வஞ்சிப்பாவினுள் வஞ்சியுரிச்சீர் நான்கும் இடம் பெற்றுள்ளன.

ஓரசைச்சீர்

ஓர் அசையே நேரசையாகவோ, நிரையசையாகவோ தனியாக நிற்குமாயின் ஓரசைச் சீர் எனப் பெயர் பெறும். இச்சீரை அசைச்சீர் என்றும் வழங்குவர். இது வெண்பாவின் ஈற்றடியில் இறுதிச் சீராக வரும்.

நேரசைச்சீரின் வாய்பாடு நாள், நிரையசைச் சீரின் வாய்பாடு மலர் என்பதாகும்.

நேரசை வாய்ப்பாட்டிற்குச் சான்று

பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி

வாலெயி றூறிய நீர்.

நிரையசை வாய்ப்பாட்டிற்குச் சான்று

நன்றறி வாரிற் கயவர் திருவுடையார்

நெஞ்சத் தவல மிலா.

பொதுச்சீர்

எவ்வித சிறப்புமின்றி பொதுவாக இச்சீர் அமைவதால் பொதுச்சீர் என்பர். நான்கு அசைகளால் உருவாவதால் இதனை நாலசைச்சீர் என்றும் வழங்குவர்.

“நாலசைச்சீர் பொதுச்சீர் பதினாறே” நூற்பா 12

என்னும் நூற்பாவால் பின்வரும் செய்திகள் பெறப்படுகின்றன.

தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்னும் நான்கு இயற்சீர்களுடன் தண்பூ, தண்ணிழல், நறும்பூ, நறுநிழல் என்னும் நான்கினையும் முறையாக உறழ்ந்தால் நாலசைச்சீர் பதினாறாக அமையும். அவற்றில் நேர் இறுதி எட்டாகவும், நிரையிறுதி எட்டாகவும் அமையும்.

வாய்பாடுகள்

நேர் நேர் நேர் நேர் – தேமாந்தண்பூ

நிரை நேர் நேர் நேர் – புளிமாந்தண்பூ

நிரை நிரை நேர் நேர் – கருவிளந்தண்பூ

நேர் நிரை நேர் நேர் – கூவிளந்தண்பூ

நேர் நேர் நிரை நேர் – தேமா நறும்பூ

நிரை நேர் நிரை நேர் – புளிமா நறும்பூ

நிரை நிரை நிரை நேர் – கருவிளம் நறும்பூ

நேர் நிரை நிரை நேர் – கூவிளம் நறும்பூ

மேற்கூறிய எட்டும் 'பூ' என்னும் சொல்லினை இறுதியில் பெற்று 'நேர்' என்னும் சீர் இறுதியாக வருகின்ற நாலசைச் சீர்களாகும்.

நிழல் என்னும் சொல்லினை இறுதியாகப் பெற்று, நிரை இறுதியாக வருகின்ற நாலசைச் சீர்கள்

நேர் நேர் நேர் நிரை – தேமாந்தண்ணிழல்

நிரை நேர் நேர் நிரை – புளிமாந்தண்ணிழல்

நிரை நிரை நேர் நிரை – கருவிளந்தண்ணிழல்

நேர் நிரை நேர் நிரை – கூவிளந்தண்ணிழல்

நேர் நேர் நிரை நிரை – தேமா நறுநிழல்

நிரை நேர் நிரை நிரை – புளிமா நறுநிழல்

நிரை நிரை நிரை நிரை – கருவிள நறுநிழல்

நேர் நிரை நிரை நிரை – கூவிள நறுநிழல்

மேற்கூறிய நாலசைச் சீர்களுக்குரிய வாய்பாடுகள் நிரை என்னும் சீரினை இறுதியாகக் கொண்ட வையாகும். செய்யுளுக்கு உறுப்பாக அமைந்த சீர் பற்றிய செய்திகளைப் பார்த்தோம். இனி, சீர்களின் சேர்க்கையால் உருவாகும் தளை பற்றிய செய்திகளைப் பார்க்கலாம்.

### 4.2.1.4 தளை

நின்ற சீரின் ஈற்றசையும், வருஞ்சீரின் முதலசையும் தம்முள் ஒன்றியோ, ஒன்றாமலோ இணைந்து வருவது தளையாகும். (தளை – பொருந்துவது)

"சீர் இரண்டு தட்டு நிற்றலின் தளையே" என்று கூறுவர். இத் தளை ஏழு வகைப்படும்.

'தளை' என்பது கட்டு, பிணை, கூடும்முறை எனப் பல பொருள்படும். இங்குச் சீர்களை ஓசையால் கட்டுவதால் – பொருத்துவதால் – தளை என்று வழங்கப்படுகிறது.

தண்சீர் தனதொன்றில் தன்தளை யாம்தண வாதவஞ்சி

வண்சீர் விகற்பமும் வஞ்சிக் குரித்துவல் லோர்வகுத்த

வெண்சீர் விகற்பம் கலித்தளை யாய்விடும் வெண்தளையாம்

ஒண்சீர் அகவல் உரிச்சீர் விகற்பமும் ஒண்ணுதலே. நூற்பா 10

என்பது காரிகை உணர்த்தும் செய்தியாகும்.

சீரொடு சீர்தலைப் பெய்வதுதளை, அவை

ஏழென மொழிப இயல் புணர்ந்தோரே.

என்று யாப்பருங்கல நூற்பா 17-இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

நால்வகைப் பாக்களைப் போலத் தளையும் ஆசிரியத்தளை (2), வெண்டளை (2), கலித்தளை, வஞ்சித்தளை (2) எனப் பெயர் பெற்றுள்ளது.

நின்ற சீரின் ஈற்றசையும் வருஞ்சீரின் முதலசையும் ஒன்றுதலும், ஒன்றாமையும் உண்டு. ஒன்றி வரும் தளைகள் ஒன்றிய தளைகள் என்றும், ஒன்றாமல் வரும் தளைகள் ஒன்றாத தளைகள் என்றும் பகுக்கப்படும்.

1. நேரொன்றாசிரியத்தளை

இது மாமுன் நேர் என்றவாறு அமையும். ஆசிரியவுரிச்சீர் நின்று வருஞ்சீரின் முதலசையோடு நேராய் ஒன்றுவது நேரொன்றாசிரியத் தளையாகும்.

(எ.டு) உள்ளார் கொல்லோ தோழி முள்ளுடை

அலங்கு குலையீந்தின் சிலம்பிபொதி செங்காய்

துகில் பொதி பவள மேய்க்கும்

அகில்படு கள்ளியங் காடிறந் தோரே.

மேற்கூறிய செய்யுளில் நேரொன்றாசிரியத் தளை இடம் பெற்றுள்ளமையை அறியலாம்.

2. நிரையொன்றாசிரியத்தளை

ஆசிரியவுரிச்சீர் நின்று வருஞ்சீரின் முதலசையோடு நிரையாய் ஒன்றுவது. இது மாமுன் நிரை என்னும் நிலையில் வரும்.

திருமழை தலைஇய இருணிற விசும்பின்

விண்ணதிர் இமிழிசை கடுப்ப

பண்ணமைந் தவர்தேர் சென்ற வாறே.

இது நிரையொன்றாசிரியத் தலையான் வந்த செய்யுளாகும்.

இயற்சீர் வெண்டளை

இயற்சீர் நின்று வருஞ்சீரின் முதலசையோடு ஒன்றாதது இயற்சீர் வெண்டளை எனப்படும். இது மாமுன் நிரை, விளமுன் நேர் என்றவாறு அமையும்.

(எ.டு) அகர முதல – மாமுன் நிரை

மலர்மிசை ஏகினான் – விளமுன் நேர்.

வெண்சீர் வெண்டளை

வெண்பா உரிச்சீர் நின்று வருஞ்சீரின் முதலடையுடன் ஒன்றுவது வெண்சீர் வெண்டளையாகும். காய்முன் நேர் என்றவாறு அமையும்.

கலித்தளை

மூவசைச் சீருக்குரிய காய்ச்சீரின் முன் நிரை முதலாகிய சீர் வருவது கலித்தளையாகும். அதாவது, காய் முன் நேர் என்னுமாறு அமையும்.

“வல்லோர் வகுத்த வெண்சீர் விகற்பம் கலித்தளையாய் வரும்” என்று கூறுவர்.

(எ.டு) செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்தெறிந்த சினவாழி

முல்லைத்தார் மறமன்னர் முடித்தலையை முருக்கிப் போய்

எல்லைநீர் வியன்கொண்மூ இடைநுழையு மதியம் போல்

மல்லலோங் கெழில்யானை மருமம்பாய்ந் தொளித்ததே.

இது கலித்தளையில் அமைந்த செய்யுளாகும்.

வஞ்சியுரிச்சீர் நின்று வருஞ்சீரின் முதலசையுடன் ஒன்றுவது ஒன்றிய வஞ்சித்தளையாகும். கனிமுன் நேர் என்று வரும்.

(எ.டு) மைசிறந்தன மணிவரை

மைசிந்தின விளங்கிழாய் – கனிமுன் நிரை வந்துள்ளது.

ஒன்றாத வஞ்சித்தளை

வெண்பாவுரிச்சீர் நின்று வருஞ்சீரின் முதலசையுடன் ஒன்றாதது. கனிமுன் நிரை என்னுமாறு அமையும்.

“கைசிறந்தன காந்தளும்

பொய் சிறந்தனர் காதலர்.” – கனிமுன் நேர் வந்துள்ளது.

ஏழு வகையான தளைகள் அமையும் முறையினைப் பின்வருமாறு கூறலாம்.

1. மாமுன் நேர் – நேரொன்றாசிரியத்தளை
2. விளமுன் நேர் – நிரையொன்றாசிரியத்தளை
3. மாமுன் நிரை, விளமுன் நேர் – இயற்சீர் வெண்டளை
4. காய்முன் நேர் – வெண்சீர் வெண்டளை
5. காய்முன் நிரை – கலித்தளை
6. கனிமுன் நிரை – ஒன்றிய வஞ்சித்தளை

7.  கனிமுன் நேர் – ஒன்றாத வஞ்சித்தளை

இதுவரை தளையின் இலக்கணத்தையும் அதன் வகைப்பாடுகளையும் அவற்றிற்குரிய எடுத்துக்காட்டு களையும் கண்டோம்.  இனி செய்யுளுக்கு உறுப்பாக உள்ள அடி பற்றிய செய்திகளைப் பார்ப்போம்.

தன்மதிப்பீட்டு வினாக்கள்

1. சீர்களின் வகைகள் நான்கு.  சரியா? தவறா?
2. இரண்டு அசைகளால் ஆகிய சீர் .......
3. உரிச்சீரை எவ்வசைச்சீர் என்று அழைப்பர்?
4. ஓரசைச்சீர் ............. என்று அழைப்பர்.
5. தளை என்பதற்குரிய வேறு பெயர்களைக் குறிப்பிடுக?
6. தளைகள் எத்தனை வகைப்படும்?
7. காய் முன் நேர் வரும் தளை?
8. காய் முன் நிரை வருவது?
9. மூவசைச்சீருக்குரிய கனிச்சீரின் முன் நிரை முதலாகிய சீர் வருவது வஞ்சித்தளையாகும். சரியா? தவறா?

4.2.1.5    அடி

அடி என்பது செய்யுளின் அறுவகை உறுப்புக்களில் ஒன்றாகும்.  சீர்கள் இரண்டு முதலியனவாய்த் தளையால் இணைந்து அடி உண்டாகிறது.

“பலவும் சிலவுமாகிய தளையொடு பொருந்திய சீர்களால் அடுத்து நடத்தலின் அடி” என்று விளக்குவார் விருத்திரையுரையாசிரியர்.

“அத்தளை அடுத்து நடத்தலின் அடியே” என்றும் கூறுவர்.  இவ்வடி சீர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என்று வகைப்படுத்தப்பட்டுள்ளன.

குறளிரு சீரடி சிந்துமுச் சீரடி நாலொருசீர்

அறைதரு காலை யளவோடு நேரடி ஐயொருசீர்

நிறைதரு பாத நெடிலடி யாநெடு மென்பணைத் தோட்

கறைகெழு வேற்கணல் லாய்மிக்க பாதங்கழி நெடிலே.        நூற்பா 12

என்னும் காரிகை அடிகளின் வகைகளைக் காட்டுகிறது.

1. குறளடி

இரண்டு சீர்களால் ஆகிய அடிக்கு குறளடி என்று பெயர்.

“திரைத்த சாலிகை

நிரைத்த போல்நிரந்து

இரைப்ப தேன்களே

விரைக்கொள் மாலையாய்.”

இது குறளடியில் வந்த செய்யுள் ஆகும்.

2.  சிந்தடி

மூன்று சீர்களால் ஆகிய அடி சிந்தடியாகும்.

“இருது வேற்றுமை யின்மையாற்

சுருதி மேற்றுறக் கத்தினோடு

அரிது வேற்றுமை யாகயே

கருதுவேல் தடங் கையினாய்.”

இது சிந்தடியால் வந்த வஞ்சி விருத்தமாகும்.

3.  அளவடி

நான்கு சீர்களால் அமையும் அடிக்கு அளவடி என்று பெயர்.

“தேம்பழுத் தினியநீர் மூன்றுந் தீம்பலா

மேம்பழுத் தளிந்தன சுளையும் வேரியும்

மாம்பழக் கனிகளு மதுத்தண் டீட்டமும்

தாம்பழுத் துளசில தவள மாடமே.”

இது அளவடியால் வந்த கலிவிருத்தமாகும்.

4. நெடிலடி

ஐந்து சீர்களால் அமையும் அடிக்கு நெடிலடி என்று பெயர்.

“வென்றான் வினையின் றொகையாய விரிந்து தன்தகை

ஒன்றாய்ப் பரந்த உணர்வின் ஒழியாது முற்றும்

சென்றான் திகழும் சுடர்சூ ழொளிமூர்த்தி யாகி

நின்றான் அடிக்கீழ்ப் பணிந்தார் வினைநீங்கி நின்றார்.”

இச்செய்யுள் ஐந்து சீர்களாகிய நெடிலடியான் வந்த கலித்துறையாகும். கலிநிலைத்துறை, கட்டளைத் துறை முதலிய செய்யுள்களும் ஐந்து சீர்களுடைய நெடிலடிகளாய் அமையும்.

5. கழிநெடிலடி

ஐந்து சீர்களுக்கு மேற்பட்டு அமையும் அடிகளுக்குக் கழிநெடிலடி என்று பெயர். அறு சீர்களுக்கு மேற்பட்டு அமையும் அடிகளுக்கு அவ்வச்சீர் எண்ணிக்கையில் பெயர் அமையும். எழுசீர்க் கழிநெடிலடி, எண்சீர்க் கழிநெடிலடி என்றவாறு பெயர் அமையும்.

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

இரைக்கு மஞ்சிறைப் பறவைக ளெனப்பெயர் இனவண்டு புடைசூழ

துரைக்க ளென்னுமக் குழம்புகள் திகழ்ந்தெழ நுடங்கிய விலையத்தால்

திரைக்க ரங்களிற் செழுமலைச் சந்தனத் திரள்களைக் கரைமேல்வைத்

தரைக்கு மற்றிது குணகடல் நிரையொடு பொருதலது அவியாதே.

இது அறுசீர்க் கழிநெடிலடியான் வந்த செய்யுளாகும்.

இதுபோன்றே எழுசீர், எண்சீர், ஒன்பதின் சீர், பதின்சீர் கழிநெடிலடிக்குச் சான்றுகளை யாப்பருங்கல மூல நூலில் பார்த்துக் கொள்க.

முற்கூறிய காரிகையில் மற்றும் என்பதனால் பதின்சீரின் மிக்கு வருவனவும் உண்டு. அவற்றை யாப்பருங்கல விருத்தியுள் காண்க.

அடிகளின் வகைகளை இதுவரை கூறிய காரிகையாசிரியர் இனி நால்வகைப் பாக்களின் அடியின் சிறுமை, பெருமைமையைக் கூறுகிறார்.

நால்வகைப் பாக்களில் அடியின் சிறுமையும் பெருமையும்

வெள்ளைக் கிரண்டடி வஞ்சிக்கு மூன்றடி மூன்றகவற்கு

எள்ளப் படாக்கலிக் கீரிண்டாகும் இழிபுரைப்போர்

உள்ளக் கருத்தின் அளவே பெருமை ஒண்போத நடுத்த

கள்ளக் கருநெடுங் கண்கரி மென்குழற் காரிகையே. நூற்பா 14

என்னும் காரிகை நான்கு பாக்களுக்கும் உரிய சிற்றெல்லை, பேரெல்லைகளை வரையறுக்கின்றது. வெண்பாவிற்குச் சிற்றெல்லை இரண்டடியாகவும், ஆசிரியப்பா, வஞ்சிப்பா ஆகிய இரண்டிற்கு மூன்றடியும், கலிப்பாவிற்கு நான்கடியும் ஆகும். இந்த நான்கு பாக்களுக்கும் பேரெல்லை பாடுவோரின் பொருள் முடிவுக் குறிப்பிற்கேற்றவாறு அமையும்.

வெண்பா – அறத்தா றிதுவென வேண்டா சிவிகை

பொறுத்தானோ டூர்ந்தா னிடை.

ஆசிரியப்பா – முதுக்குறைந்தனளே முதுக்குறைந்தனளே

மலையன் ஒள்வேற் கண்ணி

முலையும் வாரா முதுக்குறைந் தனளே.

கலிப்பா – "செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி" எனத் தொடங்கும் பாடல் கலித்தளைக்கு முன்னமே சான்றாகக் காட்டப்பட்டுள்ளது.

வஞ்சிப்பா – "செங்கண்மேதி கரும்புழக்கி

அங்கண்நீலத் தலரருந்திப்

பொழிற்காஞ்சி நிழல்துயிலும்

செழுநீர்

நல்வயற் கழனி யூரன்

புகழ்தல் ஆளாப் பெருவண் மையனே.

4.2.1.6 தொடை

செய்யுளின் உறுப்புக்களில் ஆறாவதாக உள்ளது தொடையாகும். இத்தொடை என்னும் தலைப்பில் தொடையின் இலக்கணம், தொடையின் வகைகள், தொடை விகற்பங்கள் முதலிய செய்திகள் இடம் பெற்றுள்ளன.

செய்யுளின் அடிகளும் அடிகளிலுள்ள சீர்களும் ஒன்றையொன்று தொகுத்துச் சொல்லும் அமைப்பினைத் தொடை என்பர். இது பாவின் ஓசைக்கும் இனிமைக்கும் இன்றியமையாதது.

தொடை வகைகள்

தொடையானது மோனை, எதுகை, இயைபு, முரண், அளபெடை, அந்தாதி, இரட்டை, செந்தொடை என எட்டு வகைப்படும். இவ்வெட்டு வகைத் தொடைகள் பற்றிய செய்திகளில் முதல் ஐந்து வகையைப் பற்றிய செய்திகள் காரிகை நூற்பா 16இல் கூறப்பட்டுள்ளன. மற்றைய தொடை வகைகளைப் பற்றிய செய்திகள் காரிகை நூற்பா 17இல் குறிப்பிடப்பட்டுள்ளன. முதல் வகைத் தொடைகளில் இயைபு தவிர மற்ற நான்கு தொடைகளும் அடியின் முதற்சீரின் கண்ணும் இயைபு மட்டும் இறுதிச் சீரில் மட்டும் வரும் தன்மையனவாகும்.

1. மோனைத் தொடை

செய்யுளில் அடிதோறும் முதல் சீரின் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனைத் தொடையாகும்.

(எ.டு) மாவும் புள்ளும் வதிவயிற் படர

மாநீர் விரிந்த பூவுங் கூம்ப

மாலை தொடுத்த கோதையுங் கமழ

மாலை வந்த வாடை

மாயோள் இன்னு யிர்ப்புறத் தன்றே.

இச்செய்யுளில் அடிதோறும் முதற்சீரின் முதலெழுத்து ஒன்றி வந்ததால் அடிமோனைத் தொடையாகும்.

2. எதுகைத் தொடை

செய்யுளில் அடிதோறும் முதற் சீரின் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது அடியெதுகைத் தொடையாகும்.

"இரண்டாம் வழுவா எழுத்தொன்றின் மாதே எதுகை" என்று கூறுவர்.

(எ.டு) அகர முதல எழுத்தெல்லாம் ஆதி

பகவன் முதற்றே உலகு.

இக்குறட்பாவில் முதற்சீரின் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவதைக் காணலாம்.

3. இயைபுத் தொடை

செய்யுளில் அடிதோறும் இறுதிக்கண் உள்ள எழுத்தேனும், சொல்லேனும் முறையே ஒன்றிவரத் தொடுப்பது. (இறுதி ஒன்றின் இயைபு).

(எ.டு) இன்னகைத் துவர்வாய்க் கிளவியும் அணங்கே

நன்மா மேனிச் சுணங்குமார் அணங்கே

ஆடமைத் தோளி ஊடலும் அணங்கே

அரிமதர் மழைக்கணும் அணங்கே

திருநுதற் பொறித்த திலகமும் அணங்கே.

இப்பாடலில் அடிதோறும் இறுதிச்சீர் ஒன்றி வரத் தொடுத்தமையால் அடிஇயைபுத் தொடையாயிற்று.

4. முரண் தொடை

அடிதோறும் முதற்சீரின் சொல்லாலும் பொருளாலும் தம்முள் மறுதலைப்படத் தொடுப்பது அடிமுரண் தொடையாகும்.

“மறுதலைத்த மொழியான் வரினும் பொருளான் வரினும் முரண்” என்று கூறுவர்.

(எ.டு) இருள்பரந் தன்ன மாநீர் மருங்கில்

நிலவுக்குவித் தன்ன வெண்மண லொருசிறை

இரும்பின் அன்ன கருங்கோட்டுப் புன்னை

பொன்னின் அன்ன நுண்டாது உறைக்குஞ்

சிறுகுடிப் பரதவர் மடமகள்

பெருமதர் மழைக்கணும் முடையவால் அணங்கே.

இச்செய்யுளில் அடிதோறும் முதற்கண்ணே எல்லாம் மறுதலைப்படத் தொடுத்தமையால் அடிமுரண் தொடையாகும்.

5. அளபெடைத் தொடை

செய்யுளில் அடிதோறும் முதற்சீரின்கண் உயிராலும் ஒற்றாலும் அளபெடுத்து ஒன்றிவரத் தொடுப்பது அடியளபெடைத் தொடையாகும்.

“அளபெடுத்து ஒன்றுவதாகும் அளபெடையே” என்று கூறுவர்.

பஃறொடை வெண்பா

“ஆஅ வளிய அலவன்றன் பார்ப்பினோடு

ஈஇ ரிரையுங்கொண் டீரளைப் பள்ளியுள்

தூஉம் திரையலைப்பத் துஞ்சாது இறைவன்றேள்

மேஎ வலைப்பட்ட நம்போல் நறுநுதால்

ஓஒ உழக்கும் துவர்.”

இச்செய்யுளில் அடிதோறும் முதற்சீரின்கண் அளபெடுத்து ஒன்றிவரத் தொடுத்தமையால் அளபெடைத் தொடையாகும்.

எழுவா யெழுத்தொன்றின் மோனை இறுதி இயைபிரண்டாம்

வழுவா எழுத்தொன்றின் மாதே எதுகை மறுதலைத்த

மொழியான் வரினு முரணடிதோறு முதன் மொழிக்கண்

அழியா தளபெடுத்து ஒன்றுவ தாகும் அளபெடையே. நூற்பா 16

என்னும் காரிகை முதல் ஐந்து தொடைகளின் பெயர்களையும், இலக்கணங்களையும் முறையே அடையாளப்படுத்தியது.

6. அந்தாதித் தொடை

செய்யுளில் அடிதோறும் இறுதிக்கண் நின்ற எழுத்தோ, அசையோ, சீரோ, அடியோ அல்லது முழுவதுமோ அடுத்த அடியின் முதற்கண் வரத் தொடுப்பது அந்தாதித் தொடையாகும்.

“அந்தம் முதுலாத் தொடுப்பது அந்தாதி” என்று கூறுவர்.

(எ.டு) “உலகுடன் விளங்கும் ஒளிதிகழ் அவிர்மதி

மதிநலன் அழிக்கும் வளங்கெழு முக்குடை

முக்குடை நீழற் பொற்புடை ஆசனம்

ஆசனத் திருந்த திருந்தொளி அறிவன்

ஆசனத் திருந்த திருந்தொளி யறிவனை

அறிவுசேர் உள்ளபோ டருந்தவம் புரிந்து

துன்னிய மாந்த ரென்ப

பன்னிருஞ் சிறப்பின் விண்மிசை யிலதே."

இந்நேரிசை ஆசிரியப்பாவில் நான்கந்தாதித் தொடைகளும் வந்துள்ளன. இதில் முதலடியின் இறுதிக்கண் நின்ற மதி என்னும் அசையை இரண்டாமடியின் முதற்கண் வரத்தொடுத்தது அசையந்தாதி, இரண்டாமடியின் இறுதிக்கண் நின்ற முக்குடை என்ற சீரை மூன்றாமடியின் முதற்கண் வரத் தொடுத்தது சீரந்தாதியாகும். 'ஆசனத் திருந்த திருந்தொளி அறிவன்' என்ற நான்காம் அடியே ஐந்தாமடியாகவும் வரத் தொடுத்தது அடியந்தாதியாகும். ஆறாவதடியின் இறுதிக்கண் நின்ற 'து' என்ற எழுத்து ஏழாம் அடியின் முதற்கண் வரத் தொடுத்தது எழுத்தந்தாதியாகும்.

7. இரட்டைத் தொடை

செய்யுளில் ஓரடி முழுவதும் முதலில் வந்த சொல்லே அடுத்து எல்லாவிடங்களிலும் வரத் தொடுப்பது இரட்டைத் தொடையாகும்.

"ஆடா முழுவதும் வந்த மொழியே வருவது இரட்டைவரன் முறையான்" என்று கூறுவர்.

(எ.டு) ஒக்குகே ஒக்குமே ஒக்குமே ஒக்கும்

விளக்கினிற் சீற்றெரி ஒக்குமே ஒக்கும்

குளக்கொட்டிப் பூவின் நிறம்.

இச்செய்யுளில் ஓரடி முழுவதும் 'ஒக்குமே' என்ற ஒரு சொல்லே வரத் தொடுத்தமையால் இரட்டைத் தொடையாகும்.

8. செந்தொடை

மேற்கூறப்பட்ட மோனை முதலாகிய தொடைகள், தொடை விகற்பங்கள் போலாது வேறுபடத் தொடுப்பது செந்தொடையாகும். (முந்திய மோனை முதலா முழுவதும் ஒவ்வாது விட்டால் செந்தொடை என்று கூறப்படும்.)

(எ.டு) பூத்த வேங்கை வியன்சினை யேறி

மயிலின் மகவு நாடன்

நன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே.

இச்செய்யுளில் மோனை முதலாகிய தொடைகளும் தொடை விகற்பங்கள் போலின்றி செம்மையான ஓசை பெற்று வந்தமையால் செந்தொடையாகும்.

அந்த முதலாத் தொடுப்பதந் தாதி அடிமுழுதும்

வந்த மொழியே வருவ திரட்டை வரன்முறையான்

முந்திய மோனை முதலா முழுதுமொவ் வாதுவிட்டால்

செந்தொடை நாமம் பெறுநறு மென்குழல் தேமொழியே.

இக்காரிகை (நூற்பா 17), அந்தாதி, செந்தொடை, இரட்டைத்தொடை ஆகியவற்றின் இலக்கணங்களைச் சுட்டியது.

இதுவரை எழுவகை தொடை வகைகளைக் கண்ட நாம் இனி, தொடை விகற்பங்களைப் பார்க்கலாம்.

இருசீர் மிசைஇணை யாகும் பொழிப்பிடை யிட்டொருவாம்

இருசீ ரிடையிட்டது ஈறிலி கூழை முதலிறுவாய்

வருசீ ரயலில மேல்கீழ் வகுத்தமை தீர்கதுவாய்

வருசீர் முழுவதும் ஒன்றின்முற் றாமென்ப மற்றவையே. நூற்பா 19

என்னும் காரிகை இணை மோனை முதலாகிய முப்பத்தைந்து தொடை விகற்பங்களைக் கூறுகின்றது.

அடிகள்தோறும் ஒன்றுவது தொடையாகும். ஓரடிக்கண் நின்ற சீர்கள்தோறும் மோனை, எதுகை, இயைபு, முரண், அளபெடை ஆகியன ஒன்றிவரத் தொடுப்பது விகற்பமாகும்.

இத்தொடை விகற்பம் இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று என ஏழு வகைப்படும்.

1. இணை – முதலிரு சீர்களிலும் மோனை முதலாயின வரத் தொடுப்பது. (இருசீர் மிசை இணையாகும்).

2. பொழிப்பு – முதல் மற்றும் மூன்றாம் சீர்களில் மோனை முதலாயின வரத் தொடுப்பது பொழிப்பாகும். (பொழிப்பு இடையிட்டு).

3. ஒரூஉ – முதற்சீரிலும் நான்காம் சீரிலும் மோனை முதலிய ஐந்தும் வரத் தொடுப்பது. (ஒரூஉ இருசீர் இடையிட்டது).

4. கூழை – இறுதிச்சீர் அன்றி முதல் மூன்று சீர்களில் மோனை முதலிய ஐந்தும் வருவது கூழையாகும். (வருசீர் அயலில் மேல்கீழ் வகுத்த மைதீர் கதுவாய்).

5. மேற்கதுவாய் – இரண்டாம் சீர் தவிர்த்து மற்ற மூன்று சீர்களில் மோனை முதலாயின வரத் தொடுப்பது மேற்கதுவாய் ஆகும். (வருசீர் அயலில் மேல்கீழ் வகுத்த மைதீர் கதுவாய்).

6. கீழ்க்கதுவாய் – மூன்றாம் சீர் தவிர்த்து மற்ற மூன்று சீர்களில் மோனை முதலாயின வரத் தொடுப்பது. (வருசீர் அயலில் மேல்கீழ் வகுத்த மைதீர் கதுவாய்).

7. முற்று – எல்லாச் சீர்களிலும் மோனை முதலிய ஐந்தும் வரத் தொடுப்பது முற்று எனப்படும். (வருசீர் முழுவதும் ஒன்றின் முற்றாம் என்ப).

தொடை விகற்பங்கள்

தொடை விகற்பங்களுக்குரிய எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு அமைந்துள்ளன.

“அணிமலர் அசோகின் றளிர்நலங் கவற்றி – இணைமோனை

அரிக்குரற் கிண்கிணி அரற்றிச் சீரடி – பொழிப்பு மோனை

அம்பொற் கொடிஞ்சி நெடுந்தேர் அகற்றி – ஒரூஉ மோனை

அகன்ற அல்கு அந்நுண் மருங்குல் – கூழை மோனை

அரும்பிய கொங்கை அவ்வளை அமைத்தோள் – மேற்கதுவாய் மோனை

அவிர்மதி அனைய திருநுதல் அரிவை – கீழ்க்கதுவாய் மோனை

அயில்வேல் அனுக்கி அம்பலைத்து அமர்ந்த – முற்று மோனை

கருங்கயல் நெடுங்க ணோக்கமென்

திருந்திய சிந்தையைத் திறைகொண்டனவே.”

இந்நேரிசை ஆசிரியப்பாவினுள் இணைமோனை முதலாகிய ஏழு விகற்பங்களும் இடம் பெற்றுள்ளன.

“மொய்த்துடன் றவழு முகிலே பொழிலே – இணை இயைபு

மற்றத னயலே முத்துறழ் மணலே – பொழிப்பு இயைபு

நிழலே யினியத னயலது கடலே – ஒரூஉ இயைபு

மாதர் நகிலே வல்லே யியலே – கூழை இயைபு

வில்லே நுதலே வேற்கண் கயலே – மேற்கதுவாய் இயைபு

பல்லே தளவம் பாலே சொல்லே – கீழ்க்கதுவாய் இயைபு

புயலே குழலே மயிலே யியலே – முற்று இயைபு

அதனால்,

இவ்வயி னிவ்வுரு வியங்கலின்

எவ்வயி னோரு மிழப்பர்தந் நிறையே.”

இந்நேரிசை ஆசிரியப்பாவில் இணையியைபு முதலிய ஏழு விகற்பங்களும் வந்துள்ளன.

“பொன்னி னன்ன பொறிசுணங் கேந்திப் – இணை எதுகை

பன்னருங் கோங்கி னன்னலங் கவற்றி – பொழிப்பு எதுகை

மின்னிவ ரொளிவடந் தாங்கி மன்னிய – ஒரூஉ எதுகை

நன்னிற மென்முலை மின்னிடை வருத்தி – கூழை எதுகை

என்னையு மிடுக்கண் டுன்னுவித் தின்னடை – மேற்கதுவாய் எதுகை

அன்ன மென்படை போலப் பன்மலர்க் – கீழ்க்கதுவாய் எதுகை

கன்னியம் புன்னை யின்னிழற் றுன்னிய – முற்று எதுகை

மயலே சாயல் வாணுதல்.”

மேற்கூறிய இந்நேரிசையாசிரியப்பாவினுள் இணையெதுகை முதலான ஏழு விகற்பங்களும் வந்துள்ளன.

“சீறடிப் பேரக லல்கு லொல்குபு – இணை முரண்
சுருங்கிய நுசுப்பிற் பெருகு வடந்தாங்கிக் – பொழிப்பு முரண்
குவிந்துசுணங் கரும்பிய கொங்கை விரிந்து – ஒரூஉ முரண்
சிறிய பெரிய நிகர்மலர்க் கோதைதன் – கூழை முரண்
வெள்வளைத் தோளுஞ் சேயரிக் கருங்கணும் – மேற்கதுவாய் முரண்
இருக்கையு நிலையு மேந்தெழி லியக்கமும் – கீழ்க்கதுவாய் முரண்
துவர்வாய்த் தீஞ்சொலு முவந்தெனை முனியாது – முற்று முரண்
என்று மின்னண மாகுமதி
பொன்றிதழ் நெடுவேற் போர்வல் லோயே.”

இதனுள் இணைமுரண் முதலாகிய ஏழு விகற்பங்களும் முறையாக வந்துள்ளன.

“தாஅட் டாஅ மரைமல ருழக்கிப் – இணை அளபெடை
பூஉக் குவளைப் போஒ தருந்திக் – பொழிப்பு அளபெடை
காஅய்ச் செந்நெற் கரித்துப் போஒய் – கூழை அளபெடை
தேஎம் புனலிடைச் சோஓர் பாஅல் – மேற்கதுவாய் அளபெடை
மீஇ னாஅர்ந் துகளுஞ் சீஇர் – கீழ்க்கதுவாய் அளபெடை
ஏஎ னாஅ நீஇ ணீஇர் – ஞற்று அளபெடை
ஊரன் செய்த கேண்மை
ஆய்வளைத் தோளில் கலரா னாவே.”

இதனுள் இணையளபெடை முதலாகிய ஏழு விகற்பங்களும் வந்துள்ளமையை அறிந்து கொள்ள முடியும்.

III. தன்மதிப்பீட்டு வினாக்கள்

1. அடிகளின் வகைகள் யாவை?
2. மூன்று சீர்களால் ஆகிய அடி ................
3. அளவடி எத்தனை சீர்களைப் பெற்று வரும்?
4. நால்வகைப் பாக்களில் சிற்றெல்லை குறைவானது எது?
5. தொடைகளின் வகைகள் எத்தனை?
6. அடிதோறும் முதலெழுத்து ஒன்றிவரத்தொடுப்பது?
7. தொடைகள், தொடை விகற்பங்கள் இன்றி செம்மையான ஓசை பெற்ற தொடை எது?
8. ஒக்குமே யொக்குமே யொக்குமே யொக்கும்
   விளக்கினிற் சீரெரி யொக்குமே யொக்குமே
   குளக்கொட்டிப் பூவினிறம். – இப்பாடலில் எத்தொடை வந்துள்ளது?

தொகுப்புரை

காரிகையின் தொடக்கத்தில் மூன்று நூற்பாக்கள் இடம் பெற்றுள்ளன. அதில் முதல் நூற்பாவில் உறுப்புக்குத் தேவையான எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகியன பற்றியும் செய்யுளியலில் கூறப்படும் பாக்களும், பாவினத்தையும் கூறுவேன் என்ற செய்தியும் அடையாளப்படுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து இரண்டு நூற்பாக்களில் அமிர்தசாகரரின் அவையடக்கம் கூறப்பட்டது. சான்றோர் தொடர்பால் தான் பாடிய நூலும் சிறப்புறும் என்று கூறியதையும் அறிய முடிந்தது.

உறுப்பியல் என்னும் முதல் இயலில் செய்யுளுக்கு உறுப்பாகும் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகிய ஆறு உறுப்புக்கள் பற்றிய செய்திகள் தெளிவாகக் கூறப்பட்டன.

இதில் முதலாம் உறுப்பாகிய எழுத்து என்னும் பகுதியில் உயிர், மெய் எழுத்துக்கள், அளபெடை முதலிய செய்திகள் கூறப்பட்டன. இக்காரிகை நூலில் தொல்காப்பிய நூற்பாக்கள் சான்றாதாரங்களாகக் காட்டப்பெற்றன.

செய்யுளின் அறுவகை உறுப்புக்களில் இரண்டாக உள்ளது அசை என்பதாகும். எழுத்துக்களை அசைத்தலால் உருவாகும் நேரசை, நிரையசை பற்றிய செய்திகளும் அவ்வசைகளின் இலக்கணமும் அவ்வசைகள் பொருந்தி வரும் செய்யுள்களும் காட்டப்பெற்றன.

அசைகளின் சேர்க்கையால் உருவாகும் ஓரசைச்சீர் முதல் நாலசைச் சீர் வரையிலான வகைப்பாடுகள் அறியப்பெற்றன. அச்சீர்களுக்குரிய வேறு பெயர்களும் தெளியப்பெற்று, அச்சீர்களுக்குரிய வாய்பாடுகளும், அவ்வாய்பாடுகள் பொருந்தி வரும் செய்யுள்களும் முறையே அறியப்பட்டன.

சீரின் இணைப்பால் உருவாகும் தளை பற்றிய செய்திகளும், அத்தளைகளுக்கு வழங்கப்பெறும் வேறு பெயர்களும் அறியப்பட்டன. மேலும் அத்தளைகள் பொருந்திவரும் செய்யுள்கள் சான்றாகக் காட்டப் பெற்றன.

அறுவகை உறுப்புக்களில் அடியின் இலக்கணமும் குறளடி முதல் கழிநெடிலடி வரையிலான ஐந்து வகைப் பாடுகளும் அறியப்பெற்றன. அவற்றிற்குரிய சான்றுகளும் ஒருசேர காட்டப்பெற்றன.

செய்யுள் உறுப்புக்களில் ஆறாவதாய் உள்ள தொடை பற்றிய செய்திகள் உறுப்பியலின் இறுதிப் பகுதியில் கூறப்பெற்றன. மோனை, எதுகை, இயைபு, முரண், அளபெடை, அந்தாதி, இரட்டை, செந்தொடை ஆகிய தொடை பற்றிய செய்திகளும் 35 தொடை விகற்பங்கள் பற்றிய செய்திகளை ஒருசேர அறிய முடிந்தது.

பயிற்சி வினாக்கள்

சிறு வினாக்கள்

1. செய்யுள் உறுப்புக்கள் யாவை?
2. அசைக்கு உறுப்பாகும் எழுத்துக்களைப் பட்டியலிடுக.
3. ஆய்தம் என்பது குறித்து எழுதுக.
4. அசை என்பதனை வரையறத்து, அதன் வகைகளைக் குறிப்பிடுக.
5. இயற்சீர் என்றால் என்ன? அதற்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?
6. ஒன்றிய தளைகளும், ஒன்றாதத் தளைகளும் எவ்வெச் சீர்களின் சந்திப்பால் பிறக்கின்றன?
7. தளை என்றால் என்ன? அதன் வகைகளைக் குறிப்பிடுக.
8. யாப்பருங்கலக்காரிகை நூலாசிரியர் பெயரினையும், உரையாசிரியர் பெயரினையும் குறிப்பிடுக.
9. செந்தொடை, இரட்டைத்தொடை – வரையறுக்க.
10. நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை – விளக்கம் தருக.
11. அடி எத்தனை வகைப்படும்? அவை யாவை?

குறு வினாக்கள்

1. சீர் பற்றி எழுதுக.
2. அசைக்கு உறுப்பாவன யாவை? அவற்றுள் நான்கினை விளக்கியுரைக்க.
3. ஈரசைச்சீர், மூவசைச்சீர் ஆகியவற்றைச் சான்றுகளுடன் விளக்குக.
4. அளவடி, கழிநெடிலடி பற்றி விளக்கம் தருக.
5. தளை எத்தனை வகைப்படும்? அவற்றின் பெயர்களைக் கூறி, மூன்றினை விளக்குக.
6. நால்வகைப் பாக்களுக்கும் உரிய அடியின் சிறுமையும் பெருமையும் பற்றிக் குறிப்பிடுக.
7. தொடை விகற்பங்கள் மொத்தம் எத்தனை? இரண்டிற்கு உதாரணம் தருக.
8. குற்றியலுகரம் என்றால் என்ன? விளக்குக.
9. அசைச்சீர், ஆசிரிய உரிச்சீர் ஆகியவற்றைச் சுட்டிக்காட்டி விளக்குக.

பெரு வினாக்கள்

1. எழுத்து என்பது குறித்து காரிகை ஆசிரியர் கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க. எதுகை, மோனைகளைச் சான்றுகளுடன் விளக்குக.
2. சீர்களின் வகைகளையும் அவற்றின் பெயர்களையும் எடுத்துக்காட்டுகளுடன் விளக்கியுரைக்க.
3. தொடை என்பதை வரையறுத்து, அதன் வகைப்பாடுகளையும் விகற்பங்களையும் விளக்கியுரைக்க.

4. தளை என்றால் என்ன? அதன் வகைப்பாடுகளைச் சான்றுகளுடன் விளக்குக.

5. அடி என்பது குறித்து காரிகை நூல் கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

மேலும் படிக்க வேண்டிய நூல்கள்


1. யாப்பருங்கலக்காரிகை, அமிர்தசாகரர், ந.மு. வேங்கடசாமி நாட்டார் (ப.ஆ.), முல்லை நிலையம், சென்னை - 600 024.

2. இனிய தமிழ்மொழியின் இயல்பு, தமிழண்ணல், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, நான்காம் பதிப்பு, 1995.

3. எளிய முறையில் யாப்பருங்கலக்காரிகை, டாக்டர் கு. முத்துராசன், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 2002.

4. தொல்காப்பியம் பொருளதிகாரம், இளம்பூரணம், கழக வெளியீடு, சென்னை, 1969.

5. நற்றமிழ் இலக்கணம், டாக்டர் சொ. பரமசிவம், பட்டுப் பதிப்பகம், சென்னை, ஆறாம் பதிப்பு, 2000.


தன் மதிப்பீட்டு விடைகள்

I.

1. பதின்மூன்று.
2. அமிர்தசாகரர்
3. குணசாகரர்
4. குற்றியலுகரம், குற்றியலிகரம்.
5. அசை
6. தனிக்குறில், தனிநெடில், குறிலொற்று, குறில்நெடிலொற்று – நேரசை

   இருகுறிலிணைந்து வருதல், இருகுறில்+ஒற்று, குறில்நெடில், குறில்நெடில்+ஒற்று. நிரையசை.

II.

1. சரி.
2. இயற்சீர்
3. மூவசைச்சீர்
4. அசைச்சீர்
5. கட்டு, பிணை, கூடும்முறை.
6. ஏழு
7. வெண்சீர் வெண்டளை
8. கலித்தளை
9. சரி.

III.

1. குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி.
2. சிந்தடி
3. நான்கு சீர்கள்
4. வெண்பா
5. 5
6. அடிமோனைத்தொடை
7. செந்தொடை
8. இரட்டைத்தொடை

## அலகு 5 – யாப்பருங்கலக்காரிகை – செய்யுளியல், ஒழிபியல்

5.0 பாட அறிமுகம்

5,1 நோக்கங்கள்

5,2 பாடப் பிரிவுகள்

5,2,1 செய்யுளில்

5,2,2 ஒழிபியல்

5.0 பாட அறிமுகம்

செய்யுளுக்கு உறுப்பாக அமையும் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகிய ஆறு உறுப்புக்களை முந்தைய பாடத்தில் பார்த்தோம். இவ்வியலில் செய்யுளில் பயிலப்பெறும் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா என்னும் ஐந்து பாக்களின் இலக்கணத்தையும் இவற்றுள் முதல் நான்கு பாக்களுக்கும் உரிய வகைகள், இனங்கள், அடிகள், ஓசைகள் முதலியவற்றை அறிந்து கொள்வது இன்றியமையாதது. அதேபோன்று மருட்பாவின் இலக்கணத்தையும், அம் மருட்பா எவ்வெவ் வடிவங்களில் வரும் என்பதையும் இப்பகுதியில் தெரிந்து கொள்வோம்.

செய்யுளியலைத் தொடர்ந்து அமைந்துள்ள ஒழிபியல் என்னும் பகுதி, உறுப்பியல், செய்யுளியல் என்னும் இரண்டு இயல்களில் கூறாது விடப்பட்ட செய்திகளுக்கான விளக்கங்களைக் கூறும் பகுதியாக அமைந்துள்ளது.

5.1 நோக்கங்கள்

வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா என்னும் ஐந்து பாக்களின் வகைகளையும் அவற்றின் இனங்களையும் அறிந்து கொள்ளுதல்.

செய்யுளில் பயிலப்பெறும் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய நால்வகைப் பாக்களின் இலக்கணங்களையும், வகைகளையும் அவற்றின் இனங்களையும் அறிந்து கொள்ளுதல். மேலும் மருட்பாவின் இலக்கணத்தையும் அப் பா எவ்வெவ் வகையில் வரும் என்பதையும் அறிதல்.

காரிகையாசிரியர் 'ஒழிபியல்' என்னும் தனியியலை அமைத்ததன் காரணத்தை அறிந்துகொள்ளுதல்.

உறுப்பியல், செய்யுளில் என்னும் இரண்டு இயல்களில் கூறாதச் செய்திகளை இவ்வியலில் கூறியதன் காரணத்தை அறிந்து கொள்ளுதல்.

ஒழிபியலில் 'ஒழிபு' எனத் தனிப்பகுதி அமைத்த காரணத்தையும் கண்டு கொள்ளுதல்.

5.2 பாடப் பிரிவுகள்

5.2.1 செய்யுளில்

5.2.1.1 பாவுக்குரிய அடியும் ஓசையும்

5.2.1.2 வெண்பாவின் இலக்கணமும் வகையும்

5.2.1.3 ஆசிரியப்பாவின் இலக்கணமும் வகையும்

5.2.1.4 கலிப்பாவின் இலக்கணமும் வகையும்

5.2.1.5 வஞ்சிப்பாவின் இலக்கணமும் வகையும்

5.2.1.6 மருட்பாவின் இலக்கணமும் வகையும்

தன்மதிப்பீட்டு வினாக்கள்

தொகுப்புரை

பயிற்சி வினாக்கள்

மேலும் படிக்க வேண்டிய நூல்கள்

தன்மதிப்பீட்டு விடைகள்

யாப்பருங்கலக்காரிகையில் இரண்டாம் இயல் செய்யுளியலாகும். இவ்வியலில் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா என்னும் ஐந்து பாக்களின் இலக்கணங்களும், வகைப்பாடுகளும் கூறப்பட்டுள்ளன. இந்த ஐந்து பாக்களில் மருட்பாவைத் தவிர்த்த நான்கு பாக்களுக்கும் உரிய அடி, ஓசை, ஒவ்வொரு பாவிற்கும் உரிய இனங்களைப் பற்றிய செய்திகளும் இவ்வியலில் இடம் பெற்றுள்ளன.

5.2.1.1 நான்கு பாக்களுக்குரிய அடியும் ஓசையும்

வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா ஆகிய மூன்றும் நான்கு சீர்களால் ஆன அளவடியாலும் அமையும். வஞ்சிப்பா இருசீர் கொண்ட குறளடி, முச்சீர் கொண்ட சிந்தடியாலும் அமையும் தன்மையவாகும்.

வெண்பா அகவல் கலிப்பா அளவடி வஞ்சியென்னும்

ஒண்பா அடிகுறள் சிந்தென்று உரைப்ப ஒலிமுறையே

திண்பா மலிசெப்பல் சீர்சால் அகவல்சென் றோங்கு துள்ளல்

நண்பா அமைந்த நலமிகு தூங்கல் நறு நுதலே. நூற்பா 22

என்னும் காரிகை நால்வகைப் பாக்களுக்கும் உரிய அடிகளையும் ஓசைகளையும் முறையே குறிப்பிடுகின்றது.

மேற்கூறிய காரிகையில் 'வஞ்சியென்னும் ஒண்பா' என்று சிறப்பித்ததனால் வெண்பாவின் ஈற்றடியும், நேரிசையாசிரியப்பாவின் ஈற்றயலடியும், கலிவெண்பாவின் ஈற்றடியும் முச்சீரான் வரப்பெறும் என்றும், இணைக் குறளாசிரியப்பாவின் இடையடிகள் இரண்டும் பலவும் குறளடியானும் சிந்தடியானும் வரும் என்றும் ஒருசார் அம்போதரங்க உறுப்பும் இரு சீரடியானும் முச்சீரடியானும் வரப்பெறும் என்றும் குறிப்பிடுவர் உரையாசிரியர்.

பாக்களுக்குரிய ஓசைகள்

நால்வகைப் பாக்களில் வெண்பாவிற்குச் செப்பலோசையும், அகவற்பாவிற்கு அகவலோசையும், கலிப்பாவிற்குத் துள்ளலோசையும் வஞ்சிப்பாவிற்குத் தூங்கலோசையும் என்றவாறு ஓசைகள் நான்கு வகையாக அமையும். இதில் ஒவ்வொரு ஓசை வகையிலும் ஏந்திசை, தூங்கிசை, ஒழுகிசை என்று மூன்று வகைகள் அமையும்.

வெண்பாவிற்குரிய ஓசை

வெண்பாவிற்குரிய செப்பலோசை, ஏந்திசை, தூங்கிசை, ஒழுகிசை என மூன்று வகைப்படும்.

இதில் வெண்சீர் வெண்டளையால் வருவது ஏந்திசைச் செப்பலாகும்.

(எ.டு) யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்

சாந்துணையுங் கல்லாத வாறு.

இயற்சீர் வெண்டளைப் பெற்று வருவது தூங்கிசைச் செப்பலாகும்.

பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி

வாலெயி றூறிய நீர்.

வெண்சீர் வெண்டளையும் இயற்சீர் வெண்டளையும் விரவி வரும் பா ஒழுகிசைச் செப்பலாகும்.

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி

எல்லா உயிரும் தொழும்.

ஆசிரியப்பாவிற்குரிய ஓசை

ஆசிரியப்பாவிற்குரிய அகவலோசை ஏந்திசை அகவல், தூங்கிசை அகவல், ஒழுகிசை அகவல் என்று மூவகைப்படும். நேரொன்றாசிரியத் தளை பெற்று வருவது ஏந்திசை அகவலாகும்.

(நேர்முன் நேர்)

(எ.டு) "போது சாந்தம்... துன்னு வாரே" என்னும் செய்யுள் ஏந்திசை அகவலாகும்.

நிறையொன்றாசிரியத்தளை பெற்று வருவது தூங்கிசை அகவலாகும். (நிறைமுன் நேர்)

"அணிநிழல் ........ பரிசறுப்பவரே" என்னும் செய்யுள் தூங்கிசை அகவலாகும்.

மேற்கூறிய இரண்டு பாடல்களும் உறுப்பியலில் 'அசை' என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ளன.

நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத் தளை ஆகிய இரண்டும் விரவி வருவது ஒழுகிசை அகவலாகும்.

(எ.டு) "குன்றக் குறவன்.... சுணங்கே" – இப்பாடல் சீர் என்னும் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கலிப்பாவிற்குரிய ஓசை

கலிப்பாவிற்குரிய ஓசை துள்ளலோசை ஆகும். இது, ஏந்திசைத் துள்ளல், அகவல் துள்ளல், பிரிந்திசைத் துள்ளல் என மூவகைப்படும். கலித்தளையான் வருவது ஏந்திசைத் துள்ளலாகும்.

(எ.டு) முருகவிழ்தா மரைமலர்மேன் முடியிமையோர் புடைவரவே

வருசின்னார் தருமறைநூல் வழிபிழையா மனமுடையார்

இருவினைபோய் விழமுனியா வெதிரியகா தியையரியா

நிருமலராய அருவினராய் நிலவுவர் சோதியிடையே.

இத்தரவு கொச்சகக் கலிப்பா ஏந்திசைத் துள்ளலாகும்.

கலித்தளை, வெண்டளை என்னும் இரண்டும் வருவது அகவல் துள்ளலாகும்.

“செல்வப்போர் ......... ஒளிந்ததே” – என்ற பாடலில் வெண்சீர் வெண்டளையும் கலித்தளையும் விரவி வந்தமையால் அகவல் துள்ளலோசை ஆகும். மேற்கூறிய பாடல் தளை என்னும் தலைப்பில் இடம்பெற்றுள்ளது.

கலித்தளையும் வேறு பிற தளைகளும் கலந்து வருவது பிரிந்திசைத் துள்ளலாகும்.

குடநிலைத் தண்புறவிற் கோவல ரெடுத்தர்ப்பத்

தடநிலைப் பெருந்தொழுவில் தகையேறு மரம் பாய்ந்து

வீங்குமணிக் கயிறொரீஇத் தாங்குவனத் தேறப்போய்க்

கலையினொடு முயலிரியக் கடியமுல்லை முறுவலிப்ப

எனவாங்கு

ஆனொடு புல்லிப் பெரும்முதல முன்னயும்

கானுடைத் தவர்தேர் சென்றவாறே.

இதில் பல தளையும் விரவி வந்தமையால் பிரிந்திசைத் துள்ளலோசையாகும்.

வஞ்சிப்பாவிற்குரிய ஓசை

வஞ்சிப்பாவிற்குரிய தூங்கலோசை ஏந்திசை, அகவல், பிரிந்திசை என மூன்று வகைப்படும். ஒன்றிய வஞ்சித்தளையில் அமைவது ஏந்திசைத் தூங்கலோசையாகும். ஒன்றாத வஞ்சித்தளையில் அமைவது அகவல் தூங்கலோசையாகும். பல தளையும் விரவி வருவது பிரிந்திசைத் தூங்கலோசையாகும்.

“வினைத்திண்பகை விழச்செற்றவன்

வனப்பங்கய மலர்த்தாளிணை

நினைத்தன்பொடு தொழுதேத்தினர்

நாளும்

மயலார் நாற்கதி மருவார்

பெயரா மேற்கதி பெறுகுவர் விரைந்தே”

இச்செய்யுள் ஒன்றிய வஞ்சித்தளையால் அமைந்தமையால் ஏந்திசைத் தூங்கலோசை ஆகும்.

“வானோர்தொழ வண்டாமரைத்

தேனாமலர் மேல்வந்தருள்

ஆனாவருள் கூரறிவனைக்

கானார்

மலர்கொண் டேத்தி வணங்குநர்

பலர்புகழ் முத்தி பெறுவர் விரைந்தே.”

இவ்வஞ்சிப்பா ஒன்றாத வஞ்சித்தளையால் வந்தமையால் அகவல் தூங்கலோசை ஆகும்.

“மந்தாநிலம்... மகிழ்ந்தே” – இப்பாடலைத் தளை என்னும் தலைப்பில் காண்க.

இவ்வஞ்சிப்பா பல தளையும் பெற்று வந்தமையால் பிரிந்திசைத் தூங்கலோசையாகும்.

இதுவரை நால்வகைப் பாக்களுக்குரிய ஓசைகளும், அவற்றுக்குரிய எடுத்துக்காட்டுகளையும் கண்டோம். இனி, ஒவ்வொரு பாக்களுக்கும் உரிய இலக்கணத்தையும் வகைப்பாடுகளையும், அப்பாக்களின் இனங்களையும் முறையே பார்க்கலாம். முதலில் வெண்பா பற்றிய செய்திகளைக் காரிகையாசிரியர் குறிப்பிடுகின்றார்.

### 5.2.1.2 வெண்பாவின் இலக்கணமும் வகையும்

செப்பலோசையுடையதாய் ஈற்றடி முச்சீராய், ஏனைய அடிகள் நான்கு சீர்களாய் வெண்சீரும் இயற்சீரும் வந்து வெண்டளை பெற்று வேற்றுத் தளை விரவாமல், ஈற்றடியின் இறுதிச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்ப்பாடுகளுள் ஏதேனும் ஒன்றால் முடியும் தன்மையதாகும்.

வகைப்பாடு

இவ்வெண்பா ஐந்து வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை, குறள் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா, சிந்தியல் வெண்பா ஆகியன.

குறள் வெண்பா

வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று மாறுபாடின்றி பொருந்திய இரண்டடிகளால் அமைவது குறள் வெண்பாவாகும். இரண்டு அடிகளை உடையதாய், முதலடி நான்கு சீர்களாய், இரண்டாம் அடி முச்சீராய் அமைந்து இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் பொருந்தி வேற்றுத் தளை வராமல், இரண்டாம் அடியின் இறுதிச் சீர் நாள், மலர், காசு, பிறப்பு ஆகிய வாய்ப்பாட்டில் ஏதேனும் ஒன்றினைப் பெற்று முடிவது குறள் வெண்பாவாகும்.

ஈரடி வெண்பாக் குறள்குறட் பாவிரண் டாயிடைக்கட்

சீரிய வான்றனிச் சொல்லடி மூய்ச்செப்ப லோசை குன்றாது

ஓரிரண்டாயும் ஒருவிகற் பாயும் வருவதுண்டேல்

நேரிசை யாகு நெறிகரி பூங்குழல் நேரிழையே. நூற்பா 25

இக்காரிகை குறள் வெண்பாவையும், நேரிசை வெண்பாவையும் உணர்த்துகிறது. அவற்றுள் “ஈரடி வெண்பாக்குறள்” என்பது இரண்டடியான் வரும் குறள் வெண்பாவைக் குறிக்கும். இதன் விகற்பம் நோக்கி ஒரு விகற்பக் குறள் வெண்பா, இரு விகற்பக் குறட்பா என எதுகை, மோனை முதலிய தொடைகளின் அடிப்படையில் பிரிப்பர். இனி, விகற்பம் என்பது ஒன்றுபட்டும் மாறுபட்டும் வருவதைக் குறிக்கும்.

அடிதோறும் எதுகை, மோனை முதலிய தொடை பெற்று வருவதை ஒரு விகற்பம் என்றும் அடித்தொடை என்றும் கூறுவர். அவ்வாறு பெறாமல் வருவதை இரு விகற்பம் என்றும் அழைப்பர்.

“உடையார்முன் னில்லார்போ லேற்றுங் கற்றார்

கடையாரே கல்லா தவர்.”

இது ஒரு விகற்பத்தான் வந்த குறள் வெண்பாவாகும்.

உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்

கச்சாணி யன்னார் உடைத்து.

இது இரண்டு விகற்பத்தான் வந்த குறள் வெண்பாவாகும்.

நேரிசை வெண்பா

வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று நான்கு அடிகளை உடையதாய், இரண்டாம் அடியின் இறுதியில் தனிச்சொல் பெற்று ஒரு விகற்பத்தானும் இரு விகற்பத்தானும் வருவது நேரிசை வெண்பாவாகும்.

இரு விகற்பத்தான் வரும் நேரிசை வெண்பாவைச் சிறப்புடையதாகக் கூறுவர். பிற்கால ஔவையார் இயற்றிய மூதுரை, நல்வழி முதலிய செய்யுள்கள் எல்லாம் இரு விகற்பத்தான் வந்த நேரிசை வெண்பாக்களாகும்.

இவ்வெண்பா இரு குறள் நேரிசை வெண்பா, ஆசிடை நேரிசை வெண்பா என இரண்டு வகைப்படும்.

இருகுறள் நேரிசை வெண்பா

வெண்பாவின் இரண்டாவது அடியிலுள்ள தனிச்சொல்லை நீக்கிய பின், முதலிரண்டு அடிகளும் சேர்ந்து ஒரு குறள் வெண்பாவாகவும் பின்னிரண்டு அடிகளும் சேர்ந்து அமையும் வெண்பாவே இருகுறள் நேரிசை வெண்பாவாகும்.

(எ.டு) தடமண்டு தாமரையின் தாதா டலவன்

இடமண்டிச் செல்வதனைக் கண்டு– பெடைஞெண்டு

பூழிக் கதவடைக்கும் புத்தூரே பொய்கடிந்து

ஊழி நடாயினா னூர்.”

இவ் வெண்பாவில் இரண்டாம் அடியிலுள்ள 'பெடை ஞெண்டு' என்ற தனிச்சொல்லை நீக்கினால் இரண்டு வெண்பாக்களைப் பெறலாம். இது இரு விகற்பத்தான் வந்த நேரிசை வெண்பாவாகும்.

ஆசிடை நேரிசை வெண்பா

காரிகை நூற்பாவில் 'சீரிய வான் தனிச்சொல்லடி மூய்' என்று சிறப்பித்ததனால், முதல் குறட்பாவினோடு தனிச்சொல் இடை வேறுபட்டு விட்டிசைப்பின் ஒற்றுமைப்படாத உலோகங்களை, ஒற்றுமைப்படப் பற்றாசிட்டு விளக்கினாற் போல முதற்குறட்பாவின் இறுதிக்கண் ஒன்றாமல் இரண்டும் அசை கூட்டி உச்சரிக்கப்பட்டு, இருவிகற்பத்தானும் ஒரு விகற்பத்தானும் வருவது ஆசிடை நேரிசை வெண்பாவாகும்.

(எ.டு) தாமரையின் தாதாடித் தண்டுவலைச் சேறலைந்து

தாமரையின் நாற்றமே தானாறுந் – தாமரை போல

கண்ணான் முகத்தான் கரதலத்தான் சேவடிஎன்

கண்ணார்வஞ் செய்யுங் கருத்து.

இங்கு முதற் குறட்பாவினோடு, 'தாமரை போல்' என்ற தனிச்சொல் இடை வேறுபட்டு விட்டிசைத்தது. ஆகவே 'தான்' என்ற இறுதிக்கண் 'நாறும்' என்ற இரண்டசை கூட்டி உச்சரிக்கப்பட்டது. இது ஈரசை ஆசாகி வந்த ஆசிடை நேரிசை வெண்பாவாகும்.

இன்னிசை வெண்பா

வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று, ஒரு விகற்பத்தானும் பல விகற்பத்தானும் வந்து, நான்கடியாய்த் தனிச்சொல் பெறாமல் வருவது இன்னிசை வெண்பாவாகும்.

(எ.டு) வைகலும் வைகல் வரக்கண்டும் அஃதுணரார்

வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்

வைகலும் வைகற்றம் வாழ்நாள்மேல் வைகுதல்

வைகலை வைத்துணரா தார்.

இப்பாடல் நான்கடியாய்த் தனிச்சொல் இன்றி ஒரு விகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பாவாகும்.

இன்றுகொல் அன்றுகொல் என்றுகொல் என்னாது

பின்றையே நின்றது கூற்றம் என்று எண்ணி

ஒருவுமின் தீயவை ஒல்லும் வகையான்

மருவுமின் மாண்டா றறம்.

இச்செய்யுள் நான்கடியாய்த் தனிச்சொல்லின்றிப் பல விகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பாவாகும்.

'துன்னும்' என்று காரிகை நூற்பா மிகுத்துச் சொல்லியதால் இரண்டாமடியின் இறுதி தனிச்சொல் பெற்று மூன்று விகற்பத்தான் வருவனவும், மூன்றாம் அடியின் இறுதி தனிச்சொல் பெற்று இரண்டு விகற்பத்தான் வருவனவும், தனிச்சொல் இன்றிப் பல விகற்பமாகி அடிதோறும் ஒரூஉத் தொடை பெற்று வருவனவும் பிறவற்றானும் நேரிசை வெண்பாவில் சிறிது வேறுபட்டு நான்கடியாய் வருவனவும் இன்னிசை வெண்பா எனப்படும் என்று காரிகை உரையாசிரியர் குறிப்பர். இதற்குரிய உதாரணச் செய்யுளை யாப்பருங்கலக்காரிகை மூல நூலில் காண்க.

பஃறொடை வெண்பா

வெண்பாவின் பொதுவிலக்கணம் பெற்று ஐந்தடி முதல் பன்னிரண்டு அடி வரை வருவது பஃறொடை வெண்பாவாகும். பல் + தொடை என்பதன் புணர்ச்சி விகாரமே பஃறொடையாகும்.

சிற்றெல்லை ஐந்தடியாகக் கொண்டு பல அடிகளால் இவ்வெண்பா அமையும். இவ்வெண்பாவின் பேரெல்லை பன்னிரண்டு அடிகளாகும். இது ஒரு விகற்பத்தானும் பல விகற்பத்தானும் வரும் தன்மையது.

(எ.டு) சேற்றுக்கால் நீலஞ் செருவென்ற வேந்தன்வேல்

கூற்றுறழ் மொய்ம்பிற் பகழி பொருகயல்

தோற்றந் தொழில் வடிவு தம்முள் தடுமாற்றம்

வேற்றுமை யின்றியே ஒத்தன மாவடர்

ஆற்றுக்கா லாட்டியர் கண்.

இது ஐந்தடியான் வந்த ஒரு விகற்பப் பஃறொடை வெண்பா ஆகும்.

அதுமட்டுமன்றி காரிகை ஆறடி, ஏழடியின் வந்த பல விகற்ப பஃறொடை வெண்பாக்களைக் காரிகை நூல் கூறுகிறது. அவை ஏழடியின் மிக்க பஃறொடை வெண்பாக்களை யாப்பருங்கல விருத்தி கூறுகின்றது.

ஒன்றும் பலவும் விகற்பொடு நான்கடியாய்த் தனிச்சொல்

இன்றி நடப்பிஃதின்னிசை துன்னும் அடிபலவாய்ச்

சென்று நிகழ்வ பஃறொடை யாம்சிறை வண்டினங்கள்

துன்றுங் கருமென் குழல்துடி யேரிடைத் தூமொழியே.

என்னும் காரிகை (நூற்பா 25) இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பாவின் இலக்கணங்களை முறையே உணர்த்திற்று.

சிந்தியல் வெண்பா

வெண்பாவுக்குரிய பொது இலக்கணங்களைப் பெற்று மூன்று அடிகளால் அமைவது சிந்தியல் வெண்பா. முதலிரண்டு அடிகள் அளவடிகளாகவும் மூன்றாவது அடி சிந்தடியாகவும் அமையும். இது தனிச்சொல்லை அடிப்படையாகக் கொண்டு நேரிசைச் சிந்தியல் வெண்பா, இன்னிசைச் சிந்தியல் வெண்பா என இரண்டு வகைப்படும்.

தனிச்சொல் பெற்று வருவது நேரிசைச் சிந்தியல் வெண்பா ஆகும். தனிச் சொல்லின்றி வருவது இன்னிசைச் சிந்தியல் வெண்பாவாகும்.

நேரிசைச் சிந்தியல் வெண்பா

நற்கொற்ற வாயில் நறுங்குவளைத் தார்கொண்டு

சுற்றும் வண்டார்ப்பப் புடைத்தாளே பொற்றேரான்

பாலைநல் வாயின் மகள்...

இது மூன்றடியாய் தனிச்சொல் பெற்று வந்ததால் நேரிசைச் சிந்தியல் வெண்பாவாகும்.

இன்னிசைச் சிந்தியல் வெண்பா

நறுநீல நெய்தலும் கொட்டியும் தீண்டிப்

பிறநாட்டுப் பெண்டிர் முடிநாறும் பாரி

பிறநாட்டுப் பெண்டி ரடி.

இது தனிச் சொல்லின்றி ஒரு விகற்பத்தான் வந்த இன்னிசைச் சிந்தியல் வெண்பாவாகும்.

மேலும், மூன்றாமடியில் தனிச் சொல்லின்றிப் பல விகற்பத்தானும் இன்னிசைச் சிந்தியல் வெண்பா வரும்.

(எ.டு) சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய

யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப

காகை நாடன் சுனை.

இதுவரை வெண்பாவின் வகைகளைக் கண்ட நாம் முறையே வெண்பாவின் இனங்களைப் பார்க்கலாம்.

வெண்பாவின் இனம்

இத்தலைப்பில் குறள் வெண்பாவின் இனம், வெண்பாவின் இனம் என்னும் இரு நிலைகளில் வெண்பாவின் இனங்களைக் காரிகையாசிரியர் முறையே கூறியுள்ளார்.

குறள் வெண்பாவின் இனங்கள்

இவற்றுள் காரிகை நூற்பா 27, குறள் வெண்பாவின் இனத்தினையும், காரிகை நூற்பா 28 பிற வெண்பாக்களின் இனத்தினையும் அவற்றின் இலக்கணங்களையும் முறையே கூறுகின்றன.

இவற்றுள் குறள் வெண்பா, வெண்செந்துறை, குறட்பாழிசை என்னும் இரு இனங்களையும், பிற வெண்பாக்கள் வெண்டாழிசை, வெண்டுறை, வெளிவிருத்தம் என்னும் மூன்று இனங்களிலும் அமைந்துள்ளன.

வெண்செந்துறை

வெண்பாவுக்குரிய பொது இலக்கணங்களைப் பெறாது இரண்டடிகளை உடையதாய் ஒவ்வோர் அடியிலும் நான்கு நான்கு சீர்களைக் கொண்டு விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையும் உடையதாய் வருவது வெண்செந்துறையாகும்.

“அந்தமில் பாதம் அளவிரண்டொத்து முடியின்

வெள்ளைச் செந்துறையாகும்” என்று காரிகை நூற்பா 27இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

(எ.டு) “ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்

ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை” – முதுமொழிக்காஞ்சி

இது விழுமிய பொருளும், ஒழுகிய ஓசையும் பெற்று வந்த வெண்செந்துறையாகும்.

குறட்டாழிசை

இரண்டு அடிகளை உடையதாய், ஒவ்வோர் அடியிலும் நான்கு சீர்களுக்கு மேல் பல சீர்களைப் பெற்று, இரண்டாம் அடியில் முதலடியில் வந்த சீர்களை விடக், குறைந்து வந்து அமைவது குறட்டாழிசையாகும்.

(எ.டு) “நண்ணு வார்வினை நைய நாடொறும் நற்றவர்க்கர சாய ஞானநற்

கண்ணுனா னடியே யடைவார்கள் கற்றவரே”

இதில் ஈற்றடி குறைந்து முதலடி சீர்கள் மிகுந்தும் வந்தமையால் குறட்டாழிசை ஆயிற்று.

இரண்டு அடிகளாய் அளவொத்து விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையுமின்றி இவ்வாறே செந்துறை வெள்ளையிற் சிதைந்து வருவனவெல்லாம் செந்துறைச் சிதைவுத் தாழிசைக் குறள் எனப்படும்.

(எ.டு) அறுவர்க் கறுவரைப் பெற்றுங் கவுந்தி

மறுவறு பத்தினி போல்வையின் நீரே.

இது விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையுமின்றி இரண்டடியும் தம்முள் ஒத்து வந்தமையால் செந்துறைச் சிதைவுத் தாழிசைக் குறளாகும்.

மேலும், ‘அங்கேழ்ச் சந்தஞ்சிதைத்த குறளும் குறளினத் தாழிசையே’ என்னும் காரிகை நூற்பா 27 கூறுவது போல, செப்பலோசையில் சிதைந்து வேற்றுத் தளைகட்குக் குறள் வெண்பாவில் சிதைந்து வருவனவெல்லாம் குறட்டாழிசையாகும்.

(எ.டு) வண்டார்பூங் கோதை வரிவளைக்கைத் திருநுதலாள்

பண்டைய எல்லள் படி.

இது சந்தம் சிதைந்த தாழிசைக் குறளாகும்.

வெண்பாவின் இனங்கள்

வெண்பாவின் இனங்கள் வெண்டாழிசை, வெண்டுறை, வெளிவிருத்தம் என்பவையாகும். இவைகளின் இலக்கணங்களைப் பின்வரும் காரிகை கூறுகின்றது.

மூன்றடி யானு முடிந்தடி தோறு முடிவிடத்துத்

தான்தனிச் சொல்பெறுந் தண்டா விருத்தம்வெண் டாழிசையே

மூன்றடி யாய்வெள்ளை போன்றிறு மூன்றிழிபு ஏழுயர்வாய்

ஆன்றடி தாம்சில அந்தம் குறைந்திறும் வெண்டுறையே. நூற்பா 28

வெண்டாழிசை

மேற்கூறிய காரிகையில் முதலிரண்டடிகள் வெண்டாழிசையின் இலக்கணத்தைக் கூறுகின்றன. அதாவது, மூன்றடிகளாய் ஈற்றடி வெண்பாவைப் போல முச்சீரடியால் அமைவது வெண்டாழிசை எனப்படும். இதனை வெள்ளொத்தாழிசை என்றும் அழைப்பர்.

“நண்பி தென்று தீய சொல்லார்

முன்பு நின்று முனிவு செய்யார்

அன்பு வேண்டு பவர்”

இது மூன்றடி ஆசிரியத்தளையின் வந்த வெண்டாழிசை.

வெண்டுறை

மூன்றடிச் சிறுமையாய், ஏழடிப் பெருமையாய் அமைந்து ஈற்றடியும், ஈற்றயலடிகளும் ஒரு சீரோ, இரு சீர்களோ, பல சீர்களோ குறைந்து வருவது வெண்டுறையாகும்.

(எ.டு) குழலிசைய வண்டினங்கள் கோழிலைய செங்காந்தட் குலைமேற்பாய

அழலெரியின் மூழ்கினவா லந்தோ வளியவென் றயல்வாழ் மந்தி

கலுழ்வனபோல் நெஞ்சயர்ந்து கல்லருவி தூஉம்

நிழல்வரை நன்னாட னீப்பனோ வல்லன்.

இச்செய்யுள் நான்கடியாய் ஈற்றடி யிரண்டும் இரண்டு சீர்கள் குறைந்து வந்த ஓரொலி வெண்டுறையாகும்.

வெளி விருத்தம்

மூன்றடியானும் நான்கடியானும் அடிதோறும் இறுதிக்கண் தனிச்சொல் பெற்று வருவது வெளிவிருத்தமாகும். இத்தனிச்சொல் நாற்சீரடிக்கும் அப்பால் வருவதாகும்.

(எ.டு) ஆவா வென்றே யசின ராழ்ந்தார் – ஒரு சாரார்

கூகூவென்றே கூவிளி கொண்டார் – ஒரு சாரார்

மாமாவென்றே மாய்ந்தனர் நீந்தார் – ஒரு சாரார்

எகீர் நாய்கீ ரென்செய்து மென்றார் – ஒரு சாரார்.

இது நான்கடியாய் ஒரு சாரார் என்னும் தனிச்சொல் பெற்று வந்த வெளிவிருத்தமாகும்.

நால்வகைப் பாக்களில் வெண்பாவின் இலக்கணத்தையும் அதன் வகைப்பாடுகளையும் வெண்பாவின் இனங்களையும் இதுவரை கண்டோம். இனி, ஆசிரியப்பா பற்றிய செய்திகளைப் பார்ப்போம்.

### 5.2.1,3 ஆசிரியப்பாவின் இலக்கணமும் வகையும்

ஆசிரியப்பா அகவலோசை பெற்று அளவடித்தாகி இயற்சீர் பயின்றும், அயற்சீர் விரவியும், தன்தளை தழுவி பிற தளை மயங்கியும், நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீர் வருதலின்றி அடி, தொடை, ஓசை, பொருள் ஆகியவற்றினும் பெயர் வேறுபட்டு வரும்.

கடையயற் பாதமுச் சீர்வரி னேரிசை காமருசீர்

இடைபல குன்றின் இணைக்குற ளெல்லா அடியுமொத்து

நடைபெறு மாயின் நிலைமண் டிலநடு வாதியந்தந்து

அடைதரு பாதத்து அகவல் அடிமறி மண்டிலமே. நூற்பா 29

இக்காரிகை ஆசிரியப்பாவின் வகைகளையும் அவற்றின் இலக்கணத்தையும் கூறுகின்றது. நேரிசை ஆசிரியப்பா, இணைக்குறளாசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா, அடிமறிமண்டில ஆசிரியப்பா என ஆசிரியப்பா நான்கு வகைப்படும்.

1. நேரிசை ஆசிரியப்பா

ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தைப் பெற்று, ஈற்றயலடி முச்சீரான் வருவது நேரிசை ஆசிரியப்பாவாகும்.

“கடையயல் பாதம் முச்சீர் வண் நேரிசை” எனக் காரிகை கூறுகிறது.

(எ.டு) நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று

நீரின மாரள வின்றே சாரல்

கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு

பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே.

இச்செய்யுளின் ஈற்றயலடி முச்சீரான் வந்தமையால் நேரிசை ஆசிரியப்பாவாகும்.

2. இணைக்குறளாசிரியப்பா

ஆசிரியப்பாவின் பொதுவிலக்கணம் பெற்று, ஈற்றடியும் முதலடியும் நான்கு சீர்களாகிய அளவடியால் ஒத்து, இடையடிகள் இரண்டும், பலவும் குறளடியானும், சிந்தடியானும் வருவது இணைக்குறளாசிரியப்பாவாகும்.

“காமருசீரிடை பலகுன்றின் இணைக்குறள்” என்று கூறுவர்.

(எ.டு) நீரின் தண்மையும் தீயின் வெம்மையும்

சாரச் சார்ந்து

தீரத் தீரும்

சாரல்நாடன் கேண்மை

சாரச் சாரச் சார்ந்து

தீரத் தீரத் தீர்பொல் லாதே.”

இது, முதலடியும் ஈற்றடியும் நாற்சீராய் இடையடி இரு சீரானும், முச்சீரானும் வந்தமையால் இணைக்குறளாசிரியப்பா ஆயிற்று.

3. நிலைமண்டில ஆசிரியப்பா

ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் பெற்று, எல்லா அடிகளும் தம்முள் அளவொத்து நாற்சீர் அடிகளாய் வருவது நிலைமண்டில ஆசிரியப்பாவாகும்.

(எ.டு) வேரல் வேலி வேர்க்கோட் பலவின்

சாரல் நாட செவ்வியை ஆகுமதி

யாரஃ தறிந்திசி னோரே சாரல்

சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்

உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே.

இச்செய்யுளில் எல்லா அடிகளும் நாற்சீராய் தம்முள் அளவொத்து வந்தமையால் நிலை மண்டில ஆசிரியப் பாவாகும்.

4. அடிமறிமண்டில ஆசிரியப்பா

ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் பெற்று எல்லாவடிகளும் நாற்சீரடிகளாய் அமைந்து அடிகளை முதல், நடு, இறுதியாக மாற்றி உச்சரிப்பினும் ஓசையும் பொருளும் மாறாமல் வருவது அடிமறிமண்டில ஆசிரியப் பாவாகும்.

(எ.டு) சூரல் பம்பிய சிறுகான் யாறே

சூரர மகளி ராரணங் கினரே

வாரலை எனினே யானஞ்சுவலே

சாரல் நாடநீவர லாறே.

இச்செய்யுளில் எல்லா அடிகளும் முதல், நடு, இறுதியாக உச்சரிப்பினும் ஓசையும் பொருளும் பிழையாது வந்தமையால் அடிமறிமண்டிலமாகும்.

இதுவரை ஆசிரியப்பாவின் வகைகளைக் கண்டோம். இனி, ஆசிரியப்பாவின் இனங்களைப் பார்ப்போம்.

ஆசிரியப்பாவின் இனம்

ஆசிரியத்தாழிசை, ஆசிரியத்துறை, ஆசிரியவிருத்தம் ஆகியவை ஆசிரியப்பாவின் இனங்களாகும்.

1. ஆசிரியத் தாழிசை

மூன்றடியாய்த் தம்முள் அளவொத்து வருவது ஆசிரியத் தாழிசையாகும். காரிகையில் 'தருக்கியல் தாழிசை' என்று சிறப்பித்ததனால் ஒரு பொருள்மேல் மூன்றடிக்கி வருவன சிறப்புடையதாகக் கருதப்படும்.

"கன்று குணிலாக் கனியுகுத்த மாயவன்

இன்றுநம் ஆனுள் வருமே லவன் வாயில்

கொன்றையம் தீங்குழல் கேளாமோ தோழி."

"பாம்பு கயிறாக் கடல் கடைந்த மாயவன்

ஈங்குநம் ஆனுள் வருமே லவன்வாயில்

ஆம்பலம் தீங்குழல் கேளாமோ தோழி"

"கொல்லையஞ் சாரல் குருந்தொசித்த மாயவன்

எல்லிநம் ஆனுள் வருமே லவன் வாயின்

முல்லையம் தீங்குழல் கேளாமோ தோழி"

இவை ஒரு பொருள் மேல் மூன்றடுக்கி வந்த தாழிசையாகும்.

"வானுற நிமிர்ந்தனை வையக மளந்தனை

பான்மதி விடுத்தனை பல்லுயி ரோம்பினை

நீனிற வண்ணநின் நிரைகழல் கேளாமோ தோழி"

இது தனித்து வந்த ஆசிரியத் தாழிசையாகும்.

2. ஆசிரியத்துறை

நான்கடியாய் ஈற்றயலடி குறைந்து வருவதும், நான்கடியாய் ஈற்றயலடி குறைந்து இடைமடக்காய் வருவதும், நான்கடியாய் இடை இடை குறைந்து வருவதும், இடைமடக்காய் வருவதும் ஆசிரியத்துறையின் இலக்கணமாகும்.

“கரைபொரு கான்யாற்றங் கல்லதர் எம்முள்ளி வருதிராயின்

அரையிருள் யாமத்து அடுபுலியே றும்அஞ்சி அகன்றுபோக

நரையுரு மேறுநுங் கைவே லஞ்சு நும்மை

வரையர மங்கையர் வெளவுதல் அஞ்சுதும் வாரலையே.”

இச்செய்யுள் நான்கடியாய் ஈற்றயலடி குறைந்து வந்த ஆசிரியத்துறையாகும். பிற வகைகளுக்குக் காரிகை மூலநூலில் கண்டு கொள்க.

3. ஆசிரிய விருத்தம்

ஐந்து சீர்களுக்கு மேற்பட்ட கழிநெடிலடி நான்காய்த் தம்முள் அளவொத்து வருவன ஆசிரிய விருத்தமாகும்.

“குறைவிறொல் சீர்” என்று காரிகை நூற்பா சிறப்பித்ததனால் எண்சீரான் மிக்க சீரால் வரும். ஆசிரிய விருத்தங்கள் சிறப்பற்றன என்பர் உரையாசிரியர்.

விடஞ்சூ ழுருவி னிடைநுடங்க மின்வாள் வீசி விரையார்வேங்

கடல்சூழ் நாடன் காளிங்கன் கதிர்வேல் பாடு மாதங்கி

வடஞ்சேர் கொங்கை மலைதாம்தாம் வடிக்கண் ணீல மலர்தாம்தாவ

தடந்தோ ளிரண்டும் வேய்தாம்தா மென்னுந் தனைகைத் தண்ணுமையே.

இது அறுசீர்க் கழிநெடிலடியாய் வந்த ஆசிரிய விருத்தமாகும்.

தருக்கியல் தாழிசை மூன்றடி யொப்பன நான்கடியாய்

எருத்தடி நைந்தும் இடைமடக்காயும் இடையிடையே

சுருக்கடி யாயுந் துறையாம் குறைவில்தொல் சீரகவல்

விருத்தம் கழிநெடில் நான்கொத்து இறுவது மெல்லியலே.

என்னும் காரிகை (நூற்பா 30) ஆசிரியப்பாவின் இனங்களைப் பற்றிய செய்திகளைக் கூறியது.

இதுவரை ஆசிரியப்பாவின் வகைகளையும் அப்பாவின் இனங்களையும் முறையே கண்டோம். இனி, கலிப்பா பற்றிய செய்திகளைக் காரிகையாசிரியர் கூறியுள்ள முறையினை அறியலாம்.

5.2.1.4 கலிப்பாவின் இலக்கணமும் வகையும்

கலிப்பா துள்ளல் ஓசையுடையதாய், நேரீற்றியற் சீரும், நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீரும் வாராது, நிரை முதலாகிய வெண்பாவுரிச்சீர் மிக்கு நேரடித்தாய்க் கலித்தளையும் அயற்றளையும் வந்து தரவு, தாழிசை என்னும் முதலுறுப்பும், அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் துணை உறுப்பும் உடைத்தாய் உறுப்பாலும், ஓசையாலும், பொருளாலும் பெயர் வேறுபட்டு வருவதாகும்.

கலிப்பாவின் வகைகள்

நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா, அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா, வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா என மூன்று வகைகளை உடையது கலிப்பாவாகும்.

ஒத்தாழிசைக் கலிப்பா

தரவொன்று தாழிசை மூன்று தனிச்சொற் சுரிதகமாய்

நிரலொன்றின் நேரிசை ஒத்தா ழிசைக்கலி நீர்த்திரைபோல்

மரபொன்றி நேரடி முச்சீர் குறள்நடு வேமடுப்பின்

அரவொன்றும் அல்குல் அம்போ தரங்கஒத் தாழிசையே.

என்னும் காரிகை நூற்பா (31) நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவினையும், அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாவினையும் விளக்குகின்றது.

1. நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா

இக்கலிப்பாவானது நான்கு உறுப்புகளை உடையது. முன் ஒரு தரவும் அதன்பின் மூன்று தாழிசையும் வந்து, அதன்பின் ஒரு தனிச்சொல் பெற்று, ஆசிரியத்தானாவது, வெண்பாவானாவது ஒரு சுரிதக உறுப்புப் பெற்று வருவது நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவாகும்.

தரவு எனினும் விருத்தம் எனினும் ஒன்றாகும். தாழிசையை இடைநிலைப்பாட்டு என்றும் தனிச்சொல்லை விட்டிசை, கூன், தனிநிலை முதலிய சொற்களால் அழைப்பர். சுரிதகத்தை அடக்கியல் வாரம், வைப்பு, போக்கியல் என்றும் அழைப்பர்.

"வாணெடுங்கண் பனிகூர வண்ணம்வே றாய்த்திரிந்து

தோணெடுந் தகைதுறந்து துன்பங்கூர் பசப்பினவாய்ப்

பூணொடுங்கு முலைகண்டும் பொருட்பிரிதல் வலிப்பவோ. – இது தரவு.

சூருடைய கடுங்கடங்கள் சொலற்கரிய என்பவால்

பீருடைய நலந்தொலையப் பிரிவாரோ பெரியரே

சேணுடைய கடுங்கடங்கள் செலற்கரிய என்பவால்

நாணுடைய நலந்தொலைய நடப்பாரோ நலமிலரே

சிலம்படைந்த வெங்கானஞ் சீரலவே என்பவால்

புலம்படைந்து நலந்தொலையப் போவாரோ பொருளிலரே.

இவை மூன்றும் தாழிசை.

எனவாங்கு – இது தனிச்சொல்.

அருளெனு மிலராய்ப் பொருள்வயிற் பிரிவோர்

பன்னெடுங் காலமும் வாழியர்

பொன்னெடுந் தேரொடு தானையிற் பொலிந்தே. – இது சுரிதகம்.

மேற்கூறிய இச்செய்யுள் தரவு மூன்றடியாய், தாழிசை மூன்றும் இரண்டடியாய்த் தனிச்சொல் பெற்று மூன்றடி ஆசிரியச் சுரிதகத்தாலியன்ற நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவாகும்.

2. அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா

தண்ணீர்த் தடாகத்தில் ஏற்படுகின்ற அலை முதலில் பெரியதாகத் தோன்றி அடுத்தடுத்துக் குறைந்து வருவதைப் போன்று, நாற்சீர் அடியும் முச்சீர் அடியும் இருசீர் அடியும் ஆகிய அசையடிகளைத் தாழிசைக்கும் தனிச்சொற்கும் நடுவே தொகுத்துத் தரவு, தாழிசை, அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் ஐந்து உறுப்புக்களை உடையதாய் வருவது அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாவாகும். இதனை அசையடி, பிரிந்திசைக் குறள், சொற்சீரடி, எண் என்னும் சொற்களாலும் அழைப்பர். இவ்வகைக்குரிய சான்றினை யாப்பருங்கலக்காரிகை மூல நூலில் கண்டு கொள்க.

3. வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா

அம்போதரங்க உறுப்பிற்கும், தாழிசைக்கும் நடுவே அராக உறுப்புப் பெற்றுத் தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் ஆறு உறுப்பினையும் பெற்று வருவது வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவாகும்.

அராகம் என்பதை வண்ணகம், முடுக்கியல், அடுக்கியல் என்றும் அழைப்பர். "வசையறு வண்ணகம்" என்று காரிகை சிறப்பித்ததனால் அராக உறுப்புதான் அளவடி முதலாகிய எல்லாவடியானும் வரப்பெறும் என்பர் உரையாசிரியர்.

அடி வரையறையாவது சிறுமை நான்கடி, பெருமை எட்டடி, இடை ஐந்தடியானும், ஆறடியானும், ஏழடியானும் வரப்பெறும். இவ்வகைக்குரிய சான்றினையும் காரிகை மூல நூலில் கண்டு கொள்க.

4. வெண் கலிப்பா

கலித்தளை வந்து கலியோசை தழுவியும், வெண்டளை வந்து வெள்ளோசை தழுவியும் ஈற்றடி முச்சீராய், நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாடுகளில் ஏதேனும் ஒன்றால் முடிவது வெண்கலிப்பாவாகும்.

"வாளார்ந்த மழைத்தடங்கண் வனமுலைமேல் வம்புஅனுங்கச்

கோளார்ந்த பூணாகங் குழைபுரளக் கோட்டெருத்தின்

மாலைதாழ் கூந்தலார் வரன் முறையான் வந்தேத்தச்

சோலைதாழ் பிண்டிக்கீழ்ச் சூழ்ந்தவர்தம் சொல்முறையான்

மனையறமும் துறவறமும் மண்ணவர்க்கும் விண்ணவர்க்கும்

வினையறுக்கும் வகைதெரிந்து வீடொடுகட் டிவையுரைத்த

தொன்மைசால் மிகுகுணத்தெம் துறவரசைத் தொழுதேத்த

நன்மைசால் வீடெய்து மாறு."

மேற்கூறிய இச் செய்யுள் தன் தளையானும், துள்ளல் ஓசையானும் வந்தமையால் வெண்கலிப்பாவாகும்.

கொச்சகக் கலிப்பா

கலிப்பாவிற்குரிய ஆறு உறுப்புகளும் முறையாக வராமல், ஒரு தரவும், இரண்டு தரவும் வந்து, தாழிசை சிலவும் பலவும் வந்து, தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் ஆறு உறுப்புக்களும் தம்முள் மயங்கியும் வெண்பாவினோடும் ஆசிரியத்தினோடும் மயங்கியும் வருவனவெல்லாம் கொச்சகக் கலிப்பாவாகும்.

ஒரு தரவு வந்தால் தரவு கொச்சகக் கலிப்பா எனவும், இரண்டு தரவு வந்தால் தரவிணைக் கொச்சகக் கலிப்பா எனவும், சில தாழிசை வந்தால் சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா எனவும், பல தாழிசை வந்தால் பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா என்றும், தம்முள் மயங்கியும் பிறவற்றினோடு மயங்கியும் வருவனவெல்லாம் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா என்றும் கொச்சகக் கலிப்பா ஐந்து வகைகளில் அமையும்.

'மரபே இயன்றும்' என்று சிறப்பித்ததனால் வரலாற்று முறைமையோடுங் கூட்டிக் கலியுறுப்பில் மிக்கும், குறைந்தும், பிறழ்ந்தும், உறழ்ந்தும், மயங்கியும், கலியுள் வாரா என்ற நேரீற்று இயற்சீரும், நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீரும், ஐஞ்சீர் அடியும் வந்து ஒத்தாழிசைக் கலிப்பாக்களோடு ஒவ்வாது வருவனவெல்லாம் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா என்பர் உரையாசிரியர்.

தரவு கொச்சகக் கலிப்பா

"செல்வப்போர்.. ஒளித்ததே" – இச்செய்யுள் தளை என்னும் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இது சுரிதகம் இல்லாத தரவு கொச்சகக் கலிப்பா.

தரவிணைக் கொச்சகக் கலிப்பா

வடிவுடை நெடுமுடி வானவர்க்கும் வெலற்கரிய

கடிபடு நறும்பைந்தார் காவலர்க்குங் காவலனாம்

கொடிபடு மணிமாடக் கூடலார் கோமானே. – இது தரவு.

எனவாங்கு – இது தனிச்சொல்.

துணைவளைத்தோ ளிவள்மெலியத் தொன்னலம் துறுப்புண்டாங்கு

இணைமலர்த்தார் அருளுமேல் இதுவிதற்கோர் மாறென்று

துணைமலர்த் தடங்கண்ணார் துணையாகக் கருதாரோ. – இது தரவு.

அதனால் – தனிச்சொல்.

செவ்வாய்ப் பேதை இவள் திறத்து

எவ்வா றாம்கொலிஃது எண்ணிய வாறே. – சுரிதகம்.

இது இடையிடைத் தனிச்சொல் பெற்று ஆசிரியச் சுரிதகத்தால் முடிந்த தரவினைக் கொச்சக் கலிப்பாவாகும். கொச்சகக் கலிப்பாவில் சிஃறாழிசை, பஃறாழிசை, மயங்கிசை ஆகிய கொச்சக் கலிப்பாவிற்குரிய சான்றுகளை யாப்பருங்கலக்காரிகை மூலநூலில் கண்டு கொள்க.

இதுவரை கலிப்பாவின் இலக்கணத்தையும் அதன் வகைகளையும் காரிகையாசிரியர் கூறிய முறையினைக் கண்டோம். இனி, கலிப்பாவின் இனங்களைப் பற்றி அறிவோம்.

கலிப்பாவின் இனம்

கலித்தாழிசை, கலித்துறை, கலிவிருத்தம் ஆகியன கலிப்பாவின் இனங்களாகும்.

"அடிவரை இன்றி அளவொத்தும் அந்தடி நீண்டிசைப்பில்

கடிதலில் லாக்கலித் தாழிசை ஆகுங் கலித்துறையே

நெடிலடி நான்காய் நிகழ்வது நேரடி யிரண்டாய்

விடினது ஆகும் விருத்தம், திருத்தகு மெல்லியலே.”

என்னும் காரிகை நூற்பா (34) கலிப்பாவின் இனங்களையும், அவற்றின் இலக்கணங்களையும் கூறுகின்றது.

1. கலித்தாழிசை

இரண்டடியும் பலவடியும் வந்து, ஈற்றடி மட்டும் நீண்டு மற்றையடிகள் தம்முள் அளவொத்தும், ஒவ்வாதும் வருவனவெல்லாம் கலித்தாழிசையாகும்.

“கடிதலில்லாக் கலித்தாழிசை” எனக் காரிகை நூற்பா சிறப்பித்ததனால் ஒரு பொருள் மேல் மூன்றடுக்கி வருவதும் சிறப்புடையதாகும். மேலும், தனியே வரப்பெறுதலும் உண்டு.

(எ.டு) “கொய்தினை காத்தும் குளவி அடுக்கத்துளம்

பொய்தற் சிறுகுடி வாரல்நீ ஐய நலம் வேண்டின்”

“ஆய்தினை காத்து அருவி அடுக்கத்தெம்

மாசில் சிறுகுடி வாரல்நீ ஐய நலம் வேண்டின்”

“மென்றினை காத்து மிகுபூங் கமழ்சோலைக்

குன்றச் சிறுகுடி வாரல்நீ ஐய நலம் வேண்டின்.”

இவை இரண்டடியாய் ஈற்றடி மிக்கு ஒரு பொருண்மேல் மூன்றடுக்கி வந்தமையால் கலித்தாழிசையாயிற்று.

2. கலித்துறை

ஐஞ்சீரடி நான்காய் வருவது கலித்துறையாகும். கலித்துறையே நெடிலடி நான்காய் நிகழ்வது என்பது காரிகை உணர்த்தும் செய்தியாகும். (நூற்பா 34)

(எ.டு) யானும் தோழியும் ஆயமு மாடுந் துறைநண்ணித்

தானுந் தேரும் பாகனும் வந்தென் நலனுண்டான்

தேனும் பாலும் போல்வன சொல்லிப் பிரிவானேல்

கானும் புள்ளும் கைதையும் எல்லாம் கரியன்றே.

இது நெடிலடி நான்காய் வந்த கலித்துறையாகும்.

3. கலிவிருத்தம்

நாற்சீரடி நான்காய் வருவது கலிவிருத்தமாகும்.

“அளவடி நான்கின் கலிவிருத் தம்மே” என்று கூறுவர்.

(எ.டு) வேய்தலை நீடிய வெள்ளி விலங்கலின்

ஆய்தலின் ஒண்சுட ராழியி னான்தமர்

வாய்தலின் நின்றனர் வந்தென மன்னர்முன்

நீதகலை சென்றுரை நீள்கடை காப்போய்.

இது நாற்சீரடி நான்காய் வந்த கலிவிருத்தமாகும்.

நால்வகைப் பாக்களில் மூன்றாவதாக உள்ள கலிப்பாவின் இலக்கணத்தையும், அதன் வகைப் பாடுகளையும், இனங்களையும் பற்றிய செய்திகளை அறிந்து கொண்டோம். இனி, நான்காவதாக உள்ள வஞ்சிப்பா பற்றி அமிர்தசாகரகர் கூறும் செய்தியினைப் பார்ப்போம்.

### 5.2.1.5 வஞ்சிப்பாவின் இலக்கணமும் வகையும்

இருசீர் கொண்ட குறளடிகளையுடையதாயும், முச்சீர் கொண்ட சிந்தடிகளை உடையதாயும், தன் தளையும், பிற தளையும் தழுவி, தனிச்சொல் பெற்றுத் தூங்கலோசையுடையதாய் ஆசிரியச் சுரிதகத்தான் முடிவது வஞ்சிப்பா எனப்படும். இது குறளடி வஞ்சிப்பா, சிந்தடி வஞ்சிப்பா என இரு வகைப்படும்.

குறளடி வஞ்சிப்பா

(எ.டு) “பூந்தாமரைப் போதலமரத்” எனத் தொடங்கும் பாடல் குறளடி வஞ்சிப்பாவிற்கு எடுத்துக்காட்டாகும். இப்பாடல் சீர் என்னும் தலைப்பில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதில் முழுமையாகக் கண்டு கொள்க. இதில் ‘நாளும்’ என்னும் தனிச்சொல் பெற்று ஆசிரிய சுரிதகத்தால் அமைந்துள்ளது.

சிந்தடி வஞ்சிப்பா

"கொடிவாலன குருநிறத்தன குறுந்தாளன

வடிவாளெயிற் றழலுளையன வள்ளுகிரண

பணையெருத்தின் இணையரிமான் அணையேறித்

துணையில்லாத் துறவுநெறிக் கிறைவனாகி

எயினகுவன் இனிதிருந் தெல்லோர்க்கும்

பயில்படுவினை பத்திமையிற் செப்பினோன்

புனையெனத்

திருவுறு திருந்தடி திசைதொழ

விரிவுறு நாற்கதி வீடுநனி யெளிதே."

இது 'புனையென' என்னும் தனிச்சொல் பெற்று ஆசிரியச் சுரிதகத்தால் அமைந்த சிந்தடி வஞ்சிப்பா ஆகும். (சுரிதகம் என்பது நீர்ச்சுழி சுருங்கி முடிவது போல் பாடலும் சுருங்கி முடியும் பகுதியாகும்.) வஞ்சிப்பா ஆசிரியச் சுரிதகத்தால் மட்டுமே முடியும். வெண்பா சுரிதகத்தால் முடியாது.

குறளடி நான்கின மூன்றொரு தாழிசை கோதில்வஞ்சித்

துறையொரு வாது தனிவரு மாய்விடிற் சிந்தடி நான்கு

அறைதரு காலை அமுதே விருத்தம் தனிச்சொல் வந்து

மறைதலில் வாரத்தி னாலிறும் வஞ்சிவஞ்சிக் கொடியே. நூற்பா 35

என்னும் காரிகை நூற்பாவில் வஞ்சிப்பாவின் இலக்கணத்தையும் வஞ்சிப்பாவின் இனங்களைப் பற்றிய செய்திகளையும் சுட்டிக்காட்டியது.

வஞ்சிப்பாவின் இனம்

வஞ்சித் தாழிசை, வஞ்சித்துறை, வஞ்சி விருத்தம் ஆகியவை வஞ்சிப்பாவின் இனங்களாகும்.

வஞ்சித்தாழிசை

இரு சீரடி நான்காய் மூன்று செய்யுள் ஒரு பொருள்மேல் அடுக்கி வருவன வஞ்சித் தாழிசையாகும்.

"மடிப்பிடியை மதவேழம்

தடக்கையின் வெயின் மறைக்கும்

இடைச்சுர மிறந்தார்க்கே

நடக்குமென் மனனே காண்"

"பேடையை யிரும்போத்துத்

தோகையான் வெயின் மறைக்கும்

காடக மறந்தார்க்கே

ஒருமென் மனனே காண்"

"இரும்பிடியை யிகல்வேழம்

பெருங்கையான் வெயின்மறைக்கும்

அருஞ்சுர மிறந்தார்க்கே

விரும்புமென் மனனே காண்."

இவை இரு சீரடி நான்காய் ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி வந்தமையால் வஞ்சித் தாழிசையாகும்.

வஞ்சித்துறை

இரு சீரடி நான்காய் தம்முள் அளவொத்து ஒரு பொருள்மேல் ஒன்றாய் வருவது வஞ்சித் துறையாகும்.

(எ.டு) "மைசிறந்தன மணிவரை

கைசிறந்தன காந்தளும்

பொய்சிறந்தனர் காதலர்

மெய்சிறந்திலர் விளங்கிழாய்"

இது குறளடி நான்காய் ஒரு பொருள்மேல் தனியே வந்தமையான் வஞ்சித் துறையாகும்.

வஞ்சி விருத்தம்

முச்சீரடி நான்காய் தம்முள் அளபொத்து வருவது வஞ்சி விருத்தமாகும்.

(எ.டு) சோலை யார்ந்த சுரத்திடைக்

காலை யார்கழ லார்ப்பவும்

மாலை மார்பன் வருமாயின்

நிலவுண்க ணிவள் வாழும்.

இது சிந்தடி நான்காய் வந்தமையால் வஞ்சி விருத்தமாகும்.

இதுவரை நான்கு வகைப் பாக்களின் இலக்கணம், வகைப்பாடு, பாக்களின் இனங்கள் ஆகியன பற்றிய செய்திகளைக் காரிகை ஆசிரியர் கூறியவற்றைக் கண்டோம். இனி, ஐந்தாவது பாவாகக் கருதப்படும் மருட்பா பற்றிய செய்திகளைக் காண்போம்.

5.2.1.6 மருட்பாவின் இலக்கணமும் வகையும்

வெண்பாவின் இலக்கணம் பெற்று முதலிலும், ஆசிரியப்பாவின் இலக்கணம் பெற்று இறுதியிலும் அமைவது மருட்பாவாகும். இது புறநிலை வாழ்த்து, கைக்கிளை, வாயுறை வாழ்த்து, செவியறிவுறூ என்னும் நான்கு பொருள்மேலும் வரும்.

பண்பார் புறநிலை பாங்குடைக் கைக்கிளை வாயுறைவாழ்த்து

ஒண்டச் செவியறி வென்றிப் பொருண்மிசை ஊனமில்லா

வெண்பா முதல்வந்து அகவல்பின் னாக விளையுமென்றால்

வண்பால் மொழிபட வாய்மருட் பாவெனும் வையகமே.

இக்காரிகை நூற்பா (36) மருட்பாவின் இலக்கணத்தையும் வகைகளையும் உணர்த்துகின்றது.

1. புறநிலை வாழ்த்து மருட்பா

வழிபடுதெய்வம் நிற்புறம் காப்பப் பழிதீர் செல்வமொடு ஒரு காலைக் கொருகால் சிறந்து பொலிமின் என்று பாடப்படுவது.

(எ.டு) தென்றலிடை போழ்ந்து தேனார் நறுமுல்லை

முன்றில் முகைவிரியு முத்தநீர்த் தண்கோளூர்க்

குன்றமர்ந்த கொல்லேற்றான் நிற்காப்ப என்னும்

தீரா நண்பில் தேவர்

சீர்சால் செல்வமொடு பொலிமதி கிடந்தே.

இறையருள் பெற்று, நிறைந்த செல்வத்துடன் நீடு வாழ்க என்றமையால் இச்செய்யுள் புறநிலை வாழ்த்து மருட்பா ஆயிற்று.

2. கைக்கிளை வாழ்த்து மருட்பா

திருநுதல் வேர்வரும்புந் தேங்கோதை வாடும்

இருநிலம் சேவடியும் தோயும் – அரிபரந்த

போகிதழ் உண்கணும் இமைக்கும்

ஆகு மற்றிவள் அகலிடத் தணங்கே.

இப்பாடல் துணிதலை நுதலிய ஒருதலைக் காமத்தைப் பற்றிக் குறிப்பிடுவதால் கைக்கிளை மருட்பாவாகும்.

3. வாயுறை வாழ்த்து

உண்மைப் பொருளைக் கூறுவது வாயுறை வாழ்த்தாகும்.

பலமுறையும் ஓம்பப் படுவன கேண்மின்

சொலல்முறைக்கண் தோன்றிச் சுடர்மணித்தேர் ஊர்ந்து

நிலைமுறையி னாண்ட நிகரில்லார் மாட்டும்

சிலமுறை யல்லது செல்வங்கள் நில்லா

இலங்கும் எறிபடையு மாற்றலும் அன்பும்

கலந்ததம் கல்வியும் தோற்றமும் ஏனைப்

பொலன்செய் புனைகலனோடு இவ்ஆற னாலும்

விலங்கிவரும் கூற்றை விலக்கலு மாகாது

அனைத்தாதல் நீயிருங் காண்டிர் – நினைத்தக்க

கூறிய வெம்மொழி பிழையாது

தேறிநீ ரொழுகின் சென்றுபயன் தருமே.

இது மெய்ப்பொருள் சொன்னமையால் வாயுறை வாழ்த்து மருட்பாவாகும்.

4. செவியறிவுறூஉ மருட்பா

சினங் கொள்ளாமல் பெரியோர் நடுவே அடங்கி நடத்தல்கடன் என்பது போல் அறிவுரைகளைச் செவிக்கண் உறுமாறு பாடப்படுவது. இவ்வகைக்கான சான்றினைக் காரிகை மூல நூலில் கண்டு கொள்க.

மருட்பாவின் வகைகளைக் கூறும் காரிகையில் "பாங்குடைக் கைக்கிளை" என்று சிறப்பித்ததனால் கைக்கிளை எல்லாப் பாவானும் வரப்பெறும். மேலும் மருட்பாவேயாய் வருகவென்னும் யாப்புறவில்லை என்றும் கைக்கிளை வெண்பா முதலாக ஆசிரியம் ஈறாக வரும்வழி ஆசிரிய அடி இரண்டேயாய், அவற்றுள் ஈற்றயலடி முச்சீராய் வரும் என்றும், வெண்பாவடியும் ஆசிரியவடியும் ஒத்து வருவன சமனிலை மருட்பா எனவும், ஒவ்வாதன வியனிலை மருட்பா எனவும் வழங்கப்படும் என்று கூறுவர்.

தன்மதிப்பீட்டு வினாக்கள்

1. பாக்களின் வகைகள் யாவை?
2. வெண்பாவிற்கு உரிய ஓசை செப்பலோசை. சரியா? தவறா?
3. குறள் வெண்பாவின் இனங்கள் யாவை?
4. கொச்சகக் கலிப்பா ............. வகைப்படும்.
5. பாக்களுக்குரிய ஓசைகள் யாவை?
6. அடிமறி மண்டில ஆசிரியப்பாவிற்குச் சான்று தருக.
7. கலிப்பாவின் வகைகள் ஐந்து. சரியா? தவறா?
8. இருசீரடி நான்காய் மூன்று செய்யுள் ஒரு பொருள்மேல் அடுக்கி வருவன ............
9. மருட்பாவின் வகைகள்?

தொகுப்புரை

யாப்பருங்கலக்காரிகையில் இரண்டாம் இயலான செய்யுளியலில் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா என்னும் ஐந்து பாக்களின் இலக்கணங்களும், வகைப்பாடுகளும் சான்றுகளும் தெளிவாகக் கூறப்பட்டன. இந்நால்வகைப் பாக்களுக்கும் உரிய ஓசைகள் சுட்டப்பெற்றது. மேலும் ஒவ்வொரு பாவின் இலக்கணமும், அந்தப் பாக்களின் இனங்களும் ஒவ்வொரு வகைப்பாட்டிற்கும் உரிய சான்றுகளும் இவ்வியலில் காட்டப்பெற்றுள்ளன.

வெண்பாவில் நேரிசை, இன்னிசை, பஃறொடை, சிந்தியல் வெண்பா (2) என்னும் வகைப்பாட்டினையும், வெண்பாவின் இனங்களையும் அறிய முடிந்தது. அதேபோன்று வஞ்சிப்பாவின் இலக்கணமும், குறளடி வஞ்சிப்பா, சிந்தடி வஞ்சிப்பா என்னும் வகைகளும், இப்பாவின் மூன்று இனங்களையும் முறையே அறியப் பெற்றன. அதேபோன்று மருட்பாவின் இலக்கணமும், அதன் வகைப்பாடுகளையும் காரிகையாசிரியர் கூறியுள்ளமையையும் ஒருசேர அறிந்து கொள்ள முடிந்தது.

பயிற்சி வினாக்கள்

சிறு வினாக்கள்

1. பாக்களின் பெயர்களை வரிசைப்படுத்துக.
2. நான்கு பாக்களுக்கும் உரிய அடியின் சிறுமையும் பெருமையும் யாவை?
3. வெண்பாவின் வகைகளையும் அதன் இனங்களின் பெயர்களையும் பட்டியலிடுக.
4. இன்னிசைச் சிந்தியல் வெண்பாவின் இலக்கணத்தை வரையறுத்து, எடுத்துக்காட்டு தருக.

5. வெளி விருத்தம், வெண்துறை – இவற்றை விளக்குக.

6. வெள்ளொத்தாழிசை – உதாரணம் தருக.

7. ஆசிரியப்பாவின் இலக்கணம் யாது?

8. கலித்துறைக்கும், கலிவிருத்தத்துக்கும் வேறுபாடு என்ன?

9. வஞ்சி விருத்தத்தின் இலக்கணத்தை உதாரணத்துடன் காட்டுக.

10. கொச்சகக் கலிப்பா எத்தனை வகைப்படும்?

11. பஃறொடை வெண்பா என்றால் என்ன? இதன் அடிச்சிறுமையும் பெருமையும் யாவை?

12. 'ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம் ஓதலிற் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை' – இஃது எவ்வகைப் பாவென்று உணர்த்துக.

13. அடிமறி மண்டில ஆசிரியப்பாவிற்கு எடுத்துக்காட்டு தருக.

குறு வினாக்கள்

1. குறள் வெண்பாவிற்கு இனமாவன யாவை? விளக்கம் தருக.

2. வெண்பாவின் இனங்கள் யாவை? அவற்றிற்குச் சான்றுகள் தருக.

3. கலிப்பாவின் இனங்களைக் கூறி, சான்றுகளுடன் விளக்குக.

4. ஆசிரியப்பாவின் இனங்களில் இரண்டினை எடுத்துக்காட்டி விளக்குக.

5. கலிவிருத்தம், வெண்செந்துறை ஆகியவற்றை விளக்குக.

6. வஞ்சிப்பாவின் இலக்கணத்தையும் அதன் வகைகளையும் கூறி, ஏதேனும் ஒரு வகைக்குச் சான்று காட்டுக.

7. நேரிசை வெண்பாவின் இலக்கணம் தந்து, அதன் வகைகளையும் விளக்குக.

8. அடிமறிமண்டிலம், கலிவிருத்தம், வெண்செந்துறை – இவற்றை விளக்குக.

பெரு வினாக்கள்

1. வெண்பாவின் இலக்கணம் கூறி, அதன் வகைப்பாடுகளைச் சான்றுகளுடன் எடுத்துரைக்க.

2. ஆசிரியப்பாவின் இலக்கணம் யாது? அதன் வகைகளை விளக்கியுரைக்க.

3. கலிப்பா குறித்து காரிகை ஆசிரியர் கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

4. வஞ்சிப்பாவின் வகைகளையும் அவற்றின் இனங்களையும் சான்றுகளுடன் விளக்குக.

5. மருட்பாவின் இலக்கணத்தைத் தருக. அது எவ்வெவ் பொருளில் வரும் என்பதைச் சான்றுகளுடன் விளக்குக.

மேலும் படிக்க வேண்டிய நூல்கள்

1. யாப்பருங்கலக்காரிகை, அமிர்தசாகரர், ந.மு. வேங்கடசாமி நாட்டார் (ப.ஆ.), முல்லை நிலையம், சென்னை – 600 024.

2. இனிய தமிழ்மொழியின் இயல்பு, தமிழண்ணல், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, நான்காம் பதிப்பு, 1995.

3. எளிய முறையில் யாப்பருங்கலக்காரிகை, டாக்டர் கு. முத்துராசன், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 2002.

4. தொல்காப்பியம் பொருளதிகாரம், இளம்பூரணம், கழக வெளியீடு, சென்னை, 1969.

5. நற்றமிழ் இலக்கணம், டாக்டர் சொ. பரமசிவம், பட்டுப் பதிப்பகம், சென்னை, ஆறாம் பதிப்பு, 2000.

தன்மதிப்பீட்டு விடைகள்

1. வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா.

2. சரி.

3. வெண்டாழிசை, வெண்டுறை, வெளிவிருத்தம்.

4. இரண்டு

5. செப்பல், அகவல், துள்ளல், தூங்கல்.

6. சூரல் பம்பிய சிறுகான் யாறே

சூரர மகளிர் ஆரணங் கினரே

வாரலை எனினே யானஞ் சுவலே

சாரல் நாட நீ வர லாறே.

7. சரி.

8. வஞ்சித்தாழிசை

9. கைக்கிளை, வாயுறை வாழ்த்து, புறநிலை வாழ்த்து, செவியறிவுறுஉ.


5.2.2 ஒழிபியல்

5.2.2.1 உறுப்பியல் ஒழிபு

5.2.2.1.1 எழுத்துக்களின் ஒழிபு

5.2.2.1.2 அசைகளின் ஒழிபு

5.2.2.1.3 சீர், தளைகளின் ஒழிபு

5.2.2.1.4 அடிகளின் ஒழிபு

5.2.2.1.5 தொடைகளின் ஒழிபு

5.2.2.2 செய்யுளியல் ஒழிபு

தன்மதிப்பீட்டு வினாக்கள்

தொகுப்புரை

பயிற்சி வினாக்கள்

மேலும் படிக்க வேண்டிய நூல்கள்

தன்மதிப்பீட்டு விடைகள்


## 5.2.2 ஒழிபியல்

யாப்பருங்கலக் காரிகையின் மூன்றாவது இயல் ஒழிபியலாகும். முன்னர்க் கூறிய உறுப்பியல், செய்யுளியலில் கூறாது ஒழிந்தவைகளை உணர்த்தியமையால் இவ்வியல் ஒழிபியல் என்னும் பெயர் பெற்றது.

உறுப்பியல் ஒழிபு, செய்யுளில் ஒழிபு என இரண்டு தலைப்புகளில் ஒழிபியல் செய்திகள் சுட்டப்பட்டுள்ளன. அவற்றுள் முதல் தலைப்பு உறுப்பியல் ஒழிபு என்பதாகும். இதன்கண் முதலில் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை முதலிய உறுப்புகளுள் எழும் சில ஐயங்கள் தெளிவு செய்யப்பெறுகின்றன.

### 5.2.2.1 உறுப்பியல் ஒழிபு

#### 5.2.2.1.1 எழுத்துக்களின் ஒழிபு

எழுத்தின் வகை பதின்மூன்று என்பது உறுப்பியலுள் அறியப்பட்டது. அவற்றுள் குற்றியலிகரம், குற்றியலுகரம், உயிரளபெடை, ஐகாரக்குறுக்கம், ஒற்றளபெடை ஆகியன அமைந்த சீர்களைப் பாவில் எவ்வாறு அலகிடுவது என்னும் வினாவிற்கு விடையாக எழுத்துகளின் ஒழிபு என்னும் பகுதி அமைந்துள்ளது. இவ்வெழுத்துகள் அலகுகளாக எங்கு இடம்பெறும், எங்கு இடம்பெறாது ஆகிய செய்திகள் இங்கு உணர்த்தப்படுகின்றன.

சீரும் தளையும் சிதையிற் சிறிய இஉ அளபோடு

ஆரு மறிவ ரலகு பெறாமைஐ காரநைவேல்

ஓருங் குறிலிய லொற்றள பாய்விடின் ஓரலகாம்

வாரும் வடமும் திகழு முகிழ்முலை வாணுதலே.

இக்காரிகை ஒருசார் எழுத்துகட்கு எய்தியதோர் இலக்கணம் உணர்த்துதலைக் கூறுகிறது.

சீரும் தளையும் சிதைந்து இலக்கணத்தில் மாறுபட்டு அமைந்துவிடும். அப்பாடல்களைப் பிழை எனக் கருதி தவிர்த்து விடுதல் கூடாது. அப்பாடல்களை ஏற்றுக்கொள்ளும் முகமாய், சீரும், தளையும் சிதைகின்ற இடங்களில் சில எழுத்துகள் அலகு பெறமாட்டா எனக் கொள்ளுதல் வேண்டும்.

குற்றியலிகரம், குற்றியலுகரம், உயிரளபடை ஆகியவை அலகு பெறுவதில்லை. இவற்றுள் குற்றியலிகரம், குற்றியலுகரம் ஆகியவற்றை ஒற்றெழுத்துகளைப் போன்று அலகு பெறாது செய்தல் வேண்டும். அதேபோல் உயிரளபெடையை ஈரசையாக்கல் நெட்டெழுத்தாகக் கொண்டு ஓரசையாகக் கொள்ளுதல் வேண்டும்.

குற்றியலிகரம்

குழலினி தியாழினி தென்பதம் மக்கள்

மழலைச்சொல் கேளா தவர்.

இக்குறட்பாவில், குழலினி என்பதை நிரை, நிரை – கருவிளம் என வாய்பாடு விளம்முன் தியா என்னும் நிரை வந்ததாக அலகிட்டால் ஆசிரியத் தளை தட்டுத் தளை சிதைகிறது. இவ்வாறு தளை சிதைந்தவிடத்துத் 'தியாழினி' என்பதன் முதற்கண் நின்ற குற்றியலிகரம் அலகு பெறாது எனத் தவிர்த்தால் விளம்முன் நேர் வந்து வெண்டளை தட்டுச் செய்யுள் சிதையாமல் நிற்கும்.

குற்றியலுகரம்

கொன்று கோடுநீடு குருதி பாயவும்

சென்று கோடுநீடு செழுமலை பெருவள

வென்று கோடுநீடு விறல் வேழம்

என்று மூடுநீடு பிடியுளபோலும்

அதனால் – இது தனிச்சொல்

இண்டிடை யிரவிவ னசைஇவரின்

வண்டுண் கோதை யுயிர்வா ழலவே.

இவ்வஞ்சிப்பாவினுள் முதற்சீர்கள் எல்லாவற்றிலும் குற்றியலுகரங்கள் இடம் பெற்றுள்ளன. அக்குற்றியலு கரங்களை எழுத்தாக எண்ணி அசை கொண்டால் முதற்சீர்கள் எல்லாம் 'கொன்று கொடு நீடு' என ஆறசைச் சீர்களாகும். ஆறசைச் சீர்கள் வருவதற்கும் அவற்றிற்குத் தளை கொள்வதற்கும் விதி இல்லை. ஆகையால் இச்சீர்களிலுள்ள குற்றியலுகரங்களை எழுத்துகளாகக் கொண்டு அசை கொள்ளாமல் நீக்கினால் மூவசைச் சீர்களாகி இவ்வஞ்சிப்பா சீரும் தளையும் சிதையாமல் அமையும்.

உயிரளபெடை

பல்லுக்குத் தோற்ற பனிமுல்லை பைங்கிளிகள்

சொல்லுக்குத் தோற்றின்னத் தோற்றிலால் – சொல்லுக்கு

நூறோ ஒநூ றென்பாள் நுடங்கிடைக்கு பொன்முலைக்கும்

மாறோமா அன்றளந்த மண்.

இவ்வெண்பாவில் 'நூறோஒநூ' என்ற சீரில் உயிரளபெடை இடம் பெற்றுள்ளது. இவ்வளபெடையால் உள்ள குற்றுயிரை தனி நேரசையாகக் கொண்டால் நேர், நேர் நேர் நேர் – தேமாந்தண்பூ என வாய்பாடு கூறினால் நாலசைச் சீர் வந்து சீரும் தளையும் ஓசையும் கெடுகிறது. எனவே, அளபெடையிலுள்ள குற்றெழுத்தை நீக்கி அலகிட்டால் நேர் நேர் நேர் – தேமாங்காய் என வாய்பாடு அமைந்து மூவசைச் சீராகிறது. அப்பொழுது மூன்று மாத்திரை பெற்ற அளபெடை எழுத்து இரண்டு மாத்திரை பெற்று அளபெடுக்காத நெட்டெழுத்தாக நிற்கிறது.

ஐகாரக் குறுக்கம்

ஐகாரக் குறுக்கம் குற்றெழுத்தே போலக் குறிலுடனும் நெடிலுடனும் கூடி நின்று நிறையசையாகவும், தனியே நின்று நேரசையாகவும் வரும்.

அன்னையையா நோவ தவமால் அணியிழாய்

புன்னையையான் நோவன் புலத்து.

இவ்வெண்பாவில் அன்னையையான் என்பதைப் பிரிப்பின் நாலசைச் சீராய்ச் செய்யுள் சிதைகிறது. இங்ஙனம் சிதைந்தவிடத்து இடைநின்ற ஐகாரக் குறுக்கங்களைக் குற்றெழுத்துகளாகக் கொண்டு அசை பிரிப்பின் நேர் நிரை நேர் என்று மூவகைச் சீராகி செய்யுள் சிதையாமல் நிற்கும்.

ஒற்றளபெடை

செய்யுளில் வருகின்ற ஒற்றெழுத்துகள் அனைத்தும் மதிப்பில்லாது அலகு பெறுவதில்லை. அவற்றைக் குறில், நெடில் ஆகியவற்றுடன் சேர்த்து அலகிடல் வேண்டும். ஆனால், ஒற்றளபெடையாக வருகின்ற இடத்து மட்டும் ஒற்றெழுத்துக்கள் குற்றெழுத்துக்களாகக் கருதப்பெற்று அலகு பெறுவதுண்டு.

(எ.டு) கண்ண் கருவிளை கார்முல்லை கூரெயிறு

பொன்ன் பொறிசுணங்கு போழ்வாய் இலவம்பூ

மின்ன் நுழைமருங்கின் மேதகு சாயலாள்

என்ன் பிறமகளா மாறு.

இவ்வெண்பாவில் கண்ண், பொன்ன், மின்ன், என்ன் ஆகிய சீர்கள் ஒற்றளபெடைகளாக அமைந்துள்ளன. மேற்கூறிய சீர்களை இரண்டு அசைகளாக ஆக்கி இறுதியில் வருகின்ற ஒற்றுக்களையும் அலகு பெறச் செய்தல் வேண்டும். இப்பொழுது தேமாச்சீராகி வரும் சீருடன் பொருந்திச் சீரும் தளையும் சிதையாமல் அமைகின்றன.

5.2.2.1.2 அசைகளின் ஒழிபு

இரண்டு உயிர்கள் சேர்ந்து ஒலித்தல் நிரையசை எனப் பொதுவாகச் சுட்டப்படும். சேர்வதற்குரிய உயிர்கள் சிற்சில பொழுது பிரிந்து ஒலிப்பதும் உண்டு. அவ்வாறு உருவாகும் அசைகளை நேர் என்று கொள்வதா, நிரை என்று கொள்வதா என்னும் ஐயம் இப்பகுதியில் தெளிவுறுகிறது.

விட்டிசைத் தல்லால் முதற்கண் தனிக்குறில் நேரசையென்றி

ஒட்டப் படாதகற்கு உண்ணான் உதாரணம் ஓசைகுன்றா

நெட்டள பாய்விடி னோ்நேர் நிரையொடு நேரசையாம்

இட்டத்தி னாற்குறில் சேரின் இலக்கியமேற் சிதைவே

என்னும் காரிகை (நூற்பா 39) மேற்கூறிய ஒருசார் அசைகட்கு எய்தியதோர் இலக்கணத்தை உணர்த்தியது.

பொதுவகையால் தனிக்குற்றெழுத்து நேரசையாகும் என்னும் மொழிக்கு மூன்றிடத்தும் குற்றெழுத்து விட்டிசைத்து நேரசையாகும். விட்டிசைத்தல் என்பது வரும் மொழியுடன் தொடர்தலின்றி வேறுபட்டு ஒலிப்பதாகும். இது குறிப்பு, ஏவல், தற்சுட்டு, வினா, கட்டு ஆகிய பொருட்கண் குற்றெழுத்து விட்டிசைத்து வந்து நேரசையாகும்.

உண்ணான் ஒளிநிறா னோங்கு புகழ்செய்யாமை

துன்னிருங் கேளிர் துயர்களையான் – கொன்னே

வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ

இழந்தானென்று எண்ணப் படும்.

இந்நேரிசை வெண்பாவில் மூன்றாம் அடியின் இறுதிச் சீர் ‘அஆ’ என்பதாகும். இலக்கணப்படி, குறிலும் நெடிலும் இணைந்திருப்பதால் இது நிரையசை என்னும் ஓரசையாகும். பாடலின் இடையில் ஓரசை வருவதால் தளை தட்டுகிறது. எனவே, இதை விட்டிசைத்து, இவை தனித்தனியாக வந்துள்ளன எனக் கொண்டு, முதலில் உள்ள குற்றெழுத்தைத் தனிக்குறிலாகவும் அடுத்து வந்துள்ள நெட்டெழுத்தைத் தனி நெடிலாகவும் கொண்டு அசை பிரித்தல் வேண்டும். இவ்வாறு பிரிப்பின் நேர் நேர் – தேமா என்னும் வாய்பாடு அமைந்து தளை பொருந்தி வருகின்றது. இவ்வாறு விட்டிசைத்து அசை பிரிந்துள்ளமையால் இதற்கு விட்டிசைத்தல் என்று பெயர்.

“அஅவனும் இஇவனும் உஉவனும் கூடியக்கால்

எஎவனை வெல்லா ரிகல்.”

இக் குறள்வெண்பாவின் மூன்று சீர்களில் முதலில் நின்ற அ, இ, உ என்ற எழுத்துக்கள் சுட்டுப் பொருளின்கண் விட்டிசைத்து நேரசையாயின. எஎவனை என்னும் சீரில் எகரம் வினாப் பொருளை உணர்த்தி விட்டிசைத்து நேரசையாயிற்று.

உயிரளபெடை அசை கொள்ளுதல்

சீர்களின் தனி நெட்டெழுத்து அளபெடுத்து வந்தால் அது இரண்டு நேரசையாகக் கொள்ளப்படும். குற்றெழுத்தினோடு புணர்ந்த நெட்டெழுத்து அளபெடுத்தால் அவ்விரண்டனையும் கூட்டி நிரையசையாகவும் நேரசையாகவும் கொள்வர்.

ஏஎர் சிதைய அழாஅல் எலாஅநின்

சேயரி சிந்தின கண்.

இவ்வெண்பாவில் 'ஏஎர்' என்ற சீரின் நெட்டெழுத்து அளபெடுத்து நேர்நேர் என்றாயிற்று. 'அழாஅல்', 'எலாஅ' ஆகிய இவ்விரு சீர்களிலும் குறிலுடன் கூடிய நெட்டெழுத்து அளபெடுத்து நிரைநேர் ஆயிற்று. அளபெடையாக வரும் குற்றெழுத்துக்கள் குறிலுடனோ நெடிலுடனோ சேர்ந்து நிரையசையாகாது. அவற்றைத் தனி நேரசையாகக் கொள்ளுதல் வேண்டும்.

5.2.2.1.3 சீர், தளைகளின் ஒழிபு

உறுப்பியலில் எவ்வெவ்பாவிற்கு எவ்வெவ்சீர்கள் சிறப்பாக உரியன என்று அறியப்பட்டது. இவ்வொழிபியலில் எவ்வெப்பாவில் எவ்வகைச் சீர் வரப்பெறா என்று உணர்த்தப் பெறுகிறது. இதேபோன்று ஒவ்வொரு பாவிற்கும் சிறப்பாகவுரிய தளைகளும் கூறப்பட்டன. இங்கு உரியன அல்லாதத் தளைகள் எத்தகைய பாக்களில் எவ்வெவ்வாறு இடம்பெறும் என்பது குறிக்கப்பெறுகிறது.

மாஞ்சீர் கலியுட் புகாகலிப் பாவின் விளங்கனி வந்து

ஆஞ்சீ ரடையா அகால் அகத்தும் அல்லாத வெல்லாம்

தாஞ்சீர் மயங்குந் தளையு மதேவெள்ளைத் தன்மை குன்றிப்

போஞ்சீர் கனிபுகில் புல்லாது அயற்றளை பூங்கொடியோ

என்னும் காரிகை (நூற்பா 40) மேற்கூறியவாறு சீரும் தளையும் செய்யுளகத்து நிற்பதோர் முறைமையை உணர்த்திற்று.

சீர்

தேமா, புளிமா என்னும் நேரீயற் சீர் இரண்டும், கருவிளங்கனி, கூவிளங்கனி, நிரைநடுவாகிய வஞ்சி உரிச்சீர் இரண்டும் ஆகிய நான்கு சீர்களும் கலிப்பாவினுள் வருவதில்லை. கருவிளங்கனி, கூவிளங்கனி, தேமாங்கனி, புளிமாங்கனி ஆகிய நான்கு சீர்களும் வெண்பாவினுள் புகப் பெறுவதில்லை.

கருவிளங்கனி, கூவிளங்கனி என்னும் இரண்டு சீர்கள் ஆசிரியப்பாவில் வருவதில்லை. மேற்கூறிய சீர்கள் நீங்கிய மற்றைய எல்லாச் சீர்களும் எல்லாப் பாக்களிலும் எல்லாப் பாவினங்களிலும் வருவனவாகும்.

தளை

நால்வகைப் பாக்களில் வெண்பாவினுள் வெண்சீர் வெண்டளை, இயற்சீர் வெண்டளை ஆகிய இரண்டு தளைகளே வரும். பிற தளைகள் எதுவும் வருவதில்லை. வெண்பாவைத் தவிர்த்த பிற பாக்களில் எல்லாத் தளைகளும் மயங்கி வருவனவாகும்.

நெடுவரைச் சாரல் குறுங்கோட்டுப் பலவின்

விண்டுவார் தீஞ்சுளை வீங்குகவுள் கடுவன்

உண்டு சிலம்பேறி ஓங்கிய விருங்கழைப்

படிகம் பயிற்று மென்ப

மடியாக் கொலைவி னென்னையர் மலையே.

இந்நேரிசையாசிரியப்பாவில் தன்சீரும், வெண்சீரும், நேர் நடுவாகிய வஞ்சியுரிச்சீரும் வந்து, வெண்டளையும், தன்றளையும், கலித்தளையும், வஞ்சித்தளையும் மயங்கி வந்துள்ளமையை அறியலாம். பிற பாக்களுக்குரிய சான்றுகளைக் காரிகை மூல நூலில் கண்டு கொள்க.

5.2.2.1.4 அடிகளின் ஒழிபு

அடிகள் சீரால், தளையால் அமைவனவாகும். சீரால் ஆகிய அடிகளே குறளடி, சிந்தடி என உறுப்பியலுள் கூறப்பெற்றன. வெண்டளை, கலித்தளை முதலிய தளையானாகிய அடிகள் இங்கு தெளிவு செய்யப் பெறுகின்றன. இதனோடு இச்சீரடிகளும் தளையடிகளும் எவ்வகைப்பாவில் எவ்வெவ்வாறு வந்து மயங்கப் பெறும் என்ற வழக்கும் குறிக்கப்படுகிறது.

"இயற்றளை வெள்ளடி வஞ்சியின் பாதம் அகவலுள்ளான்

மயக்கப்படா அல்ல வஞ்சி மருங்கின்எஞ் சாஅகவல்

கயற்கண்நல் லாய்கலிப் பாதமும் நண்ணுல் கலியினுள்ளாள்

முயக்கப் படுமுதற் காலிரு பாவு முறைமையினே."

என்னும் காரிகை (41) அடிகளின் மயக்கத்தை உணர்த்துகின்றது.

ஆசிரியப்பாவினுள் இயற்சீர் வெண்டளையின் வந்த வெண்பாவடியும் வஞ்சியடியும் மயங்கி வரும்.

“இயற்சீர் வெள்ளடி யாசிரிய மருங்கி

னிலைக்குரி மரபி னிற்கவும் பெறுமே”

என்று தொல்காப்பியர் குறிப்பிடுவர்.

“எறும்பி யளையுட் குறும்பல் சுனைய

உலைக்க லன்ன பாறை யேறிச்

கொடுவில் லெயினர் பகழி மாய்க்குங்

கவலைத் தென்ப வளர்வதோர் சென்றவாறே

அதுமற் றவலங் கொள்ளாது

நொதுமற் கலுழுமிவ் வழுங்கலூரே.

இச்செய்யுளுள் “எறும்பி யனையுட் குறும்பல் சுனைய” என்பது இயற்றளை வெள்ளடியாகும். இதனை “எறும்பி யனையுட் குறும்பல் சுனைய குறுந்தொடி யாஞ்சொல் சுரம்” என்று உச்சரித்து வெள்ளடியாமாறு கண்டு கொள்ளுதல் வேண்டும்.

வஞ்சிப்பாவில் ஆசிரியவடிகள் மிகுந்தும் கலியடிகள் வெண்பாவடிகள் குறைந்தும் வரும்.

‘பட்டினப்பாலை’ என்னும் வஞ்சிநெடும்பாட்டினுள், “நேரிழை மகளிர் உணங்குணாக் கவரும்” என்பது போன்ற ஆசிரியவடிகளும், “கோழி எறிந்த கொடுங்கால் கனங்குழை” என்பது போன்ற வெள்ளடிகளும், “வயலாமை புழுக்குண்டு வறலடம்பின் மலர்மலைந்தும்” என்பது போன்ற கலியடிகளும் மயங்கி வருவனவாகும்.

கலிப்பாவில் வெண்பாவடியும் ஆசிரியவடியும் மயங்கி வரும். அது மட்டுமன்றி கலிப்பாவினுள்ளும் ஆசிரியப்பாவினுள்ளும் ஐஞ்சீரடி அருகியும் வரும்.

“அணிகிளர் சிறுபொறி யவிர்நுத்தி மாநாகத்து எருத்தேறித்

துணியிரும் பனிமுந்நீர் தொட்டுழந்து மலைந்தனையே.”

இக்கலிப்பாவில் முதலடி ஐஞ்சீரடியாய் வந்துள்ளமையைக் கண்டு கொள்ளுதல் வேண்டும்.

### 5.2.2.1.5 தொடைகளின் ஒழிபு

ஓரடிக்கண் அமைந்து வரும் ஒலி நயங்களை இணை, இயைபு முதலிய எழுவகைத் தொடைகளாகப் பகுத்தமையை உறுப்பியலில் அறிந்து கொண்டோம். இவ்வொழிபியலில், அடிதோறும் அமைகின்ற அத்தொடைகள் மேலும் ஐந்து இங்கு இணைக்கப் பெற்றுள்ளன. இவற்றினைக் காலத்தால் வளர்ந்த வளர்ச்சியெனக் கொள்ளலாம். மேலும், தமிழில் சிறப்பாகப் பயின்று வரும் மோனை, எதுகைகளின் வகைகள் எண்ணற்றவையாகும். அவற்றைத் தலைமை, இடைமை, கடைமை என்று மூன்று பகுதிகளாகப் பிரித்து இப்பகுதியில் தொகுக்கப்பெற்றுள்ளன.

ஒலிநயம், உணர்வு நலம், பொருள் வளம் ஆகியவற்றில் குன்றாத பாவில் எத்தொடை பயில்கிறது என்பதை முன்னமேயே அறிந்து கொண்டோம். இங்கு இணை எழுத்து பெற்று வரும் மருட் செந்தொடை குறிக்கப் பெறுகின்றது. இவை ஒன்றுக்கொன்று வேறானவை என்பது நினைவு கூறத்தக்கது. மேலும், உறுப்பியலில்கூறாத முரண், எதுகை ஆகிய தொடைகளையும் மருட் செந்தொடையினையும் இவ் ஒழிபியல் எடுத்துரைக்கிறது.

முரண்தொடை

முரண்தொடையைப் பகைத் தொடை என்றும் இரணத் தொடை என்றும் வழங்குவர். ஒருசாரார் முரண் தொடையைக் கடைமுரண், கடையிணை முரண், பின் முரண், கடைக் கூழைமுரண், இடைப்புணர் முரண் என ஐந்தாக வகைப்படுத்துவர்.

கடை முரண்

அடிதோறும் இறுதிச் சீர்க்கண் மறுதலைப்படத் தொடுப்பது கடை முரண் என்று கூறுவர்.

(எ.டு) கயன்மலைப் பன்ன கண்ணினை கரிதே

தடமுலை திவளுந் தனிவடம் வெளிதே

நூலின் நுண்ணிடை சிறிதே

ஆடமைத் தோழிக்கு அல்குலோ பெரிதே.

இச்செய்யுளில் அடிதோறும் இறுதிக்கண் நின்ற சீர்கள் கரிது வெளிது எனவும், சிறிது, பெரிது எனவும் முரண்பட்டு வந்தன.

கடையிணை முரண்

ஓரடியில் கடையிரு சீர்களால் மறுதலைப்படத் தொடுப்பது கடையிணை முரணாகும்.

“மீன்றேர்ந்து வருந்திய கருங்கால் வெண்குருகு

தேனார் ஞாழல் விரிசினைக் குழூஉம்

தண்ணந் துறைவன் தவிர்ப்பவும் தவிரான்

தேரோ காணலம் காண்டும்

பீரோ வண்ண முஞ்சிறுநுதல் பெரிதே.”

இந்நேரிசையாசிரியப்பாவில் அடிதோறும் கடை இரு சீர்க்கண்ணும் மறுதலைப்படத் தொடுத்தமையால் கடையிணை முரணாயிற்று.

பின் முரண்

ஓரடியுள் இரண்டாம், நான்காம் சீர்க்கண் மறுதலைப்படத் தொடுப்பது.

(எ.டு) “சார லோங்கிய தடந்தாள் தாழை

கொய்ம்மலர் குவிந்து தண்ணிழல் விரிந்து

தமியம் இருந்தன மாக நின்றுதன்.”

என்னும் அடிகளில் இரண்டாம் சீர்களும் நான்காம் சீர்களும் முறையே ஓங்கு, தாழ் என முரண்பட்டும், ‘குவிந்து விரிந்து’ எனவும், ‘இருந்து நின்று’ எனவும் பொருளால் முரண்பட்டுள்ளதைத் தெரிந்து கொள்ளலாம்.

கடைக்கூழை முரண்

ஓரடியில் முதற்சீர் ஒழிந்து மற்ற மூன்று சீர்க்கண்ணும் மறுதலைத் தொடுப்பது.

“காவியக் கருங்கண் செவ்வாய்ப் பைந்தொடி

பூவிரி சுரிமென் கூந்தலும்

வேய்புரை தோளும் அணங்குமா லெமக்கே.”

இந்நேரிசையாசிரியப்பாவின் முதலடியில் முதற்சீர் தவிர்த்த மூன்று சீர்களும் கருமை, செம்மை, பசுமை எனப் பொருளால் முரண்படத் தொடுத்தமையால் இது கடைக்கூழை முரணாகும்.

இடைப்புணர் முரண்

ஓரடியில் நடுவிரு சீர்க்கண்ணும் மறுதலைப்படத் தொடுப்பது.

“போதவிழ் குறிஞ்சி நெடுந்தண் மால்வரை

கோதையில் தாழ்ந்த ஓங்குவெள் ளருவி”

என்னும் அடிகளில் நடு இரு சீர்களும் குறுமை, நெடுமை எனவும், தாழ்தல், ஓங்குதல் எனவும் பொருளால் முரண்பட்டதால் இஃது இடைப்புணர் முரண் தொடையாகும்.

“அருகிக் கலியோ டகவல் மருங்கின்ஐஞ் சீரடியும்

வருதற் குரித்தென்பர் வான்தமிழ் நாவலர் மற்றொருசார்

கருதிற் கடையே கடையினை பின்கடைக் கூழையுமென்று

இரணத் தொடைக்கு மொழிவர் இடைப்புணர்வு என்பதுவே”

என்னும் காரிகை (42) மேற்கூறியவாறு அடிக்கும் தொடைக்கும் உரிய இலக்கணத்தினை உணர்த்திற்று.

இக்காரிகையில் ‘இரணத் தொடைக்கும்’ என்னும் உம்மையால் ஏனைய மோனை, இயைபு, எதுகை, அளபெடை என்னும் தொடை நான்கிற்கும் மேற்கூறியவாறே ஒட்டிக் கொள்ளுதல் வேண்டும்.

கடைமோனை

கடையிணை மோனை

பின் மோனை

கடைக்கூழை மோனை

இடைப்புணர் மோனை எனவும், இது போன்று இயைபு, எதுகை, அளபெடை ஆகியவற்றிற்கும் அமைத்துக் கொள்க.  இவ்வகைகளுக்கு உரிய எடுத்துக்காட்டுகளை யாப்பருங்கல விருத்தியுள் கண்டு கொள்ளுதல் வேண்டும்.

வருக்க நெடிலினம் வந்தால் எதுகையு மோனையு மென்று

ஒருக்கப் பெயரா னுரைக்கப் படுமுயிர் ஆசிடையிட்டு

இருக்கு மொருசா ரிரண்டடி மூன்றா மெழுத்து மொன்றி

நிரக்கும் எதுகையென் றாலுஞ் சிறப்பில நேரிழையே.

என்னும் காரிகை (43) ஒருசார் எதுகைக்கும், மோனைக்கும் எய்தியதோர் இலக்கணத்தினை உணர்த்திற்று.

எதுகை மோனை

வருக்கலெழுத்தும், நெடிலெழுத்தும், இனவெழுத்தும், எதுகையும், மோனையுமாய் வந்தால், அவை வருக்க எதுகை, நெடிலெதுகை எனவும், வருக்க மோனை, நெடில் மோனை, இன மோனை எனவும் வழங்கப்படும்.

வருக்க எதுகை

அறத்தா றிதுவென வேண்டா சிவிகை

பொறுத்தானோ டூர்ந்தான் இடை.

இக்குறட்பாவில் முதற்சீர்களில் றகர மெய் இரண்டாம் எழுத்தாக வந்தமையால் இது றகர மெய் வருக்க எதுகையாகும்.

ஆவா வென்றே அஞ்சின ராழ்ந்தார் – ஒருசாரார்

கூகூ வென்றே கூவிளி கொண்டார் – ஒரு சாரார்

இவ்வடிகளில் முதற் சீர்களில் இரண்டாம் எழுத்துக்கள் நெட்டெழுத்துக்களாக வந்தமையால் நெடிலெதுகைத் தொடையாகும்.

தக்கார் தகவில ரென்ப தவரவர்

எச்சத்தாற் காணப் படும்.

இக்குறட்பாவில் முதற்சீர்களின் வல்லின மெய்கள் இரண்டாம் எழுத்துக்களாக நின்றமையால் வல்லின எதுகையாகும்.

அன்பீனும் ஆர்வ முடைமை அதுவீனும்

நண்பென்னும் நாடாச் சிறப்பு.

இக்குறட்பாவில் முதற்சீர்களின் மெல்லின மெய்கள் இரண்டாம் எழுத்துக்களாக நின்றமையால் மெல்லின எதுகையாகும்.

“எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்

பொய்யா விளக்கே விளக்கு”

இக்குறட்பாவில் முதற்சீர்களின் இரண்டாம் எழுத்துக்கள் இடையின மெய்களாக நின்றமையால் இடையின எதுகைத் தொடையாகும்.  இன எதுகைத் தொடை, வல்லினம், மெல்லினம், இடையினம் என்று மூன்று நிலைகளில் அமையும்.

வருக்க மோனை

பகலேபல் பூங்கானற் கிள்ளை யோப்பியும்

பாசிலைக் குளவியொடு கூதாளம் விரைஇப்

பின்னும் பிணியவிழ்த்த நன்னெடுங் கூந்தல்

பீர்ங்கப் பெய்து தேம்படத் திருகிப்.

என்னும் நேரிசையாசிரியப்பா அடிகளில் முதலெழுத்துக்கள் பகர மெய்களாக நிற்பதால், இது பகர மெய் வந்த வருக்க மோனையாகும்.

நெடில் மோனை

ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்

ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை.

இவ்வடிகளில் முதலெழுத்து ஒன்றாதாயினும் முதற்சீரின் முதலெழுத்துக்கள் நெட்டெழுத்துக்களாக உள்ளதால் நெடில் ஒப்புமைக் கருதி இது நெடில் மோனைத் தொடையாகும்.

இன மோனை

இன எதுகை போன்றே இம் மோனையும் வல்லின மோனை, மெல்லின மோனை, இடையின மோனை என மூவகைப்படும்.

"கயலே ருண்கண் கலுழ நாளும்

சுடர்புரை திருநுதல் பசலை பாயத்

திருந்திழை அமைத்தோள் அரும்படர் உழப்பப்

போகல் வாழி ஐய பூத்த

கொழுங்கொடி யணிமலர் தயங்கப்

பெருந்தண் வாடை வரூஉம் பொழுதே."

இச்செய்யுளில் எல்லாவடியும் முதற்கண்ணே வல்லெழுத்து வந்தமையான் வல்லின மோனையாகும். பிற இன மோனைகளை அவ்வாறே கண்டு கொள்ளுதல் வேண்டும்.

காரிகை நூற்பா 43இல் 'ஒருக்கப் பெயரான்' என்று சிறப்பித்தமையால் ஒரு சாரார் தலையாகு எதுகை, இடையாகு எதுகை, கடையாகு எதுகை என்றும் மோனையும் இம்மூன்று வகையில் அமையும் என்றும் வேண்டும் என உரையாசிரியர் குறிப்பிடுகின்றார்.

தலையாகு எதுகை

இரண்டாவது முதலிய எழுத்துக்கள் சீர் முழுவதும் தம்முள் ஒன்றி வருவதாகும்.

(எ.டு) இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்

பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

இக்குறட்பாவில் இருள்சேர், பொருள்சேர் என்பவற்றில் இரண்டாவது முதலிய எழுத்துக்கள் சீர் முழுவதும் ஒன்றி வந்தன.

இடையாகு எதுகை

இரண்டாம் எழுத்து மட்டும் தம்முள் ஒன்றி வருவதாகும்.

(எ.டு) அகர முதல எழுத்தெல்லாம் ஆதி

பகவன் முதற்றே உலகு.

இங்கு, அகர, பகவன் முதலியவற்றில் இரண்டாம் எழுத்துக்கள் தம்முள் ஒன்றி வந்தன.

கடையாகு எதுகை

இரண்டாம் எழுத்து, தம்முள் ஒன்றி வராமல் வருக்கம், நெடில், இனம் முதலியவாக அமைவதாகும்.

(எ.டு) தக்கார் தகவிலர் என்ப தவரவர்

எச்சத்தாற் காணப் படும்.

இக்குறட்பாவில், தக்கார், எச்சம் என்பவற்றில் இரண்டாம் எழுத்து ஒன்றி வராமலும் வல்லினமாக அமைந்துள்ளது.

தலையாகு மோனை

முதலாவது முதலிய எழுத்துக்கள் சீர் முழுவதும் ஒன்றி வருவது.

(எ.டு) பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு.

இடையாகு மோனை

ஒவ்வோரடியிலும் முதலெழுத்துக்கள் மட்டும் தம்முள் ஒத்து வருதல்.

(எ.டு) மாவும் புள்ளும் வதுவையிற் படர

மாநீர் விரிந்த பூவுங் கூம்ப

மாலை தொடுத்த கோதையுங் கமழ

மாலை வந்த வாடை.

கடையாகு மோனை

முதலெழுத்துக்கள் தம்முள் ஒத்து வராமல் வருக்கம், நெடில் முதலியவாக அமைதலாகும். இவ்வகைக்குரிய எடுத்துக்காட்டினை வருக்க மோனைத் தொடை வகையால் கண்டு கொள்க.

மேற்கூறியவை மட்டுமன்றி உயிரெதுகை, ஆசெதுகை, இடையீட்டெதுகை, இரண்டடியெதுகை,

மூன்றாமெழுத் தொன்றெதுகை என்னும் எதுகைகளும் உளவெனினும் அவை பெரியதோர் சிறப்பில்லாதவைகளாகும்.

உயிரெதுகை

துளியொடு மயங்கிய தூங்கிரு ணடுநாள்

அணிகிளர் தாரோ யருஞ்சுர நீந்தி

வடியமை எஃகம் வலன்வயின் ஏந்தித்

தனியே வருதி நீயெனில்

மையிருங் கூந்தல் உய்தலோ அரிதே.

இச்செய்யுளில் இரண்டாமெழுத்து ஒன்றாதாயினும் இரண்டாம் எழுத்தின் மேலேறிய உயிரொன்றி வந்தமையால் உயிரெதுகையாகும்.

ஆசெதுகை

ய, ர, ல, ழ என்னும் ஒற்று நான்கும் ஆசாய் வரும் எதுகை ஆசெதுகையாகும்.

“யரலழ வென்னும் ஈரிரண்டு ஒற்றும்

வரன்முறை பிறழாது வந்திடை உயிர்ப் பினஃது.

ஆசிடை எதுகையென்று அமைதல் வேண்டும் என்பர் காக்கைப்பாடினியார்.

“ஆவே றுருவின வாயினும் ஆபயந்த

பால்வே றுருவின அல்லவாம் – பால்போல்

ஒருதன்மைத் தாகும் அறநெறி ஆபோல்

உருபு பலகொள லிங்கு.”

இந்நேரிசை வெண்பாவில் ‘ஆவே’ என்பதற்குப் ‘பாவே’ என எதுகை ஒன்றி வர வேண்டியிருக்க, லகர மெய் ஆசாக நின்று பால்வே என வந்தமையால் இது லகர ஒற்றிடை வந்த ஆசெதுகையாகும். இவ்வாறே ய, ர, ழ எழுத்துகளுக்குரிய ஆசெதுகைகளையும் கண்டு கொள்ளுதல் வேண்டும்.

இடையிட்டு எதுகை

“தோடார் எல்வளை நெகிழ நாளும்

நெய்தல் உண்கண் பைதல கலுழ

வாடா அவ்வரி புதைஇப் பசலையும்

வைகல் தோறும் பைபயப் பெருகின

நீடா ரிவரென நீமனங் கொண்டார்.”

என்னும் பாடலடிகளில் அடிதோறும் இடையிட்டு வந்தமையால் இடையிட்டு எதுகையாகும்.

இரண்டடி எதுகை

“துவைக்குந் துளிமுந்நீர்க் கொற்கை மகளிர்

அவைப்பதம் பல்லிற் கழகொவ்வா முத்தம்

மணங்கமழ் தார் அச்சுதன் மண்காக்கும் வேலின்

அணங்கும் அமுதமும் அந்நலார் பாடல்.”

இச்செய்யுளில் முன் இரண்டடியும் ஓரெதுகையாகவும் பின் இரண்டடியும் ஓரெதுகையாகவும் வந்தமையால் இரண்டடி எதுகையாகும்.

இதுவரை எதுகைக்குக் கூறியதைப் போன்றே மோனைக்கும் பொருத்திப் பார்த்தல் வேண்டும்.

மூன்றாம் எழுத்தொன்றெதுகை

“பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த

நன்மை பயக்கு மெனின்.”

இக்குறட்பாவில் மூன்றாம் எழுத்துக்கள் ஒன்றி வந்துள்ளன.

காரிகையில் ‘நிற்கும் எதுகை’ என்று சிறப்பித்ததனால் விட்டிசை வல்லொற்றெதுகை என்றும் விட்டிசை மோனை என்றும் வேண்டுவாரும் உளர் என்று கூறுவர். இவை சிறப்பில்லாதவையாகும்.

5.2.2.2. செய்யுளியல் ஒழிபு

5.2.2.2.1 கலிப்பாவில் வரும் தரவு, தாழிசைகட்கு அடிவரையறை தரவு

5.2.2.2.2 ஒழிபியலில் உணர்த்தப்பட்ட யாப்பு உறுப்புக்கள்

விகாரம், வகையுளி, வாழ்த்து, வசை, வனப்பு, பொருள்கோள், குறிப்பிசை, ஒப்புமை, வண்ணம் முதலியன.

5.2.2.2.1 கலிப்பாவில் வரும் தரவு, தாழிசைகட்கு அடிவரையறை தரவு

அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாவும், வண்ணக் ஒத்தாழிசைக் கலிப்பாவும் ஆறடித் தரவால் அமையும் . இதனினும் பெருகியோ சுருங்கியோ அமையாது. அல்லாதக் கலிப்பாக்களுக்குத் தரவு மூன்றடியே. சிறுமை, பெருமை பாடுவோனது பொருள் முடிவுக் குறிப்பேயாகும்.

தாழிசை

தாழிசைகட்கு இரண்டடி சிறுமையாகவும் நான்கடி பெருமையாகவும் இடை மூன்றடியாகவும் வரும். நான்குக்கு மேல் தாழிசை வராது. அனைத்துக் கலிப்பாக்களிலும் தரவுக்குரிய அடிகளை விடத் தாழிசை அடிகள் குறைந்து வரல் வேண்டும் என்பது பொது விதியாகும்.

சுருங்கிற்று மூன்றடி யேனைத் தரவிரு மூன்றடியே

தரங்கக்கும் வண்ணகக் கும்தர வாவது தாழிசைப்பா

சுருங்கில் திரண்டடி யோக்க மிரட்டி தரும்மிருந்

தரங்கக் குழலாய் கருங்குந் தரவினிற் தாழிசையே. நூற்பா 44

இக்காரிகை தரவு, தாழிசைக்குரிய அடி வரையறையை உணர்த்தியது.

5.2.2.2.2 ஒழிபியலில் உணர்த்தப்பட்ட யாப்பு உறுப்புக்கள்

செய்யுட்கண் பொருளைத் தழுவி அடிமுதற்கண் நிற்பது கூன் எனப்படும். இது அசைக்கூன், வீரக்கூன், அடிக்கூன் என மூவகைப்படும். இவ் அசைக்கூன் வஞ்சிப்பாவின் நடுவிலும் இறுதியிலும் மட்டும் வரும். சீர்க்கூன் நால்வகைப் பாவிலும் அடிமுதற்கண் மட்டுமே வரும். ஓரடியே கூனாக வருதல் சிறுபான்மையாகும். அசைக்கூனையும், சீர்க்கூனையும் தனிச்சொல் என்றும் குறிப்பிடுவர். வெண்பாவில் இவ்வுறுப்பு முதல் அடியில் முதற்கண் நிற்கும்.

(எ.டு) உதுக்காண் சுரந்தாகை வண்கைச் சுவானமாப் பூதன்

பரந்தாரைப் பல்புகழைப் பாடி – யிரந்தார்மாட்டு

இன்மை அகல்வது போல இருள்நீங்க

மின்னும் அளிதேர் மழை.

இவ்வெண்பாவினுள் அடிமுதற்கண் உதுக்காண் எனக் கூன் வந்துள்ளதைக் காணலாம். ஆசிரியப்பாவின் அடிமுதற்கண் இவ்வுறுப்பு வரும். இவ்வாறே கலிப்பா, வஞ்சிப்பாக்களிலும் வரும்.

“உலகினுள்,

பெருந்தகையார் பெருந்தகைமை பிறழாவே பிறழினும்

இருந்தகைய இறுவரைமேல் எரிபோலச் சுடர்விடுமே

சிறுதகையார் சிறுதகைமை சிறப்பெனினும் பிறழ்வின்று

உறுதகைம உலகினுக்கோர் ஒப்பாகித் தோன்றாதே.

இத்தரவு கொச்சகக் கலிப்பாவில் அடிமுதற்கண் ‘உலகினுள்’ எனக் கூன் வந்தமையை அறிந்து கொள்ளலாம். வெண்பா, ஆசிரியம், கலிப்பா என்னும் இவற்றின் இடையிலும் இறுதியிலும் கூன் வரப்பெறாது எனக் கொள்ளுதல் வேண்டும்.

ஒழிபியலில் உணர்த்தப்பட்ட யாப்புறுப்புகள்

விகாரம், வகையுளி, வாழ்த்து, வசை, வனப்பு, பொருள், பொருள்கோள், குறிப்பிசை, செய்யுள், ஒப்புமை என்னும் ஒன்பது உறுப்புக்களும் உபதேச முறையான் உணர்தலென ஒழிபியலில் உணர்த்தப்பட்ட யாப்புறுப்புகளாகும்.

1. விகாரம்

செய்யுளின் சீர்க்கண் நின்ற எழுத்துக்கள் தளை, தொடை முதலியவை கெடாதிருக்க வேண்டி விகாரப்படுதலுண்டு. அவை வலித்தல், மெலித்தல், விரித்தல், தொடுத்தல், நீட்டல், குறுக்கல் எனபனவாகும்.

(எ.டு) குறுந்தாட் பூதம் சுமந்த

அறக்கதிர் அழியெம் அண்ணலைத் தாழினே.

இதனுள் ‘குறுந்தாள்’ என்பது குறுத்தாள் என வலித்தால் விகாரமாய் வந்துள்ளது.

“தண்டை யினக்கிளி கடிவோள்

பண்டைய லிள்ளள் மானோர்க் கினளே”

இதனுள், ‘தட்டை’ என்பது தண்டை என வந்துள்ளதால் மெலித்தல் விகாரமாகும். இதே போல மற்றைய விகாரங்கள் அமையும்.

வகையுளி

முன்னும் பின்னும் அசை முதலாகிய உறுப்புகள் நிற்புழி அறிந்து குற்றப்படாமல், அவ்வப்பாக்களுக்குரிய ஓசையைப் பெறச் செய்வது வகையுளியாகும்.

(எ.டு) கடியார்பூங் கோதை கடாயினன் திண்டேர்

சிறியார்தஞ் சிற்றில் சிதைத்து

இவ்வெண்பாவின் முதலடியில் ‘கடியார்’ எனவும் ‘பூங்கோதை’ எனவும் பிரித்தால் ஆசிரியத் தளையும் கலித்தளையும் வந்து வெண்பா இலக்கணத்துடன் மாறுபடும். எனவே, ‘கடியார் பூம்’ என்றும் ‘கோதை’ என்றும் கொண்டு வெண்சீர் வெண்டளையாகவும் இயற்சீர் வெண்டளையாகவும் கொள்ளுதல் வகையுளியாகும்.

வாழ்த்து

வாழ்த்து, மெய்வாழ்த்து, இருபுற வாழ்த்து என இரு வகைப்படும்.

கார்நறு நீலங் கடிக்கயத்து வைகலும்

நீர்நிலை நின்ற பயன் கொலே – கூர்நுனைவேல்

வண்டிருக்க நக்கதார் வாமன் வழுதியாள்

கொண்டிருக்கப் பெற்ற குணம்.

இது மெய் வாழ்த்தாகும்.

பண்டுமொருகால்தன் பைந்தொடியைக் கோட்பட்டு

வெங்கடத்து வில்லேற்றிக் கொண்குழந்தான் – தென்களந்தைப்

வாமான்கோ் வையையார் கோ.

இஃது இருபுற வாழ்த்தாகும்.

வசை

வசை, மெய்வசை, இருபுற வசை என இரண்டு வகைப்படும்.

தந்தையிலைச் சுமடன் றாய்தொழிலி தான் பார்ப்பான்

எந்தைக்கு இதுளங்ஙனம் பட்டதுகொல் – முந்தை

ஆவியுணவி னார்தெரியின் ஆவதாங் கொல்லோ

கவிக்கண்ண னார்தம் பிறப்பு.

இது மெய்வசை.

படையொடு போகாது நின்றெறிந்தான் என்றும்

கொடையொடு நல்லார்கண் தாழ்ந்தான் – படையொடு

பாடி வழங்கும் தெருவெல்லாம் தான்சென்று

கோடி வழங்கும் மகன்.

இஃதுஇருபுற வசை.

வனப்பு

அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என வனப்பு எட்டு வகைப்படும்.

“அம்மை யழகு தொன்மை தோல்விருந்த

தியைபு புலனிழை பெனவனப் பெட்டே” என்பர் தொல்காப்பியர்.

1. அம்மை

சிலவாய, மெல்லியவாய சொற்களால் ஒள்ளியவாய பொருள்மேல் சில அடியில் அமைவதாகும்.

(எ.டு) அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்

தன்னோய்போற் போற்றாக் கடை.

2. அழகு

செய்யுட் சொல்லாகிய திரிசொற்களால் ஓசை இனியதாகப் பாடப்படுவது.

துணியிரும் பௌவங் குறைய வாங்கி

அணிகிள ரடுக்கல் முற்றிய எழிலி

காலொடு மயங்கிய கனையிருள் நடுநாள்

யாங்குவந் தனையோ ஓங்கல் வெற்ப

நெடுவரை மருங்கில் பாம்பென இழிதரும்

கடுவரற் கலுழிந்தி

வல்லியம் வழங்கும் கல்லதர் நெறியே.

இச்செய்யுளுள், அடுக்கல், ஓங்கல், வெற்ப, நெடுவரை முதலிய மலை என்னும் ஒரு பொருளைக் குறிக்கின்ற பல சொற்களாகும். இவ்வாறு அமைவது அழகாகும்.

3. தொன்மை

பழையதாகிய நிகழ்ந்தவற்றால் பாடப்படுவது தொன்மையாகும்.

“தொன்மைதானே

உரையொடு புணர்ந்த பழமை மேற்றே” என்பர் தொல்காப்பியர்.

(எ.டு) மகாபாரதம், இராமாயணம்.

4. தோல்

‘இழும்’ என்னும் மென்மையாகிய சொற்களால் விழுமியவாய்க் கிடப்பனவும் எல்லாச் சொற்களாலும் பல வடிவாய்க் கிடப்பனவும் தோல் எனப்படும்.

பாயிருள் பரப்பகங் குறையப் பாம்பின்

ஆயிர மணிவிளக் கழலுஞ் சேக்கைக்

துணிதரு வெளிளத் துயில்புடை பெயர்க்கும்

ஒளியோன் காஞ்சி யெளிதெனக் கூறின்

இம்மை யில்லை மறுமை யில்லை

நன்மை யில்லை தீமை யில்லை

செய்வோ ரில்லை செய்பொரு ளில்லை

அறிவோர் யாரஃ திறுவுழி யிறுகென.

இப்பாடல் மார்க்கண்டேயனார் காஞ்சியாகும். இது இழுமெனும் மொழியில் விழுமியது நுவன்றது.

5. விருந்து

புதியனவற்றைப் பாடுவது விருந்து எனப்படும்.

“விருந்தே தானும்

புதுவது கிளந்த யாப்பின் மேற்றே”

என்பர் தொல்காப்பியர். இவ்விருந்து இப்பொழுது உள்ளாரைப் பாடுவதாகும்.

தற்காலத்தில் தோன்றும் புதிய இலக்கிய வகைகளை இதனுள் அடக்கிக் கொள்ளலாம்.

6. இயைபு

ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள என்னும் பதினோரு புள்ளிகளை ஈற்றெழுத்தாக வைத்துப் பாடப்படுவது இயைபு எனப்படும்.

(எ.டு) கற்றத னாலாய பயனென்கொல் வாலறிவன்

நற்றாள் தொழாஅ ரெனின்.

7. புலன்

இயற்சொல்லால் பொருள் தோன்றச் சொல்லப்படுவதாகும்.

குறவஞ்சி, பள்ளு, ஏற்றப்பாட்டு முதலியவற்றைச் சான்றாகக் குறிப்பிடலாம்.

8. இழைபு

வல்லொற்று யாதும் தீண்டாது, செய்யுளில் உடையாரால் எழுத்தெண்ணி அடி வகுக்கப்பட்ட குறளடி முதலாகப் பதினேழ் வகை ஐந்தடியும் முறையானே உடைத்தாய் ஓங்கிய சொற்களால் வருவதாகும்.

நான்கு எழுத்து முதல் ஆறு எழுத்து வரை குறளடி என்றும், ஏழு எழுத்து முதல் ஒன்பது எழுத்து வரை சிந்தடி என்றும், பத்து எழுத்து முதல் பதினான்கு எழுத்து வரை அளவடி என்றும் அழைக்கப் பெறும். அதேபோல் பதினைந்து எழுத்து மேல் பதினேழு எழுத்து வரை நெடிலடி என்றும் பதினெட்டு எழுத்து முதல் இருபது எழுத்து வரை உயர்ந்த மூன்றடியும் கழிநெடிலடி என்றும் செய்யுளியலார் கூறுவர்.

மேற்கூறிய வரையறையுடன் பொருந்தி வரும் பாடல்கள் இழைபு என்னும் வனப்பாகும்.

ஒழிபியலில் இரண்டாம் பகுதியாய் எல்லா நூலுக்கும் பொதுவான செய்திகள் இடம் பெற்றுள்ளன.

நூல் முதல், வழி, சார்பு என்னும் மூன்று வகைகளில் அமையும். நூலின் பயனாக அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கின் உறுதிப் பொருளை உணர்த்துவதாகும். உடன்படல், மறுத்தல், பிறர்மதம் மேற்கொண்டு களைதல், தாஅனாட்டித் தனாது நிறுத்தல், இருவர் மாறுகோள் ஒருதலைத் துணிதல், பிறர் நூல் குற்றம் காட்டல், பிறிதொடு படாஅன் தன் மதம் கொளல் என்னும் எழு வகை ஆசிரியர் மத விகற்பத்த தாய் குன்றக்கூறல், மிகைபடக்கூறல் முதலிய பத்து வகைக் குற்றங்களின்றி சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல் முதலான பத்து அழகுகளைப் பெற்று சூத்திரந் தோற்றல், சொல் வகுத்தல் முதலான பதின்மூன்று வகையான உரைகளைப் பெற்று நுதுலிப் புகுதல், ஓத்து முறைவைப்பு, தொகுத்துச் சுட்டத் தொடங்கி உய்த்துணர வைப்பு என முடியும் முப்பத்திரண்டு தந்திர உத்தியோடும் அமைப்பது நூலாகும். இந்நூல் பற்றிய செய்திகள் நன்னூல் பொதுப் பாயிரத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அப்பகுதியில் கண்டு தெளிக.

பொருள்கோள்

செய்யுளில் அமையும் சொற்கள் தொடர்ந்து பொருளுணர்த்தும் நிலையைப் பொருள்கோள் என்பர். இது ஒன்பது வகைப்படும். அவை முறையே, நிரல்நிறை மொழிமாற்று, சுண்ண மொழிமாற்று, அடிமறி மொழிமாற்று, அடிமொழிமாற்று, பூட்டுவில் பொருள்கோள், புனல்யாற்றுப் பொருள்கோள், அளைமறியாப்புப் பொருள்கோள், தாப்பிசைப் பொருள்கோள் என்பனவாகும்.

1. நிரல்நிறை மொழிமொற்று

நிரல் என்பது வரிசையாகும். வரிசையாக நின்று பொருள் கொள்வது நிரல்நிறைப் பொருள்கோளாகும். இது பெயர் நிரல்நிறை, வினை நிரல்நிறை என்று இரண்டு வகைப்படும்.

2. சுண்ணமொழிமாற்று

செய்யுளில் உள்ள சொற்களைச் சுண்ணம் போல் பிரித்தெடுத்து முன்னும் பின்னும் பொருள் நோக்கிச் சேர்த்துப் பொருள் கொள்ளுவது.

3. அடிமறி மொழிமாற்று

செய்யுளின் அடிகளை மாற்றியமைத்தாலும், அச்செய்யுளின் ஓசையும் பொருளும் பிழையாது வருவது.

4. அடிமொழிமாற்று

இரண்டு அடிகளைக் கொண்ட பாடலைப் பிரித்து, மாற்றியமைத்துப் பொருள் கொள்ளுவது.

(எ.டு) ஆலத்துமேல குவளை குளத்துள

வாலி னெடிய குரங்கு.

இதனை, “ஆலத்துமேல வாலி னெடிய குரங்கு” எனவும், “குவளை குளத்துள” எனப் பொருளுக்கு ஏற்றவாறு மாற்றியமைத்துக் கொள்ளுதல் வேண்டும். இப் பொருள்கோள் நன்னூலில் கூறப்படாதது ஆகும்.

5. பூட்டுவிற் பொருள்கோள்

ஒரு செய்யுளின் முதற்சொல்லும் இறுதிச்சொல்லும் அச்செய்யுளில் உள்ள மற்றைய சொற்களின் பொருளைப் பூட்டி நிற்பது.

6. புனல்யாற்றுப் பொருள்கோள்

ஆற்றின் நீரொழுக்கைப் போன்று அடிதோறும் பொருள் விட்டு விட்டுப் பொருள் கொள்ளுவது புனல்யாற்றுப் பொருள்கோளாகும்.

7. அளைமறியாப்புப் பொருள்கோள்

புற்றிலே தலை வைத்து மடங்கிப் படுத்துக் கொண்டிருக்கும் பாம்பினைப் போன்று செய்யுளின் இறுதியில் நின்ற சொல் இடையிலும் முதலிலும் சென்று பொருள் கொள்ளுதல்.

8. தாப்பிசை

தாம்புக் கயிறால் கட்டப்பட்ட ஓர் ஊஞ்சல் இரு பக்கங்களிலும் சென்று வருவதைப் போல், பாடலின் இடையில் நின்ற சொல் இரு பக்கங்களிலும் சென்று பொருள் கொள்ளுதல்.

9. கொண்டுகூட்டுப் பொருள்கோள்

ஒரு செய்யுளில் பல அடிகள், பல சொற்கள் இருப்பினும் ஏற்ற சொற்களை அதற்கேற்ற சொற்களுடன் கொண்டு கூட்டிப் பொருள் கொள்ளுவது.

இங்கு மேற்கூறிய ஒன்பது வகைப் பொருள்கோளில் அடிமொழிமாற்றுப் பொருள்கோளைத் தவிர மற்ற வகைகளுக்கு உரிய எடுத்துக்காட்டுகளை நன்னூல் சொல்லதிகாரம் பொதுவியலில் கண்டு கொள்க.

குறிப்பிசை

எழுத்தில்லாத ஓசையால் வரும் முக்குதல், சீட்டி அடித்தல், குறிப்பொலி முதலியன செய்யுளில் வந்தால், அவற்றையும் செய்யுள் நடை சிதையாமல் அசை, சீர், அடி, தொடை ஆகியன பிழையாமல் அலகிட்டு வழங்கப்படுவது குறிப்பிசையாகும்.

(எ.டு) மன்றலங் கொன்றை மலர்மிலைந்து உஃது அஃது

என்று திரியும் இடைமகனே – சென்று

மறியாட்டை உண்ணாமை வன்கையால் வல்லே

அறியாயோ வண்ணாக்கு மாறு.

என்னும் நேரிசை வெண்பாவில் அஃகு வஃகு என்பது குறிப்பிசையாகும்.

ஒப்பு

முன்னர்க் கூறப்பட்டுள்ள சீர், தளை, அடி, பா, பாவினம் ஆகியவை சொன்ன இலக்கணத்தில் திரிந்தும், மிக்கும் குறைந்தும் வரினும் அவற்றை ஒருபுடை ஒப்புமை நோக்கி அவ்வச் செய்யுட்களின் பகுதியில் அடக்கி அப்பெயரிட்டு வழங்குவர்.

(எ.டு) கோழியுங் கூவின குக்கில் குரல்காட்டும்

தாழியுள் நீலத் தடங்கணீர் போதுமினோ

ஆழிசூழ் வையத்தெம் அண்ணல் அடியேத்திக்

கூழை நனையக் குடைந்தும் குளிர்புனல்

ஊழியு மன்னுவாம் என்றேலோ ரெம்பாவாய்.

இச்செய்யுள் ஐந்தடியால் அமையினும் ஒருபுடை ஒப்புமை நோக்கிக் கலிவிருத்தத்தின் பாற்படுத்து வழங்கப்படும். இதனைத் தரவு கொச்சகக் கலிப்பா எனினும் தவறில்லை.

வண்ணம்

இது ஓசையைக் குறிக்கும். இவ் வண்ணங்கள் நூறு ஆகும்.

தூங்கிசை வண்ணம், ஏந்திசை வண்ணம், அடுக்கிசை வண்ணம், பிரிந்திசை வண்ணம், மயங்கிசை வண்ணம் என்னும் ஐந்தினை முதலாகவும், அகவல், ஒழுகிசை, வல்லிசை, மெல்லிசை என்னும் நான்கு வண்ணங்களை இடையாகவும் வைத்து, குறில், நெடில், வல்லிசை, மெல்லிசை, இடையிசை என்னும் ஐந்து வண்ணத்தையும் கடையாக வைத்துக் கூட்டி உறழ நூறு வண்ணங்கள் அமையும்.

தூங்கிசை வண்ணம்

குறிலகவல் தூங்கிசை, நெடிலகவல் தூங்கிசை, வலியகவல் தூங்கிசை, மெலியகவல் தூங்கிசை, இடையகவல் தூங்கிசை என்றவாறு இவ் வண்ணங்கள் அமையும். இதேபோன்று ஒழுகல், வல்லிசை, மெல்லிசை என்னும் மூன்றினையும் சேர்க்க தூங்கிசை வண்ணம் இருபதாக அமையும்.

இந்நிலை போன்றே ஏந்திசை, அடுக்கிசை, பிரிந்திசை, மயங்கிசை ஆகியவற்றிற்கும் அமையின் இவ்வகை வண்ணங்களின் விரிவு நூறாக அமையும்.

தொல்காப்பியர் வண்ணத்தை இருபது எனக் கூறியுள்ளார். 'வண்ணந்தானே நாலைந்தென்ப' என்று குறிப்பிட்டு அவற்றின் வகைகளையும் இலக்கணங்களையும் கூறியுள்ளார். அவற்றைப் பற்றி தொல்காப்பியத்திலும் யாப்பருங்கல விருத்தியிலும் கண்டு கொள்ளுதல் வேண்டும்.

புனைந்துரை

ஒரு பொருளின் அமைப்பை அதன் இயல்பிற்கு மேல் பெரியதனைச் சுருக்கிச் சொல்லுதலும் சிறியதனைப் பெருக்கிச் சொல்லுதலும் புனைந்துரையாகும்.

அடையார் பூங்கோதைக் கல்குலும் தோன்றும்

புடையார் வனமுலையும் தோன்றும் – இடையாதும்

கண்டு கொள்ளா தாயினும் காரிகை நீர்மையாட்கு

உண்டாக வேண்டு நுகப்பு.

இது பெரியதனைச் சுருக்கிய புனைந்துரையாகும்.

அடியின்றி நடப்பன

பாட்டு, நூல், மந்திரம், பிசி, முதுசொல், அங்கதம், வாழ்த்து என்னும் ஏழும் அடிவரையறையின்றி

ஓரடியானும் பலவடியானும் நடப்பவையாகும்.

"அவைதாம்

பாட்டுரை நூலே மந்திரம் பிசியே

முதுசொல் அங்கதம் வாழ்த்தொடு பிறவும்

ஆகுக என்ப அறிந்திசினோரே."

என்னும் தொல்காப்பிய நூற்பா அடியின்றி நடப்பன பற்றிய வகைகளைக் குறிப்பிடுகிறது.

எழுத்துப் பதின்மூன் றிரண்டசை சீர்முப் தேழ்தளைய

இழுக்கி லடிதொடை நாற்பதின் மூன்றைந்து பாவினமுன்

றொழுக்கிய வண்ணங்கள் நூறொன்பது ஒண்பொருள் கோளிருமூ

வழக்கில் விகாரம் வனப்பெட்டியாப்புள் வகுத்தனவே.

இக்காரிகை நூற்பா (46) யாப்பருங்காரிகையில் இதுவரை வகுத்த பொருளையெல்லாம் தொகுத்து உணர்த்தியது.

1. எழுத்து – பதின்மூன்று. அவை குற்றெழுத்து, நெட்டெழுத்து, உயிரெழுத்து, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக் குறுக்கம், ஆய்தம், மெய்யெழுத்து, வல்லினம், மெல்லினம், இடையினம், உயிர்மெய், அளபெடை ஆகியன.

2. அசை – இரண்டு. அவை, நேரசை, நிரையசை.

3. சீர் – முப்பது. ஈரசைச்சீர் நான்கும் மூவசைச் சீர் எட்டும், நாலசைச் சீர் பதினாறும், ஓரசைச் சீர் இரண்டும் சேர்த்து முப்பது சீராகும்.

4, தளை – ஏழு. அவை, நேரொன்றாசிரியத் தளை, நிரையொன்றாசிரியத் தளை, இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை, ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றாத வஞ்சித்தளை, கலித்தளை ஆகியன.

5. அடி – ஐந்து. அவை, குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி ஆகியன.

6. தொடை – நாற்பத்து மூன்று. அவை, அடிமோனை, அடிஎதுகை, அடிமுரண், அடியியைபு, அடியளபெடை, அந்தாதித்தொடை, இரட்டைத்தொடை, செந்தொடை என்னும் எண்வகைத் தொடையும் இணைமோனை முதலாகிய முப்பத்தைந்து தொடை விகற்பமும் சேர்ந்து தொடை நாற்பத்தி மூன்றாகும்.

7. பாவகை – ஐந்து. அவை, வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா ஆகியன.

8. பாவினம் – மூன்று. அவை, தாழிசை, துறை, விருத்தம்.

9. ஒழுக்கிய வண்ணம் – நூறு. குறிலகவல் தூங்கிசை வண்ணம் முதலாகக் கூறப்பட்ட நூறு வண்ணங்கள்.

10. இருமூ வழக்கில் விகாரம் – வலிக்கும் வழி வலித்தல் முதலியன.

11. வனப்பு – எட்டு. அவை, அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு ஆகியன.

மேற்கூறிய காரிகையில் “ஐந்திழுக்கிலடி” என்று சிறப்பித்ததனால், திணை வழுவும், பால் வழுவும், மரபு வழுவும், வினா வழுவும், விடை வழுவும் ஆகும்.

‘வழக்கில் விகாரம்’ என்று சிறப்பித்ததனால் எழுத்துக் குற்றம், சொல் குற்றம், பொருட் குற்றம், யாப்புக் குற்றம், அலங்காரக் குற்றம், ஆனந்தக் குற்றம் என்னும் ஆறு குற்றமும் புணர்க்கப்படும் செய்யுட்கள் எனக் கொள்ளுதல் வேண்டும்.

மேற்கூறிய ஆறு குற்றங்களில் எழுத்து முதலிய ஐந்தையும் அவ்வவ் இலக்கண நூல்களில் கண்டு கொள்ளுதல் வேண்டும். இக்காரிகை நூலில் ஆனந்தக் குற்றம் பற்றிய செய்திகள் கூறப்படுகின்றன.

ஆனந்தக் குற்றம்

செய்யுளில் எழுத்து, சொல், பொருள், யாப்பு முதலியன திரிந்து வருதல் ஆனந்தக் குற்றமாகும்.

“எழுத்துநிலை திரிந்த எழுத்து ஆநந்தமும்

சொல்நிலை திரிந்த சொல் ஆநந்தமும்

பொருள்நிலை திரிந்த பொருள் ஆநந்தமும்

யாப்புநிலை திரிந்த யாப்பு ஆநந்தமும்

நடைபெறு புலவர் நாட்டின ரவையே.”

என்பது ஆனந்தக் குற்றத்தின் இலக்கணத்தையும் வகைப்பாட்டினையும் எடுத்துரைக்கிறது.

எழுத்தாநந்தம்

ஆழி இழைப்பப் பகல்போம் இரவெல்லாம்

தோழி துணையாத் துயர்தீரும் – வாழி

நறுமாலை தாராய் திரையவொஓ என்னுஞ்

செறுமாலை சென்றடைந்த போது.

இந்நேரிசை வெண்பாவில் ‘திரையவோஓ’ என்று இயற்பெயரைச் சார்ந்து அளபெழுந்தமையால் எழுத்தாநந்தம் ஆகும்.

சொல்லாநந்தம்

என்னிற் பொலிந்தது என்றெண்ணிச்

தன்னிற் குறைபடுப்பான் தண்மதியம் – மின்மினி

விரிந்திலங்கு வெண்குடைச் செங்கோல் விசயன்

எரிந்திலங்கு வேலின் எழும்.

இந்நேரிசை வெண்பாவில், தலைமகன் மேல் ‘எரிந்தது’ என்னும் சொல் புணர்ந்தமையால் சொல்லாநந்தம் ஆகும்.

பொருளானந்தம், யாப்பாநந்தம் ஆகியவற்றையும் வந்த வழிக் கண்டு கொள்ளுதல் வேண்டும்.

இறப்ப உயர்ந்த ஆநந்த உவமை

இழிந்த பொருளை உயர்ந்த பொருளுடன் உவமைப்படுத்துவது.

“இந்திரனே போலும் இளஞ்சாத்தன் சாத்தற்கு

மந்தரமே போன்றிலங்கு மல்லாகம் – மந்தரத்தில்

தாழருவி போன்றுளது தார்மாலை அம்மாலை

ஏழுலகும் நாறும் இணர்.”

இந்நேரிசை வெண்பாவில், சாத்தன் என்னும் கீழ்மகனை அரசரை உவமித்தாற் போல உவமித்தமையால், இறப்ப உயர்ந்த ஆநந்த உவமையாகும்.

இழிந்த ஆநந்த உவமை

உயர்ந்த பொருளுடன் இழிந்த பொருளை உவமைப்படுத்துவது.

“வள்ளையிற்றுப் பேழ்வாய் ஞமலிக்கு மான்குழாம்

எள்ளி இரிந்தாற்போல் எவ்வழியும் – வள்ளற்கு

மாலார் கடலன்ன மண்பரந்த வாட்டாளை

மேலாரு மேலார் விரைந்து.”

இந்நேரிசை வெண்பாவில், புலியினோடு உவமிக்கப்படுகின்ற தலைமகனாகிய வீரனோடு நாயை உவமித்தமையால், இறப்ப இழிந்த ஆநந்த உவமையாகும்.

“இறப்ப இழிந்ததும் இறப்ப உயர்ந்ததும்

அறத்தகை வழீஇய ஆநந்த உவமை”

என்று குறிப்பிடுவர்.

அலங்காரக் குற்றம்

செய்யுளில் உவமைக்கு மேலும் உவமை கூறுவது அலங்காரக் குற்றமாகும்.

“உவமைக்கு உவமை இல்லென மொழிப” என்று கூறுவர்.

(எ.டு) வெண்டிங்கள் போன்றிலங்கு வெண்சங்கு சங்கனைய

வண்டிலங்கு தாழை வளர்தோடு – விண்டெங்கும்

கள்ளாவி நாறும் கருங்கழிசூழ் கானகத்தெம்

உள்ளாவி வாட்டும் உரு.

இந்நேரிசை வெண்பாவில் வெண்திங்கள் போலும் சங்கு, சங்கு போலும் தாழைப்பூ என்று உவமைக்கு உவமை சொன்னமையால், அடுத்துவரல் உவமை என்னும் அலங்காரக் குற்றமாகும்.

எல்லாக் குற்றமும் தீர்ந்த செய்யுள்

தாமரை புரையுங் காமர் சேவடிப்

பவளத் தன்ன மேனித் திகழொளிக்

குன்றி ஏய்க்கும் உடுக்கைக் குன்றின்

நெஞ்சுபக எறிந்த செஞ்சுடர் நெடுவேல்

சேவலங் கொடியோன் காப்ப

ஏம வைகல் எய்தின்றா லுலகே.

பிற்சேர்க்கை

கலிப்பாவின் இனங்களான கட்டளைக் கலிப்பா, கட்டளைக் கலித்துறை முதலியவை கலிப்பாவின் இனங்களைக் கூறும் செய்யுளியல் பகுதியில் இடம்பெறவில்லை. பிற்காலத்தே வழங்கப்பெற்ற இவ்விரண்டிற்கும் இலக்கணம் கூறும் முகமாய் இப்பிற்சேர்க்கைப் பகுதி அமைந்துள்ளது.

கட்டளைக் கலிப்பா

முதற்சீர் மாச்சீரும் பின் மூன்று சீரும் கூடிய அரையடியும், அவ்வாறே பின்வரும் நான்கு சீர் கூடியது அரையுடியுமாக அமைந்த வெண்சீரடி நான்குடையதாய் முதலசை நேரசையாயும், அரையடிக்கு எழுத்து பதினொன்றாயும் நிரையசையாயின் பன்னிரண்டும் பெற்று ஏகாரத்தால் முடிவது கட்டளைக் கலிப்பாவாகும். இது எழுத்து அளவைப் பெறுதலால் கட்டளைக் கலிப்பா எனப்பட்டது.

(எ.டு)

இல்லை யென்ப திலையோர் மருங்கிலே

எவ்வ றங்களும் உண்டோர் மருங்கிலே

கொல்லு கின்றது எழுதருங் கூற்றமே

கூறு மாற்றம் எழுதருங் கூற்றமே

வில்லுமேற்றிடு நாணும் பொன் னாகமே

விடுகணைக் குண்டு நாணும்பொன் னாகமே

மல்லன் மார்பின் மணிமுத்த மென்பதே

வாச மையர்க்கு அவிமுத்த மென்பதே

"படுத்த பாயுட னேபிணி மூழ்கினும்

பல்விழுந்து நரைத்தற மூப்பினும்

அடுத்தது இங்கிவர்க் கேபெரு வாழ்வெனும்

அப்பெ ரும்பதி எப்பதி என்பிரேல்

விடுத்து விட்டுஇந் திரதிரு வும்புவி

வெண்கு டைக்குள் இடுமர சாட்சியும்

கடுத்த தும்புகள் அந்தரைத் தேடுவார்

காத லித்துவ ரும்திருக் காசியே. (காசிக்கலம்பகம்)

கட்டளைக் கலித்துறை

ஐஞ்சீரடி நான்காய் ஒவ்வோரடியிலும் முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாமல் இருக்க இறுதிச்சீர் கூவிளங்காய், கருவிளங்காய் என்பனவற்றுள் ஒன்றாகப் பெற்று முதற்சீரின் முதலசை நேராயும், ஓரடிக்கு எழுத்து பதினாறும், நிரையாயின் பதினேழும் உடைத்தாய் ஏகாரத்தான் முடிவது கட்டளைக் கலித்துறையாகும். இது எழுத்தளவைப் பெறுதலால் பெற்ற பெயராகும். இக்கட்டளைக் கலித்துறைக்குக் கோவைக் கலித்துறை, திலகக் கலித்துறை முதலான வேறு பெயர்களும் உண்டு. அப்பர் திருவிருத்தமும், நம்மாழ்வார் திருவிருத்தமும் இச்செய்யுள் வகைக்குச் சான்றாகும்.

"அடியடி தோறும் ஐஞ்சீ ராகி

முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாக்

கடையொரு சீரும் விளங்கா யாகி

நேர்பதி னாறே நிரைபதி னேழென்று

ஓதினர் கலித்துறை ஓரடிச் கெழுத்தே."

என்னும் செய்யுள் கட்டளைக் கலித்துறைக்குரிய இலக்கணத்தினைக் கூறியது.

(எ.டு)

அற்றாரைத் தாங்கிய வைவேல் அசதி அணிவரைமேன்

முற்றா முகிழ்முலை எவ்வாறு சென்றனள் முத்தமிழ் நூல்

கற்றார் பிரிவும்கல் லாதார் இணக்கமுங் கைப்பொருளொன்று

அற்றார் இளமையும் போலக் கொதிக்கும் அருஞ்சுரமே. (அசதிக்கோவை)

கரும்பஞ் சுரும்புஞ் அரும்பும் பொருபடைக் காமர்வில்வேள்

இரும்பும் கரைந்துரு கச் செய்யு மால்இறும் பூதுஇதுஅன்றே

விரும்பும் பெரும்புலி யூர்எம்பி ரானருள் மேவிலொரு

துரும்பும் படைத்தழிக் கும்அகி லாண்டத் தொகுதியையே. (சிதம்பரச் செய்யுட்கோவை)

மேற்கூறிய செய்யுட்களில் கட்டளைக்கலித்துறை பயின்று வந்துள்ளமையை அறிய முடிகின்றது.

தன்மதிப்பீட்டு வினாக்கள்

1. எண்வகை வனப்புகள் யாவை?

2. காரிகையில் கூறப்பட்ட பொருள்கள் ........

3. ஒரு பொருளின் அமைப்பை இயற்கையளவுக்கு மேல் சுருக்கியோ, பெருக்கியோ கூறுவதற்கு ............. என்று பெயர்.

4. உறுப்பியல், செய்யுளியலில் கூறாது ஒழிந்தவைகளைக் கூறும் பகுதி எது?

தொகுப்புரை

உறுப்பியலிலும் செய்யுளியலிலும் கூறாது ஒழிந்த செய்திகள் இவ்வியலில் கூறப்பெற்றன. முதலில் 'உறுப்பியல் ஒழிபு' என்னும் பிரிவில் எழுத்துக்களின் ஒழிபு, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகியன பற்றிய செய்திகள் உறுப்பியலில் கூறாது ஒழிந்தவை இப்பகுதியில் கூறப்பட்டுள்ளன.

ஒழிபியலில் இரண்டாம் இயலான 'செய்யுளியல் ஒழிபு' என்னும் பகுதியில் செய்யுளியலில் கூறாது ஒழிந்த செய்திகள் கூறப்பட்டுள்ளன. இவ்வியலில் விகாரம், வகையுளி, வாழ்த்து, வசை, வனப்பு, பொருள், பொருள்கோள், குறிப்பிசை, செய்யுள், ஒப்புமை என்னும் ஒன்பது உறுப்புக்களின் செய்திகள் ஒழிபியலில் கூறப்பட்டுள்ளன.

ஒழிபியலின் இறுதிப்பகுதி உறுப்பியல், செய்யுளியலில் கூறப்பட்ட செய்யுளின் சுருக்கக் குறியீடாக அமைந்துள்ளமையை அறிந்து கொள்ள முடிந்தது.

பயிற்சி வினாக்கள்

சிறு வினாக்கள்

1. சீர் சிதைவுழிக் குற்றியலிகரம் அலகு பெறாமைக்கு உதாரணம் தருக.

2. உயிரளபெடை அலகு பெறாமைக்கு உதாரணம் தந்து விளக்குக.

3. "குழலினி தியாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்" – இதனை அலகிட்டு பொருந்துமாற்றை விளக்குக.

4. தரவு, தாழிசைக்கு அடிவரையறையுமாறு உணர்த்தும் காரிகையை எழுதுக.

5. கலிப்பாவிலும் ஆசிரியப்பாவிலும் ஐஞ்சீரடி வருவதற்கு உதாரணம் தருக.

6. கூன் என்றால் என்ன? நிற்கும் இடங்களைப் பட்டியலிடுக.

7. வகையுளி என்பது யாது? எடுத்துக்காட்டு தருக.

8. ஆநந்தக் குற்றம் என்றால் என்ன? அதன் வகைகளை எடுத்தெழுதுக.

9. வனப்பு என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

10. பூட்டுவிற் பொருள்கோள் என்றால் என்ன?

11. அடிமொழிமாற்றுப் பொருள்கோள் என்றால் என்ன?

12. புனைந்துரை என்பது யாது?

குறு வினாக்கள்

1. ஒருசார் எழுத்துகட்கு உரிய ஒழிபிலக்கணத்தைச் சான்றுகளுடன் விளக்குக.

2. அடிமயக்கம் பற்றி ஒழிபியலில் கூறப்படுவன யாவை?

3. அடி வரையறையில்லாத பாவகைகள் யாவை?

4. தரவு, தாழிசைகட்குரிய அடிவரையறைகளைக் குறிப்பிடுக.

5. விட்டிசைத்தல் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.

6. குறிப்பிசை, ஒப்பு – விளக்குக.

7. செய்யுட்கு ஆகாத குற்றங்கள் யாவை?

8. இடையாகு எதுகை, ஆசெதுகை – விளக்குக.

பெரு வினாக்கள்

1. ஒழிபியலில் ஒருசார் அசைகட்கு உணர்த்தப்படும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

2. சீர், தளைகளின் ஒழிபு குறித்த செய்திகளைக் காரிகையாசிரியர் எங்ஙனம் எடுத்துரைக்கிறார்?

3. எண்வகை வனப்புகளைக் காரிகை ஆசிரியர் கூறுவதைச் சான்றுகளுடன் எடுத்துரைக்க.

4. வண்ணம் என்பதை வரையறுத்து, அதன் வகைகளைத் தொகுத்துரைக்க.

5. நூலிற்கு அமையும் அழகுகள், உத்திகள் ஆகியவற்றைத் தொகுத்துரைக்க.

6. பொருள்கோள் என்பது யாது? அதன் வகைகளை விளக்கியுரைக்க.

தன்மதிப்பீட்டு விடைகள்

1. அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு.

2. ஒன்பது.

3. புனைந்துரை.

4. ஒழிபியல்.

மாதிரி வினாத்தாள் – I

பி.ஏ. தமிழ் (முதலாமாண்டு) – நன்னூல், யாப்பருங்கலக்காரிகை

காலம் : 3 மணி மொத்த மதிப்பெண்கள் : 100

பகுதி – அ (10X2 = 20)

பின்வரும் வினாக்களுக்கு 50 சொற்களில் விடை தருக.

1. பாயிரத்தின் வகைகளைக் கூறி, அப்பாயிரத்தின் வேறு பெயர்களைப் பட்டியலிடுக.

2. நல்லாசிரியன் இலக்கணம் யாது?

3. பகுபதம், பகாப்பதம் வரையறுக்க.

4. உடம்படுமெய் எழுத்துக்கள் யாவை? விளக்குக.

5. திரிசொல் இலக்கணம் பற்றி எழுதுக.

6. 'ஆறும் தருவது வினையே'. – அவ் ஆறு யாவை?

7. அசை என்பதனை வரையறுத்து, அதன் வகைகளை எடுத்தெழுதுக.

8. ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றாத வஞ்சித்தளை இலக்கணம் கூறுக.

9. பாக்களின் வகைகளையும் அவற்றிற்குரிய ஓசைகளையும் எடுத்தெழுதுக.

10. ஆநந்தக் குற்றம் என்றால் என்ன? அதன் வகைகளை எடுத்தெழுதுக.

பகுதி – ஆ (5 X 4 = 20)

பின்வரும் வினாக்களுக்கு 200 சொற்களில் விடை தருக.

11. மூவகை நூல்கள் யாவை? விளக்கம் தருக.

(அல்லது)

நல்லாசிரியரின் இலக்கணத்தை எடுத்துரைக்க.

12. "தனிநிலை பத்தும் சார்பெழுத்தாகும்" – இதனை விளக்கியுரைக்க.

(அல்லது)

காலம் காட்டும் இடை நிலைகளை விளக்குக.

13. வேற்றுமையின் இலக்கணம் கூறி, அதன் வகைகளை விளக்குக.

(அல்லது)

உரிச்சொல்லின் இலக்கணம் யாது? அதன் வகைப்பாடுகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

14. தளை எத்தனை வகைப்படும்? அவற்றின் பெயர்களைக் கூறி, மூன்றினை விளக்குக.

(அல்லது)

அசைக்கு உறுப்பாவன யாவை? அவற்றுள் நான்கினை விளக்கியுரைக்க.

15. ஆசிரியப்பாவின் இலக்கணத்தைக் கூறி, அதன் வகைகளை விளக்குக.

(அல்லது)

வனப்பு என்பது யாது? அதன் வகைகளை விளக்குக.

பகுதி – இ (5 X 12 = 60)

பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடை தருக.

16. நூலில் அமையும் மதங்கள், அழகுகள், அமையக்கூடாத குற்றங்கள் ஆகியவற்றை விளக்கியுரைக்க.

(அல்லது)

மாணாக்கர் பாடம் கேட்கும் முறையும், நூலைப் பயிலும் முறையும் பற்றி நன்னூல் பொதுப்பாயிரம் எவ்வாறு எடுத்துரைக்கிறது?

17. மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள், இறுதியில் வரும் எழுத்துக்கள் ஆகியவற்றை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

(அல்லது)

உயிரீற்றுப் புணரியலில் குற்றுகரவீற்றுச் சிறப்பு விதிகளைக் கூறி, எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

18. ஆகுபெயரின் இலக்கணம் யாது? அதன் வகைகளை எடுத்துக்காட்டுகளுடன் பட்டியலிடுக.

(அல்லது)

பொருள்கோள் என்பது யாது? அதன் வகைப்பாடுகளைத் தொகுத்துரைக்க.

19. தொடை என்பதை வரையறுத்து, அதன் வகைப்பாடுகளையும் விகற்பங்களையும் விளக்கியுரைக்க.

(அல்லது)

சீர்களின் வகைகளையும் அவற்றின் பெயர்களையும் சான்றுகளுடன் எடுத்துரைக்க.

20. வெண்பாவின் இலக்கணம் கூறி, அதன் வகைப்பாடுகளைச் சான்றுகளுடன் விளக்குக.

(அல்லது)

மருட்பாவின் இலக்கணத்தைத் தருக. அது எவ்வெவ் பொருளில் வரும்?

மாதிரி வினாத்தாள் – II.

பி.ஏ. தமிழ் (முதலாமாண்டு) – நன்னூல், யாப்பருங்கலக்காரிகை

காலம் : 3 மணி மொத்த மதிப்பெண்கள் : 100

பகுதி – அ (10 X 2 = 20)

பின்வரும் வினாக்களுக்கு 50 சொற்களில் விடை தருக.

1. மாணாக்கர் ஆகாதார் யாவர்?
2. மலர் – நல்லாசிரியருக்கு எங்ஙனம் உவமையாயிற்று?
3. ஓரெழுத்தொருமொழி என்றால் என்ன? எடுத்துக்காட்டுகள் தருக.
4. தேன் என்னும் மொழி மூவினமும் வரும் போது எவ்வாறு புணரும்?
5. ‘இரட்டைக்கிளவி இரட்டிற் பிரிந்திசையா’ – பொருள் தந்து விளக்குக.
6. உரிச்சொல்லின் இலக்கணம் யாது?
7. அடி எத்தனை வகைப்படும்? அவை யாவை?
8. யாப்பருங்கலக்காரிகை நூலாசிரியர் யார்? பெயர்க்காரணத்தைக் குறிப்பிடுக.
9. மருட்பா என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
10. வகையுளி என்பது யாது? எடுத்துக்காட்டு தருக.

பகுதி – ஆ (5 X 4 = 20)

பின்வரும் வினாக்களுக்கு 200 சொற்களில் விடை தருக.

11. காண்டிகை உரை, விருத்தியுரை – விளக்குக.

(அல்லது)

பாயிரம் நூலுக்கு இன்றியமையாதது என்பதனைச் சூத்திரங்கொண்டு நிறுவுக.

12. இடைநிலை மெய்ம்மயக்கம் குறித்த செய்திகளை எடுத்துரைக்க.

(அல்லது)

ணகர, னகரவீற்றுப் புணர்ச்சி குறித்து எழுதுக.

(அல்லது)

பொதுச்சாரியைகள் யாவை? எடுத்துக்காட்டுகள் தருக.

13. தொகைநிலைத் தொடர்மொழி என்பது யாது? அதன் வகைகளைக் கூறி, மூன்றிற்கு விளக்கம் தருக.

(அல்லது)

பெயரெச்சம், வினையெச்சம் ஆகியவற்றை வரையறுத்து, அவற்றின் வாய்ப்பாடுகளை எடுத்துரைக்க.

14. ஈரசைச் சீர், மூவசைச்சீர் ஆகியவற்றைச் சான்றுகளுடன் எடுத்துரைக்க.

(அல்லது)

அளவடி, கழிநெடிலடி பற்றி விளக்கம் தருக.

15. கலிப்பாவின் இனங்களைக் கூறி, சான்றுகளுடன் விளக்குக.

(அல்லது)

ஒழிபியலில் ஒருசார் அசைகட்கு உணர்த்தப்படும் இலக்கணம் யாவை?

பகுதி – இ (5 X 12 = 60)

பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடை தருக.

16. உத்தி என்பது யாது? நன்னூல் கூறும் முப்பத்திரண்டு உத்திகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

சிறப்புப் பாயிரம், பொதுப்பாயிரம் குறித்து நன்னூல் கூறும் செய்திகளைத் தொகுத்துக் கூறுக.

17. பகுபத உறுப்புக்கள் யாவை? அவ்வுறுப்புக்களைச் சான்றுகளுடன் வரையறுக்க.

(அல்லது)

வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி ஆகியவற்றைச் சான்றுகளுடன் தொகுத்துரைக்க.

18. வழுக்களும் வழுவமைதிகளும் குறித்து நன்னூலார் கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

நன்னூலார் இடையியலில் கூறியுள்ள செய்திகளைத் தொகுத்துரைக்க.

19. எழுத்து என்பது குறித்து காரிகை ஆசிரியர் கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

எதுகை, மோனைகளைச் சான்றுகளுடன் விளக்குக.

20. வஞ்சிப்பாவின் வகைகளையும், அவற்றின் இனங்களையும் சான்றுகளுடன் விளக்குக.

(அல்லது)

வண்ணம் என்பதை வரையறுத்து, அதன் வகைகளைத் தொகுத்துரைக்க.

## குறிப்பு